www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

பொருளியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*
திருத்திய பதிப்பு - *2020, 2022, 2023*

மறுபதிப்பு - *2021, 2024*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

12th_Economics-Tamil-First 4 pages.indd 2 23/12/2023 16:46:30

www.tntextbooks.in

இந்த புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?

பொருளடக்கம்	இது அனைத்து இயல்களின் தொகுப்பு
அறிமுகம்	இயலில் உள்ள கருத்துகளின் தொகுப்பாகும்
கற்றல் நோக்கங்கள்	இயலைக் கற்பதனால் அடையப்படும் இலக்குகள்
சிந்தித்து செயல்படு	மாணவர்கள் கூடுதலாகக் கற்றலுக்கு வழிவகுக்கும் அற்புதமான உண்மைகளும், சொல்லாட்சிக் கேள்விகளும் அடங்கியது.
பெட்டிச் செய்திகள்	கூறப்படும் விவரம் சார்ந்த கூடுதல் செய்திகள்
செயல்பாடு	மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கருத்தை மீளாயவும், வளப்படுத்தவும் வழங்கப்படும் பயிற்சிகள்
	பாடம் சார்ந்த கருத்தை ஆராய்வதற்கும், வளத்தை மேம்படுத்துவதற்கும், மாணவர்களை ஊக்குவிக்கவும் தரப்படும் விவரங்கள்
ICT	மாணவர்களின் கணினிசார் அறிவுத்திறனை மேம்படுத்துதல்.
அட்டவணைகள்	சார்புகளில் உள்ள மதிப்பைப் பெற்று வரைபடம் வரைவதற்கு உதவுதல்
வரைபடம்	கருத்தாக்கங்கள் இடையே உள்ள உறவுகளைச் சித்தரிக்கும் கருத்துரு வரைபடங்கள் மாணவர்கள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள உதவுகிறது.
படங்கள்	சூழ்நிலைகளை விளக்குவதற்காகப் படங்கள்
கலைச்சொற்கள்	முக்கியமான சொற்களின் விளக்கங்கள்
மாதிரி வினாக்கள்	பயற்சிக்காக வழங்கப்படும் வினாக்கள்
பார்வை நூல்கள்	இயல் சார்பாக கூடுதல் விவரம் அறிந்து கொள்ள உதவும் நூல்கள்
இணைய வழித் தொடர்பு	கூடுதலான விவரங்களை அறிவதற்கான இணைய தளத் தொடர்புகள்

12th_Economics-Tamil-First 4 page_Folder.indd 3 11-01-2023 15:48:11

www.tntextbooks.in

வாழ்க்கைக்கு வழிகாட்டி

பொருளியல் சார்ந்த வேலை வாய்ப்புகள்

பொருளாதாரம் படித்த பட்டதாரிகளுக்கு பொது மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் பல உள்ளன. அரசுத் துறைகளில், இந்திய பொருளாதாரப் பணி, இந்திய ரிசர்வ் வங்கி, பொதுத்துறைகள் மற்றும் பொதுத்துறை வங்கிகளில் வேலை வாய்ப்புகள் உள்ளன. இந்த வேலைகள் அனைத்தும் அற்புதமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கின்றன. இந்த வேலைகள் சமூகத்தில் உயரிய அந்தஸ்த்தைக் கொடுக்கின்றன. தனியார் துறைகளில், தனியார் வங்கிகள், பன்னாட்டு நிறுவனங்கள், வணிக செயல்முறைப் பணிகள் (Business process outsourcing), அறிவுசார் செயல்முறைப் பணிகள் (Knowledge process outsourcing), வர்த்தகப் பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்கள் போன்ற துறைகள் பொருளாதார பட்டதாரிகளுக்கு அதிக வேலை வாய்ப்புகளை வழங்குகின்றன. பொருளாதாரத்தில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு நிறைய வாய்ப்பு காத்திருக்கிறது. ஒருவர் Ph.D– போன்ற உயர்கல்வி பயின்றால், பள்ளிகள், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் துறையில் நுழைவதற்கு வழிவகை உண்டு மற்றும் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் வாய்ப்புகள் நிறைய உள்ளன. BA – யைத் தொடர்ந்து LLB – பயின்றால் நிறுவனங்களுக்கான வழக்கறிஞராகவும், மற்றும் MBA – பயின்றால் தனியார் துறையில் மிகச்சிறந்த வாய்ப்புகள் உள்ளன.

பொருளாதாரம் பயிற்றுவிக்கும் சிறந்த சில கல்வி நிறுவனங்களின் பட்டியல்கள்

பொருளாதாரப் பத்திரிகைகள் மற்றொரு வேலைவாய்ப்பிற்கான பிரகாசிக்கும் பகுதியாகும். பி.ஏ., எம்.ஏ மற்றும் பி.எச்.டி பொருளாதாரம் பயிற்றுவிக்கும் பல நிறுவனங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றுள் சிறந்த சில கல்வி நிறுவனங்களின் பட்டியல்கள் இங்கு உள்ளன. அந்தந்த பல்கலைக் கழகங்களுடன் / கல்லூரி / கல்வி நிறுவனங்களுடனான பிற தகவல்களை அவர்களது வலைத்தளத்துடன் எளிதாக காணலாம்.

Delhi School of Economics www.econdse.org	**Sri Ram College of Commerce** www.srcc.edu	**University of Delhi, South Campus** www.south.du.ac.in	**University of Agriculture Science** www.uasbangalore.edu.in
Jawaharlal Nehru University, Delhi www.jnu.ac.in	**St. Stephen College, Delhi** www.ststephens.edu	**University of Bombay** www.mu.ac.in	**Ravenshaw University, Cuttack** www. ravenshawuniversity.ac.in
IIT Kanpur www.jnu.ac.in	**Madras School of Economics** www.mse.ac.in	**BITS –Pilani** www.bits-pilani.ac.in	**Gokhale Institute of Politics & Economics, Pune** www.gipe.ac.in
IIT Madras https://www.iitm.ac.in	**Presidency College, Kolkata** www.presiuniv.ac.in	**Indian Statistical Institute, Kolkata Bangalore** www. isical.ac.in	**Symbiosis School of Economics** www.sse.ac.in
Banaras Hindu University www.bhu.ac.in	**University of Hyderabad** www.uohyd.ernet.in	**IGIDR-Mumbai** www.igidr.ac.in	**Centre for Development Studies Thiruvananthapuram** www.cds.edu

உலகம் முழுதும் அங்கிகரிக்கப்பட்ட மற்றும் அனைவரும் சேர விரும்பும் இடமாக லண்டன் பொருளியல் பள்ளி (London School of Economics) உள்ளது.

12th_Economics-Tamil-First 4 page_Folder.indd 4 11-01-2023 15:48:11

www.tntextbooks.in

பொருளியல் துறையில் உள்ள வேலைவாய்ப்புகள்

பொருளியல் துறையில் வரிசையாக பல வேலைவாய்ப்புகள் காத்துக் கிடக்கின்றன. பொருளாதாரத்தில் பி.ஏ. அல்லது எம்.ஏ.வை வெற்றிகரமாக முடித்தபின், தகுதியான நபர்கள் சிறந்த வேலை வாய்ப்புகளை பெற முடியும்.

அரசு துறைகளில் வேலைவாய்ப்பு

பொருளியல் பட்டதாரிகள், அரசாங்க துறைகளில் மதிப்புமிக்க வேலைகள் பெற முடியும். அவற்றுள் கீழ்க்காணும் பணிகள் முக்கியமானவை.

- இந்திய குடிமைப் பணிகள் (IAS)
- இந்திய பொருளாதார சேவைகள் (IES)
- இந்திய ரிசர்வ் வங்கிப் பணிகள்
- தேசிய மாதிரி ஆய்வுப் பணிகள்
- பொருளாதார அலுவல்கள் அமைச்சகத்தின் பணிகள்
- திட்டக் குழு
- திட்டமிடல் ஆணையம் (மாநிலம் & மத்திய அரசுகளில்)
- பொருளாதார ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில் பணிகள்
- பொது நிதி மற்றும் கொள்கைக்கான தேசிய நிறுவனம்

அரசுத்துறை தவிர தனியார் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள்

என்.ஜி.ஓ. மற்றும் சர்வதேச உதவி முகமைகளில் வேலை வாய்ப்புகளும் காத்திருக்கின்றன. உலக வங்கி(IBRD), ஆசிய அபிவிருத்தி வங்கி(ADB), பன்னாட்டு பண நிதியம்(IMF) பன்னாட்டு வளர்ச்சி வங்கி (IDA), பன்னாட்டு உதவி நிறுவனங்கள், நிதியியல் ஆலோசனை நிறுவனங்கள் ஆகியவை பொருளாதார பட்டதாரிகளை தமது பல்வேறு பதவிகளுக்கு நியமித்து வருகின்றன. இந்த அமைப்புகள் பொருளாதார நிபுணர், பொருளாதார ஆலோசகர், நிர்வாகி, ஆய்வாளர், ஆலோசகர், ஆராய்ச்சியாளர், நிதி ஆய்வாளர், வணிக ஆய்வாளர், பொருளாதார ஆராய்ச்சி ஆய்வாளர் மற்றும் பங்குச் சந்தை ஆய்வாளர் ஆகிய பணிவாய்ப்புகளை வழங்குகின்றன. சம்பளத்தை பொறுத்தவரை ஆண்டுக்கு சராசரி சம்பளம் ரூ. 4 முதல் 8 லட்சம் வரை. ஆனால் தகுதி வாய்ந்த நபர்களுக்கு ஊதியம் எதிர்பார்ப்புக்கும் கூடுதலாகவே உள்ளது. வங்கி, காப்பீட்டு நிறுவனம் போன்றவற்றில் தாக்கல் செய்யப்படும் கணக்குகள் சார்ந்து பல வேலை வாய்ப்புகள் உள்ளன.

பொருளாதாரம் படிப்பதால் உள்ள வேலை வாய்ப்புகள்

பொருளாதாரத்தில் பி.ஏ. அல்லது எம்.ஏ. தேர்ச்சி பெற்ற பின்னர் பல்வேறு துறைகள் சிறந்த வேலை வாய்ப்பை வழங்கி வருகின்றன.

பொருளியல் சார்ந்த வேலை வாய்ப்புகள்

வங்கி மற்றும் நிதித்துறை	அரசுத் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள்	கல்வி மற்றும் தொடர்புகள் துறை	வணிகம் சார்ந்த துறை
பொருட்களின் இடையீட்டாளர்	கோரிக்கை ஆய்வாளர்	பேராசிரியர்	அங்காடி ஆராய்ச்சி ஆய்வாளர்
வங்கி நிர்வாக பயிற்சியாளர்	வெளிநாட்டு வர்த்தக ஆய்வாளர்	தொழில்நுட்ப எழுத்தாளர்	சில்லறையாக வாங்குபவர்
நிதி ஆய்வாளர்	வரி ஆய்வாளர்	பத்திரிக்கையாளர் / கட்டுரையாளர்	பணியாளர்கள் பயிற்சி மற்றும் முன்னேற்றத்திற்கான சிறப்பு பயிற்சியாளர்
பொருளாதார கணிப்பாளர்	பொது நிர்வாக அலுவலர்	ஆசிரியர்	காப்பீடு எழுத்துறுதி பயிற்சியாளர்
முதலீட்டாளர்	சட்ட உதவியாளர்	உயர் கல்வி நிர்வாகம்	மேலாண்மை ஆலோசகர்
கடன் ஆலோசகர்	மண்டல / நகர திட்ட வரைவாளர்	கல்வித் தொலைக்காட்சி ஆலோசகர்	உத்திகளை திட்டமிடுபவர்
பத்திரங்கள் ஆய்வாளர்	நிதித் திட்ட வரைவாளர்	தகவல் ஆய்வாளர்	வணிக நிர்வாகி

12th_Economics-Tamil-First 4 page_Folder.indd 5
11-01-2023 15:48:12

பொருளடக்கம்

பொருளியல்

இயல்	பாடப்பொருள்	பக்க எண்	மாதம்
1	பேரியல் பொருளாதாரம்	1	ஜூன்
2	நாட்டு வருமானம்	23	ஜூன்
3	வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும்	44	ஜூன்
4	நுகர்வு சார்பும் முதலீடு சார்பும்	62	ஜூலை
5	பணவியல் பொருளியல்	88	ஜூலை
முதல் இடைப்பருவம் 1 முதல் 5 பாடங்கள் முடிய			
6	வங்கியியல்	111	ஆகஸ்ட்
7	பன்னாட்டுப் பொருளியல்	147	ஆகஸ்ட்
8	பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள்	180	செப்டம்பர்
காலாண்டு 1 முதல் 8 பாடங்கள் முடிய			
9	நிதிப் பொருளியல்	206	அக்டோபர்
10	சுற்றுச்சூழல் பொருளியல்	245	அக்டோபர்
11	பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும்	274	நவம்பர்
இரண்டாம் இடைப்பருவம் 9 முதல் 11 பாடங்கள் முடிய			
12	புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம்	299	நவம்பர்

9CGWD

மின்னூல்

BLJRK

மதிப்பீடு

12th_Economics-Tamil-First 4 page_Folder.indd 6 11-01-2023 15:48:12

இயல் 1

பேரியல் பொருளாதாரம்

"பேரியல் பொருளாதாரம் என்பது உண்மைகளையும் கோட்பாடுகளையும் ஒருங்கிணைப்பது பற்றியதே".

– டான் புஸ், பிஸ்சார், ஸ்டார்டிஸ்.

புரிதலின் நோக்கங்கள்

1 பேரியல் பொருளாதாரத்தின் படிநிலை வளர்ச்சி, முக்கியத்துவம், அடிப்படைக் கருத்துகள் ஆகியவற்றைத் தெளிவுப்படுத்துவது, மேலும்

2 ஒரு பொருளாதாரஅமைப்பின் செயல்பாட்டினைப் புரிந்து கொள்வது.

1.1 அறிமுகம்

பொருளாதாரப் பாடமானது, நுண்ணியல் பொருளாதாரம், பேரியல் பொருளாதாரம் என இரண்டுக்கிளைகளாகவகைப்படுத்தப்பட்டுள்ளது. நார்வேயைச் சேர்ந்த பொருளியல் வல்லுநரும், பொருளியல் அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்ற இணை பெறுநர்

J.M. கீன்ஸ்

புதிய பேரியல் பொருளாதாரத்தின் தந்தை

ரேக்னர்ஃபிர்ஸ்ச் (Ragnar Frisch) என்பவர், சிறிய எனும் பொருள் கொண்ட மைக்ரோ (Micro), பெரிய எனும் பொருள் கொண்ட மேக்ரோ (Macro) என்னும் பதங்களை 1933 – இல் உருவாக்கினார். இருப்பினும், பேரியல் பொருளாதாரத்தின் புதிய வடிவமானது ஜான் மேனார்ட் கீன்ஸ் (John Maynard Keynes) ஆல் 1936ம், ஆண்டு வெளியிட்ட "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றியப் பொதுக் கோட்பாடு" (The General Theory of Employment, Interest and Money) – எனும் நூலிலிருந்து தோன்றியதாகும். உலகப்பெருமந்த (World Great Depression) காலத்தில், பொருள்கள் விற்பனையின்றி தேங்குதல், உழைப்பாளர்கள் வேலையில்லாமை ஆகியவற்றிலிருந்து மீள்வதற்கான விளக்கத்தை கீன்ஸ் வழங்கினார். எனவே, கீன்ஸ் அவர்களைப் புதிய பேரியல் பொருளாதாரத்தின் தந்தை என்பர்.

12-Economics-Tamil-Chapter_1.indd 1 12-01-2023 09:53:48

1.2 பேரியல் பொருளாதாரத்தின் பொருள்

கிரேக்க மொழியில் உள்ள 'Makros' என்ற சொல்லில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது. அதன் பொருள் "பெரிய" என்பது ஆகும். பேரியல் பொருளாதாரம் என்பது ஒரு பொருளாதாரஅமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும். மாற்றாக கூறின், பேரியல் பொருளாதாரம்என்பதுஒட்டுமொத்தங்களாகிய நாட்டு வருமானம், வேலைவாய்ப்பு, நாட்டு உற்பத்தி முதலானவற்றை உள்ளடக்கியது. 'பேரியல் பொருளாதாரத்தை வருவாய்க் கோட்பாடு' எனவும் அழைப்பர்.



பேரியல் பொருளாதாரத்தின் பாடப்பொருட்களாக உள்ளடங்கும் பகுதிகளாவன: வேலைவாய்ப்பு, நாட்டு வருமானம், பணவீக்கம், வணிகச் சுழற்சி, வறுமை, ஏற்றத்தாழ்வு, வேறுபாடு, முதலீடு, சேமிப்பு, மூலதன ஆக்கம், கட்டமைப்பு மேம்பாடு, பன்னாட்டு வணிகம், பன்னாட்டு வணிகச் சமநிலை, பன்னாட்டு செலுத்து சமநிலை, நாணய மாற்று விகிதம், பொருளாதார வளர்ச்சி ஆகும்.

1.3 பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்

ஒரு பொருளாதார அமைப்பில், பேரியல் பொருளாதாரக் கண்ணோட்டமும், அதன் முக்கியத்துவமும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான சரியான யுக்திகளை மாற்றவும், அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- எதிர்கால சிக்கல்களைப் புரிந்துக் கொள்ளவும், வருங்காலத் தேவைகளையும், அறைகூவல்களையும் எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.
- நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.
- பொருளாதாரக் குறியீடுகளைப் பகுத்தாயவும் அவற்றை ஒப்பிடவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.
- பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், எதிர்காலத்தில் நடக்கவிருப்பனவற்றை முன்கணிக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

12-Economics-Tamil-Chapter_1.indd 2 12-01-2023 09:53:48

1.4 பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை (SCOPE)

பேரியல்பொருளாதாரத்தின்பரப்பெல்லை மிகப் பெரியதாகவும் பல முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

◆ **நாட்டு வருமானம்** (National Income)

நாட்டு வருமானம் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படைக் கூறுகளாகும். நாட்டு வருமானமும், அதன் பங்குகளின் போக்கும் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி முறையின் நீண்ட கால அறிவைத் தருகிறது.

◆ **பண வீக்கம்** (Inflation)

பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். மொத்த விலைக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண் ஆகியவற்றைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

◆ **வணிகச் சுழற்சி** (Business Cycle)

பொதுவாக எல்லா நாடுகளும் வணிக ஏற்றத் தாழ்வாலும், வணிக சுழற்சியாலும் ஏற்படும் சிக்கல்களைச் சந்திக்கின்றன. மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் (செழிப்பு, பின்னிறக்கம், மந்தநிலை, மீட்பு) தெரிந்து கொள்ள முடிகிறது.

◆ **வறுமையும் வேலையின்மையும்** (Poverty and Unemployment)

வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமையும், வேலையின்மையும் மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும். இச்சிக்கல்களுக்குத் தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

◆ **பொருளாதார வளர்ச்சி** (Economic Growth)

பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம், அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

◆ **பொருளாதாரக் கொள்கைகள்** (Economic Policies)

பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்குப் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், தடைகளைத் தகர்த்தெறியவும், வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

1.5 குறைகள்

பேரியல் பொருளாதாரம் கீழ்க்காணும் குறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன

1. பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.

2. தனிப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் ஓரினத் தன்மை வாய்ந்தவை எனும் எடுகோளைப் பேரியல் பொருளாதாரம் கொண்டுள்ளது.

3. தொகுத்தலில் தவறுகள் காணப்படும். ஒரு தனி மனிதருக்குச் சரியானவை, ஒரு நாட்டிற்குச் சரியாக இருக்காது. ஒரு

நாட்டிற்குப் பொருந்துவது, மற்ற நாட்டிற்கும், மற்றொரு காலத்திற்கும் பொருந்தாது.

4. பொருளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கின்றன. ஆனால் பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளில் இக்காரணிகள் இடம் பெறவில்லை.

1.6 பொருளாதாரமும் அதன் வகைகளும்

பொருளாதாரம் (Economy) என்கிற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் (A.J. Brown) என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையைக் குறிப்பது" என வரையறுத்துள்ளார். "நுகர்வோரின் விருப்பங்களை நிறைவு செய்வதற்கானப் பொருள்களையும், பணிகளையும் தயாரிக்கும் உற்பத்தியாளர், பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" என ஜே.ஆர். ஹிக்ஸ் (J.R. Hicks) கூறுகிறார்.

சுருங்கக்கூறின், ஒரு பொருளாதாரம் என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ, பகுதியையோ குறிப்பதாகும். ஒவ்வொரு பொருளாதாரமும் அதன் தனித் தன்மைகளைக் கொண்டு காணப்படும். அதன்படி, அதன் பணிகள் அல்லது நடவடிக்கைகள் வேறுபடும். ஒரு பொருளாதாரத்தின் நடவடிக்கைகளையும், செயல்பாடுகளையும் கீழ்க்காணும் வரைபடம் மூலம் விளக்கலாம்.

ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தியும் (Production) மற்றும் நுகர்வும் (Consumption) ஆகும். இந்த இரு நடவடிக்கைகளுக்கு பல்வேறு பிற நடவடிக்கைகள் உதவுகின்றன. இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை (Growth) அடைவதாகும். இந்த பரிமாற்ற நடவடிக்கையானது (Exchange Activity) உற்பத்திக்கும், நுகர்வு பணிகளுக்கும் உதவுகின்றது. இந்த நடவடிக்கைகள் பல்வேறு



பொருளாதாரம், பொருளாதாரமற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன.

முக்கியமான பொருளாதார நடவடிக்கைகளாவன (Economic Activities) : போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை, பிற பணிகள்.

முக்கிய பொருளாதார மற்ற நடவடிக்கைகளாவன (Non – Economic Activities) : சுற்றுச்சூழல், உடல் நலம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, சட்டதிட்டங்கள் முதலியன. இந்த உதவிப் பணிகளுக்கு மேலாக, பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்ற இடப்பெயர்ச்சிகள், அயல் முதலீடு, அயல் நாட்டு செலாவணி ஈட்டல் முதலான பொருளாதார அமைப்பின் மொத்தச் செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

பொருளாதாரங்களை கீழ்க்காணுமாறு பல்வேறு அடிப்படைகளில் வகைப்படுத்தலாம்.

1. **வளர்ச்சி நிலை:** வளர்ந்த, வளர்ச்சிகுன்றிய, வளராத, வளரும் பொருளாதாரங்கள்
2. **நடவடிக்கைகளின் முறை:** முதலாளித்துவ, சமதரும, கலப்புப் பொருளாதாரங்கள்
3. **நடவடிக்கைகள் அளவு:** சிறிய, பெரிய பொருளாதாரங்கள்
4. **செயல்படும் தன்மை:** நிலையான பொருளாதாரங்கள், இயங்கும் பொருளாதாரங்கள்
5. **செயல்தன்மை:** மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம்
6. **முன்னேற்ற தன்மை:** பழமையான, புதிய பொருளாதாரங்கள்
7. **நாட்டு வருமான அளவு:** குறைந்த வருமானம்,நடுத்தர வருமானம் மற்றும் அதிக வருமான பொருளாதாரங்கள்

1.7 பொருளாதார முறைகள் (Economic Systems)

பொருளாதார முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்துப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும். இது சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ள உதவும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழிமுறை ஆகும். பொருளாதார முறை மூன்று வகைப்படும். அவையாவன:

5DG6A

1. முதலாளித்துவ பொருளாதார முறை (முதலாளித்துவம்)
2. சமதருமப் பொருளாதார முறை (சமதருமம்)
3. கலப்புப் பொருளாதார முறை (கலப்புத்துவம்)

உலகத்துவம்

பன்னாட்டு வணிகத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தின் எதிர்நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை குறிப்பிட்ட, உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை, மேன்பிரட்டிஸ்டீகர் (Manfred D Steger) 2002ஆம் ஆண்டு உருவாக்கினார். இந்தத் தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் (Extended Capitalism) என்றும் குறிப்பிடப்படுகின்றது.



முதலாளித்துவம், சமதருமம் ஆகிய இரு அணுகுமுறைகளும் ஒன்றுக்கொன்று எதிரிடையானது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில், தனியார் உற்பத்தி நிறுவனங்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. சமதருமப் பொருளாதாரத்தில், தனியார் நிறுவனத்திற்கு சுதந்திரம் இல்லை. மாறாக உற்பத்தியில் அனைத்துச்

செயல்பாடுகளும் பொதுவுடைமை ஆக்கப்படும். கலப்புப் பொருளாதார முறை என்பது முதலாளித்துவம், சமதருமம் ஆகிய இரண்டின் இயல்புகளையும் உள்ளடக்கியது. கீழ்க்காணும் பகுதியில் பல்வேறு பொருளாதார முறைகளின் இயல்புகள், நன்மைகள், குறைகள் ஆகியன விளக்கப்பட்டு உள்ளன.

1.7.1 முதலாளித்துவப் பொருளாதாரம் (முதலாளித்துவம்)

'முதலாளித்துவத்தின் தந்தை' ஆடம் ஸ்மித் ஆவார். முதலாளித்துவப் பொருளாதாரத்தை தடையில்லாப் பொருளாதாரம் (Free Economy) (இலத்தீனில் – லேசி பேர் (Laissez faire)) அல்லது அங்காடிப் பொருளாதாரம் (Market Economy) எனவும் அழைக்கிறோம். இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும். தனிமனிதர் தங்களுக்கான வேலையைத் தெரிந்தெடுப்பதிலும், திறமையை வளர்த்துக் கொள்வதிலும் சுதந்திரமாகச் செயல்படுவர். அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகள் முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

மேலும், இவ்வமைப்புகளில் அங்காடிச் சக்திகளிடம் இருந்து (Market forces) அடித்தட்டு மக்களைப் பாதுகாக்கத் தேவையான சமூக நல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இயல்புகள்

1. தனியார் சொத்துரிமையும், பரம்பரைச் சட்டமும் (Private Ownership of Property and Law of Inheritance)

முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில், நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள், சுரங்கம் போன்ற அனைத்து வளங்களும் தனிமனிதர்களுக்குச் சொந்தமாக இருக்கும். உரிமையாளர்கள் வளங்களை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உரிமம் வைத்துக்கொள்ள, விற்க, பயன்படுத்த அதிகாரம் படைத்தவர்களாவர். உரிமையாளர்கள் இறந்த பிறகு சொத்துகள் அவர்களின் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.

2. தெரிந்தெடுப்பதில் சுதந்திரம் (Freedom of Choice and Enterprise)

ஒவ்வொரு தனிமனிதரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பண்டங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர். அதே போன்று நுகர்வோர்கள் தங்களுக்கு விருப்பமான பண்டங்களைத் தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பார்கள்.

3. இலாப நோக்கம் (Profit Motive)

முதலாளித்துவப் பொருளாதாரத்தில், அனைத்துப்பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாகக் காணப்படும். ஒவ்வொரு தனிமனிதனும், அமைப்புகளும் அதிக இலாபம் தரக்கூடிய பண்டங்களை மட்டுமே உற்பத்தி செய்வார்கள்.

12-Economics-Tamil-Chapter_1.indd 6 12-01-2023 09:53:48

இங்கு வேலைப் பகுப்பு, புதிய தொழில்நுட்பம், சிறப்புக் கவனம் முதலானவை பின்பற்றப்படும். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற தங்க விதி (Golden Rule) 'உச்ச இலாபம்' அடைதல் ஆகும்.

4. போட்டியில் சுதந்திரம் (Free Competition)

பண்டங்கள் சந்தை, காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு. அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களின் வாங்குதல், விற்பனை நடவடிக்கைகளில் தலையிட முடியாது. வாங்குபவர், விற்பவர் இடையே போட்டி நிலவும்.

5. விலை இயங்கு முறை (Price Mechanism)

விலை இயங்கு முறையானது முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இதயமாகும். அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் விலை இயங்கும் முறை, தேவை, அளிப்பு ஆகியன அங்காடி சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

6. அரசின் பங்கு (Role of Government)

முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அனைத்துப்பொருளாதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையானது கட்டுப்படுத்துகிறது. அதனால் அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும். அடிப்படைப் பணிகளான பாதுகாப்பு, பொதுநலம், கல்வி முதலானவற்றை அரசாங்கம் வழங்குகிறது.

7. வருமான ஏற்றத்தாழ்வு (Inequalities of Income)

முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. சொத்துகளை வைத்திருப்பவர்கள் (Haves), சொத்துகள் இல்லாதவர்கள் (Have – nots) எனப் பிரிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக, பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாகவும், ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் இருக்கின்றனர். இதனால் பொருளாதார சமனற்ற நிலை அதிகரிக்கிறது.

முதலாளித்துவத்தின் நன்மைகள் (Merits of Capitalism)

1. **தானாக இயங்குதல்:** முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அரசின் எந்தத் தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.
2. **வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்:** இப்பொருளாதாரத்தில் அனைத்து வளங்களும் திறமையாக சிறந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன.
3. **கடின உழைப்பிற்கு வெகுமதி:** கடின உழைப்பு ஊக்குவிக்கப்படுவதும், அதிக திறனால் தொழில் முனைவோர்கள் அதிக இலாபம் பெறுவதும் காணப்படும்.
4. **பொருளாதார முன்னேற்றம்:** முதலாளித்துவ பொருளாதாரத்தில், உற்பத்தியும், உற்பத்தித் திறன் அளவும் மிக அதிகமாக இருக்கும்.
5. **நுகர்வோர் இறையாண்மை:** அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோரை மன நிறைவடையச் செய்வதை முக்கியமான நோக்கமாகக் கொண்டிருக்கின்றன.
6. **மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல்:** சேமிப்பும், முதலீடும் அதிகரிக்கும். மூலதன ஆக்க வீதத்தை உயர்த்த வழி வகுக்கும்.
7. **புதிய தொழில்நுட்ப முன்னேற்றம்:** இலாபம் பெறுவது நோக்கமாக இருப்பதால், உற்பத்தியாளர்கள் புதிய தொழில் நுட்பத்தில் முதலீடு செய்து, தரமான பண்டங்களை உற்பத்தி செய்வர்.

12-Economics-Tamil-Chapter_1.indd 7 12-01-2023 09:53:48

முதலாளித்துவத்தின் குறைகள் (Demerits of Capitalism)

1. வருமானமும், செல்வச் செறிவும்

முதலாளித்துவத்தில் வருமானம், செல்வம் ஆகியன சிலரது கைகளில் மட்டும் குவிகிறது. இதனால் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.

2. வளங்கள் வீணாக்கப்படுதல்

போட்டி விளம்பரங்களினாலும், நிகரொத்தப் பண்டங்களினாலும் வளங்கள் அதிக அளவில் வீணாக்கப்படுகின்றன.

3. வகுப்புப் போராட்டம்

முதலாளித்துவமானது, சமுதாயத்தை முதலாளிகளாகவும், வேலைக்காரர்களாகவும் பிரிப்பதால் வகுப்புப் போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.

4. வணிகச் சுழல்

தடையில்லாச் சந்தை முறை (Free Market System) அதிக அளவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் கொண்டு செல்கிறது.

5. அத்தியாவசியமில்லா பண்டங்களின் உற்பத்தி

வாய்ப்பு இருக்குமாயின், இலாபத்தைப் பெறுவதற்காகத் தீங்கு விளைவிக்கும் பண்டங்கள் கூட உற்பத்தி செய்யப்படும்.

1.7.2 சமதருமப் பொருளாதாரம் (Socialism)

கார்ல் மார்க்ஸ் 'சமதருமத்தின் தந்தை' ஆவார். சமதருமம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடமை, பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும். அரசே பெரும்பான்மையான தொழில்களை உரிமம் கொண்டு, கட்டுப்படுத்தி ஒரு சமுதாயத்தின் ஒழுங்குபடுத்தும் முறையை வரையறுப்பது சமதருமம் ஆகும். ஆகவே இம்முறை திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) அல்லது கட்டளைப் பொருளாதாரம் (Command Economy) என அறியப்படுகிறது.



கார்ல் மார்க்ஸ்
சமதருமத்தின் தந்தை

சமதரும பொருளாதார முறையின் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கி பயன்படுத்தும். பொதுநலமே (Public Welfare) அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும். வருமானம், செல்வம் பகிர்வதில் சமத்துவம், அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குவதே இதன் குறிக்கோள் ஆகும். ரஷ்யா, சீனா, வியட்நாம், போலந்து, கியூபா ஆகியவை சமதரும பொருளாதார முறைக்கு எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் தற்காலத்தில், முற்றிலும் பொருத்தமான சமத்துவ பொருளாதார முறைகள் எங்கும் இல்லை.

12-Economics-Tamil-Chapter_1.indd 8 12-01-2023 09:53:49

சமதருமப் பொருளாதாரத்தின் இயல்புகள்

1. உற்பத்தி மூலங்களின் பொது உரிமம் (Public Ownership)

அனைத்து வளங்களுக்கும் அரசே உரிமம் கொண்டிருக்கும். இதன் பொருள் என்னவெனில், அனைத்து உற்பத்திக் காரணிகளும் பொது அதிகாரத்தால் (அரசால்) நாட்டுடமையாக்கப்பட்டு நிருவகிக்கப்படும்.

2. மையத் திட்டமிடல் (Central Planning)

சமதருமப் பொருளாதாரத்தில், திட்டமிடுதல் என்பது ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். இம்முறையில், மையத் திட்ட அதிகாரமே அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.

3. அதிக அளவு சமூக நலன் (Social Benefit)

சமூக நலன் என்பதுதான், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் வழிகாட்டுக் கொள்கையாகும். பெரும்பாலான பயன்கள் சமூகத்திற்கு சம அளவில் பகிரும்படியாக முதலீடுகள் திட்டமிடப்படுகின்றன.

4. போட்டி இல்லாமை

சமதருமப் பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும். பண்டங்கள், பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. நுகர்வோரின் தெரிவு என்பது வரையறுக்கப்பட்டதாகும்

5. விலை இயங்கு முறை இல்லாமை (No Price mechanism)

விலை நிர்ணய முறையானது மையத்திட்ட அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டுக்கும், விதிகளுக்கும் கீழ்தான் இயங்குகிறது.

6. வருமான சமத்துவம் (Equality of Income)

சமதருமப் பொருளாதாரத்தின் மற்றொரு இன்றியமையாதத் தன்மையானது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும், குறைப்பதும் ஆகும். சமதருமப் பொருளாதாரத்தில், தனியார் சொத்துரிமையும், வாரிசு சொத்துரிமையும் நடைமுறையில் இல்லை.

7. வாய்ப்புகளில் சமத்துவம் (Equality of Opportunity)

இலவச மருத்துவம், கல்வி, பயிற்சி ஆகியவை சமதருமப் பொருளாதாரத்தில் அனைவரும் பெறுவதற்கு சம வாய்ப்பு வழங்கப்படும்.

8. வகுப்பு பேதமில்லா சமூகம் (Classless Society)

சமதருமப் பொருளாதாரத்தில், வகுப்பு பேதமில்லை; சமூகச் சண்டைகள், வகுப்புச் சண்டைகள் இல்லை. ஒரு உண்மையான சமதரும சமூகத்தில், பொருளாதார நிலையில் அனைவரும் சமம்.

சமதருமப் பொருளாதாரத்தின் நன்மைகள்

1. ஏற்றத்தாழ்வுகள் குறைவு

எவர் ஒருவரும் தனியார் சொத்துகளை உரிமம் கொண்டும், பயன்படுத்துவதன் மூலமும் மற்றவர்களைச் சுரண்ட அனுமதி இல்லை.

2. வளங்கள் அறிவார்ந்த முறையில் ஒதுக்கீடு

மையத்திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வளங்கள் விரயமாவது குறைக்கப்படுவதுடன் முன்திட்ட அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. வகுப்பு சண்டைகள் இல்லாமை

ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால், பணக்காரர், ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை. சமூகம் சுமுகமான சூழலில் செயல்படும்.

4. வணிகச் சூழலுக்கு முடிவு

பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் திட்ட அதிகாரமே முழு கட்டுக்குள் வைத்துக்கொள்ளும். அதனால், வணிகச் சூழல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

5. சமூக நலன் முன்னேற்றம்

சுரண்டல் இல்லை; பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகிறன. ஏற்றத்தாழ்வுமிக்க வணிகச் சுழல் தவிர்த்தல், உற்பத்தித்திறன் அதிகரித்தல் ஆகியவை சமூக நலன் வளர உதவுகின்றன.

சமதருமப் பொருளாதாரத்தின் தீமைகள்

1. சிவப்பு நாடா முறையும் (Red Tapism) அரசு அலுவலர்களும் (அதிகார வர்க்கம் Bureaucracy)

அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அரசு அலுவலர்கள் பலரின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேசையிலிருந்து மற்றொன்றுக்கு செல்லும் கால அளவு அதிகமாகிறது. இதனால் சிவப்பு நாடா முறை ஏற்படுகிறது.

2. ஊக்கமில்லாமை (Absence of Incentive)

சமதருமத்தின் மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை. எனவே, உற்பத்தித் திறனும் பாதிக்கப்படும்.

3. தெரிவு செய்வதில் சுதந்திரம் குறைவு (Limited Freedom & Choice)

பண்டங்கள், பணிகள் நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

4. அதிகாரம் குவிதல் (Concentration of Power)

அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்சியும் எடுப்பது இல்லை. எனவே, அரசே மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப் படுகிறது. அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பாகவும் அமைகிறது.

1.7.3 கலப்புப் பொருளாதாரம்



கலப்புப் பொருளாதார முறையில், தனியார் துறைகளும், பொதுத்துறைகளும் இணைந்து பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணியாற்றும். இம்முறை முதலாளித்துவம், சமதருமம் ஆகியவற்றின் கலவையாகும். முதலாளித்துவ, சமதரும பொருளாதார முறைகளின் தீமைகளைக் களைய இம்முறை உதவும். இப்பொருளாதார முறைகளில் தனியாருக்கும் அரசுக்கும் வளங்கள் சொந்தமாக இருக்கும். இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பிரேசில் ஆகிய நாடுகள் கலப்புப் பொருளாதார நாடுகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

கலப்புப் பொருளாதாரத்தின் தன்மைகள்

1. சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம் (Ownership of Property and Means of Production)

உற்பத்திச் சாதனங்களும், சொத்துகளும் தனியாருக்கும், பொதுத்துறைக்கும் சொந்தமாக இருக்கும். பொதுத்துறையும், தனியார்துறையும் வளங்களைக் கொள்முதல் செய்யவும், பயன்படுத்தவும் அல்லது மாற்றவும் உரிமை பெற்றிருக்கும்.

2. பொதுத்துறையும், தனியார் துறையும் இணைந்திருக்கும் (Coexistence of Public and Private Sectors)

கலப்புப் பொருளாதாரங்களில் தனியார்துறைகள், பொதுத்துறைகள் ஆகிய இரண்டும் இணைந்திருக்கும். தனியார் தொழிற்சாலைகள் இலாபத்திற்காகவே நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சமூக நலனை உயர்த்துவதற்காக பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் வசம் இருக்கும்.

3. பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning)

மையத்திட்டக்குழு பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும். அரசினால் தயாரிக்கப்படும் தேசியத் திட்டங்களை. தனியார் துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும். பொதுவாக, திட்டத்தில் வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், முன்னுரிமைகள், இலக்குகள் அடிப்படையில்தான் எல்லாத்துறைகளும் இயங்கும்.

4. பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு (Solution to Economic Problems)

எதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எப்படிப் பகிர்ந்தளிப்பது எனும் அடிப்படைச் சிக்கல்களை விலை இயக்க முறை, (Price mechanism) அரசின் தலையீடு ஆகியவை (Government Intervention) மூலம் தீர்க்கப்படும்.

5. சுதந்திரமும் கட்டுப்பாடும் (Freedom and Control)

வளங்களை உரிமை கொண்டாடவும், பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்து பகிரவும் தனியாருக்குச் சுதந்திரம் இருந்தாலும்கூட, அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடும் அரசிடமே இருக்கும்.

கலப்புப் பொருளாதாரத்தின் நன்மைகள்

1. அதிவேகப் பொருளாதார வளர்ச்சி (Rapid Economic Growth)

கலப்புப் பொருளாதாரத்தின் சிறந்த நன்மை அதிக வேக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். இவ்விதம், பொதுத் தேவைகளும், தனியாரின் தேவைகளும் நிறைவேற்றப் படுகின்றன.

2. சமமான பொருளாதார வளர்ச்சி (Balanced Economic Growth)

பொருளாதாரத்தின் சமநிலை வளர்ச்சியை கலப்புப் பொருளாதாரம் ஊக்குவிக்கிறது. இது வேளாண்மை, தொழில், நுகர்வுப் பண்டங்கள், மூலதனப் பண்டங்கள், சமமான உற்பத்தியையும் கிராமம், நகரம் ஆகியவற்றிடையே சமமான வளர்ச்சியையும் ஊக்கப்படுத்தும்.

3. வளங்களைச் சரியாகப் பயன்படுத்துதல் (Proper Utilization of Resources)

ஒரு கலப்புப் பொருளாதாரத்தில், வளங்களின் சரியான பயன்பாட்டை அரசு உறுதிப்படுத்தலாம். அரசு பல்வேறு முக்கியமான நடவடிக்கைகளை நேரடியாகக் கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறையை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும்.

4. பொருளாதாரச் சமத்துவம் (Economic Equality)

அரசு, வளர்வீத வரிமுறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தைக் கொண்டு வருகிறது.

5. சமூகத்துக்கு சிறப்பு நன்மைகள் (Special Advantages to the Society)

குறைந்த அளவுக் கூலி, பகிர்வு முறைச் சட்டங்கள், நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துதல், சமூகநல நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தொழிலாளர்கள், நலிவடைந்த பிரிவினரின் ஆர்வங்களை அரசு பாதுகாக்கும்.

கலப்புப் பொருளாதாரத்தின் தீமைகள் (Demerits of mixed Economy)

1. ஒருங்கிணைப்பில்லாமை; (Lack of Coordination)

கலப்புப் பொருளாதாரத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறை, தனியார் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததாகும். இவ்விரண்டு துறைகளும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயல்படுவதால் ஒருங்கிணைப்புத் தொடர்பான சிக்கல்கள் உருவாகின்றன.

2. போட்டி மனப்பான்மை (Competitive Attitude)

அரசும், தனியார் துறைகளும் சமூகத்தின் நலனுக்காக இணைந்து செயலாற்றும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறையில் இவ்விரண்டு துறைகளும் அவற்றின் நடவடிக்கைகளில் போட்டித் தன்மையுடனேயே நடந்துகொள்கின்றன.

3. திறமையின்மை (Inefficiency)

மந்தமான அதிகாரமுறை, சிவப்புநாடா முறை, ஊக்கமின்மை ஆகியவற்றால் பொதுத்துறை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறனற்றவைகளாகவே இருக்கின்றன என சிலர் குறை கூறுவர். ஆனால் இத்தகைய கூற்று நடுநிலையானதும், முழுமையானதும் அல்ல.

4. நாட்டுடைமையாக்கல் **பற்றிய பயம்** (Fear of Nationalization)

கலப்புப் பொருளாதாரத்தில், நாட்டுடைமையாக்கல் பற்றிய பயம் தனியார் துறைகளில் காணப்படுவதால், தனியார் தொழில் முனைவோர் தங்களுடைய வணிக நடவடிக்கைகளையும், புத்தாக்க முயற்சிகளையும் சுருக்கி விடுகின்றனர்.

5. விரிவடையும் சமத்துவமின்மை (Widening Inequality)

வளங்களின் உரிமை, பரம்பரைச்சட்டங்கள், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர், ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

12-Economics-Tamil-Chapter_1.indd 12 12-01-2023 09:53:49

பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்

வ. எண்.	தன்மைகள்	முதலாளித்துவம்	சமதருமப் பொருளாதாரம்	கலப்பு பொருளாதாரம்
1.	உற்பத்தி மூலங்களின் உரிமை	தனியார் உரிமை	பொது (அரசு) உரிமை	தனியார் உரிமையும் பொதுத்துறை உரிமையும்
2.	பொருளாதார நோக்கம்	இலாபம்	சமூக நலன்	சமூக நலனும் மற்றும் இலாப நோக்கமும்
3.	மைய பிரச்சனைகளின் தீர்வு	தடையில்லா சந்தை முறை	ஒன்றிய அரசின் திட்டமுறை	மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை
4.	அரசின் பங்கு	மூலப் பொருள்கள் கட்டுப்பாடு மட்டும்	முழு ஈடுபாடு	குறைந்த பங்கு
5.	வருமானப்பங்கீடு	சமனற்றநிலை	சமநிலை	குறைந்த சமநிலையற்ற நிலை
6.	நிறுவன தன்மை	தனியார் நிறுவனம்	அரசு நிறுவனம்	தனியாரும் மற்றும் அரசு நிறுவனங்களும்
7.	பொருளாதார சுதந்திரம்	முழுமையான சுதந்திரம்	சுதந்திரமின்மை	கட்டுப்பாட்டுடன் சுதந்திரம்
8.	முக்கியமான சிக்கல்	சமமின்மை	திறனின்மை	சமமின்மையும் திறனின்மையும்

1.8 பேரியல் பொருளாதாரக் கருத்துகள்

பேரியல் பொருளாதாரத்தில் பயன்படுத்தும் முக்கியமான கருத்துகள் கீழ்க்காணுமாறு விளக்கப்பட்டுள்ளன.

1.8.1. இருப்பு (Stock), தடைபடா ஓட்ட மாறிகள் (Flow).

பொருளாதார ஆய்வில் பயன்படுத்தும் மாறிகளை இருப்பு, தடைபடா ஓட்ட மாறிகள் என இருவகைப்படுத்தலாம். இந்த இரு இருப்பு, தடைபடா ஓட்ட மாறிகளும் கால அடிப்படையில் அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யும்.

- **இருப்பு** (Stock) என்பவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of Time) கணக்கிடப்படும் பண்டங்களின் அளவினைக் குறிப்பதாகும். பேரியல் பொருளாதாரத்தில், பண அளிப்பு, வேலையில்லாமை அளவு, வெளிநாட்டு செலாவணி இருப்பு, மூலதனம் முதலானவை இருப்பு மாறிகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

- **தடைபடா ஓட்ட மாறிகள்** (Flow) என்பவை ஒரு குறிப்பிட்டக் காலகட்ட அளவில் (Period of Time) கணக்கிடப்படுபவையாகும். நாட்டு வருமானம், ஏற்றுமதி, இறக்குமதி, நுகர்வு, உற்பத்தி, முதலீடு முதலானவை தடைபடா ஓட்ட மாறிகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

1.8.2 பொருளாதார மாதிரிகள் (Economic Models)

மாதிரி (Model) என்பது உண்மை சூழலை எளிமையாகப் பிரதிபலிப்பது ஆகும். பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவற்றுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளைப் பயன்படுத்துகின்றனர். மாதிரி என்பது, பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது. பெரும்பாலான பொருளாதார மாதிரிகள், கணிதம் (Mathematics), வரைபடங்கள் (Graphs), சமன்பாடுகள் (Equations) ஆகியவற்றால் அமைக்கப்பட்டு, பொருளாதார மாறிகளுக்கிடையேயான உறவுகளை விளக்க உதவுகின்றன. பொதுவாகப் பயன்படுத்தப்படும் மாதிரிகள் அளிப்பு – தேவை மாதிரிகள் (Supply – Demand), சுழல் ஓட்ட மாதிரிகள் (Circular flow), ஸ்மித் மாதிரிகள் ஆகியனவாகும்.

1.9 வருமான சுழல் ஓட்டம்

7OUWT

ஒரு பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்ட மாதிரியானது, அந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். இது, பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருமானம், பண்டங்கள், பணிகள், உற்பத்திக் காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும். வருமானத்தின் சுழல் ஓட்ட ஆய்வானது தேசிய கணக்குகள், பேரியல் பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையாகும்.

முக்கியமான பொருளாதாரங்களை எடுத்துரைக்கும் மூன்று வருமான சுழல் ஓட்ட மாதிரிகள் உள்ளன. அவையாவன,

1. இரண்டு துறை மாதிரி (Two Sector Model)

இது இல்லத்துறையையும் (Household sector), நிறுவனத்துறையையும் (Firm sector) கொண்ட எளிய பொருளாதாரமாகும்.

2. மூன்று துறை மாதிரி (Three Sector Model)

இது இல்லத்துறை, நிறுவனத்துறை, அரசுத்துறை ஆகியவை அடங்கிய கலப்புப் பொருளாதாரத்துக்கும், சமதரும பொருளாதாரதிற்குரியதாகும்.

3. நான்கு துறை மாதிரி (Four Sector Model)

இது இல்லத்துறை, நிறுவனத்துறை, அரசுத்துறை மற்றும் வெளியுறவுத் துறை (External sector) ஆகியவை அடங்கிய திறந்த பொருளாதார அமைப்புக்குரியதாகும்.

1.9.1 இரு துறைப் பொருளாதாரத்தின் வருமான சுழல் ஓட்டம் (Two Sector Economy)

இதில் இல்லத்துறை, நிறுவனத்துறை என இரு துறைகள் மட்டுமே காணப்படும்.

i. இல்லத்துறை (Household Sector)

இல்லத்துறைதான் பண்டங்கள், பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். இத்துறை, அதன் அனைத்து வருமானத்தையும் நிறுவனத்துறை தயாரிக்கும் பண்டங்கள், பணிகளை வாங்க பயன்படுத்துகிறது. இல்லத்துறையானது, அதற்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருமானம் பெறுகிறது.

ii. நிறுவனத் துறை (Firm Sector)

நிறுவனத்துறையானது பண்டங்கள் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது.

இல்லத்துறைக்கு சொந்தமான நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை, பணியமர்த்துகிறது. நிறுவனத்துறை அதன் அனைத்து உற்பத்தியையும் இல்லத்துறைக்கு விற்பனை செய்கின்றது.



இருதுறைப் பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருமானமும் பண்டங்களும் சுழல் ஓட்டமாகவும் காணப்படும். வெளிவட்டமானது உற்பத்திக்காரணிகளையும் பண்டங்களையும் எடுத்துரைக்கும் உண்மை ஓட்டமாகவும் (real Flow), உள் வட்டமானது காரணி விலை, பண்டங்களின் விலையைக் குறிக்கும் பண ஓட்ட (Monetary Flow)மாகவும் காணப்படும். உண்மை ஓட்டம் (Real Flow) என்பது இல்லத்துறையிலிருந்து நிறுவனத்துறைக்கு மாறும் உற்பத்திக் காரணியின் பணிகளையும், நிறுவனத்துறையிலிருந்து இல்லத்துறைக்கு மாறும் பொருட்கள் மற்றும் பணிகளையும் குறிப்பதாகும்.ஒருஇருதுறைபொருளாதாரத்தின் அடிப்படை அடையாளத்தை கீழ்க்காணுமாறு குறிப்பிடலாம்.

$$Y = C + I$$

இங்கு

Y என்பது வருவாய் (Income); C என்பது நுகர்வு (Consumption); I என்பது முதலீடு (Investment)

1.9.2. மூன்று துறைப் பொருளாதாரத்தின் வருமான சுழல் வட்ட ஓட்டம்



இல்லத்துறைக்கும் நிறுவனத்துறைக்கும் மேலாக அரசுத்துறை சேரும்போது மூன்று துறை மாதிரியாக (Three Sector Model) அமைகிறது. அரசானது இல்லத்துறைக்கும் நிறுவனங்க**ளுக்கும்** வரி விதிக்கின்றது. நிறுவனங்களிலிருந்து பண்டங்கள் பணிகளை வாங்குகின்றன. மேலும், இல்லத்துறையிலிருந்து நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளையும் பெறுகின்றன. இதற்கு மறுபுறத்தில் , அரசானது ஓய்வு ஊதியம், இழப்பீடு, மானியம் ஆகிய சமூக பரிவர்த்தனைகளை இல்லங்களுக்கு வழங்குகிறது. அதுபோல, நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு பணமளிக்கிறது. மூன்று துறை பொருளாதார மாதிரியை வரைபடம் விளக்குகிறது.

மூன்று துறை மாதிரியில், நாட்டு வருமானம் (National Income) என்பதை நுகர்வுச் செலவு (Consumption Expenditure), முதலீட்டு செலவு (Investmet Expenditure), அரசின் செலவு (Government Expenditure) ஆகியவற்றைக் கூட்டுவதால் அடையலாம்.

$$Y = C + I + G$$

இங்கு

Y = வருவாய் ; C = நுகர்வுச் செலவு ; I = முதலீட்டுச் செலவு ; G = அரசின் செலவு

1.9.3 நான்கு துறைப் பொருளாதாரத்தில் வருமான சுழல் ஓட்டம்



நான்கு துறைப் பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம், அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது. உண்மை வாழ்க்கையில், நான்கு துறைப் பொருளாதாரம் காணப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_1.indd 16 12-01-2023 09:53:50

இந்த நான்குத் துறைப் பொருளாதார மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.

i. இல்லங்கள் (House hold)

ii. நிறுவனங்கள் (Firms)

iii. அரசு (Government)

iv. அயல்நாட்டு வணிகத் துறை (External Sector)

வெளியுறவு துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகளும் (Exports) இறக்குமதிகளும் (Imports) ஆகும். இதை வரைபடம் விளக்குகிறது.

நான்கு துறைப் பொருளாதாரத்தில், ஒட்டு மொத்த செலவானது, உள்நாட்டு செலவுகள்

(C + I + G) யுடன் நிகர ஏற்றுமதி (X – M) யும் உள்ளடங்கும்.

$$Y = C + I + G + (X - M)$$

தொகுப்புரை

பேரியல் பொருளாதாரம் ஒரு பொருளாதார அமைப்பின் நடத்தையையும் செயல்பாட்டையும் முழுமையாகப் படிப்பது ஆகும். பெரிய கருத்துகளான வேலைவாய்ப்பு, நாட்டு வருமானம், பண வீக்கம், வணிகச் சூழல், வறுமை, ஏற்றத்தாழ்வுகள் வேறுபாடு, முதலீடு சேமிப்பு, மூலதன ஆக்கம், கட்டமைப்பு மேம்பாடு வங்கிகள், பொதுநிதி, பன்னாட்டு வணிகம், வணிகச் சமநிலை, அயல்நாட்டு செலுத்துதலின் சமநிலை, நாணய மாற்று வீதம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை இது ஆய்கிறது. பொருளாதார மாறிகள் அடிப்படையான பொருளாதார மாதிரிகள் ஒரு பொருளாதார அமைப்பினை அறிய பயனுள்ளதாயிருக்கின்றன சுழல் ஓட்ட மாதிரிகள் ஒரு பேரியல் பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிவதற்கு அடிப்படையாக அமைகின்றன.

பொருளாதார முறையின் அடிப்படையில் ஒரு பொருளாதாரத்தை முதலாளித்துவப் பொருளாதாரம், சமத்துவ பொருளாதாரம், கலப்புப்பொருளாதாரம் என வகைப்படுத்தலாம். இருப்பினும், அண்மைக் காலத்தில் நூறு விழுக்காடு முதலாளித்துவ முறையையோ, சமதரும முறையையோ நேர்த்தியான கலப்புப் பொருளாதார முறையையோ காண்பது அரிதாகும்.

கலைச்சொற்கள்

- **பேரியல் பொருளியல்:** ஒரு முழுப் பொருளாதாரத்தையும் அதன் போக்குகளையும் இயக்கங்களையும் படிக்கின்ற இயல்

- **பொருளாதாரம் :** ஒரு குறிப்பிட்ட பகுதியில் எவ்வாறு மக்களும் நிறுவனங்களும் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதைக் குறிப்பது

- **முதலாளித்துவம்:** உற்பத்திக்கான காரணிகள் தனியார் வசமிருக்கும், அங்காடியானது பொருளாதார நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஒரு முறை

- **சமத்துவம்:** பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகளை அரசே உரிமம் கொண்டு, கட்டுப்படுத்தி ஒரு சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் முறையைக் குறிப்பது.

- **கலப்புப்பொருளாதாரம்:** முதலாளித்துவ (தனியார் பங்கு) சமதரும (நாட்டுப் பங்கு) கொள்கைகளின் இணைவு ஆகும்

- **உலகத்துவம்:** ஒவ்வொரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைளும் மற்ற

www.tntextbooks.in

நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டும் சார்ந்தும் இருப்பது

- **இருப்பு (Stock):** ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருள் மாறாது நிலையாக இருப்பது
- **ஓட்டம் (Flow):** மாறிகள் காலச்சூழலில் மாறிக்கொண்டு இருப்பது கணக்கிடப்படும் பண்டங்களின் அளவு
- **பொருளாதார மாதிரி (Model):** ஒரு பொருளாதார அமைப்போ, பொருளாதார அமைப்பின் ஒரு பகுதியோ எவ்விதம் இயங்குகிறது என்பதை விளக்குவது
- **சுழல் ஓட்டம் (Circular flow):** குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு, நாடுகள் ஆகியவற்றிடையே பணம், பண்டம், பணி ஆகியவற்றின் தடைபடா ஓட்டத்தை விளக்குவது

மாதிரி வினாக்கள்

R6NCIE

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. பொருளியல் பாடத்தின் கிளைகள் என்பவை

    அ. சொத்தும் நலமும்
    ஆ. உற்பத்தியும் நுகர்வு
    இ. தேவையும் அளிப்பும்
    ஈ. நுண்ணியலும் பேரியலும்

2. "மேக்ரோ" (Macro) என்ற சொல்லை அறிமுகப்படுத்தியவர் யார்?

    அ. ஆடம்ஸ்மித்
    ஆ. ஜே.எம். கீன்சு
    இ. ராக்னர் பிரிக்சு
    ஈ. காரல் மார்க்சு

3. "புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

    அ. ஆடம்ஸ்மித்
    ஆ. ஜே.எம். கீன்சு
    இ. ராக்னர் பிரிக்சு
    ஈ. காரல் மார்க்சு

4. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?

    அ. விலை கோட்பாடு
    ஆ. வருவாய் கோட்பாடு
    இ. அங்காடி கோட்பாடு
    ஈ. நுண்ணியல் கோட்பாடு

5. பேரியல் பொருளாதாரம் ஆய்வது

    அ. தனிமனிதர்களை
    ஆ. நிறுவனங்களை
    இ. நாடுகளை
    ஈ. ஒட்டுமொத்தங்களை

6. ஜே. எம். கீன்சின் பங்களிப்பைக் குறிப்பிடுக.

    அ. நாடுகளின் செல்வம்
    ஆ. பொதுக் கோட்பாடு
    இ. மூலதனம்
    ஈ. பொது நிதி

12-Economics-Tamil-Chapter_1.indd 18 12-01-2023 09:53:50

7. பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து ____________ஆகும்.

அ. மொத்த விலைக் குறியீடு
ஆ. வணிகச் சுழல்
இ. பண வீக்கம்
ஈ. நாட்டு வருமானம்

8. பொருளாதாரக் கொள்கைகளின் அவசியத்தைக் குறிப்பிடுக

அ. அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பது
ஆ. தடைகளை முறியடிப்பது
இ. வளர்ச்சியை அடைவது
ஈ. மேலே கூறப்பட்ட அனைத்தும்

9. ஒரு பொருளாதாரத்தின் அடிப்படைப் பொருளாதார நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

அ. உற்பத்தியும் பகிர்வும்
ஆ. உற்பத்தியும் பரிமாற்றமும்
இ. உற்பத்தியும் நுகர்வும்
ஈ. உற்பத்தியும் சந்தையிடுகையும்.

10. ஒரு பொருளாதாரத்தில் காணப்படுவது

அ. உற்பத்தி துறை
ஆ. நுகர்வு துறை
இ. அரசு துறை
ஈ. மேலே கூறப்பட்ட அனைத்தும்

11. எந்த பொருளாதாரத்தில், உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?

அ. முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ. சமதருமப் பொருளாதாரம்
இ. உலகமய அமைப்பு
ஈ. கலப்புப் பொருளாதாரம்

12. பகிர்வில் சமத்துவத்தை கடைப்பிடிக்கிற பொருளாதார அமைப்பு __________ ஆகும்.

அ. முதலாளித்துவ பொருளாதாரம்
ஆ. உலகமயத்துவ அமைப்பு
இ. கலப்புப் பொருளாதாரம்
ஈ. சமதருமப் பொருளாதாரம்

13. முதலாளித்துவத்தின் தந்தை என அழைக்கப்படுவர் யார்?

அ. ஆடம்ஸ்மித்
ஆ. காரல் மார்க்ஸ்
இ. தக்கேரி
ஈ. ஜே.எம்.கீன்ஸ்

14. முதலாளித்துவத்தை பின்பற்றும் நாடு __________ ஆகும்.

அ. இரஷ்யா
ஆ. அமெரிக்கா
இ. இந்தியா
ஈ. சீனா

15. சமதருமக் கொள்கையின் தந்தை எனப் படுபவர் யார்? .

அ. ஜே.எம்.கீன்சு
ஆ. காரல் மார்க்சு
இ. ஆடம்ஸ்மித்
ஈ. சாமுவேல்சன்

16. தனியாரும், அரசும் சேர்ந்து பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாதார அமைப்பைக் குறிப்பிடும் பதம் ____________ஆகும்.

அ. முதலாளித்துவப் பொருளாதாரம்
ஆ. சமதருமப் பொருளாதாரம்
இ. உலகமயத்துவ பொருளாதாரம்
ஈ. கலப்புப் பொருளாதாரம்

17. ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of time) குவிந்த சரக்குகளின் அளவைக் குறிப்பிடும் பதம் _________ஆகும்.

அ. உற்பத்தி
ஆ. இருப்பு
இ. மாறிலி
ஈ. ஓட்டம்

18. கீழ்வருவனவற்றுள் தடைபடா ஓட்ட மாறிலியைக் கண்டுபிடி.

அ. பண அளிப்பு
ஆ. சொத்துக்கள்
இ. வருமானம்
ஈ. வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

19. இருதுறை மாதிரியில் உள்ள இருதுறைகளைக் குறிப்பிடுக

அ. குடும்பங்களும் நிறுவனங்களும்
ஆ. தனியாரும் பொதுத்துறையும்
இ. உள்நாட்டு ,வெளிநாட்டுத்துறைகள்
ஈ. நிறுவனங்களும் அரசும்

20. திறந்துவிடப்பட்ட பொருளதாரத்தின் சுழல் ஓட்ட மாதிரி என்பது __________ஆகும்

அ. இரு துறை மாதிரி
ஆ. முத்துறை மாதிரி
இ. நான்கு துறை மாதிரி
ஈ. மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
ஈ	இ	ஆ	ஆ	ஈ	ஆ	இ	ஈ	இ	ஈ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	ஈ	அ	ஆ	ஆ	ஈ	ஆ	இ	அ	இ

பகுதி – ஆ

கீழ்க்காண்பவற்றுக்கு ஓரிரு சொற்களில் விடையளி

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. பணவீக்கம் எனும் பதத்தின் பொருள் தருக.
23. "பொருளாதாரம்" என்பதன் பொருள் யாது?
24. வளர்ச்சி நிலை அடிப்படையில் பொருளாதாரங்களை வகைப்படுத்துக.
25. முதலாளித்துவம் என்றால் என்ன?
26. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.
27. "வருமான சுழல் ஓட்டம்" – வரையறு.

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் பதில் தருக

28. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
29. பொருளாதார முறைகளின் வகைகளை குறிப்பிடுக.

12-Economics-Tamil-Chapter_1.indd 20 12-01-2023 09:53:50

30. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.
31. சமதரும குறைகளைக் கூறுக.
32. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
33. முதலாளித்துவத்தையும் சமத்தருமத்தையும் வேறுபடுத்துக.
34. இரு துறை சுழல் ஓட்ட மாதிரியினை விளக்குக.

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி

35. பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.
36. நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.
37. முதலாளித்துவம், சமத்துவம் ஆகியவற்றின் இயல்புகளை ஒப்பிடுக.
38. முதலாளித்துவம், சமதருமம், கலப்புப் பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக

செய்முறை

1. இணையதளம் சார்ந்த செயல் (Internet Based Activity)

ஒவ்வொரு மாணவனுக்கும் நான்கு நாடுகளை ஒதுக்க வேண்டும். மாணவர்கள், நாட்டைப் பற்றி அடிப்படை செய்திகளைச் சேகரித்து படவிளக்கத்தாளில் (Chart Paper) எழுதி ஒப்படைக்க வேண்டும். வகுப்பு ஆசிரியர், சேகரிக்க வேண்டிய புவியியல், அரசியல் சமூக – பொருளியல் இதர செய்திகள் அடங்கிய பட்டியலைக் குறிப்பிட்டுக் கொடுக்க வேண்டும். அந்தந்த நாடுகளில் காணப்படும் பொருளாதார அமைப்பை மாணவர்கள் குறிப்பிட வேண்டும். இணைய தள மூலங்களை இந்த செயலுக்குப் பயன்படுத்தலாம்.

2. பங்கு நாடக செயல் (Role Play Activity)

மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவும் நான்கு துறை மாதிரியின் துறைகளாகக் கொள்ள வேண்டும். குறிப்பிட்டுக் கூறினால், இல்லத்துறை, வணிகத்துறை, அரசுத்துறையும், வெளிநாட்டுத்துறை. ஒவ்வொரு துறையும் அவரவர் வேலைகளைக் குறிப்பிட்டு அத்துறையிலும் வருவாயின் பண்டங்கள், பணிகளின் தடைபடா ஓட்டம் ஏற்படுவதைப் புரிந்து கொள்ள வேண்டும். குழு நடவடிக்கைகளை வகுப்பாசிரியர் துவக்கி வைத்து நடுவராகச் செயல்பட வேண்டும்.

பார்வை நூல்கள்

1. Dhas A.C (2016): Economics, an Economy, and the Role of Information in Economic Decisions, International Journal of Exclusive Global Research, Vol. 1, Issue 9 September.
2. Dornbusch, Fischer and Startz (2004): Macro Economics, Tata Mc Graw Hill Education Private Limited, New Delhi.
3. Edward Shapiro (1998): Macro Economic Analysis, Galgotia Publications (P) Ltd. New Delhi.
4. Gupta G.S. (2016): Macro Economics: Theory and Applications, Tata McGraw–Hill Publishing Company, New Delhi.
5. Karl Marx (1920): Capital: A Critical Analysis of Capitalist Production, William Glaisher Limited, London.
6. Lord Rollof Ipsden(1982): The Mixed Economy, Macmillan Press, London.
7. Manfred B.Steger (2002) : Globalism: The New Market Ideology, Rowan and Littlefield Publishers, USA.
8. Maria John Kennedy M(2013): Macro Economic Theory, PHI Learning Private Ltd, New Delhi.
9. Paul A Samuelson and William D.Nordhuaus (2012): Macro Economics, Tata Mc Graw Hill Education Private Limited, New Delhi.

12-Economics-Tamil-Chapter_1.indd 22 12-01-2023 09:53:50

இயல் 2

நாட்டு வருமானம்

"பெரிய பிரச்சனைகளான வேலைவாய்ப்பின்மை, பண வீக்கம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை சமாளிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தவிர்க்க முடியாத தயாரிப்பே நாட்டு வருமானம் எனும் கருத்துரு ஆகும்".

– **சாமுவேல்சன்**

புரிதலின் நோக்கங்கள்

1 நாட்டு வருமானம் என்பதன் பொருளும் அதனுடன் தொடர்புடைய கருத்துருக்களையும் புரிதல்

2 நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை அறிதல்.

2.1 அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடும் ஒரு முழுமையான அளவு கோலை நாட்டு வருமானம் தருகிறது. ஒரு நாட்டின் வாங்கும் சக்தியைக் குறிப்பிடும் காரணியாக இருக்கிறது. உண்மை நாட்டு வருமானம் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மாறும் விகிதத்தைப் பொருத்தே பொருளாதாரத்தின் வளர்ச்சி அளவிடப்படுகிறது. பொருளாதாரத் திட்டமிடுதலுக்கான ஒரு கருவியாக இது திகழ்கிறது. மேலும் இது ஒரு மிக முக்கிய பேரினப் பொருளியல் மாறியாகவும் இருக்கிறது. எனவே நாட்டு வருமானம் என்பதன் பொருள், பல்வேறு கருத்துருக்கள், அளவிடும் முறைகள், பயன்கள் ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியம் ஆகும்.

நோபல் பரிசு பெற்றுள்ள சைமன் குஷ்நெட்ஸ் (Simon Kuznets) இந்தக் கருத்துருவை முதலில் அறிமுகப்படுத்தினார்.

2.2 நாட்டு வருமானத்தின் பொருள்



பொதுவாகக் கூறப்போனால், நாட்டு வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள், பணிகளின் பண மதிப்பாகும்.

2.3 இலக்கணம்

"ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள், பணிகளைப் உற்பத்தி செய்கின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், நாட்டு வருமானம் அல்லது நாட்டு ஈவுத்தொகை ஆகும்".

–ஆல்ஃபிரட் மார்ஷல் (Alfred Marshall)



ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)யில் வரையறுக்கப்பட்ட நிலையில் நாட்டு வருமானம் அளவிடப்படுவதின் மூலம் அந்நாட்டின் நலத்தை அறிய முடியும். அதிக வளர்ச்சிக்கான இலக்குகள் எதற்காக எப்படி என்பதைக் குறிப்பிட வேண்டும்.

"ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, நிகர உற்பத்தியாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்குச் செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது"

– சைமன் குஸ்நட்ஸ்

2.4 நாட்டு வருமானத்தின் அடிப்படைக் கருத்துருக்கள்

நாட்டு வருமானம் அளவிடுவதற்குக் கீழ்க்காணும் கருத்துருக்கள் பயன்படுகின்றன.

2.4.1. GDP மொத்த உள்நாட்டு உற்பத்தி

2.4.2. GNP மொத்த நாட்டு உற்பத்தி

2.4.3. NNP நிகர நாட்டு உற்பத்தி

2.4.4. காரணிச் செலவில் நிகர நாட்டு உற்பத்தி (NNP at factor cost)

2.4.5. தனிமனிதர் வருமானம் (Personal Income)

2.4.6. செலவழிக்கக் கூடிய வருமானம் (Disposable Income)

2.4.7. தலா வருமானம் (Per capita Income)

2.4.8. உண்மை வருமானம் (Real Income)

2.4.9. GDP குறைப்பான் (GDP Deflator)

2.4.1. மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product: GDP)

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள், பணிகளின் மொத்த அங்காடி மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும். இது அங்காடியில் விலை கணக்கிடப்படுகிறது இது அங்காடி விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என அழைக்கப்படுகிறது.

செலவு முறையைப் பயன்படுத்திக் கணக்கிடப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி

GDP = C + I + G + (X – M).

இதில் C = நுகர்வுப் பண்டங்கள்,

I = முதலீட்டுப் பண்டங்கள்,

G = அரசின் கொள்முதல்கள்.

(X – M) = நிகர ஏற்றுமதி (இது நேர்எண்ணாகவோ, எதிர்மறையாகவோ இருக்கலாம்).

12-Economics-Tamil-Chapter_2.indd 24 12-01-2023 09:50:47

(அ) நிகர உள்நாட்டு உற்பத்தி (Net Domestic Product: NDP)

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். உற்பத்தி செய்யும் போது ஒரு நாட்டில் உள்ள சில முதலீட்டுக் கருவிகள் தேய்மானம் அடையலாம், பழுதாகிப் போகலாம் அல்லது பயனற்று போகலாம். தேய்மானத்தின் மதிப்பை GDPயிலிருந்து கழித்துவிட்டால் கிடைப்பது NDP ஆகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP – தேய்மானம்.

2.4.2 மொத்த நாட்டு உற்பத்தி (Gross National Product) (GNP)

மொத்த நாட்டு உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட வினை முடிவடைந்த பண்டங்கள், பணிகளின் அங்காடி மதிப்பில் கணக்கிடப்படுவது ஆகும். இதில் நிகர வெளிநாட்டு வருமானமும (நிகர ஏற்றுமதி) சேர்க்கப்படும். GNP–இல் கீழ்க்காணும் ஐந்து வகையான வினை முடிவடைந்த பண்டங்கள், பணிகள் உள்ளன.

1. ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள், பணிகளின் மதிப்பு. இவை மக்களின் உடனடி நுகர்வுத் தேவையை நிறைவு செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டவை. இதனை நுகர்வு (Consumption: C) என்கிறோம்.

2. மொத்த உள்நாட்டு மூலதனப் பொருட்களின் தனியார் முதலீடுகளில் இதில் மூலதனத் திரட்சி, வீடுகட்டுதல், உற்பத்திக்காக வைப்பில் உள்ள வினை முடிந்த, வினை முடியாத பண்டங்கள் ஆகியவை அடங்கும். இதனை முதலீடு (I) எனக் குறிக்கிறோம்.

3. அரசால் வாங்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகள் G எனக் குறிப்பிடப்படுகிறது.

4. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை (M) கழித்தால் கிடைக்கும் (X – M) நிகர ஏற்றுமதி. இது நேர்எண்ணாகவோ (+) எதிர்மறையாகவோ (–) இருக்கலாம்.

5. நிகர வருமானம் என்பது வெளிநாடுகளில் இருந்து பெற்ற காரணிகளின் வருமானக்கும் (கூலி, வட்டி, இலாபம்) நம் நாட்டில் குடியிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட காரணிகளின் வருமானம்க்கும் இடையே உள்ள வேறுபாடு (R – P) ஆகும். அங்காடி விலையில் GNP என்பது C+ I + G + (X–M) + (R–P)

அங்காடி விலையில் GNP = அங்காடி விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம்.

2.4.3 அங்காடி விலையில் நிகர நாட்டு உற்பத்தி (NNP at Market Prices)

நிகர நாட்டு உற்பத்தி என்பது ஒரு ஆண்டிடன், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். GNPயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர நாட்டு உற்பத்தி ஆகும்.

NNP = GNP – தேய்மானக் கழிவு

12-Economics-Tamil-Chapter_2.indd 25 12-01-2023 09:50:47

தேய்மானத்தை மூலதன நுகர்வுக் கழிவு (Capital Consumption Allowance) என்றும் கூறலாம்.

2.4.4 காரணி செலவில் நிகர நாட்டு உற்பத்தி (NNP at Factor Cost)

நிகர நாட்டு உற்பத்தி என்பது உற்பத்தியின் அங்காடி மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். காரணி செலவில் நிகர நாட்டு வருமானத்தை பெறுவதற்கு, அங்காடி விலையில் NNPயின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியைக் கழிக்க வேண்டும். மேலும் மானியங்களைக் கூட்ட வேண்டும்.

> காரணிசெலவில் NNP= சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்

2.4.5 தனிமனிதர் வருமானம் (Personal Income):

தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் பல வழிகளிலிருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். அவை அனைத்தையும் ஒவ்வொரு தனி மனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும். தனிமனிதர் வருமானம் நாட்டுவருமானத்திற்குச் சமமாக இருக்காது. ஏனெனில் மாற்று செலுத்துதல்கள் (Transfer Payment) தனிமனிதர் வருமானத்தோடு சேர்க்கப்படுகிறது. அரசிடம் இருந்து கிடைத்த ஓய்வூதியம் (Pension) தனிமனிதர் வருமானத்துடன் சேர்க்கப்படுகிறது. எனவே,

நாட்டு வருமானத்திலிருந்து பங்களிக்கப்படாத கார்பரேட் இலாபம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் உழைப்பாளர்களின் பங்களிப்பு ஆகியவற்றை கழித்துவிட்டு, மாற்றுச் செலுத்துதல்களை கூட்டி தனிமனிதர் வருமானம் கணக்கிடப்படுகிறது.

> தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள்

2.4.6 செலவிடக்கூடிய வருமானம் (Disposable Income):

செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிமனிதர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. தனிமனிதர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளைக் (Eg. Income Tax) கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம். இந்த வருமானம் தான் தனிமனிதர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும்.

> செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முகவரிகள்

2.4.7 தலா வருமானம் (Per capita Income):

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒருவரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக்கிடைப்பது தலா வருமானம்.

தலாவருமானம் = $\frac{\text{ஒரு குறிப்பிட்ட ஆண்டின் நாட்டு வருமானம்}}{\text{அதே ஆண்டின் மக்கள் தொகை}}$

12-Economics-Tamil-Chapter_2.indd 26 12-01-2023 09:50:49

2.4.8 உண்மை வருமானம் (Real Income):

பண வருமானம் என்பது நாட்டு வருமானத்தை ஒரு ஆண்டின் உள்ள பொது விலை மட்டங்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. வேறுவிதமாகக் கூறினால் பண வருமானத்தின் வாங்கும் சக்தியே உண்மை வருமானம் ஆகும். உண்மை வருமானத்தை கீழ்க்காணும் முறையில் கணக்கிடலாம்.

நிலையான விலையில் உண்மை வருமானம் = நடப்பு விலையில் நாட்டு வருமானம் $\div P_1 / P_o$

P_1 = நடப்பு ஆண்டு விலைக் குறியிடு

P_o = அடிப்படை ஆண்டின் விலைக்குறியீடு

2.4.9 GDP குறைப்பான் (GDP Deflator)

GDP குறைப்பான் என்பது GDPயில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள், பணிகளின் விலை மாற்றக் குறியீட்டெண் ஆகும். இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும். கொடுக்கப்பட்ட ஆண்டில் பணமதிப்பு அடிப்படையில் கணக்கிடப்பட்ட GDPயை உண்மை GDP யால் வகுத்து, 100 ஆல் பெருக்கினால், GDP குறைப்பானைக் கணக்கிடலாம்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

2.5 நாட்டு வருமானத்தை அளவிடும் முறைகள்

ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளை பணமதிப்பில் கணக்கிட வேண்டும். அதாவது நமது சொந்த நுகர்வுக்காவோ, சேமிப்பிற்காகவோ பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பண மதிப்பையும் நாட்டு வருமானக் கணக்கிடலில் சேர்க்கவேண்டும்.

நாட்டு வருமானத்தை மூன்று முறைகளைப் பயன்படுத்தி அளவிடலாம். அவை: உற்பத்தி முறை, வருமானம் முறை மற்றும் செலவு முறை ஆகும்:

1. உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் (Value added) முறை

2. வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை

3. செலவு முறை

இம்மூன்று முறைகளைச் சரியாகப் பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி , வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

உற்பத்தி = வருமானம் = செலவு

ஏனென்றால் இம்மூன்று முறைகளும் இயல்பாகவே ஒரு சுழற்சியாக இருக்கும். நுகர்வுக்காக உற்பத்தி தொடங்கப்படுகிறது. உற்பத்தி செய்ய உற்பத்திக் காரணிகளை வேலைக்கு அமர்த்தி உற்பத்தி முடிந்த பிறகு வருமானம் பெருகும். பிறகு உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியத்தை அளித்து அதன் மூலம் நுகர்வுச் செலவு செய்யப்படும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி – செலவு முறை, காரணி வருமான முறை அல்லது உற்பத்தி முறை

GDP (செலவு முறை)	GDP (காரணி வருமான முறை)	GDP (உற்பத்தி முறை)

• நுகர்ச்சி
• அரசுச் செலவினங்கள்
• முதலீட்டுச் செலவினங்கள்
• இருப்புகளின் மதிப்பு மாறல்
• ஏற்றுமதி
• **– இறக்குமதி**
• = மொத்த உள்நாட்டு உற்பத்தி
	• மக்களின் சம்பளம், கூலி, சொந்த வேலை செய்வோருக்கான சம்பளம்
	• தனியார் துறை வணிகம் மூலம் கிடைக்கும் இலாபம்
	• நில உரிமையாளர்கள் பெறும் வாடகை
		• பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் கூட்டப்பட்ட மதிப்பு
		• இத்துறைகள்
		  • முதன்மைத் துறை
		  • இரண்டாம் துறை
		  • மூன்றாம் துறை

2.5.1 உற்பத்தி முறை (Product Method)

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியைக் கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் வேளாண்மை, தொழில், வணிகம் ஆகிய துறைகளின் உற்பத்தியின் மொத்தமே நாட்டு உற்பத்தி ஆகும். ஒரு துறையின் வெளியிடு (Output) பொருள் மற்றொரு துறையின் உள்ளிடு (Input) பொருளாகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை அல்லது பல முறைக் கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறைக் கணக்கிடல் எனப் பெயர். இதனைத் தவிர்க்க வினை முடிந்தப் பண்டங்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்காணுமாறு கணக்கிடப்படுகிறது.

i) 64 வகை வேளாண் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பயிரின் ஒரு ஹெக்டேருக்கான சராசரி (Per acre) உற்பத்தியைக் கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

ii) ஒவ்வொரு பண்டத்தின் மொத்த உற்பத்தியும் அங்காடி விலையால் மதிப்பிடப்படுகிறது.

iii) இந்த 64 வகை பயிர்களின் மொத்த உற்பத்தி மதிப்பை எடுத்துக் கொண்டு வேளாண்மை துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

iv) வேளாண் உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு, மொத்த வேளாண் உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடிக் கட்டணம், சரிசெய்தல், தேய்மானம் ஆகிய செலவுகள் கழிக்கப்படுகின்றன.

12-Economics-Tamil-Chapter_2.indd 28 12-01-2023 09:50:50

இதுபோல, மற்ற துறைகளுக்கும் (எ.கா: கால்நடை, காடுகள், மீன், சுரங்கம், தொழிற்சாலை) மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் அங்காடி விலையால் பெருக்கி உற்பத்தியின் மொத்த மதிப்பு பெறப்படுகிறது. மேற்குறிப்பிட்ட வேளாண் சார்ந்த பிற துறைகளின் மொத்த மதிப்பில் இருந்து இடு பொருட்களின் செலவு, தேய்மானம் ஆகியவற்றைக் கழித்து நிகர மதிப்பு கணக்கிடப்படுகிறது.

இவ்வாறுதான், பிற துறைகளின் உற்பத்தி நிகர பங்களிப்பின் மதிப்பு நாட்டு வருமானத்தில் எவ்வளவு இருக்கிறது என கணக்கிடப்படுகிறது.

முன்னெச்சரிக்கைகள்

பின்தங்கிய நாடுகளிலும் வளர்ந்துவரும் நாடுகளிலும் உற்பத்தி முறை கையாளப்படுகிறது. இதில் பிழைகள் அதிகம் வர வாய்ப்புண்டு. இந்தியாவில் இம்முறை வேளாண்மை, சுரங்கம், தயாரிப்பு, கைவினைப் பொருள்கள் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. ஒரே பண்டம் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பண்டம் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. எடுத்துக்காட்டாக, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது "பல முறை கணக்கில் சேர்த்தல்" என்ற பிழைக்கு வழிவகுக்கும்.
2. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பண்டங்களின் மதிப்பையும் நாட்டு வருமானம் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டு: உழவர்கள் தாம் உற்பத்தி செய்த பலவற்றை அங்காடி விற்பனைக்கின்றி தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காக வைத்துக்கொள்ளலாம். அவற்றின் அளவையும் அங்காடி விலையுடன் பெருக்கி மதிப்பைக் கண்டு நாட்டு வருமானம் கணக்கில் சேர்க்க வேண்டும்.
3. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த (Durable) பொருள்களை வாங்குதல், விற்றல் நடவடிக்கைகளின் பணமதிப்பை நாட்டு வருமானத்தில் சேர்க்கக் கூடாது. எடுத்துக்காட்டு: கைப்பேசி, கார் முதலான பொருட்கள் இருமுறைகள் அல்லது அதற்கு மேல் விற்கப்படுகின்றன.

2.5.2. வருமான முறை (Income Method)

வருமான முறை என்பது நாட்டு வருமான கணக்கிடலைப் பகிர்வு பகுதியிலிருந்து அணுகுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி நாட்டு வருமானத்தைக் கணக்கிடலாம். வருமான முறையானது, காரணிகள் ஈட்டும் வருமான முறை எனவும் அழைக்கப்படுகிறது.

கணக்கிடுவதன் நிலைகள்

1. மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.
2. காரணிகளின் வருமானங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம், கலப்பு வருமானம்.

i) உழைப்பாளர் வருமானம் – கூலி, சம்பளம், சமூக பாதுகாப்புக்கு முதலாளியின்

பங்கு, உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு (Fringe) ஊதியங்கள்.

ii) மூலதன வருமானம் – இலாபம், வட்டி, இலாப ஈவு, உரிமைத் தொகை (இராயல்டி).

iii) கலப்பு வருமானம் – வேளாண்மைப், பண்ணை சிறு தொழில் செய்வோர், பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்

3. உள்நாட்டுக் காரணி வருமானங்களுடன் ஏற்றுமதி, இறக்குமதியின் நிகர வருமானத்தை கூட்டுவதன் மூலம் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

$$Y = w + r + i + \pi + (R-P)$$

இதில்

W=கூலி, r = வாடகை, i = வட்டி, π = இலாபம்
R = ஏற்றுமதி P = இறக்குமதி

மொத்த நாட்டு வருமானம் கணக்கிடுவதில் பிற துறைகளான சிறு நிறுவனங்கள், வங்கி, காப்பீடு, வணிகம், போக்குவரத்து, கலை, வீட்டுவேலை செய்பவர்கள், பொது நிறுவனங்கள், வீட்டுச் சொத்து வருமானம், அயல்நாட்டு வணிகப் பரிமாற்றம் முதலானவற்றின் வருமானங்கள் மதிப்பிடப்படுகின்றன.

செலுத்துநிலைக் கணக்கில் (Balance of Payments), வெளிநாடுகளில் இருந்து வந்த அல்லது வெளிநாடுகளுக்குச் சென்ற தொகை தொடர்பான புள்ளி விவரங்கள் பெறப்படுகின்றன.

முன்னெச்சரிக்கைகள்

நாட்டு வருமானத்தை வருமான முறையில் கணக்கிடும்போது பின்வரும் முன்னெச்சரிக்கைகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கணக்கீட்டிற்கு உட்படுத்த கூடாதவை:

1. ஓய்வூதியம் சமூகக் காப்பீடு போன்ற நடப்பாண்டு சேவைகளுக்கு செலுத்துகைகள் பெறப்படுவதில்லை என்பதால் மாற்று செலுத்துகைகளை நாட்டு வருமான மதிப்பீட்டில் சேர்த்தல் கூடாது.

2. மறு விற்பனைக்கு வரும் பயன்படுத்திய இரண்டாம் தர பொருள்கள் மற்றும் சேவைகள் நடப்பாண்டில் வருமானம் ஓட்டத்தை உருவாக்காது. எனவே அவை நாட்டு வருவாயின் பகுதியாகக் கருதக்கூடாது.

3. லாட்டரி போன்ற பரிசு ஆதாயங்கள் எந்த உற்பத்தி செயல்பாடுகளிலும் ஈடுபடுவதில்லை என்பதால் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

4. நிறுவன இலாப வரி ஏற்கனவே அந்நிறுவனத்தின் இலாபத்தின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளதால் தனித்தனியாக சேர்க்கக்கூடாது.

கணக்கீட்டில் உட்படுத்த வேண்டியவை:

1. சுய பயன்பாட்டில் உள்ள வீடுகள் அல்லது அலுவலகங்களுக்கான கணக்கிடப்பட்ட வாடகை மதிப்பு சேர்க்கப்பட வேண்டும்.

2. உற்பத்தி அளவுகளின் உரிமையாளர்களால் (குடும்பத் தொழிலாளர்) வழங்கப்படும் சேவைகளின் மதிப்பு சேர்க்கப்பட வேண்டும்.

2.5.3. செலவு முறை (Expenditure or outlay method):

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்தச் செலவுகள் அனைத்தையும் கூட்டி நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது. தனிமனிதரின் சொந்த நுகர்வுச் செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டுப் பொருள் வாங்கும் செலவு, நிகர ஏற்றுமதி முதலான அனைத்துச் செலவுகளையும் கூட்டி செலவு முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

மொத்தச் செலவும் கீழ்க்காணும் முறையில் சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

$$GNP = C + I + G + (X-M)$$

C – தனியார் நுகர்வுச் செலவு

I – தனியார் முதலீட்டுச் செலவு

G – அரசின் கொள்முதல் செலவு

X – M = நிகர ஏற்றுமதி.

முன்னெச்சரிக்கைகள்

1. **ஏற்கனவே வாங்கிய பொருளை மீண்டும் வாங்குதல்:** ஏற்கனவே வாங்கி பயன்படுத்தப்பட்ட கார், இருசக்கர வாகனம், கைபேசி, இயந்திரம் முதலானவற்றை இரண்டாம் முறை வாங்கும் போது மேற்கொள்ளப்படும் செலவுகளை நாட்டு வருமானம் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

2. **பங்குகள், பத்திரங்கள் வாங்குதல் :** பழைய பங்கு, பத்திரங்களை இரண்டாம் நிலை அங்காடிகளில் வாங்கும் போது ஏற்படும் செலவுகளை நாட்டு வருமானம் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

3. **மாற்று செலுத்துநிலை:** அரசாங்கம் செய்யும் மாற்றுச் செலுத்துதல்களான முதியோர் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு செய்யும் செலவுகளைச் சேர்க்கக்கூடாது.

4. **இடைநிலைப் பண்டங்களுக்கு செய்யும் செலவுகள்:** உழவர்கள் விதை, உரம் முதலானவை வாங்கச் செய்யும் செலவுகள், துணி தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் பருத்தி, நூல்களுக்கான செலவுகள் ஆகியவற்றை நாட்டு வருமானம் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது. வினை முடிவடைந்த பொருட்களின் செலவுகளை மட்டுமே சேர்க்க வேண்டும்.

காரணி செலவு (FC)

- பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் துறைகளில் பலவகையான உள்ளிடு பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த உள்ளிடு பொருள்கள் உற்பத்திக் காரணிகள் என அழைக்கப்படுகின்றன. அவையாவன: நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் முனைவு.
- பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்கள் மேற்கூறிய காரணிகளுக்கு, செலவு செய்கின்றனர். இந்த செலவுகள் பண்டங்களின் விலையில் சேர்க்கப்படுகின்றன.
- காரணிச் செலவு என்பது ஒரு நிறுவனம் பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் போது உற்பத்தி காரணிகளுக்கு செய்யும் செலவைக் குறிப்பது ஆகும்.

- இயந்திரங்களை வாடகைக்கு எடுத்தல், நிலம், இயந்திரம் வாங்குதல், கூலி, சம்பளம் கொடுத்தல், மூலதனத்தைப் பெற செய்யும் செலவு (வட்டி), தொழில் முனைவோருக்கு கிடைக்கும் இலாபம் ஆகியவை உற்பத்தி செலவிற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்.
- அரசிற்கு செலுத்தும் வரிகளை உற்பத்திச் செலவில் சேர்ப்பது இல்லை. ஏனெனில் வரிகள் நேரடியாக உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கு பெறுவது இல்லை.
- உற்பத்தியில் உதவித்தொகைகள் (Subsidies) நேரடியான விளைவை ஏற்படுத்துவதால், இத்தொகைகள் காரணி செலவில் சேர்க்கப்படுகின்றன.

அங்காடி விலை (Market Price MP)

- உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகள் அங்காடியில் விலைக்கு விற்கப்படுவதை குறிக்கிறது.
- அங்காடி விலை என்பது நுகர்வோர்கள் பொருளுக்கான விலையை விற்பனையாளர்களிடம் செலுத்திப் பொருளைப் பெறுவது ஆகும்
- அங்காடி விலை நிர்ணயிக்கின்றபோது, காரணி விலையில் (Factor price) அரசு விதித்த வரி சேர்க்கப்படுகிறது. மாறாக அரசு வழங்கிய உதவித் தொகைகள் காரணிவிலையில் குறைக்கப்படுகின்றன.
- அரசு விதிக்கும் வரிகள் உற்பத்தியாளர்களுக்குச் செலவாக இருப்பதால், அவை விலையில் சேர்க்கப்படுகின்றன. மாறாக, அரசு செலுத்திய உதவித் தொகைகள் ஏற்கனவே காரணிச் செலவில் சேர்க்கப்பட்டுள்ளதால், இத்தொகைகள் விலையில் சேர்க்கப்படுவது இல்லை.
- ஆகவே அங்காடி விலை (MP) = காரணி செலவு (FC) – உதவித்தொகைகள்
- அல்லது காரணி செலவு = சந்தை விலை (MP) – மறைமுகவரி + உதவித்தொகைகள்

காரணி விலையில் நாட்டு வருமானம் (NNPfc) = ஒரு நாட்டின் அனைத்து உற்பத்தித் துறைகளும் உற்பத்தி செய்த மொத்த மதிப்பு – தேய்மானம் – நிகர மறைமுகவரி + நிகர வெளிநாட்டுக் காரணிகளின் வருமானம்.

இங்கு,

நிகர மறைமுகவரிகள் = மறைமுகவரி – உதவித்தொகைகள்

மொத்த மதிப்புக் கூட்டல் = உற்பத்தியின் மதிப்பு – இடைநிலை நுகர்வு

உற்பத்தியின் மதிப்பு = விற்பனை + இருப்பில் மாற்றம்

இருப்பில் மாற்றம் = முடியும் இருப்பு (Closing Stock) – தொடக்க இருப்பு (opening Stock)

குறிப்பு: ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பொருள்களும் விற்கப்பட்டால், மொத்த உற்பத்தி, விற்பனைக்குச் சமமாக இருக்கும்.

உற்பத்தியின் மதிப்பு = விலை × விற்பனை அளவு

GDP_{MP} = தனியார் இறுதி நுகர்வு செலவு + அரசின் இறுதி நுகர்வு செலவு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் + நிகர ஏற்றுமதி (ஏற்றுமதி – இறக்குமதி)

12-Economics-Tamil-Chapter_2.indd 32 12-01-2023 09:50:50

www.tntextbooks.in

2.6 நாட்டு வருமான பகுத்தாய்வின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நாட்டு வருமானம் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. நாட்டு வருமானம் பொருளாதாரத்தின் கணக்கு அல்லது "சமூகக் கணக்கு" (Social Accounting) எனச் சொல்லப்படுகிறது. நாட்டு வருமானம் பகுத்தாய்வின் முக்கியத்துவம் பின்வருமாறு:

1. நாட்டு வருமானம் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் நாட்டு வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது. மேலும் பண்டங்கள், பணிகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன, பகிரப்படுகின்றன, செலவு செய்யப்படுகின்றன, சேமிக்கப்படுகின்றன, வரிகள் விதிக்கப்படுகின்றன முதலானவற்றை அறிய இயலும்.

2. நாட்டளவிலான பணவியல் கொள்கைகள், பொதுநிதிக் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் நாட்டு வருமானம் ஆய்வு உதவுகிறது.

3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு, நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை நாட்டு வருமானம் கணக்கீடு அளிக்கின்றது.

4. குறுகிய கால, நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க நாட்டு வருமானம் கணக்கீடு பயன்படுகிறது.

5. துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், நாட்டு வருமானம் விவரங்கள் பயன்படுகின்றன.

6. நாட்டு வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறியப் பயன்படுகிறது.

7. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளுக்கான வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள நாட்டு வருமானம் பயன்படுகிறது.

8. பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை – GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை – GDP விகிதம், கடன் – GDP விகிதம் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது.

2.7 நாட்டு வருமானக் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள்

நாட்டு வருமானம் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்பு இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும். இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்ட மாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு. எனவே ஒரு சரியான நாட்டு வருமான மதிப்பீடு தருவதில் சிக்கல்கள் இருக்கின்றன. சில சிக்கல்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

12-Economics-Tamil-Chapter_2.indd 33 12-01-2023 09:50:50

www.tntextbooks.in



2.7.1 மாற்றுச் செலுத்துதல்கள் (Transfer Payments)

ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் முதலானவற்றை அரசு அளிக்கிறது. இவை அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவற்றை நாட்டு வருவாயில் சேர்ப்பதில்லை. நாட்டின் கடனுக்காக செலுத்தப்படும் வட்டியும் இது போன்றதே.

2.7.2 தேய்மானங்கள் கொடுப்பளவு மதிப்பிடுவதில் சிக்கல் (Difficulties in assessing depreciation allowance)

தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு, பழுதுக் கட்டணங்கள் முதலானவற்றை நாட்டு வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. இவற்றை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

2.7.3 பணம் செலுத்தப்படாத சேவைகள் (Unpaid services)

இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். உணவு தயாரித்தல், தையல், பழுது பார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலான வேலைகளையும் எந்தவித பண வருமானமும் இன்றியும் நட்பு, பாசம், அன்பு, மரியாதை ஆகிய பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு நாட்டின் உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

2.7.4 சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் (Income from illegal activities)

சூதாட்டம், கடத்தல், சட்ட விரோதமாக மது தயாரித்தல் முதலிய சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் நாட்டு வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை. இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

2.7.5 சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் (Production for self–consumption and changing price)

உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். அங்காடியில்

12-Economics-Tamil-Chapter_2.indd 34 12-01-2023 09:50:51

விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

உற்பத்தி முறையில் நாட்டு வருமானம் கணக்கிடுதல் என்பது நடப்பு அங்காடி விலையில் வினை முடிவடைந்த பண்டங்களின், பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும். ஆனால் விலைகள் ஒரே மாதிரி நிலையாக இருப்பது இல்லை. இந்த சிக்கலுக்கு தீர்வுகாண, பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை நாட்டு வருமானத்தை கணக்கிடுகின்றனர்.

2.7.6 மூலதன இலாபம் (Capital Gains)

மூலதன சொத்துக்களான வீடு, பிற சொத்துக்கள், பங்குகள் முதலானவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது. நாட்டு வருமானம் கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவது இல்லை.

2.7.7 புள்ளி விவர சிக்கல் (Statistical Problems)

புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை, புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை நாட்டு வருமானம் கணக்கிடுதலில் சிக்கல்களைத் தரலாம்.

1. வேளாண்மைத்துறையில் உற்பத்தி அளவைக் கணக்கிடுவது எளிதல்ல. மேலும் கால்நடைத்துறையின் உற்பத்தி பற்றிய புள்ளிவிவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் கிடைக்காது.
2. பல்வேறு மொழி, கலாச்சாரம் முதலான காரணத்தினாலும் புள்ளிவிவரங்களை மதிப்பிடுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
3. அரசு அலுவலர்கள் – மக்கள் உறவு நம் நாட்டில் சுமூகமாக இல்லாத நிலையில் புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் சிக்கல்கள் வருகின்றன. மக்கள் உண்மையான புள்ளிவிவரங்கள் தருவதில்லை.
4. புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர்.

ஆகையினால் நாட்டு வருமானம் மதிப்பீட்டில் துல்லியத் தன்மை இல்லாமலும், புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லாமலும் இருக்கின்றன. 10 விழுக்காடு அதிகமாகவோ, குறைத்தோ மதிப்பிடப்படுகின்றது. இத்தகைய காரணங்களினால் இந்தியாவின் GDPயின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு ஏறக்குறைய 2 டிரில்லியன் US$ யிலிருந்து 5 டிரில்லியன் US$ வரை வேறுபடுகிறது.

2.8 நாட்டு வருமானமும் சமூகக் கணக்கிடுதலும் (National Income And Social Accounting)

சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது. சமூகக் கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு ஆகிய அமைப்புகளின் பரிமாற்றங்கள் பதியப்பட்டு இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப்படுகின்றன. சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல்

12-Economics-Tamil-Chapter_2.indd 35 12-01-2023 09:50:51

அறிஞர்களுக்குக் கொள்கைகளை உருவாக்க பயன் உள்ளதாக இருக்கும். ஏனெனில் இது பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கு இடையே உள்ள புள்ளியியல் காரணிகளுக்கும் பொருளாதார காரணிகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை விளக்குகிறது. மேலும் எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாகக் கணிப்பதற்கும் உதவுகிறது.

2.8.1. சமூக கணக்கிடுதலும் துறைகளும் (Social Accounting and Sector)

இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்படுகிறது. தனிமனிதர்கள் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு முதலானவற்றுக்கிடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்க்காணும் துறைகளாகப் பிரிக்கப்படுகிறது.

i. நிறுவனங்கள்
ii. குடும்பங்கள்
iii. அரசு
iv. வெளிநாட்டு வணிகம்
v. மூலதனத் துறை

நிறுவனங்கள்

நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்கின்றன.

குடும்பங்கள்

குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியைப் பெற்று, அதன் மூலம் பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன. அதாவது ஊதியத்தினைப் பெற்று பண்டங்களை வாங்குகின்றது. நிறுவனங்கள் குடும்பங்களின் பணியைப் பெற்று கூலியைத் தருகின்றன. குடும்பங்கள் கூலியைப் பெற்று நிறுவனங்களின் உற்பத்திப் பண்டங்கள், பணிகளை வாங்குகின்றன.

அரசு

அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன. கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன. எடி மற்றும் பீகாக் (Edey and Peacock) கூற்றுப்படி, அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட மனிதர்கள்" எனக் குறிப்பிடுகின்றனர். வரி, தண்டனை, கட்டணம், கடன் ஆகியவை மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது. பாதுகாப்பு, பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதுதான் அரசின் முக்கியமான பணி ஆகும். பொது நிறுவனங்களான அஞ்சல் அலுவலகம், இரயில்வே துறைகள் அரசுத்துறையாக சேர்க்கப்படாமல் நிறுவனங்களாகக் கருதப்படுகின்றன.

வெளிநாட்டு வணிகம்

ஏற்றுமதி, இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டுக் கடன்கள், வெளிநாட்டு மூலதன வருமானம், செலுத்துதல்கள் ஆகியவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகின்றன.

மூலதனத் துறை

மூலதனத் துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும். மூலதனத்துறை, நிறுவனங்களாக

12-Economics-Tamil-Chapter_2.indd 36 12-01-2023 09:50:51

கருதப்படுவது இல்லை. மாறாக தொழில் நிறுவனங்களுக்கு இவை நிதி உதவி செய்து வருகின்றன.

GDP யில் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரமானது முதல், இரண்டாம், மூன்றாம் துறை எனப் பிரிக்கப்படுகிறது.

2.8.2. நாட்டு வருமானமும் பொது நலனும் (National Income and Welfare)

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் நாட்டு வருமானத்தைப் பொருத்தே அமைகிறது. GDPயில் தலைவீத வருமானம் (தலா வருமானம்), அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது. அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

ஆனால் GDP அல்லது தலைவீத வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்க வேண்டும் என்பது இல்லை. பொருளாதார நலன் குறியீட்டெண்ணாக தலைவீத வருமானம் உள்ள போதிலும் கீழ்க்காணும் குறைகளைக் கொண்டுள்ளது.

1. பொது நலன் பண்டங்கள், பணிகளின் அளிப்பை சார்ந்து உள்ளது. நுகர்வுப் பண்டங்களைக் காட்டிலும் மூலதனப் பண்டங்கள் அதிகமாக இருந்தால், பொருளாதார நலனின் முன்னேற்றம் குறைவாக இருக்கும். அதே போன்று ஆடம்பரப் பண்டங்களின் உற்பத்தி பணக்காரர்களுக்காக மட்டுமே இருக்கும்.
2. இயற்கை வளங்களான காற்று, நீர், மண் ஆகியவற்றை மாசுபடுத்தி அதிகமான GDPயை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.
3. இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் நாட்டு உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.
4. பெண்களுக்கு வேலைவாய்ப்பைத் தருதல், உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் முதலானவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம். ஆனால் பொருளாதார நலனில் முன்னேற்றம் இருக்காது.

ஆகவே PQLI (Physical Quality of Life Index) என்பது பொருளாதார நலனைக் கணக்கிடுவதில் முக்கிய குறியிட்டெண்ணாக உள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம், வாழும் காலம், கல்வியறிவு ஆகியவை PQLIயில் உள்ளடங்கி இருக்கிறது.

2.8.3. நாட்டு வருவாயும் நாட்டின் செல்வம் அரிக்கப்படுதலும் (National Income & Erosion of national Wealth)

அதிகமான GDP யை அடையவேண்டும் என்பதற்காக நாட்டின் இயற்கை வளங்கள் அதிக அளவில் அரிக்கப்படுகின்றன அல்லது சேதப்படுத்தப்படுகின்றன. இதனால் எதிர்கால வளர்ச்சி குறைகிறது. ஆகையால் நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் போது, இயற்கை வளங்களின் இழப்பை நாட்டு வருவாயிலிருந்து கழிக்க வேண்டும்.

2.8.4. US$ அடிப்படையில் நாட்டு வருமானம் (National income in terms of US$)

நாட்டு வருமானத்தைக் குறிப்பிடும் பணத்தின் மதிப்பை வைத்தும் ஒரு நாட்டின்

பொருளாதார நிலைமையை அறியலாம். எ.கா.: இந்திய நாட்டு வருமானத்தை அமெரிக்க பணமான டாலரில் சொல்ல வேண்டும். இதன் விளைவாக இந்திய நாட்டு வருமானம் மிகக் குறைவாகத் தோன்றலாம். ஆனால் வாங்கும் சக்தியின் அடிப்படையில் அளவிட்டால் இந்தியத் நாட்டு வருமானம் அதிகமாகத் தோன்றும்.

2.8.5. சமூகச் செலவும் சுற்றுச்சூழல் செலவும் (Social and Environmental Cost)

பொருளாதார நுகர்வு பண்டங்களை உற்பத்தி செய்யும் போது, பல சுற்றுச்சூழல் கேடுகளும், சமுதாயக் கேடுகளும் உருவாக்கப்படுகின்றன. நாட்டு வருமானம் கணக்கிடும் போது இவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

தொகுப்புரை

ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் அல்லது உற்பத்தி செயல்திறனை நாட்டு வருமானம் விளக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வணிகர்கள், IMF, உலக வங்கி முதலான பன்னாட்டு நிறுவனங்கள் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரத்தைப் பயன்படுத்துகின்றன. நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்தப் புள்ளி விவரங்களைப் பகுத்தாய்வு செய்கின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளதா என்பதைக் கண்டறிய நாட்டு வருமானம் உதவுகிறது. மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் நாட்டு வருமானம் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவைக் கணக்கிட நாட்டு வருமானம் பயன்படுத்தப்படுகின்றது.

கலைச்சொற்கள்

- **மொத்த நாட்டு உற்பத்தி** (GNP): ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் பணமதிப்பு. இது தேய்மானத்தையும் நிகர ஏற்றுமதியையும் உள்ளடக்கியது
- **நிகர நாட்டு உற்பத்தி** (NNP): ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் பண மதிப்பு இதில் தேய்மானத்தை கழித்து நிகர ஏற்றுமதியை கூட்ட வேண்டும்
- **காரணிச் செலவில்** NNP (NNP at Factor cost): எல்லா உற்பத்திக் காரணிகளுக்கும் கிடைத்த மொத்த வருமானம்
- **தனிமனிதர் வருமானம்** (Personal Income): ஒரு நாட்டில் தனி மனிதர்கள் நேர்முகவரி செலுத்துவதற்கு முன்பாகப் பெற்ற மொத்த வருமானம்
- **செலவிடக்கூடிய வருமானம்** (Disposable Income): நேர்முகவரி செலுத்திய பிறகு, தனி மனிதர்களின் நுகர்வையும், சேமிப்பையும் கூட்டி மொத்தமாகப் பெறுவது ஆகும்.
- **தலைவீத வருமானம்** (Per capita Income): தனிமனிதரின் ஆண்டு சராசரி வருமானம்
- **சமூகக் கணக்கீடு** (Social Accounts): பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஏற்படுகிற சமூகச் செலவுகளின் அடிப்படையில் நாட்டு வருமானம் கணக்கிடல்
- **ஊதியம் கொடுக்கப்படாத பணிகள்** (Unpaid services): ஊதியம் பெறாமல் அளிக்கக்கூடிய பொருளாதார பலன் கொண்டிருக்கும் பணிகள் (எ.கா.: உடல்நலக்குறைவான மனைவியை

12-Economics-Tamil-Chapter_2.indd 38 12-01-2023 09:50:51

கணவன் கவனித்துக் கொள்ளுதல், சமையல் செய்தல், துணிதுவைத்தல், நண்பர்களுக்கு உதவுதல்)

- **மூலதனத் துறை** (Capital sector): இது சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது

- **மாற்றுச் செலுத்துதல்** (Transfer payments): வேலையற்றோருக்கு அரசு அளிக்கும் உதவித்தொகை, முதியவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் முதலானவை.

H51K4

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையைத் தெரிவு செய்க:

1. உற்பத்திக்காரணியின் செலவின் அடிப்படையிலான NNP

அ. நாட்டு வருமானம்
ஆ. உள்நாட்டு வருமானம்
இ. தலை வீத வருமானம்
ஈ. சம்பளம்

2. முதன்மைதுறை என்பது _____________

அ. தொழில்
ஆ. வணிகம்
இ. வேளான்மை
ஈ. கட்டடம் கட்டுதல்

3. எத்தனை முறைகளால் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?

அ. இரண்டு
ஆ. மூன்று
இ. ஐந்து
ஈ. நான்கு

4. எவற்றைக் கூட்டி வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?

அ. உற்பத்தி
ஆ. வரி
இ. செலவு
ஈ. வருமானம்

5. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது மிகப்பெரிய எண்ணாக இருக்கும்?

அ. செலவிடக்கூடிய வருமானம்
ஆ. தனிமனிதர் வருமானம்
இ. NNP
ஈ. GNP

6. _____________ துறையில் செலவு முறையில் நாட்டு வருமானம் மதிப்பிடப்படுகிறது.

அ. கட்டடத்துறை
ஆ. வேளான்மைத் துறை
இ. பணித்துறை
ஈ. வங்கித் துறை

7. மூன்றாம் துறை _____________எனவும் அழைக்கப்படுகிறது.

அ. பணிகள்
ஆ. வருமானம்
இ. தொழில்
ஈ. உற்பத்தி

8. ஒரு நாட்டின் ____________ செயலை நாட்டு வருமானம் குறிப்பிடுகிறது.

அ. தொழில்
ஆ. விவசாயம்
இ. பொருளாதாரம்
ஈ. நுகர்வு

9. ___________ஆல் நாட்டு வருமானத்தை வகுத்தால் தலைவீத வருமானம் கண்டறியலாம்.

அ. உற்பத்தி
ஆ. நாட்டின் மக்கள் தொகை
இ. செலவு
ஈ. GNP

10. GNP = ……..+ வெளிநாட்டிலிருந்து வரும் நிகர காரணி வருமானம்.

அ. NNP
ஆ. NDP
இ.GDP
ஈ. தனிமனிதர் வருமானம்

11. NNP என்பது ____________

அ. Net National Product
ஆ. National Net Product
இ. National Net Provident
ஈ. Net National Provident

12. மொத்த மதிப்பிலிருந்து ____________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?

அ. வருமானம்
ஆ. தேய்மானம்
இ. செலவு
ஈ. வினை முடிவடைந்த பண்டங்களின் மதிப்பு

13. இந்தியாவில் நிதி ஆண்டு என்பது ____________

அ. ஏப்ரல் 1 முதல் மார்ச் 31
ஆ. மார்ச் 1 முதல் ஏப்ரல் 30
இ. மார்ச் 1 முதல் மார்ச் 16
ஈ. ஜனவரி 1 முதல் டிசம்பர் 31

14. NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு ____________

அ. மொத்த நாட்டு உற்பத்தி
ஆ. செலவிடக்கூடிய வருமானம்
இ. நிகர உள்நாட்டு உற்பத்தி
ஈ. தனிநபர் வருமானம்

15. உற்பத்திப் புள்ளியில் NNPயின் மதிப்பு ____________ என அழைக்கப்படுகிறது

அ. காரணி செலவில் NNP
ஆ. அங்காடி விலையில் NNP
இ. காரணி செலவில் GNP
ஈ. தலைவீத வருமானம்

16. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது ____________

அ. தனிநபர் வருமானம்
ஆ. தலைவீத வருமானம்
இ. பணவீக்க வீதம்
ஈ. செலவிடக்கூடிய வருமானம்

17. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட நாட்டு வருவாயின் மதிப்பு ____________ என அழைக்கப்படுகிறது

அ. பணவீக்க வீதம்
ஆ. செலவிடக்கூடிய வருமானம்
இ. GNP
ஈ. உண்மைத் நாட்டு வருமானம்

18. கீழ்வருவனவற்றுள் எது தடைபடா ஓட்டக் (Flow) கருத்துரு?

அ. சட்டைகளின் எண்ணிக்கை
ஆ. மொத்த சொத்து
இ. மாத வருமானம்
ஈ. பண அளிப்பு

12-Economics-Tamil-Chapter_2.indd 40 12-01-2023 09:50:51

19. PQLI என்பது ____________ ன் குறியீடு ஆகும்.

அ. பொருளாதார வளர்ச்சி
ஆ. பொருளாதார நலன்
இ. பொருளாதார முன்னேற்றம்
ஈ. பொருளாதார மேம்பாடு

20. மிக அதிக அளவிலான நாட்டு வருமானம் ____________ லிருந்து வருகிறது.

அ. தனியார் துறை
ஆ. உள்துறை
இ. பொதுத்துறை
ஈ. எதுவும் இல்லை

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	இ	ஆ	ஈ	ஈ	அ	அ	இ	ஆ	இ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	ஆ	அ	இ	அ	ஆ	ஈ	இ	ஆ	அ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. நாட்டு வருமானம் இலக்கணம் கூறுக.
22. GNP கணக்கிடும் வாய்பாட்டை எழுதுக.
23. NNP க்கும் NDP க்கும் உள்ள வேறுபாடு யாது?
24. GNPக்கும் NNPக்கும் உள்ள தொடர்பினை எழுது
25. தனிமனிதர் வருமானம் என்றால் என்ன?
26. GDP குறைப்பான் இலக்கணம் தருக.
27. நாட்டு வருமானம் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக
29. தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?
30. காரணி செலவில் NNP – குறிப்பு தருக.
31. செலவுமுறை பற்றி ஒரு சிறு குறிப்பு தருக
32. நாட்டு வருமானம் கணக்கிடுதலில் "இருமுறை கணக்கீட்டுச் சிக்கலுக்கு என்ன தீர்வு?
33. நாட்டு வருமானம், பொதுநலன் ஆகியவற்றைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
34. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுதலின் பயன்களைப் பட்டியலிடுக.

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரி.
36. நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.
37. நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?
38. பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.

செய்முறை

2001 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு நாடுகளின் GDP விகிதத்தைப் பட்டியலிட்டு ஒப்பிடுக

பார்வை நூல்கள்

1. Jhingan M.L. Macro Economic Theory, Vrinda Publication LTD.
2. Keshava.S.R. Economics, New Age Internatonal Publishers, 2010
3. Mitani D.M. Macroeconomics, Himalaya Publishing House,
4. www.articlelibrary.com

12-Economics-Tamil-Chapter_2.indd 42 12-01-2023 09:50:51

ICT CORNER

நாட்டு வருமானம்

இந்த நடவடிக்கை மாணவர்கள் நாட்டு வருமானத்தைக் கணக்கிட உதவுகிறது.

படி – 1

கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீடைப் பயன்படுத்தி GeoGebra பக்கத்திற்குச் செல்க. "Factor Cost and Market price" எனும் GeoGebra பணித்தாளை எடுத்துக் கொள்ளவும்

படி – 2

இடப்பக்கத்தில் உள்ள கட்டங்களில் புதிய தரவுகளை உள்ளீடு செய்யலாம். வலப்பக்கத்தில் தேவையான கணக்கீடுகள் தோன்றும்.

படி 1

படி 2

படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே*

செயல்பாட்டிற்கான உரலி

https://ggbm.at/dx7bamzw

(or) scan the QR Code

இயல் 3

வேலைவாய்ப்பும் வருமான கோட்பாடுகளும்

"புகுத்தப்பட்ட சோம்பேறித்தனத்தினால், வேலையில்லாதவர்கள், ஒழுக்கச்சிதைவு, நம்பிக்கையின்மை, வெறுப்பு உணர்வு மற்றும் சுய மரியாதை இழப்பு ஆகியவற்றால் துன்புறுகிறார்கள்.".

ஒனாகாட். P மற்றும் ஒனாகாட். R

புரிதலின் நோக்கங்கள்

1 முழு வேலை வாய்ப்பு, வேலையின்மை, அதன் வகைகளைப் புரிதல்.

2 தொன்மை வேலைவாய்ப்புக் கோட்பாட்டினை அறிதல்.

3 வருமானம், வேலைவாய்ப்பு தொடர்பான கீன்சின் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தைத் தெரிதல்.

3.1 அறிமுகம்

பல நாடுகள் பொருளாதாரப் சிக்கல்களைச் சந்தித்துள்ளதைப் பொருளாதார வரலாறு கண்டுள்ளது. பல்வேறு சிக்கல்களுள் வேலைவாய்ப்பின்மை என்பது அபாயகரமான ஒன்றாக இருக்கிறது. வேலைவாய்ப்புக்கும் வருமானத்திற்கும் உள்ள உறவைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களும் J.M கீன்சும் (J.M. Keynes) விளக்கியுள்ளனர். பிரெஞ்சு பொருளியல் அறிஞரான J.B. சேயின் (Say) சந்தை விதியின் (Law of Markets) மேல் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தனர். 20ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் J.M. கீன்சு.

3.2 முழு வேலை வாய்ப்பின் பொருள்

நல்ல உடல் நலம் உள்ள தனிமனிதர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம். அதாவது முழுவேலை நிலை என்பது வேலை செய்ய விருப்பமும் திறமையும் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக கிடைக்கும் வேலை நிலையைக் குறிக்கும். கீன்சின் கூற்றுப்படி முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா வேலையின்மை (Involuntary Unemployment) இல்லாமல் இருப்பது ஆகும். எ.கா: சில செல்வந்தர்களின் குழந்தைகள் வேலைக்கு செல்ல விரும்புவது இல்லை (Voluntary Unemployment).

12-Economics-Tamil-Chapter_3.indd 44 12-01-2023 09:55:35

லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்கிறார்.

உலகில் ஒவ்வொரு நாடும் முழு வேலை நிலையை அடைவதைக் குறிக்கோளாக கொண்டிருக்கின்றன. இதற்காக தங்கள் நாட்டில் இருக்கும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி சிறந்த அளவு உற்பத்தியை அடைய முயல்கின்றன. ஆனால் நடைமுறையில் முழு வேலைவாய்ப்பு என்பது நாட்டின் உழைப்பாளர்களை முழுமையாகப் பயன்படுவது ஆகும்.

3.3 வேலையின்மையின் வகைகள் (Types Of Unemployment)

வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிமனிதர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

இந்தியாவில் வேலையின்மை சிக்கலைச் சமாளிக்க கொள்கைகள் உருவாக்கும் போது வேலையின்மையின் வகைகளையும் தன்மைகளையும் அறிய வேண்டும். இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும், குறைவான வேலைவாய்ப்பும் (Underemployment) காணப்படுகின்றன கிராமங்களில் மறைமுக வேலையின்மையும், பருவகால வேலையின்மையும் நிலவுகின்றன. நகர்ப்புறங்களில் பிறழ்ச்சி வேலையின்மை, அமைப்புசார் வேலையின்மை மற்றும் திறந்த வேலையின்மை ஆகியன நிலவுகின்றன. நகரமயமாதல் காரணமாக கிராமப்புற வேலையாட்கள் நகர்ப்புறங்களை நோக்கிச் செல்கின்றனர். இவ்வாறு கிராமப்புற மக்கள் நகர்ந்து செல்வதால் நகர்ப்புறங்களில் வேலையின்மை அதிகரிக்கிறது.

வேலையின்மையின் வகைகள்

வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ, பிறழ்ச்சியாகவோ இருக்கலாம். ஆனால் வளர்கின்ற நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதால் அமைப்புசார்ந்த வேலையின்மை அதிகமாக இருக்கும். கீழ்க்காண்பவை வேலையின்மையின் வகைகள் ஆகும்.



1. வணிகச் சுழல் வேலையின்மை (Cyclical Unemployment)

கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை (Cyclical Unemployment) என்று பெயர். வணிகச்சுழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தியும் வருமானமும் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு உறுதித் (விளைவுத்) தேவை இல்லாத போது நிகழ்வதாகும். அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் இந்த சுழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.

2. பருவகால வேலையின்மை (Seasonal Unemployment)

ஓர் ஆண்டில் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். வேளாண்மை, வேளாண்மை சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) முதலானவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும் வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மையிலும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவகால வேலையின்மை தோன்றும், எ.கா, பனிக்கூழ், விடுமுறைகாலச் சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்புக் குறையலாம்.

3. தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை (Temporary Unemployment or Frictional Unemployment)

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமைப் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்கள் பற்றாக்குறை முதலான காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. தற்பொழுதுள்ள வேலையை இழந்து புதிய வேலையைத் தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

4. கற்றோர் வேலையின்மை (Educated Unemployment)

சில நேரங்களில் படித்துக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பது இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை, அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் முதலான காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

5. தொழில் நுட்ப வேலையின்மை (Technical Unemployment)

புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். புதியன

12-Economics-Tamil-Chapter_3.indd 46 12-01-2023 09:55:35

கண்டுபிடித்தலும் புதிய கருத்துகளும் வேலைவாய்ப்பினை உருவாக்கும். ஆனால் உழைப்பைச் சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

6. அமைப்புசார் வேலையின்மை (Structural Unemployment)

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (Eg. Type Machine, Taperecorders, Radios, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்குக் காரணமாகிறது. எ.கா, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை குறைந்துள்ளது. இந்தியாவில் மூலதனப் பற்றாக்குறையால் மக்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

7. மறைமுக வேலையின்மை (Disguised Unemployment)

தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். (எ.கா – வேளாண்மைத்துறை). இவ்வேலைகளில் சிலர் வேலையைவிட்டு விலகினாலும், உற்பத்தி பாதிக்காது. உற்பத்தியில் அவர்களின் பங்கு குறைவாக இருக்கும். வேலையில்லாததாலேயே, தெரிந்தும் அதிகமானோர் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். இத்தகைய வேலையின்மையால் உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்திதிறன் சுழியமாகவோ, குறைவாகவோ எதிர்மறையாகவோ இருக்கும்.

3.4 வேலைவாய்ப்புப் பற்றிய தொன்மைக் கோட்பாடு (Classical Theory of Employment)

வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடு எந்த ஒரு தனிக்கோட்பாட்டையும் பெற்று இருக்கவில்லை. நாட்டில் வருமானம் மற்றும் வேலை பற்றி பன்முக பார்வையில் வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடுகள் இருந்தன. ஆடம் ஸ்மித் என்ற பொருளியல் வல்லுநர் 1776ஆம் ஆண்டு "நாடுகளின் செல்வம் பற்றிய இயல்பு மற்றும் காரணங்கள் அடங்கிய விசாரணை" என்ற புத்தகத்தை வெளியிட்டார். பின்னர் டேவிட் ரிக்கார்டோ, J.S. மில், J.B. சே, A.C பிகு ஆகியோரால் தொன்மைக் கோட்பாடு வளர்ச்சி பெற்றது.

ஒரு பொருளாதாரம் நீண்டகாலத்தில் பணவீக்கமின்றி முழு வேலைநிலையுடன் இயங்கும் என்று தொன்மை பொருளியல் அறிஞர்கள் கருதினர். மேலும் பொருளாதாரத்தில் கூலியும் விலையும் நெகிழ்ச்சி உடையதாக இருக்கும் எனவும், சந்தையில் போட்டி நிலவும் எனவும், அரசு தலையிடாக் கொள்கையைப் (Laissez – faire economy) பின்பற்றும் எனவும் நம்பினர்.

12-Economics-Tamil-Chapter_3.indd 47 12-01-2023 09:55:36

3.4.1 சேயின் அங்காடி விதி (Say's Law of Market)

J.B. சே

வேலைவாய்ப்புப் பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் முக்கியமான அங்கமாக சேயின் அங்காடி விதி திகழ்கிறது. பிரெஞ்சு (French) பொருளியலறிஞரான J.B. சே (1776 – 1832) ஒரு தொழிலதிபர் ஆவார். ஆடம்ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ முதலானவர்களின் எழுத்துகளினால் கவரப்பட்டார். J.B. சேயின் கருத்துப்படி, "அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும் "(Supply Creates its own demand).சேயின் கருத்துப்படி, பொருளாதாரத்தில் நிறுவனங்கள் பண்டங்களை உற்பத்திச் செய்ததற்கு உற்பத்திக்காரணிகளுக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. குடும்பங்கள், அந்த ஊதியத்தைக் கொண்டு நிறுவனங்கள் செய்த உற்பத்தி செய்த பண்டங்களையும் பணிகளையும் வாங்குகின்றன. ஆகவே ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் அதற்கான தேவையை அங்காடி மதிப்பில் தானே உருவாக்கும் என்று J.B. சே கருதினார்,. ஒரு உழைப்பாளி பெறும் ஊதியத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதால், உற்பத்தி செய்த அனைத்தும் விற்கப்பட்டுவிடும் என்று சேயின் சந்தை விதி கூறுகிறது. சேயின் கருத்துப்படி, ஒரு பொருளதாரத்தில் மொத்த உற்பத்தியும் மொத்த வருவாயும் சமமாக இருக்கும்.

சுருக்கமாக, வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின்படி "உற்பத்தியின் மூலம் ஒருவர் வருவாயை ஈட்டுகிறார், அது மற்றவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள், பணிகளை வாங்குவதற்கு செலவிடப்படுகிறது. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி மொத்த வருவாய்க்குச் சமமாக இருக்கும்".

சேயின் அங்காடி விதியில் முந்தைய பிந்தைய கருத்துகள்

'அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்' அல்லது 'தொகு முதலீடு, தொகு சேமிப்புக்குச் சமம்' எனும் விதிகள் பிந்தைய கருத்துக்கு உகந்ததாக இருக்கும். இது சாதாரணமாக கணக்கியல் நோக்கிற்கு மட்டும் அமையும். சேயின் அங்காடி விதி, தொகு அளிப்பு அதாவது உற்பத்தியாளர் உற்பத்தி செய்யும் மொத்த உற்பத்தி அதை வாங்குபவரின் தொகு தேவைக்கு சமம் என்பது முந்தைய கருத்துக்கு உகந்ததாகும்.

12-Economics-Tamil-Chapter_3.indd 48 12-01-2023 09:55:36



சேயின் சந்தை விதியின் எடுகோள்கள்

சேயின் சந்தைவிதி கீழ்க்காணும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. ஒரு தனி வாங்குபவரோ, விற்பவரோ அல்லது உள்ளீடு பொருளோ விலையை மாற்ற முடியாது.
2. முழு வேலை நிலை நிலவும்.
3. மக்கள் தம் சொந்த விருப்பங்களால் உந்தப்படுகிறார்கள். அவர்களின் விருப்பங்கள் பொருளாதார முடிவுகளை நிர்ணயிக்கின்றன.
4. அங்காடி சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன. ஒரு பொருளாதாரம் தானே சரிசெய்து கொள்ளும் சூழல் பெற்று முழு வேலைநிலை சமநிலை அடைய அரசின் தலையிடாக் கொள்கை அவசியமாக உள்ளது.
5. உழைப்பு, பண்டங்கள் ஆகியவற்றின் அங்காடியில் நிறைவுப்போட்டி நிலவும்.
6. கூலியிலும் விலையிலும் நெகிழ்வுத் தன்மை உண்டு.
7. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்.
8. இது நீண்ட கால பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்டது.
9. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை
10. பயன்படுத்தப்படாத வளங்கள் இருந்தால், முழு வேலைவாய்ப்பு வரை அவற்றைப் பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்திக்காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருக்கும் எனும் நிபந்தனை இவ்விதியில் இருக்கும்.
11. விலைக் கருவி (Price mechanism) தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
12. வட்டிவீத நெகிழ்வுத் தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

சே – விதியின் விளைவுகள்

1. அதிக உற்பத்திக்கோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.
2. பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழுவேலை வாய்ப்பு வரை அவற்றைப் பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்திக் காரணிகள் அவற்றின் உற்பத்தித் திறனுக்குச் சமமாக ஊதியங்களையும் ஏற்றுக் கொள்ளும்.
3. விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
4. வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும் .

www.tntextbooks.in

5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்க மாட்டார்கள்.

சேயின் விதி பற்றியத் திறனாய்வு (Criticism of Say's Law)

கீழ்க்காண்பவை J.B. சேயின் அங்காடி விதியின் திறனாய்வு ஆகும்.

1. கீன்சின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.

2. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.

3. தனிமனிதர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வணிகர்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

4. சேயின் அங்காடி விதியானது, அளிப்பு தன் தேவையைத் தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது, ஆனால் கீன்சின் கூற்றுப்படி அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.

5. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை (Underemployment) உள்ளதால், முழு வேலைவாய்ப்புக்கு வாய்ப்பில்லை என கீன்சு கூறுகிறார்.

6. அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் எனக் கீன்சு கருதுகிறார்.

3.5 வேலை வாய்ப்பும் வருமானம் பற்றிய கீன்சின் கோட்பாடும் (Keynes's Theory of Employment and Income)

J.M. கீன்சு



புதியப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில், கீன்சு எழுதிய புத்தகமான "வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" ஒரு திருப்புமுனையாக இருக்கிறது. அதிக தாக்கத்தை ஏற்படுத்திய இந்த நூல் 1936இல் வெளியிடப்பட்டது.

தொன்மைப் பொருளதார அறிஞர்கள் ஒரு முதலாளித்துவ பொருளதார அமைப்பில் அங்காடிச் சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும் என நம்பினர். இதற்கு எதிர்மாறான கருத்தை கீன்ஸ் கொண்டிருந்தார், எனவே அதில் உள்ள குறைகளைக் களைய தன்னுடைய புதிய வேலைவாய்ப்புக் கோட்பாட்டை உருவாக்கினார்.

12-Economics-Tamil-Chapter_3.indd 50 12-01-2023 09:55:36

J.M. கீன்சு 20ஆம் நூற்றாண்டில் ஒரு தாக்கத்தை உருவாக்கிய ஒரு பொருளியல் அறிஞர். 1883இல் கேம்பிரிட்ஜில் இவர் பிறந்தார். அவர் பொருளாதார அறிஞராகப் பணியாற்றினார். அத்துடன் ஒரு குடிமைப் பணியாளராகவும் (Civil Servant), Bank of Englandஇல் இயக்குநராகவும் Brettonwoods மாநாட்டில் ஒரு முடிவை எடுப்பதற்கான ஒரு குழுவுக்குத் தலைவராகவும் இருந்தார். அவருடைய கருத்தின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரக் கருத்துகள் 'கீன்சியன் பொருளாதாரம்' என அழைக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்திலும் அதிக தாக்கத்தை பேரியல் பொருளியலில் ஏற்படுத்துகிறது.

கீன்சின் கோட்பாடு, முழுவேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் (Underemployment) வாய்ப்பு இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. கீன்சின் கோட்பாடு ஒரு பொதுக்கோட்பாடாகவேத் திகழ்ந்தது. இது எல்லா வகைச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

கீன்சின் கருத்துகள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. அவரது கருத்துப்படி, வேலை வாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

3.6 விளைவுத் தேவை (Effective Demand)

வேலைவாய்ப்பு, வருமானம் பற்றிய கீன்சு கோட்பாட்டின் ஆரம்பப் புள்ளியே 'விளைவுத் தேவை' எனும் கருத்தாகும். விளைவுத்தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். தொழில் முயல்வோர்கள், வட்டி, வாடகை, கூலி, இலாபம் ஆகியவற்றைப் பணமாகவே கொடுப்பார்கள்; எனவே விளைவுத் தேவை நாட்டு வருமானத்திற்குச் சமமாக இருக்கும்.

மொத்த விளைவுத் தேவை (Aggregate effective demand) அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பின் அளவிலும் ஏற்றம் வரும். மொத்த விளைவுத் தேவை குறையும் போது வேலையின்மை சிக்கல் தோன்றும். ஆகவே நாட்டின் மொத்த வேலைவாய்ப்பு, தொகுதேவையின் உதவியுடன் தீர்மானிக்கப்படுகிறது.

கீன்சின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டின்படி, பண்டங்கள், பணிகளின் நுகர்வுக்காகவும் மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும். எனவே மொத்தச் செலவு, நாட்டு உற்பத்திக்கும், நாட்டு வருமானத்திற்கும் சமமாக இருக்கும். ஒரு நாட்டில் உற்பத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு விளைவுத் தேவையின் அளவைப் பொருத்து அமைகிறது. விளைவுத் தேவையின் அளவு தொகு அளிப்பையும் (ஒட்டுமொத்த அளிப்பையும்), தொகு தேவையையும் (ஒட்டுமொத்ததேவையையும்) சார்ந்து உள்ளது.

ED=Y=C+I=வெளியீடு(உற்பத்தி)=வேலைவாய்ப்பு

'விளைவுத் தேவை' ஒரு பொருளதாரத்தின் வேலைநிலையை நிர்ணயிக்கிறது. விளைவுத் தேவை அதிகரிக்கும் போது, வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். மாறாக, விளைவுத்தேவை குறைந்தால் வேலைவாய்ப்பும் குறையும். நுகர்வும் முதலீட்டுச் செலவும் ஆகிய இரண்டு காரணிகளும் விளைவுத் தேவையின் அளவை நிர்ணயிக்கின்றன. தொகுத் தேவையில், நுகர்வுச் சார்பை மக்களின் வருமானமும் இறுதிநிலை நுகர்வு விருப்பமும் (Marginal Propensity to Consume: MPC) நிர்ணியிக்கின்றன. கீன்சின் கூற்றுப்படி, வருமானம் கூடினால் நுகர்வும் கூடும். ஆனால் வருமானம் கூடுகின்ற அதே விகிதத்தில் நுகர்வு விகிதம் அதிகரிக்காது.

முதலீட்டு அளவை, வட்டிவீதமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனும் (Marginal Efficiency of Capital:MEC) ஆகிய இருகாரணிகளும் நிர்ணயிக்கின்றன. வட்டி வீதமானது, பண அளிப்பு, பணத்தின் ரொக்க இருப்பு விருப்பம் ஆகிய இரண்டையும் சார்ந்துள்ளது. ரொக்க இருப்பு விருப்பத்திற்கு கீன்சு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். ரொக்க இருப்பு விருப்பம் மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை: பேரநோக்கம், முன்னெச்சரிக்கை நோக்கம், ஊக நோக்கம் ஆகும். மூலதன சொத்திலிருந்து கிடைக்கின்ற வருமானம், மூலதனத்தின் அளிப்பு விலை ஆகிய இரண்டு காரணிகளையும் MEC சார்ந்து உள்ளது.

3.6.1 தொகு தேவைச் சார்பு (ஒட்டுமொத்ததேவை) (Aggregate Demand Function: ADF)

கீன்சு கோட்பாட்டின் படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவைதான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவையாகும். அதாவது, வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாய் எனலாம்.

தொகு தேவை கீழ்க்காணும் நான்கு பகுதிகளைக் கொண்டது.

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி–இறக்குமதி (Export – Import)

விரும்புகிற அல்லது திட்டமிடுகிற தேவை (செலவு) என்பது குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு, வெளிநாட்டிலிருந்து வாங்குவோர் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையே உள்ள வேறுபாடு) ஆகியோர் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வாங்குவதற்காகச் செய்கின்ற செலவு தொகையாகும். விரும்புகிற செலவு என்பது மொத்தச் செலவு (தேவை) என்றும் அழைக்கப்படுகிறது. இதனைக் கீழ்க்காணும் வாய்ப்பாட்டின் மூலம் குறிப்பிடலாம்.

12-Economics-Tamil-Chapter_3.indd 52 12-01-2023 09:55:36

AD = C + I + G + (X – M)

கீழ்க்காணும் வரைபடம் 3.1. தொகு தேவைக்கும், வேலைவாய்ப்புக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகிறது.



வரைபடம் .3.1

வேலைவாய்ப்பு அதிகரித்தல், குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்ப மொத்த தேவையானது கூடும் அல்லது குறையும். வரைபடத்தில் முதலில் மொத்தத் தேவை வளைகோடு அதிகரிக்கும் விகிதத்தில் அதிகரிக்கின்றது. பின்பு இவ்வளைகோடு குறையும் விகிதத்தில் அதிகரிக்கிறது. அதாவது வேலைவாய்ப்பு அதிகரித்தால் வருமானம் அதிகரிக்கும். ஆனால் வருமானம் அதிகரித்த அதே வீதத்தில் பொருளாதாரத்தில் செலவு அதிகரிப்பது இல்லை. மாறாக, குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது என்பதை இந்த வரைபடம் விளக்குகிறது.

3.6.2 தொகு அளிப்புச் சார்பு (ஒட்டுமொத்த அளிப்பு) (Aggregate Supply Function: ASF)

தொகு அளிப்புச் சார்பு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பைக் குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும். எனவே தொகு அளிப்பு என்பது நாட்டு உற்பத்தியின் மதிப்புக்கு நாட்டு வருமானத்திற்குச் சமமாக இருக்கும். தொகு அளிப்புச் சார்பானது வேலைவாய்ப்பு அளவோடு சேர்ந்து அதிகரிக்கும்.

தொகு அளிப்பு என்பது தேவையான உற்பத்தியை நாட்டில் அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தேவையான உழைப்பாளர்கள் எண்ணிக்கை மற்றும் பிற பண்டங்கள் பயன்படுத்துவதைக் குறிக்கும். முதலாளிகள் தங்களது உற்பத்திக்காக, உழைப்பாளர்கள், இடுபொருள்கள் போன்ற பலவற்றை விலைகொடுத்து வேலைக்கு அமர்த்துவார்கள். ஆகவே உற்பத்தியில் செலவும் அடங்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தில், நிறுவனத்தின் உற்பத்திச் செலவைவிட, சரக்குகளை விற்பதால் கிடைக்கும் வருவாய் அதிகமாக இருந்தால், நிறுவனங்கள், மேலும் அதிகமான உழைப்பாளர்களையும் மற்ற இடுபொருள்களையும் வாங்குவதற்கு முனைவார்கள்.

தொகு அளிப்பு விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பையும் இடுபொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை விற்ற பிறகு கிடைக்கும், 'எதிர்பார்க்கப்படும் (வருமானம்) மொத்த தொகை' ஆகும். இங்கு "விலை" என்பது விற்பனையால் கிடைத்த வருவாயைக் குறிப்பிடுகிறது.

தொகு அளிப்பின் கூறுகள்:

தொகு அளிப்பில் கீழ்க்காணும் நான்கு பகுதிகள் உள்ளன.

1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (C)

2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (S)

3. நிகர வரி வசூல் (T). அரசுபெற்ற மொத்த வரிவருமானத்தில் இருந்து மாற்றுச் செலுத்தல்கள் (Transfer Payments), ஓய்வூதியம், மானியம், அரசு செலுத்தவேண்டிய வட்டி ஆகியவற்றைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகையாகும்.

4. தனிமனிதர் (விரும்பப்படுகிற) வெளிநாட்டவர்க்கு (உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்துதல்கள், உதவித்தொகை. ஆகியவை இது R_f (வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரணத் தொகை) என குறிக்கப்படுகிறது.

ஆக, ஒரு பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம்:

மொத்த அளிப்பு = $C + S + T + R_f$

கீழ்க்காணும் வரைபடம், தொகு அளிப்புக் கோட்டை விளக்குகிறது. 'நிலையான பணக்கூலியும், மாறும் கூலியும் நிலவும்' என்னும் எடுகோளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு அளிப்புக் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

மொத்த அளிப்பு வளைகோடு



வரைபடம் 3.2

வரைபடம் வேலைவாய்ப்புக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. சுழியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும் மற்றொன்று (Z_1) வேலைவாய்ப்பைப் பொருத்து பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன. Z கோடு நேர்கோடாகவும், Z_1 கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளைகோடாகவும் இருக்கிறது ON_f அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது. எனவே, N_f க்குப் பின்னர், தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக, நெகிழ்வற்றதாக உள்ளது.

தொகு அளிப்பு கோட்டின் சாய்வு (Slope) என்பது வேலைவாய்ப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பைப் சார்ந்து அமைந்துள்ளது. மூலதன இருப்பு மாறாமல் இருக்கும்போது அதிக உழைப்பாளர்களை பணியிலமர்த்துவதால் குறைந்துசெல் இறுதிநிலை விளைவு செயல்படுகிறது. பொதுவாக தொகு அளிப்பு வளைகோடு Z_1 போன்று இருக்கும். ஆகவே விலைக்கும் கூலிக்கும் உள்ள தொடர்பைச் சார்ந்துதான் தொகு அளிப்பு இருக்கும். பண்டத்தின் விலை அதிகமாக இருந்து கூலிகுறைவாக இருந்தால்,உற்பத்தியாளர்கள் கூடுதலாக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். மாறாக பண்டங்களின் விலை குறைவாக இருந்து கூலி அதிகமானால், முதலீடு குறையும். இதனால் உற்பத்தியும் உற்பத்தித்திறனும் குறையும். எனவே பொருளாதார நடவடிக்கையை தீர்மானிக்கும் காரணிகளில் தொகு அளிப்பு முக்கியப்பங்கு வகிக்கிறது.

3.6.3 ADF மற்றும் ASF – ன் சமநிலை (Equilibrium between ADF and ASF)

கீன்சின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF ஆகியவற்றின் சமநிலையை விளக்க, குடும்பங்கள் வணிகம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நுகர்வுச் செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வணிக நிறுவனங்களும் எடுக்கின்றன. மேலும் நுகர்வுச் சார்பு நேர்கோடாகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்சின் கோட்பாடு ஊகிக்கிறது.

கீன்சின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை:

1. தொகு தேவை, தொகு அளிப்பு அணுகுமுறை

2. சேமிப்பு, முதலீடு அணுகுமுறை



வரைபடம்.3.3

இந்த இயலில் மொத்த தேவை, மொத்த அளிப்பு அணுகுமுறை மட்டும் விளக்கப்பட்டுள்ளது.

வரைபடம் 3.3. – இல் விளைவுத் தேவை கருத்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தொகு தேவையும், தொகு அளிப்பும் 'E' எனும் புள்ளியில் சமநிலை அடைகின்றன. இப்புள்ளியில் வேலை வாய்ப்பு N_o ஆக இருக்கும். ON_1 அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு N_1R_1 ஆக இருக்கும். ஆனால் M_1N_1 அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும். எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1 R_1$ ஆகும். இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார். சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்தபிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவார். ஏனெனில் N_o நிலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை, தொகு அளிப்பை விடக் குறைவாக இருக்கும். எனவே முதலாளித்துவப் பொருளாதாரம் அல்லது திறந்த வெளி அங்காடிப் பொருளாதாரத்தில் (கீன்சின் கோட்பாட்டின்படி) உற்பத்திச் சமநிலையை தீர்மானிப்பதில் தொகு தேவைக் கருத்து அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

கீன்சின் வேலைவாய்ப்புக் கோட்பாட்டின் மையக் கருத்து என்னவெனில், சமநிலை வேலைவாய்ப்பு என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவேலை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை. வரைபடத்தில் N_o மற்றும் N_f க்கும் இடையே உள்ள வேறுபாடு வேலையின்மையைக் காட்டுகிறது. ஆகவே வேலைச் சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவைக் கருத்து முக்கியப்பங்கு வகிக்கிறது.

12-Economics-Tamil-Chapter_3.indd 55 12-01-2023 09:55:37

3.7 தொன்மையியம் மற்றும் கீன்சியம் – ஓர் ஒப்பீடு (Comparison of Classicism and Keynesianism)

வரிசை எண்	கீன்சியம்	தொன்மையியம்
1.	குறுகிய காலச் சமநிலை	நீண்ட காலச் சமநிலை
2.	சேமிப்பு கெடுதல்	சேமிப்பு நல்லது
3.	பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்கக் கூடியதாகவும் செயல்படும்	பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்
4.	நாட்டின் சிக்கல்களைத் தீர்க்கப் பேரியல் அணுகுமுறை தேவை	நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் அணுகுமுறை
5.	அரசுத்தலையீடு அனுமதிக்கப்படுகிறது	தலையிடாக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது
6.	எல்லா சூழ்நிலைக்கும் முழு வேலைவாய்ப்பு, குறைமுழு வேலை வாய்ப்பு பொருத்தமானது	முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது
7.	முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம்	முதலாளித்துவம் சரியானது
8.	பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம்	சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது
9.	வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது	வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமத்துவம் முன்வைக்கப்படுகிறது
10.	பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது	சேமிப்பு, முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது
11.	வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow)	வட்டி வீதம் மாறாதது (Stock)
12.	தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது	அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது
13.	வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி	வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி

தொகுப்புரை

தொன்மைப் பொருளியல் கோட்பாட்டுக்கு கீன்ஸ் மறுப்புரை வழங்கினார். அவர் அரசுத் தலையீடு அவசியமென்று தன் கோட்பாட்டில் விளக்கியுள்ளார். இரண்டாம் உலகப்போருக்குப் பின் பல நாடுகள் அவரின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

கலைச்சொற்கள்

- **முழு வேலைவாய்ப்பு:** உழைக்கத் திறமையுள்ள, விருப்பமுள்ள அனைவருக்கும் வேலை கிடைக்கும் நிலை.
- **வேலையின்மை:** உழைக்கத் திறமையுள்ள, விருப்பமுள்ளவர்கள் வேலை பெறமுடியமால் இருக்கும் நிலை.
- **மறைமுக வேலையின்மை:** ஒரு குறிப்பிட்ட பணியினைச் செய்யத் தேவைப்படுகிறவர்களின் எண்ணிக்கையை விட (உ.ம்.10 பேர்கள்) அதிகமானவர்கள் (உ.ம். 20 பேர்கள்) அவ்வேலையில் ஈடுபட்டு இருப்பது.
- **வேலைக்குறைவு:** உற்பத்தியில் வளங்களை (உ.ம். உழைப்பு) முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருப்பது.
- **விளைவுத் தேவை:** உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மூலம் தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கும் பணத்தின் அளவு.
- **தொகு தேவை:** ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மேல் குடும்பங்களும், நிறுவனங்களும், அரசு. மற்றும் வெளிநாட்டவரும் செய்கின்ற மொத்த செலவுத் தொகையாகும்.
- **தொகு அளிப்பு:** ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள், பணிகளின் மதிப்பு.
- **இறுதிநிலை நுகர்வு விருப்பம்:** இருக்கின்ற வருமானத்தில் ஓர் அலகு வருமானம் உயரும்போது அதிகரிக்கக் கூடிய நுகர்வுச் செலவு.
- **மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன்:** புதிய மூலதன பொருளின் செலவை காட்டிலும் அதிகமாக எதிர்பார்க்கக் கூடிய விளைவு விகிதம்.
- **பண அளிப்பு:** ஒரு பொருளாதாரத்தில் புழக்கத்தில் இருக்கிற மொத்த பணத்தின் இருப்பு.

மாதிரி வினாக்கள்

பிரிவு – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. நடப்புக்கூலி விகிதத்தில் வேலைசெய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது___________எனப்படும்

    அ. முழுவேலைவாய்ப்பு

    ஆ. குறைந்தளவு வேலைவாய்ப்பு

    இ. வேலைவாய்ப்பின்மை

    ஈ. வேலைக்கான வாய்ப்பு

2. அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு________

    அ. இயங்கா சமுதாயம்

    ஆ. சமதர்ம சமுதாயம்

    இ. இயங்கும் சமுதாயம்

    ஈ. கலப்புப் பொருளாதாரம்

3. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி

    அ. சுழியம்

    ஆ. ஒன்று

    இ. இரண்டு

    ஈ. நேர் எண்

4. தொன்மைப் பொருளியல் கோட்பாட்டின் முதன்மையான இயல்பு ________

    அ. குறைந்த அளவு வேலைவாய்ப்பு

    ஆ. பொருளாதாரம் எப்போதும் சம நிலையில் இருக்கும்

    இ. தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது

    ஈ. நிறை குறை போட்டி

5. J.B. சே ஒரு ______________

    அ. புதிய – தொன்மைப் பொருளியலாளர்

    ஆ. தொன்மைப் பொருளியலாளர்

    இ. புதிய யுகப் பொருளியலாளர்

    ஈ. புதியப் பொருளியலாளர்

6. கீன்சின் கருத்துப்படி, முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது?

    அ. முழு வேலைவாய்ப்பு

    ஆ. தன் விருப்ப வேலையின்மை

    இ. தன் விருப்பமற்ற வேலையின்மை

    ஈ. குறைவு வேலைவாய்ப்பு

7. வேலைவாய்ப்பு பற்றி தொன்மைக் கோட்பாட்டின் மையக் கருத்து என்பது ________

    அ. குறைந்து செல் விளைவு விதி

    ஆ. தேவை விதி

    இ. அங்காடி விதி

    ஈ. நுகர்வு விதி

8. கீன்சின் கூற்றுப்படி வேலையின்மை என்பது ______

    அ. விளைவு அளிப்பு பற்றாக்குறை

    ஆ. விளைவுத் தேவை பற்றாக்குறை

    இ. இரண்டும் பற்றாக்குறை

    ஈ. எவையும் இல்லை

9. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையைக் கொண்டு வருவது _____________ நெகிழ்வு ஆகும்.

    அ. தேவையின்

    ஆ. அளிப்பின்

    இ. மூலதனத்தின்

    ஈ. வட்டியின்

10. புதியப் பொருளாதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியில் _____________ கோட்பாடு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அ. கீன்சின்
ஆ. சே (Say)யின்
இ. தொன்மையது
ஈ. வேலைவாய்ப்பு

11. வேலைவாய்ப்பு, வருவாய் பற்றிய கீன்சின் கோட்பாட்டின் அடிப்படைக் கருத்துரு _____________ ஆகும்.

அ. தொகுத் தேவை
ஆ. தொகு அளிப்பு
இ. விளைவுத் தேவை
ஈ. இறுதிநிலை நுகர்வு விருப்பம்

12. தொகு தேவையின் கூறு _____________ ஆகும்

அ. தனிமனிதத் தேவை
ஆ. அரசுச் செலவு
இ. ஏற்றுமதி மட்டும்
ஈ. இறக்குமதி மட்டும்

13. மொத்த அளிப்பு சமம் _____________

அ. C + I + G
ஆ. C + S + G + (X – M)
இ. C + S + T +(X–M)
ஈ. C + S + T + Rf

14. தலையிடாக் கொள்கைக்குப் பதிலாக கீன்சின் கோட்பாடு _________யை எடுத்துரைக்கிறது.

அ. அரசுத் தலையீடின்மை
ஆ. உச்சஅளவுத் தலையீடு
இ. சில சூழல்களில் அரசின் தலையீடு
ஈ. தனியார் துறை தலையீடு

15. கீன்சின் வேலைவாய்ப்பு, வருவாய் கோட்பாட்டில், ____________ பொருளாதார மந்த நிலைக்குக் காரணமாக உள்ளது.

அ. குறைவான உற்பத்தி
ஆ. அதிகத் தேவை
இ. நெகிழ்வற்ற அளிப்பு
ஈ. உற்பத்தித்திறன் ஒப்பிடும்போது மிகக் குறைந்தளவு மொத்தத் தேவை

16. தொன்மைக் கோட்பாடு ___________ ஐ ஆதரிக்கிறது.

அ. சமநிலை வரவு செலவு
ஆ. சமமற்ற வரவு செலவு
இ. உபரி வரவு செலவு
ஈ. பற்றாக்குறை வரவு செலவு

17. _____________ சமநிலையை கீன்சுடைய கோட்பாடு வலியுறுத்தியது.

அ. மிகக்குறுகிய காலச்
ஆ. குறுகிய காலச்
இ. மிக நீண்ட காலச்
ஈ. நீண்ட காலச்

18. தொன்மைக் கோட்பாட்டின்படி, வட்டி வீதம் _____________க்கான வெகுமதி

அ. முதலீடு
ஆ. தேவை
இ. மூலதனம்
ஈ. சேமிப்பு

19. கீன்சின் கோட்பாட்டில், பணத்திற்கான தேவையையும் பணத்தின் அளிப்பையும் நிர்ணயிப்பது _____________ ஆகும்.

அ. வட்டி வீதம்
ஆ. விளைவுத் தேவை
இ. தொகு தேவை
ஈ. தொகு அளிப்பு

12-Economics-Tamil-Chapter_3.indd 59 12-01-2023 09:55:37

20. ஒரு பொருளாதாரத்தில் _____________ இயக்கத்தை சே (Say) யின் விதி வலியுறுத்தியது.

அ. தூண்டப்பட்ட விலைக் கருவி ஆ. தானியங்கும் விலைக் கருவி
இ. தூண்டப்பட்ட தேவை ஈ. தூண்டப்பட்ட முதலீடு

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	இ	அ	ஆ	ஆ	ஈ	இ	ஆ	ஈ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
இ	ஆ	ஈ	இ	ஈ	அ	ஆ	ஈ	அ	ஆ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி.

21. "முழு வேலைவாய்ப்பு" வரையறு.
22. ஊரக வேலையின்மையின் முக்கியமான இயல்பு யாது?
23. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.
24. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக.
25. 'சே' விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.
26. 'விளைவுத் தேவை' என்றால் என்ன?
27. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் பதில் தருக.

28. கீழ்க்காண்பவற்றைச் சுருக்கமாக எழுதுக.
    அ. பருவ கால வேலையின்மை
    ஆ. உடன்பாடில்லா (Frictional) வேலையின்மை
    இ. கற்றோர் வேலையின்மை
29. J.B. சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக
30. கீன்சின் கோட்பாட்டை விளக்குக.
31. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.
32. தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக.
33. தொன்மையியத்தையும் கீன்சியத்தையும் ஒப்பிடுக. (ஏதேனும் ஐந்து)

12-Economics-Tamil-Chapter_3.indd 60 12-01-2023 09:55:37

பகுதி – ஈ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

35. வேலையின்மைகளின் வகைகளை விவரி
36. சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.
37. ADF, ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.
38. தொன்மைக் கோட்பாடு, கீன்சு கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

செய்முறை

உங்கள் கிராமம் அல்லது வார்டில் உள்ளவர்களில் எத்தனை பேர் முழு வேலையின்றி உள்ளனர்; எத்தனை பேர் சொந்த விருப்பத்துடன் வேலையின்றி உள்ளனர்; எத்தனை பேர் பகுதி நேர வேலையில்லாதவர்களாக உள்ளனர்? என்னும் விவரங்களைப் பட்டியலிடு. (ஆசிரியர் உதவியுடன் புள்ளி விவரம் சேகரிக்கும் முறையை அறிந்து கொள்க).

பார்வை நூல்கள்

1. Jhingan. M.L. 'Macroeconomic Theory', Vrinda Publication LTD,
2. Keshava. . S.R. 'Economics', New Age International Publishers, 2010
3. Maria John Kennedy. M. 'Macroeconomic Theory', PHI Learning Private Limited, New Delhi, 2011.
4. Mithani D.M, 'Macroeconomics', Himalaya Publishing House,
5. Seth. M.L. 'Macroeconomics', Lakshmi Narain Agarwal, Agra, 2012.
6. www.articlelibrary.com
7. www.economicdiscussion.com

இயல் 4

நுகர்வு சார்பும் முதலீடு சார்பும்

"மதிப்புக் கோட்பாட்டின் இரு பக்கங்களாகத் தேவைக் கோட்பாடும் அளிப்புக் கோட்பாடும் உள்ளன. அது போல ஏற்ற இறக்கங்களின் (Business Cycle) கோட்பாட்டின் இருபக்கங்களாக பெருக்கி கோட்பாடும் முடுக்கி கோட்பாடும் உள்ளன. இருபக்கங்களும் செயல்படுவதை விளக்குவதே முழுக்கோட்பாடாகும்".

– J.R. ஹிக்ஸ்

புரிதலின் நோக்கங்கள்

1 நுகர்வுச் சார்பு முதலீடு சார்பு அகியவற்றின் அடிப்படை கருத்துக்களைப் புரிந்து கொள்ளல்

2 பெருக்கி, முடுக்கி, சிறப்புப் பெருக்கி (Multiplier, Accelerator and Super Multiplier) ஆகியவற்றின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளல்

4.1 அறிமுகம்

இராண்டாம் இயலில் நாட்டு வருமானம், அதன் அளவீடு, முக்கியத்துவம், சிக்கல்களைப் பற்றிப் பார்த்தோம். இந்த இயல் நுகர்வுச் சார்பு, முதலீட்டுச் சார்பு ஆகியவை பற்றி விளக்குகிறது. இது நாட்டு வருமானத்தைப் பாதிக்கும் முக்கியமான காரணியாகச் செயலாற்றுகிறது.

நாட்டு வருமான வளர்ச்சியை முடுக்கி விடுவதுதான் பேரியல் பொருளாதாரத்தின் முக்கியமான நோக்கமாகும். நாட்டு வருமனாமானது நுகர்வுப் பண்டங்களையும் (C), முதலீட்டுப் பண்டங்களையும் (I) உள்ளடக்கி இருப்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். முதலீட்டுக்கும் நாட்டு வருமனாத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. முதலீட்டை அதிகரிப்பதால் எந்த அளவுக்கு நாட்டு வருமானம் அதிகரிக்கும் என்பதை "பெருக்கி" கோட்பாடானது விளக்கிக் காட்டுகிறது. அந்த "பெருக்கியின் " மதிப்பு நுகர்வுச் சார்பு அல்லது இறுதிநிலை நுகர்வு நாட்டத்தைப் பொருத்தே அமைகிறது. நுகர்வுச் சார்பு என்பது நுகர்வுச் செலவுக்கும் நாட்டு வருமானத்துக்கும் உள்ள தொடர்பாகும். நாட்டு வருமானத்தில் செலவிடப்படாமல் உள்ள தொகை சேமிப்பு ஆகும். இது, பின்பு மூலதனமாக மாறுகிறது. நுகர்வுச் செலவிற்கும் மூலதனச் செலவிற்கும் உள்ள தொடர்பை 'முடுக்கி' கோட்பாடு விளக்குகிறது. இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையாகும்.

12-Economics-Tamil-Chapter_4.indd 62 12-01-2023 10:07:09

இந்த இயலில் நுகர்வுச் சார்பு, நுகர்வு சார்ந்த உளவியல் கோட்பாடு, முதலீட்டுச் சார்பு, பெருக்கி, முடுக்கி ஆகியவற்றை அறியலாம்.

4.2 நுகர்வுச் சார்பு

4.2.1 நுகர்வுச் சார்பின் பொருள்



நுகர்வுச் சார்பு

வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு, நாட்டம்" என்கிறோம். இது "மொத்த நுகர்வு மொத்த நாட்டு வருமானம் ஆகிய இரு ஒட்டுமொத்தத்திற்கிடேயேயான சார்புத் தொடர்பாகும்"

இதனை **C= f (Y)** எனலாம்.

இதில் C = நுகர்வு

Y = வருமானம்

f = சார்பு

எனவே நுகர்வுச் சார்பானது நுகர்வுக்கும் வருமானத்திற்குமிடையேயான சார்புத் தொடர்பை விளக்குகிறது. C = சார்பு மாறி, y = சாரா மாறியாகவும் உள்ளது.

இங்கு வருமானம், நுகர்வு ஆகியவை மட்டுமே பேசப்படுகின்றன. இவற்றைப் பாதிக்ககூடிய எத்தனையோ மாறிகள் இருக்கலாம். அவை அனைத்திலும் மாற்றம் இல்லை என ஊகித்தே இந்தச் சார்பு விளக்கப்படுகிறது.

நுகர்வுச் சார்பு அட்டவணை பல்வேறு வருமான நிலைகளில் உள்ள பல்வேறு நுகர்வுச் செலவினைக் காட்டுவதாகும். கீழ்க்காணும் ஒரு கற்பனை அட்டவணை நுகர்வுச் சார்பை விளக்குகிறது.

அட்டவணை 1 : வருமானம் – நுகர்வு அட்டவணை (₹ கோடிகளில்)

வருமானம் Y	நுகர்வு C	சேமிப்பு S
0	20	–20
60	70	–10
120	120	0
180	170	10
240	220	20
300	270	30
360	320	40

C = 100 + 0.8Y

என்று கொள்ளும் போது MPC = 0.8

வருமானம் சுழியம் (Y = 0) ஆனாலும் நுகர்வுச் செலவு 100 ஆக (C = 100) இருக்கும். வருமானம் 100 (Y=100) எனில் நுகர்வுச் செலவு 180 (C=180) ஆகவும். வருமானம் 200 (Y = 200) எனில் நுகர்வுச் செலவு 260 (C = 260)ஆகவும், வருமானம் 300 (Y = 300) எனில் நுகர்வுச் செலவு 340 (C = 340) ஆகவும் இருக்கும்.

Y = 300 எனில்

C = 340 ஆக இருக்கும் போது

இங்கு $\Delta c = 340 - 260 = 80$

$$\Delta y = 300 - 200 = 100$$

$$MPC = \frac{\Delta c}{\Delta y} = \frac{80}{100} = 0.8$$

கணிதரீதியாக

C= a + b Y or C = 20 + 0.8Y

இதில் a > 0 மற்றும் b < 1

C = நுகர்வு, a = 20 = நிலையானது

Y = வருமானம்

b = MPC (இறுதிநிலை நுகர்வு நாட்டம்)

$= 0.8 = \frac{\Delta c}{\Delta y}$

தரப்பட்டுள்ள அட்டவணையில் நுகர்வுச் செலவு அதிகரிப்பு என்பது அதிகரிக்கும் வருமானத்தைச் சார்ந்து உள்ளது. இங்கு வருமானம் சுழியமாக இருந்தாலும் மக்கள் ஏற்கனவே உள்ள சேமிப்பை சாப்பிடுவதற்கு செலவு செய்வர் அப்பொழுதுதான் உயிர்வாழ முடியும் (தன்னிச்சை நுகர்வு).



வரைபடம் 4.1

இந்த வரைபடத்தில் வருமானம் M = 120 ஆக இருக்கும் போது நுகர்வும் (C) 120 ஆக உள்ளது (B – என்னும் புள்ளியில்).

வருவாய் Y = 180 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு C = 170 ஆக உயர்கிறது. (S என்னும் புள்ளியில்) Y 360 ஆக உயர்ந்தால், C = 320, S = 40

மேற்காண் வரைபடத்தில் வருமானம் படுகிடைக் கோட்டிலும், (x–அச்சிலும்) நுகர்வு செங்குத்துக் கோட்டிலும் (y–அச்சிலும்) விளக்கப்படுகிறது. 45–டிகிரி கோட்டின் எல்லா புள்ளியிலும் நுகர்வும் வருமானமும் சமமாக உள்ளது. வருமான மாற்றத்திற்கு சமமான அளவில் நுகர்வும் மாறும் என்ற எடுகோளைக் கொண்டுள்ளதால் நேர்கோட்டு நுகர்வுச் சார்பாக உள்ளது.

நுகர்வுச் சார்பானது நுகர்வுக்காக செலவிடும் தொகையை மட்டும் அளவிடாமல், சேமிக்கப்பட்ட தொகையை யும் சேர்த்து மதிப்பிடுகிறது. 45° கோடு என்பது சுழியமாககிருக்கும் சேமிப்பையையும், C என்னும் கோடு நுகர்வு மற்றும் சேமிப்பின் பகிர்வைக் காட்டுகிறது.

4.2.2 முக்கிய கருத்துருக்கள்



(i) சராசரி நுகர்வு நாட்டம் $= \frac{c}{y} = \frac{\text{நுகர்வு}}{\text{வருமானம்}}$

(ii) இறுதிநிலை நுகர்வு நாட்டம்

$= \frac{\Delta c}{\Delta y} = \frac{\text{நுகர்வு மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}}$

(iii) சராசரி சேமிப்பு நாட்டம் $= \frac{s}{y} = \frac{\text{சேமிப்பு}}{\text{வருமானம்}}$

(iv) இறுதிநிலை சேமிப்பு நாட்டம்

$= \frac{\Delta s}{\Delta y} = \frac{\text{சேமிப்பு மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}}$

(1) சராசரி நுகர்வு நாட்டம்

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணிதரீதியாக

$$APC = \frac{C}{Y}$$

இங்கு

C – நுகர்வு

Y– வருமானம்

(2) இறுதிநிலை நுகர்வு நாட்டம்

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்குமிடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது. கணித ரீதியாக

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

இங்கு

ΔC = நுகர்வு மாற்றம்

ΔY = வருமான மாற்றம்

MPC – நேர்கணிய எண்; ஆனால் ஒன்றுக்கும் குறைவானது.

$$0 < \frac{\Delta C}{\Delta Y} < 1$$

(3) சராசரி சேமிப்பு நாட்டம் (APS)

வருமானத்திற்கும், சேமிப்பிற்குமிடையேயான வீதமே சேமிப்பு நாட்டம் எனப்படும். சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்தச் சேமிப்பை மொத்த வருமானத்தால் வகுத்தால் கிடைக்கக்கூடிய ஈவுத்தொகையாகும். வேறுவகையில் கூறினால் இது மொத்த வருவாய்க்கும், மொத்த சேமிப்பிற்கிடையேயான வீதமாகும். கணித ரீதியாக

$$APS = \frac{S}{Y}$$

இங்கு

S = சேமிப்பு

Y = வருமானம்

(4) இறுதிநிலை சேமிப்பு நாட்டம்

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும்.

இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை, வருமான மாற்றத்தினால் வகுக்க வேண்டும். கணித ரீதியாக

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

இங்கு

ΔS = சேமிப்பு மாற்றம்

ΔY = வருமான மாற்றம்

மேலும் MPC+MPS=1

MPS = 1– MPC மற்றும் MPC = 1 – MPS

பொதுவாக சராசரி நுகர்வு நாட்டம் விழுக்காடாக, இறுதிநிலை நுகர்வு நாட்டம் பின்னமாகவும் இருக்கும்.

அட்டவணை. 2 APC, MPC, APS, MPS ஆகியவற்றைக் கணக்கிடுதல்

வருமானம் Y	நுகர்வு C	APC % C/Y	APS % S/Y	MPC ΔC/ΔY	MPS ΔS/ΔY
120	120	(120/120)100 = 100	(0/120)0	-	-
180	170	(170/180)100 = 94	(10/180)100	50/60 = 0.83	0.17

4.2.3 கீன்சின் நுகர்வு பற்றிய உளவியல் விதி (Keyne's Psychological Law of Consumption)

கீன்சு நுகர்வு பற்றிய உளவியல் (மனஇயல்) விதி ஒன்றை முன்மொழிந்தார். அதனடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். "உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம், விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்; ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது". இந்த விதி மனிதர்கள் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.



ஊகங்கள்

கீன்சின் விதி கீழ்க்காணும் ஊகங்களை உள்ளடக்கியது.

i. மற்றவை மாறாது

வருமானப் பகிர்வு, சுவை, பழக்கவழக்கம், சமூகக் காரணிகள், விலை மாற்றம், மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவை மாறாமல் நிலையாக உள்ளன என்ற ஊகத்தின் அடிப்படையில் நுகர்வு வருமானத்தை மட்டும் சார்ந்ததாகும்.

2. சுமுகமான சூழல் நிலவுகிறது

இந்த விதி நாட்டில் இயல்பான நிலை நிலவும்போது மட்டும் பொருத்தமானதாக அமையும். அபரிமிதமான மற்றும் அசாதாராண சூழ்நிலைகளான போர், புரட்சி, மிக வேக பணவீக்கம் முதலனவற்றின் போது இந்த விதி செயல்படாது. மக்கள், அதிகரித்த மொத்த பணத்தையும் நுகர்விற்கே செலவிடுவர்.

3. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது

அரசு தலையிடாது. மக்கள் சுதந்திரமாக நுகர்வு பற்றிய முடிவினை எடுப்பார்கள். நாடு செல்வமிக்கது; முதலாளித்துவம் நிலவுகிறது.

இவ்விதியின் கருத்துகள்

இவ்விதி மூன்று கருத்துகளைக் கொண்டது.

(1) **வருமானம் உயரும் போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.** ஆனால் சிறிய அளவாக இருக்கும். காரணம் வருமனம்

12-Economics-Tamil-Chapter_4.indd 66 12-01-2023 10:07:12

அதிகரிக்கும் போது, பகுதி பகுதியாக நம் விருப்பமும் நிறைவேறும், ஆதலால் நுகர்வும் பண்டங்களின் மீது செய்கின்ற செலவு குறைகிறது. எனவே நுகர்வுச் செலவானது வருமானம் அதிகரிக்கும் போது அதிகரிக்கும், ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

(2) **அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.** இது முதல் கருத்துரையின் படி தொடர்கிறது. ஏனெனில் அதிகரித்த முழு வருமானமும் நுகர்வில் முழுவதுமாக செலவு செய்யப்படவில்லை, மீதம் சேமிக்கப்படுகிறது இதன் வழியில் நுகர்வும், சேமிப்பும் ஒன்று சேர்ந்து செல்கின்றன.

(3) **அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வையும் சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.** இதன் பொருளானது அதிகரித்த வருமானம் ஒன்று நுகர்வையோ சேமிப்பையோ குறைத்திட வாய்ப்பில்லை. ஆதலால் அதிகரிகின்ற வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டையும் அதிகரிக்கும்.

இவ்விதியின் மூன்று கருத்துரைகள் பின்வரும் அட்டவணை 3–இன் உதவியுடன் விளக்கப்படுகிறது.

அட்டவணை 3

விதியின் மூன்று கருத்துரைகள்.

வருமானம் Y	நுகர்வு C	சேமிப்பு S = Y – C
120	120	0
180	170	10
240	220	20

கருத்துரை (1)

வருமானம் ₹60 கோடிகளாக அதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு ₹50 கோடிகளாக அதிகரிக்கிறது.

கருத்துரை (2)

அதிகரித்த ₹60 கோடி வருமானம் இரண்டாக, நுகர்விற்கும், சேமிப்பிற்கும் இடையே முறையே பிரிக்கின்றது. (அதாவது ₹50 கோடி நூகர்வும் ₹10 கோடி சேமிப்புமாக)

கருத்துரை (3)

வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வுப் சேமிப்பும் அதிகரிக்கின்றன. நுகர்வோ சேமிப்போ குறையவில்லை.

இந்த மூன்று கருத்துரைகளும் வரைபடமாக 4.2 இல் விளக்கப்பட்டுள்ளன. இங்கே வருமானம் படுகிடை (x)–அச்சிலும் நுகர்வுச் சேமிப்புச் செங்குத்து (y)–அச்சிலும் அச்சிலும் அளவிடப்படுகிறன. C– என்பது நுகர்வுச் சார்ப்பு வளைகோடு, 45– டிகிரி கோடு வருமானமும் நுகர்வும் சம அளவாக இருப்பதைக் காட்டுகிறது.



வரைபடம் 4.2

கருத்துரை (1)

120 லிருந்து 180 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வும் 120லிருந்து

12-Economics-Tamil-Chapter_4.indd 67 12-01-2023 10:07:12

170ஆக அதிகரிக்கின்றது. ஆனால் அதிகரித்த நுகர்வு அதிகரித்த வருமானத்தை காட்டிலும் 10 குறைவு. அது சேமிக்கப்படுகிறது.

கருத்துரை (2)

180 லிருந்து 240 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது இது இரண்டு பகுதிகளாக நுகர்வு 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பு 10 லிருந்து 20 ஆகவும் முறையே பிரிகின்றது.

கருத்துரை (3)

வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை 10 லிருந்து 20ஆகவும் அதிகரிக்கச் செய்கிறது. C கோட்டிற்கும் 45^0 கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது.

4.2.4 நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்ற காரணிகள் (அகவயக் காரணிகளும் புறவயக் காரணிகளும்)

நுகர்வுs சார்பைத் தூண்டுகின்ற காரணிகளை அவை: ஜே.எம்.கீன்ஸ் இரண்டாகப் பிரிக்கின்றார். அவை அகவயக், காரணிகள், புறவய காரணிகள் ஆகும்.

அ) அகவயக் காரணிகள்

அகவயக் காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. நுகர்வுச் சார்பைத் தூண்டுகின்ற முக்கியமான அகவயக் காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கீன்சு எட்டு நோக்கங்களைப் பட்டியலிட்டு உள்ளார். இவை தனி மனிதர்களைச் செலவு செய்வதிலிருந்து தடுக்கின்றன அவையாவன:

1. **முன்னெச்சரிக்கை நோக்கம் :** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. எ.கா. விபத்து, உடல் நலனின்மை
2. **எதிர்பார்க்கும் நோக்கம் :** எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்
3. **கணிக்கும் நோக்கம் :** விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.
4. **முன்னேறும் நோக்கம் :** வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்
5. **பணவியல் சுதந்திர நோக்கம்**
6. **வணிக நோக்கம்:** வணிகத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்
7. **பெருமித நோக்கம்:** சொத்தை (பணத்தை) தனது சந்ததியினருக்கு விட்டுசெல்லும் விருப்பம்.
8. **பேராசை நோக்கம்:** முற்றிலும் கஞ்சத்தனமான உள்ளுணர்வு

கீன்சு : முன்னெச்சரிக்கை, எதிர்பார்த்தல் கணித்தல், முன்னேறுதல், பணவியல் சுதந்திரம், வணிகம், பேராசை பெருமிதம் ஆகியவை நுகர்ச்சியைப் புறக்கணிக்கும்/ தடுக்கும் நோக்கங்களாகக் கூறியுள்ளார்.

அரசாங்கம், நிறுவனங்கள், வணிகக் கழகங்கள், தொழிற்சாலைகளும் பின்வரும் நான்கு நோக்கங்களுக்காக முக்கியமாக சேமிக்கும்.

1. **வணிக நோக்கம் :** கடன் இல்லாமல் மூலதன முதலீடு மேற்கொள்வதற்காக வளங்களைப் பெறும் விருப்பம்.

2. **நீர்மைத்தன்மை நோக்கம் :** அவசரகாலம், சிக்கல்களை சந்திப்பதற்காக நீர்மை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கம்.

12-Economics-Tamil-Chapter_4.indd 68 12-01-2023 10:07:12

3. முன்னேறும் நோக்கம் : வருமானத்தை அதிகரிப்பதற்காகவும், வெற்றிகரமான தனது மேலாண்மையை நிரூபிக்க வேண்டியதற்கான நோக்கம்.

4. நிதி விவேக நோக்கம் : கடனைச் செலுத்த, தேய்மானம் மற்றும் பழங்கால தொழில் நுட்பத்தை மாற்றும் நோக்கம் போன்றவற்றிற்குத் தேவையான நிதி ஆதாரங்களை உறுதிப் படுத்தும் விருப்பம்.

கீன்சு அகவயக் காரணிகள் குறுகிய காலத்தில் மாறாது எனவே, நுகர்வுச் சார்பு குறுகிய காலத்தில் நிலையானது என்கிறார்.

ஆ) புறவயக் காரணிகள்

புறவயக்காரணிகள் உண்மையானவை, அளவிடக் கூடியவை. நீண்ட காலங்களில் இந்தக் காரணிகள் எளிதாக மாற்றம் அடையும். பெரும்பான்மையான புறக்காரணிகள் நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்றவையாகும்.

1) வருமானப் பகிர்வு

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும், அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர். சமநிலை வருமானப் பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. இராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

2) விலை அளவு

நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்ற மிக முக்கியமான காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள். சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

3) கூலி அளவு

நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்ற முக்கியமானதாக கூலி அளவு இருக்கின்றது. நுகர்விற்கும், கூலிக்கும் இடையே நேர்கணியமான தொடர்பு இருக்கும். கூலி அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். மேலும் எதிர்பாராத இலாபம் ஏற்படும் போது இதே மாதிரி விளைவு ஏற்படும்.

4) வட்டி விகிதம்

வட்டி விகிதமும் நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்ற முக்கியமான காரணியாகும்.. அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தைச் சேமிக்க ஊக்கம் அளிக்கும்; நுகர்வைக் குறைக்கும்.

5) நிதி கொள்கை

அரசாங்கம் வரியைக் குறைக்கும் போது, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும்; சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும். வளர்வீத வரிக் கொள்கையானது ஏழைகளுக்குச் சாதகமான வருமானப் பகிர்வைத் தருவதால், ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.

6) நுகர்வோர் கடன்

எளிய தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பண்டங்களான ஊர்திகள், குளிர்பதனப் பெட்டி, கணினி முதலானவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.

7) மக்கள் தொகை காரணிகள்

மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு அதிகமாக இருக்கும். குடும்ப அளவைத் தவிர, குடும்ப வாழ்க்கைச் சுழற்சி நிலை, இருப்பிடம், தொழில் ஆகியன நுகர்வுச் சார்பைப்

பாதிக்கும். ஆரம்பநிலைக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு செலவு செய்வதை விட கல்லூரிக் கல்வி பயிலும் மாணவர்களுக்காக அதிகமாக செலவு செய்வார்கள். கிராமப்புறக் குடும்பங்களை விட நகர்ப்புறக் குடும்பங்கள் அதிகமாக செலவு செய்யும்.

8) டூசன் பெரியின் ஊகம்

நுகர்வுச் சார்பைப் பாதிக்கும் இரண்டு உற்று நோக்குதலை டூசன் பெரி ஏற்படுத்தியுள்ளார்.

டூசன் பெரி

அ) நுகர்வுச் செலவானது தற்போதைய வருமானத்தை மட்டும் சார்ந்து இல்லாமல் முந்தைய வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் சார்ந்து இருக்கும். தனி மனிதர்கள் குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்துடன் வாழ்ந்து பழக்கப்பட்டு இருப்பதால், தற்போதைய வருமானம் குறைந்தாலும் தொடர்ந்து ஒரே மாதிரியாக நுகர்வுச் செலவு மேற்கொள்வார்கள்.

ஆ) வெளிக்காட்டும் விளைவின் காரணமாகவும் நுகர்வு தீர்மானிக்கப்படுகிறது. குறைவான வருமானம் உடைய மக்களும், அதிக வருமானம் உடைய மக்களின் நுகர்வுச் தரத்தால் தூண்டப்படுவார்கள். மற்றொரு வகையில் ஏழை மக்கள் செல்வந்தர்களின் நுகர்வே போன்றே செலவு செய்யவிரும்புவார்கள். இது அவர்களின் வருமானத்தையும் தாண்டி செலவு செய்ய வைக்கும்.

9) எதிர்பாராத இலாபம் அல்லது இழப்பு

பங்குச் சந்தையில் ஏற்படும் எதிர்பாராத மாற்றம் லாபத்தையோ இழப்பையோ ஏற்படச் செய்து நுகர்வுச் சார்பை மேல் நோக்கியோ, கீழ் நோக்கியோ நகரச் செய்யும்.

4.3 முதலீட்டுச் சார்பு

முதலீட்டுச் சார்பு என்பது முதலீடு மற்றும் வட்டி வீதத்திற்கிடையேயான தொடர்பைக் குறிப்பிடுகிறது. முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள சார்பு தலைகீழ்த் தொடர்பு உள்ளது. முதலீட்டுச் சார்பானது கீழ்நோக்கிச் செல்லும்.

$I = f(r)$

I = முதலீடு (சார்பு மாறிகள்)

r = வட்டி வீதம் (சார்பற்ற மாறிகள்)

4.3.1. முதலீடு என்பதன் – பொருள்

முதலீடு என்பது பங்குகள், கடன் பத்திரங்கள், அரசாங்க பத்திரங்கள் பங்குகள் ஆகியனவ வாங்குவது ஆகும். கீன்சின் கூற்றுப்படி, முதலீடு என்பது நிதி முதலீட்டை மட்டும் குறிக்கும், உண்மையான முதலீட்டைக் குறிக்காது. இது மாதிரியான முதலீடு நாட்டின் உண்மையான மூலதன இருப்பில் சேர்ப்பதில்லை.

கீன்சின் பார்வையில் முதலீடும் மூலதன முதலீட்டுச் செலவை உள்ளடக்கியது ஆகும்.

4.3.2. முதலீட்டின் வகைகள்

தன்னிச்சையான முதலீடும் தூண்டப்பட்ட முதலீடும்.

i) தன்னிச்சையான முதலீடு

தன்னிச்சையான முதலீடு என்பது மூலதனத் திரட்சியின் மீது ஆகும் செலவு

12-Economics-Tamil-Chapter_4.indd 70 12-01-2023 10:07:12

ஆகும். மாறுகின்ற வருமானம், வட்டி விகிதம், இலாப வீதத்தை சார்ந்து இருக்காது.

தன்னிச்சை முதலீடு

- முதலீடு நாட்டு வருமானத்தைச் சார்ந்ததல்ல.
- இலாப நோக்கின்றி மக்கள் நலத்திற்காக முதலீடு மேற்கொள்ளப்படுகிறது.
- உதாரணம் : சாலைகள் அமைத்தல், பாலங்கள், பள்ளிகள், தொண்டு நிறுவனங்கள்
- உயரும் கச்சாப் பொருட்கள் மற்றும் உழைப்பாளர்களின் ஊதியம் ஆகியவற்றைப் பாதிக்காது.
- நாட்டு வளர்ச்சிக்கும், பொருளாதார மந்தத்திலிருந்து விடுபடுவதற்கும் இது அவசியம்.

பொருளாதார நடவடிக்கைகளில் சுதந்திரமான எதையும் சாராத முதலீடு இது. தன்னிச்சையான முதலீடு வருமான நெகிழ்சியற்றது, தன்னிச்சையான முதலீடு அளவு எல்லா நிலைகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்.

தன்னிச்சை முதலீட்டு வரை கோடு படுக்கிடையாக X அச்சுக்கு இணைகோடாக இருக்கும்.



வரைபடம் 4.3

பொருளாதார மந்த காலத்தில் அரசு தன்னிச்சை முதலீட்டிற்கு ஊக்கமளிக்கும். நலப் பொருளாதாரத்தின் முக்கிய பகுதி தன்னிச்சையான முதலீடு ஆகும்.

பொதுவாக, அரசு மக்கள் நலத்தினைக் கருத்தில் கொண்டு தன்னிச்சையான முதலீட்டை மேற்கொள்ளும்.

ii) தூண்டப்பட்ட முதலீடு

பொருளாதாரம் வளர்ச்சி அடையும் போது அதிகரிக்கின்ற வருமானம், தேவை ஆகியவற்றின் உயர்வினால் ஏற்படும் நிலையான சொத்துகள் பங்குகள் ஆகியவை மீதான செலவே தூண்டப்பட்ட முதலீடு ஆகும்.

தூண்டப்பட்ட முதலீடு இலாப நோக்கம் உடையது. நாட்டு வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தோடு தொடர்புடையது. நாட்டு வருமானத்திற்கும், தூண்டப்பட்ட முதலீட்டிற்கும் நேரிடையான தொடர்பு இருக்கிறது. நாட்டு வருமானம் குறைந்தால் தூண்டப்பட்ட முதலீடும் குறையும், தூண்டப்பட்ட முதலீடு வருமான நெகழிச்சியுடையது. பின்வருமாறு நேர்கணியச் சாய்வு கோடாக இருக்கும்.



வரைபடம் 4.4

தொ எண்	தன்னிச்சையான முதலீடு	ஊக்குவிக்கப்பட்ட முதலீடு
1	தன்னிச்சையானது	திட்டமிடப்பட்டது
2	வருவாயைப் பொருத்து நெகிழாதது	வருவாயைப் பொருத்து நெகிழ்வது
3	நல நோக்கமுடையது	இலாப நோக்கமுடையது

4.3.3 முதலீட்டுச் சார்பின் காரணிகள் (Determinants of Investment Function)

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் முதலீடு வட்டிவீதத்தை மட்டுமே சார்ந்தது என்று கூறினார்கள். ஆனால் உண்மையில் முதலீடு பல காரணிகளைப் பொருத்து அமைகிறது. அவை கீழ்வருமாறு:

1. வட்டி வீதம்
2. நிலையற்ற தன்மை
3. அரசியல் சூழல்
4. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்
5. மூலதனப் பண்டங்களின் இருப்பு
6. புதிய பண்டங்களின் தேவை
7. முதலீட்டாளர்களின் வருமான அளவு
8. கண்டுபிடிப்புகளும், புத்தாக்கமும்
9. நுகர்வுத் தேவை
10. அரசுக் கொள்கை
11. மூலதனம் கிடைத்தல்
12. முதலீட்டாளர்களின் சொத்துகளின் ரொக்கத்தன்மை

ஆகிய காரணிகள் முதலீட்டளவை நிர்ணயிக்கின்றன.

கீன்சின் கருத்துப்படி, வணிக எதிர்பார்ப்பும் இலாபம் ஆகியவை முதலீட்டு அளவை முடிவு செய்வதில் முக்கியமான காரணிகளாக விளங்குகின்றன. மேலும் அவர் முதலீடு மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் மற்றும் வட்டி வீதத்தைப் பொருத்து அமையும் என்கிறார்.

i. தனியார் முதலீடு என்பது மூலதன இருப்பை அதாவது தொழிற்சாலை அல்லது இயந்திரங்களை அதிகரிக்க செய்வது.

ii. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் (MEC)என்பது முதலீட்டுத் திட்டத்தில் கிடைக்கும் எதிர்பார்க்கப்படும் வருமானம் ஆகும். குறிப்பாக, இறுதியாக அதிகரிக்கப்பட்ட ஒரு அலகு மூலதனத்தினால் ஏற்பட்ட ஆண்டு உற்பத்தி விழுக்காடு ஆகும்.

iii. மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் 5 விழுக்காடகவும், வட்டி வீதம் 4 விழுக்காடக இருக்கும் பொது 5 விழுக்காடு உற்பத்தி எதிர்பார்க்கப்படுவதால் வாங்கலாம் 4 சதவீத வட்டியில் கடன் வாங்கலாம்.

4.3.4. வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவு

KC6B4

வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவு எவ்வாறு பொருளாதாரத்தைப் பாதிக்கிறது என்பது விளக்கப்படுகிறது. கடன்களின் மீதான வட்டி வீதம் உயரும்போது, குறைவான

12-Economics-Tamil-Chapter_4.indd 72 12-01-2023 10:07:12

முதலீடே நடைபெறும். ஏனெனில் வட்டி வீதம் அதிகரிக்கும் போது கடன் பெறுவதற்கான செலவு அதிகரிக்கும். இதனால் அதிக வருவாய் தரக்கூடிய இனங்களில் மட்டும் முதலீடு செய்யப்படும்.

வட்டி வீதமும் முதலீட்டு அளவும்



வரைபடம்.4.5

கடனுக்கான செலவு உண்மையாக உயரும்போது குறைந்த அளவு முதலீட்டில் இலாபம் தரக்கூடிய இனங்களில் முதலீடு செய்வர்.

5 விழுக்காட்டில் 8 விழுக்காடக வட்டி வீதம் அதிகரித்தால், முதலீட்டின் அளவு ₹100 கோடியிலிருந்து ₹80 கோடியாகக் குறைவதைக் காணலாம்.

முதலீட்டிற்கான செலவு அதிகளவு வாய்ப்புச் செலவாக இருப்பதால்வட்டி வீதம் குறையும் போது, முதலீட்டை அதிகரிக்கும் போக்கு ஏற்பட்டு விடும் .

1. அதிக வட்டியோடு வங்கியில் இருந்து பணம் பெறுவது அதிக செலவிற்கு வழி வகுக்கும்.

2. வங்கியில் பணத்தைச் சேமிப்பதினால் அதிகப்படியான ஈவு வீதம் கிடைக்கும். ஆதலால் சேமிப்பை நிதி முதலீட்டிற்கு பயன்படுத்துவதில் அதன் பிற வாய்ப்புச் செலவாக குறைந்த வட்டி செலுத்துகை அமையும்.

வட்டி வீதம் அதிகரித்தால், நிறுவனம் ஆதாயத்தை அதிகரிப்பதற்கான தேவை ஏற்படும்.

4.3.5. மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன்

தன்னிச்சையான முதலீட்டை தீர்மானிக்கின்ற முக்கியமான காரணியான மூலதன இறுதிநிலை ஆக்கம் என்ற கருத்தினை ஜே.ம்.கீன்சு 1936–இல் அறிமுகப்படுத்தினார். கூடுதலான மூலதன அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபமே **மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன்** (MEC) என்று வரையறுக்கலாம்.

எதிர்பார்க்கப்படும் வருவாய்க்கும் மூலதனத்திற்கான செலவிற்கும் உள்ள வீதமே மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் ஆகும்.

MEC இரண்டு காரணிகளைச் சார்ந்து இருக்கும்

1) மூலதன சொத்தின் மூலம் கிடைக்கும் வருங்கால இலாபம்

2) மூலதன சொத்தின் அளிப்பு விலை

MEC–யைப் பாதிக்கும் காரணிகள்

முதலீட்டு முடிவை மேற்கொள்ளும் போது கீழ்க்காணும் மூன்று காரணிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

- மூலதன சொத்தின் விலை
- அதன் வாழ்நாளில் எதிர்பார்க்கப்படும் விளைவு விகிதம்
- அங்காடி வட்டிவிகிதம்

} MEC

மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறுகிய கால, நீண்ட கால காரணிகளால் தூண்டப்படுகிறது. இந்த காரணிகளைச் சுருக்கமாக காணலாம்.

அ) குறுகிய கால காரணிகள்

(i) பண்டத்துக்கான தேவை

ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் அங்காடி விலை உயரும் என்ற எதிர்பார்ப்பும், அதன் செலவு குறைந்தும் காணப்படும்போது முதலீட்டிலிருந்து எதிர்ப்பார்க்கும் வருவாய் அதிகரிக்கும். தொழில் முனைவோர்கள் பண்டங்களுக்கான தேவை குறையும் என்றும் செலவு கூடும் என்றும் எதிர்பார்த்தால் முதலீடு குறையும்.

(ii) நீர்மைத்தன்மையுள்ள சொத்துகள்

செயல்திறன் மூலதனத்தை அதிக அளவில் தொழில் முனைவோர் வைத்திருந்தால், தன் வழியே வரும் முதலீட்டு வாய்ப்புகளின் நன்மையை ஏற்றுக் கொள்வர். இது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கும்.

(iii) வருமானத்தில் ஏற்படும் திடீர் மாற்றங்கள்

தொழில் முனைவோரின் திடீர் வருமான மாற்றமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப்பாதிக்கும். வணிக சமூகம் எதிர்பாராமல் இலாபமோ, வரி சலுகைகளோ பெற்றால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் அதிகரிக்கும். ஆதலால் நாட்டில் முதலீடு அதிகரிக்கும். மாறாக, வருமானம் குறைந்தால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் குறையும்.

(iv) நடைமுறை முதலீட்டு வீதம்

குறிப்பிட்ட தொழில்களில் உள்ள நடைமுறை முதலீட்டு வீதமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கின்ற மற்றொரு காரணி ஆகும். குறிப்பிட்ட தொழில்களில் ஏற்கனவே அதிக அளவில் முதலீடு செய்யப்பட்ட நிலையில் அதே தொழிலில் மேலும் முதலீடு செய்தால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைக் குறைக்கும்.

(v) நம்பிக்கை மற்றும் நம்பிக்கையற்ற அலைகள்

வணிகச் சுழலில் ஏற்படும் நம்பிக்கை மற்றும் நம்பிக்கையற்ற நிலைகள் மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனைப் பாதிக்கும். தொழில் செய்பவர் எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தால் இறுதிநிலை உற்பத்தித் திறன் அதிகமாகவும், மாறாக நம்பிக்கையற்று இருந்தால் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறைவாகவும் இருக்கும்.

ஆ) நீண்ட காலக் காரணிகள்

மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கின்ற நீண்ட காலக் காரணிகள் பின்வருமாறு:

(i) மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்

மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை பாதிக்கின்றது. மக்கள் தொகை வளர்ச்சி மிக அதிகமாக இருந்தால், வெவ்வேறு வகையான பண்டங்களுக்கு தேவை அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. எனவே விரைவான மக்கள் தொகை வளர்ச்சி மூலதன ஆக்கத்திறனை அதிகரிக்கும், குறைவான வளர்ச்சி முதலீட்டைக் குறைத்து, அதன் மூலம் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் குறைக்கும்.

(ii) தொழில் நுட்ப முன்னேற்றம்

தொழில்களில் முதலீடும், தொழில் நுட்ப முன்னேற்றமும் ஏற்பட்டால் நிகர இலாபத்தில் நல்ல ஏற்றத்தைக் கொண்டு வரும். எடுத்துக்காட்டாக 20ஆம் நூற்றாண்டில்

12-Economics-Tamil-Chapter_4.indd 74 12-01-2023 10:07:13

ஆட்டோ மொபைல்ஸ் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் இரப்பர் தொழிற்சாலை, எஃகு, எண்ணெய் தொழிற்சாலை முதலியவற்றில் பெரிய அளவில் உந்துதல் ஏற்படச் செய்தது. ஆதலால் புதிய கண்டுப்பிடிப்புகளும் தொழில் நுட்ப முன்னேற்றமும் பலவகையான திட்டங்களுக்கு முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளித்து மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் அதிகரிக்கும் என நாம் கூற முடியும்.

(iii) பணக்கொள்கையும் நிதிக் கொள்கையும்

மலிவுப் பணக்கொள்கை தளர்வான வரிக் கொள்கையும் அதிகப்படியான இலாபத்தை ஈட்ட வழி செய்து, அதனால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் உயர்த்துகின்றன.

(iv) அரசியல் சூழ்நிலை

அரசியல் நிலைபெற்ற தன்மை, சுமுகமான நிருவாகம், சட்ட ஒழுங்கு, பாதுகாப்பு ஆகியவையும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கின்றன.

(v) வளங்கள் கிடைத்தல்

மலிவான, மிகுதியான இயற்கை வளங்கள், திறன்மிக்க உழைப்பாளர்கள், மூலதன இருப்பு ஆகியனவும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கின்றன.

4.3.6. முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI)

ஒரு குறிப்பிட்ட காலத்தில், மேற்கொள்ளப்பட்ட கூடுதல் முதலீட்டில் இருந்து எதிர்ப்பார்க்கப்படுகிற விளைவின் விகிதம் முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஆகும். கடனுக்கான வட்டி வீதம் அதிகமாக இருந்தால், கடன் வாங்குதலும் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்வதற்கான ஆர்வமும் குறையும். இதனால் நிறுவனங்களின் இலாப விகிதம் குறையும்.

மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC)	முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI)
1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொருத்து அமைகிறது	1) மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையைத் தூண்டும் மாற்றத்தைப் பொருத்து அமைகிறது.
2) ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது.	2) ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது.
3) வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது	3) வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது.
4) இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock)	4) இது ஒரு தடையா ஓட்டக் (FLOW) கருத்துரு
5) ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது	5) கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது.

12-Economics-Tamil-Chapter_4.indd 75 12-01-2023 10:07:13

4.4 பெருக்கி (Multiplier)

பெருக்கிக் கோட்பாட்டை முதலில் எப்.ஏ.கான் வேலை வாய்ப்பின் அடிப்படையில் உருவாக்கினார். ஜே.எம்.கீன்சு இதனை வருமானம் அல்லது முதலீட்டுப் பெருக்கியாக மாற்றி அமைத்தார்.

நாட்டு வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை 'பெருக்கி' என வரையறுக்கலாம். ΔI என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், ΔY என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது, எனவே பெருக்கி $K = \Delta Y/\Delta I$. என உள்ளது. முதலீடு மாற்றத்தினால் வருமானம் மாறுவதால் பெருக்கியை முதலீட்டுப் பெருக்கி என அழைக்கப்படுகிறது.

4.4.1 பெருக்கியின் எடுகோள்கள்

கீன்சின் 'பெருக்கி' கோட்பாடு சில எடுக்கோள்களின் அடிப்படையில் செயல்படுகிறது. அவை:

1) தன்னிச்சை முதலீட்டில் மாற்றம் உண்டு.

2) தூண்டப்பட்ட முதலீடு இல்லை.

3) இறுதிநிலை நுகர்வு நாட்டம் நிலையாக இருக்கும்.

4) நுகர்வு நடப்பு வருமானத்தைச் சார்ந்தே அமையும்.

5) பெருக்கியின் செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை.

6) உறுதித் தேவைகேற்ப நுகர்வுப் பண்டங்கள் கிடைக்கும்.

7) நாடு மூடிய பொருளாதாரமாகும், அந்நிய நாட்டின் செயல்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தாது.

8) விலையில் மாற்றம் இல்லை.

9) முழு வேலைவாய்ப்பு நிலைக்குக் கீழ் பொருளாதாரம் செயல்படுகிறது.

4.4.2. இறுதிநிலை நுகர்வு நாட்டமும் பெருக்கியும்

L9TBYF

இறுதிநிலை நுகர்வு நாட்டம் என்பது வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடும் பங்கைக் குறிப்பதாகும். இறுதிநிலை நுகர்வு நாட்டம் வருமான (ΔY) மாற்றத்திற்கும், நுகர்வு (ΔC) மாற்றத்திற்கிடையேயான தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

குறியீடாக $MPC = \Delta C/\Delta Y$

பெருக்கியின் மதிப்பு MPC யைப் பொருத்து அமையும்.

பெருக்கி $(K) = 1/1\text{-}MPC$

எண் ஒன்றிலிருந்து இறுதிநிலை நுகர்வு நாட்ட மதிப்பைக்கழித்து பெறப்படும் மதிப்பின் தலைகீழ் விகிதமே பெருக்கி ஆகும். இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தின் மதிப்பு 1 – MPC. (MPC+MPS = 1) என்பதால் பெருக்கியின் மதிப்பு 1/ MPS ஆகும். எனவே பெருக்கி என்பது MPS இன் தலைகீழ் விகிதம் ஆகும். பெருக்கியானது MPS க்கு தலைகீழ் விகிதத்திலும் MPCக்கு நேர்விகிதத்திலும் தொடர்புடையது ஆகும்.

எண் வடிவில் MPCயின் மதிப்பு 0.75 என்றால் MPS இன் மதிப்பு 0.25 ஆகவும் K மதிப்பு 4 ஆகவும் இருக்கும்.

12-Economics-Tamil-Chapter_4.indd 76 12-01-2023 10:07:13

வாய்பாட்டைப் பயன்படுத்தி K =1/1-MPC

k 1/1–0.75 = 1/0.25 = 4



மொத்த நாட்டு வாருமானம் (GNP)

வரைபடம்.4.6

அட்டவணை 4.

கீழ்க்காணும் மதிப்புகளைக் கொண்டு பெருக்கி செயல்படும் விதம் விளக்கப்படுகின்றது.

MPC	MPS	K
0.00	1.00	1
0.10	0.90	1.11
0.50	0.50	2.00
0.75	0.25	4.00
0.90	0.10	10.00
1.00	0.00	α

C = 100 + 0.8 y;   I = 100   I = 10

Y = C + I

Y = 100 + 0.8y + 100

1 Y – 0.8y = 100 + 100

0.2y = 200; Y = 1000

இங்கு C = 100 + 0.8y = 100 + 0.8 (1000) = 900;

S = 100 = I

முதலீடு 10 அதிகரித்தால், I = 110,

Y = 100 + 0.8y + 110

0.2y = 210

$$Y = \frac{210}{0.2} = 1050$$

இங்கு C = 100 = 0.8 (1050) = 940; S = 110 = I

வரைபட விளக்கம்

45 டிகிரி கோடு y = C+ S

இது இரண்டு அச்சுக்களிலும் உள்ள மாறிகளைச் சமாகப் பிரிக்கிறது. இணையாகச் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 என ஊகிக்கப்படுகிறது (C = 100 + 0.8y)

ஒட்டுமொத்தத் தேவை (C+ I) தேவைக் கோடு 45^0 கோட்டை B என்ற புள்ளியில் வெட்டிச் செல்கிறது.

Y = 500 ஆக இருக்கும்போது C = 100+0.8 y

= 100 + 0.8 (500)

= 100 + 400 = 500 (புள்ளி A)

I = 100 ஆக இருக்கும்போது

Y = 1000, C = 900;

S = 100 = I

புதிய ஒட்டுமொத்த தேவை கோடு ,

C + I = 100 + 0.8Y + 100 + 10

$$Y = \frac{210}{0.2} = 1050$$

C = 940; S = 110 = I

4.4.3. பெருக்கி செயல்படும் விதம்

அரசு முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்வதாக கருதுவோம் அதற்காக ₹100 கோடி பொதுப்பணிக்காக கூலியும், இதர பண்டங்களும் வாங்குவதற்காகச் செலவிடுகிறது எனக் கொள்வோம். இந்த ₹100 கோடியானது உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும். அவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனக் கொண்டால் ₹80 கோடியை நுகர்வுச் செலவுக்கும், மீதம் ₹20 கோடியைச் சேமிக்கவும் செய்வர். இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8. எனில் ₹80 கோடியில் ₹64 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் ₹16 கோடியை

சேமிக்கவும் செய்வர். இந்த வழியில் நுகர்வுச் செலவானது ஒரு சங்கிலித் தொடர் போன்று சென்று கொண்டே செல்லும்.

நேர்கணிய, எதிர்மறைப் பெருக்கியின் விளைவுகள்

நேர்கணியப் பெருக்கி	எதிர்மறைப் பெருக்கி
(திட்டச்செலவில்) துவக்க நிலையில் ஏற்படும் அதிகரிப்பானது (கசிவு குறையும் போது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலை உயர்வை ஏற்படுத்தும்.	(திட்டச்செலவில்) துவக்க நிலையில் ஏற்படும் குறைவானது (கசிவு அதிகரிக்கும் போது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலைக் குறைவை ஏற்படுத்தும்

எனவே இறுதி முடிவுகள்

$\Delta Y=100+100\times4/5+100\times[4/5]^2+100\times[4/5]^3$

அல்லது,

$\Delta Y = 100 + 100 \text{ x } 0.8 + 100 \text{ x } (0.8)^2 + 100 \text{ x } (0.8)^3$

$= 100 + 80 + 64 + 51.2...$

$= 500$

அதாவது $100\times1/1\text{-}4/5$

$100\times1/1/5$

$100\times5 =$ ₹ 500 கோடிகள்

உதாரணமாக $C = 100 + 0.8Y, I = 100,$

என்றால் $Y = 100 + 0.8Y + 100$

$1\ Y - 0.8y = 100 + 100$

$0.2Y = 200$

$Y = 200/0.2 = 1000 \rightarrow$ புள்ளி B

I இன் மதிப்பு 110, ஆக அதிகரிக்கப்பட்டால்

$0.2Y = 210$

$Y = 210/0.2 = 1050 \rightarrow$ புள்ளி D

I, ₹10 அதிகரித்தால், Y ₹ 50 அதிகரிக்கும்.

இது பெருக்கியின் விளைவு.

புள்ளி Aயில், $Y = C = 500$

$C = 100 + 0.8\ (500) = 500; S=0$

புள்ளி Bயில், $Y = 1000$

$C = 100 + 0.8\ (1000) = 900; S = 100 = I$

புள்ளி Dயில், $Y = 1050$

$C = 100 + 0.8\ (1050) = 940; S = 110 = I$

I மதிப்பு 10 அதிகரிக்கும் போது Y மதிப்பு 50 அதிகரிக்கும். இதுவே பெருக்கி விளைவாகும்.

$$K = \frac{1}{0.2} = 5$$

4.4.4 பெருக்கியின் வகைகள்

இயங்கா மற்றும் இயங்கும் பெருக்கி

i) இயங்காப் பெருக்கி

இது உடன்நிகழ் (Simultaneous) பெருக்கி யெனவும், காலமில்லாப் பெருக்கி, தர்க்க ரீதி பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது. இதில் முதலீடு மாற்றமும் வருமான மாற்றமும் உடன் நிகழ்பவை. காலதாமதம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பொருளாதாரம் ஒரு சமநிலையில் இருந்து மறுசமநிலை வருமானத்திற்குப் போகும்போது MPC மாறாது என கருதப்படுகிறது.

ii) இயங்கும் பெருக்கி

இது தொடர் நிகழ் (SEQUENCE) பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது. உண்மையில் முதலீடு செய்த உடனே வருவாய் கூடிவிடுவதில்லை. ஒருவரிடம் இருந்து மற்றவரிடம் பணம் செல்ல காலதாமதம் ஆகலாம். வருமானம் கூடுவதற்கும் நுகர்வு கூடுவதற்கும் இடையில் கால இடைவெளி

12-Economics-Tamil-Chapter_4.indd 78 12-01-2023 10:07:13

www.tntextbooks.in

இருக்கலாம். அந்தக் கால இடைவெளியையும் கருத்தில் கொள்கிறது இயங்கும் பெருக்கி.

4.4.5. பெருக்கியின் கசிவுகள் (LEAKAGES)

பெருக்கியின் எடுகோளானது அதிகரித்த வருமானத்தின் ஒரு பகுதி நுகர்விற்காக செலவிடப்படுகின்றது என்பதே. ஆனால் நடைமுறையில் மக்கள் அதிகரித்த வருமானத்தை வேறு ஒரு பொருட்களின் மீதும் செலவு செய்வார்கள். இவ்வகைச் செலவுகளே கசிவுகள் எனப்படும்.

பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துதல்

பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்காக அதிகரித்த வருமானம் பயன்படுமானால், MPC குறைந்து அதன் காரணமாகப் பெருக்கியின் மதிப்பு தடைப்படும்.

செல்வத்தை வாங்குதல்

அதிகரித்த வருமானம் நடைமுறையில் உள்ள செல்வங்களான நிலம், கட்டிடம் பங்குகள் முதயாவைற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தினால் பணம் மக்களிடையே சுழன்று கொண்டு இருக்கும். நுகர்வுக்கு வராது. இதன் விளைவாக பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

பண்டங்களையும், பணிகளையும் இறக்குமதி செய்தல்

இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களுக்காகவும், பணிகளுக்காகவும் வருமானத்தைச் செலவு செய்தால் நாட்டை விட்டுப் பணம் வெளியேறும். இது நாட்டின் குறிப்பிட்ட அளவு வருவாய் ஓட்டத்தில் திரும்பி வரும் வாய்ப்பு மிகக் குறைவு. ஆதலால் இறக்குமதியானது பெருக்கியின் மதிப்பைக் குறைக்கும்.

நுகர்வுப் பண்டங்கள் பொருட்களின் கிடைக்காமை

பெருக்கிக் கோட்பாடானது தேவை ஏற்பட்டவுடன் நுகர்வதற்கு பண்டங்கள் அளிக்கப்படுவதாக ஊகம் கொண்டுள்ளது. சில நேரங்களில் பண்டங்கள் அளிப்பில் கால இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளியில் தேவைக்கேற்ப அளிப்பு இருக்காது. அதனால் பணவீக்கம் ஏற்படும். இது நுகர்வுச் செலவையையும், பெருக்கியின் மதிப்பையையும் குறைத்துவிடும்.

முழு வேலை வாய்ப்பு நிலை

முழு வேலை வாய்ப்பு நிலையில், பெரும்பாலும் எல்லா வளங்களும் பயன்படுத்தப்பட்டு இருக்கும். ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம் பணவீக்கத்திற்கு வழி வகுத்து உண்மை வருமானம் ஏற்படாமல் செய்து விடும்.

4.4.6. பெருக்கியின் பயன்கள்

1. வருமானம் மற்றும் வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தைப் பெருக்கி சுட்டிக் காட்டுகிறது.
2. வணிகச் சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றது.
3. சேமிப்பு (S), முதலீடு (I) ஆகியவற்றுக்கு இடையே சமநிலை ஏற்பட உதவுகிறது.
4. அரசின் கொள்கைகளை வகுக்க உதவி புரிகிறது.
5. வேலையில்லா நிலையைப் போக்கவும், முழு வேலைவாய்ப்பு நிலையை அடையவும் உதவுகின்றது.

பெருக்கியின் வகைகள்

1. வரிப் பெருக்கி
2. வேலைவாய்ப்புப் பெருக்கி
3. வெளிநாட்டு வணிகப் பெருக்கி
4. முதலீடு பெருக்கி

4.5 முடுக்கிக் கோட்பாடு

தோற்றம் அஃடாலியின் (1909), ஹாட்ரி (1913) பிக்கர் டைக் (1914) ஆகியோரின் கருத்துகளை ஆராய்ந்து பெறப்பட்டது. இருந்த போதிலும், இந்தக் கருத்தைச் செம்மைப்படுத்தி மேம்படுத்தி எளிமையான முடுக்கி மாதிரியாக 1917இல் தந்தவர் ஜே.எம்.கிளார்க் ஆவார். பின்னர் இதனை வணிகச் சுழலுடன் தொடர்புப் படுத்தி மேம்படுத்தியவர்கள் ஹிக்ஸ், சாமுவேல்சன் ஹராடு ஆகியோராவர்.

4.5.1. பொருள்

பொருளாதாரத்தில் நுகர்வுப் பண்டங்களின் தேவை அதிகரிக்கின்ற அது போது பொதுவாக இயந்திரங்களுக்கான (முதலீட்டு பொருட்கள்) தேவையை முடுக்கிவிட்டு அதிகரிக்க வழி செய்யும். முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வையும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பையும் குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

முடுக்கி விளைவுகள்

நுகர்வுத் தேவையின் அதிகரிப்பு → நிறுவனங்கள் முழு உற்பத்தித் திறனை நெருங்குதல் → அதிகரித்த நுகர்வுத் தேவையை ஈடுசெய்ய நிறுவனங்கள் முதலீட்டை அதிகரித்தல்

$$\text{முடுக்கி } (\beta) = \frac{\Delta I}{\Delta C}$$

இதில் β = முடுக்கி

ΔI = முதலீட்டுச் செலவில் மாற்றம் (100 என்போம்)

ΔC = நுகர்வுத் தேவையில் மாற்றம் (50 என்போம்)

முடுக்கியானது முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வின் மாற்றத்திற்கும் உள்ள விகிதத்தை வெளிப்படுத்துகின்றது.

4.5.2. வரைவிலக்கணம்

"தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்"

– கே.கே. குரிஹாரா

எடுத்துக்காட்டாக ₹50 கோடி நுகர்வுப் பண்டங்களின் தொழில்களில் செலவு செய்யும் போது, ₹100 கோடி முதலீட்டு பண்டங்கள் தொழில்களில் முதலீடு செய்ய வழி வகுக்கிறது. அப்படியானால் முடுக்கி 2 ஆகும்.

$$\text{முடுக்கி} = \frac{100}{50} = 2$$

4.5.3. எடுகோள்கள்

1. நுகர்வுப் பண்டங்கள் தொழில் துறையில் எச்ச சக்தியின்மை.
2. நிலையான மூலதனம் – உற்பத்தி விகிதம்
3. தேவையின் அதிகரிக்கும் தன்மை நிலையாக இருக்கும் என்று ஊகித்தல்.
4. நிதி அளிப்பும் மற்ற உள்ளிடு பொருள்களும் நெகிழ்ச்சியுடையன.
5. மூலதனப் பண்டங்கள் தேவைப்படும் அளவுக்கு பகுக்க முடியும்.

4.5.4. முடுக்கிக் கோட்பாடு செயல்படும் விதம்

ஒரு எளிமையான எடுத்துக்காட்டின் மூலம் முடுக்கியின் செயல்பாட்டை பின்வருமாறு விளக்கலாம்.

12-Economics-Tamil-Chapter_4.indd 80 12-01-2023 10:07:14

1000 நுகர்வு பண்டங்களைத் தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுவதாக எடுத்துக் கொள்வோம். 10 ஆண்டு அந்த இயந்திரங்களின் வாழ்நாள் எனக் கொள்வோம். அதாவது ஒவ்வொரு ஆண்டும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது. காரணம் நிலையான 1000 நுகர்வுற பண்டங்களைத் தயாரிப்பதற்காக இதனை மாற்றியமைக்கும் தேவை ஏற்படுகிறது.

10 விழுக்காடு அளவிற்கு (அதாவது 1000லிருந்து 1100 ஆக) நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும். (10 மாற்றமைப்பதற்காக மற்றும் 10 அதிகரித்த தேவையை சந்திப்பதற்காக) இங்கே 10 விழுக்காடு நுகர்வுப் பண்டங்கள் தேவையானது 100 விழுக்காடு இயந்திரத் தேவையை அதிகரிக்கின்றது என்பது குறிக்கின்றது (10 லிருந்து 20 வரை) ஆதலால் இறுதியாக நுகர்வுப் பண்டங்களின் தேவையில் ஏற்படும் ஒரு சிறிய மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.

முடுக்கியின் செயல்பாடு



வரைபடம்.4.7

வரைபட விளக்கம்

SS என்பது சேமிப்புக் கோடு. II என்பது முதலீட்டுக் கோடு E_1 புள்ளியில் பொருளாதாரம் OY_1 வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது. சேமிப்பும் முதலீடும் OI_2 ல் சமநிலையாக உள்ளது. இப்பொழுது முதலீடு OI_2 லிருந்து OI_4 ஆக அதிகரிக்கிறது. இது வருமானத்தை OY_1 லிருந்து OY_3 ஆக அதிகரிக்கிறது. E_3 சமநிலைப் புள்ளியில் முதலீடு I_2I_4 ஆக முழுவதுமாக வெளிப்புற காரணியில் அதிகரிக்கின்றது என்றால், வருமானமும் Y_1Y_3 ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும். ஆனால் இவ்வரைப்படத்தில் வெளிப்புற முதலீடு I_2I_3 ஆகவும், தூண்டப்பட்ட முதலீடு I_3I_4ஆகவும் இருக்கிறது என்று ஊகித்துக் கொள்வோம். ஆதலால், அதிகரித்த வருமானம் Y_1Y_2ஆனது பெருக்கியின் விளைவாலும், அதிகரித்த வருமானம் Y_2Y_3 ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

4.5.5. வரையறைகள்

1. நிலையான மூலதனம் – உற்பத்தி விகிதம் எனும் எடுகோள் உண்மையானது அல்ல.
2. முழு நிலை வேலைவாய்ப்பிற்கு முன்பு வரை மட்டுமே வளங்கள் கிடைக்கும்.
3. மூலதனப் பண்டங்கள் தொழிற்சாலையில் உபரி சக்தி உள்ளதாக ஊகிக்கப்படுகிறது.
4. முடுக்கியானது தேவை அதிகரித்தல் நிலையானது என்ற நிலையில் மட்டுமே வேலை செய்யும்.
5. கடன் எளிதாக கிடைத்தால் மட்டுமே முடுக்கி செயல்படும்.
6. நுகர்வுப் பண்டங்கள் தொழிலில் பயன்படுத்தாத அல்லது மிகுதியான திறன் இருந்தால், முடுக்கிக் கோட்பாடு செயல்படாது.

12-Economics-Tamil-Chapter_4.indd 81 12-01-2023 10:07:14

4.6 மிகைப் பெருக்கி (K மற்றும் β ஐ இணைத்து)

மிகைப் பெருக்கி எளியப் பெருக்கியைவிட சிறந்ததாகும், ஏனெனில் எளியப் பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும், ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடும் தூண்டப்பட்ட முதலீடும் ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் மொத்த விளைவை அறிய ஹிக்ஸ் K மற்றும் β ஐ இணைத்து மிகைப் பெருக்கி என்பதை கணித ரீதியில் உருவாக்கினார். மிகைப் பெருக்கியானது தூண்டப்பட்ட நுகர்வு, தூண்டப்பட்ட முதலீடு ஆகியவை இணைந்து செயல்படுவதாகும்.

4.6.1. நெம்புகோல் இயக்க விளைவு

பெருக்கியின் தாக்கமும், முடுக்கியின் தாக்கமும் ஒருங்கிணைந்து செயல்படும் தாக்கம் நெம்புகோல் இயக்க விளைவு எனப்படும். இது பொருளாதாரத்தில் அதிகமான அல்லது குறைவான வருமானம் பெருக்கத்திற்க்கு இட்டுச் செல்லும் கூறுகின்றது.

குறியீடாகக் கூறினால்

$$Y = C + I_A + I_P$$

Y = மொத்த வருவாய்

C = நுகர்வுச் செலவு

I_A = தன்னிச்சையான முதலீடு

I_P = தூண்டப்பட்ட தனியார் முதலீடு

தொகுப்புரை

மூன்று தலைப்புகளின் அடிப்படையில் நுகர்வு சார்புத் முதலீடு சார்பின் பகுதிகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

நுகர்வுச் சார்பானது நாட்டு வருமான மற்றும் நுகர்வுச் செலவுக்கிடையேயான தொடர்பினை சராசரி நுகர்வு விருப்பு (APC), இறுதிநிலை நுகர்வு விருப்பு (MPC), சராசரி சேமிப்பு விருப்பு (APS) மற்றும் இறுதிநிலை சேமிப்பு விருப்பு (MPS) ஆகியவற்றின் வாயிலாக எடுத்துரைக்கிறது. உள்ளார்ந்த காரணிகளும் வெளிப்புறக் காரணிகளும் நுகர்வுச் சார்பைத் தீர்மானிக்கின்றன.

முதலீடு சார்பானது தன்னிச்சையான முதலீட்டையும், தூண்டப்பட்ட முதலீட்டையும் உள்ளடக்கியது. முதலீட்டுச் சார்பான முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள சார்பு தொடர்பாகும். மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனும், வட்டி வீதமும் முதலீட்டைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும்.

பெருக்கி இறுதிநிலை நுகர்வு விருப்பு (MPC) க்கு நேரடியாகவும், இறுதி நிலை சேமிப்பு விருப்பு (MPS) க்கு தலைகீழ் தொடர்பாகவும் உள்ளது. முடுக்கிக் கோட்பாடானது நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றம் முதலீட்டின் அளவை எவ்வளவு மாற்றுகிறது என்பதை விளக்குகிறது. பெருக்கி, முடுக்கி ஒருங்கிணைப்பை மிகைப் பெருக்கி எனவும் கூறலாம்.

கலைச்சொற்கள்

- **நுகர்வுச் சார்பு :** நுகர்வுக்கும் வருவாய்க்கும் உள்ள தொடர்பு
- **தன்னிச்சையான நுகர்வு :** அடிப்படையான தேவைகளை நிறைவேற்ற, வருமானம்

12-Economics-Tamil-Chapter_4.indd 82 12-01-2023 10:07:14

இல்லாத நிலையிலும் மேற்கொள்ளப்படும் நுகர்வு வருமானத்தைச் சாரா நுகர்வு

- **தன்னிச்சையான முதலீடு:** வருமானத்தைச் சார்ந்திராத முதலீடு
- **சராசரி நுகர்வு விருப்பு (APC) :** நுகர்வுச் செலவை வருமானத்தால் வகுக்க கிடைப்பது (c/y)
- **இறுதி நிலை நுகர்வு விருப்பு (MPC) :** நுகர்வுச் செலவு மாற்றத்தை வருமான மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது ($\Delta c/\Delta y$).
- **சராசரி சேமிப்பு விருப்பு (APS) :** சேமிப்பை வருமானத்தால் வகுக்கக் கிடைப்பது (s/y).
- **இறுதிநிலை சேமிப்பு விருப்பு (MPS) :** சேமிப்பு மாற்றத்தை வருமான மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது ($\Delta s/\Delta y$).
- **உளவியல் காரணிகள் :** அவரவர் மனநிலை தொடர்பான உணர்வுகள்.
- **ஒரு சார்பற்றக் காரணிகள் :** உளவியல் சார்ந்து அமையாமல் வெளியிலிருந்து ஏற்படுத்தப்படக்கூடிய மாற்றங்கள்
- **வெளிக்காட்டும் விளைவு :** மற்றவர்ளைப் பார்த்து மாறுகின்றப் போக்கு
- **தூண்டப்பட்ட முதலீடு :** வருவாய் உயர்ந்ததால் உயருகின்ற முதலீடு
- **பெருக்கி :** வருமான மாற்றத்தை முதலீடு மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது ($\Delta y/\Delta I$)
- **முடுக்கி :** தூண்டுப்படுகின்ற முதலீடு மாற்றத்தை நுகர்வு மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது
- **மேம்பட்ட பெருக்கி :** பெருக்கி, முடுக்கி ஆகியவற்றின் மொத்த விளைவு

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது

அ) C/Y
ஆ) C Y
இ) Y/C
ஈ) C+Y

2. இறுதி நிலை நுகர்வு நாட்டம் கூடினால்

அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்
ஆ) நுகர்வுச் சார்பு மேல் நோக்கி இடம் பெயரும்
இ) நுகர்வுச் சார்பு கீழ்நோக்கி இடம் பெயரும்
ஈ) சேமிப்புச் சார்பை மேலே தள்ளும்

3. கீன்சின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8 ஆக இருந்து, செலவிடக் கூடிய வருவாய் ₹1000 ஆக இருந்தால், நுகர்வு எவ்வளவு?

அ) ₹0.8
ஆ) ₹800
இ) ₹810
ஈ) ₹0.81

4. கீன்சின் நுகர்வுச் சார்பு C = 10 + 0.8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், இறுதிநிலை நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) ₹0.8
ஆ) ₹800
இ) ₹810
ஈ) ₹0 .81

5. கீன்சின் நுகர்வுச் சார்பு C = 10 + 0. 8Y ஆக இருந்து, செலவிடக்கூடிய வருவாய் 100 ஆக இருந்தால், சராசரி நுகர்வு நாட்டம் எவ்வளவு?

அ) ₹0.8
ஆ) ₹800
இ) ₹810
ஈ) 0.9

6. நாட்டு வருமானம் உயரும் போது

அ) APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்.
ஆ) APC உயர்ந்து APC யின் மதிப்பைவிட்டு விலகிச் செல்லும்.
இ) APC மாறாமல் இருக்கும்.
ஈ) APC முடிவிலியை (INFINITY) நெருங்கிச் செல்லும்

7. ஒரு குறிப்பிட்ட வருமானம் அளவில், நுகர்வு அதிகரித்தால்

அ) மொத்த தேவை உயரும்
ஆ) ஏற்றுமதி உயரும்
இ) வரியின் மூலம் வரும் வருவாய் குறையும்
ஈ) இறக்குமதி செலவு குறையும்

8. குறைவான வட்டி வீதம்

அ) நுகர்வைக் குறைக்கும்
ஆ) கடனுக்கான செலவை உயர்த்தும்
இ) சேமிப்பை ஊக்குவிக்கும்
ஈ) கடனையும் செலவையும் அதிகரிக்கும்

12-Economics-Tamil-Chapter_4.indd 84 12-01-2023 10:07:14

9. இறுதி நிலை நுகர்வு விருப்பு =

அ) மொத்த செலவு/மொத்த நுகர்வு

ஆ) மொத்த நுகர்வு/ மொத்த வருவாய்

இ) நுகர்வு மாற்றம்/ வருமானம் மாற்றம்

ஈ) மேற்காண் ஏதுமில்லை

10. மொத்த வருமானத்துக்கும் மொத்த நுகர்வுச் செலவுக்கும் உள்ள தொடர்பு

அ) நுகர்வுச் சார்பு

ஆ) சேமிப்புச் சார்பு

இ) முதலீட்டுச் சார்பு

ஈ) மொத்த தேவைச் சார்பு

11. MPC ஐயும் MPS ஐயும் கூட்டினால் கிடைப்பது

அ) 1

ஆ) 2

இ) 0.1

ஈ)1.1

12. வருவாய் உயர்ந்தால், நுகர்வு

அ) குறையும்

ஆ) மாறாது

இ) ஏறி இறங்கும்

ஈ) உயரும்

13. முதலீடு தன்னிச்சையானது என அனுமானிக்கப்பட்டால், AD யின் சாய்வை நிர்ணயிப்பது.

அ) இறுதிநிலை முதலீட்டு நாட்டம்

ஆ) செலவிடக்கூடிய வருவாய்

இ) இறுதி நிலை நுகர்வு நாட்டம்

ஈ) சராசரி நுகர்வு நாட்டம்

14. __________இடம்பெயர்ந்த பின்னர் _________எவ்வளவு மாறுகிறது என்பதை பெருக்கி கூறுகிறது.

அ) வருமானம், நுகர்வு

ஆ) உற்பத்தி, முதலீடு

இ) முதலீடு, சேமிப்பு

ஈ) மொத்த தேவை, உற்பத்தி

15. பெருக்கியின் மதிப்பு =

அ) 1/(1–MPC)

ஆ) 1/MPS

இ) 1/MPC

ஈ) அ மற்றும் ஆ

16. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு

அ) 2

ஆ) 1/2

இ) 0.2

ஈ) 20

17. ஒரு திறந்துவிடப்பட்ட பொருளாதாரத்தில் (Open Economy) இறக்குமதி, பெருக்கியின் மதிப்பை

அ) குறைக்கிறது

ஆ) உயர்த்துகிறது

இ) மாற்றாது

ஈ) மாற்றும்

18. கீன்சின் கருத்துப்படி, முதலீடு MEC ஐயும் _________சார்ந்தது.

அ) தேவையையும்

ஆ) அளிப்பையும்

இ) வருவாயையும்

ஈ) வட்டி வீதத்தையும்

19. மிகைப் பெருக்கி (Super Multiplier) என்ற கருத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்.

அ) J. R. ஹிக்ஸ்

ஆ) R.G.D. ஆலன்

இ) கான்

ஈ) கீன்ஸ்

20. MEC என்ற கருத்துருவை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ) ஆடம் ஸ்மித்

ஆ) J.M. கீன்ஸ்

இ) ரிகார்டோ

ஈ) மால்தஸ்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	அ	இ	அ	ஈ	அ	அ	ஈ	இ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	ஈ	இ	ஈ	ஈ	அ	அ	ஈ	அ	ஆ

பிரிவு – ஆ

கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் தருக

21. நுகர்வுச் சார்பு என்றால் என்ன?
22. "நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?
23. சராசரி நுகர்வு நாட்டம் (APC) – வரையறு.
24. இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC) – வரையறு.
25. சேமிப்பு நாட்டம் (Propensity to Save) என்றால் என்ன?
26. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) – வரையறு
27. இறுதி நிலை சேமிப்பு நாட்டம் (MPS)– வரையறு
28. பெருக்கி – வரையறு
29. முடுக்கி – வரையறு.

பிரிவு – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஓரிரு பத்தி அளவில் விடையளி.

30. கீன்சின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக
31. தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
32. நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக, புறக் காரணிகளை விளக்குக.
33. முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
34. மிகைப் பெருக்கி – விளக்குக.
35. பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.

பிரிவு – ஈ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக.

36. கீன்சின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.
37. நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.
38. பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.
39. முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.
40. மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

12-Economics-Tamil-Chapter_4.indd 86 12-01-2023 10:07:14

செய்முறை

நுகர்வுச் சார்பினைக் கொண்டு இறுதிநிலை நுகர்வு நாட்டத்தினை எவ்வாறு கணக்கிடுவாய்.

பார்வை நூல்கள்

1. Jhingan M.L. Macro Economic Theory, Vrinda Publication LTD.
2. Keshava.S.R. Economics, New Age Internatonal Publishers, 2010
3. Mitani D.M. Macroeconomics, Himalaya Publishing House,
4. www.articlelibrary.com

இயல் 5

பணவியல் பொருளியல்

பண வீக்கம் சட்டபூர்வமற்ற வரிவிதிப்பு.

– மில்டன் பிரெடுமேன்.

புரிதலின் நோக்கங்கள்

1. பணத்தின் படிநிலை வளர்ச்சி, வகைகள், பணிகள், பணவீக்கத்தின் வகைகள், காரணங்கள், விளைவுகள், கட்டுப்படுத்தும் வழிமுறைகளைப் புரிந்து கொள்ளல்.
2. வணிகச் சுழலின் பல்வேறு கட்டங்களைத் தெரிந்து கொள்ளல்.

5.1 அறிமுகம்

பொருளியலின் ஒரு பகுதியாக பணவியல் பொருளியல் பாடம் அமைந்துள்ளது. இதில் பணம், அவற்றின் பணிகளான பரிவர்த்தனை, மதிப்புகளின் இருப்பு வைத்தல், மதிப்பீட்டு அலகு ஆகியவற்றினைப் பகுப்பாய்வு செய்வதற்கான கட்டமைப்பை ஏற்படுத்தி தருகின்றது. மேலும், இது பணம், பணத்தை நிருவகிக்கும் நிறுவனங்களை உள்ளடக்கிய பண அமைப்பு முறையின் செயல் விளைவுகளையும் ஆராய்கிறது.

5.2 பணம்

2.4.1. பணம் எனும் சொல்லின் பொருள்

பண்டங்கள், பணிகளை வாங்குவதற்கும், கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டு கருவியே பணம் ஆகும். பொது இடையீட்டுக் கருவி என்பது மேற்கண்ட பரிமாணங்களில் அனைவராலும் தயக்கமின்றிப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்று ஆகும். உலகநாடுகளில் அண்மைக்காலமாக கடனின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. காசோலைகள், மாற்றுச் சீட்டுகள் முதலான கடன்கருவிகள் அதற்காக பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருந்தபோதிலும், பணமே அனைத்து கடன்களுக்கான அடிப்படை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

12-Economics-Tamil-Chapter_5.indd 88 12-01-2023 10:10:31

5.2.2 பணத்தின் இலக்கணங்கள்

பணத்திற்கு பல பொருளியல் அறிஞர்கள் இலக்கணம் வகுத்துள்ளனர் அவற்றில் வாக்கர், கிரௌதர் ஆகிய இரு அறிஞர்களின் இலக்கணம் கீழே தரப்பட்டுள்ளது.

"பணம் எதைச் செய்கிறதோ, அதுவே பணம்" ("Money is what money does")

– வாக்கர்.

"பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக்கருவியாகவும், மதிப்பளவை மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்". ஒரு பரிமாற்ற சாதனமாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் எதுவும் பணமாக இருக்கலாம். அதே நேரத்தில் அது மதிப்பின் அளவையாகவும், மதிப்பின் நிலைக்கலனாகவும் இருக்கிறது.

– கிரௌதர்.

5.2.3 பணத்தின் படிநிலை வளர்ச்சி (Evolution of Money)

பண்டமாற்று முறை (Barter System)

பணத்தினை ஒரு பரிமாற்றக் கருவியாக அறிமுகப்படுத்தியது மனிதகுலத்தின் கண்டுபிடிப்புகளில் உயரிய ஒன்றாகும். பணம் அறிமுகமாவதற்கு முன் பண்டங்களையும் மற்றும் பணிகளையும் நேரடியாக பரிமாறிக்கொள்ளும் பண்டமாற்று முறை நடைமுறையில் இருந்து வந்தது. பிறரிடம் உள்ள தங்களுக்கு தேவையான பண்டங்களை அல்லது பணிகளை பெறும்பொருட்டு, தங்களிடம் உள்ள பண்டங்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது பண்டமாற்று முறையாகும். ஆனால், காலப்போக்கில் பண்டமாற்று முறையில் பண்டங்களை வாங்குபவர்களும் விற்பவர்களும் நிறைய சிக்கல்களைச் சந்தித்து வந்தனர். பண்டமாற்று முறையின் தோல்விக்குப்பின், தேவைபோக உபரியாக இருந்த பண்டங்களை பரிமாறிக்கொள்ள பணம் என்ற இடையீட்டுக் கருவி தேவைப்பட்டது. அந்நிலையில் பொது இடையீட்டுக் கருவிகளாக விலங்கின் தோல், உரோமம், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள், ஆகிய பொருட்கள் பணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறு பண்டங்களைப் பண்டங்களுக்கு மாற்றிக் கொள்ளும் முறையே பண்டமாற்று முறை என அழைக்கப்பட்டது.


பண்டமாற்று முறை

பண்டமாற்று முறையின் வரலாறு 6000 BCயில் துவங்கியது.

- மெசபடோமியா பழங்குடியினரால் பண்டமாற்றுமுறைப்பயன்படுத்தப்பட்டது.
- ஃபொனீஷியர்களால் (Phoenicians) கடல் கடந்து பல்வேறு நகரங்களில் இம்முறை பயன்படுத்தப்பட்டது.
- பாபிலோனியர்கள் பண்டங்களுக்குப் பண்டங்களை மாற்றும் பண்டமாற்று முறையை பயன்படுத்தினர்.

உலோகத் திட்டம் (Metalic Standard)

பண்டமாற்று முறை, பண்டப் பணமுறைக்குப் பின் புதிய பண முறைகள்

தோன்ற ஆரம்பித்தது. அதில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம் ஆகும். உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது. உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன. இந்த நாணயங்கள் முழு மதிப்புப் பணமாக அல்லது முழு நிறையுடைய சட்டமுறைப் பணமாக இருந்து வந்தன. அதாவது அந்நாணயங்களில் முக மதிப்பு, உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

பொன் திட்டம் (Gold Standard)

பொன்திட்டத்தின் கீழ் ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பண அலகின் வாங்குதிறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

வெள்ளித் திட்டம் (Silver Standard)

வெள்ளித் திட்டத்தில் ஒரு பணத்தின் அலகு குறிப்பிட்ட அளவிலான வெள்ளி உலோகத்தின் மதிப்பிற்கு ஈடானதாக இருந்தது. இம்முறையில் ஒரு நாட்டின் அரசு அதன் பணத்ததை எப்பொழுது வேண்டுமானாலும் வெள்ளியாக மாற்றிக்கொள்ளும் அனுமதியினை வழங்கியிருந்தது.

காகிதப் பணத் திட்டம் (Currency Standard)

காகிதப் பணத்திட்டம் என்பது நாட்டின் கருவூலமோ, மைய வங்கியோ இரண்டுமோ வரையறையற்ற சட்டமுறை பணமாக காகித பணத்தினைப் புழக்கத்திற்கு வழங்கும் ஓர் பண முறையாகும். காகித பண முறையில், பணத்திற்கு ஈடான மதிப்பினை உலோகமாக மாற்ற முடியாது. காகிதப்பண மதிப்பு நிர்ணயம் பொன், வெள்ளி முதலான உலோக மதிப்புகளைச் சார்ந்து இருப்பதில்லை. காகிதப் பணதிட்டமானது நிருவகிக்கப்படும் காகிதப் பணத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. விலைவாசியை நிலைப்படுத்தும் நோக்கில் புழக்கத்திலுள்ள பண அளவினை நாட்டின் உச்ச நிலை அதிகார அமைப்பான மையவங்கி கட்டுப்படுத்துகிறது. பண மதிப்பிற்கான அரசின் கட்டளையைத் தாங்கி வருவதால் காகிதப் பணத்திட்டம் என்றும், கட்டளைப் பணத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_5.indd 90 12-01-2023 10:10:32

நெகிழிப் பணம் (Plastic Money)

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும். இது நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும். நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் (Plastic Money) உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழிப் பணம் என்றழைக்கப்படுகிறது. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, முன்கூட்டியே பணம் செலுத்தப்பட்ட அட்டை, வணிக நிறுவன அட்டை (Store Card), அந்நிய செலாவணி அட்டை (Forex Card), சூட்டிகை அட்டை (Smart Card) என நெகிழிப் பணம் பல்வேறு வடிவங்களில் வந்துகொண்டிருக்கிறது. பரிமாற்றத்திற்கான ரொக்கப் பணம் கையில்கொண்டு வருவதை தவிர்ப்பதுதான் இவ்வகைப் பணத்தின் நோக்கம் ஆகும்.

மெய்நிகர் பணம் (Crypto Currency)

மைய வங்கியைச் சாராமல் பணப் பெருக்கத்தை சீர் செய்தல், நிதி மாற்றத்தை சரிபார்த்தல் ஆகிய சுதந்திரம் கொண்ட டிஜிட்டல் நாணயங்கள் மெய்நிகர் பணமாகும்.

பிட்காயின் (Bitcoin) போன்ற பரவலாக்கப்பட்ட பணம் தனிமனிதர் சொத்துகளை கட்டுப்பாட்டுக்குள்ளும் கையகப்படுத்துதலுக்குள்ளும் உட்படாமல் இருக்க ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

5.2.4 பணத்தின் பணிகள் (Functions of Money)

பணத்தின் முக்கியமான பணிகள் நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:



1. முதல்நிலைப் பணிகள்



இடையீட்டுக் கருவி	மதிப்பு நிலைக்களன்

மதிப்பளவை	வருங்கால செலுத்துதல்களுக்கு அடிப்படை

i) **பணம் ஓர் பரிமாற்றக் கருவியாக:** இது பணத்தின் அடிப்படை பணியாகும். பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது. மேலும், இது அனைத்துப் பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம்பெறுகிறது. பணத்தைப் பயன்படுத்திச் செய்யும் பரிவர்த்தனைகளை இரு பகுதிகளாகப் பார்க்கலாம். முதலில் மற்றொருவருக்கு பொருட்களை வழங்கும்பொழுது பணம் பெறப்படுகிறது. இந்த செயல் விற்பனை எனப்படுகிறது. இரண்டாவதாக, பொருட்களை நாம் வாங்கும்பொழுது பணம் செலுத்தப்படுகிறது. இது கொள்முதல் எனப்படுகிறது. ஆகவே, புதிய பரிமாற்றங்களில் பணம் ஒரு இடையீட்டுக் கருவியாகச் செயல்பட்டு வருகிறது.

ii) **பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக:** பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும். பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்புகளை பண அலகில் விலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, பணம் ஒரு பொது அளவுகோலாக பார்க்கப்படுகிறது. இதனால் சமுதாயத்திலுள்ள பல்வேறு பொருட்களுக்கான பாரிவர்த்தனை விகிதங்களை எளிதாக தீர்மானிக்க உதவுகிறது.

2. இரண்டாம் நிலைப் பணிகள்

i) **பணம் ஒரு மதிப்பின் நிலைக்கலனாக:** பண்டங்களைச் சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது. ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்டபின் பண்டங்களையும் பணிகளையும் சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன. பணம் நீர்மைத் தன்மையைக் கொண்டிருப்பதனால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் நிலம், இயந்திரம், தளவாடம் என எளிதாக அங்காடிப்படுத்தப்படும் சொத்துகளாக மாற்றிக்கொள்ளலாம். அவ்வகைச் சொத்துகளை மீண்டும் பணமாகவும் மாற்றிக் கொள்ள இயலும். ஆகவே, பணம் மிகச் சிறந்த மதிப்பின் நிலைக்கலனாகச் செயல்படுகிறது. அதேசமயம், பணத்தின் மதிப்பு ஓரளவுக்கு நிலைத்தன்மை கொண்டதாக இருந்தால் தான் இவ்வகையில் தனது பணியைச் சிறப்பாக செய்யமுடியும்.

ii) **பணம் வருங்காலச் செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை:** பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது. கடனுக்குப் பெறப்பட்ட பண்டங்கள், பணிகளைத் திருப்பிச் செலுத்தும்பொழுது மதிப்பு மாற்றத்தினால் எந்த அளவுப் பண்டங்களை, பணிகளைத் திருப்பிச் செலுத்துவது என்ற சிக்கல் இருந்தது. ஆனால், இன்றையப் பொருளாதாரத்தில் கடன்களைப் பெறுவதையும், திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது. அதாவது பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாகச் செயல்படுகின்றது.

iii) **பணம் வாங்கும் திறனை மாற்றிக்கொள்ளும் ஒரு கருவியாக:** பொருளாதார வளர்ச்சியினை ஒட்டி பரிமாற்றம் விரிவடைந்து செல்கிறது. தொலைவிலுள்ள பகுதிகளுக்கு இடையிலும், எல்லை கடந்தும் பரிமாற்றங்கள் நடைபெறகின்றன. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மாற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பணம் எனும் கருவி

12-Economics-Tamil-Chapter_5.indd 92 12-01-2023 10:10:33

இந்தப் பணியினை எளிதாகவும் விரைவாகவும் செய்கிறது.

3. துணைப்பணிகள்

i) **கடனுக்கான அடிப்படை:** கடன்முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. வணிகப் பரிமாற்றங்கள் ரொக்கத்திலோ , கடனிலோ நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாக, வங்கி வைப்பினை வைத்திருக்கும் ஒருவர் தமது கணக்கில் போதிய அளவு ரொக்கப் பண இருப்பு இருக்கும்பொழுது மட்டுமே காசோலைகளைப் பயன்படுத்துவார். வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளிலுள்ள ரொக்க இருப்பின் அளவைப் பொருத்தே கடன்களை உருவாக்குகின்றன. ஆகவே, ரொக்கப் பணமே கடனுக்கான அடிப்படையாக அமைகிறது.

ii) **பணம் நாட்டு வருமானப் பங்கீட்டிற்கு உதவுகிறது:** பண்டமாற்று முறையில் நாட்டு வருமானப் பங்கீடானது மிகச்சிக்கலான ஒன்றாகும். ஆனால், பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி, இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை, அதாவது நாட்டு வருமானத்தை எளிதாகப் பகிர்ந்தளிக்க முடிகிறது.

iii) **இறுதிநிலைப் பயன்பாடுகளையும், இறுதிநிலை உற்பத்தித் திறன்களையும் சமன் செய்திட பணம் பயன்படுகிறது:** நுகர்வோர் தனது மொத்தப் பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தும் நோக்கில் தாம் நுகரும் பல்வேறு பண்டங்களின் இறுதிநிலைப் பயன்பாடுகளை பணத்தின் துணையுடன் சமப்படுத்த வேண்டியதாகிறது. ஏனெனில், பொருட்களின் விலை பணத்தில் உள்ள நிலையில் இறுதிநிலைப் பயன்பாடுகள் பணத்தின் அலகுகளில் வெளிப்படுத்தும்பொழுதுதான் அவற்றை ஒப்பிட்டுப் பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்த முடியும். அதேபோல், உற்பத்தியாளர் தனது இலாபத்தினை உச்சநிலைப்படுத்த பல்வேறு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தித் திறனைப் பண அளவுகளில் ஒப்பிட வேண்டியுள்ளது.

iv) **பணம் மூலதனத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துகிறது:** மூலதனம் பல்வகை வடிவங்களில் காணப்படுகிறது. பணம் நீர்மைத்தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். அதாவது, பணம் மூலதனத்தை எளிய முறையில் பிறவகை மூலதனமாக மாற்றலாம். பிறவகை மூலதனங்களை பணமாகவும் மாற்றலாம். ஆகவே, உற்பத்தியில் குறைந்த இறுதிநிலை உற்பத்தி திறன் கொண்ட ஒரு மூலதனத்தை மாற்றி, அந்த இடத்தில் அதிக இறுதிநிலை உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு மூலதனத்தை கொணர பணம் துணை செய்கின்றது.

4. இதரப் பணிகள்

i) **திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது:** பணம் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு சாதனமாகும். நிறுவனங்கள் தங்களின் செலுத்துதல்களை மேற்கொள்ள எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு ரொக்கப் பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும். இதேபோல், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், அரசு நிறுவனங்களும்கூட தங்களது திரும்பச் செலுத்தும் திறனைத்தக்கவைத்துக்கொள்ள பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும்.

ii) **பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனைக் குறிக்கிறது:** பணம் எனும்

12-Economics-Tamil-Chapter_5.indd 93 12-01-2023 10:10:33

வாங்குதிறன் கொண்ட சாதனத்தைக்கொண்டு எதை வாங்குவதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக அந்தப் பணம் எனும் வாங்குதிறன் சேமித்து வைக்கப்பட்டதோ, அதை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

iii) **பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையைத் தருகிறது:** பணம் என்பது நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். இதன் துணையுடன் அனைத்து இடுபொருட்களையும் வாங்குவதன் மூலம் எந்த ஒரு செய்பொருளையும் உற்பத்தி செய்ய இயலும்.

5.3 பண அளிப்பு

ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பணஅளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும். வட்டிவிகிதம், விலைவாசி ஆகியவற்றை நிர்ணயிப்பதில் பணஅளிப்பு முக்கியப்பங்காற்றுகின்றது. குறிப்பிட்ட காலத்தில் பண அளிப்பு நிலைக் (stock) கருத்தாகவும் ஒரு கால இடைவெளியில் தடையிலா ஓட்டக் (flow) கருத்தாகவும் உள்ளது.

பண அளிப்பின் பொருள்

இந்தியாவில் காகிதப் பணங்கள் இந்திய ரிசர்வ் வங்கியாலும் நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகின்றன. இது தவிர பொது மக்களால் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு விதக் கணக்குகளில் உள்ள இருப்புத் தொகைகளும் பணமாக கருதப்படுகின்றன. காகிதப்பணங்கள் அதிகாரம் பெற்ற சட்டப்படியான செலாவணியாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பில் M1, M2, M3, M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது:

M1 = காகிதப்பணம், நாணயங்கள் மற்றும் கேட்பு வைப்புகள் ஆகியன

M2 = M1 + அஞ்சலக சேமிப்பு, வங்கியின் சேமிப்பு, வைப்புகள்

M3 = M2 + அனைத்து வணிக வங்கிகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் உள்ள கால வைப்புகள்

M4 = M3 + அஞ்சலகத்திலுள்ள அனைத்து வைப்புகள்.

இதில் M1, M2 ஆகியவை குறுகிய பணம் என்றழைக்கப்படுகின்றன. மேலும் M3, M4 பரந்தநிலை பணம் என்றழைக்கப்படுகின்றன.

மேற்கூறிய M1 முதல் M4 வரையிலான வகைப்பாட்டு வரிசையில் பணத்தின் நீர்மைத்தன்மை தொடர்ச்சியாக குறைந்து வருவதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

பணக் குறியீடு ₹

இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மும்பையில் முதுகலைப் பட்டம் பெற்ற திரு. D. உதயகுமாரால் வடிவமைக்கப்பட்ட புதிய பணக் குறியீடு ஜூலை 15, 2010ஆம் ஆண்டில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவநாகரி எழுத்து 'ரா' வும் ரோமன் எழுத்து 'R' இல் செங்குத்துக்கோடு இல்லாமலும் உள்ள வடிவமைப்பாகும். அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குப்பின் இந்தியா தனிப் பணக் குறியீடு கொண்ட நாடாக விளங்குகின்றது.

பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள்

1. **ரொக்க வைப்பு விகிதம்** (Cash Deposit Ratio – CDR). இது பொது மக்கள் கையில் வைத்திருக்கும் பணம்/வங்கி வைப்புகளில் உள்ள பணம் என்ற விகிதத்தைக் குறிக்கும்.

2. **ரொக்க இருப்பு வைப்பு விகிதம்** (Reserve Deposit Ratio – RDR). வங்கி தனது பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பும்/மொத்த வைப்புகள்என்ற விகிதம்.

3. **ரொக்க இருப்பு விகிதம்** (Cash Reserve Ratio – CRR). "வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மையவங்கியில் வைக்க வேண்டிய அளவு/வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புகள்" எனும் விகிதம்.

4. **சட்டப்படியான நீர்மை விகிதம்** (Statutory Liquidity Ratio – SLR). "வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துகள்/வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பும் கால வைப்புகளும்" என்ற விகிதம்.

5.4 பண அளவுக் கோட்பாடுகள்


இர்விங் பிஷர்

பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பவையாகும். இங்கு, பிஷரின் பண அளவுக் கோட்பாடு, கேம்பிரிட்ஜ் ரொக்க இருப்பு அணுகுமுறைக் கோட்பாடு ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

அ) ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு

பண அளவுக் கோட்பாடு என்பது மிக பழமையானக் கோட்பாடு ஆகும். இது 1588–ஆம் ஆண்டு டாவன்ஷட்டி எனும் இத்தாலிய பொருளியல் அறிஞரால் முன்மொழியப்பட்டது. ஆனால், புதிய வடிவிலான இக்கோட்பாட்டினை உருவாக்கிய புகழ் முழுவதும் "பணத்தின் வாங்கும் சக்தி" (1911) என்னும் நூலை எழுதிய அமெரிக்க பொருளியலறிஞரான இர்விங் ஃபிஷரைச் சாரும். இவர் தனது கோட்பாட்டினை "பரிமாற்றத்துக்கான சமன்பாடு" என கணித சமன்பாட்டின் வாயிலாக வழங்கியுள்ளார்.

இச்சமன்பாட்டின் பொது வடிவம்:

இங்கு,

$$MV = PT$$

M = மொத்த (காகித) பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்;

P = பொது விலை மட்டம்

T = வணிகத்தின் அளவு

ஃபிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்தப் பண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க–விற்கப்படும் பண்டங்கள், பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்த பணத்தேவைக்கு) (PT) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

$$MV = PT$$

பண அளிப்பு = பணத்தேவை

இச் சமன்பாடு "ரொக்கப் பரிமாற்றச் சமன்பாடு" எனவும் அழைக்கப்படுகிறது.

மேற்சொன்ன சமன்பாட்டினை P = MV/T என்று மாற்றியமைக்கும்பொழுது, பண சுழற்சி வேகமும், வணிகத்தின் அளவும் மாறாதிருக்கும் சூழ்நிலையில் பணத்தின் அளவு எவ்வகையில் பொது விலைமட்டத்தையும், பணத்தின் மதிப்பினையும் நிர்ணயிக்கிறது என்பதை விளக்குகின்றது. இங்கு பண அளவு மாறுதல் நேரடியாக விலைமட்டத்தைப் பாதிக்கிறது.

மேற்சொன்ன சமன்பாடு காகிதப் பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. ஆனால், புதிய வணிகக் பொருளாதாரத்தில் காகிதப் பணத்துடன் வங்கியிலிருக்கும் கேட்பு வைப்புகள், கடன் பணம், அவற்றின் சுழற்சி வேகம் ஆகிய அனைத்தும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. ஆகவே, ஃபிஷர் தனது சமன்பாட்டினை கீழ்க்காணுமாறு விரிவாக்கினார்:

$$PT = MV + M^1V^1$$

$$P = \frac{MV + M^1V^1}{T}$$

மேற்கண்ட விரிவாக்கப்பட்ட சமன்பாட்டில், பொது விலைமட்டமானது (P) காகிதப் பண அளவு (M) , பணத்தின் சுழற்சி வேகம் (V), வங்கி கடன் பணத்தின் அளவு (M^1) வங்கிக் கடன் பணத்தின் சுழற்சி வேகம் (V^1), மொத்த வணிகத்தின் அளவு (T) ஆகிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

வரைபட விளக்கம்

வரைபடம் (A) மொத்தப் பண அளவில் ஏற்படுத்தப்படும் மாறுதல் விலைமட்டத்தில் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதனை உணர்த்துகிறது. பண அளவு OM ஆக இருக்கும்பொழுது விலைமட்டம் OPயாக உள்ளது. பிறகு பண அளவினை OM_2 என இரட்டிப்பாக்கும் பொழுது விலைமட்டமும் OP_2 என இரட்டிப்பாகிறது. மேலும், பண அளவு OM_4 என நான்கு மடங்காக்கும் பொழுது விலைமட்டமும் OP_4 என நான்கு மடங்காகிறது. விலைமட்டச் சார்பு OP = f(M) க்கான நேர்கோடு வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து 45° கோடாக அமையும்பொழுது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் உள்ள நேரடி சமவிகித உறவு விளங்குகிறது.



வரைபடம் 5.1

வரைபடம் (B) பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தலைகீழ் உறவினை விளக்குகிறது. வரைபடத்தின் செங்குத்து அச்சில் பண மதிப்பும் (OP) படுகிடை அச்சில் பண அளவும் (M) குறிக்கப்பட்டுள்ளன. பண அளவு OM ஆக உள்ளபொழுது, பணமதிப்பு OP_1 –ஆக உள்ளது. பின்னர் பண அளவினை OM_2 என இரட்டிப்பாக்கும் பொழுது பண மதிப்பு OP_2 என பாதியாக குறைகிறது.

12-Economics-Tamil-Chapter_5.indd 96 12-01-2023 10:10:34

தொடர்ந்து பண அளவினை OM_4 என நான்கு மடங்காக்கும்பொழுது பணமதிப்பு OP_4 என நான்கில் ஒரு பகுதியாக குறைகிறது. பண மதிப்புச் சார்பு OP = f(M) க்கான வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கிச் சரிந்து பண அளவிற்கும் பண மதிப்பிற்கும் உள்ள எதிர்மறையான, சமவிகித தொடர்பினைச் சுட்டிக்காட்டுகிறது.

ஆ) கேம்பிரிட்ஜ் அணுகுமுறை (ரொக்க இருப்பு அணுகுமுறை)

i) மார்ஷலின் சமன்பாடு

மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

$$M = KPY$$

இங்கு,

M = பணத்தின் அளவு

Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி

மேற்கண்ட சமன்பாட்டினை மாற்றி எழுதும் பொழுது, P=M/KY என்று பொதுவிலை மட்டத்தினை (P) யைக் காண உதவுகிறது. மேலும் அதனைத் தலைகீழியாக மாற்றி எழுதும் பொழுது நமக்கு 1/P=KY/M என பணத்தின் வாங்கும் சக்தி, அதாவது பண மதிப்பினைக் கண்டறிய முடிகிறது.

இறுதியாகக் கூறப்பட்ட 1/P=KY/M எனும் சமன்பாட்டினை மேலும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமெனில், மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தை (KY= மொத்த பணத்தேவையின் அளவு) பண அளிப்பினால் (M) வகுத்தால் பணத்தின் மதிப்பினை கண்டறியலாம்.

மார்ஷல் கூற்றுப்படி, பண அளவு (M) எனும் காரணியைவிட மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தின் பகுதி (K என்ற கெழு) பணமதிப்பினைத் தீர்மானிப்பதில் மிக முக்கியமானப் பங்கினை வகிக்கிறது.

ii) கீன்சின் சமன்பாடு

கீன்சின் முதல் சமன்பாடு பின்வரும் வகையில் அமைகின்றது:

$$n = pk \quad (or) \quad p = n / k$$

இங்கு,

N = மொத்தப் பண அளிப்பு

p = நுகர்ச்சிப் பண்டங்களின் விலை மட்டம்

k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி – நுகர்ச்சிப் பண்டங்களின் அலகுகளில்

கீன்சு k என்பதனை உண்மை இருப்பு (Real Balance) என குறிப்பிடுகிறார்;. ஏனெனில் மக்களின் ரொக்கக் கையிருப்பு இங்கு நுகர்ச்சிப் பண்டங்களின் அளவுகளில் கணக்கிடப்படுகிறது.

கீன்சின் கூற்றுப்படி, மக்களின் ரொக்க விருப்பத்தினை (k) பணவியல் அமைப்புகள் மாற்ற இயலாது, ஆகவே, பணத்தின் அளவை (n)நெறிப்படுத்துவதன் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்தலாம், பணத்தின் மதிப்பினை நிலைப்படுத்தலாம் என்கிறார்.

பின்னர், கீன்ஸ் தனது சமன்பாட்டினை பின்வருமாறு விரிவாக்குகிறார்:

$n = p\,(k+rk')$ அல்லது $p = n/(k+rk')$

n = மொத்தப் பண அளிப்பு

p = நுகர்ச்சிப் பண்டங்கள் (தொகுப்பின்) விலை மட்டம்

k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி – நுகர்ச்சிப் பொருட்களின் எண்ணிக்கையில் (பல பண்டங்களின் தொகுப்பு).

r = வங்கிகளின் ரொக்க இருப்பு விகிதம்

k' = வங்கி வைப்புகளாகச் சமுதாயம் வைத்திருக்கும் பணத்தின் அளவு – நுகர்ச்சிப் பண்டங்களின் எண்ணிக்கையில்.

இவ்விரிவாக்கச் சமன்பாட்டிலும், கீன்சு k, k' மற்றும் r ஆகியவை மாறாதிருக்கும் என்கிறார். அச்சூழ்நிலையில், பண அளவை (n) மாற்றும் பொழுது விலைமட்டம் (P) நேரடியாகவும், சமவிகிதத்திலும் மாறும் என்கிறார்.

5.5 பணவீக்கம்

பொருளாதாரத்தில் பணவீக்கம், பண வாட்டம் ஆகியன இரண்டும் பொருளாதார சிக்கல்கள் ஆகும். ஆகவே, இவற்றைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

5.5.1 பணவீக்கம் என்பதன் பொருள்

பணவீக்கம் என்பது தொடர்ச்சியான, குறிப்பிடும்படியான பொது விலைமட்ட அதிகரிப்பு ஆகும். சற்று விளக்கமாக கூறினால், பணவீக்கம் என்பது பண்டங்கள், பணிகளின் பொதுவிலைமட்ட அதிகரிப்பு விகிதத்தையும், அதன் விளைவாகப் பணத்தின் வாங்கும் சக்திக் குறைவதையும் காட்டுகிறது.

இலக்கணங்கள்

"குறைந்த அளவுப் பண்டங்களை அதிக அளவுப் பணம் துரத்தும் நிலை"

– கோல்பர்ன்

"வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண குறைவு நிலையாகும்"

– கிரிகெரி

5.5.2 பணவீக்கத்தின் வகைகள் :

(i) பணவீக்க வேகத்தின் அடிப்படையில்



வரைபடம் 5.2

பணவீக்கம் வேகத்தின் அடிப்படையில் தவழும் பணவீக்கம் (Creeping Inflation),

12-Economics-Tamil-Chapter_5.indd 98 12-01-2023 10:10:34

நடக்கும் பணவீக்கம் (Walking Inflation), ஓடும் பணவீக்கம் (Running Inflation), தாவும் பணவீக்கம் (Galloping Inflation) அல்லது உயர் பணவீக்கம் (Hyper Inflation) என நான்காக வரைபடம் 5.2இல் குறிக்கப்பட்டுள்ளது.

i) தவழும் பணவீக்கம்

தவழும் பணவீக்கம் மிகக் குறைவான, எளிமையான விகித்தில் பணவீக்க விகிதம் இருப்பதாகும். நீண்ட காலத்தில் விலைவாசி உயர்வதை மக்கள் எளிதாக உணர முடியாத அளவில் இருக்கும் பணவீக்கமே தவழும் பணவீக்கம் எனப்படுகிறது. இது மிதமான பணவீக்கம் (Mild Inflation) எனப்படுகிறது.

ii) நடக்கும் பணவீக்கம்

பணவீக்கம் மிதமான வேகத்தில் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3 முதல் 9 விழுக்காடு அளவில் இருந்தால் அது நடக்கும் பணவீக்கம் அல்லது நகரும் பணவீக்கம் (Trolling Inflation) என்றழைக்கப்படுகிறது.

iii) ஓடும் பணவீக்கம்

ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 விழுக்காட்டிற்குள் இருந்தால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது. வேகமான விலைவாசி அதிகரிப்பை ஓட்டத்துடன் உவமைப்படுத்திச் சொல்வதால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது.

iv) தாவும் பணவீக்கம்

தாவும் பணவீக்கம் அல்லது உயர் பணவீக்கம் என்பது சமாளிக்க முடியாத அளவிற்கு இரண்டு அல்லது மூன்று இலக்க விழுக்காட்டில் உள்ள பணவீக்கம் ஆகும். மிக அதிகமான உயர் பணவீக்கம் இருக்கும்பொழுது ஒட்டுமொத்தப் பணவீக்க விகிதம் ஆண்டிற்கு 20 முதல் 100 விழுக்காடு வரை இருக்கும். கீன்சு இதனை உண்மையானப் பணவீக்கம் எனக் குறிப்பிடுகின்றார்.

21ஆம் நூற்றாண்டின் முதல் உயர் பணவீக்கம் முன்னெப்பொழுதும் இல்லாத அளவாக ஜிம்பாப்வே நாட்டில் ஆண்டிற்கு 3714 சதவிகிதமாக ஏப்ரல் 2007 இறுதியில் உயர்ந்தது.

தேவை – இழுப்பு பணவீக்கமும், செலவு–உந்து பணவீக்கமும்

i) தேவை–இழுப்புப் பணவீக்கம்

எப்பொழுதுமே தேவை, அளிப்பு ஆகியன பணவீக்கத்தைத் தீர்மானிப்பதில் முக்கியமான பங்கு வகிக்கின்றன. அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பண்டங்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது. இது தேவை–இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

தேவை–இழுப்புப் பணவீக்கம்

அதிக அளவு பணம், குறைந்த அளவு பண்டங்களைத் துரத்துதல்

ii) செலவு–உந்து பணவீக்கம்

உற்பத்தியில் மூலப்பொருட்கள், இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்றது பொழுது உற்பத்திச் செலவு கூடி பண்டங்களுக்கான விலை அதிகரிக்கின்றது. இவ்வகை பணவீக்கம் செலவு–உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

கூலி–விலை சுழல்

கூலி–விலை சுழல் மூலம் கூலி உயர்வுக்கும் பணவீக்கத்திற்கும் இடையேயான காரண–விளைவு உறவு விளக்கப்படுகிறது. கூலி உயரும் பொழுது செலவிடத்தகுந்த வருமானம் உயருகிறது; இதனால் பண்டங்களுக்கான தேவை உயருகின்றது; தொடர்ந்து பண்டங்களுக்கான விலையும் உயருகின்றது; இதன் விளைவாக பணவீக்கம் ஏற்படுகிறது; விலைவாசி உயர்வின் காரணமாகத் தொழிலாளர்கள் கூலி உயர்வினைக் கோருவார்கள்; இது உற்பத்திச் செலவினை மீண்டும் உயர்த்தி பண்டங்களின் விலையை மீண்டும் மேல்நோக்கி உயர்த்தத் தூண்டும் ஒரு சுழலை ஏற்படுத்துகிறது.

ii) இதர காரணிகள் (தூண்டும் அடிப்படையில்)

i) **காகிதப் பணவீக்கம்** (Currency Inflation)

அளவுக்கு அதிகமான காகிதப் பணத்தை மையவங்கி பயன்பாட்டிற்கு விடுவிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வு காகிதப் பணவீக்கம் எனப்படுகிறது.

ii) **கடன்பண பணவீக்கம்** (Credit Inflation)

வணிக வங்கிகள் தாராளமாகக் கடனை அளிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வினைக் கடன்பண பணவீக்கம் ஆகும்.

iii) **வரவு–செலவுப் பற்றாக்குறைத் தூண்டல் பணவீக்கம்** (Deficit Induced Inflation)

வரவு–செலவுத் திட்டத்தினால் ஏற்படும் பற்றாக்குறையைச் (Budget Deficit) சரிசெய்யும் நிதியாக்க முறைகளில் ஒன்றாக, மையவங்கி மூலம் கூடுதல் காகிதப்பணத்தினை அச்சிட்டுப் பயன்பாட்டிற்கு விடப்படுகிறது. இக்கூடுதல் பணத்தினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை வரவு–செலவுப் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

iv) **இலாபத் தூண்டல் பணவீக்கம்** (Profit Induced Inflation)

அதிக இலாபத்தினைப் பெறும் நோக்கில் பண்டங்களின் விலையில் உயர் இலாப விகித்தை சேர்ப்பதால் பண்டங்களின் விலை அதிகரிக்கின்றது. இதுவே இலாபத் தூண்டல் பணவீக்கம் ஆகும்.

v) **பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம்** (Scarcity Induced Inflation)

வேளாண்மை முதலான துறைகளில் இயற்கை இடர்ப்பாடுகளாலும், இதர காரணங்களாலும் உற்பத்தி பாதிக்கப்படும்பொழுது பொருள் பற்றாக்குறை ஏற்படும். மேலும், பதுக்கல் நடவடிக்கையினாலும் கருப்புச் அங்காடியினாலும் பொருள் பற்றாக்குறை ஏற்படும். இப்பற்றாக்குறைகளினால் ஏற்படும் விலைவாசி உயர்வினைப் பொருள் பற்றாக்குறைத் தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

vi) **வரித் தூண்டல் பணவீக்கம்** (Tax Induced Inflation)

மறைமுக வரிகளான கலால்வரி, சுங்கவரி, விற்பனைவரி ஆகியவற்றில் ஏற்படும் உயர்வு காரணமாக விலைவாசி உயர்ந்து செல்வது வரி தூண்டல் பணவீக்கம் எனப்படுகிறது. எடுத்துக்காட்டாக பெட்ரோல், டீசல் பொருட்கள் மீதான வரி உயர்வு பணவீக்கத்தைத் தூண்டுகிறது. இவ்வகையான பணவீக்கத்தை வரிவீக்கம் (Taxflation) எனவும் அழைக்கிறோம்.

5.5.3 பணவீக்கத்திற்கான காரணங்கள்

இந்தியாவில் பல்வேறு காரணங்களால் பணவீக்கம் ஏற்படுகிறது. அது ஏற்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

12-Economics-Tamil-Chapter_5.indd 100 12-01-2023 10:10:35

i) பண அளிப்பு உயர்வு

காகிதப் பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது. பெயரளவு பண அளிப்பு (nominal money supply) உயர்வு பணவீக்கத்தை அதிகரிக்கின்றது.

ii) செலவிடத் தகுந்த வருமான (Disposable Income) உயர்வு

மக்களின் செலவிடத் தகுந்த வருமானம் அதிகரிக்கும்பொழுது அவை பண்டங்கள், பணிகளுக்கான தேவையைத் தூண்டுகின்றன. செலவிடத் தகுந்த வருவாய் உயர்வு, நாட்டு வருமானம் அதிகரிப்பினாலோ வரிவிகிதக் குறைப்பினாலோ ஏற்படும். இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படும்.

iii) உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்

வளர்ச்சித் திட்டங்கள் சமுதாய நலத் திட்டங்கள் ஆகியவற்றை அமல்படுத்துதல் அரசின் செயல்பாடுகள் விரிவடைந்து வருவதால் பொதுச் செலவுகளின் அளவு கூடி வருகிறது. இதன் காரணமாகவும் பணவீக்கம் ஏற்படுகிறது.

iv) நுகர்வோர் செலவு அதிகரித்தல்

தவணைக் கொள்முதல் முறைகளும் கடன் கொள்முதல் முறைகளும் அமல்படுத்தப்படுவதால் நுகர்ச்சிப் பண்டங்கள், பணிகளுக்கான தேவை அதிகரித்து அதன் காரணமாக விலைவாசி அதிகமாகி பணவீக்கம் ஏற்படுகிறது.

v) மலிவுப் பணக் கொள்கை (Cheap Money Policy)

மைய வங்கியின் மலிவுப் பணக்கொள்கை பொருளாதாரத்தில் கடன் அளவை அதிகப்படுத்தும். இக்கடன் அதிகரிப்பு, பண்டங்கள் பணிகளுக்கான தேவையை உயர்த்துவதால் ஏற்படும் விலைவாசி உயர்வு பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது.

vi) பற்றாக்குறை நிதியாக்கம்

தொடர்ந்து பொதுச் செலவுகள் கூடிவருவதால், அரசின் வரவு–செலவு திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது. இப்பற்றாக்குறையை ஈடு செய்ய கடன் வாங்குதல், புதிய காகிதப் பணம் அச்சடித்தல் என பற்றாக்குறை நிதியாக்க முறைகளில் அரசு ஈடுபடுகிறது. இதன் விளைவாக தொகு அளிப்பைவிட தொகு தேவையின் அளவு அதிகரித்து, விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

vii) கணக்கில் காட்டப்படாத சொத்துகள், நடவடிக்கைகள், கறுப்புப் பணம் ஆகியன

இலஞ்சம், வரிஏய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கறுப்புப் பணமும் கணக்கில் காட்டப்படாத சொத்துகள் உருவாகின்றன. மேற்கண்ட நடவடிக்கையில் ஈடுபடுவோர் பகட்டாகச் செலவு செய்வதால் தொகு தேவை அதிகரிக்கின்றது. அதே சமயம் கருப்புச் அங்காடியும், பதுக்கலும் தொகு அளிப்பினை குறைக்கின்றது. இவற்றின் காரணமாக விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

viii) பொதுக்கடனை மீளச் செலுத்துதல்

உள்நாட்டில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பொதுக்கடனை அரசு திரும்பச் செலுத்தும்பொழுது மொத்தப் பண அளிப்பில் அதிகரிப்பு ஏற்படுகிறது. இது தொகு தேவையினை அதிகரித்து பணவீக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

12-Economics-Tamil-Chapter_5.indd 101 12-01-2023 10:10:35

ix) ஏற்றுமதி உயர்வு

ஏற்றுமதியை ஊக்கப்படுத்தும் பொழுது உள்நாட்டில் பொருள் அளிப்பு குறைந்து, விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படுகிறது.

5.5.4 பணவீக்கத்தின் விளைவுகள்

பணவீக்கத்தின் விளைவுகள் இரண்டாக வகைப்படுத்தப்படுகின்றன.

1) உற்பத்தியின் மீதான விளைவு.

2) பகிர்வின் மீதான விளைவு.

1) உற்பத்தியின் மீதான விளைவுகள்

மிதமான பணவீக்கம் உற்பத்தியாளார்களுக்கும் வணிகர்களுக்கும் ஒரு ஊக்கக் காரணியாக செயல்படும். மிதமான விலைவாசி உயர்வினால் ஏற்படும் இலாபத்தினால் தூண்டப்பட்டு உற்பத்தி மீதும் வணிகத்தின் மீதுமான முதலீடுகள் அதிகரிக்கும். தொடர்ந்து வேலைவாய்ப்பும் வருமானமும் அதிகரிக்கும். ஆனால், மேற்சொன்ன கூற்றுகள் உற்பத்திக் காரணிகள் முழுவேலைவாய்ப்பை எய்தாத நிலையில் மட்டுமே சரியாக இருக்கும்.

i) அதேசமயம் உயர் பணவீக்கம் பணத்தின் மதிப்பினைக் குறைப்பதன் மூலம், மக்களின் சேமிப்பைக் குறைக்கும்.

ii) பணவீக்கத்தின் காரணமாக பணத்தின் மதிப்பு குறிப்பிடத் தகுந்த அளவு குறைவதால் நாட்டில் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் வெளிநாட்டு மூலதனங்கள் திரும்பிச் செல்லும்.

iii) மேற்கண்ட நடடிக்கையின் காரணமாக மூலதனத் திரட்சி குறையும். இது புதிய முதலீட்டில் பின்னடைவை ஏற்படுத்தி நாட்டின் உற்பத்தியின்மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். தொழில் முனைவோர், வணிகர்களின் இடர் ஏற்றல் பணியினை ஊக்கமிழக்கச் செய்வதாக அமையும்.

iv) பதுக்கல்காரர்களும் நுகர்வோரும் பண்டங்களை பதுக்கி வைக்கப் பணவீக்கம் காரணமாக அமைகிறது. இது தொடர்ந்து, உயர் பணவீக்கத்திற்கு வழிவகுக்கிறது.

v) பணவீக்கமானது பொருள் உற்பத்தியை அதிகரிப்பதைவிட, ஊக வணிக செயல்பாடுகளை அதிகரிக்கின்றது. ஊக வணிக என்பது இலாப நோக்கில் பங்குகள் அல்லது பொருட்கள் விலை குறையும் என காத்திருந்து, அது குறையும்பொழுது வாங்கி விலை அதிகரிக்கும்பொழுது விற்பனை செய்வது ஆகும். இதனால் நிகர உற்பத்தியோ, நிகர வேலைவாய்ப்போ அதிகரிப்பதில்லை.

2) பகிர்வின் மீதான விளைவுகள்

நாட்டு வருமானப் பகிர்வில் உள்ள பல்வேறு தரப்பினரையும் பணவீக்கம் பல்வேறு வகையில் பாதிக்கின்றது. அவைகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. கடன் பெற்றோர் கடன் வழங்கியோர்

பணவீக்கக் காலத்தில் கடன் பெற்றோர் ஆதாயமும், கடன் வழங்கியோர் இழப்பையும் சந்திக்கின்றனர். எவ்வாறெனில், கடன் வாங்கியபொழுது பணமதிப்பு உயர்வாகவும், பணவீக்கக் காலத்தில் திருப்பிச் செலுத்தும் பொழுது பணமதிப்புக் குறைவாக இருப்பதனால் கடன் வாங்கியோர் ஆதாயம் பெறுகிறார். இதே காரணத்தால் கடன் வழங்கியோர் கூடுதலான பண மதிப்பு இருக்கும்பொழுது கடன் வழங்கி, பணவீக்கக் காலத்தில் குறைந்த பண மதிப்பில் பணத்தை மீளப் பெறும்பொழுது இழப்பு ஏற்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_5.indd 102 12-01-2023 10:10:36

ii) நிலையான வருமானப் பிரிவினர்

நிலையான வருமானம் உடைய பிரிவினர் பணவீக்கத்தினால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் ஏனெனில், விலைவாசி உயர்வினால் ஏற்படும் வாழ்க்கைச் செலவு உயர்வுடன், நிலையான வருமானம் பொருந்திச் செல்வதில்லை. (எ.கா) ஒரே மாதிரியான மாதச் சம்பளம் அல்லது கூலி பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர், வட்டி பெறுவோர், வாடகை பெறுவோர் ஆகியோர் மிகவும் பாதிக்கப்படுவா.

iii) தொழில் முனைவோர்கள்

உற்பத்தியாளர், வணிகர் என தொழில் முனைவோர் போன்று எவ்வகையானவராக இருந்தாலும், அவர்களுக்குப் பணவீக்கம் ஒரு வரமாகும். ஏனெனில், பணவீக்கம் அவர்களுக்கு ஒரு ஊக்க சக்தியாக விளங்குகிறது. கிடங்கில் இருக்கும் பண்ட இருப்புக்களின் விலையேற்றத்தால் அவர்களுக்கு எதிர்பாரா ஆதாயம் (Windfall gian) கிடைக்கும்.

iv) முதலீட்டாளர்கள்

கடன் பத்திரங்களில் முதலீடு செய்தோர் நிலையான வட்டியைப் பெறுவதால் அவர்கள் பணவீக்கக் காலத்தில் இழப்பினைச் சந்திப்பார்கள். மாறாக, பங்கு முதலீட்டாளர்கள் நல்ல இலாப ஈவு மற்றும் பங்கு மதிப்பேற்றம் ஆகிய ஆதாயங்களை பெறுவார்கள்.

5.5.5 பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

கீன்சும் மில்டன் ப்ரீட்மேன் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கருத்துகளின் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம் என்கின்றனர். அவை

1) பணவியல் முறைகள்;

2) நிதியியல் முறைகள்; (J.M. கீன்சு);

3) இதர முறைகள்

1. பணவியல் முறைகள்

பணவியல் முறைகள் நாட்டின் மைய வங்கியினால் அமல்படுத்தப்படும் முறையாகும். அவை:

i) வங்கி விகிதத்தை உயர்த்துதல்,

ii) வெளிச்அங்காடியில் அரசுப் பத்திரங்களை விற்றல்,

iii) ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துதல் சட்டபடியான நீர்மை விகிதத்தை உயர்த்துதல்,

iv) நுகர்வோர் கடனைக் கட்டுப்படுத்துதல்,

v) கடன் விளிம்பு நிலையினை உயர்த்துதல்,

vi) மீள் வாங்கல் விகிதம் (Repo Rate) மற்றும் திருப்ப மீள் வாங்கல் விகிதம் (Reverse Repo Rate) ஆகியவற்றினை உயர்த்துதல் ஆகும்.

2. நிதியியல் நடவடிக்கைகள்

பணவீக்கச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதில் நிதிக் கொள்கையும் அதன் கருவிகளும் முக்கிய பங்கு வகிப்பது உணரப்பட்டுள்ளது. பணவீக்கத்திற்கு எதிரான நிதியியல் நடவடிக்கைகளாவன அரசு செலவினங்களைக் குறைப்பது, பொதுமக்களிடமிருந்து கடன்களைப் பெறுவது வரிவிதிப்புகளை விரிவாக்குவது.

3. இதர நடவடிக்கைகள்

இதர நடவடிக்கைகள் குறுகியகால நடவடிக்கைகள், நீண்டகால நடவடிக்கைகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

i) குறுகியகால நடவடிவக்கைகள்

குறுகியகால நடவடிக்கையாகப் பொதுவிநியோக முறையின்கீழ் நியாயவிலை கடைகளில் இன்றியமையாப் பண்டங்களைப் பங்கீடு செய்து வழங்குதல் ஆகும். இந்தியாவில் எப்பொழுதெல்லாம் இன்றியமையாப் பண்டங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அவற்றை இறக்குமதி செய்து விலையேற்றம் ஏற்படா வண்ணம் தடுக்கப்படுகிறது.

ii) நீண்டகால நடடிவக்கைகள்

நீண்டகால நடவடிக்கையாகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுத்துவது, குறிப்பாக பொதுவிலைமட்டத்துடனும் வாழ்க்கைச் செலவுடனும் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும் கூலிப் பண்டங்களின் உற்பத்தியின் வளர்ச்சியை துரிதப்படுத்துவது ஆகும். நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கினில் சேமிப்பு–முதலீடுகளை மேம்படுத்தும் விதமாக நடப்பிலுள்ள சில நுகர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதலும் உள்ளடங்கும்.

5.6 பணவாட்டம், மீள்பணவீக்கம் மற்றும் தேக்கவீக்கம்

பணவாட்டம் (Deflation)

விலைவாசி குறைதல், குறைந்த பண அளிப்பு, வேலைவாய்ப்பின்மை ஆகியன பணவாட்டத்தின் முக்கியமான இயல்புகள் ஆகும். பணவாட்டத்தின் போது விலைவாசி குறைதல் என்பது நுகர்வோருக்கு விரும்பத்தகுந்த ஒன்றாக இருந்தாலும், அக்குறைவு உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் குறைக்கும் அளவுக்கு இருக்கக் கூடாது. முழுவேலைவாய்ப்புள்ள நிலையில் விலைவாசி குறைந்தால் அது வருமானத்திலும் வேலைவாய்ப்பில் விரும்பத்தகாக விளைவினை ஏற்படுத்தும்.

மீள்பணவீக்கம் (Disinflation)

வேலைவாய்ப்பினைப் பாதிக்காத வகையில் கடன்களை (வங்கிக் கடன், தவணைமுறை கொள்முதல் முறைகளை) கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினைக் குறைத்து வருவது மீள்பணவீக்கம் ஆகும். மீள் பணவீக்கம் என்பதனைப் பின்வருமாறு வரையறுக்கலாம்: "வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தைத் திருப்பும் செயல்முறையே மீள்பணவீக்கம் ஆகும்".

தேக்கவீக்கம் (Stagflation)

தேக்கவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்தச் சூழ்நிலை ஆகும்.

5.7 வணிகச் சுழல் (Business Cycle)

ஒரு முதலாளித்துவ அமைப்பு முறையில் பொருளாதார நடவடிக்கைகள் ஏற்ற இறக்கங்களுடனேயே இருக்கும். சீரான கால இடைவெளியில் அமையும் இவ்வகை ஏற்ற இறக்கங்கள் வணிகச் சுழல் (Trade Cycle) தொழில் ஏற்ற இறக்கங்கள் (Industrial Fluctuations) என்றழைக்கப்படுகிறது.

5.7.1 வணிகச் சுழல் சுழற்சியின் பொருள்

வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த

பொருளாதார நடவடிக்கைளில் (Aggregate economic activities) ஏற்படும் அலைவுகளே வணிகச் சுழற்சி அல்லது வணிகச் சுழல் என குறிப்பிடப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைளுக்கு ஊக்கமளிக்கும் கூறுகளில் ஏற்படும் உள்ளார்ந்த சுருக்கம், விரிவாக்கத்தினால் வணிகச் சுழற்சி ஏற்படுகிறது. இச்சுழற்சிகளின் பண்புகளாவன: குறிப்பிட்ட கால இடைவெளியில் வருபவை, மாறுபட்ட தீவிரத் தன்மை கொண்டவை, அதன் செயலாக்க எல்லைகள் மாறுபட்டவை.

இலக்கணம்

"உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் விழுக்காட்டையும் கொண்ட நல்ல வணிகக் காலங்களையும்; குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட சதவிகிதத்தையும் கொண்ட கெட்ட வணிகக் காலங்களையும் உள்ளடக்கியது வணிகச் சூழல் ஆகும்".

– J.M. கீன்சு

5.7.2 வணிகச் சுழற்சியின் கட்டங்கள்



வரைபடம் 5.3

வணிகச் சுழற்சியினை உற்று நோக்கும்பொழுது அதனுடைய நான்கு கட்டங்கள் வெளிப்படும். அவைகள் முறையே i) பூரிப்பு, ii) பின்னிறக்கம், iii) மந்தம், iv) மீட்சி எனப்படுகின்றன. வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை **வரைபடம்** 5.3 தெளிவாகக் காட்டுகின்றது.

i) பூரிப்பு கட்டம் (Boom)

நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடடிவக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையைத் தாண்டுவது வணிகச் சுழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது. இக்காலகட்டத்தில பண்டங்கள் உற்பத்தி, பணக்கூலி, இலாபம், வட்டி விகிதங்கள் உயரும். வங்கிக் கடன் தேவைகள் உயரும். பொதுவாக அனைத்து தரப்பினரிடமும் நம்பிக்கைகள் உயரும். வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை (Boom) தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

ii) பின்னிறக்கம் (Recession)

வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கித் திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடடிவக்கைகள் பின்னோக்கி திரும்புவதைப் பின்னிறக்கம் என்கிறோம். இக்கட்டத்தில் உற்பத்தி, பணக் கூலி, இலாபம் வட்டி விகிதம் ஆகியன குறையத் துவங்கும். நிறுவனங்கள் தோல்வியடையத் துவங்கும். வணிகர்கள் தாங்கள் அகலக்கால் வைத்து வணிகத்தை விரிவாக்கிவிட்டதை உணர்வார்கள். நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்குக் குறைக்க ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியின்

12-Economics-Tamil-Chapter_5.indd 105 12-01-2023 10:10:36

காரணமாக பெரும் அச்சம் உருவாகும். வணிக நடடிவக்கைகள் சுணக்கமடையும். மக்களின் நீர்மைவிருப்பம் அதிகரித்து பணத்தை ரொக்கமாக கையில் வைத்துக்கொள்ள விரும்புவதால் பணச்அங்காடி நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

iii) மந்தம் (Depression)

வணிகச்சுழலின் மூன்றாவது கட்டமான மந்தகாலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்குகீழ் மிகத்தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலைவாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும். வட்டி, இலாபம் கூலி ஆகியன மிகக் குறைந்த அளவில் இருக்கும். உழவர்களும், கூலிவேலை செய்வோரும் அதிக பாதிப்புக்குள்ளாவார்கள். வணிகர்களுக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் தயக்கம் காட்டும். வணிகச் சுழற்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடையும். மந்தத்தின் கீழ் நிலை "தொட்டி" (Trough) என அழைக்கப்படுகிறது. எவ்வாறு ஒருவர் மிக ஆழமான தொட்டிக்குள் தவறி விழுந்துவிட்டால் பிறர் உதவியின்றி எளிதில் அவரால் மீள முடியாதோ, அதுபோல பொருளாதார நடடிவக்கைள் மந்த நிலையின் ஆழத்தில் விழுந்துவிட்டால், வெளியார் உதவியின்றி தானே மீள இயலாத நிலையைக் குறிக்க "தொட்டி" எனும் கருத்து பயன்படுத்தப்படுகிறது.

iv) மீட்சி (Recovery or Revival)

மந்த நிலைக்குப்பின் மீட்சி இடம்பெறுகிறது. இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். முதலில், மூலதனபொருட்களுக்கான தேவை மீட்சி பெறுவதில் துவங்குகிறது. அரசால் செய்யப்படும் தன்னிச்சை முதலீடுகள் (Autonomous Investments) பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன. அம்முதலீடுகள் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் பண்டங்களுக்கான தேவையை மெதுவாக உயர்த்துகிறது. கிடங்குகளில் தேக்கமடைந்த பண்டங்கள் காலியாக துவங்குகிறது. இதனால், தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து, பொருளாதார நடடிவக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

தொகுப்புரை

பணம் மத்திய வங்கியாலும் நாணயங்கள் மத்திய அரசாலும் வெளியிடப்படுகின்றன. வங்கி வைப்புகள் வணிக, கூட்டுறவு வங்கிகளால் ஏற்படுத்தப்படுகின்றது. பணத்தின் தேவையானது பல்வேறு காரணிகளாகிய வருமானம், விலை மட்டம், வட்டி வீதம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. பணத்தின் தேவையானது பல்வேறு காரணிகளாகிய வருமானம். விலை மட்டம். வட்டிவீதம் முதலானவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.

கலைச்சொற்கள்

- **பண்டமாற்று முறை:** பணம் இல்லாமல் ஒரு பண்டம் பணியை கொடுத்து மற்றொரு பொருள் அல்லது பணியை பெற்றுக்கொள்ளும் பரிமாற்றத்தில் ஈடுபடுவது

12-Economics-Tamil-Chapter_5.indd 106 12-01-2023 10:10:36

- **பணம்:** பரிமாற்றங்களில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவி
- **பணஅளிப்பு:** ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பொருளாதாரத்தில் இருக்கும் பண அளவு (M).
- **பணவீக்கம்:** தொடர்ச்சியான விலைமட்ட உயர்வு
- **பண வாட்டம்:** சராசரி விலைமட்டம் குறைந்து வேலைவாய்ப்பின்மை நிலவும் நிலை; பணவீக்கத்திற்கு எதிரானது
- **மீள்பணவீக்கம்:** வேலைவாய்ப்பினைப் பாதிக்காத வகையில் கடன்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தைக் குறைப்பதாகும்
- **தேக்கவீக்கம்:** பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலை வாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை
- **வணிகச் சுழல் :** குறிப்பிட்ட காலகட்டத்திற்கு ஒருமுறை நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள்
- **மீட்சி:** மந்தநிலையிலிருந்த பொருளாதார நடடிவக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வு
- **குறுகிய பணம்:** M_1, M_2 ஆகிய இரண்டும் சேர்ந்தது.

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) டில்லி
ஆ) சென்னை
இ) மும்பை
ஈ) பெங்களுரு

2. பணம் என்பது

அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக்கொள்ளளப்படுவது
ஆ) நிலையான வாங்கும் சக்தியைக் கொண்டது
இ) அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்.
ஈ) வளங்களைப் பங்கிட்டுக்கொள்ளத் தேவைப்படுகிறது.

3. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது

அ) மைய பணவியல் அமைப்பு
ஆ) மாநில அரசு
இ) மைய அரசு
ஈ) வங்கிகள்

4. M1, M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வேறுபாடு

அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்
ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
இ) வங்கியின் கால வைப்புகள்
ஈ) காகிதப்பணம்

5. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு

அ) 1908 ஆ) 1910
இ) 1911 ஈ) 1914

6. MV என்பது

அ) பணத் தேவை

ஆ) சட்டப்படியான பண அளிப்பு

இ) வங்கிப் பண அளிப்பு

ஈ) மொத்த பண அளிப்பு

7. பணவீக்கம் என்பது

அ) விலைகள் அதிகரிப்பு

ஆ) விலைகள் குறைதல்

இ) பணமதிப்பு அதிகரிப்பு

ஈ) விலைகள் மாறாதிருத்தல்

8. ________________ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்புக் குறைவினை ஏற்படுத்துகிறது.

அ) தவழும்

ஆ) நடக்கும்

இ) ஓடும்

ஈ) உயர்

9. கூலியும் மூலப்பொருட்கள் செலவும் கூடுவதால் பண்டங்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது ___________ பணவீக்கம் ஆகும்

அ) செலவு உந்து

ஆ) தேவை இழுப்பு

இ) ஓடும்

ஈ) தாவும்

10. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?

அ) கடன் பெற்றோர்கள்

ஆ) கடன் வழங்கியோர்

இ) கூலி, சம்பளம் ஆகியன பெறுவோர்

ஈ) அரசு

11. ________________ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

அ) எதிர் பணவீக்கம்

ஆ) பணவாட்டம்

இ) தேக்கவீக்கம்

ஈ) மந்தம்

12. தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது

அ) தேக்கம்

ஆ) வேலைவாய்ப்பு

இ) உற்பத்தி

ஈ) விலை

13. பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ________________ அழைக்கின்றோம்.

அ) பூரிப்பு

ஆ) பின்னிறக்கம்

இ) மீட்சி

ஈ) வணிகச்சுழற்சி

14. மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்

அ) உயர்ந்தபட்சமாக

ஆ) மிக மோசமாக

இ) மிக குறைந்தபட்சமாக

ஈ) மிக நல்லநிலையில்

15. "பரிமாற்றங்களில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக்கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்" என்ற இலக்கணத்தை வழங்கியவர்

அ) கிரௌதர்

ஆ) பிகு

இ) வாக்கர்

ஈ)பிரான்சிஸ்டி பேக்கான்

12-Economics-Tamil-Chapter_5.indd 108 12-01-2023 10:10:36

16. பற்று அட்டை என்பது _______________ எடுத்துக்காட்டு ஆகும்.

அ) கட்டளைப்பண

ஆ) காகிதப்பண

இ) நெகழிப் பண

ஈ) கடன் பண

17. ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்தப் பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

அ) மதிப்பளவு

ஆ) மதிப்பின் நிலைக்கலன்

இ) பரிமாற்றக் கருவி

ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

18. MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது

அ) வணிகத்தின் அளவு

ஆ) பணத்தின் சுழற்சி வேகம்

இ) ரொக்கப் பணத்தின் அளவு

ஈ) வங்கி, கடன் பணஅளவு

19. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது ஏற்படுவது

அ) தாவும் பணவீக்கம்

ஆ) மிதமான பணவீக்கம்

இ) உயர் பணவீக்கம்

ஈ) பணவாட்டம்

20. _________________ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும் பாதிக்காது.

அ) நடக்கும்

ஆ) ஓடும்

இ) தவழும்

ஈ) தாவும்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
இ	இ	அ	ஆ	இ	ஆ	அ	ஈ	அ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	அ	ஈ	இ	அ	இ	இ	ஆ	ஆ	இ

பகுதி – ஆ.

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதிலளிக்கவும்.

21. பணத்தின் இலக்கணம் வரைக.
22. பண்டமாற்று என்றால் என்ன?
23. பண்டப்பணம் என்றால் என்ன?
24. பொன் திட்டம் என்றால் என்ன?
25. நெகிழிப் பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
26. பணவீக்கம் என்பதன் இலக்கணம் தருக.
27. தேக்கவீக்கம் என்றால் என்ன?

பகுதி – இ.

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி.

28. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.
29. பண அளிப்பு என்றால் என்ன?
30. பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
31. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.
32. தேவை–இழுப்புப் பணவீக்கம் செலவு உந்து பணவீக்கம் ஆகியவற்றை விளக்குக.
33. பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.
34. மீள்பணவீக்கம் பற்றி விளக்குக?

பகுதி – ஈ.

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளி.

35. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.
36. பணத்தின் பணிகளை விளக்குக.
37. ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள், விளைகள் யாவை?
38. வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

செய்முறை

1. ஏதாவது ஒரு பொதுத்துறை அல்லது தனியார்துறை வங்கிக்குச் சென்று அங்கு திரட்டப்படும் நடப்பு வைப்புகள், சேமிப்பு வைப்புகள், நிலை வைப்புகள், வட்டி விகிதங்கள் மற்றும் வாடிக்கையாளார்களுக்கு வழங்கப்படும் இதர வசதிகளை அறிந்துவர மாணாவர்களைக் கேட்டுக்கொள்ளவும்.

2. பழங்கால நாணயங்கள், இந்திய நாணயங்கள், வெளிநாட்டு நாணயங்கள், காகிதப்பணம் ஆகியவற்றினைச் சேகரிக்க மாணவர்களிடம் கூறவும்.

பார்வை நூல்கள்

1. Ahuja, H L, (2010),"Modern Economics", 15th Revised Edition, S. Chand & Company Ltd., New Delhi.
2. Gaurav Datt & Ashwani Mahajan (2018), "Indian Economy", S.Chand and Company Limited, New Delhi – 110055
3. Gupta R.D. (1984), "Keynes Post – Keynesian Economics", Kalyani Publishers, Ludhiana – 8.
4. Jhingan M.L. (2008), "Monetary Economics", Vrinda Publication (P) Ltd., Delhi–32.
5. Sankaran S. (2018), "Macro Economics", Margham Publications, Chennai – 17.
6. Seth M.L. (2012), "Monetary Economics", Lakshmi Narayani Agarwal Publication, Agra.
7. Sudesh kumar 92009), Dictionary of Economics, Sahni Publications, New Delhi – 7.
8. Sundaram K.P.M. (2011), "Money, Banking,Trade and Finance". Sultan Chand & Sons Publishers, New Delhi – 2.N

12-Economics-Tamil-Chapter_5.indd 110 12-01-2023 10:10:36

இயல் 6

வங்கியியல்

"வணிக வங்கிகள் வாணிபத்திற்கான குறுகியகால கடனை அளித்தல், மற்றும் கடன் உருவாக்கம் செய்யும் நிறுவனங்கள் ஆகும்"

– கல்பர்ட்சன் (Culbertson)

புரிதலின் நோக்கங்கள்

1. மையவங்கி மற்றும் வணிக வங்கிகளின் பணிகள்
2. வங்கி சாரா நிதி நிறுவனங்களின் பணிகளைப் புரிந்துகொள்ளல்.

6.1 அறிமுகம் (Introduction)

பொருளாதார நடவடிக்கைளான வணிகம், வேளாண்மை ஆகியவற்றிற்குத் தேவைப்படும் நிதி உயிர்வாழ இரத்தம் தேவைப்படுவதைப் முதலானது. வங்கிகள் வைப்புகளை ஏற்றுக் கொள்ளுதல், கடன்களை வழங்குதல் ஆகிய அடிப்படை நிதிநடடிவக்கைகளை மேற்கொள்கின்றன. புதிய வணிகத்தின் முதுகெலும்பாக வங்கித்துறை செயல்படுகிறது. நாட்டின் மேம்பாட்டிற்கு வங்கியமைப்பு மிகமுக்கிய பங்களிப்பினைச் செய்துவருகிறது. நாடுகளில் நிதிநிலைத் தன்மையைக் கருத்திற்கொண்டு வங்கிகளின் செயல்பாடுகள் நெறிப்படுத்தப்படுகின்றன.

6.2 மைய வங்கியின் தோற்ற வரலாறு (History of Central Bank)

1157 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட வெனிசு வங்கியே உலகின் முதல் கடன் நிதி வழங்கும் வங்கியாகும். 1656–இல் நிறுவப்பட்ட ஒரு தனியார் வங்கியிலிருந்து தோன்றியதுதான் உலகின் முதல் மைய வங்கியான ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி. இம்மைய வங்கி 1897–ஆம் ஆண்டு பணத்தை வெளியிடுவதற்கான முழு உரிமையைப் பெற்றது. இங்கிலாந்து வங்கி 1694 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. ஆனால், வங்கிக் கலையின் அடிப்படையில் 1864இல் தோற்றுவிக்கப்பட்டு பணத்தை வெளியிட்ட முதல் மைய வங்கி இங்கிலாந்து வங்கியாகும் (Bank of England).

1920–ஆம் ஆண்டு பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டப்பட்ட பன்னாட்டு நிதிய மாநாட்டில் (International Finance Conference) எடுக்கப்பட்ட

12-Economics-Tamil-Chapter_6.indd 111 12-01-2023 10:13:39

முடிவின் அடிப்படையில் 1921 முதல் 1954–ஆம் ஆண்டுவரையான காலகட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் மையவங்கி அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன. தென் ஆப்பிரிக்க ரிசர்வ் வங்கி (1921), சீன மைய வங்கி (1928), நியூசிலாந்து ரிசர்வ் வங்கி (1934), இந்திய ரிசர்வ் வங்கி (1934), சிலோன் மைய வங்கி (1950), இஸ்ரேல் மைய வங்கி (1954) முதலானவை அந்தந்த நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட மைய வங்கிகளில் சில.

இந்திய வங்கிகளின் வரலாறு

❖ இந்துஸ்தான் வங்கி (Bank of Hindustan) இந்தியாவின் முதல் வங்கி (1770) (வெள்ளையர் ஆட்சியில்)

❖ இந்தியாவில் உள்ள வங்கிகள் அமைப்பு பிரசிடென்சி வங்கிகளால் (Presidency Banks) கட்டுப்படுத்தப்பட்டும் ஆதிக்கம் செலுத்தப்பட்டும் வந்தது.

மூன்று பிரசிடென்சி வங்கிகள் இருந்தன

1. வங்காள வங்கி (Bank of Bengal) (1806)
2. மும்பை வங்கி (Bank of Bombay) (1840)
3. சென்னை வங்கி (Bank of Madras) (1843)

இவைகள் பிரசிடென்சி வங்கிகள் என்று அழைக்கப்பட்டன.

எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்டன (1921) → இந்திய இம்பீரியல் வங்கி (Imperial Bank of India) → மாற்றப்பட்டது (1955) → இந்திய ஸ்டேட் வங்கி (State Bank of India SBI)

6.3 வணிக வங்கிகள் (Commercial Banks)

வணிக வங்கிகள் மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, பேரளவில் உற்பத்தி செய்வோர், பெரிய நிறுவனங்களுக்கும், நடுத்தர நிறுவனங்களுக்கும் கடனை அளிக்கும் ஒரு நிதி அமைப்பு ஆகும். நீர்மைத்தன்மையைத் தக்கவைக்கும் பொருட்டு வணிக வங்கிகள் பெரும்பாலும் நீண்டகாலக் கடன்களை அளிப்பதில்லை.

6.3.1 வணிக வங்கியின் பணிகள் (Functions of Commerical Banks)

வணிக வங்கிகள் இலாப நோக்கம் உடையவை. அதனால் அவைகள் வைப்புகளைப் பெற்று முதலீட்டுக்கான கடன்களை அளிக்கின்றன. வணிக வங்கிகளின் பணிகளை முதன்மைப் பணிகள் மற்றும் இரண்டாம் நிலைப் பணிகள் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தின் மூலம் அவற்றை நாம் அறியலாம்.

வணிக வங்கியின் பணிகள்
- முதன்மைப் பணிகள்
- இரண்டாம் நிலைப் பணிகள்
- இதர பணிகள்

12-Economics-Tamil-Chapter_6.indd 112 12-01-2023 10:13:43



(அ) முதன்மைப் பணிகள் (Primary Functions)

1. வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் (Accepting Deposits)

பொதுமக்களால் செலுத்தப்படும் வைப்புகளை (deposits) ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். இது வங்கி வணிகத்திற்கான முக்கிய நிதியாதாரம் ஆகும். பொது வைப்புகளை இரு வகைகளாகப் பிரிக்கலாம்; அவை முறையே கேட்பு வைப்புகள், கால வைப்புகள் ஆகும்.

(i) **கேட்பு வைப்புகள்** (Demand Deposits) இவை வங்கிகளில் வைப்புகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர் முன்னறிவிப்பின்றி எப்பொழுது வேண்டுமானாலும் பணத்தைத் தனது கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும் ஒரு வைப்பாகும். பணம் பெறும் படிவம், காசோலை, அல்லது தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் மூலம் எப்பொழுது அவருக்குத் தேவைப்படுகிறதோ அப்பொழுது பணத்தை தனது வைப்பிலிருந்து எடுத்துக்கொள்ளலாம். இவ்வகை வைப்புகள் மேலும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வகை வைப்புகள் சேமிப்புக் வங்கிக் கணக்கு (Savings Bank Account) நடப்புக் கணக்கு (Current Account) என இருவகைகளாக வங்கிகளில் நடைமுறையில் உள்ளன.

(ii) **கால வைப்புகள்** (Time Deposits) இவை ஒரு குறிப்பிட்ட காலவரையறை வரை வங்கிகளிடமிருந்து மீளப் பெறப்படாமல் இருக்கும் வைப்புகளாகும். வங்கிகள் கால வைப்புகளுக்கு கூடுதலான வட்டியை வழங்குகின்றன. இவ்வகை வைப்புகளை வங்கிகளிடமிருந்து மீளப்பெற குறிப்பிட்ட கால இடைவெளியும், எழுத்துபூர்வமான முன்னறிவிப்பும் தேவைப்படுகிறது. நிலை வைப்பு (Fixed Deposit) தொடர்வைப்பு (Recurring Deposit) ஆகியன கால வைப்பு வகைகளில் முக்கிய வகைகளாகும்.

2. கடன் வழங்கல் (Lending Loans)

தனி மனிதர்களும் வணிகத்திற்கான கடன்களை வங்கிகள் வழங்குகின்றன. வணிக வங்கிகள் ரொக்கக் கடன், மாற்றுச் சீட்டு தள்ளுபடி, மிகைப்பற்று ஆகிய முறைகளில் கடன்களை வழங்குகின்றன.

(ஆ) இரண்டாம் நிலைப் பணிகள் (Secondary Functions)

இரண்டாம் நிலைப் பணிகளை முகமைப் பணிகள், பொதுப் பயன்பாட்டுப்பணிகள், இதரப் பணிகள் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன.

1. முகமைப்பணிகள் (Agency Function)

வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக (Agent) இருந்து செய்யும் பணிகள் முகமைப்பணிகள் எனப்படுகின்றன.

(i) **காசோலைகளைப் பணமாக்குதல்:** தன் வாடிக்கையாளர்களுக்காக அவர்களுக்கு வரும் காசோலைகள், மாற்றுச் சீட்டுகள் ஆகியவற்றை வங்கிகள் தீர்வகத்தின் மூலம் வசூல் செய்து கொடுக்கின்றன.

(ii) **வருமானத்தைப் பெறுதல்:** வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு வரவேண்டிய இலாப ஈவு, ஓய்வூதியம், சம்பளம், வாடகை, வட்டி ஆகியவற்றினை வசூலித்துத் தருகின்றன. வாடிக்கையாளருக்கான வருமானம் வசூலிக்கப்பட்டதைப் பற்றுச்சீட்டின் மூலம் வங்கிகள் தெரியப்படுத்துகின்றன.

(iii) **செலவுகளைச் செலுத்துகிறது:** வணிக வங்கிகள் வாடிக்கையாளர்களின் பல்வேறு செலுத்துக் கடமைகளைச் செய்கின்றது. தொலைபேசிக் கட்டணம், காப்பீட்டு பிரிமியம், கல்விக் கட்டணம், வாடகை செலுத்துதல் முதலானவற்றை வாடிக்கையாளர்களுக்காகச் செய்கிறது. இச்செலவுகளைச் செய்யும் பொது செலவுச் சீட்டின் மூலம் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றன.

2. பொதுப் பயன்பாட்டுப் பணிகள் (General Utility Functions)

இது வங்கிகள் தன் வாடிக்கையாளர்–களுக்காக சில கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் நோக்கில் செய்யும் பணிகளைப் பொதுப் பயன்பாட்டு பணிகள் என்கிறோம். அவைகள்:

(i) **பாதுகாப்புப் பெட்டக வசதி:** நகைகள், பங்குகள், கடன் பத்திரங்கள் முதலான மதிப்புமிக்க பண்டங்களை பாதுகாக்க, பெட்டக வசதியை வணிக வங்கிகள் தருகின்றன. திருட்டு, இழப்புகளையும் தவிர்க்க இவ்வசதி உதவுகிறது. பெட்டகத்தில் உள்ள பண்டங்களுக்கு வங்கி பொறுப்பல்ல.

(ii) **பயணக் காசோலைகளை வழங்குதல்:** பயணக் காசோலைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டுப் பயணத்தின்போது பணப்பாதுகாப்பினை வழங்குகிறது.

(iii) **அயல்நாட்டுச்செலாவணியைக்கையாளுதல்:** ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் வணிகர்களுக்கு வணிக வங்கிகள் அயல்நாட்டுச் செலாவணி வசதியைச் செய்து தருகின்றன. ஆனால், இதற்காக நாட்டின் மைய வங்கியிடம் வணிகவங்கிகள் உரிய அனுமதியினைப் பெற்றிருக்க வேண்டும்.

3. நிதிமாற்றுதல்: ஒரு வங்கியிலிருந்து மற்ற வங்கிக்கு நிதியை மாற்றுவதாகும். வரைவு காசோலைகள், தொலைபேசி மற்றும் மின்னணு பரிமாற்றங்கள் மூலம் நிதி மாற்றப்படுகிறது.

4. கடன் உறுதியளிப்புக் கடிதம் (Letter of Credit): வாடிக்கையாளரின் கடன் நம்பகத் தன்மையைச் சான்றளிக்கும் விதமாக வணிக வங்கிகள் கடன் உறுதியளிப்பு கடிதங்களை வழங்குகின்றன.

(i). **பத்திரங்களுக்கு எழுத்துறுதி வழங்குதல்** (Under–writing of Securities): வணிக வங்கிகள் மேலும் பத்திரங்களுக்கான எழுத்துறுதி வழங்கும் பணியினை

12-Economics-Tamil-Chapter_6.indd 114 12-01-2023 10:13:44

செய்கிறது. பொதுமக்கள் வங்கிகளின்மீது முழு நம்பிக்கையை வைத்திருப்பதால் அவை எழுத்துறுதி வழங்கிய பத்திரங்களை வாங்குவதில் தயக்கம் ஏதும் இருக்காது.

(ii). **மின்னணு வங்கி:** வணிக வங்கிகள் மின்னணு முறையைப் பின்பற்றுவதால் அவை பற்று அட்டை, கடன் அட்டை, இணைய வங்கி ஆகியவை மூலம் விரைவான பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்ள உதவுகின்றன.

இ) இதர பணிகள் (Other Functions)

(i) பண அளிப்பு

வணிக வங்கியின் முக்கியமான பணிகளில் ஒன்று பணப்புழக்க வேகத்தை அதிகரிப்பதன் மூலம் பண அளிப்பை அதிகரித்தல் ஆகும். எடுத்துக்காட்டாக, வங்கி ஒருவருக்கு ₹5 இலட்சம் கடன் வழங்கும் போது கடன் பெறுபவர் பெயரில் உள்ள கேட்பு வைப்பு கணக்கில் வரவு வைக்கப்படுகின்றது. இங்குப் பணம் ரொக்கமாகச் செலுத்தப்படவில்லை என்பதை கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே அதிகமாக பணம் அச்சடிக்கபடாமல் பண அளிப்பு அதிகரிக்கின்றது.

(ii) கடன் உருவாக்கம்

கடன் உருவாக்கம் வணிக வங்கிகளின் பணிகளில் மிகச் சிறந்த ஒன்றாகும். இது மேற்சொன்ன பண அளிப்பினை அதிகரிக்கும் பணியை ஒட்டி அமைந்ததாகும். கடன் உருவாக்கம் என்பது கடன்களையும், முன்பண அளிப்பினையும் அதிகரிக்கும் ஒரு செயல். மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது கடன் உருவாக்கம் ஆகும்.

(iii) புள்ளிவிவரங்களை திரட்டுதல்

இந்திய ரிசர்வ் வங்கியைப் முதலானே, வணிக வங்கிகளும் வணிகம், தொழில், வேளாண்மை, நிதி முதலான அடிப்படைத் துறைகளின் புள்ளிவிவரங்களை வெளியிடுகின்றன. இவற்றின் அடிப்படையில் தனது வாடிக்கயாளர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் தங்களது ஆலோசனைகளை வணிக வங்கிகள் வழங்குகின்றன.

6.3.2. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க நுட்பம் (The Technique of Credit Creation)

வங்கிகளின் கடன் உருவாக்கம் என்பது மிக முக்கியமான ஒரு செயல் ஆகும். வங்கிக் கடன் என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து, தேவைப்படுவோருக்கு அவர்களின் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின் பேரில் கடனும் முன்பணமும் கொடுப்பது ஆகும். வங்கிகள் வழங்கும் கடன்கள் பொருளாதாரத்தில் நிகர பண அளிப்பினை அதிகப்படுத்தும். சுருக்கமாகச் சொன்னால் வங்கிகளின் கடனளிப்பு பணத்தை உருவாக்கும், அதே கடன்கள் வாங்கியோரால் திருப்பிச் செலுத்தப்படும் பொழுது கூடுதலாக உருவான பணம் மறைந்து போகும். இதை ஒருசிலர் மாயை (illusion) என்றும் கூறுகின்றனர்

வணிக வங்கிகள் கேட்பு வைப்புகளின் அளவை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும். அதிக அளவு கடன்களை அதிகரிக்க முடியும். வணிக வங்கிகள் தங்களின் கடன் அல்லது முன்பணம் அளிக்கும் முறை மூலமாக அல்லது சொத்துகளை வாங்கும் தன்மைகள் மூலமாகவும் தேவை வைப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ

குறைக்கவோ முடிகிறது. இச்சக்தி வங்கிகள் வைப்புகளை புதிய வைப்புகளை உருவாக்குவதன் மூலம் ஏற்படுகிறது. இது எப்படி வாய்க்கும் என்பதைப் பின் வரும் பகுதி நமக்கு விளக்குகிறது. அதற்கு முன்னர் வணிக வங்கிகள் உருவாக்கும் வைப்பு முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதல்நிலை/செயலற்ற வைப்புகளும் பெறப்படும்/செயல்படும் வைப்புகளும்

புதிய வங்கிகளால் உருவாக்கப்படும் வைப்புகள் இருவகைப்படும். அவை முதல்நிலை அல்லது செயலற்ற வைப்புகள் (Primary or Passive Deposits)> பெறப்படும் அல்லது செயல்படும் வைப்புகள் (Derived or Active Deposits) ஆகும்.

ஒரு வாடிக்கையாளர் தனது ரொக்கப் பணத்தினை வங்கியில் செலுத்துகிறார் எனில் அவரது பெயரில் பற்று வைக்கப்படும். இது முதல்நிலை வைப்பு அல்லது செயல்படா வைப்பு என அழைக்கப்படுகிறது.

ஒருவருக்கு வழங்கப்படும் கடன், ரொக்கமாக கையில் கொடுக்கப்படாமல் அவர் கணக்கில் செலுத்தப்படும். இவ்வாறு செலுத்தப்படும் தொகையானது பெறப்பட்ட வைப்பு அல்லது செயல்படும் வைப்பு எனப்படுகிறது.

முதன்மை வைப்புகள்

- முதன்மை வைப்புகளைக் கொண்டே வங்கிகள் கடன்களும் முன்பணங்களும் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றன.
- இ த ற் க ா ன மு ய ற் சி க ளை வாடிக்கையாளர்களே செய்கின்றனர். இதில் வங்கிகளின் பங்கு செயலற்றது.
- எனவே இந்த வைப்புகள் செயலற்ற வைப்புகள் எனப்படுகின்றது.

கடன் உருவாக்கம் என்பது கடன் மற்றும் முன்பண பெருக்கத்தினைக் குறிக்கும். வழங்கப்படும் ஒவ்வொரு கடனும் புதிய வைப்பினை உருவாக்குகிறது. முதல்நிலை வைப்புகளை பெறும் பொழுது அப்பணம் முழுமையுமே வணிக வங்கிகள் கடனாக அளித்திட முடியாது. மைய வங்கி அறிவுறுத்தியிருக்கும் குறைந்தபட்ச விகித அளவுக்குக் குறையாமல் வணிக வங்கிககள் ரொக்க இருப்பாக வைத்திருக்க வேண்டும் .

எடுத்துக்காட்டாக வணிக வங்கிகள் 20 விழுக்காடு பணத்தினை வைத்துக்கொள்ள மைய வங்கி அறிவுறுத்தியிருக்கும். இச்சூழ்நிலையில் கடன் உருவாக்கத்தைப் பற்றி அறிவோம்.

1. வங்கிகள் ரொக்கக் கையிருப்பு விகிதத்தை விட அதிகமாக ரொக்கப் பணம் வைத்திருக்க மாட்டார்கள். அவ்வாறு இருந்தால் அந்தப் பணத்தைக் கடனாக வழங்கி விடுவார்கள்.

2. எல்லா மக்களும் ஒரே நேரத்தில் பணத்தை எடுக்கமாட்டார்கள். அதனால் குறைந்தபட்ச ரொக்கக் கையிருப்பு காலியாகி விடாது.

மேற்கண்ட அடிப்படையில் வணிக வங்கிகளின் கடன் உருவாக்கம் எவ்வாறு நிகழ்கிறது என்பதை எடுத்துக்காட்டுடன் காண்போம். ஒருவர் வங்கியில் ₹1,000த்தை செலுத்துவதாக எடுத்துக்கொள்வோம். அவ்வாறு செலுத்துப்படும் பணம், வாடிக்கையாளரின் கணக்கில் சேர்க்கப்பட்டு முதல்நிலை வைப்பாக இருக்கும். வங்கியின் மொத்தப் பண இருப்பில், அதாவது வங்கியின் ரொக்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் ₹1,000ம் அதிகரிக்கும். இந்த நிலையில் பொருளாதாரத்தில் உள்ள பண அளிப்பு அதிகரிக்காது. ஏனெனில் ரொக்கமாக வங்கியில் செலுத்தப்பட்ட ₹1,000

வாடிக்கையாளரின் வங்கிப்பணமாக உள்ளது.

மைய வங்கியின் அறிவுறுத்தலின்படி 20 விழுக்காடு குறைந்தபட்ச ரொக்க இருப்பான ₹200ஐ இருப்பில் வைக்க வேண்டிய தொகை போக ₹800 வங்கியில் கடன்கொடுக்க தயார் நிலையில் இருக்கும். இரண்டாவது நபர் கடன்கேட்டு விண்ணப்பிக்கும் பொழுது அவருக்கு ₹800 கடனாக அளிக்கப்படும். இங்கு கவனிக்கப்பட வேண்டியது, அவர் கேட்கும் கடன் ரொக்கமாக அளிக்கப்படாமல் அவரது கணக்கில் வைப்பாக வைக்கப்படும். இதுவே தருவிக்கப்பட்ட வைப்பு (Derived Deposit) ஆகும். அவரும், உடனே பணம் முழுவதையும் கணக்கிலிருந்து எடுக்கமாட்டார். அந்த தருவிக்கப்பட்ட வைப்பிலிருந்து ₹800இல் 20 விழுக்காடு போக ₹640 மீண்டும் கடன்கொடுக்க தயார் நிலையில் இருக்கும். மூன்றாவதாக ஒரு நபர், கடன் கேட்டு விண்ணப்பிக்கும்பொழுது, அவருக்கு ₹640ஐ கடனாக வழங்கி அவரது கணக்கில் வைப்பாக அளிப்பார்கள். அந்த தருவிக்கப்பட்ட வைப்பான ₹640இல் குறைந்தபட்ட தொகையான ₹128 போக, ₹512 கடன்வழங்க தயார் நிலையில் இருக்கும். இவ்வாறு புதிய தருவிக்கப்பட்ட வைப்புகளும், கடன் வழங்குதலும் தொடர்ந்து நடைபெறும்.

வணிக வங்கியின் வைப்புகளின் அளவு ₹1000 + 800 + 640 + 512 + ... என்று செல்லும். மொத்த வைப்புகளின் அளவு இறுதியாக ₹5000த்தினை அடையும். எவ்வாறெனில், பண பெருக்கியின் அளவு (Money Multiplier) = 1/20 x 100 = 5 ஆகும். ஆகவே, மொத்த கடன் உருவாக்கம் 1000 x 5 = ₹5000 ஆகும். இந்த கடன் உருவாக்க நடைமுறையின் காரணமாக ₹1000 என்ற வைப்பு ₹5000ஆகப் பெருகுகின்றது என்பதனை அறிந்து கொண்டோம்.

6.3.3. பொருளாதார வளர்ச்சியில் வணிக வங்கிகளின் பங்கு

1. மூலதனத் திரட்சி

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததான மூலதன திரட்சியில் வங்கிகள் முக்கியமான பங்குவகிக்கின்றன. வணிக வங்கியானது தனது வங்கிப் பிரிவுகளின் (branches) கீழ் பரவலாகச் செயல்பட்டு பொதுமக்களின் சேமிப்பை வைப்புகளாகத் திரட்டி அவற்றை உற்பத்தி நோக்கத்திற்காக கடன்களாக வழங்குகின்றன. இன்றைய நாள்களில் வங்கிகள் சேமிப்புகளைத் திரட்டுவதில் பல கவர்ச்சிகரமான திட்டங்களை மக்களிடம் அறிமுகப்படுத்தி, அவர்களிடமுள்ள சேமிப்புகளை முறைப்படுத்தப்பட்ட பணச்சந்தைக்குக் கொண்டுவருகின்றன. இவ்வாறு கொண்டுவரப்படவில்லையெனில், அப்பணம் பொதுமக்களிடமே பயன்படுத்தப்படாமல் இருந்தாலோ, அல்லது தங்கம் முதலானவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தாலோ அவை உற்பத்திக்குப் பயன்பட்டிருக்காது.

2. கடன் உருவாக்கம்

வங்களின் கடன் உருவாக்கம் மூலம் முன்னேற்றத் திட்டங்களுக்கு அதிக நிதியை பெற்றுத் தருகிறது. இதன் மூலம் உற்பத்தி, வேலைவாய்ப்பு, வருமானம், விற்பனை

ஆகியவை ஏற்றம் பெற்று விரைவான பொருளாதார வளர்ச்சியை கொண்டு வருகின்றன.

3. அதிக உற்பத்தித்திறனை கொண்ட முதலீட்டை நோக்கி பணத்தை முறைப்படுத்துதல்

வங்கிகள் உற்பத்தி நோக்கில் பணத்தை முதலீடு செய்கின்றன. வெறுமனே வங்கிகள் மூலதன ஆக்கத்தை மட்டும் செய்யவில்லை. ஒரு துறையில் செய்யப்பட்ட முதலீட்டின் உற்பத்தித் திறன் குறைவாக இருந்தால் அத்துறைக்கு வழங்கப்படும் முதலீட்டுக் கடனைக் குறைத்துக்கொண்டு, அதிக உற்பத்தித் திறன் கொண்ட துறைகளுக்குக் கூடுதலாக முதலீட்டுக்கான கடனை மடைமாற்றம் செய்கிறது. இதனால் பொருளாதாரத்தில் முதலீட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் கூடுகிறது. இவ்வகையில் வணிகவங்கிகள் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

4. சரியான தொழிற்சாலைகளை ஊக்குவித்தல்

வங்கிகள் சரியான தொழிலையும், சரியான நபர்களையும் தெரிந்தெடுத்துக் கடன் வழங்குவதால் தொழிற்பெருக்கம் ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளதார வளர்ச்சியில் உதவுகின்றன. எந்த பொருளுக்கு அதிக தேவை உள்ளதோ அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு கடன்களையும், முன்பணங்களையும் வழங்குகிறது. ஆகவே, உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தி முறைகளில் புதுமையைப் புகுத்தி நாட்டின் தேசிய வருமானம் உயர்வதற்கு வழி செய்கின்றனர். சில சமயங்களில் முக்கியத்துவம் குறைந்த துறைகளுக்கும் கடன் வழங்குகிறது. இதனால் அமெரிக்காவில் 2007 – 08ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது முதலான பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும்.

5. கடனைப் பணமாக்குதல்

வணிகத்தில் எழும் குறிப்பிட்ட காலக் கடன்களை இடையிலேயே ரொக்கமாக்கித் தருவதன் மூலம் உற்பத்தியிலும் வணிக நடவடிக்கைகளிலிலும் சுணக்கம் ஏற்படாமல் வணிக வங்கிகள் பாதுகாக்கிறது. வணிகத்தை அதிகப்படுத்தக் கடன் அடிப்படையில் விற்பனை மேற்கொள்வதைத் தவிர்க்க முடியாது. ஆனால் கடன் விற்பனை முதலீட்டை முடக்கிடும் செயலைச் செய்கின்றது. இதனால் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்–படுகின்றன. கடன் விற்பனையில் கடனுக்கான உத்தரவாதமாக மாற்றுச்சீட்டுகளை (Bills of Exchange) வங்கிகள் கழிவு செய்வதால், வணிக நிறுவனங்கள் எந்த இடையூறுமின்றி பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர முடிகின்றது.

6. அரசிற்கு நிதி வழங்குதல்

குறைவளர்ச்சி நாடுகளில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் பணியினை அரசு மேற்கொள்கிறது. இதற்கு அதிக அளவு நிதி அரசிற்குத் தேவைப்படுகிறது. வணிக வங்கிகள் அரசிற்கு நீண்டகால கடன்களையும் குறுகியகால கடன்களையும் அரசு பத்திரங்களை ஏற்பதன் வாயிலாக வழங்குகிறது. இந்திய ரிசர்வ் வங்கி 2018 – 19 ஆண்டில் தனது உபரி நிதியிலிருந்து மத்திய அரசுக்கு ₹68,000 கோடி வழங்கியுள்ளது.

7. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

வங்கிகள் தேசியமயமாக்கலுக்குப் பின் வங்கித்துறை பெருமளவுக்கு வளர்ந்துள்ளது.

www.tntextbooks.in

நிறைய எண்ணிக்கையில் கிளைகள் திறக்கப்பட்டு கடன் பெருக்கம்செய்வதால் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

8. வங்கிகள் தொழில்முனைவினை ஊக்கப்படுத்துதல்

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் அண்மைக் காலமாக வணிக வங்கிகள் தொழில்முனைவை ஊக்கப்படுத்தி வருகின்றன. தொழில்முனைவு உருவாக்குவது மிகவும் சிக்கலான ஒரு நடைமுறை ஆகும். திட்ட எண்ணங்கள் உருவாவது, கண்டறிந்த திட்டங்களில் உள்ளூர்ச் சூழ்நிலையுடன் ஒத்துப்போகும் சரியான திட்டத்தைத் தேர்ந்தெடுப்பது, நன்கு தயாரிக்கப்பட்ட திட்டத்தை மேற்கொள்ள தொழில்முனைவோரை ஊக்கப்படுத்துவது, தொழில்நுட்ப, மேலாண்மை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது என்பன தொழில் முனைவு மேம்பாட்டு நிலைகளாகும்.

தொழில்நுட்ப முறையில் வாய்ப்பானவையாகவும் சாத்தியமானதாகவும் பொருளாதார முறையில் பயனளிக்கத்தக்கதாகவும் உள்ள மிகச்சிறந்த திட்டங்களுக்கு வங்கிகள் 100 விழுக்காடு கடன்களை அளிக்கின்றன. ஆகவே, வணிக வங்கிகள் தொழில்முனைவுக்கும் நாட்டின் மேம்பாட்டிற்கும் தங்களின் சீரிய பணியைச் செய்து வருகின்றன.

6.4 வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் (Non–Banking Financial Institutions – NBFIs)

ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் (Non–banking Financial Institution – NBFI) அல்லது வங்கியல்லா நிதி நிறுமம் (Non–banking Financial Company – NBFC) என்பது ஒரு நிதி நிறுவனம் ஆகும். அது முழு வங்கிக்கான உரிமம் கொண்டதும் அல்ல, மைய வங்கியால் கண்காணிக்கப்படுவதும் இல்லை.

வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் முழுமையான வங்கிப் பணிகளைச் செய்யாமல் மற்ற நிதிப் பரிமாற்றங்களை மேற்கொள்கின்றன. அவை வைப்புகளைப் பெற்றுக்கொண்டு கடன்களை வழங்குகின்றன. மக்களின் சேமிப்பைத் திரட்டி முதலீட்டு நடவடிக்கைகளுக்கு நிதியுதவி அளிக்கின்றன. சுருங்கச்சொன்னால் அவை கடன் பெற்று கடன் வழங்குகின்றன. அவை பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் செயல்படுகின்றன.

ஒரு வங்கியல்லா நிதி நிறுவனம் இருவகைப்படும்: பங்குச் சந்தை மற்றும் இதர நிதி நிறுவனங்கள். இரண்டாவது வகையில் வருவது நிதி நிறுவனங்கள், நிதி கழகங்கள், சீட்டு நிறுவனங்கள், கட்டிட சங்கங்கள், முதல்நிலை பங்கு வெளியீட்டு நிறுவனங்கள், முதலீட்டு அமைப்புகள், யூனிட் டிரஸ்ட் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியன.

12-Economics-Tamil-Chapter_6.indd 119 12-01-2023 10:13:45

6.5 மைய வங்கி (Central Bank)

மைய வங்கி, ரிசர்வ் வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பண அளிப்பு, வட்டிவிகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் ஆகும். மேலும், நாட்டிலுள்ள வணிக வங்கிகளை மேற்பார்வையிடுவதும் இதன் பணியாகும்.

6.5.1 மைய வங்கியின் பணிகள் (Functions of Central Bank)

ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. இது பணவியல் கொள்கை மூலம், பண அளிப்பை மேலாண்மை செய்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934இன்படி, ஏப்ரல்1–ஆம் தேதி 1935ஆம் ஆண்டு முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினைத் துவங்கியது. துவக்கத்தில், வங்கியின் மூலதனம் ₹100 மதிப்பு கொண்ட சம பங்குகளாக பிரிக்கப்பட்டு தனியார் வசம் இருந்தன. இந்திய விடுதலைக்குப் பிறகு, குறிப்பாக ஜனவரி 1, 1949 இல் இந்திய ரிசர்வ் வங்கி நாட்டுடமையாக்கப்பட்டது. பின்வருவன இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் ஆகும்.

1. பண அதிகார அமைப்பு (Monetary Authority)

இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அயல்நாட்டு செலாவணி பரிமாற்ற விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல், மற்றும் வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.

2. காகிதப்பண வெளியீடு

இந்தியாவில் நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப்பணத்தைத் தவிர அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமைப் பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும். மேலும், பண அளவு கடன் அளவுகளை இது மேலாண்மை செய்கிறது. புழக்கத்தில் உள்ள போலியான பணத்தினை கட்டுப்படுத்தும் பொறுப்பும் மைய வங்கிக்கு உண்டு.

3. வங்கி உரிமங்கள் வழங்குபவர்

வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22இன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும். இப்பணியையும் ரிசர்வ் வங்கி செய்கின்றது.

4. அரசுக்கான வங்கி

இது மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்களை தருகிறது. இது அரசு கடன்கள், அரசு கடன் தொடாபான சேவைகள், அரசு கடன் பத்திரங்கள்களை உருவாக்கி விற்பனை செய்வது ஆகிய பணிகளைச் செய்கின்றது. மேலும், அரசுக்கு வங்கி, நிதி ஆகியவை தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.

12-Economics-Tamil-Chapter_6.indd 120 12-01-2023 10:13:45

இந்திய ரிசர்வ் வங்கி

வரலாறு

- 1934ஆம் ஆண்டு சட்ட விதிப்படி 1935ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி அமைக்கப்பட்டது.
- ஜனவரி 1ஆம் தேதி 1949ஆம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சொந்தமானது.
- 1937 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகம் கல்கத்தாவிலிருந்து மும்பைக்கு மாற்றப்பட்டது.
- ஒஸ்போர்ன் ஸ்மித் (Osborne smith) RBI இன் முதல் ஆளுநர் ஆவார்

நிருவாகம்

- மைய வங்கி/மற்ற இந்திய வங்கிகளின் நெறியாளர்
- கடைசி நிலைக் கடன் ஈவோன்
- ஆளுநர், நான்கு துணை ஆளுநர்கள், மைய அரசால் நியமிக்கப்படும் மைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

பணிகள்

- காகிதப்பணம் வெளியிடுதல்
- அரசின் வங்கியாகச் செயல்படுதல் (அரசிற்கான நிதி வருவாயைப் பெற்றுக் கொள்ளுதலிலும், அரசின் செலவினங்களுக்குப் பணம் வழங்குதலும்)
- இந்திய வங்கி அமைப்புக்களை நெறிப்படுத்துதல்
- அயல்நாட்டுச் செலாவணியின் பாதுகாவலன்
- கடன் அளிப்பை நெறிப்படுத்துதல்.

18ஆம் நூற்றாண்டில் காகிதப் பணம் வெளியிடும் முறை துவங்கியது. தனியார் வங்கிகளான வங்காள வங்கி, மும்பை வங்கி, சென்னை வங்கிகள் முதலில் காகிதப் பணத்தை அச்சடித்தன.

ஷெர் ஷா சூரி (Sher shah suri) என்பவரால் ₹1 க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது. சமஸ்கிருதச் சொல்லான ரௌப்பியா (Raupya) விலிருந்து ரூபாய் என்ற வார்த்தை தோன்றியது. இந்தியாவின் பன்முகத் தன்மையை விளக்கும் விதமாக ஒவ்வொரு ரூபாய் நோட்டிலும் அதன் மதிப்பு 17 மொழிகளில் எழுதப்பட்டிருக்கும் (முன்பக்கத்தில் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பின்பக்கத்தில் மற்ற 15 மொழிகளிலும்)

5. வங்கிகளின் வங்கி

இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும். இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது, அவற்றின் வைப்புகளை ஏற்கிறது, மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்கிறது. அதனால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

6. கடைநிலைக் கடன் ஈவோன்

வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும்பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலிலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

7. தீர்வாக செயல்படுகின்றது

வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிமாற்றங்களைத் தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது. பரிமாற்றக் கருவிகளைப் பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

8. அயல்நாட்டுச் செலாவணி பாதுகாவலன்

இது அயல்நாட்டுச் செலாவணி இருப்புக்களைப் பாதுகாக்கும் பணியினைச் செய்கிறது. 1999–ஆம் ஆண்டு அயல்நாட்டுச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act – FEMA) சட்டத்தின்படி இது அயல்நாட்டுச் செலாவணி

மேலாண்மையும நிருவகிப்பினையும் மேற்கொள்கிறது. அயல்நாட்டு பணத்திற்கு எதிரான இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணங்களை அவ்வப்பொழுது வாங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

9. பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது

பணவியல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டு செல்கிறது. மேலும், தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு முதலான முக்கியமான குறியீடுகளைத் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

10. அரசு கடன் பத்திரங்களை நிருவகிக்கிறது

குறிப்பிட்ட விழுக்காட்டிலான சொத்துகளையும் பொறுப்புகளையும் அரசின் கடன்பத்திரங்களாகக் கொண்டுள்ள நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கி கண்காணித்து நிருவகிக்கின்றது.

11. செலுத்துதலிலும் தீர்வு செய்வதிலும் நெறியாளாராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது

2007–ஆம் ஆண்டு செலுத்துதல் மற்றும் தீர்வுச் சட்டம் (The Payment and Settlement System Act. 2007 – PSS Act) இந்திய ரிசர்வ் வங்கிக்கு நாட்டின் செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதற்கான மேற்பார்வையிடும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆகவே, ரிசர்வ் வங்கி பாதுகாப்பானதும் திறமையானதுமான செலுத்துதல்களையும் தீர்வுகளையும் மேற்பார்வையிடுவதன் மூலம் மேம்பாட்டிற்கு வழிவகுக்கின்றது.

12. மேம்பாட்டுப் பணி

இந்திய ரிசர்வ் வங்கி சிறந்த வங்கி அமைப்பினை ஏற்படுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. அதன் மூலம் சிறந்த உற்பத்தித் திறன் கொண்ட துறைகளுக்கு கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது. தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பரந்த மேம்பாட்டு பணிகளை மேற்கொள்கின்றது. இது மேலும், நாட்டின் நிதிக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் நிறுவனங்களையும் அமைக்கின்றது. இதனுடன்கூட, நாட்டில் நிதிச் சேவைகள் மற்றும் நிதிக் கல்வியறிவு ஆகியவற்றை விரிவாக்கும் பணியினையும் செய்கின்றது. இதற்கான கல்வி, ஆய்வு நிறுவனங்களையும் நடத்துகின்றது.

13. பணவியல் செய்திகளையும் பிற செய்திகளையும் வெளியிடுகிறது

பணம், வங்கி, முக்கியமான பொருளாதாரப் புள்ளிவிவரங்களை வெளியிடுகிறது. மேலும், இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை திறனாய்கிறது. புள்ளிவிவரங்களைத் திரட்டி, வரிசைப்படுத்தி இந்திய ரிசர்வ் வங்கி வெளியீடு (Reserve Bank of India Bulletin) மூலம் மாத, காலாண்டு, ஆண்டு விவரங்களை வெளியிடுகிறது.

14. பரிவர்த்தனை மேலாளர் மற்றும் நெறியாளார்

சர்வதேச பண நிதியத்தின் (International Monetary Fund) இந்திய உறுப்பினர் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி விளங்குகிறது. நிதியத்திலிருந்து பெறப்படும் அயல்நாட்டு செலாவணியை மேலாண்மை செய்வதும், அதிகாரம் அளிக்கப்பட்ட அயல்நாட்டு செலாவணி விற்பனையாளர்களான வணிக வங்கிகளை நெறிப்படுத்தும் செயலையும் இந்திய ரிசர்வ் வங்கி செய்கிறது.

15. வங்கி குறைதீர்ப்பாய திட்டம்

இந்திய ரிசர்வ் வங்கி 1995ல் வங்கி குறைதீர்ப்பாயத்தினை (Banking Ombudsman)

அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், வங்கிகள் தொடர்பாக ரிசர்வ் வங்கிக்கு வரும் அனைத்து புகார்களையும் மேல்முறையீடுகளையும் வங்கிக் குறை தீர்ப்பாயம் களைகின்றது. இணையவழியில் வரும் புகார்கள் உட்பட அனைத்து வழிகளில் வரும் புகார்களையும் இந்தக் குறை தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

16. இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியம்

வங்கிகளின் திறனை அளவிடும் விதமாக உலகளவில் ஏற்கப்பட்டுள்ள நெறிமுறைகளும் மதிப்பீடுகளும் (அடிப்படையில்) இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய வங்கி நெறிமுறைகளும் மதிப்பீடுகளும் வாரியத்ததை (Banking Codes and Standards Board of India – BCSBI) அமைத்துள்ளன.

6.5.2. கடன் கட்டுப்பாட்டு அளவுகள் (Credit Control Measures)

கடன் கட்டுபாட்டு முறைகள்

கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள்

1. வங்கி விகிதக் கொள்கை
2. வெளிச்சந்தை நடவடிக்கைகள்
3. மாறும் குறைந்தஅளவு வங்கி ரொக்க இருப்பு விகிதம்

கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்

1. கடன் பங்கீடு
2. நேரடி நடவடிக்கைகள்
3. நெறிமுறைத் தூண்டல்
4. விளம்பரப்படுத்துதல்
5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல்
6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல்

கடன் கட்டுப்பாட்டு நுட்பம் என்பது மைய வங்கியின் பணவியல் மேலாண்மையின் முக்கிய நோக்கம் ஆகும். கடன் கட்டுப்பாட்டு முறைகள், 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1949–ஆம் ஆண்டின் வங்கி நெறிமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டப்படியான ஏற்பைப் பெறுகிறது. இந்திய ரிசர்வ் வங்கி தனது கடன்கட்டுப்பாட்டு முறையை மற்ற நாடுகளிலுள்ள கடன் கட்டுப்பாட்டு முறைகளைவிட சிறப்பாக அமல்படுத்தி வருகிறது.

6.5.3. கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of Credit Control)

I. கடன் அளவுக் கட்டுப்பாடு முறைகள் (Quantitative Methods of Credit Control)

1. வங்கி விகிதக் கொள்கை (Bank Rate Policy)

வங்கி விகிதக் கொள்கை என்பது தள்ளுபடி விகிதக் கொள்கை (Discount Rate Policy) எனவும் அழைக்கப்படுகிறது. மைய வங்கியானது எந்த விகிதத்தில் முதல்நிலை மாற்றுச் சீட்டுகளையும் பிணையங்களையும் தள்ளுபடி செய்கிறது என்பதே வங்கி விகிதக் கொள்கை என்பதாகும். மைய வங்கியானது, பணவீக்க காலத்தில் வங்கி விகிதம் அதாவது மைய வங்கியின் தள்ளுபடி விகிதம் அதிகரிக்கப்படுவதால் நடப்பு வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டு கடன் அளவு குறைக்கப்படுகிறது. மாறாக, பணவாட்ட காலத்தில் எதிர்மறையாக வங்கி தள்ளுபடி விகிதம் குறைக்கப்படுகிறது. இது நடப்பு அங்காடி வட்டி விகிதத்தைக் குறைக்கும். இதனால் உந்தப்பட்டு நிறைய கடன்கள் உருவாகும். இதனால் கடன் பண அளிப்பு அதிகரித்து பணவாட்டம் சரிசெய்யப்படும்.

2. வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations)

ஒரு குறுகிய அளவில் பார்க்கும்பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில்

12-Economics-Tamil-Chapter_6.indd 123 12-01-2023 10:13:45

அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எனப்படுகின்றது.

சற்று விரிவாகப் பார்க்கும்பொழுது, மைய வங்கி அரசின் கடன் பத்திரங்களை மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களின் தகுதிபடைத்த பத்திரங்களையும் விற்பனை செய்வதும், திரும்பப் பெறுவதும் ஆகும். வணிக வங்கிகளும், தனிமனிதர்களும் வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்கும்பொழுது, பொருளாதாரத்தில் சுழற்சியில் உள்ள பணமும், கடன் பணமும் குறையும், இதனால் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும். மாறாக, பணவாட்ட காலத்தில், முன்னர் வெளியிடப்பெற்ற கடன் பத்திரங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்பொழுது வணிக வங்கிகளிடமும் பொதுமக்களிடமும் ரொக்கப் பணத்தின் அளவும் கடன் பணத்தின் அளவும் அதிகரிக்கும்.

3. மாறும் ரொக்க இருப்பு விகிதம் (Variable Cash Reserve Ratio)

அ) ரொக்க இருப்பு விகிதம்: வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும். இது மைய வங்கிச் சட்டத்தின்படி பின்பற்ற வேண்டியது ஆகும். இதுவே, ரொக்க இருப்பு விகிதம் எனப்படுகிறது. ரொக்க இருப்பு விகிதத்திற்கும் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவிற்கும் எதிர்மறைத் தொடர்பு உள்ளது. வணிக வங்கிகளிடம் கூடுதலான பணம் உள்ள சூழ்நிலையில் அவைகள் தேவைக்கு அதிகமான கடன் பணத்தை உருவாக்க வாய்ப்பிருக்கிறது. இது பொருளாதாரத்தில் விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும். ஆகவே மைய வங்கி தனது அதிகாரமான ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துவதன் மூலம், வணிக வங்கிகளின் கடன் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

பணவாட்டத்திற்குப் பின் பொருளாதாரம் மீட்சி பெற அதிக கடன் தேவைப்படுகிறது. அச்சமயத்தில் பண அளிப்பு குறைவாக இருக்கும். மைய வங்கி இவ்விகிதத்தை குறைப்பதன் மூலம், வணிக வங்கிகள் குறைவான இருப்பை மட்டுமே வைத்துக்கொண்டு கூடுதலான தொகையை கடன் பணமாக அளிக்க இயலும். ரொக்க இருப்பு விகிதம் அதிகமாக இருந்தால் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி குறைவாகவும், ரொக்க இருப்பு விகிதம் குறைவாக இருந்தால் கடன் உற்பத்தி அதிகமாகவும் இருக்கும்.

மாறும் ரொக்க இருப்பு விகிதம் என்பது பணவியல் கொள்கையின் ஒரு கருவி. இதனை முதன்முதலாக கீன்சு பரிந்துரைத்தார். அமெரிக்க மைய வங்கியான பெடரல் ரிசர்வ் சிஸ்டம் (Federal Reserve System) முதன் முதலில் இதை அமல்படுத்தியது.

CRR + SLR (ரொக்க இருப்பு வீதம் 6% + சட்டபூர்வ நேர்மை இருப்பு வீதம் 20%)



ஆ) சட்டப்படியான நீர்மை விகிதம்: சட்டப்படியான விகிதமான இதில், வங்கிகள் தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம், ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மைத் தன்மை கொண்ட சொத்துகள் ஆகும். இது கேட்பு வைப்பு, கால வைப்பு முதலான வங்கியின்

பொறுப்புகளின் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டு அளவிற்கு இருக்க வேண்டும்.

II. கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்

கடன் தன்மைக் கட்டுப்பாட்டுமுறை அல்லது தெரிந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Selective Credit Control Methods) என்பது தெரிந்தெடுத்த துறைகளில், தொழில்கள், வணிகங்கள் அல்லது பயன்களில் மட்டும் கடன் கட்டுப்பாட்டினை கொண்டு வருவது ஆகும். இம்முறைகளில் கீழ்க்காண்பவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

1. கடன் பங்கீடு,
2. நேரடி நடவடிக்கைகள்,
3. நெறிமுறைத் தூண்டல்,
4. விளம்பரப்படுத்துதுல்,
5. நுகர்வோர் கடனை முறைப்படுத்துதல்,
6. ஈட்டுக் கடன்களில் விளிம்பு நிலைத் தொகையை மாற்றுதல் ஆகியன கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் ஆகும்.

1. கடன் பங்கீடு (Rationing of Credit)

இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும். முதன்முறையாக பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மையவங்கியான இங்கிலாந்து வங்கியில் (Bank of England) இம்முறை பயன்படுத்தப்பட்டது. வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது. நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அக் கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும். இதில் பின்வரும் இருவகைகள் உள்ளன: மாறும் தொகுப்பு வரையறையும் (Variable Portfolio Ceiling) மாறும் மூலதன–சொத்து விகிதமும் (Variable Capital–Asset Ratio).

மாறும் தொகுப்பு வரையறை: இதில் ஒவ்வொரு வணிக வங்கியும் எவ்வளவு அதிக அளவுக் கடனும் முன்பணமும் கொடுக்கலாம் என்பதை மைய வங்கி வரையறுப்பது ஆகும்.

மாறும் மூலதன–சொத்து விகிதம்: இது வணிக வங்கிகள் தங்களது சொத்து மதிப்பில் எந்த அளவு மூலதனமாக வைத்துக்கொள்ளலாம் என்பதை மைய வங்கி வரையறை செய்வது ஆகும்.

2.நேரடி நடவடிக்கைகள் (Direct Actions)

நேரடி நடவடிக்கைள் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியது ஆகும்:

அ) வணிக வங்கிகள் தள்ளுபடிக்காக கொண்டுவரும் மாற்றுச் சீட்டு உள்ளிட்ட அனைத்து பிணையங்களையும் ஒட்டுமொத்தமாக மைய வங்கி மறுப்பது ஆகும். இதன் மூலம் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவு கட்டுப்படுத்தப்படும்.

ஆ) மூலதனத்தையும் இருப்புகளையும் தாண்டி மொத்தக் கடனளைவைக் கொண்டுள்ள வணிக வங்கிக்கு வேண்டப்படும் நிதி ஒதுக்கீட்டை மைய வங்கி மறுப்பது ஆகும்.

இ) அனுமதிக்கப்பட்ட அளவைத் தாண்டி மைய வங்கியில் கடன்பெறும் வணிக வங்கிகளுக்கு இயல்பான வட்டியுடன் அபராத வட்டி விகிதத்தை விதிப்பது ஆகும்.

3. நெறிமுறைத் தூண்டல் (Moral Suasion)

இது, வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்த மைய வங்கி அடிக்கடி கையாளும் ஒரு முறையாகும். இம்முறையின்கீழ், அறிவுரைகளையும் வேண்டுகோளையும் வைப்பதன் மூலம் வணிக நெறிமுறையினைப் போதித்து

வணிக வங்கிகள் வழங்கும் கடன்களைக் கட்டுப்படுத்துகிறது.

4. விளம்பரப்படுத்தல் (Publicity)

மைய வங்கி தனது கடன் வழங்கும் கொள்கைகளை பொதுமக்களிடம் விளம்பரப்படுத்துவதன் மூலம் கடன் அளவை கட்டுப்படுத்துவது ஆகும். ஆனால், இம்முறையின் வெற்றி மைய வங்கியால் எந்த அளவுக்கு மக்களிடம் பொதுக்கருத்தை ஏற்படுத்த முடிகிறது என்பதைப் பொருத்து அமையும்.

5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல் (Regulation of Consumer Credit)

தவணைமுறைக் கொள்முதல் முதலானவற்றில் நுகர்வோர் செலுத்தும் தவணைத் தொகையை அதிகப்படுத்துதல், தவணைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் நுகர்வோர் கடன் வாங்குவதைக் குறைப்பது ஆகும்.

6. ஈட்டுக் கடன்கள் மீதான விளிம்பு தொகைத் தேவையை மாற்றுதல் (Changes in the Margin Requirement on Security Loans)

பெரும்பாலான நாடுகளில் நடைமுறையில் இருந்தாலும், இம்முறை அமெரிக்காவில் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்நாட்டின் மையவங்கியான அமெரிக்க பெடரல் ரிசர்வ் சிஸ்டத்தின் இயக்குநர் குழு ஈட்டுக் கடன்களின் விளிம்புநிலை தொகை தேவையை மாற்றியமைக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. இந்த அதிகாரம், அமெரிக்காவின் 1934–ஆம் ஆண்டு பிணைய பரிவர்த்தனை சட்டத்தின் (Securities Exchange Act, 1934) அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் மூலம் பங்குச்சந்தையில் ஊக வாணிபத்தில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கியால் மேற்கொள்ளப்படும் கருவிகளே ரெபோ விகிதம், மீள்ரெப்போ விகிதங்களாகும். ரெப்போ விகிதம் எப்பொழுதும் மீள்ரெப்போ விகிதத்தை விட அதிகமாகவே இருக்கும்.

ரெப்போ விகிதம் (Repo Rate)	மீள் ரெப்போ விகிதம் (Reverse Repo Rate)
வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும்பொழுது விதிக்கும் வட்டி விகிதமே ரெப்போ விகிதம் எனப்படுகிறது. இவ்வங்கிகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும்பொழுது அவை பத்திரங்களை ஈடாக வைத்து இந்திய ரிசர்வ் வங்கியில் கடன்களைப் பெறும். அந்நிலையில் விதிக்கப்படும் வட்டி விகிதமே ரெப்பொ விகிதம் எனப்படுகிறது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த ரெப்பொ விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் கடன் வாங்குவதற்கான செலவை அதிகபடுத்தி, கடன் வாங்குவதைக் குறைக்கிறது. பணவாட்ட சூழ்நிலையில் ரெப்போ விகிதம் குறைக்கப்பட்டு கடன் வழங்குதல் அதிகரிக்கும்	வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பும் வட்டி விகிதமே மீள் ரெப்போ விகிதம் எனப்படுகிறது. மீள் ரெப்போ விகிதத்தை உயர்த்தினால், அது வணிக வங்கிகளுக்கு இலாபகரமான வட்டி விகிதமாகி அவற்றிடம் உள்ள பணத்தை ரிசர்வ் வங்கியிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. இதனால் அந்தப் பணத்திற்கு உயர் பாதுகாப்பு கிடைக்கிறது. இதனால் வணிக வங்கிகள் தனது வாடிக்கையாளருக்கு கடன் கொடுப்பது குறைகிறது. இது இயற்கையாகவே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தும்.

12-Economics-Tamil-Chapter_6.indd 126 12-01-2023 10:13:46

6.5.4 இந்திய ரிசர்வ் வங்கியும் கிராமப்புற கடனும் (RBI and Rural Credit)

இந்தியா முதலான வளரும் நாடுகளில் மைய வங்கியானது பணவியல் நெறிமுறைகளை செயல்படுத்துவதுடன் அதன் எல்லை முடிந்துவிடுவதல்ல. அது, வேளாண்மை தொழில் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்துத் துறைகளின் வளர்ச்சிகளிலும் பங்குபெறுவது எதிர்பார்க்கப்படுகிறது.

6.5.5 வேளாண்மைத் துறை நிதியளிப்பில் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கு

இந்திய ரிசர்வ் வங்கி வேளாண்மைத் துறைக்கான நிதியளிப்பில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மையின் முக்கியத்துவம், முறைசார் நிறுவனங்களின் கடன் வசதி பற்றாக்குறை முதலான காரணங்களால் ரிசர்வ் வங்கியின் பொறுப்பு இதில் அதிகமாகிறது. தனது பங்கின் முக்கியத்துவம் கருதி இந்திய ரிசர்வ் வங்கி வேளாண்மைக்கென தனியான வேளாண் கடன் துறையை (Agriculture Credit Department) துவங்கியது.

6.5.6 வேளாண் கடன் துறையின் பணிகள்

அ) நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.

ஆ) மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள், இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.

இ) ஊரகத் துறைக்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

வேளாண்மை மேம்பாட்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது நேரடியாக உழவர்களுக்கான கடனை வழங்காமல், ஊரக கடன் வழங்குவதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலமாக மறு கடனாக வழங்கி வந்தது. இந்திய ரிசர்வ் வங்கி தனக்குக்கீழாக மாநில கூட்டுறவு வங்கிகள் (மாநில அளவு), மத்திய கூட்டுறவு வங்கிகள் (மாவட்ட அளவு), மற்றும் துவக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் (கிராம அளவு) மூன்றடுக்கு முறை ஆகியவை வழியாக வேளாண்மைக்கான கடனை வழங்கி வந்தது.

இந்திய ரிசர்வ் வங்கி பருவகால வேளாண் பணிகளுக்கும் வேளாண் பொருள் சந்தையிடலுக்கும் தொடர்பாக குறுகியகாலக் கடன்களை அல்லது பயிர்க்கடன்களை ((short–term loans or crop loans) வழங்கி வந்தது. இதற்காக மாநில கூட்டுறவு வங்கிகள் அரசு பத்திரங்களையும் நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களையும் ஈடாக ஏற்று 15 மாதக் கடனை ரிசர்வ் வங்கி வழங்கி வந்தது. இதேபோல் நிலத்தின் தரத்தை மேம்படுத்துதல், பாசன வசதி ஏற்படுத்துதல், இயந்திரங்கள் வாங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக 15 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரையிலான மத்தியக் காலக் கடன்களையும் (medium–term loan)வழங்கி வந்தது. மேலும், நிலத்தினை முற்றிலுமாக மாற்றுவது, பழைய கடன்களைத் திருப்பச் செலுத்த உதவும் வகையில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகாலக் கடன்களையும் (long–term loan) வழங்கி வந்தது.

1982 – ஆம் ஆண்டிற்குப் பிறகு வேளாண் கடன் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் நபார்டு வங்கி (NABARD) இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்துப் பெற்றுக்கொண்டது. அதிலிருந்து ஊரகக் கடன் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.

6.6 வேளாண் மறுகடன் மேம்பாட்டுக் கழகம் (Agricultural Refinance Development Corporation – ARDC)

இந்திய உழவர்களுக்கு மத்தியக் காலக்கடன்களும் நீண்டகாலக் கடன்களுமே அதிகம் தேவை இருந்தபொழுதிலும் அதைப் பெறுவதில் சிக்கல்கள் இருந்தன. இவ்வகைக் கடன்களை அளிக்கும் ஒரே அமைப்பு ரீதியான நிறுவனம் நிலவள வங்கிகள் (Land Development Banks) ஆகும். ஆனால், அந்த வங்கிகள் போதுமான அளவு வெற்றியடையாமல் பின்தங்கியிருந்தன. அதே சமயம் இந்த நோக்கத்திலான கடன்களின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தது. இந்த இடைவெளியினைப் போக்கவும், பல்வேறு விவசாய மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதி ஆதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் பாராளுமன்ற சட்டத்தின் அடிப்படையில் ஜூலை 1, 1963–இல் வேளாண் மறுகடன் மேம்பாட்டுக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

6.6.1 வேளாண் மறுகடன் மேம்பாட்டுக் கழகத்தின் நோக்கங்கள்

(i) மத்திய நிலவள வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், பட்டியல் வங்கிகள் (Scheduled Banks) முதலான தகுதிவாய்ந்த அமைப்புகளுக்குத் தேவையான மறுநிதியினை வழங்குவது.

(ii) இந்தியரிசர்வ்வங்கியால்அங்கீகரிக்கப்பட்ட மத்திய நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள், பட்டியல் வங்கிகள் ஆகியவை வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்கி அதன் மூலம் நிதியளிப்பினைச் செய்வது.

6.7 வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks – RRBs)

ஊரக நிதி வழங்கும் நிறுவனங்களில் அடுத்த முக்கியமான வங்கியமைப்பு வட்டார ஊரக வங்கிகள் ஆகும். இது கிராமின் வங்கிகள் (Gramin Banks) என்றும் அழைக்கப்படுகிறது. மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 20–அம்ச பொருளாதாரத் திட்டத்தின் ஒரு முக்கியமான அம்சம் கிராமப்புறங்களில் வாழும் உழவர்களையும் கைவினைஞர்களையும் தொடர் கடன்சுழலில் (indebtedness) இருந்து விடுவிப்பதாகும். அக்கால கட்டத்தில் அமல்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரத் திட்டத்தைத் தொடர்ந்து வட்டார ஊரக வங்கிகள் 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவைகளுக்கான மூலதனம் 50% மைய அரசாலும் 15% மாநில அரசாலும் 35% நடத்துகின்ற வணிக வங்கிகளாலும் அளிக்கப்பட்டது.

இவ்வங்கிகளின் நோக்கம் உழவர்களுக்கு, குறிப்பாக சிறு, குறு உழவர்கள் (small and marginal farmers)> நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், கைவினைஞர்கள்களுக்கும் சிறு தொழில்முனைவோர்களுக்கும் கடன் வழங்குவதன் மூலம் ஊரகப் பகுதியில் வேளாண்மை, வணிகம், தொழில் இதர உற்பத்தி நடடிவக்கைகள் ஆகியவற்றை மேம்படுத்துவது ஆகும்.

6.7.1 வட்டார ஊரக வங்கிகளுக்கான சலுகைகள்

ஆரம்பத்தில் பங்குமூலதனத்தை வழங்கிய வணிகவங்கிகள் அவற்றுக்கான மேலாண்மை, நிதி ஆகியன தொடர்பான உதவிகளையும் குறைந்த அளவாக 8.5 விழுக்காடு வட்டியில் கடன்களையும் வழங்கி வந்தன. மேலும், வணிகவங்கிகள் தனது அலுவலர்களை அயற்பணியாளர்களாக வட்டார வங்கிகளுக்கு அனுப்புவது, வட்டார ஊரக வங்கிப் பணியாளர்களுக்கு ஆகும் பயிற்சி செலவுகளை மேற்கொள்வது ஆகிய சலுகைகளை வழங்குகிறது. மத்திய ரிசர்வ் வங்கி வட்டார ஊரக வங்கிகளுக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கியுள்ளது.

அ) வட்டார ஊரக வங்கிகள் 3 விழுக்காடு ரொக்க இருப்பினையும், 25 விழுக்காடு சட்டப்படியான நீர்மை இருப்பினை வைத்திருக்கவும் அனுமதிக்கப்படுகிறது

ஆ) நபார்டு வங்கி மூலம் அவற்றுக்கு மறு கடன்களையும் வழங்கி வருகின்றன.

6.8 வேளாண் கடனுக்கான நபார்டு வங்கியின் பங்கு (NABARD And Its Role In Agricultural Credit)

துவக்க காலத்திலிருந்தே மத்திய ரிசர்வ் வங்கி வேளாண்மைக்கடன்கள் வழங்க தனித்துறையை ஏற்படுத்தியது. பின்னர் விவசாய மறுகடன் மேம்பாட்டுக் கழகம் எனும் துணை அமைப்பு இருந்த பொழுதிலும், இந்திய ரிசர்வ் வங்கி விவசாய முன்னேற்றக் கருத்தை விரிவு செய்து கிராமப்புற முன்னேற்றத்திற்காகக் கடன்களை விரிவுபடுத்தும் நோக்கில் கிராமப்புற முன்னேற்றத்திற்கான திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்த விரிவான அடித்தளம் கொண்ட ஒரு அமைப்பு மத்திய ரிசர்வ் வங்கிக்குத் தேவைப்பட்டது. அதன் காரணமாக 1982–ஆம் ஆண்டு ஜுலை மாதம் வேளாண்மைக்கும் ஊரக மேம்பாட்டிற்குமான தேசிய வங்கியினை (National Bank for Agriculture and Rural Development – NABARD) 1982 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தோற்றுவித்தது. சுருக்கமாக



நபார்டு வங்கி வழங்கும் மூன்றடுக்கு கூட்டுறவுக் கடன் முறை

நபார்டு என்று அழைக்கப்படுகிறது. வேளாண் மறுகடன் மேம்பாட்டுக் கழகத்தின் பணிகள் முழுமையும், வட்டார ஊரக வங்கிகளின் மறுகடன் பணிகளையும் தானே ஏற்று செய்துவருகிறது. அதன்பிறகு, அனைத்து வேளாண்மைக் கடன்களுக்கான தலைமை அமைப்பாக நபார்டு வங்கி செயல்பட்டு

வருகிறது. நபார்டின் மூலதனத்தை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய அரசு இரண்டும் சரிபகுதியாக வழங்கியுள்ளன. நபார்டு வங்கி மேலாண்மையைப் பொருத்தவரை, இந்திய அரசின் மைய இயக்குநர் குழுவிலிருந்து நபார்டு வங்கியின் இயக்குநர் குழுவுக்கு மூவரைப் பரிந்துரைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் நபார்டின் தலைவராக இருப்பார்.

6.8.1 நபார்டு வங்கியின் பணிகள்

ஏற்கனவே இந்திய ரிசர்வ் வங்கியும் அதன் துணை அமைப்புகளும், வேளாண்மை மற்றும் ஊரக முன்னேற்றத்திற்காக எந்தெந்தப் பணிகளை ஆற்றிவந்ததோ அப்பணிகள் அனைத்தையும் நபார்டு வங்கி மேற்கொண்டு வருகிறது. பின்வருவன நபார்டு வங்கியின் குறிப்பிட்டப் பணிகளாகும்:

(i) நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்திக்காகவும் முதலீட்டுக்காகவும் வேளாண்மை, சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.

(ii) இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றால் ஏற்பளிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால, நீண்டகால கடன்களை வழங்குகிறது.

(iii) கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

(iv) மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது வேளாண்மை ஊரக வளர்ச்சி ஆகியவற்றிற்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களைப் பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகால கடனை அளிக்கிறது.

(v) மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு (தற்பொழுது நிதி ஆயோக்) மைய, மாநில அரசுகளின் – சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள், கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயலாற்றும் நடவடிக்கைகளை நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.

(vi) நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் துவக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியைச் செய்கிறது.

(vii) வேளாண்மைக்கும் ஊரக வளர்ச்சிக்குமான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு நிதியையும், வளர்ச்சி நிதியையும் பராமரிக்கிறது.

6.9 தொழில் நிதியும் இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI and Industrial Finance)

தொழில் நிதியினை வணிக வங்கிகள் வழங்கினாலும், அதன் கடனளவும், கடனுக்கான காலஅளவும் குறைவாகவே இருந்து வந்தது. வங்கிகள் பெரும்பாலும் பொதுமக்களிடம் குறுகிய கால வைப்புகளைப் பெறுவதால், அவை

பெரும்பாலும் குறுகியகாலக் கடன்களை அளிக்க மட்டுமே முன்வந்துகொண்டிருந்தன. முன்னதாக, தொழிற் துறையின் மொத்தக் கடனில் வணிக வங்கிகளின் கடன் மிகக் குறைந்த அளவாக இருந்தது.

ஆகவே, தொழிற்துறைக்கான நீண்டகால கடன்களைப் பெறுவதற்கான ஆதாரங்கள் தேவைப்பட்டன. தொழிற்துறைக்கான நிதிக்காகவும் மேம்பாட்டிற்காகவும் பின்வரும் நிறுவனங்கள் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டன.

6.9.1 தொழில்நிதிக்கான அமைப்புகள்

அனைத்து இந்திய அளவில்

- இந்திய தொழில் நிதிக் கழகம்
- இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம்
- இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி

மாநில அளவில்

- மாநில நிதிக்கழகங்கள்
- மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம்

6.9.2 இந்திய அளவில் உள்ள நிறுவனங்கள் (All India Level Institutions)

1. இந்திய தொழில் நிதிக் கழகம்

தொழில்நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவன சங்கிலித்தொடரில் முதன்மையாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் இந்திய தொழில் நிதிக் கழகம் ஆகும். நாடாளுமன்றச் சட்டப்படி இது 1948–ஆம் ஆண்டு ஜுலை 1–இல் அமைக்கப்பட்டது. இக்கழகம் பின்வரும் வழிகளில் தொழில் நிதியை வழங்குகிறது:

i) இந்திய ரூபாயிலும் வெளிநாட்டு பணத்திலும் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.

ii) வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றுக்கு ஒப்புறுதியளிக்கிறது.

iii) சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குகிறது.

iv) இறக்குமதி செய்யப்படும் இயந்திரங்களுக்கும் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்குமான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கின்றது.

v) வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.

பொதுத்துறை, தனியார் துறை, இணை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் தொழிற்துறையில் ஈடுபடவோ அல்லது விரிவுபடுத்தவோ இந்திய தொழில் நிதிக் கழகம் (IFCI) நிதியுதவி அளிக்கின்றது. இத்தகைய நிதி உதவிகள் புதிய தொழில் திட்டங்களை ஏற்படுத்தவோ, விரிவாக்கம் செய்யவோ, பரவலாக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள இயந்திரங்களைப் புனரமைப்பு செய்யவோ புதுமைப்படுத்தவோ அளிக்கப்படுகின்றது. மைய அரசால் தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என அறிவிக்கப்பட்டவற்றில் மாவட்டங்களில் தொழில் தொடங்க நிதியைக் குறைந்த வட்டிவிகிதங்களில் வழங்குகின்றது.

இந்திய தொழில் நிதிக் கழகம் தனக்கான நிதியை பின்வரும் வழிகளில் பெறுகிறது:
அ) கடன்பத்திரங்களை சந்தையில்

12-Economics-Tamil-Chapter_6.indd 131 12-01-2023 10:13:47

www.tntextbooks.in

வெளியிடுகிறது, ஆ) இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி, மைய அரசிடம் கடனாகப் பெறகிறது, இ) பாதுகாப்பான வெளிநாட்டுக் கடனை வெளிநாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு மூலதன அங்காடியிலிருந்தும் பெறுகிறது.

2. இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (Industrial Credit and Investment Corporation of India (ICICI))

ICICI (இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம்)

ICICI Bank

ICICI வங்கியின் பணிகள்

- தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல்
- அயல்நாட்டுச் செலாவணி கடன்கள் வழங்குதல்
- வர்த்தக வங்கிப் பணிகள்
- கடன் பெறச் சான்று வழங்கல்
- திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்தல்
- வீட்டு வசதிக் கடன்கள் வழங்குதல்
- குத்தகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

இந்திய அரசு, உலகவங்கி அமெரிக்க அரசு ஆகியவற்றால் நியமிக்கப்பட்ட மூவர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் 1955–ஆம் ஆண்டு ஜனவரி 5–ஆம் நாள் ஒரு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. உலக வங்கியிலிருந்து பெறப்படும் இந்திய தொழிற்கடன்களை முறைப்படுத்தி அளிப்பதும், மூலதன அங்காடியை கட்டமைப்பதும் இக் கழகத்தின் நோக்கமாகும். ஆரம்பத்தில் இக்கழகத்தின் மூலதனம், தனியார் நிறுவனங்களிடமும், அமைப்புகளிடமும், பொதுமக்களிடமும் இருந்தது. ஆனால், தற்பொழுது குறிப்பாக இது தேசியமயமாக்கப்பட்ட பின், இதன் பெரும்பாலான மூலதனம் பொதுத் துறை நிறுவனங்களான வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பொது காப்பீட்டுக் கழகம், இதன் துணை அமைப்புகள் ஆகியவற்றிடம் உள்ளது.

இக்கழகத்தின் முக்கிய இயல்புகளில் ஒன்று, வெளிநாட்டுக் கடன் பணத்தை பெற்று தொழில் வளர்ச்சிக்கு உதவுவது ஆகும். இதன் துவக்கத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்களில் 50 விழுக்காடு வெளிநாட்டுப் பணமாகவே வழங்கப்பட்டுள்ளது. இக்கழகம் வெளிநாடுகளிலிருந்தே நிதிவசதியைப் பெறுவதால் இது சாத்தியமாகிறது. முக்கியமாக உலக வங்கி இக்கழகத்திற்கு கடன் வழங்குவதில் தனிப்பெரும் நிறுவனமாக உள்ளது. 1973 முதல் இது தனக்கான நிதியைப் பன்னாட்டு மூலதன அங்காடியிலிருந்தே பெறுகிறது.

பெரும்பாலான இந்திய ரூபாய்களில் திரட்டப்படும் நிதி, கடன் பத்திரங்கள் மூலம் மூலதனச்சந்தையிலிருந்தே திரட்டப்படுகிறது. மேலும், இக்கழகம் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்தும், மையவங்கியிடமிருந்தும் கடன் பெறுகிறது. அதேசமயம் இதன் பெரும்பாலான நிதி தனியார் துறைக்கே செல்கிறது.

3. இந்திய தொழில் மேம்பாட்டு Industrial Development Bank of India (IDBI)

வங்கிகள் உள்ளிட்ட தொழிற்கடன்கள் வழங்கும் பல்வேறு நிறுவனங்களை

12-Economics-Tamil-Chapter_6.indd 132 12-01-2023 10:13:47

ஒருக்கிணைக்கும் ஒரு தலைமை நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் என்ற முதன்மை நோக்கத்தின் அடிப்படையில் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி துவங்கப்பட்டது. இந்த வங்கி

IDBI BANK

இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI)

பிப்ரவரி 15, 1976 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் முழு துணை அமைப்பாக இருந்தது. பின்னால் இது பிரிக்கப்பட்டு அதே ஆண்டின் பிப்ரவரி 16 முதல் இந்திய அரசிற்குச் சொந்தமான தன்னாட்சி பெற்ற ஒரு கழகமாக மாறியது.

இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் பணிகள்

இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் முக்கியமான பணிகள் இரு பிரிவுகளாகக் கீழே தொகுக்கப்பட்டுள்ளன: (i) மற்ற தொழில் நிதிநிறுவனங்களுக்கு நிதியளிப்பது, (ii) தொழிற் நிறுவனங்களுக்கு நேரடியாகவோ மற்ற நிதியளிக்கும் நிறுவனங்களுடன் இணைந்தோ நேரடியாகக் கடன் வழங்குவது. இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியானது, மைய அரசின் தொழில் நிதிக் கழகம், மாநில தொழில் நிதிக் கழகங்கள், அரசால் குறிப்பிடப்படும் நிநிதிறுவனங்கள், பட்டியல் வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியன வழங்கிய கடன்களுக்கு மறுநிதியினை அளிக்கிறது. தொழிற் நிறுவனங்களுக்கு பல்வேறு வகைகளில் கடன்களை வழங்குகிறது.

இவ்வங்கியின் சிறப்புச் செயல்பாடாக வளர்ச்சி உதவி நிதி (Development Assistant Fund) என்ற ஒரு சிறப்புநிதியை உருவாக்கியுள்ளது. இந்நிதி அதிக முதலீட்டையும் குறைந்த எதிர்பார்க்கப்படும் வருவாயையும் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும். அவ்வகையான தொழில் நிறுவனங்கள் இயல்பான வழியில் போதுமான நிதியைத் திரட்ட இயலாது. மார்ச் 1982இல் ஏற்றுமதி–இறக்குமதி வங்கி (EXIM Bank) துவங்கப்படும்வரை ஏற்றுமதிக்கான நிதி உதவியையும் இவ்வங்கி வழங்கி வந்தது குறிப்பிடத் தகுந்ததாகும்.

6.9.3 மாநில அளவிலான நிறுவனங்கள்

1. மாநில நிதிக்கழகங்கள் State Financial Corporation (SFCs)

1951–ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட மாநில தொழில் நிதிக் கழக சட்டத்தின்படி பல்வேறு மாநிலங்களில் மாநில தொழில் நிதிக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தந்த மாநிலங்களில் சிறு, நடுத்தர தொழில் மேம்பாட்டினை ஏற்படுத்துவது இக் கழகங்களின் நோக்கமாகும். சில தொழில் நிதிக் கழகங்கள் தங்களின் மாநில எல்லைகளைத் தாண்டியும் தொழில் நிதி உதவிகளைச் செய்துவருகிறது.

ஒரு கோடி ரூபாய்க்குள் பங்கு மூலதனத்தையும், இருப்புகளையும் கொண்ட நிறுவனங்களுக்கு மாநில தொழில் நிதிக் கழகங்கள் கடன்களையும் ஒப்புறுதிகளையும் வழங்குகிறது. அளவாக ஒரு தொழில் நிறுவனத்திற்கு ₹60 இலட்சம் நிதியாக வழங்கப்படுகிறது.

மாநில தொழில் நிதிக் கழகங்கள் மறுநிதியாக இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்து கடன் பெறுகிறது. இது தவிர, கடன் பத்திரங்களை விற்பதன் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி ஆகியவற்றிடமிருந்தும் தற்காலிகக் கடன்களைப் பெறுகிறது.

2. மாநில தொழில் மேம்பாட்டுக் கழகங்கள் State Industrial Development Corporations (SIDCOs)

SIDCO

Small Industrial Development Corporation

மாநில தொழில் மேம்பாட்டு கழகம் மாநில அரசுகளினால் அமைக்கப்படுவது ஆகும். இக்கழகம் அந்தந்த மாநில அரசுகளுக்கே உரிமையானதாகும். இக்கழகங்கள் தொழிற் நிறுவனங்களுக்கான கடன்களை அளிப்பதோடு, மாநிலத்தில் தொழில்மயமாதலைத் தூண்டுவதும் ஆகும்.

மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் தொழில் நிறுவனங்களுக்குக் கடன்கள், ஒப்புறுதியளித்தல், நேரடியாகப் பங்குகளையும், கடன்பத்திரங்களையும் வாங்குதல் மூலம் நிதி வசதியினை அளிக்கிறது. கூடுதலாக, தொழில்நுட்ப விசாரணைகள், திட்டத்தைக் கண்டறிதல், திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்தல், தெரிந்தெடுத்தல், தொழில்முனைவோர் பயிற்சி வழங்குதல் என பல மேம்பாட்டுப் பணிகளையும் இக்கழகம் மேற்கொள்கிறது. தனியார் பங்கேற்பை அனுமதிக்கும் கூட்டுத் திட்டங்களையும் இக்கழகம் ஊக்குவிக்கிறது. இவ்வகையான கூட்டுத்திட்டங்களின் முதலீடு கழகத்தின் சார்பில் 26 விழுக்காடும், தனியாரின் 25 விழுக்காடும், பொதுமக்களின் 49 விழுக்காடும் ஆகியன பங்களிப்பாக இருக்கும். பல்வகை அடிப்படை வசதிகளைக் கொண்ட தொழிற்பேட்டைகளை அமைப்பது புதிய தொழில் மையங்களை அமைப்பது என இக்கழகத்தின் பணிகள் விரிவடைகின்றன. மாநில அரசுகளின் மானியங்களை நிருவகிப்பதும் இக்கழகத்தின் பணியாகும். மேலும், இவை இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிலிருந்து மறுநிதியினைப் பெறுகிறது. பங்கு கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெறுவது, வைப்புகளை ஏற்பது முதலான பணிகளையும் இது மேற்கொள்கிறது.

6.10 பணவியல் கொள்கை (Monetary Policy)

மில்டன் ஃபிரைட்மேன்

பண அளிப்பையும் வட்டி விகிதத்தையும் மேலாண்மை செய்யும் நோக்கோடு உருவாக்கப்படும் பேரினப் பொருளியல் கொள்கையே பணவியல் கொள்கை எனப்படுகின்றது. பேரினப் பொருளியல் கொள்கைகளான பணவீக்கம், நுகர்ச்சி, வளர்ச்சி மற்றும் நீர்மைத்தன்மை முதலானவற்றை அடைய மேற்கொள்ளும் தேவை சார்ந்த பொருளியல் கொள்கையாகும். இரண்டாம் உலகப்போருக்குப் பின் முக்கியத்துவம் பெற்றதும், 1976–ஆம் ஆண்டு நோபல்

12-Economics-Tamil-Chapter_6.indd 134 12-01-2023 10:13:47

பரிசுபெற்ற மில்டன் ஃபிரைட்மேனால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதுமான பணவியல் கொள்கையாகும். அவர் ஒரு பணவியலாளராக இருந்தும், 1930ஆம் ஆண்டுகளில் நிலவிய உலக பெருமந்தத்துக் காரணம் அமெரிக்க மையவங்கியான பெடரல் ரிசர்வ் சிஸ்டத்தின் பணவியல் கொள்கையில் ஏற்பட்ட குளறுபடிகள்தான் என்பதனைத் தனது நூலான "அமெரிக்க ஐக்கிய அரசுகளின் பணவியல் வரலாறு, 1867–1960" (Monetary Historyof the United States, 1867–1960) எனும் நூலில் மிகத் தைரியமாகத் தெரிவித்திருந்தார்.

6.10.1 விரிவாக்கப் பணக்கொள்கையும் சுருக்கப் பணக்கொள்கையும்

விரிவாக்க பணக்கொள்கை என்பது (Expansionary Monetary Policy) மலிவுப் பணக்கொள்கையாகும் (Cheap Money Policy). இதில் பணவியல் அதிகார அமைப்பான மைய வங்கி அதன் கருவிகளைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்துகிறது. நடப்பு குறுகியகால வட்டி விகிதத்தைவிட குறைவான வட்டிவிகித்தையும், வழக்கத்தை விட வேகமான பண அளிப்பையும் ஏற்படுத்துவது விரிவாக்கப் பணக்கொள்கையாகும். இது பாரம்பரியமாகப் பொருளாதார நடவடிக்கைளின் பின்னிறக்க காலத்தில் ஏற்படும் வேலைவாய்பின்மைக்கு எதிராக எடுக்கப்படும். வட்டி விகித குறைப்பு நடவடிக்கை கடனுக்கு ஆகும் செலவை குறைந்துத் தொழில் உற்பத்தியையும், வணிகத்தையும் விரிவாக்கும். இதனால் தொகு தேவை (அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேவை) அதிகரித்து, மொத்த உள்ளநாட்டு உற்பத்தியால் கணக்கிடப்படும் குறுகியகால வளர்ச்சியைத் தூண்டும்.

மேற்கூறியதற்கு எதிரானது சுருக்கப் பணக்கொள்கை (Contractionary Monetary Policy) அருமைப் பணக்கொள்கை (Dear Money Policy) எனப்படுகிறது. இதில், குறுகியகால வட்டிவிகிதம் நடப்பு வட்டிவிகித்தைவிட அதிகப்படுத்துவது, பண அளிப்பினைக் குறைப்பது அல்லது சுருக்குவது ஆகும். இது, பொருளாதாரத்தின் குறுகியகால வளர்ச்சியைக் குறைத்துப் பணவீக்கத்தைக் குறைப்பது ஆகும். சுருக்கப்பணக் கொள்கை வேலைவாய்ப்பின்மையை அதிகரித்து, நுகர்வோரும் உற்பத்தியளர்களும் கடன் வாங்குவதையும் செலவு செய்வதையும் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தைப் பின்னோக்கித் திருப்புவது ஆகும்.

பணக்கொள்கையின் இரண்டு நிலைகள்

பணவீக்கம்

மலிவுப்பணக்கொள்கை

1. கடன் பெறுதல் எளிது
2. நுகர்வோர் அதிகம் நுகர்வர்
3. வணிகம் விசாலமாகும்
4. அதிக மக்கள் வேலை பெறுவார்கள்
5. மக்கள் அதிகம் செலவு செய்வார்கள்

மந்தநிலை

அருமைப்பணக்கொள்கை

1. கடன் பெறுதல் கடினம்
2. நுகர்வோர் குறைவாக நுகர்வர்
3. வணிக விரிவாக்கம் தள்ளிப்போகும்
4. வேலையின்மை அதிகரிக்கும்
5. உற்பத்தி குறையும்.

6.10.2 பணவியல் கொள்கையின் நோக்கங்கள் (Objectives of Monetary Policy)

வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் பணவியல் கொள்கை நிலைப்படுத்துதல்

மற்றும் பொருளாதார அமைப்பினில் சமநிலையைப் பேணுதல் ஆகிய பணிகளைச் செய்யவேண்டியுள்ளது. ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் இது இயக்கநிலையை ஏற்படுத்தி பொருளாதாரத்தை விரிவாக்க ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது. பணவியல் கொள்கையானது பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு கருவியாக உணரப்படுகிறது.

6.10.3 பணவியல் கொள்கையின் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கள்

1. பணத்தின் நடுநிலைத் தன்மை

பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலை பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவர். அவர்கள் பணவியல் அதிகார அமைப்பு பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர். பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிப்படைக் காரணம் ஆகும். பண நடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும், இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

2. பரிமாற்றவீத நிலைத்தன்மை

பரிமாற்ற வீத நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையின் பாரம்பரியமான நோக்கமாகும். பல்வேறு நாடுகளில் பொன் திட்டம் அமலில் இருந்து காலத்தில் இது ஒரு முக்கியமான நோக்கமாகும். எப்பொழுது ஒரு நாட்டின் அயல்நாட்டு வணிகச் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலை தோன்றுகிறதோ அப்பொழுது தங்க நகர்வின் காரணமாக அது தானாகவே சரி செய்துகொள்ளும். "எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது பணமும் கடனும் விரிவடைகிறது: எப்பொழுது தங்கம் வெளிச்செல்கிறதோ அப்பொழுது பணமும் கடனும் சுருங்குகிறது" என்பது ஒரு முக்கியமான புகழ்பெற்ற வாக்கியமாகும். இம்முறை இருக்கும்பொழுது செலுத்துச் சமநிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகள் தானாகவே சரிசெய்யப்பட்டுப் பரிமாற்ற விகிதத்தில் நிலைத்தன்மை பேணப்படும்.

பரிமாற்ற விகிதங்களில் நிலையற்ற தன்மை இருந்தால், அது தங்கம் வெளிச்செல்லுதல் அல்லது உள்வருதல் ஆகியவற்றால் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலையை உருவாக்கும். ஆகவே பரிமாற்ற விகிதங்களில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பன்னாட்டு வணிகத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறது.

3. விலை நிலைத்தன்மை

பொருளியலாளர்கள் காஸல், கீன்சு முதலானவர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையில் முக்கியமான நோக்கமாகும் என்கின்றனர். விலை நிலைத்தன்மை பொதுமக்களிடம் பொதுவான நம்பிக்கையை ஏற்படுத்தும். மேலும் இது வணிக நடடிவக்கையை அதிகரித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

மக்களிடையே சமமான வருமானப் பங்கீடுகளையும், சொத்துப் பங்கீடுகளையும் செய்யும். இவற்றின் தொடர் விளைவாக வளர்ச்சிக்கான பொது அலையும் சமுதாய நலனும் நிறுவப்படும்.

இங்கு நாம் புரிந்துகொள்ள வேண்டியது, விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக (price rigidity) இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து (price stagnation) இருப்பதோ அல்ல. ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இந்த மிதமான விலையேற்றம் என்பது கிட்டத்தட்ட நிலையான விலையின் பெரும்பாலான பண்புகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

4. முழுவேலைவாய்ப்பு

உலகப் பெருமந்தத்தின்பொழுது, வேலைவாய்ப்பின்மை மிகவேகமாக அதிகரித்தது. இது சமுதாய அளவில் அபாயகரமானதும், பொருளாதார அளவில் வீணடிப்பையும், அறநெறியளவில் வருந்தத்தக்கதாகவும் இருந்தது. ஆகவே, முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கியமான குறிக்கோளாக இருந்தது. மேலும், 1936–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "வேலைவாய்ப்பு, வட்டி, மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு" (General Theory of Employment, Interest and Money) எனும் கீன்சின் நூல் முழுவேலைவாய்ப்பு எனும் பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

5. பொருளாதார வளர்ச்சி

பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் (real per capita income) அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும். இது மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பொருள் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதை உணர்த்துவது ஆகும்.

ஆகவே, சமநிலை பண அளவு, உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு–முதலீடு ஆகிய சூழ்நிலைகளைப் பராமரித்து அதன்மூலம் நீடித்தப் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது. தேவைக்கும் அளிப்பிற்குமிடையே சமநிலையை ஏற்படுத்த நெகிழ்ச்சியுடன் கூடிய பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழிமுறையாகும்.

6. அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலையில் சமநிலையைப் பேணுதல்

செலுத்துச் சமநிலையில், சமநிலையைப் பேணுதல் என்பது பணவியல் கொள்கையின் அடுத்தக் குறிக்கோளாகும். உலகப்போர்களுக்குப் பிறகு வணிகத்தில் சமனற்ற நிலைகள் தோன்ற ஆரம்பித்தன. உலக வணிகம் சமனற்ற நிலையில் அதிகரித்ததால் வரும் அயல்நாட்டு செலாவணி சிக்கலாகும். இதன்காரணமாக செலுத்து சமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதின் திறனையும் குறைக்கும். இதனால், குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியினைக் குறைப்பதால் அதன் வளர்ச்சி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் பாதகமான நிலைக்குத் தள்ளப்படுகிறது. ஆகவே, பணவியல் கொள்கை செலுத்துச் சமநிலையில் சமமான நிலையினைப் பேணுவதை தனது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

6.11 வங்கித் துறையில் அண்மைக்கால, முன்னேற்றங்கள் (Recent Advancements in Banking Sector)

6.11.1 மின்னணு வங்கி முறை (E–Banking)

மின்னணு வங்கியானது நிகழ்நிலை வங்கி முறை (Online Banking) அல்லது இணைய வங்கி முறை (Internet Banking) எனவும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு வங்கி அல்லது நிதிநிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தங்களது பல்வேறு நிதிப்பரிமாற்றங்களை அவ்வங்கி அல்லது நிறுவனத்திற்கு நேரில் செல்லாமல் அவற்றின் இணையதளத்திலேயே நிகழ்த்துவது ஆகும். பாரம்பரியமான கிளை வங்கிமுறை போல் (branch banking) அல்லாது இவ்வங்கி முறையில் மையப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குள் (core banking) இணைப்பினை ஏற்படுத்தி பரிமாற்றங்களும் பிற வங்கி நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. இன்றைய இந்த மெய்நிகர் வங்கி முறை (virtual banking) வழக்கமான வங்கிமுறையுடன் ஒப்பிடும்பொழுது பரிமாற்றங்களுக்கான செலவையும் நேரத்தையும் பெருமளவுக்குக் குறைக்கின்றது.

6.11.2 ஆர்.டி.ஜி.எஸ் (RTGS), நெஃப்ட் (NEFT)

இது ஒரு வங்கியின் வாடிக்கையாளர் தனது கணக்கிலிருக்கும் பணத்தை மற்ற வங்கியின் எந்த ஒரு கிளையில் கணக்கு வைத்திருக்கும் மற்றொரு வாடிக்கையாளருக்கும் பணத்தினை விரைவாக மாற்றும் முறையாகும். இவ்வகை பணபரிமாற்றங்கள் இருவகைப்படும்: ஆர்.டி.ஜி.எஸ். மற்றும் நெஃப்ட். இதில் நிகழ்நேர பெருந்திரள் தீர்வுகள் (Real Time Gross Settlements – RTGS ஆர்.டி.ஜி.எஸ்) என்பது பெயரில் குறிப்பிட்டுள்ளவாறு பரிமாற்றத்துக்காகக் காத்திருக்கும் நேரம் ஏதும் இல்லாமல் நிகழ்நேரத்திலேயே கணக்கீடு ஏதும் இன்றி நடைபெறுகிறது. மொத்த பணமதிப்புத் தீர்வு என்பதன் பொருள் பணப்பரிமாற்றங்கள் அறிவுறுத்தலின்படி ஒன்றன்பின் ஒன்றாகத் தீர்க்கப்படுகிறது என்பதாகும்.

தேசிய மின்னணுவழி பணப்பரிமாற்றம் (National Electornic Funds Transfer – NEFT – நெஃப்ட்) என்பது வலைத்தள இணைப்பின் மூலமாக ஏதேனும் ஒரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் மூலம் மற்றொரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் கணக்கு வைத்திருக்கும் தனி மனிதர்கள், வணிகர்கள், மட்டுமல்லாமல் நிறுவனங்களும் பணம் பெற்றுக்கொள்ளும் முறையாகும். இதில் நெஃப்ட் அரைமணிக்கொருமுறையான தொகுப்பாக பணப்பரிமாற்றத்தை மேற்கொள்கிறது. அனைத்து வங்கி வேலைநாள்களிலும் காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரை மொத்தம் 23 தொகுப்புகளாகப் பணப்பரிமாற்றம் நடைபெறுகிறது. இதில், பணப்பரிமாற்றம் நடைபெற்ற அதே நாளில், பணத்தை பெறுபவர் காலை 8 மணிமுதல் மாலை 6.30 வரையிலான தொகுப்பில் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மாலை 6.30 மணிக்குமேல் இரவு 7 மணிவரையிலான நேரத் தொகுப்பில் பரிமாற்றம் நிகழ்ந்தால்

12-Economics-Tamil-Chapter_6.indd 138 12-01-2023 10:13:48

அதே வேலைநாளிலோ அல்லது அடுத்த வேலைநாளிலோ முடிவுறும். இவ்விரு முறைகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் பார்வையில் நடைபெறுகின்றன.

NEFT	RTGS
தேசிய மின்னனு வழி பணப்பரிவர்த்தனை	நிகழ்நேர பெருந்திரள் தீர்வுகள்
தொகுப்பாகப் பரிமாற்றம் செய்யப்படுகின்றது. எனவே தாமதமாகும்	நிகழ்நேரத்தில் பரிமாற்றம். எனவே விரைவாகச் செயல்படும்.
நேரம்: காலை 8 மணிமுதல் மாலை 6.30 மணிவரை (மாலை 12.30 வரை மட்டும் சனிக்கிழமைகளில்)	நேரம் காலை 9 மணிமுதல் மாலை 4.30 வரை (மாலை 1.30 வரை சனிக்கிழமைகளில்)
குறைந்தபட்ச அளவு கிடையாது	குறைந்தபட்ச அனுப்பும் தொகை ₹2 இலட்சம்

6.11.3 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automated Teller Machine)

தானியங்கி பணம் வழங்கும் இயந்திர முறை 1967–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்தத் தலைமுறைத் தானியங்கி பணம் வழங்கும் முறை நேரடித் தொடர்பினைத் தவிர்ப்பதாக இருக்கும். இந்த நேரடித் தொடர்பற்ற ஏ.டி.எம். முறை ஸ்மார்ட் கைபேசி வசதியில் உள்ள ஆப்பிள் பே, கூகுள் வாலட் முதலான பணப்பரிவர்த்தனை முறைகளைப் போன்றது. சில வெளிநாடுகளில் நேரடித் தொடர்பற்ற ஏ.டி.எம். முறைகள் கிடைக்கின்றன. இந்தியாவில் பையொமெட்டிரிக் முறையில் அறிந்து பணம் வழங்கும் முறைகள் கத்தார் தேசிய வங்கி ஏ.டி.எம் இயந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது. இம்முறைகள் ஏ.டி.எம்.களில் நடைபெறும் பாதுகாப்பற்ற பணப்பரிமாற்றத்தின் சிக்கல்களைத் தவிர்ப்பதாக இருக்கும்.

6.11.4 பேடிஎம் (Paytm)

பேடிஎம் என்பது இந்திய மின்னணு வணிகப் பணம் வழங்கும் முறையாகும். பணம் வழங்கும் வங்கி (Payment Bank) என்பதன் விரிவாக்கம் தான் பே.டிஎம் எனப்படுகிறது. இது ஆகஸ்ட் 2015இல் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ் வங்கி விஜய் சர்மா கேல்கர் என்பவரின் 51 விழுக்காடு பங்குகளையும், ஒன்97 கம்யூனிகேசன்ஸ் (One97 Communications) நிறுவனத்தின் 39 விழுக்காடு பங்குகளையும், ஒன்97 கம்யூனிகேசன்ஸின் துணைநிறுவனத்தின் 10 விழுக்காடு பங்குகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தனி நிறுவனம் ஆகும்.

6.11.5 பற்று அட்டையும் (Debit Card) கடன் அட்டையும் (Debit Card and Credit Card)

பற்று அட்டை என்பது வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை தானியங்கி இயந்திரத்தின் மூலம் பணம் எடுப்பது, பண்டங்கள் பணிகளுக்கானக் கட்டணங்களை வழங்குவது ஆகிய பணப்பரிபரிமாற்றங்களுக்குப் பயன்படுத்தப்படும் அட்டையாகும்.

கடன் அட்டை என்பது, அந்த அட்டையை வழங்கிய நிறுவனத்திற்கு உறுதியளித்தவர்களால் பெறப்படும் அட்டையாகும். இந்த அட்டையைக் கொண்டு பண்டங்கள், பணிகளுக்கானக் கட்டணங்களைச் செலுத்தலாம். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையுடன், ஒத்துக்கொள்ளப்பட்ட கூடுதல் கட்டணத்தையும் சேர்த்து கடன் அட்டை வழங்கிய நிறுவனத்துக்கு பின்னர் அவர் செலுத்த வேண்டும். பெரும்பாலும் வங்கிகள்தான் கடன் அட்டைகளை வழங்குகின்றன. கடன் அட்டை முறை என்பது கடன் வழங்கும் முறையின் ஒரு நீட்சி ஆகும். பல்வகைப்பட்ட சிக்கலானக் கட்டணமுறைகள் வாடிக்கையாளர்கள் கடன் அட்டை கொண்டு பண்டங்களை வாங்குவதைக் கட்டுப்படுத்துகிறது.

6.11.6 செயல்படாத சொத்து (Non–Peforming Assets)

கடன் வாங்குபவர் தொடர்ந்து 90 நாள்களில் வட்டியோ கடன்தொகையின் அசல் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை செயல்படாத சொத்து என்கிறோம். இவ்வகையான செயல்படா சொத்துகள் நிதிநிறுவனங்களுக்கு மிகப்பெரும் சிக்கலாக இருக்கும். ஏனெனில், அவை தங்களது வருமானத்திற்கு கடனுக்கான வட்டியைச் சார்ந்தே இருக்கும். இப்பொழுது, அவ்வகை சொத்துகளின் மதிப்பு ₹10 லட்சம் கோடி அளவுக்கு இருக்கிறது. இதன் விளைவாக, வங்கிகளில் மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, இந்திய அரசு ஏழை மக்களின் வரிப்பணத்தினை பயன்படுத்தி அப்பற்றாக்குறையைச் சரிசெய்யும் நெருக்கடிக்கு ஆளாகிறது. ஏற்கனவே ₹2 லட்சம் கோடி அளவுக்குப் பற்றாக்குறைக்கானப் பணத்தை இந்திய அரசு செலுத்தியுள்ளது. 2018 – 19ஆம் ஆண்டுகளில் ₹68,000 கோடி மத்திய அரசு வங்கிகளுக்கு செலுத்தியுள்ளது. இவ்வாறு செயல்படா சொத்துகள் சாதாரண மக்களைப் பாதிக்கின்றது.

6.11.7 வங்கிகள் இணைப்பு (Merger of Banks)

2017–ஆம் ஆண்டு மைய அரசின் அமைச்சரவைக் குழுகூடி இந்திய ஸ்டேட் வங்கி குழுவின் ஐந்து இணை வங்கிகளை இணைப்பதற்கான முடிவை எடுத்தது. இதற்காக சட்ட மசோதா பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

ஐந்து இணை வங்கிகளுடன் பாரதிய மகிளா வங்கியும் இணைக்கப்பட்டு பாரத

12-Economics-Tamil-Chapter_6.indd 140 12-01-2023 10:13:50

ஸ்டேட் வங்கியாக ஏப்ரல்1, 2017 முதல் செயல்படத் தொடங்கியது. இந்த இணைப்பினால் உலகிலுள்ள முதல் 50 வங்கிகள் பட்டியலில் பாரத ஸ்டேட் வங்கியும் இடம்பெற்றது. பைக்கனர் ஸ்டேட் வங்கி, ஜெய்பூர் ஸ்டேட் வங்கி, மைசூர் ஸ்டேட் வங்கி, பாட்டியாலா ஸ்டேட் வங்கி, திருவாங்கூர் ஸ்டேட் வங்கி ஆகியவை இணைக்கப்பட்ட இணைப்பு வங்கிகள் ஆகும். இதற்கு முன்னரே, இந்தூர் ஸ்டேட் வங்கி, சௌராஸ்டிரா ஸ்டேட் வங்கி ஆகிய இரு வங்கிகள் இணைக்கப்பட்டிருந்தன. இணைப்பிற்குப் பிறகு, பாரத ஸ்டேட் வங்கியின் மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 37 கோடியாகவும், கிளைகளின் எண்ணிக்கை 24 ஆயிரமாகவும், தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்களின் எண்ணிக்கை 60 ஆயிரமாகவும் இருக்கிறது.

6.12 பண அங்காடி (Money Market)

அதிக நீர்மைத் தன்மையைக் கொண்டதும் குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகளைக் கையாளும் அங்காடியே பண அங்காடி எனப்படுகிறது. ஒரு நாள் முதற்கொண்டு ஒரு ஆண்டிற்குள் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகள் இவ்வங்காடியில் கையாளப்படுகின்றன. இங்குக் கையாளப்படும் நிதிக்கருவிகள் அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், அழைப்புப் பணம், வைப்புச் சான்றுகள், வங்கியாளர் ஏற்புகள், மாற்றுச் சீட்டுகள், மறு வாங்கல் ஒப்பந்தங்கள், கருவூல உறுதிச் சீட்டுகள், அயல்நாட்டுச் செலாவணிகள் ஆகியவை ஆகும். இவை அனைத்தும் ஒரு ஆண்டிற்குள் முதிர்ச்சியடையும் வகையிலான கருவிகள் ஆகும். இந்திய ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள், மேம்பாட்டு வங்கிகள், வட்டார வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள், இதர அமைப்புசாரா நிதி நிறுவனங்கள் ஆகியவை குறுகிய கால நிதியை பண அங்காடியில் அளிக்கின்றன.

6.13 மூலதன அங்காடி (Capital Market)

நீண்டகால நிதிக் கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி மூலதன அங்காடி எனப்படுகிறது. உற்பத்தி நோக்கில் நிறுவனங்களும் அரசுக்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டும் இடமாகவும் மூலதன அங்காடி இருக்கிறது. மூலதன அங்காடியில் பயன்படுத்தப்படும் பாரம்பரியமான நிதிக் கருவிகள் கடன் பத்திரங்களும் சமபங்குகளும் ஆகும். ஆனால் இப்பொழுது அக்கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேற்கூறியவற்றுடன் அயல்நாட்டுச் செலாவணி, முன்பேர வணிகம், பிற கடன் சாதனங்களும் அடங்கும். இவ்வங்காடியில் தனி முதலீட்டாளர்கள் மட்டுமின்றி நிதி நிறுவனங்கள், நிதிக் கழகங்கள், வங்கிகள், அரசு, பங்குச் சந்தைகள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்டவையும் உறுப்பினர்களாக உள்ளன. இவர்களைக் கடனளிப்பவர்கள், கடன்பெறுபவர்கள், வசதி செய்யும் நிறுவனங்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

6.14 பணமதிப்பு நீக்கம் (Demonetization)

பணமதிப்பு நீக்கம் என்பது அரசின் சட்டப்படியான பணத்தொகுப்பிலிருந்து குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பைச் செல்லாது என அறிவிக்கும் செயலாகும். அந்தப் பணம் பணச்சுழற்சியிலிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்தில் வேறு வடிவிலான பணம்

இடம்பெறும். இந்தியாவில் 2016–ஆம் ஆண்டு நவம்பர் 8–ஆம் நாள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ₹500, ₹1000 காகிதப்பணம் மதிப்பு நீக்கப்பட்டதாக அறிவித்தார். அவ்வாறு மதிப்பு நீக்கப்பட்டப் பணத்தின் மொத்த மதிப்பில் 99 விழுக்காடு இந்திய ரிசர்வ் வங்கிக்குத் திரும்பியது.

6.14.1 பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள்

1. கருப்புப் பணத்தை ஒழிப்பது,
2. இலஞ்சத்தைத் தடுப்பது
3. தீவிரவாதத்திற்குப் பணம் செல்வதை தடுப்பது
4. கள்ளப் பணத்தைத் தடுப்பது ஆகியன.

தொகுப்புரை

ஒரு நாட்டின் வளர்ச்சிச் செயல்பாட்டில் நிதித் துறை முக்கியமான பங்கு வகிக்கின்றது என்பது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது. வருமானத்தை விடக் குறைவாகச் செலவு செய்வோரிடமிருந்து வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்வோருக்கு அதாவது நிகரச் சேமிப்பாளர்களிடமிருந்து நிகரக் கடன் வாங்குவோருக்குப் பணம் பரிமாறும் அமைப்பாக நிதி நிறுவனங்கள், கருவிகள் அங்காடிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பண அமைப்பு செயல்படுகின்றது. வணிகவங்கிகள் தங்கள் செயல்பாடுகளை மாற்றியமைத்தல் அவற்றின் செயல்திறனை மேம்படுத்தியது மூலமாக நிதியியல் சீர்திருத்தக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டுகளில் செயல்படாச் சொத்துகளின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது.

கலைச்சொற்கள்

- **வணிக வங்கிகள்:** கடன் பணத்தை உற்பத்தி செய்வதன் மூலம் வணிக நிறுவனங்களுக்குக் குறுகிய காலக்கடன்கள் வழங்கும் நிறுவனங்கள்.
- **கடன் உற்பத்தி:** கடனும் முன்பணமும் வழங்குதலைப் பெருக்குதல்.
- **வங்கியல்லா பண நிறுவனங்கள்:** முழுமையான வங்கி உரிமம் இல்லாமலும் மைய வங்கியின் மேற்பார்வைக்கு உட்படாத நிதி நிறுவனங்கள்.
- **மைய வங்கி:** அரசின் பணம், பண அளிப்பு, வட்டி விகிதம் ஆகியவற்றை நிருவகிக்கும் அமைப்பு. மைய வங்கிகள் வணிக வங்கிகளை மேற்பார்வை இடுகின்றன.
- **வங்கி விகிதம்:** முதல் தர பத்திரங்களை மைய வங்கி மறு கழிவு செய்யும் விகிதம்.
- **சட்டப்படியான நீர்மை விகிதம்:** மொத்த வைப்பில் வணிக வங்கிகள் கண்டிப்பாக ரொக்கப்பணம், தங்கம், ஏற்பளிக்கப்பட்ட உறுதிப்பத்திரங்கள் ஆக வைத்திருக்க வேண்டிய விகிதம்.
- **ரொக்கக் கையிருப்பு வீதம்:** மொத்த வைப்புத்தொகையில் வணிக வங்கிகள் மைய வங்கியில் ரொக்கமாக வைத்திருக்க வேண்டிய அளவின் வீதம்.

12-Economics-Tamil-Chapter_6.indd 142 12-01-2023 10:13:50

- **நிதிக் கொள்கை:** பண அளிப்பு, வட்டி விகிதம் ஆகியவற்றை நிருவகிக்க மைய வங்கி மேற்கொள்ளும் பேரியல் பொருளாதார நடவடிக்கைகள்.
- **மூலதன அங்காடி:** நீண்ட காலக் கடன், பத்திரங்களுக்கான பண அங்காடி.
- **பண மதிப்பிழப்பு:** குறிப்பிட்ட மதிப்புள்ள காகிதப் பணத்தின் சட்டச் செலாவணித் தகுதியை நீக்குதல்.

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. ஒரு வங்கி என்பது

   அ) நிதி நிறுவனம்
   ஆ) கூட்டுப் பங்கு நிறுவம்
   இ) தொழில்
   ஈ) தொண்டு நிறுவனம்

2. ஒரு வணிக வங்கி செய்யும் பணி

   அ) வைப்புகளை ஏற்றுக் கொள்வது
   ஆ) கடன் வழங்குவது
   இ) அ மற்றும் ஆ.
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

3. வணிக வங்கிகளின் பணிகளின் இருபெரும் பிரிவு

   அ) முதன்மைப் பணிகள்
   ஆ) இரண்டாம் நிலை பணிகள்
   இ) மற்ற பணிகள்
   ஈ) மேற்சொன்ன அனைத்தும்

4. வங்கிக் கடன் என்பது எதைக் குறிக்கிறது?

   அ) கடன் பணம்
   ஆ) முன்பணம்
   இ) கடன் பணமும் முன்பணமும்
   ஈ) கடன் பெறுதல்

5. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்

   அ) கடனும் முன்பண பெருக்கமும்
   ஆ) வருவாய்
   இ) செலவு
   ஈ) சேமிப்பு

6. வங்கியல்லா நிதிநிறுவனங்கள் ---------------- வைத்திருப்பதில்லை.

   அ) வங்கி உரிமம்
   ஆ) அரசு ஏற்பு
   இ) பணச்சந்தை ஏற்பு
   ஈ) நிதி அமைச்சக அனுமதி

7. மைய வங்கி நாட்டின் -------------- அதிகார அமைப்பு.

   அ) பணவியல்
   ஆ) நிதியியல்
   இ) கூலி
   ஈ) தேசிய வருவாய்

8. வங்கிகளின் வங்கி என அழைக்கப்படுவது

   அ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
   ஆ) நபார்டு
   இ) ICICI
   ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

9. கடைசி நேரத்தில் உதவும் உற்ற நண்பன் என்ற பணியினைச் செய்வது

அ) மைய வங்கி
ஆ) வணிக வங்கிகள்
இ) நிலவளவங்கிகள்
ஈ) கூட்டுறவு வங்கிகள்

10. வங்கி விகிதம் என்பது

அ) முதல்நிலை பத்திரங்களை மறு தள்ளுபடி செய்வது
ஆ) வட்டி விகிதம்
இ) அயல்நாட்டு செலாவணி
ஈ) வளர்ச்சி விகிதம்

11. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்

அ) வணிக வங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அயல்நாட்டுச் செலாவணி விகிதம்
ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

12. நெறிமுறைத் தூண்டல் என்பது

அ) உத்தமநிலைப் படுத்தல்
ஆ) உச்சநிலைப்படுத்தல்
இ) தூண்டுதல் நடவடிக்கை
ஈ) குறைவுநிலைப்படுத்துதல்

13. வேளாண் மறுநிதி மேம்பாட்டுக் கழகம் துவங்கப்பட்டது

அ) ஜூன் 3, 1963
ஆ) ஜூலை 3. 1963
இ) ஜூன் 1, 1963
ஈ) ஜூலை 1, 1963.

14. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

அ) ஜூலை 1962
ஆ) ஜூலை 1972
இ) ஜூலை 1982
ஈ) ஜூலை 1992

15. ஏற்றுமதி–இறக்குமதி வங்கி துவங்கப்பட்டது?

அ) ஜூன் 1982
ஆ) ஏப்ரல் 1982
இ) மே 1982
ஈ) மார்ச் 1982

16. மாநில நிதிக் கழகம் எந்தச் சட்டத்தின் கீழ் துவங்கப்பட்டது?

அ) இந்திய அரசு
ஆ) தமிழக அரச
இ) ஒன்றிய பகுதி
ஈ) உள்துறை அரசு.

17. பணவியல் கொள்கையை வடிமைப்பது

அ) கூட்டுறவு வங்கிகள்
ஆ) வணிக வங்கிகள்
இ) மைய வங்கி
ஈ) வெளிநாட்டு வங்கி

18. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

அ) இ–வங்கி
ஆ) இணைய வங்கி
இ) ஆர்.டி.ஜி.எஸ்
ஈ) நெப்ட்.

19. ஏ.டி.எம்.(ATM) என்பதன் விரிவாக்கம் என்ன?

அ) தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்

ஆ) சரி செய்து பணம் வழங்கும் இயந்திரம்

இ) தானாக பணம் வழங்கும் முறை

ஈ) எந்த நேரமும் பணம் (Any Time Money)

20. 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?

அ) ₹500 மற்றும் ₹1000

ஆ) ₹1000 மற்றும் ₹2000

இ) ₹200 மற்றும் ₹500

ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	இ	ஈ	இ	அ	அ	அ	ஈ	அ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
ஆ	இ	ஈ	இ	ஈ	அ	இ	ஆ	அ	அ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. வணிக வங்கிகள் என்பதை வரையறு.

22. கடன் உருவாக்கம் என்றால் என்ன?

23. மைய வங்கி என்பதை வரையறு.

24. CRR மற்றும் SLR ஆகியவற்றை வேறுபடுத்துக.

25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக.

26. கடன் விநியோகப் பகிர்வு என்றால் என்ன?

27. வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. வணிக வங்கிகளின் கடன் உருவாக்க முறை நுட்பத்தினை எழுதுக.

29. வங்கியல்லா நிதியமைப்புகளைப் பற்றி சிறு குறிப்புத் தருக

30. கடன் கட்டுப்பாட்டு முறைகளைக் கூறுக.

31. நபார்டின் பணிகள் யாவை?

32. இந்தியத் தொழில் நிதிக் கழகத்தின் பணிகளைக் குறிப்பிடுக.

33. பண அங்காடியையும், மூலதன அங்காடியையும் வேறுபடுத்துக.

34. பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.
36. வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.
37. இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.
38. பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

செய்முறை

1. அருகில் உள்ள வணிக வங்கிக்குச் சென்று அங்கு நடைபெறும் வங்கி நடவடிக்கைகளைக் கவனித்து அவற்றைப் பற்றிய அறிக்கையை ஆசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. 2016இல் ஏற்படுத்தப்பட்ட பண மதிப்பு நீக்கத்தினால் பொது மக்களுக்கு ஏற்பட்ட தாக்கத்தினைப் பற்றி விவரம் சேகரிக்கவும்

பார்வை நூல்கள்

1. Jhingan, M.L. (2011), Monetary Economics, Vrinda publications (P) Ltd, Delhi.
2. Paul, R.R. (2011), Monetary Economics, Kalyani publications, New Delhi.
3. Hajela, T.N. (2009), Money, Banking and Public Finance – Ane books Pvt.Ltd, New Delhi.
4. Sankaran, S. (2010), Money, Banking and International Trade, Margham Publication, Chennai.
5. Sundharam, K.P.M. (2000), Money, Banking and International Trade, Sultan Chand & Sons, New Delhi.

Websites / e-books

1. Ken Hoyle (1982), Money and Banking, https://www.elsevier.com/books/money-and-banking/hoyle/978-0-434-98505-0
2. Robert Wright (2012), Money and Banking, https://open.umn.edu/ opentextbooks/textbooks/money-and-banking

12-Economics-Tamil-Chapter_6.indd 146 12-01-2023 10:13:51

www.tntextbooks.in

இயல் 7

பன்னாட்டுப் பொருளியல்

"நாடுகளின் பொருளாதாரம் பொருள், வணிகம், நிதி சந்தைகளால் இணைக்கப்பட்டுள்ளது".

– டார்ன்புஸ்ச், பிசர் மற்றும் ஸ்டார்ட்ஸ்

புரிதலின் நோக்கங்கள்

1. பன்னாட்டு வணிகத்தின் அவசியத்தையும், அதன் கோட்பாடுகளையும் விளங்கிக் கொள்ளுதல்.
2. செலாவணி விகித நிர்ணயம், மாற்றம், பன்னாட்டு வணிகச் செலுத்து நிலை ஆகியவற்றைப் புரிந்து கொள்ளுதல்
3. பன்னாட்டு வணிகம், பன்னாட்டு நேரடி முதலீடு பற்றி நுண்ணறிவைப் பெற்றுக் கொள்ளுதல்.

7.1 அறிமுகம்

பன்னாட்டுப் பொருளியல் பாடம் சில அடிப்படைக் கேள்விகளுக்குப் பதிலளிக்க உருவாக்கப்பட்ட ஒரு எளிய பன்னாட்டு வணிகக் கோட்பாட்டிலிருந்து தோன்றியது. முதன்முதலில் இப்பாடம் உலகத்தின் குறிப்பிட்ட பகுதியான மேற்கு ஐரோப்பாவில் உருவானது. ஆடம்ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ, டாசிக், ஹேபர்லர், ஜே.எஸ்.மில், பேலா பாலஸா முதலான தொன்மைப் பொருளியல் நிபுணர்களின் பங்களிப்புகளால் பன்னாட்டுப் பொருளியலின் பாடப்பொருள் வடிவமைக்கப்பட்டது. பன்னாட்டுப் பொருளியல் பண்டங்கள், பணிகளின் வணிகத்தை மட்டும் உள்ளடக்கிய பன்னாட்டுப் பொருளியல் நடவடிக்கைகளின் முழுப் பரப்பைப் படிப்பதோடு, மூலதன ஓட்டம், தொழில்நுட்ப மாறுதல், மாற்று விகிதப் பிரச்சினை, அயல்நாட்டு வணிக செலுத்து சமநிலை, இறக்குமதி வரிகள், பாதுகாப்பு வணிகக் கொள்கை, தடையற்ற வணிகக் கொள்கை, முதலீட்டு ஓட்டம், தனிநாடுகளால் பின்பற்றப்படும் நிதிக்கொள்கை மற்றும் பணக்கொள்கை ஆகியவற்றின் பங்கு ஆகியவற்றை ஒட்டிய கருத்துகளையும் கற்பிக்கிறது.

ஹேபர்லர்

12-Economics-Tamil-Chapter_7.indd 147 12-01-2023 18:07:01

7.2 பன்னாட்டுப் பொருளியலின் பொருள் விளக்கம்

பன்னாட்டுப் பொருளியல் என்பது பண்டங்கள், பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும். எனவே, பன்னாட்டு வாணிகமே இப்பாடப்பிரிவின் முதன்மையான உள்ளடக்கமாகும்.

பன்னாட்டுப் பொருளியலை நாடுகள் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல், இந்த சார்ந்திருத்தலை நிர்ணயிக்கும் காரணிகள், அதன் விளைவுகளை விளக்கமாக எடுத்துரைக்கும் பொருளியலின் சிறப்புப் பாடப் பிரிவு எனலாம்.

7.3 பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம்

பன்னாட்டுப் பொருளியலின் பொருளடக்கம் பல பாகங்களை உள்ளடக்கியது. அவை கீழ்க்காணுமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. தூய வணிகக் கோட்பாடு

நாடுகள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான காரணங்கள், எந்த வகையான பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன, எந்தெந்த வகையான நாடுகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகிறது, வாணிகம் செய்யப்படும் அளவு, அயல் வாணிக விகிதம், பண மாற்று விகிதம் பன்னாட்டுப் பண்டங்கள் பொருள் வாணிகச் செலுத்துநிலை, அயல் வாணிகச் செலுத்து நிலை ஆகியவற்றை விவரிக்கும் பிரிவே தூய வாணிகக் கோட்பாடாகும்.

2. கொள்கைச் சச்சரவுகள்

நாடுகளுக்கிடையேயான வாணிக உறவுகளைக் கட்டுப்படுத்துவதா, தடைகளற்ற வணிகத்தை அனுமதிப்பதா என்பனவற்றை இப்பிரிவு விவாதிக்கிறது. பண்ட வணிகம் முதலீடு, தொழில்நுட்பம் இடம் பெயர்தல், அயல் வாணிகத்தின் மீது வரிவிதித்தல், மானியம் வழங்குதல், பன்னாட்டு விலை பேதம், செலவாணிக் கட்டுப்பாடுகள், பன்னாட்டு நிதி உதவி, பன்னாட்டுக் கடன் அயல்நாட்டு நேரடி முதலீடு, அயல்நாட்டுச் செலுத்துநிலைத் தீர்வுகள் ஆகியவை இந்தப் பிரிவின் கீழ் அடங்கும்.

3. பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்

இந்தப் பிரிவு பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள், நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, அமைப்புகளின் மூலமாக நாடுகளின் பொருளாதாரம் இணைக்கப்பட்டுள்ளதை விவரிக்கிறது. பன்னாட்டு வணிக நிறுவனங்களின் செயல்பாடுகளையும் இப்பிரிவு விவாதிக்கிறது.

4. பன்னாட்டு நிதியும், வணிக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும்

பன்னாட்டுப் பண நிதியம், மறு கட்டமைப்பு, பொருளாதார மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி (உலக வங்கி), உலக வாணிக நிறுவனம், வாணிகம், பொருளாதார மேம்பாட்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு முதலான பன்னாட்டு அமைப்புகள் நாடுகளுக்கிடையிலான பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் விதம் பற்றி இப்பிரிவில் புரிந்து கொள்ளலாம்.

12-Economics-Tamil-Chapter_7.indd 148 12-01-2023 18:07:02

7.4 வாணிகம் – பொருள் விளக்கம்

வாணிகம் என்பது நாடுகளை இணைக்கும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகும். பண்டங்கள் பணிகளை மக்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதையே வாணிகம் என்கிறோம்.

வாணிகத்தை,

அ) உள்நாட்டு வாணிகம்

ஆ) பன்னாட்டு வாணிகம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

7.4.1 உள்நாட்டு வாணிகம்

பண்டங்கள், பணிகளை ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்கும் புவி எல்லைகளுக்குள்ளும் பரிமாறிக்கொள்வதை உள்நாட்டு வாணிகம் எனலாம். இதனை உள்ளூர் வாணிகம் அல்லது 'ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையிலான வாணிகம்' எனவும் அழைக்கலாம்.

7.4.2 பன்னாட்டு வாணிகம்

பண்டங்கள், பணிகளை இரு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக்கொள்வதைப் பன்னாட்டு வாணிகம் எனலாம். இது நாடுகளின் எல்லைகளைக் கடந்து நடைபெறும் வாணிகம். இதை வெளிவர்த்தகம், அல்லது 'அயல் வாணிகம்' அல்லது 'மண்டலங்களுக்கிடையிலான வாணிகம்' எனவும் அழைக்கலாம்.

7.4.3 உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகள்

வ. எண்	உள்நாட்டு வாணிகம்	பன்னாட்டு வாணிகம்
1.	ஒரு நாட்டிற்குள் மக்களுக்கும், நிறுவனங்களுக்குமிடையேயும் நடைபெறும் வாணிகம்	பல நாட்டின் மக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான வாணிகம்
2.	உழைப்பும், மூலதனமும் ஒரு நாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல்	உழைப்பும் மூலதனமும் நாடுகளுக்கிடையே இடம் பெயர்தல் தடைகளுக்குட்பட்டது
3.	பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை	பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலை சுங்கவரி, பங்களவு முதலான தடைகள் கடினமாக்குகின்றன.
4.	விற்றல் வாங்கலில் ஒரே ஒரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது	பல நாட்டு பணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
5.	புவி அமைப்பும் கால நிலைச் சூழலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி இருக்கும்	புவி அமைப்பும் கால நிலையும் வேறுபடும் இயல்பு கொண்டவை

12-Economics-Tamil-Chapter_7.indd 149 12-01-2023 18:07:02

6.	வாணிகமும், நிதி நடைமுறைகளும் ஒரே மாதிரியானவை	வாணிகமும், நிதி நடைமுறைகளும் வேறுபடும் போக்குக் கொண்டவை
7.	அரசமைப்புமுறை மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கை ஆகியவற்றில் வேறுபாடில்லை	அரசமைப்பு முறை மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கை ஆகியவற்றில் வேறுபாடுகளிருக்கும்

7.5 பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகள்

பன்னாட்டு வாணிகக் கோட்பாடுகளை தொன்மைக் கோட்பாடுகள், தற்காலக் கோட்பாடுகள் என கால அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

7.5.1 பன்னாட்டு வாணிகத் தொன்மை கோட்பாடுகள்

அறிமுகம்

ஆடம் ஸ்மித் 1776 ஆம் ஆண்டில் தனி அடக்கச் செலவுக் கோட்பாட்டினை விளக்கினார். இதை மேலும் செம்மைப் படுத்த டேவிட் ரிக்கார்டோ ஒப்புமை செலவுக் கோட்பாட்டினை விளக்கினார். இதை ஜெ.எஸ் மில், ஜெ.இ கெய்ர்னஸ், சி.எப் பாஸ்டபில், எப்.டபில்யூ டாசிக், காட்பிரய்ட் ஹாபெர்லர் ஆகிய பொருளியல் அறிஞர்கள் செழுமைப்படுத்தினார்கள். ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ ஆகியோரின் வின் கோட்பாடுகளை மட்டும் இங்கே கற்றுத் தெளிவோம்.

7.5.2. ஆடம் ஸ்மித்தின் முழுச் செலவுக் கோட்பாடு

வாணிகத் தடைகளற்றச் சூழலில் குறைவான அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தனித் தேர்ச்சியை அடைவதினால் அனைத்து நாடுகளுக்கும் பன்னாட்டு வாணிகத்தின் பலன் கிடைக்குமென ஆடம் ஸ்மித் நம்பினார்.

தொன்மை வாணிகக் கோட்பாடுகள்

வணிகவாதம் (16 ஆம் நூற்றாண்டுக்கு முன்)

- நாம் – அவர்கள் வாணிகக் கருத்தைக் கொண்டது
- பிற நாட்டின் ஆதாயம் நம் நாட்டின் இழப்பு

தடையில்லா வாணிகக் கோட்பாடுகள்

- முழு நன்மை (ஆடம் ஸ்மித், 1776)
- ஒப்பீட்டு நன்மை (டேவிட் ரிக்கார்டோ, 1817)
- உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி, பண்டங்களின் தடையில்லா நகர்வு வாணிகத் தொடர்பு கொண்டுள்ள அனைத்துப் பொருளாதாரங்களுக்கும் நன்மை பயக்கும்.

தடையில்லா வாணிகம் சரிசெய்த கோட்பாடுகள்

- காரணி – சரிவிகிதம் (ஹெக் செர் – ஒலின் 1919)
- பன்னாட்டுப் பண்டத்தின் வாழ்க்கைச் சுழற்சி (ரே வெர்னன் 1966)

ஆடம் ஸ்மித்தின் கோட்பாடு

ஆடம்ஸ்மித்தின் கருத்தின் படி குறைந்த தனி அடக்கச் செலவில் பொருளுற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பதே பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்கான அடிப்படையாகும். இரண்டு நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடுகின்றன என எடுத்துக் கொள்வோம். அதில் ஒரு நாடு ஒரு பண்டத்தை

குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் சிறப்புத் தேர்ச்சியை பெற்றுள்ளது. மற்றொரு நாடு வேறு பண்டத்தை குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்யும் தேர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த இரு நாடுகளும் பண்டங்களைப் பன்னாட்டு வாணிகத்தில் பரிமாற்றம் செய்து கொண்டால் இரண்டு நாடுகளுக்கும் நல்ல பலன் கிடைக்கும்.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன (2 ×2 மாதிரி).
2. உழைப்பு மட்டுமே உற்பத்தியில் பயன்படுத்தப்படும் ஒரே உற்பத்திக் காரணி.
3. எல்லா உழைப்பாளர்களும் ஒரே மாதிரியான இயல்புடையவர்கள்.
4. ஒரு பண்டத்தின் செலவு அல்லது விலை அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்ய தேவைப்படும் உழைப்பின் அளவைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது.
5. போக்குவரத்து செலவு இல்லை.

எடுத்துக்காட்டு விளக்கம்

முழுச் செலவுக் கோட்பாட்டை கீழ்காணும் அட்டவணையின் மூலமாக எளிதாக விளக்கலாம்.

முழுச் செலவு

நாடு	இந்தியா	சீனா
	(தொழிலாளரின் தலா உற்பத்தி)	
கோதுமை	20	8
துணி	6	14



படம் 7.1

இந்தியா கோதுமையை சீனாவைவிடக் குறைந்த அடக்க செலவில் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளது என்பது மேற்கண்ட எடுத்துக்காட்டில் இருந்து தெளிவாகிறது. சீனா துணியை இந்தியாவைவிட குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் திறன் பெற்றுள்ளதும் தெளிவாகிறது. எனவே, இந்தியா கோதுமையை உபரியாக உற்பத்தி செய்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். சீனாவிலிருந்து துணியை இறக்குமதி செய்து கொள்ளலாம். இந்திய கோதுமையை சீனா வாங்கிக்கொண்டு, துணியை இந்தியாவுக்கு விற்கும். இவ்வகையான பன்னாட்டு வாணிகத்தில் இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் நன்மை உண்டாகும்.

7.5.3. ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவுக் கோட்பாடு

டேவிட் ரிக்கார்டோ இங்கிலாந்து நாட்டை சேர்ந்தப் பொருளியல் அறிஞர். தன் "அரசியல் பொருளாதாரமும், வரி விதித்தலின் கோட்பாடுகளும்" எனும் புத்தகத்தை 1817 இல் வெளியிட்டார். இதில் ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டை விளக்கி எழுதியுள்ளார். இதற்கு பிறகு ஜே.எஸ்.மில், மார்ஷல், டசிக் ஆகியோரும் வேறு பலரும் இக்கோட்பாட்டை மெருகேற்றினர்.

ரிக்கார்டோ பண்டங்களை உற்பத்தி செய்யச் செலவழிக்கப்படும் செலவு

வேறுபாட்டை பன்னாட்டு வாணிகத்திற்கான அடிப்படை என்கிறார். ஒரு நாடு உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கிடையே தனி அடக்க செலவில் வேறுபாடில்லை என்றாலும் ஒப்புமை செலவுச் வேறுபட்டிருக்கும். ஒரு நாடு குறைந்த ஒப்புமை செலவில் ஒரு பண்டத்தை உற்பத்தி செய்யுமானால் அந்த நாடு பன்னாட்டு வாணிகத்தின் மூலம் பலனடைய முடியும் என்கிறார்.

ரிக்கார்டோ இரண்டு பண்டங்களை ஒரு நாடு குறைந்த தனி அடக்கச் செலவில் உற்பத்தி செய்ய முடிந்தாலும் அந்த நாடு மற்ற நாட்டு உற்பத்திச் செலவுடன் ஒப்பிட்டு குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலும் பண்ட உற்பத்தியில் தனித் தேர்ச்சி அடைந்து ஏற்றுமதி செய்யலாம். இதே போன்று, எந்தப் பண்டத்தையும் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய இயலாத நாடு மற்ற நாட்டின் பண்ட உற்பத்திச் செலவுடன் ஒப்பிட்டு மிக உயர்வான உற்பத்திச் செலவுள்ள பண்ட உற்பத்தியை நிறுத்திவிட்டு அவற்றை இறக்குமதி செய்து பலனடையலாம்.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன. (2 ×2 மாதிரி)
2. கூலிச் செலவு மட்டுமே உற்பத்தி செலவாகும்.
3 உழைப்பாளர்களனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்.
4. உழைப்பு ஒரு நாட்டுக்குள் இடம்பெயரத் தக்கது. நாடுகளுக்கிடையே இடம் பெயர இயலாதது.
5. உற்பத்தியளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.
6. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தின் மீது தடைகளை விதிப்பதில்லை.
7. உற்பத்தி தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் நிகழ்வதில்லை.
8. போக்குவரத்துச் செலவு கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை.
9 நாட்டின் சந்தையில் நிறைவுப் போட்டி நிலவுகிறது.
10. உற்பத்தி வளங்கள் முழுவதும் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன.
11. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

எடுத்துக்காட்டு விளக்கம்

ரிக்கார்டோவின் ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை அமெரிக்காவும் இந்தியாவின் துணி உற்பத்தி கோதுமை உற்பத்தி செலவுகளைக் கற்பனை உதாரணங்களாக கொண்டு புரிந்து கொள்ளலாம்.

ஒப்புமைச் செலவு

(ஒரு அலகு உற்பத்தி செய்யத் தேவைப்படும் உழைப்பின் அளவு)

நாடு	துணி	கோதுமை	உள்நாட்டு பரிமாற்ற விகிதம்
அமெரிக்கா	100	120	1 மூட்டைகோதுமை = 1.2 மீட்டர் துணி
இந்தியா	90	80	1 மூட்டைகோதுமை = 0.88 மீட்டர் துணி



வரைபடம் 7.2

குறிப்பு: வளைகோட்டின் சாய்வுகள் வேறுபாடானவை

12-Economics-Tamil-Chapter_7.indd 152 12-01-2023 18:07:02

அமெரிக்காவுக்கு துணி, கோதுமை ஆகிய இரு பண்ட உற்பத்தியிலும் முழுப் பயன்பாட்டுத் தேர்ச்சி இருப்பது மேற்கண்ட எடுத்துக்காட்டில் இருந்து தெளிவாகிறது, இந்தியா அமெரிக்காவிற்கு கோதுமையை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வாணிகத்தின் பலனைப் பெறலாம். இருப்பினும் அமெரிக்காவிற்கு கோதுமை உற்பத்தியில் ஒப்பீட்டுச் செலவு சாதகமாக உள்ளது. (80 / 120 < 90 / 100) இந்தியாவிற்கு துணி உற்பத்தியில் ஒப்புமைச் செலவு பாதகம் குறைவாக உள்ளது. கோதுமை, துணி உற்பத்தியில் இந்தியாவிற்குப் பாதகம் குறைவாக இருப்பதால் இந்தியா துணி உற்பத்தியில் தேர்ச்சி பெற்று அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து கோதுமையை இறக்குமதி செய்துகொள்ளலாம். பன்னாட்டு வாணிகத்தில் பண்ட பரிமாற்ற விகிதம் 0.88 லிருந்து 1.2 அலகு வரை துணி ஒரு அலகு கோதுமையாக இருந்தால் இரு நாடுகளும் நன்மை பெறும். பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இந்தியாவும் அமெரிக்காவும் துணியும், கோதுமையையும், அவரவர்களே உற்பத்தி செய்ய இந்தியா 170 அலகு உழைப்பையும் அமெரிக்கா 220 அலகு உழைப்பையும் பயன்படுத்த வேண்டிவரும். மாறாக, பன்னாட்டு வாணிகத்தை அனுமதித்தால் 80 அலகு உழைப்பளவைக் கொண்டு உற்பத்தி செய்த ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் கொடுத்து 90 அலகு உழைப்பு தேவைப்படுகிற ஒரு மீட்டர் துணியை வாங்கிவிட முடியும். ஆக இந்தியா 160 அலகு மட்டுமே உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து அதில் ஒரு மூட்டை கோதுமையை அமெரிக்காவிடம் ஒரு மீட்டர் துணியை பரிமாறிக்கொள்ளலாம். இதுவே பன்னாட்டு வாணிகத்தால் இந்தியாவுக்குக் கிடைக்கும் பலனாகும். பத்து அலகு உழைப்பு மிச்சப்படுவதே பன்னாட்டு வாணிகத்தின் பலன் என்கிறார் ரிக்கார்டோ, இதே போன்று 200 அலகு உழைப்பை மட்டுமே உற்பத்தியில் ஈடுபடுத்தி அமெரிக்கா ஒரு மீட்டர் துணியையும், ஒரு மூட்டை கோதுமையையும் பெறமுடியும். ஒரு மீட்டர் துணி, ஒரு மூட்டை கோதுமை உற்பத்தி செய்தால் 220 அலகு உழைப்பு தேவைப்படும். அமெரிக்காவுக்கு 20 அலகு உழைப்பு மிச்சப்படுவதையே பன்னாட்டு வாணிகத்தின் பலன் எனலாம்.

திறனாய்வு

1. உழைப்புச் செலவு உற்பத்தி செலவில் ஒரு பகுதிதான். எனவே, உழைப்புச் செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ள கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை.

2. பல்வேறு நாட்டுத் தொழிலாளிகள் ஒரே அளவு திறன் பெற்றவர்களல்லர்.

7.5.4. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு

அறிமுகம்

சுவீடன் நாட்டுப் பொருளியல் அறிஞர் இலி ஹெக்சர் 1919இல் ஒரு பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டை விளக்கினார். அந்தக் கோட்பாட்டை மேலும் விளக்கங்களைக் கொடுத்து ஹெக்சரின் மாணவரான பெர்டில் ஒலின் விரிவுபடுத்தினார். இந்தக் கோட்பாடு ரிக்கார்டோவின் கோட்பாட்டின் விரிவாக்கமாகவும் அமைந்தது. நாடுகளுக்கிடையே உற்பத்தி வளங்களின் அளிப்பு அளவில் நிலவும் வேறுபாடே பன்னாட்டு வாணிகத்துக்கான காரணம் என்ற இலி ஹெக்சரின் உற்பத்தி வள வேறுபாடு கோட்பாட்டை புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு என்றழைக்கிறோம்.

காரணி இருப்பு மாதிரி

- ஹெக்செர், ஒலின் உருவாக்கினார்
- அதிகமான காரணி இருப்புகளைக் கொண்ட நாடுகள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சிப் பெற்று வாணிகத்தில் ஈடுபடலாம்
- திறன் உழைப்பின் இருப்பு → சிறப்புத் தேர்ச்சி → ஏற்றுமதி

→ திறனற்ற உழைப்பு கொண்ட நாடுகளால் உற்பத்தி செய்யப்பட்டப் பண்டங்கள், பணிகளுக்குப் பரிமாற்றம் செய்தல்

- ஏற்றுமதிகள் இருப்பு அதிகமாக உள்ள காரணியுடன் தொடர்புடையன
- இறக்குமதிகள் பற்றாக்குறையான காரணியுடன் தொடர்புடையன.
- அதிக காரணிப் பெயர்வு என்பதை எடுகோளாகக் கொள்கிறது

கோட்பாடு

ஒப்புமைச் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான காரணம் என தொன்மைப் கோட்பாடுகளில் காணப்படுகிறது. மேலும் தொன்மை கோட்பாடு உழைப்பை மட்டுமே உற்பத்தி காரணியாக கருதுகிறது. ஆனால் புதிய வாணிகக் கோட்பாடு ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கான காரணங்களை விளக்குகிறது. கீழ்கண்ட இரண்டு காரணங்களால் நாடுகளுக்கிடையே ஒப்புமைச் செலவு வேறுபடுகின்றது.

i) நாடுகள் பெற்றுள்ள உற்பத்தி காரணிகள் அளவு வேறுபடுகிறது.

ii) உற்பத்திக்குத் தேவைப்படும் உற்பத்தி காரணிகளின் விகிதமும் வேறுபடுகிறது.

எடுகோள்கள்

1. இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி இரண்டு விதமான பண்டங்களை உற்பத்தி செய்கின்றன (2X2X2 மாதிரி).
2. நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்திக் காரணிகளைப் பெற்றுள்ளன.
3. பண்டங்கள் உற்பத்தியில் உற்பத்தி காரணியின் தேவைப்படும் அளவு தீவிரத்தன்மையைப் பொறுத்து வகைப்படுத்தப்படுகிறது.
4. இரண்டு நாடுகளும் ஒரே விதமான உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.
5. இரண்டு நாடுகளும் ஒரே இயல்பான தேவையைப் பெற்றுள்ளன.
6. இரண்டு நாட்டின் பண்டங்காடியிலும், உற்பத்திக் காரணிகளுக்கான அங்காடியிலும் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

ஹெக்செர் – ஓலின் கோட்பாடு (H – O Theorem)

H – O கோட்பாடு

"மூலதன இருப்பை அதிகம் கொண்ட நாடு மூலதனப் பண்டங்களையும், உழைப்பு இருப்பை அதிகம் கொண்ட நாடு உழைப்பை அதிகம் பயன்படுத்தும் பண்டங்களையும் ஏற்றுமதி செய்யும்".

காரணி

காரணி விகிதங்களின் மாதிரி ஏற்றுமதி, இறக்குமதியைக் காரணி இருப்பு அளவுகளோடு தொடர்புபடுத்துகிறது.

ஏற்றுமதிகள்

ஒரு நாடு அதிகமாகக் கொண்டுள்ள காரணியைக் கொண்டு உற்பத்தி செய்யும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்

www.tntextbooks.in

விளக்கம்

மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் உழைப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் தயாரிக்கப்படும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும் என ஹெக்சர் ஒலின் கூறுகிறார்கள். ஒரு உற்பத்தி காரணி மிகுதியாகச் கிடைக்கிறதா பற்றாக்குறையாக உள்ளதா என்பது மற்ற காரணிகள் கிடைக்கும் அளவைப் பொருத்தது. ஒரு நாட்டின் மூலதன அளவிற்கும் மற்ற உற்பத்தி காரணி அளவிற்குமான விகிதம் மற்ற நாடுகளின் விகிதத்தை விட அதிகமாக இருந்தால் அந்த நாட்டை மூலதனம் மிகுந்த நாடு எனக் கருதலாம்.

எடுத்துக்காட்டு விளக்கம்

விவரங்கள்	இந்தியா	அமெரிக்கா
உழைப்பின் அளிப்பு	50	24
மூலதனத்தின் அளிப்பு	40	30
மூலதன உழைப்பு விகிதம்	40/50 = 0.8	30/24 = 1.25

இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு போன்று தோன்றினாலும் அமெரிக்காவே மூலதனம் மிகுந்த நாடாகும் என்பது அமெரிக்காவின் மூலதன உழைப்பு விகிதமான 1.25 இந்தியாவின் 0.8 விட அதிகமிருப்பதிலிருந்து புரிகிறது. கீழ்காணும் வரைபடம் புதிய வாணிகக் கோட்பாட்டின்படி உலக வாணிகத்தில் பொருள் கலவை எப்படி இருக்கும் என விளக்குகிறது.

குறைபாடுகள்

1. நாடுகளில் உற்பத்திக் காரணிகளின் இருப்பளவு காலத்திற்கேற்றாற் போல மாறலாம்.

2. உற்பத்திக் காரணிகளின் திறன் நாடுகளுக்கிடையே வேறுபடலாம். உழைப்பாளர்களின் எண்ணிக்கை கவனத்தில் எடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர் பற்றாக்குறை உள்ள நாடு போன்று தோன்றும். ஆனால் உழைப்பாளர்களின் உற்பத்தி திறனை கணக்கிலெடுத்துக் கொண்டால் அமெரிக்கா உழைப்பாளர்கள் மிகுந்த நாடாகும்.

12-Economics-Tamil-Chapter_7.indd 155 12-01-2023 18:07:03

7.5.5 தொன்மைக் கோட்பாடும், புதிய கோட்பாடும் ஒப்பீடு

வ. எண்	தொன்மைப் பன்னாட்டு வாணிகக் கோட்பாடு	புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு
1.	பன்னாட்டு வணிகத்தை விளக்குவதற்கு உழைப்பைச் சார்ந்த மதிப்புக்கோட்பாட்டைஅடிப்படையாகக் கொண்டது.	பன்னாட்டு வாணிகத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது
2.	இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும்	இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும்.
3.	ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது	ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்தி காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என நம்புகிறது.

7.6 பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள்

பன்னாட்டு வாணிகம் அதில் ஈடுபடும் நாடுகளுக்கு பல ஆதாயங்களை வழங்குகிறது. ஒரு நாட்டில் உபரியாக உற்பத்தி செய்யப்படும் பண்டம் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதன் மூலம் பண்டங்களுக்கான அங்காடி விரிவடைகிறது. ஒரு நாட்டில் உற்பத்தியே செய்ய முடியாத பண்டங்களையும், அதிக செலவில் உற்பத்தியாகும் பண்டங்களையும், நாடுகள் மற்ற நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்ய உதவுகிறது. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகள் கீழ்காணும் நான்கு இனங்களின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.

I. திறனுடைய உற்பத்தி

பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பிட்டுத் தனிதேர்ச்சி கிடைப்பதனால் கீழ்காணும் நன்மைகளைப் பெறுகின்றன.

1. உற்பத்தி வளங்களைச் சிறப்பாக பயன்படுத்துதல்
2. ஒப்பிட்டுத் தனித் தேர்ச்சியுள்ள பொருளுற்பத்தியில் கவனம் செலுத்துதல்
3. உழைப்பு விரயம் தவிர்த்தல்
4. உற்பத்தித் திறன் மேம்படுதல்
5. உற்பத்தித் தொழில் நுட்பம் மேம்படுதல்
6. உற்பத்தி அளவு அதிகரித்தல்
7. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

II. நாடுகளிடையே விலை சமனடைதல்

பன்னாட்டு வாணிகம் அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.

1. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் நாடுகளில் விலை சமமாகும்.
2. போக்குவரத்துச் செலவில் மட்டும் வேறுபாடு காணப்படும்.
3. உற்பத்திக் காரணிகளின் விலையும் நாடுகளிடையே சமமாகும்.

www.tntextbooks.in

III. பற்றாக்குறையுள்ள வளங்களை சமமாகப் பகிர்தல்

பன்னாட்டு வாணிகம் பற்றாகுறையான வளங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

IV. பன்னாட்டு வாணிகத்தின் பொதுவான நன்மைகள்

1. மக்கள் வாங்கிப் பயன்படுத்த பலவகையான பண்டங்கள் கிடைக்க வழி வகுக்கிறது
2. வேலைவாய்ப்பு அதிகரிக்கச் செய்கிறது
3. பின்தங்கிய நாடுகள் தொழில்மயமாகலாம்.
4. நாடுகளுக்கிடையேயான உறவு மேம்பட வாய்ப்புள்ளது.
5. உழைப்புப் பகுப்பு, பொருள் உற்பத்தியில் தனித்தேர்ச்சியடைதலுக்கு உதவுகிறது.
6. போக்கு வரத்து வசதிகள் வளரும்.

7.7 வாணிக வீதம்

பன்னாட்டு வாணிக முறையின் இலாபம் என்பது வாணிக வீதத்தைப் பொருத்தும், ஏற்றுமதி, இறக்குமதி விலை வீதத்தைப் பொருத்தும் அமையும்.

$$\text{வணிக வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைக்குறியீடு}}{\text{இறக்குமதி விலைக் குறியீடு}} \times 100$$

7.7.1 வாணிக வீதம் – பொருள்

பன்னாட்டு வாணிகத்தினால் கிடைக்கும் நன்மைகள் வாணிக வீதத்தைச் சார்ந்திருக்கும். ஏற்றுமதிப் பண்டத்தின் விலைக்கும் இறக்குமதிப் பண்டத்தின் விலைக்குமிடையான விகிதமே வாணிக வீதம் எனலாம். ஏற்றுமதியாகும் பண்டங்களின் சராசரி விலை இறக்குமதியாகும் பண்டங்களின் சராசரி விலையைவிட அதிகமாகும் பொழுது நாடுகளின் வாணிக வீதம் மேம்பாடடையும்.

7.7.2 வாணிக வீதத்தின் வகைகள்

ஜெரால்ட் எம். மெய்யர் வாணிக வீதத்தை மூன்றாக வகைப்படுத்துகிறார்:

பண்டங்கள் பரிமாற்ற விகித அடிப்படையிலான வாணிக வீத வகைகள் மூன்றினைக் கீழே காணலாம்.

வாணிக வீதம்
- நிகரபண்டமாற்று வாணிக வீதம் – தாசிக்
- மொத்தப் பண்டமாற்று வாணிக வீதம் – தாசிக்
- வருமான வாணிக வீதம் – ஜி. எஸ்.டோரான்ஸ்

1. நிகரப் பண்டமாற்றுவாணிக வீதம்

நிகரப் பண்டமாற்று வீதத்தை எப். டபில்யூ தாசிக் 1927 இல் வடிவமைத்தார். ஏற்றுமதி விலைகளுக்கும் இறக்குமதி விலைகளுக்குடையிலான விகிதமே நிகரப் பண்டமாற்று வாணிக வீதம் என்கிறார். ஜேக்கப் வைனர் இதை பொருள் வாணிகவீதம் என்றழைக்கிறார். இதனைக்கீழ்காணுமாறு குறிப்பிடலாம்.

$$T_n = (P_x / P_m) \times 100$$

இங்கு T_n = நிகரப் பண்டமாற்று வாணிக வீதம்

P_x = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலைக் குறியீட்டெண்

பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளை அளவிட இந்த வீதம் பயன்படுகிறது. நிகர பண்டமாற்று வாணிக வீத (T_n)மதிப்பு ஒரு நாட்டிற்குக் கணக்கிடும் பொழுது 100 ஐவிட அதிகமிருந்தால் அந்நாட்டின் வாணிக வீதம் சாதகமாக உள்ளதாகக் கருதலாம். இதில் ஒவ்வொரு ரூபாய் ஏற்றுமதிக்கும் ஒரு ரூபாய்க்கும் அதிமான மதிப்புள்ள பண்டங்களை அந்த நாடு இறக்குமதி செய்ய முடியும் என புரிந்து கொள்ளலாம்.

2. மொத்தப் பண்டமாற்று வாணிக வீதம்

இந்த வீதத்தையும் தாசிக் என்பவரே 1927ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். நிகரப் பண்டமாற்று வீதத்தை மேம்படுத்தி இதை வடிவமைத்தார். மொத்த ஏற்றுமதி பண்டங்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதிப் பண்டங்களின் குறியீட்டெண்ணிற்குமிடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகையாக மொத்தப் பண்டமாற்று வாணிக வீதத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இதனை வாய்பாடு வடிவில் கீழ்காணுமாறு எழுதலாம்.

$$T_g = (Q_x/Q_m) \times 100$$

இங்கு T_g = மொத்தப் பண்டமாற்று வாணிக வீதம்

Q_m = இறக்குமதி அளவுக் குறியீட்டெண்

Q_x = ஏற்றுமதி அளவுக் குறியீட்டெண்

ஒரு குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்யும் நாடு எந்த அளவு பண்டங்களை இறக்குமதி செய்து கொள்ளலாம் என மொத்தப் பண்டமாற்று வாணிக வீதம் சுட்டிக் காட்டுகிறது

3. வருமான வாணிக வீதம்

வருமான வாணிக வீதக் கருத்தை ஜி. எஸ்.டோரான்ஸ் என்பவர் 1948ஆம் ஆண்டில் உருவாக்கினார். ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணை இறக்குமதி விலை குறியீட்டெண்ணால் வகுத்து வரும் ஈவுத் தொகையை ஏற்றுமதி அளவு குறியீட்டெண்ணால் பெருக்கக் கிடைக்கும் தொகையே வருமான வாணிக வீதமாகும். நிகரப் பண்டமாற்று வாணிக வீதத்தை ஏற்றுமதி அளவுக் குறியீட்டெண்ணால் பெருக்கியும் வருமான வாணிக வீதம் கணக்கிட முடியும் என்பது கவனிக்கத்தக்கது.

$$T_y = (P_x / P_m)Q_x$$

இங்கு,

T_y = வருமான வாணிக வீதம்

P_x = ஏற்றுமதி விலை அளவுக் குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலை அளவுக் குறியீட்டெண்

Q_x = ஏற்றுமதி அளவுக் குறியீட்டெண்

7.7.3. உற்பத்திக் காரணிகள் பரிமாற்றம் அடிப்படையிலான வாணிக வீத வகைகள்

உற்பத்திக் காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் இரண்டு வகையான வாணிக வீதங்கள் உள்ளன. அவை இரண்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. ஒற்றைக் காரணி வாணிக வீதம்

ஜேக்கப் வைனர் ஒற்றைக்காரணி வாணிக வீதத்தை வடிவமைத்தார். பண்ட பரிமாற்ற வாணிக வீதத்தை விரிவுபடுத்தி இந்த வணிக வீத வாய்பாட்டை உருவாக்கினார். ஏற்றுமதி விலை குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக்

12-Economics-Tamil-Chapter_7.indd 158 12-01-2023 18:07:03

குறியீட்டெண்ணுக்குமிடையேயான விகிதத்தில் ஏற்றுமதிக்கான உற்பத்தித் தொழில் துறையின் உற்பத்தித் திறன் குறியீட்டெண்ணின் மதிப்பினால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக்காரணி வாணிக வீதமாகும். இதனை வாய்பாட்டு வடிவில் கீழ்காணுமாறு குறிப்பிடலாம்.

$$T_f = (P_x / P_m) F_x$$

இங்கு T_f = ஒற்றைக் காரணி வாணிக வீதம்

P_x = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலைக் குறியீட்டெண்

F_x = ஏற்றுமதிக்கு பொருள் உற்பத்தி செய்யும் தொழில் துறையின் உற்பத்தித் திறன் குறியீட்டெண் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த எண்ணிக்கையை இந்தக்காரணிகளுக்கு செய்த மொத்த செலவால் வகுத்துப் பெறுவதே உற்பத்தித் திறன் குறியீடு ஆகும்.

2. இரட்டைக் காரணி வணிக வீதம்

இந்த வீதத்தையும் வைனரே வடிவமைத்தார். இதன் வாய்பாட்டு வடிவம் கீழ்வருமாறு

$$T_{ff} = (P_x / P_m)\ (F_x / F_m)$$

இங்கு T_{ff} = இரட்டைக் காரணி வாணிக வீதம்

P_x = ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்

P_m = இறக்குமதி விலைக் குறியீட்டெண்

F_x = ஏற்றுமதி பொருள் உற்பத்தித் தொழில் உற்பத்தித்திறன் குறியீட்டெண்

F_m = இறக்குமதி பொருள் உற்பத்தி செய்யும் நாட்டில் அத்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்.

7.8 அயல்நாட்டு வாணிகச் சமநிலையும், அயல்நாட்டு வாணிகச் செலுத்துசமநிலையும்

வாணிகக் கொடுப்பல் நிலையும் அயல்நாட்டு செலுத்தல் நிலையும் பன்னாட்டு வாணிகத்தின் இரண்டு முதன்மையான கருத்துகளாகும். இவை, இரண்டையும் தெளிவாகப்புரிந்து கொண்டால் பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படை சிக்கல்களை எளிதாகப்புரிந்து கொள்ளலாம்.

7.8.1 வாணிகக் கொடுப்பல் நிலை (BOT)

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் மதிப்பையே வாணிகக் கொடுப்பல் நிலை என்கிறோம். ஒரு நாட்டின் வாணிகக் கொடுப்பல் நிலை அறிக்கையில் பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதி விவரங்கள் மட்டுமே தொகுத்தளிக்கப்படுவது கவனிக்கத்தக்கது. பண்டங்கள் ஏற்றுமதி இறக்குமதியை "புலப்படும் வாணிகம்" எனவும் அழைக்கலாம் ஏனென்றால் இங்வாணிகத்தில் இடம் பெறும் பண்டங்களை கண்ணால் காணவும் தொட்டுணரவும் முடியும்.



சாதகமான வாணிகக் கொடுப்பல் நிலை

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு நாட்டின் பண்ட ஏற்றுமதியின் மொத்த மதிப்பு இறக்குமதியின் மொத்த மதிப்பை விட அதிகமாக இருந்தால் அந்த நாடு சாதகமான வாணிகக் கொடுப்பல் நிலை பெற்றிருப்பதாக கருதலாம்.

பாதகமான வாணிகக் கொடுப்பல் நிலை

ஒரு நாட்டின் பண்ட ஏற்றுமதியின் மொத்த மதிப்பு பண்ட இறக்குமதியின் மொத்த மதிப்பைவிடக் குறைவாக இருந்தால் அந்த நாடு பாதகமான வாணிகக் கொடுப்பல் நிலையை பெற்றிருப்பதாகக் கூறலாம்.

7.8.2 அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலை (BOP)

நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமல்லாமல் பணிகள், மூலதனம், பணம் போன்றவையும் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. இவற்றையும் உள்ளடக்கிய சமநிலையை ஒரு நாடு அடைய வேண்டும். இவை எல்லாவற்றையும் உள்ளடக்கிய தொகுப்பு அறிக்கையே அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையாகும்.

அயல்நாட்டு செலுத்துச் சமநிலை

அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலை பொருள் விளக்கம்

ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதார பரிமாற்ற அறிக்கையை அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை என்கிறோம். இது இரட்டைப் பதிவு கணக்கியல் முறையில் தயாரிக்கப்படும் அறிக்கையாகும்.

உலக நாடுகளிலிருந்து பெறப்படும் கட்டணத் தொகைகளை வரவு பரிமாற்றமாகவும் மற்ற நாடுகளுக்கு செலுத்த வேண்டிய செலவுத் தொகைகளை பற்று பரிமாற்றமாகவும் பதிவு செய்யப்படுகிறது. பண்டம், பணிகளின் ஏற்றுமதி, ஒரு நாட்டின் தொழிலாளர்கள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் தொகை, வெளிநாட்டுக் கடன், அயல்நாட்டு மூலதனம், தங்கம் உள்ளிட்ட அயல்நாட்டுச் செலாவணி விற்பனையில் கிடைக்கும் வருமான போன்றவை முதன்மையான வரவினங்களாகும்.

பண்டங்கள் பணிகள் இறக்குமதி, நாட்டில் வாழும் வெளிநாட்டினர் தங்கள் தாய்நாட்டிற்கு அனுப்பும் தொகை, வெளிநாடுகளுக்குக் கடன் கொடுத்தல், வெளிநாடுகளில் முதலீடு செய்தல், தங்கம் உள்ளிட்ட அயல்நாட்டுச், செலாவணிகளை வாங்குதல் ஆகியவை பற்று பரிமாற்றமாக பதியப்படும் முதன்மை செலவினங்களாகும்.

7.8.3. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் கூறுகள்

வரவு, பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை அறிக்கையில் பதியப்படுகின்றன. அவை படுக்கைகிடைமட்டமாகக் கீழ்காணும் மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

12-Economics-Tamil-Chapter_7.indd 160 12-01-2023 18:07:03

அ. நடப்புக் கணக்கு

ஆ. மூலதனக் கணக்கு

இ. மைய வங்கித் தீர்வுக் கணக்கு அல்லது மைய வங்கி நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு

அ. நடப்புக் கணக்கு: பன்னாட்டுப் பண்டப் பரிமாற்றங்கள், பன்னாட்டுப் பணி பரிமாற்றங்கள், (சுற்றுலா, போக்குவரத்து உரிமைத் தொகை), பன்னாட்டு ஒருதரப்புச் செலுத்துகைகள் (பரிசுத் தொகை, அயல் நாட்டு உதவி) பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின் கீழ் பதியப்படுகின்றன.

ஆ. மூலதனக் கணக்கு: வெளிநாட்டுக் கடன், அயல்நாட்டு முதலீடு, பன்னாட்டுப் பண, நிதி அங்காடி விற்றல் வாங்கல் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

இ. மைய வங்கி நிதி சொத்து கையிருப்புக் கணக்கு: மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலவானி சொத்துக்களில் நடைபெறும் பரிவர்த்தனை இந்த கணக்கில் பதிவு செய்யப்படுகிறது. நடப்பு மற்றும் மூலதன கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்புக் கணக்கில் சேர்க்கப்படும். பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படும். எனவேதான் இதற்கு மைய வங்கி கையிருப்பு தீர்வு கணக்கு என்ற பெயரும் வழங்கப்பட்டது. இந்த கணக்கின் கீழ் தங்கத்தின் இருப்பு, எளிதாக மற்ற நாட்டு பணமாக மாற்றத்தக்க வெளிநாட்டு பணம், சிறப்பு எடுப்புரிமை (பன்னாட்டு பண நிதியத்தின் பணம்) மற்றும் பன்னாட்டுப் பண நிதியத்தின் நிகர கடன் பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.

அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கணக்கு வரைபடம்

வரவு (வருமான) – பற்று (செலவு) = நிகரநிலை [பற்றாக்குறை (–), உபரி (+)]

பற்றாக்குறை (பற்று > வருவாய்)

7.8.4. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் சமனற்ற நிலை

ஒரு நாட்டின் பன்னாட்டு வரவும் (R) செலவும் (P) சமமாக இருந்தால் அந்நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமநிலையிலிருக்கும். குறியீடுகளில் இதை எனலாம்.

$$R / P = 1.$$

வணிகச் செலுத்துச் சமநிலையற்ற நிலை

கீழ்வரும் நிலையில் தோன்றும்

தேவை ≠ அளிப்பு

வரவு > பற்று → பற்றாக்குறை

சாதகமான அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை

ஒரு நாட்டின் பன்னாட்டு வரவு பன்னாட்டுச் செலவைவிடப் பெரிதாக இருந்தால் அந்நாட்டிற்கு அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சாதகமாக அமையும். இதை குறியீடுகளில்

$$R / P > 1.$$

எனக் குறிப்பிடலாம்.

பாதகமான அயல்நாட்டுச் செலத்துச் சமநிலை

பன்னாட்டு வரவு செலவைவிட குறைவாக இருந்தால் அந்த நாட்டிற்கு அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை பாதகமாகிவிடும். குறியீடுகளில்

$$R / P < 1.$$

என எழுதலாம்.

7.8.5. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமனற்ற நிலையின் வகைகள்

அயல்நாட்டுச் செலுத்து சமனற்ற நிலையின் மூன்று வகைகளை கீழ்காணுமாறு புரிந்துக் கொள்ளலாம்.

அ) சுழற்சிச் சமனற்ற நிலை

ஆ) நீண்டகாலச் சமனற்ற நிலை

இ) கட்டமைப்புச் சமனற்ற நிலை

அ) சுழற்சிச் சமனற்றநிலை

வாணிகச் சுழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டு செலுத்து சமனற்ற நிலையைச் சுழற்சி சமனற்றநிலை என்கிறோம். கீழ்காணும் இரண்டு காரணங்களால் இது நிகழ்கிறது முதலாவது, நாடுகள் வாணிகச் சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களிலிருப்பது, இரண்டாவது, நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது

ஆ) நீண்டகாலச் சமனற்ற நிலை

நாடுகள் பொருளாதார வளர்ச்சிப் படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகாலத் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும். அயல்நாட்டு செலுத்துச் சமனற்ற நிலையை நீண்டகாலச் சமனற்ற நிலை எனலாம். வளர்ச்சியின் துவக்கநிலையில் ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டு சேமிப்பைவிடக் கூடுதலாக இருக்கும். இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருக்கும். இந்தியாவில் 1951 ஆம் ஆண்டிலிருந்தே இந்தச் சூழ்நிலை நிலவுகிறது.

இ) கட்டமைப்புச் சமனற்ற நிலை

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டு செலுத்துச்சமனற்ற நிலையே கட்டமைப்பு சமனற்ற நிலையாகும். மாற்று வழங்கல் ஆதாரங்களை கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பண்டங்களை கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்து போதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவும் மாற்றமடைதல் ஆகியவற்றை பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

7.8.6. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமின்மைக்கான காரணங்கள்

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமனற்ற நிலைக்கான காரணங்களாவன:

1. சுழற்சியான ஏற்ற இறக்கம்

நாடுகளின் வாணிகச் சுழற்சியின் ஏற்ற இறக்கம், அவற்றின் காலகட்டங்கள், அவை உருவாக்கும் மாற்றங்களின் அளவுகள் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை உருவாக்குகிறது. மந்தகாலங்களில் பன்னாட்டு வாணிகம் வீழ்ச்சி அடைகிறது. செழிப்பான காலங்களில் வாணிகம் வளர்கிறது.

2. கட்டமைப்பு மாற்றங்கள்

வளரும் நாடுகளில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் மிகுதியான முதலீடும் கட்டமைப்பை மாற்றி அமைத்து அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை உருவாக்குகிறது. வளரும் நாடுகள் தொழில் வளர்ச்சிக்காக அதிகப்படியான இறக்குமதி நாட்டம் கொண்டுள்ளன. ஆனால் இறக்குமதிக்கு ஈடாக ஏற்றுமதி செய்வதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. மேம்பாட்டுச் செலவு

பொருளாதார மேம்பாட்டுக்காக அரசு செய்யும் செலவு வருமானத்தையும் விலையையும் அதிகரிக்கச் செய்கிறது. நாடுகள் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில்

12-Economics-Tamil-Chapter_7.indd 162 12-01-2023 18:07:04

தற்சாற்பற்றவையாக இருக்கும். மக்களின் வருமானம், சேமிப்பு, முதலீடு மிகக் குறைவாக இருக்கும். பண்டங்கள், மூலதனம், தொழில்நுட்பத்தைப் பெறுவதற்கு வளர்ந்த நாடுகளை நம்பி இருக்கும். ஏற்றுமதி வாய்ப்புக் குறைவு. அதே நேரத்தில் இறக்குமதி நாட்டம் அதிகம் எனவே வளரும் நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்றநிலையிலேயே உள்ளது.

4. மிகை நுகர்வுப்போக்கு

ஆடம்பர பண்டங்கள் மீதான பேராசை அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பாதகமான விளைவுகளை உண்டாக்குகிறது ஏனென்றால் மிகை நுகர்வுப்போக்கு இறக்குமதியை அதிகப்படுத்தி ஏற்றுமதித் திறனை குறைத்து விடுகிறது.

5. வெளிக்காட்டும் விளைவு

மற்றவர் ஒரு பண்டத்தைப் பயன்படுத்தும் காட்சியைப் பார்க்கும் ஒருவர் அந்தப் பண்டத்தை தானும் பயன்படுத்த வேண்டும் என விருப்பம் கொள்வதே வெளிகாட்டும் விளைவு. விளம்பரங்கள், திரைப்படங்கள் ஆகியன இவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தி வளர்ந்த நாடுகளின் பண்டங்களை வளரும் நாட்டு நுகர்வோரை வாங்கவைத்துவிடுகின்றன. இதன் விளைவாக வளரும் நாடுகளின் இறக்குமதி நாட்டம் அதிகரித்து அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பற்றாக்குறை உண்டாகிறது.

6. வெளிநாட்டில் கடன் வாங்குதல்

கடன் வாங்குதல் சர்வதேச அளவில் கடன் வாங்குதல் மற்றும் முதலீடு செய்தல் செலுத்து சமநிலையில் பற்றாக்குறையை ஏற்படுத்தலாம் சர்வதேச கடன்கள் அதிகமாக இருக்கும் போது வட்டியுடன் கடனை திருப்பிச் செலுத்துவதால் ஒரு நாட்டின் இருப்புச் சமநிலை பாதகமாக இருக்கும் கடனை திரும்ப செலுத்துவது பெரும் சுமை அதனால்தான் வளரும் நாடுகள் அதிக கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகின்றன.

7. தொழில்நுட்பப் பின்னடைவு

உள்நாட்டுத் தொழில்நுட்பம் பின்தங்கியிருந்தால், புதிய தொழில்நுட்பத்தையும், இயந்திரங்களையும், வெளிநாடுகளிலிருந்து வாங்குவதால் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமனற்ற நிலையை அடைகிறது.

8. பன்னாட்டு அரசியல்

போர்க்கருவிகளும், ஆயுதங்களும், உற்பத்தி செய்யும் நாடுகள், மற்ற நாடுகளுக்கிடையே நடைபெறும் போர்களைப் பயன்படுத்தி ஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு ஏராளமாக விற்பனை செய்கின்றன. போர்களில் வெற்றி பெற பின்தங்கிய நாடுகள் போர்க் கருவிகள் வாங்க தங்களது ஏற்றுமதி வருவாயைச் செலவிட்டு, வாணிக பற்றாக்குறையில் பிடிபடுகின்றன. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைப் பற்றாக்குறைச் சமமின்மைக்கு இது வழிவகுக்கிறது.

7.8.7. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமின்மையை நீக்கும் வழிமுறைகள்

12-Economics-Tamil-Chapter_7.indd 163 12-01-2023 18:07:04

அயல் நாட்டுச்செலுத்துச் சமநிலையில் சமமின்மையை நீக்குதல்

தானாக சரியாதல் நிலை

1. விலையைச் சரிசெய்தல்
2. வட்டிவீதம் சரிசெய்தல்
3. வருமானம் சரிசெய்தல்
4. மூலதனப் பெயர்வு

விரும்பி செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

பணவியல் வழிமுறைகள்

1. பண அளிப்பு சுருங்குதல்/விரிவடைதல்
2. பணமாற்று மதிப்பைக் குறைத்தல்/ பண மாற்றுமதிப்பை அதிகப்படுத்துதல்
3. செலாவணிக் கட்டுப்பாடு

இதர வழிமுறைகள்

1. வெளிநாட்டுக்கடன்
2. வெளிநாட்டு மூலதன வருகையை ஊக்குவித்தல்
3. சுற்றுலா மேம்பாடு
4. வெளிநாடு வாழ்குடிமக்கள் பணம் அனுப்ப ஊக்குவித்தல்
5. இறக்குமதி பதிலீட்டுப் பண்டம் உற்பத்தி

வாணிக வழிமுறைகள்

ஏற்றுமதி ஊக்குவித்தல்

1. ஏற்றுமதித் தீர்வையை நீக்குதல்/ குறைத்தல்
2. ஏற்றுமதி மானியம்
3. ஏற்றுமதி ஊக்குவித்தல்

இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

1. இறக்குமதித் தீர்வை
2. இறக்குமதிப் பங்களவு
3. இறக்குமதித் தடை

அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமின்மையை நீக்குவதற்கு இரண்டு வகையான வழிமுறைகள் உள்ளன. அவை (i) தானாகச் செயல்படும் வழிமுறைகள், (ii) விரும்பிச் செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

I தானாகச் சரியாதல்

அங்காடி விசைகளான தேவையும் அளிப்பும் எந்தவிதத் தலையீடுமின்றி அதிகரிக்க குறைய அனுமதித்தால் காலப்போக்கில் அயல்நாட்டு செலுத்துச் சமநிலை தானாக சமநிலையை அடையும் என நம்பப்படுகிறது. மாறுகின்ற அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீத முறையில் அயல்நாட்டு செலுத்துச் சமநிலை விலை, வட்டி வீதம், வருமானம், மூலதன இடப்பெயர்வு ஆகியவற்றில் நடக்கும் மாற்றங்களினால் சமனற்றநிலை தானாக சரியாகி சமநிலையை அடையும்.

1. விலையைச் சரிசெய்தல்

அயல்நாட்டு செலுத்து சமநிலை பற்றாக்குறையான நாடுகளிலிருந்து உபரி நாடுகளுக்கு அயல்நாட்டுச் செலாவனி வெளியேறுவதால் பற்றாக்குறை நாடுகளில் பண அளிப்பானது குறைகிறது. உபரி நாடுகளில் பண அளிப்பானது அதிகரிக்கிறது. இதன் விளைவாக விலையுயர்ந்து உபரி நாடுகள் இறக்குமதியை ஊக்குவிக்கின்றன, ஏற்றுமதியை தவிர்க்கின்றன. அதேசமயம் பற்றாக்குறை நாடுகளில் காணும் விலை வீழ்ச்சியானது எற்றுமதியை ஊக்குவிக்கிறது, இறக்குமதியைத் தவிர்க்கிறது. இவற்றின் மூலமாக அயல்நாட்டு செலுத்துச் சமநிலை நிலைப்படுத்தப்படுகிறது.

2. வட்டி வீதம் சரிசெய்தல்

அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை பற்றாக்குறை நாட்டில் பண அளிப்பு குறைந்து

12-Economics-Tamil-Chapter_7.indd 164 12-01-2023 18:07:04

வட்டி வீதம் உயரும். உபரி நாட்டில் பண அளிப்பு உயர்ந்து வட்டிவீதம் குறையும், உபரிநாட்டு வட்டிவீதம் குறைவினாலும். பற்றாக்குறை நாட்டு வட்டிவீத உயர்வினால் அந்நாட்டின் நிதி முதலீட்டாளர்கள் வெளிநாட்டு நிதி சந்தையிலிருந்து முதலீடுகளை திரும்பப் பெற்று உள்நாட்டுக்குள் கொண்டு வருவார்கள் உபரி நாடுகளில் இது தலைகீழாக நடக்கும். விளைவாக இரு வகை நாடுகளிலும் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.

3. வருமானம் சரிசெய்தல்

செலுத்துநிலை உபரிநாட்டின் வருமானம் உயரும். வருமானம் உயர்வு வெளிநாட்டுப் பண்டங்களை வாங்கத் தூண்டும். இதனால் இறக்குமதி அதிகரித்து செலுத்துநிலை உபரி நீங்க சமநிலையை அடையும்.

4. மூலதனப் பெயர்வு

வெளிநாட்டு மூலதனத்தை வட்டிவீதத்தை உயர்த்தி கவர்ந்திழுக்க முடியும். செலுத்துநிலைப் பற்றாக்குறை நாடுகள் வட்டிவீதத்தை உயர்த்தி செலுத்துநிலை சமமின்மையை நீக்கலாம்.

II விரும்பிச் செயல்படுத்தப்படும் வழிமுறைகள்

விரும்பிச் செயல்படுத்தப்படும் வழிமுறைகளை மூன்று பிரிவாகப் வகைப்படுத்தலாம். அவையாவன: அ) பணவியல் வழிமுறைகள், ஆ) வாணிக வழிமுறைகள் இ) இதர வழிமுறைகள்

அ. பணவியல் வழிமுறைகள்

1. பண அளிப்புச் சுருக்கம்

உள்நாட்டுப் பண்டங்களின் விலை அதிகமாக இருந்தால் மலிவான வெளிநாட்டு பண்டங்களை மக்கள் அதிகம் வாங்குவார்கள். இது இறக்குமதியை உயர்த்திவிடும். வெளிநாட்டினரோ அதிக விலையுள்ள பண்டங்களை வாங்கமாட்டார்கள். இது ஏற்றுமதியைக் குறைத்துவிடும். நாட்டின் மைய வங்கி பண அளிப்பைக் கட்டுப்படுத்தி உள்நாட்டுப் பண்டங்களின் விலையையும் கட்டுபடுத்தும் இதன் விளைவாக ஏற்றுமதி அதிகரித்து இறக்குமதி குறைந்து அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் சமமின்மை நீங்கும். மேலும், கடன் அளவு கட்டுக்குள் இருந்தாலும், முதலீடு குறையும், உற்பத்தியின் அளவு குறையும் விலை அதிகரிக்கும். இது 2010 –ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் ரிசர்வ் வங்கிக்கும் இடையில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

2. பண மதிப்புக் குறைப்பு

ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்புக் குறைப்பு ஆகும். எடுத்துக்காட்டாக \$1 = ₹70 என்ற பண மாற்று வீதத்தை \$1 = ₹80 என்று குறைந்து நிர்ணயிப்பதை செலாவணி மதிப்புக் குறைப்பு எனலாம்.

இந்தியாவில் செலாவணி மதிப்புக் குறைப்பு நிகழ்வுகள்

இந்திய ரூபாய் 1947 லிருந்து மூன்று முறை மதிப்பிறக்கம் செய்யப்பட்டது

1. செப்டம்பர் 29, 1949
2. ஜூன் 6, 1966
3. ஜூலை 1, 1991

அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையில் சமமின்மை உள்ள நாடு தன் பணத்தின் மதிப்பைக் குறைத்து நிர்ணயித்து ஏற்றுமதிக்கு ஊக்கம் கொடுத்து இறக்குமதிக்கான ஊக்கத்தைக் கெடுத்து செலுத்து சமமின்மையை சரிசெய்யலாம். செலாவணி மதிப்புக் குறைப்பு ஏற்றுமதிப் பண்டங்களை மலிவானதாகவும் இறக்குமதிப் பண்டங்களை விலை உயர்ந்தவையாகவும் மாற்றும். பணமதிப்பிறக்கம் இந்திய உணவுப் பண்டங்கள் வெளிநாட்டினருக்கு மலிவான

விலையிலும் இந்தியர்களுக்கு வெளிநாட்டு பண்டங்கள் உயர்ந்த விலையிலும் கிடைக்கச் செய்கிறது.

3. அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு

அயல்நாட்டுச் செலாவணி சந்தையில் அரசு தலையிடுவதையே செலாவணிக் கட்டுப்பாடு என்கிறோம். அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை நிருவகிக்க இது புகழ்வாய்ந்த நடைமுறையாகும். அயல்நாட்டுச் செலாவணி ஈட்டுவதையும் இருப்பு வைப்பதையும் மைய வங்கி முழுமையாக தன்கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கிறது. ஏற்றுமதியாளர்கள் போன்ற அயல்நாட்டுச் செலாவணி ஈட்டுபவர்கள் அதை மைய வங்கியிடம் ஒப்படைத்து உள்நாட்டுப் பணமாக மாற்றி பெற்றுக் கொள்ள வேண்டும். இறக்குமதியாளர்களுக்கும் இம்மாதிரியான கட்டுப்பாடுகள் இருப்பதால் ஒரு நாடு இறக்குமதியையும் சிறப்பாகக் குறைக்க முடியும் கட்டுப்பாடுகள் பொருள் கடத்தலுக்கு வழிவகுக்கும் என்ற கருத்தும் உண்டு. பத்திரிக்கைகள் கருத்துப்படி இந்திய விமானநிலையங்களில் தங்கம் கடத்தி வருதலை பிடிப்பது சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது.

III. வாணிக வழிமுறைகள்

ஏற்றுமதிக்கு ஊக்கமளித்து இறக்குமதியைக் குறைக்கும் வழிமுறைகளே வாணிக வழிமுறைகளாகும். அவற்றை இங்கே விவாதிக்கலாம்.

1. ஏற்றுமதி ஊக்கமளித்தல்

கீழே பட்டியலிடப்பட்டுள்ள வழிமுறைகளைச் செயல்படுத்தி ஏற்றுமதிக்கு ஊக்கமளிக்கலாம். i) ஏற்றுமதி மீது விதிக்கப்படும் சுங்க வரியைக் குறைத்தல் அல்லது நீக்குதல் ii) ஏற்றுமதி மானியம் வழங்குதல் iii) ஏற்றுமதிக்காக உற்பத்தி தொழில் நடத்துபவர்களுக்கு பண, நிதி, உருவ, நிறுவனச் சலுகைகள் வழங்குதல் (உள்நாட்டு மக்களும், நிறுவனங்களும் பாதிக்கப்படும்)

2. இறக்குமதிக் கட்டுப்பாடு

இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் கீழ்காணும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி இறக்குமதியைக் கட்டுப்படுத்தலாம். i) இறக்குமதி மீது வரிவிதித்தல் முன்பே விதிக்கப்பட்டிருந்தால் விகிதத்தை அதிகப்படுத்தலாம். ii) பங்களவு நிர்ணயித்து இறக்குமதியைக் குறைக்கலாம். பங்களவு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும். iii) கட்டுப்பாடு அல்லது தவிர்ப்பு என்ற முறையில் அத்தியாவசியமற்ற பண்டங்களைப் குறைப்பது. ஆனால் இது கடத்தலை ஊக்குவிக்கும்.

IV. இதர வழிமுறைகள்

இதுவரை நாம் கற்றுக்கொண்ட வழிமுறைகள் மட்டுமல்லாமல், இன்னும் சில வழிமுறைகளையும் பின்பற்றி அயல்நாட்டுச் செலுத்துநிலையில் சமநிலையை உருவாக்க முடியும். அவையாவன

i) வெளிநாட்டுக்கடன்

ii) சலுகைகள் மூலம் வெளிநாட்டு மூலதனத்தை ஈர்த்தல்

iii) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தல்

iv) வெளிநாடுவாழ் மக்களின் அனுப்புதல்களை நாட்டுக்குள் கொண்டு வர ஊக்கமளித்தல்

v) இறக்குமதியாகும் பண்டங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்தல்.

12-Economics-Tamil-Chapter_7.indd 166 12-01-2023 18:07:05

7.9 பண மாற்று வீதம்

பண மாற்று வீதத்தை அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் என்ற சொல்லைப் பயன்படுத்தியும் குறிப்பிடலாம்.

7.9.1 அயல்நாட்டுச் செலாவணியின் பொருள்விளக்கம் (FOREX)

ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள மற்ற நாடுகளின் பணமே அயல்நாட்டுச் செலாவணி என பொருள் கொள்ளலாம். ஆங்கிலத்தில் Forex என்ற சுருக்கச் சொல்லைப் பயன்படுத்தியும் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு நாட்டுக்கும் தனியான நாணயமும் நாணய வெளியீட்டு முறையும் உள்ளன. இவற்றை மற்ற நாட்டு பணமாக மாற்றும் செயல்முறைகளையும் விதிகளையும், அலுவலக அமைப்புகளையும் அயல்நாட்டுச் செலவாணி என்ற சொல் விரிவாகக் குறிக்கிறது. இந்த அமைப்பு முறையே நாடுகளுக்கிடையிலான பணப் பரிமாற்றத்துக்கு வழிமுறைகளைச் செய்து கொடுக்கிறது.

7.9.2 செலாவணி வரைவிலக்கணம்

"அயல்நாட்டுச் செலாவணி என்பது ஒரு நாட்டின் பணத்தை மற்ற நாட்டுப் பணமாகவும் பிற நாட்டிற்ன் பணத்தை ஒரு நாட்டிற்கு மாற்றும் முறையே ஆகும்."

7.9.3 செலாவணி மாற்று வீதம்

அயல்நாட்டுச் செலாவணி அங்காடியில் பரிமாற்றங்கள் அங்காடியில் நிலவுகின்ற பணமாற்று வீதத்தில் நடைபெறுகின்றன. இது அயல் பண அளவில் உள்நாட்டு பணத்தின் மதிப்பாகும். நாடுகள் தங்களின் பணத்தைப் பல முகமதிப்பு இனங்களாக (Denomination) பிரித்து வெளியிடுகிறார்கள். ஒரு அலகு அயல்பணத்தைப் பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தை கொடுக்கிறோம். என்பதே பணமாற்று வீதமாகும். எடுத்துக்காட்டாக ஒரு அமெரிக்க டாலரைப் பெறுவதற்கு ₹75 இந்திய ரூபாய் கொடுப்பதை ரூபாய் டாலர் மாற்று வீதம் எனலாம். இதே போன்று மற்ற நாட்டு பணத்தில் இந்திய ரூபாயின் மதிப்பை இணையத்தில் தேடி தெரிந்து கொள்ளலாம். மாற்று வீதத்தை இரண்டு வகைகளில் குறிப்பிடலாம்.

1. ஒரு அலகு அயல் பணத்திற்கு (1 USD) எத்தனை அலகு உள்நாட்டுப் பணம் (₹) நிகரானது (எ.கா.) $1 = ₹75
2. எத்தனை அலகு வெளிநாட்டுப் பணத்துக்கு (USD) ஒரு அலகு உள்ளூர் பணம் (₹1) நிகரானது.

(எ.கா.),

1 அமெரிக்க டாலர் = ₹70 அல்லது

₹1 = U.S 1.42 செண்ட்

ஆண்டு

₹1 = $1 => 1947

₹70 = $1 => 2018

செலாவணி விகிதம்

ஒரு நாட்டின் பணத்தை மற்றொரு நாட்டின் பணத்திற்கு மாற்றும் விகிதம்



7.9.4. சமநிலைப் பரிமாற்றுவீதம் – வரைவிலக்கணம்

"அயல்நாட்டுச் செலுத்து சமநிலையை ஒரு குறிப்பிட்ட காலத்தில் சம நிலையில் வைப்பதே பரிமாற்றச் சமநிலை வீதம் எனப்படும்"

– ரேகனர் நர்க்ஸ்.

7.9.5. சமநிலைப் பரிமாற்று வீதம் நிர்ணயமாதல்

அயல்நாட்டுச் செலாவணி அங்காடியில் சமநிலைப் பரிமாற்று வீதம் பொது விலை நிர்ணய கோட்பாட்டின்படி நிர்ணயமாகிறது. அங்காடி விசைகளான தேவையளவும் அளிப்பளவும் (அளிப்பு) ஒருங்கே செயல்பட்டு சமநிலை விலையை நிர்ணயிக்கும் என்பதே பொது விலை நிர்ணயக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின்படிப் பார்த்தால் அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையளவும் அளிப்பளவும் சமமாகுமளவில் சமநிலை பரிமாற்று வீதம் நிர்ணயமாகும். வரைபடத்தில் அயல்நாட்டுச் செலாவணி தேவை, அளிப்பு வளைகோடுகள் சந்திக்கும் வெட்டுப்புள்ளியில் சமநிலை பரிமாற்று வீதம் நிர்ணயமாகும்.



வரைபடம் 7.3 அயல்நாட்டுச் செலாவணியின் தேவையும் அளிப்பும்

மேலே உள்ள வரைபடத்தில் செங்குத்து அச்சு பண மாற்று வீதத்தையும் படுகிடை அச்சு அயல்நாட்டுச் செலாவனிக்கான தேவை, அளிப்பு அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. E என்ற புள்ளியில் அயல்நாட்டுச் செலாவணி தேவை வளைகோடு அளிப்பு வளைகோட்டை வெட்டுகிறது. இந்தப் புள்ளியில் அயல்நாட்டுச் செலாவணி தேவை, அளிப்பு அளவு ஒன்றுக்கொன்று சமமாவதால் பரிமாற்று வீதம் சமநிலையை அடைகிறது. தேவையும் (DD) அளிப்பும் (SS)சந்திக்கும் வெட்டுப் புள்ளியில் (E) பரிமாற்று வீதம் சமநிலையை அடைகிறது. தேவையும் அளிப்பும் OQ என்ற அளவில் இருக்கும் பொழுது நிர்ணயமாகும் OP_2 எனும் பரிமாற்று வீதமே சமநிலை பணமாற்று வீதமாகும்.

7.9.6. பரி மாற்று வீதம் நிர்ணய முறைகள்

பரி மாற்று வீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது. அவையாவன 1) நிலையான பரிமாற்று வீதம் மற்றும் 2) மாறுபடும்/ நிலையற்ற பரி மாற்று வீதம். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிருவகிக்கப்பட்ட பரிமாற்று வீத நிர்ணமுறை ஒன்றும் உண்டு. இந்தியாவில் இவ்வகையான முறையே பின்பற்றப்படுகிறது.

1. நிலையான பரிமாற்று வீதம்

மாறாத பரிமாற்று வீதத்தை நிலையான பரி மாற்று வீதம், மற்றும் நிலைநிறுத்தப்பட்டப் பரிமாற்று வீதம் என்ற பெயர்களாலும் குறிப்பிடலாம். ஒரு நாட்டின் அரசாங்கம் மைய வங்கியின் மூலம் பரிமாற்று வீதம் நிர்ணயித்தால் அதை மாறாத பரி மாற்று வீதம் என்கிறோம். தங்க மாற்று பன்னாட்டு பரிவியல் முறையில் (Gold Standard) நாடுகளின் பரிமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.

12-Economics-Tamil-Chapter_7.indd 168 12-01-2023 18:07:06

2. மாறுபடும்/நிலையற்ற பரி மாற்று வீதம்

அயல்நாட்டுச் செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பரி மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பரி மாற்று வீதமாகும். இதை மிதக்கும் பரிமாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.

7.9.7. பரிமாற்று வீத வகைகள்

கீழ்காணும் நான்கு வடிவங்களில் பரிமாற்று வீதத்தை வகைப்படுத்தலாம். அ) பெயரளவுப் பரி மாற்று வீதம் ஆ) மெய்யான பரி மாற்று வீதம் இ) பெயரளவுச் செயலாக்க பரி மாற்று வீதம் (NEER) ஈ) மெய்யான செயலாக்கப் பரி மாற்று வீதம் (REER).

எடுத்துக்காட்டாக: $1 = ₹ 75 என்றால்

பெயரளவுப் பரிமாற்று வீதம் = 75/1 = 75

இது இருதரப்புப் பெயரளவுப் பரிமாற்ற வீதமாகும்.

$$\text{மெய்யானப் பரி மாற்று வீதம்} = \frac{eP_f}{P}$$

இங்கு P = உள்நாட்டு விலை

P_f = வெளிநாட்டு விலை (USD)

e = பெயரளவுப் பரி மாற்று வீதம்

ஒரு பேனாவின் விலை இந்தியாவில் ₹ 50 அமெரிக்காவில் $ 5,

$$\text{மெய்யானப் பரிமாற்று வீதம்} = \frac{75x5}{50} = 7.5$$

மெய்யான பரிமாற்றுவீதம் 1 என கணக்கிடப்பட்டால், இரண்டு நாடுகளின் பணமும் சமமான வாங்கும் ஆற்றல் பெற்றுள்ளதாகப் புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக பேனாவின் விலை அமெரிக்காவில் $0.66 என்றால்

$$\text{மெய்யானப் பரி மாற்றம்} = \frac{0.66x75}{50} \cong 1$$

இந்நிலையிலிருந்தால் இந்திய ரூபாயும் அமெரிக்க டாலரும் சமமான வாங்கும் ஆற்றல் பெற்றவையாகக் கருதலாம்.

7.9.8. பரி மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

நாடுகளுக்கிடையிலான பன்னாட்டு வாணிக உறவுகளுடன் தொடர்புடைய பல காரணிகள் பரிமாற்று வீதத்தைத் தீர்மானிக்கின்றன.

1. பண வீக்க அளவு வேறுபாடுகள்

பண வீக்க அளவும் பரிமாற்ற வீதமும் தலைகீழ்த் தொடர்புள்ளவை. மற்ற நாட்டுப் பணத்துடன் ஒப்பிடுகையில் தொடர்சியாக குறைவான பண வீக்க அளவு நிலவும் நாட்டின் பணத்தின் வாங்கும் ஆற்றல் அதிகரிப்பதனால் குறைந்த பண வீக்க அளவு அந்த நாட்டின் பரிமாற்ற வீதத்தை உயர்த்துகிறது.

2. வட்டி வீத வேறுபாடுகள்

வட்டி வீதத்திற்கும் பரி மாற்ற வீதத்திற்கும் நேரடி உறவு நிலவுகிறது. ஒரு

12-Economics-Tamil-Chapter_7.indd 169 12-01-2023 18:07:06

நாட்டின் மைய வங்கி வட்டி வீதத்தை உயர்த்தி வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்க முடியும். இதன் விளைவாக பரிமாற்று வீதம் உயரும்

3. நடப்புக் கணக்குப் பற்றாக்குறை

அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் நடப்புக் கணக்கில் பற்றாக்குறை வரவைவிட செலுத்துகை அதிகமிருப்பதைக் காட்டுகிறது. அயல்நாட்டு செலாவணிக்கான கூடுதல் தேவை நாட்டின் பரி மாற்று வீதத்தைக் குறைத்துவிடும்.

4. பொதுக் கடன்

பெருமளவுப் பொதுக் கடன் அயல்நாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்காது, ஏனெனில் அது கடன் பண வீக்கத்தை உருவாக்கும். பண வீக்கம் பரிமாற்றுவீதத்தைக் குறைத்து விடும்.

5. வாணிக விகிதம்

இறக்குமதி விலையைவிட ஏற்றுமதி விலை வேகமாக அதிகரித்தால் அந்த நாட்டின் வாணிக விகிதம் மேம்படும். சாதகமான வாணிக விகிதம் நாட்டின் ஏற்றுமதித் தேவையை அதிகரிப்பது மேம்பட்டால் பரிமாற்று வீதம் உயரும்.

6. அரசியல், பொருளாதார உறுதிநிலை

ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார உறுதியான சூழ்நிலை பரிமாற்று வீதத்தையும் உறுதிபடுத்தும். பண மதிப்பு உயர்வதால் வெளிநாட்டு முதலீட்டை கவர்ந்திழுக்கும்.

7. பொருளதாரப் பின்னிறக்கம்

பொருளாதாரப் பின்னிறக்கக் காலத்தில் ஒரு நாட்டில் வட்டி வீதம் வீழ்ச்சி அடையும். வட்டி வீத வீழ்ச்சி வெளிநாட்டு முதலீட்டைக் குறைத்து விடும். இதன் விளைவாகப் பணமாற்று வீதமும் வீழ்ச்சி அடையும்

8. ஊக வாணிகம்

ஒரு நாட்டின் பரிமாற்று வீதம் குறுகிய காலத்தில்அதிகரிக்குமெனக்கணிக்கப்பட்டால் நிதி அங்காடி ஊக வாணிக முதலீட்டாளர்கள் மத்தியில் அந்த நாட்டின் பணத்திற்கு தேவை கூடும். இதனால் அந்த நாட்டின் பரி மாற்று வீதம் அதிகரிக்கும்.

மேற்கண்ட காரணிகள் மட்டுமல்லாமல் உலக அரசியல் சூழ்நிலையும் ஒரு நாட்டுக்கெதிராகப் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரமும் பரி மாற்று வீதத்தைத் தீர்மானிக்கும் ஆற்றல் மிக்க காரணிகளாகும்.

7.10 அயல்நாட்டு நேரடி மூலதனமும் (FDI) பன்னாட்டு வாணிகமும்

பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அயல்நாட்டு நேரடி முதலீடு முக்கியமான பங்கு வகிக்கிறது. வெளிநாட்டு நேரடி மூலதனமும் பன்னாட்டு வாணிகமும் மிகவும் நெருக்கமுடையவை. வளரும் நாடுகளின் இயற்கை வளங்கள் தோட்டப்பயிர் துறைகளில் மிக அதிக அளவு வெளிநாட்டினர் முதலீடு செய்து பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தனர். வெளிநாட்டு நிறுவனங்களின் உற்பத்தி இறக்குமதிக்கு மாற்றாகவும் செயல்பட்டு இறக்குமதியைக் கட்டுப்படுத்துகிறது.

வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் இயந்திரங்கள், தொழில் நுட்பம், இடு பண்டங்கள், அரிதான நுகர்வுப் பண்டங்கள் ஆகியவையும் ஒரு நாட்டுக்குள் வரும். ஏற்றுமதி செய்து ஈட்டிய அயல்நாட்டுச் செலாவணி இறக்குமதி மீது செலவழிக்க போதவில்லையென்றால் வெளிநாட்டு நேரடி மூலதனத்தைக் கொண்டு ஈடு செய்ய முடியும். அயல்நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறையைப் போக்குதல், வேலை வாய்ப்பை உருவாக்குதல்

12-Economics-Tamil-Chapter_7.indd 170 12-01-2023 18:07:06

பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தல் முதலான காரணங்களுக்காகவும் வெளிநாட்டு நேரடி முதலீடு விரும்பப்படுகிறது. பல நாடுகள் இறக்குமதிக்குப் பதிலாக வெளிநாட்டு மூலதனத்தை விரும்புகிறார்கள்.

ஒரு முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறும் நிலை



ஒரு நாட்டின் (வழங்கும் நாடு) மக்களும் அரசாங்கமும் மற்றொரு நாட்டின் (பெறும் நாடு) தொழிற்சாலைகளில் செய்யும் முதலீடு பன்னாட்டு முதலீடாக மாறுகிறது

இயற்கை வளங்கள், கனிம சுரங்கங்கள், அதிக இலாப விகிதம் உள்ள தொழில்கள், முதலான துறைகளைக் குறிவைத்து வெளிநாட்டு நேரடி முதலீடு வருகிறது. எந்நேரமும் திரும்ப வெளியேறிவிடும் அபாயம், உள்நாட்டு சட்ட விதிகளை மீறுதல் ஆகிய கெடுதல்களும் வெளிநாட்டு மூலதனத்தில் உண்டு. எனவே, வெளிநாட்டு மூலதனத்தின் நன்மைகள் அதிகமா, ஆபத்து அதிகமா என்பது விவாதத்துக்குரியது.

அமெரிக்க டாலரின் தேவை அதிகரிப்பை IMF, உலக வங்கி ஆகியவற்றை கொள்கைகள் (நிதி – வங்கி கொள்கை) அமெரிக்க டாலரின் மதிப்பை தொடர்ந்து அதிகமதிப்புடன் வைத்திருப்பதே மறைமுக நோக்கமாகும்.

7.10.1 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் (FDI) பொருள் விளக்கம்

வேறுநாட்டில் முதலீடு செய்து நிறுவனத்தின் மேலாண்மையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதையே வெளிநாட்டு நேரடி மூலதனம் என்கிறோம். பன்னாட்டு வணிக நிறுவனங்கள் வெளிநாடுகளில் முதலீடு செய்வதை இது குறிக்கிறது. இது வெளிநாட்டு நிதி மூலதனமல்ல. வெளிநாட்டு நிதி மூலதனம் குறுகியகால இலாப நோக்கில் நிதி அங்காடியில் செய்யப்படும் முதலீடாகும். நிறுவனங்களின் மேலாண்மையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது நிதி மூலதனத்தின் நோக்கமல்ல.

வெளிநாட்டு நிதி மூலதனம் (FPI)

ஒரு நாட்டில் வெளிநாட்டினர் வங்கிகளில் நிறுவனப் பங்கு வாங்குவதில், கடன் பத்திரம் வாங்குவதில், முன் பேர. வாணிகத்தில் முதலீடு செய்வதை வெளிநாட்டு நிதி மூலதனம் (Foreign Portfolio Investment) எனலாம். இது வாணிகச் செலுத்துச் சமநிலை மூலதனக் கணக்கின் ஒரு பகுதியாகும்.

7.10.2 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்

கீழ்க்காண்பவையே வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களைக் குறைத்தல்

வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு (FII)

வெளிநாட்டு நிதி நிறுவன முதலீடு என்பது பணஅங்காடி, முன்பேர நிதி அங்காடிகளில் நிதி நிறுவனங்கள் ஆகியன வழியாகச் செய்யப்படும் நிதி மூலதனமாகும். குறுகிய கால இலாபத்திற்காகச் செய்யப்படும் முதலீடாகும். எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகளிலுள்ள ஒரு பரஸ்பர நிதி நிறுவனம் இந்தியாவைச் சார்ந்த ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யலாம்.

7.10.3 வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள்

வெளிநாட்டு முதலீடு பெரும்பாலும் நேரடி முதலீடாகவே நாடுகளுக்குள் நுழைகிறது. வெளிநாட்டு நேரடி முதலீட்டின் நன்மைகளை பட்டியலிடுவோம்.

1. வெளிநாட்டு நேரடி மூலதனம் அது சென்றடையும் நாட்டின் மூலதன அளவை உயர்த்தி வேலைவாய்ப்பு, வருமான அளவையும் அதிகரிக்கும்..

2. நேரடி வெளிநாட்டு மூலதனம் சென்றடையும் நாட்டிற்கு புதிய தொழில் நுட்பத்தையும் கொண்டு வருகிறது.

3. வெளிநாட்டு நேரடி முதலீடு நுழையும் நாட்டின் அரசுக்கு நிறுவன இலாப வரி செலுத்துவதன் மூலம் வருவாயை கொண்டு வருகிறது.

4. இலாபத்தின் ஒரு பகுதியை மறுமுதலீடு செய்வதன் மூலம் தொழில்வளம் பெருகும்.

5. புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்.

6. ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தை குறைத்து அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமின்மையை நீக்கும்.

7. போட்டியை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையைத் தகர்க்கும்.

8. முதலீடு செய்த நாட்டின் உள்நாட்டு உற்பத்தியின் நிகர மதிப்புக் கூடுவது முதலீட்டிலிருந்து கிடைத்த வருவாயைவிட அதிகமாக இருந்தால் வெளிநாட்டு முதலீட்டிலிருந்து கிடைக்கும் தனியார் நிறுவனத்திற்கான இலாபத்தைவிட சமூகத்துக்கு கிடைக்கும் பலன் அதிகம்.

9. வெளிநாட்டு நேரடி மூலதனம் முதலீட்டையும் அயல்நாட்டுச் செலாவணியையும் கொண்டு வருவதன் மூலம் சேமிப்பு முதலீடு இடைவெளியையும் நிரப்ப உதவுகிறது.

10. உள்நாட்டுத் துணைத் தொழில் நிறுவனங்கள் வளரவும், வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து உள்நாட்டு சிறுதொழில்கள் வளரவும் உதவும்.

11. உள்நாட்டுத் தொழில் முனைவோர்களை வெளிநாட்டு மூலதனம் மற்ற நாடுகளில் முதலீடு செய்ய தூண்டுகிறது. இந்திய நிறுவனங்கள் நேபாளம், உகாண்டா, எத்தியோப்பியா, கென்யா முதலிய நாடுகளில் முதலீடு செய்துள்ளன. மொரிஷியஸ், சிங்கப்பூர் முதலான சிறிய நாடுகளின் வழியாகவே மிக அதிக அளவிலான முதலீடு இந்தியாவுக்குள் வந்துள்ளது.

7.10.4. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகள்

வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகளைக் காணலாம்.

1. முன்னுரிமைத் தர வேண்டிய துறைகளுக்குப் பதிலாக உயர்ந்த இலாப வாய்ப்புள்ள துறைகளில் வெளிநாட்டு முதலீடு அதிகமாக செய்யப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_7.indd 172 12-01-2023 18:07:06

2. நுழையும் நாட்டுக்குப் பொருத்தமற்ற தொழில்நுட்பத்தைக் கொண்டு வருகிறது.

3. இலாபத்தை தாய்நாட்டுக்கு எடுத்து செல்லும் காலங்களில் வெளிநாட்டு முதலீடு அயல்நாட்டு செலுத்துச் சமநிலை சமமின்மைக்கு வழி வகுக்கிறது.

4. முதலீடு செய்த நாட்டின் உள்நாட்டு அரசியலில் முதலீட்டு உரிமையாளர்கள் தலையிடுகிறார்கள்.

5. வெளிநாட்டு நிறுவனத்தார் அறமற்ற வணிக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

6. சிறு, குறு தொழில் நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் நசுக்கி விடுகின்றன.

7. தங்களுடைய பொருளாதார பலத்தால் போட்டி நிறுவனங்களை மூடவைத்து சில்லோர் முற்றுரிமை அல்லது முற்றுரிமை சூழலை உருவாக்குகிறது வெளிநாட்டு மூலதனம்

8. வெளிநாட்டு நிறுவனங்களுக்குச் சிறப்பு சலுகைகளை நாடுகள் வழங்குவதால் உள்நாட்டு சேமிப்பு குறைதல், வாணிக வீதம் பாதகமாதல், அயல்நாட்டு செலுத்துச் சமநிலை சமமின்மையை சரிசெய்வதில் இடர்ப்பாடுகள் முதலான தீய விளைவுகள் உருவாகின்றன.

7.10.5. இந்தியாவின் வெளிநாட்டு நேரடி மூலதனம்

இந்தியாவில் 1991ஆம் ஆண்டு பொருளாதார சீர்த்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டன. இது இந்தியாவின் அங்காடியை வெளிநாட்டு மூலதனத்திற்கு திறந்து விட்டது. தொடர்ந்து வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது உழைப்பும் முதலீடும் இடம் பெயர்தலை தாராளமாக்கியது, புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டுவந்தது, புதிய மேலாண்மை நுட்பங்களை அறிமுகம் செய்தது மேலும் இந்தியாவுக்குப் பன்னாட்டு அங்காடியில் நுழையும் வாய்ப்பையும் உருவாக்கியது.

வெளிநாட்டு மூலதனத்தால் பலனடைந்த இந்தியத் துறைகள்

(i) நிதித் துறை
(ii) காப்பீடு
(iii) தகவல் தொடர்பு
(iv) சுற்றுலா, விருந்தோம்பல் துறை
(v) மருந்து உற்பத்தி
(vi) மென்பொருள், தகவல் தொழில் நுட்பம்

இந்தியாவில் வெளிநாட்டு மூலதனம் தடை செய்யப்பட்டத் துறைகள்

(i) போர்க்கருவிகள், ஆயுத உற்பத்தி
(ii) அணு ஆற்றல்
(iii) தொடர்வண்டிப் போக்குவரத்து
(iv) நிலக்கரி, பழுப்பு நிலக்கரி
(v) இரும்புத் தாது, மாங்கனீசு, கிரோம், ஜிப்சம், சல்பர், தங்கம், வைரம், தாமிரம் தாது சுரங்கத் துறை

வெளிநாட்டு நேரடி மூலதனம் இந்தியாவுக்குள் 97 மில்லியன் அளவுக்கு 1990 – 91ஆம் ஆண்டு வந்தது. இது 5,535 மில்லியனாக 2004 – 05 இல் இருந்தது. இது 2011 – 12 32,955 ஆக உயர்ந்தது. UNCTAD உலக முதலீட்டு அறிக்கை 2018 இன்படி 2016 இல் 44 பில்லியனாக இருந்த வெளிநாட்டு நேரடிமூலதனம் 2017 இல் 40 பில்லியனாகக் குறைந்துள்ளது.

தொகுப்புரை

பன்னாட்டுப் பொருளியல் பொருள், பணிகள், மூலதனம், பண பரிமாற்றங்களை விவரிக்கும் பாடப்பிரிவாகும். நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஏன் ஈடுபடுகின்றன,

அதன் விளைவுகள் என்ன என்பதை விளக்கும் கோட்பாடுகளில் மூன்று கோட்பாடுகளைப் பயின்றோம். பன்னாட்டு வாணிகத்தின் பலன்கள், வாணிக வீதம், அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை ஆகியவைப் பற்றியும் அவற்றின் சமநிலை மாறினால் மீண்டும் சமநிலையை அடைவதற்கான வழிமுறைகளையும் கற்றுக்கொண்டோம்.

இரண்டு விதமான பண மாற்று வீத நிர்ணய முறைகளையும் மற்றும் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மை தீமைகளையும் விவாதித்தோம்.

பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகளான IMF, IBRD, WTO, வாணிகப் பகுதிகளான SAARC, ASEAN, BRICS ஆகிய அமைப்புகள் பன்னாட்டு வாணிகத்தில் மிக முக்கியமான பங்கு வகிப்பதைப் பற்றி அடுத்தப் பாடத்தில் பார்ப்போம்.

சிந்தித்து செயலாற்றுதல்

1. இந்தியப் பணம், அமெரிக்க டாலரிடையேயான செலாவணி விகிதம் இது $1 = ₹65 என வைத்துக்கொள்வோம். இது $1 = ₹55 என மாறினால், எப்பணத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. எப்பணத்தின் மதிப்புக் குறைந்துள்ளது?
2. நம்மாநிலத்தின் முக்கியமான நபரின் ஆரோக்கியத்தைச் சோதித்தறிய இங்கிலாந்திலிருந்து ஒரு மருத்துவர் அழைக்கப்படுகிறார் எனக் கொள்வோம். இம்மருத்துவருக்கு வழங்கப்படும் கட்டணங்கள் வாணிகச் செலுத்துச் சமநிலைக் கணக்குகளில் எக்கணக்கில் பதிவுசெய்யப்படும்?

கலைச்சொற்கள்

- **பன்னாட்டுப் பொருளியல்** : பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளைப் படிப்பதற்கான பொருளியலின் பாடப் பிரிவாகும்.
- **உள்நாட்டு வாணிகம்** : ஒரு நாட்டின் புவி எல்லைகளுக்குள் நடைபெறும் வாணிகம்
- **பன்னாட்டு வாணிகம்** : ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையிலான வாணிகம். இது ஒரு நாட்டின் புவி எல்லைகளையும் அரசியல் எல்லைகளையும் கடந்து நடைபெறும் வாணிகமாகும்.
- **முழு செலவு வேறுபாடுகள்(Absolute cost):** ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய ஆற்றப்படும் உண்மைச் செலவுகளில் இரு நாடுகளிடையே காணப்படும் வேறுபாடு.
- **ஒப்புமைச் செலவு வேறுபாடுகள்** : இரு பண்டங்களை உற்பத்தி செய்வதில் ஆற்றப்படும் முழுச் செலவுகளில் இரு நாடுகளிடையேயான வேறுபாடு.
- **உற்பத்திக் காரணி கிடைக்கும் அளவு (Factor Endowment)** : ஒரு நாடு ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணிகளைப் பெற்றுள்ள அளவு
- **வாணிக வீதம்** : ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையிலான விகிதம்
- **வாணிகச் சமநிலை நிலை** : பண்டங்கள் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமிடையிலான கழித்தல் (Subtraction) வேறுபாடு. பண்டங்கள் ஏற்றுமதி, இறக்குமதி மதிப்பின் நிகர மதிப்பு என்றும் புரிந்து கொள்ளலாம்.
- **அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை** : ஒரு நாடு உலக நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிமாற்றங்களைக் கணக்கியல் முறையில் தொகுத்தளிக்கும் அறிக்கையே அயல்நாட்டுச் செலுத்துநிலை
- **பண மதிப்பிறக்கம்** : ஒரு நாட்டின் பணத்தை நாடுகளின் பணமாக மாற்றும் வீதத்தை அந்நாட்டின் மைய வங்கி குறைத்து நிர்ணயம் செய்தல்.

- **அயல்நாட்டுச் செலாவணி** : ஒரு நாட்டின் மைய வங்கியின் இருப்பில் உள்ள தங்கமும் பிறநாடுகளின் பணமும்
- **பண மாற்று வீதம்** : ஒரு நாட்டின் பணத்தின் ஒரு அலகை மற்ற நாடுகளின் பணத்தில் எத்தனை அலகுகளுக்கு பரிமாற்றிக்கொள்கிறோம் எனும் வீதம்
- **மாறா பண மாற்று வீதம்** : ஒரு நாட்டின் மைய வங்கியால் பண மாற்று வீதத்தை நிர்ணயம் செய்யும் முறை
- **மாறுகின்ற பணமாற்று வீதம்** : அயல்நாட்டுச் செலாவணி சந்தை விசைகளான அயல்நாட்டுச் செலாவணி தேவையளவும் அளிப்பினளவும் தன்னிச்சையாகச் செயல்பட்டு நிர்ணயமாகும் பண மாற்று வீதமே மாறுகின்ற பணமாற்று வீதம்
- **வெளிநாட்டு நேரடி மூலதனம்** : ஒரு நாட்டில் வேறுநாட்டு நிறுவனம் உற்பத்தித் துறையில் முதலீடு செய்வதையே வெளிநாட்டு நேரடி மூலதனம் என்கிறோம்.

மாதிரி வினாக்கள்

3QA50

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது ______
   அ. வெளிவாணிகம்
   ஆ. உள்வாணிகம்
   இ. மண்டலங்களுக்கிடையான வாணிகம்
   ஈ. உள்நாட்டு வாணிகம்

2. கீழ்க்காண்பவற்றுள் வாணிகத்தைத் தீர்மானிக்கும் காரணி எது?
   அ. ஒரு பண்டத்தின் மேம்பாட்டு கால கட்டம்
   ஆ. உற்பத்திக் காரணிகளின் ஒப்பீட்டு விலை
   இ. அரசாங்கம்
   ஈ. மேற்கண்ட அனைத்தும்

3. பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்
   அ. வணிகக் கட்டுப்பாடுகள்
   ஆ. உற்பத்திக் காரணிகள் இடம் பெயர இயலாமை
   இ. நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்
   ஈ. மேற்சொன்ன அனைத்தும்

4. நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைக் காரணம்
   அ. ஒரு நாடு ஒரு குறிப்பிட்டப் பண்டத்தையும் வேறு நாடு மற்றொரு பண்டத்தையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது
   ஆ. உற்பத்தி வளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத் தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளன
   இ. பன்னாட்டு வாணிகம் இலாபக் குவிப்பு வாய்ப்பை அதிகப்படுத்துகிறது
   ஈ. நாடுகளில் நிலவும் வட்டி வீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது

5. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?
   அ. முழுமைச் செலவு
   ஆ. ஒப்புமைச் செலவு
   இ. உற்பத்திக் காரணிக் கோட்பாடு
   ஈ. எதுவுமில்லை

6. பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை

அ. பண சந்தை

ஆ. அயல்நாட்டுச் செலாவணி

இ. பங்கு சந்தை

ஈ. மூலதன சந்தை

7. கீழ்க்காணும் எந்த பரிமாற்று வீதமுறையில் அங்காடி சக்திகளான தேவையும் அளிப்பும் பரிமாற்று வீதத்தை நிர்ணயிக்கின்றன.

அ. மாறா பணமாற்று வீதம்

ஆ. மாறுகின்ற பண மாற்று வீதம்

இ. நிலைத்த பணமாற்று வீதம்

ஈ. அரசு ஒழுங்காமைப்பும் முறை

8. ஏற்றுமதி நிகரம் என்பது

அ. ஏற்றுமதி X இறக்குமதி

ஆ. ஏற்றுமதி + இறக்குமதி

இ. ஏற்றுமதி – இறக்குமதி

ஈ. பணிகள் ஏற்றுமதி

9. கீழ்க்காண்பவர்களில் யார் ஒற்றைக் காரணி வாணிக வீதத்தை வடிவமைத்தவர்

அ. ஜேக்கப் வைனர்

ஆ.G.S. டோரன்ஸ்

இ. எப்.டபில்யூ டாசிக்

ஈ. ஜே.எஸ் மில்

10. வாணிக வீதம் __________ பற்றி குறிப்பிடுகின்றது.

அ. பொருள் ஏற்றுமதி இறக்குமதி விகிதம்

ஆ. இறக்குமதி வழி விகிதம்

இ. ஏற்றுமதி விலை, இறக்குமதி விலை விகிதம்

ஈ. (அ) வும் (இ)யும்

11. சாதகமான வாணிகச் சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட _________ஆக இருக்கும்

அ. அதிகமாக

ஆ. குறைவாக

இ. கிட்டத்தட்ட சமமாக

ஈ. சமமாக

12. இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்க்காணும் வழிகளில் எது சரி செய்யும்

அ. சுங்கத் தீர்வையைக் குறைத்தல்

ஆ. ஏற்றுமதி வரியை அதிகரித்தல்

இ. ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்

ஈ. இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

13. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை உள்ளடக்கிய இனங்கள்

அ. புலனாகும் பண்டங்கள் மட்டும்

ஆ. புலனாகாத பணிகள் மட்டும்

இ. அ மற்றும் ஆ

ஈ. பண்ட வாணிகம் மட்டும்

14. அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பவற்றில் எவை

அ. நடப்பு கணக்கு

ஆ. மைய வங்கி இருப்பு

இ. மூலதன கணக்கு

ஈ. அ,ஆ,இ மூன்றும்

15. வாணிகச் சமநிலை அறிக்கையில்

அ. பண்டப் பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது

ஆ. பண்டங்கள் பணிகள் பரிமாற்றங்கள் பதிவாகிறது

இ. மூலதனம் மற்றும் நிதி பரிமாற்றங்கள் பதிவாகின்றன

ஈ. மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது

12-Economics-Tamil-Chapter_7.indd 176 12-01-2023 18:07:07

16. சுற்றுலாவும் வெளிநாட்டுப் பயணமும் தொடர்புடைய பரிமாற்றங்கள் அயல்நாட்டு செலுத்துச் சமநிலையின் எந்தக் கணக்கின் கீழ் பதிவாகின்றன

அ. பண்டங்கள் வாணிகக் கணக்கு

ஆ. பணிகள் வாணிகக் கணக்கு

இ. பரிமாற்றக் கணக்கு

ஈ. மூலதனக் கணக்கு

17. சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமற்ற நிலைக்கான காரணம்

அ. வாணிகச் சுழற்சியின் மாறுபட்ட கால கட்டம்

ஆ. வருமானமும் விலை தேவை நெகிழ்ச்சியும் நாடுகளுக்கிடையே வேறுபடுதல்

இ. நீண்டகாலப் பொருளாதார மாற்றங்கள்

ஈ. அ மற்றும் ஆ

18. கீழ்க்காண்பவற்றில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான எடுத்துக்காட்டாகக் கூற முடியாது?

அ. வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்

ஆ. வெளிநாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இரும்பு உருக்கு ஆலையை வாங்குதல்

இ. வெளிநாட்டு துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது

ஈ. முழு தனி உரிமையுடன் ஒரு புதிய நிறுவத்தை வெளிநாட்டில் தொடங்குவது

19. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?

அ. வங்கி

ஆ. அணு ஆற்றல்

இ. மருந்து உற்பத்தி

ஈ. காப்பீடு

20. கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன

அ. பொருளதார வளர்ச்சி

ஆ. பன்னாட்டு வாணிக வளர்ச்சி

இ. வேலை வாய்ப்பும் திறன் அதிகரித்தலும்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?

22. பன்னாட்டு வாணிகம் வரைவிலக்கணம் தருக.

23. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக

24. பன்னாட்டுவாணிகத்தின்அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும், டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

25. வணிக வீதத்தினை விளக்குக.

26. வணிகச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?

27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
அ	ஈ	ஈ	ஆ	இ	ஆ	ஆ	இ	அ	இ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	இ	இ	ஈ	அ	ஆ	ஈ	இ	ஆ	ஈ

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக
29. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.
30. மொத்த நிகர பண்டப் பரிமாற்று வாணிக வீதத்தைச் சுருக்கமாக எழுதுக
31. வாணிகக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக்குமிடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக
32. இறக்குமதி கட்டுப்பாடு என்றால் என்ன?
33. மாறுகின்ற பணமாற்று வீதத்தின் பொருள் தருக?
34. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்குமிடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.
36. ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.
37. புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.
38. ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிக வீத வகைகளை விவரி.
39. அயல் நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.
40. அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையின் வகைகளை விவரி.
41. பண மாற்று வீதம் எவ்வாறு இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது என்பதை எடுத்துக்காட்டு விளக்குக.
42. வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.

செய்முறை

1. பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனம் அல்லது தொழிற்சாலைக்கு மாணவர்களை அழைத்துச் சென்று அங்கு பின்பற்றப்படும் நடைமுறைகளையும், ஆற்றப்படும் நடவடிக்கைகளையும் அறியச்செய்தல்.
2. மாணவர்களை 'நாடுகளாக' குழுப்பிரித்து அவர்களிடையே சில பண்டங்களை மாற்றச் செய்து, அவர்கள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடுவதுபோல் காட்டச் செய்தல்.

12-Economics-Tamil-Chapter_7.indd 178 12-01-2023 18:07:07

பார்வை நூல்கள்

1. Bhargava, B.K (1992). Competition Success Review Economics for Civil Services Preliminary Examination, Sudha Publications Pvt. Ltd, New Delhi, 405 – 630.
2. Francis Cherunilam (2009). International Economics, Tata McGraw Hill Education Pvt. Ltd, New Delhi, 3–26,122–190, 357–373, 410–426.
3. Jhingan, M.L (2011). International Economics, Vrinda Publications (Pvt.) Ltd, Delhi, 295.
4. Mithani, D.M (2015). International Economics, Himalaya Publishing House, New Delhi, 1 – 250.
5. Neelamegam, V (2010). International Trade, Vrinda Publications (P) Ltd, Delhi, 1–160.
6. Sundharam, K.P.M (1986). Money, Banking, Trade and Finance, Sulthan Chand and Sons, New Delhi, 4.1 – 4.94.
7. True Man Book Company (2005). UGC NET / SET Economics, Danika Publishing Company, New Delhi, 156 – 205.

இணையதளங்கள்

1. http://www.studyingeconomics.ac.uk/module-options/international-economics/
2. http://cis01.central.ucv.ro/iba/files/summary.pdf
3. https://www.thoughtco.com/definition-of-international-economics-1146350
4. https://keydifferences.com/difference-between-balance-of-trade-and-balance-of-payment.html
5. https://www.youtube.com/watch?v=lKDfze_KodA
6. https://www.investopedia.com/terms/f/foreign-portfolio-investment-fpi.asp
7. https://www.investopedia.com/terms/f/fii.asp
8. http://www.eiiff.com/investment/foreign-institutional.html
9. https://connectusfund.org/17-big-advantages-and-disadvantages-of-foreign-direct-investment.

12-Economics-Tamil-Chapter_7.indd 179 12-01-2023 18:07:07

இயல் 8

பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள்

"மேம்பட்ட ஆற்றல் வளம் பரந்த நிலையில் காணப்படும் பொழுது இடர்கள் நிருவகிக்கப்பட்டால் எண்ணற்ற அளவில் அயல்நாட்டு மூலதனத்திற்கான சூழ்நிலைகள் தெரிவு செய்யப்படுகின்றன".

– ருடி டார்புஷ்

புரிதலின் நோக்கங்கள்

1 உலக வணிகத்தின் அளவை அதிகரிப்பதில் சர்வதேச பொருளாதார அமைப்புகளின் பங்கை புரிந்து கொள்ளுதல்.

2 பன்னாட்டு பண நிதி, உலக வங்கி மற்றும் உலக வணிக அமைப்பு ஆகியவற்றின் நோக்கங்கள், பணிகள் மற்றும் சாதனைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

3 பிரிக்ஸ் (BRICS), ஏசியான் (ASEAN) மற்றும் சார்க் (SAARC) போன்ற வணிகத் தொகுதிகளின் நோக்கங்கள், பணிகள், சாதனைகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

8.1 அறிமுகம்

முந்தைய பாடத்தில் பன்னாட்டு வணிகத்தின் அடிப்படைகள், வணிகத்தின் பலன்கள், வணிக வீதம், அயல்நாட்டுச் செலுத்துச்சமநிலை அயல்நாட்டுச் செலாவணி மாற்று வீதம் ஆகியவற்றை பயின்றோம். நாடுகளுக்கிடையே வணிகம் நடைபெறும் போது, வளர்ந்த நாடுகளே எப்பொழுதும் ஆதாயம் பெறுகின்றன. குறை வளர்ச்சி நாடுகள், பாதகமான வணிக வீதம் மற்றும் அயல்நாட்டு செலுத்துநிலை, அவற்றின் மாற்றுவீதங்கள் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறன. 1930ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் இரண்டாம்

ஜான் மேனார்டு கீன்ஸ் (வலது) மற்றும் ஹேரிடெக்ஸ்டர் வொய்ட் (இடது) ஆகியோர்கள் உலக வங்கி, பன்னாட்டு பண்நிதியம் ஆகிய இரண்டையும் தோற்றுவிக்கக் காரணமானவர்களாவர்

12-Economics-Tamil-Chapter_8.indd 180 12-01-2023 17:33:09

உலகப்போர் ஆகியவை தேசிய கொள்கைகளை உருவாக்க முனைந்ததால் ஒவ்வொரு நாடும் ஏற்றுமதியை பெருமளவில் ஊக்குவிப்பதற்கும், இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், வணிகத் தடைகள், நாணய மாற்றுக் கட்டுப்பாடுகள், நாணய மதிப்புக் குறைத்தல் முதலானத் தடைகளை விதித்தன.

பன்னாட்டு பண நிதியம் (International Monetary Fund), உலக வங்கி (International Bank for Reconstruction and Development (IBRD) மற்றும் பன்னாட்டு வாணிக நிறுவனம் (International Trade organization (ITO) ஆகிய மூன்று நிறுவனங்களை உருவாக்க 1944ஆம் ஆண்டில் கூடிய பிரிட்டன் வூட்ஸ் மாநாடு பரிந்துரைத்தது. பன்னாட்டு பண நிதியமும் உலக வங்கியும் 1945ல் செயல்படத் தொடங்கியது. பன்னாட்டு வாணிக நிறுவனத்துக்குப் பதிலாக தற்காலிக தீர்வாக வாணிகம் மற்றும் தீர்வைகளுக்கான பொது ஒப்பந்தம் (General Agreement on Tariff and Trade (GATT) என்ற அமைப்பு அமைப்பக. இது உலக வர்த்தக அமைப்பாக (World Trade Organisation–WTO) 1995ல் மாற்றப்பட்டு நிரந்தர நிறுவனமானது. பன்னாட்டு பண நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் தலைமை அலுவலகம் துவங்கப்பட்ட ஆண்டு அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

நிறுவனம்	தலைமையிடம்	துவங்கப்பட்ட ஆண்டு
பன்னாட்டுப் பண நிதியம்	வாஷிங்டன் டி.சி	1945
உலக வங்கி	வாஷிங்டன் டி.சி	1945
உலக வணிக அமைப்பு	ஜெனிவா	1995

8.2 பன்னாட்டு பண நிதியம் (International Monetary Fund)

பன்னாட்டுப் பணநிதியம் உலக வங்கி ஆகியவற்றின் 189ஆவது உறுப்பு நாடாக பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ளன. மிகச் சிறிய தென் பசிபிக் தீவு நாடாகிய நவ்ரு குடியரசு இணைந்தது

உறுப்பு நாடுகளுக்கிடையே பொருளாதார நிதி ஒத்துழைப்பைப் பெறுவதே நிதியத்தின் அடிப்படை குறிக்கோளாகும். உறுப்பு நாடுகளுக்குக் குறுகிய கால அயல்நாட்டுச் செலவாணி சமமின்மையை சமாளிக்க உதவுவதற்காக நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. 2018 – ஆம் ஆண்டின் படி கடைசியாக 2016 – இல் உறுப்பினராக சேர்ந்த நவ்ரு குடியரசு என்ற நாட்டையும் சேர்த்து நிதியம் 189 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

8.2.1. பன்னாட்டுப் பண நிதியத்தின் குறிக்கோள்கள் (Objectives of IMF)

i) உறுப்பு நாடுகளிடையே பன்னாட்டுப் பறிமாற்றத்தில் பணவியல் ஒத்துழைப்பைப் மேம்படுத்துவது

ii) பன்னாட்டு வணிகம் வேகமாகவும் சமச்சீராகவும் வளர உதவுவது.

iii) உறுப்பு நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பண மதிப்பிறக்கம் செய்வதைத் தடுத்து நாணய மாற்று விகிதம் நிலையாக இருக்கச் செய்தல்

iv) உறுப்பு நாடுகள் விதிக்கும் செலாவணிக் கட்டுப்பாடுகளைக் குறைத்தல் அல்லது நீக்குதல்'

v) இருதரப்பு வாணிக ஒப்பந்தங்களுக்குப் பதிலாக அனைத்து நாடுகளுக்கிடையிலான பலதரப்பு நடப்புக் கணக்கு பண பறிமாற்ற முறை ஆகியவற்றை நிறுவுவது

vi) வளர்ந்த நாடுகள் வளரும் நாடுகளில் மூலதனம் செய்வதை எளிதாக்குவதன் மூலம் வளரும் நாடுகளின் உற்பத்தி வளங்களையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவது.

vii) பன்னாட்டு நீர்மை சிக்கலுக்குத் தீர்வு காண்பது.

8.2.2 பன்னாட்டுப் பண நிதியத்தின் பணிகள் (Functions of IMF)



i) நாணய மாற்று வீதத்தில் நிலைத்தன்மையைக் கொண்டுவருதல்

ஐ.எம்.எப் – ன் முதலாவது மிக முக்கியமான பணியாக இருப்பது நாணய மாற்று வீதத்தை நிலைப்படுத்துதல்; அதோடு பிற பணிகளாக நாணய மதிப்புக் குறைப்பை வலியுறுத்துதல், உறுப்பு நாடுகள் பன்முக மாற்று வீதங்களுக்குச் செல்வதைத் தடுத்தல், தங்கத்தை அறிவிக்கப்பட்ட மதிப்பு நீங்கலாக குறிப்பிட்ட விலையில் வாங்க விற்க வலியுறுத்தல் ஆகியவை.

ii) அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமின்மையை சரி செய்தல்

உறுப்பு நாடுகளுக்கு அயல்நாட்டுச் செலாவணிகளை விற்பனை செய்தல், கடனாக வழங்குவதன் மூலம் அவற்றின் அயல்நாட்டுச்செலுத்துநிலை சமமின்மையைக் குறுகிய காலத்தில் நீக்குவதற்கு அல்லது குறைப்பதற்கு உதவுகிறது.

iii) இணை மதிப்பை உறுதிசெய்தல்.

உறுப்பு நாடுகளின் நாணயங்களின் மதிப்பு மூல முறையை உறுதி செய்வதற்கு ஐ.எம்.எப் வலியுறுத்துகிறது. ஐ.எம்.எப் – ன் அமைப்பு உடன்பாட்டின்படி, ஒவ்வொரு உறுப்பு நாடும் அதன் நாணய மதிப்பினை தங்கம், அல்லது அமெரிக்க டாலர்கள் என்ற அடிப்படையில் உறுதி செய்யவேண்டும். இந்த நிபந்தனையின்படி, ஐ.எம்.எப். பன்னாட்டு பண முறையின் சுமூக செயல்பாட்டிற்கு உறுதி செய்கிறது.

iv) நாடுகளின் பணத்திற்கான தேவையை அளிப்புக்கு சமமாகும் வகையில் பராமரித்தல்

நாடுகளின் பணத்திற்கான தேவைக்கு சமமாக அளிப்பைப் பராமரிக்கும் முதன்மை பொறுப்பையும் நிதியம் பெற்றுள்ளது. உயர்வான தேவையுள்ள எந்த நாட்டு பணத்தையும் பற்றாக்குறையுள்ள பணம் என நிதியம் அறிவிக்கலாம். அந்த நாட்டிலிருந்து அவர்களின் பணத்தைக் கடன் வாங்கியோ தங்கத்தைக் கொடுத்துப் பணத்தைக் கொள்முதல் செய்தோ பற்றாக்குறை என அறிவிக்கப்பட்ட பணத்தின் அளிப்பை நிதியம் உயர்த்தும்.

v) வணிகத் தடைகளைக் குறைத்தல்

இந்நிதியம் உறுப்பு நாடுகளால் விதிக்கப்படுகின்ற சுங்க வரியையும் பிற வணிகத் தடைகளை குறைப்பதன் மூலம் பணம் அனுப்புதல் குறித்த தடைகளை நிறுத்துதல் அல்லது பேத நடவடிக்கைகளைத் தவிர்த்தல் ஆகியவற்றை இதன் நோக்கமாகக் கொண்டுள்ளது.

vi) கடன் வசதிகளை வழங்குதல்

உறுப்பு நாடுகளுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு ஐ.எம்.எப் பல்வேறு வகையான கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. அடிப்படை கடன் வசதி, மூன்று ஆண்டுகளுக்கான விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதி, ஈடுசெய் நிதிவசதி, கட்டமைப்பு சரிசெய்தல் வசதி ஆகியவற்றை இக்கடன் வசதிகள் உள்ளடக்கியுள்ளன.

நிதியம் ஆற்றும் பணிகளை மூன்று தலைப்புகளில் வகைப்படுத்தலாம்.

1. நிதி சார்ந்த பணிகள் – உறுப்பு நாடுகளின் குறுகிய, நடுத்தர கால அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பற்றாக்குறையை சரிக்கட்ட வழங்கப்படும் நிதி உதவிப் பணிகள்.
2. ஒழுங்காற்றுப் பணிகள் – உறுப்பு நாடுகள் கடைப்பிடிக்க வேண்டிய நடத்தை விதிகளைச் செயல்படுத்துதல்.
3. ஆலோசனைப் பணிகள் – பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.

8.2.3 நிதியம் வழங்கும் வசதிகள்

நிதியம் வழங்கும் கடன் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(i) அடிப்படைக் கடன் வசதி

உறுப்பு நாடுகள் தற்காலிக அயல்நாட்டுச் செலுத்துச்சமநிலைசமமின்மைஇடர்களிலிருந்து விடுபட இந்த வகை கடன் உதவியை நிதியம் அளிக்கின்றது. ஒரு உறுப்பு நாடு நிதியத்திடமிருந்து மற்ற நாட்டு பணத்தையோ சிறப்பு எடுப்புரிமையையோ (SDR) தங்கள் நாட்டுப் பணத்தைக் கொடுத்து பெற்றுக் கொண்டு அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைப் பற்றாக்குறையை நிரப்பிக் கொள்ளலாம். ஒரு உறுப்பினர் நாடு நிதியத்தில் அது பராமரிக்கும் மூலதனப் பங்குத் (Quota in Capital) தொகையில் 25 விழுக்காடு அளவுக்கு நிபந்தனையற்றக் கடன் பெறுவதையே அடிப்படைக் கடன் என்கிறோம். இந்த நிபந்தனையற்றக் கடன் வாங்கும் உரிமை கையிருப்பு பகுதி (Reserve Tranche) என அழைக்கப்படுகிறது.

சிறப்பு எடுப்புரிமைகள்
(Special Drawing Rights)

தாள் தங்கம் என்று அழைக்கப்படும் சிறப்பு எடுப்புரிமைகள் (SDRs) எனும் திட்டத்தை நிறுவியதில் நிதியம் வெற்றி பெற்றுள்ளது. பன்னாட்டு நீர்மைத் தன்மையை உருவாக்க 1969ஆம் ஆண்டில் நிதியம் பன்னாட்டுப் பண இருப்புகளை ஏற்படுத்தியது. இவை நிதியத்தின் உறுப்பு நாடுகளுக்கு அவர்களின் மூலதனப் பங்குத் தொகையின் அளவுகளுக்கு ஏற்றாற்போல் அளிக்கப்படுகின்றது. இதன் மூலம் சிறப்பு எடுப்புரிமைகள் பன்னாட்டு மதிப்பளவையாகவும் செலுத்து நிலையாகவும் செயல்படுகின்றது. நிதியம் வழங்கும் வைப்புகள், மூலதனம் ஆகிய அனைத்துச் செயல்பாடுகளும் சிறப்பு எடுப்புரிமையில் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஹெயின் (Haien) கூறியபடி "நிதியம் ஒரு பன்னாட்டு மத்திய வங்கி போல் உள்ளது" எனும் கருத்தே நிதியத்தின் சாதனையாகும்.

12-Economics-Tamil-Chapter_8.indd 183 12-01-2023 17:33:09

(ii) விரிவாக்கப்பட்ட நிதி வசதி

உறுப்பு நாடுகள் தங்களின் மூலதனப்பங்குத் தொகையில் 140 விழுக்காடு அளவுக்கு அடிப்படைக் கடன் தொகைக்கு மேல் அதிகமாக கடன் பெற அனுமதிப்பதே விரிவாக்கப்பட்ட கடன் திட்டம். இது மூன்று ஆண்டுகளில் குறைந்த வட்டியில் திரும்ப செலுத்தத்தக்க கடன் திட்டமாகும்.

(iii) ஈடு செய் நிதி வசதி

நிதியம் 1963 ஆம் ஆண்டில் ஈடு செய் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. குறைவான ஏற்றுமதி வருவாய் ஈட்டும் முதன்மைத் துறை பண்ட உற்பத்தியைச் சார்ந்திருக்கும் நாடுகளுக்கான தனிப்பட்ட கடன் திட்டமே ஈடு செய் கடன் திட்டமாகும். தானிய விலை ஏற்ற இறக்கத்தினால் இறக்குமதிக்கான தொகையை செலுத்த இயலாமல் துன்பப்படும் நாடுகளுக்குக் கூடுதல் கடன் வழங்கும் வகையில் 1981 ஆம் ஆண்டில் ஈடுசெய் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

(iv) தாங்கிருப்பு வசதி

தாங்கிருப்பு நிதி வசதி 1969ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. உணவு தானியங்கள் விளைவிக்கும் நாடுகள் தானிய சேமிப்பு கிடங்குகள் அமைத்து உணவுப் பண்டங்கள் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படும் கடனே தாங்கிருப்பு வசதிக்கான கடனாகும்.

(v) துணை நிதி வசதி

மூலதனப் பங்களவு சிறிதாக உள்ள உறுப்பு நாடுகள் அயல்நாட்டுச் செலுத்துநிலை இடர்களிலிருந்து விடுபட நிதியம் தற்காலிக நிதி உதவித் திட்டத்தை ஏற்பாடு செய்தது.

(vi) கட்டமைப்பு சரி செய்தல் வசதி (Structural Adjustment Facility (SAF)

மார்ச் 1986ஆம் ஆண்டில் சலுகைகளுடன் ஏழைநாடுகளுக்கு கூடுதல் அயல்நாட்டுச் செலாவணி கடனுதவியாக வழங்கும் இத்திட்டத்தை நிதியம் துவக்கியது. டிசம்பர் 1987ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டக் கட்டமைப்புக் கடன் திட்டத்தை (Enhanced Structural Adjustment Facility (ESAF) நிதியம் துவக்கியது. இத்திட்டத்தின் கீழ் அதிக சலுகைகளுடன் குறைவான வருவாய் உள்ள நாடுகளுக்கு அயல்நாட்டுச் செலாவணி கிடைப்பதை அதிகரிக்கும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏழைநாடுகளின் அயல்நாட்டு செலுத்துச் சமநிலையை சாதகமாக்கிப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் திட்டங்களை மேற்கொள்ள உதவி செய்வதே இந்த இரண்டு கடன் திட்டங்களின் குறிக்கோளாகும்.

8.2.4. நிதியத்தின் சாதனைகள் (Achivements of IMF)

நிதியத்தின் சாதனைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

i) பன்னாட்டுப் பண இருப்பை நிறுவுதல்

உலக நாடுகளின் பணத்தைச் செலாவணி கையிருப்பாகத் திரட்டியதில் நிதியம் சிறப்பாக பங்காற்றுகின்றது. இந்தச் செலாவணி கையிருப்பை உறுப்பு நாடுகளின் செலாவணித் தேவையை நிவர்த்தி செய்யப் பயன்படுத்துகிறது.

ii) பணவியல் சுயகட்டுப்பாடும் ஒத்துழைப்பும்

உறுப்பு நாடுகள் பணபறிமாற்றகளில் தன்கட்டுப்பாட்டையும் ஒத்துழைப்பையும் கடைப்பிடிக்க வைப்பதில் நிதியம் தீவிர

12-Economics-Tamil-Chapter_8.indd 184 12-01-2023 17:33:09

ஆர்வம் கொண்டுள்ளது. இதற்காக, தங்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதில் உண்மையான முயற்சிகள் செய்த நாடுகளுக்கு மட்டும் நிதி உதவிகளை வழங்கியது.

iii) பின்தங்கிய நாடுகளின் சிக்கல்களைத் தீர்ப்பதில் சிறப்புக் கவனம்

பின்தங்கிய நாடுகளின் கடுமையான பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காண்பதில் சிறப்பு கவனம் செலுத்தியதே நிதியத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். பாதக செலுத்து நிலையைச் சரிசெய்ய தாராளமான கடன் உதவிகளை வழங்குகின்றது. இருந்த போதிலும் பெரும்பான்மையான பின்தங்கிய நாடுகள் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

8.2.5. இந்தியாவும் பன்னாட்டு பண நிதியமும்

இந்தியா நிதியத்தின் ஐந்தாவது பெரிய உறுப்பு நாடாக 1970 ஆம் ஆண்டு வரை இடம் பிடித்திருந்தது. ஒரு நிரந்தர செயல் இயக்குநரை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. நிதியத்திலிருந்து பல உதவிகள் பெற்று ஒழுங்காகக் கடன் தவணைகளைக் கட்டி வருகின்றது. இந்தியாவின் எஸ்.டி.ஆர். பங்களவு தற்போது 5821.5 மில்லியன் டாலராக உள்ளது. அதிக அளவு எஸ்.டி.ஆர் பங்களவு உள்ள நாடுகளில் இந்தியா 13வது உறுப்பு நாடாகவும் நிதியத்தின் மொத்த பங்களவில் 2.44 விழுக்காடு பங்குகளையும் கொண்டுள்ளது. அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலை பற்றாக்குறையைச் சரிசெய்வதற்குக் கடன்கள் பெறுவதோடு இந்தியா பிறவழிகளிலும் நிதி உதவியை உறுப்பினர் எனும் முறையில் பெற்று பயனடைந்து வருகின்றது.

எஸ்.டி.ஆர். (SDR) யாது?

- ❖ ஐ.எம்.எப்–ன் கட்டளைப்பணமாகும்.
- ❖ நாணய குழுமத்தின் வலுவான உரிமை கோரல்

எஸ்.டி.ஆர். குறிப்பது யாது?

- ❖ சிறப்பு எடுப்பு உரிமைகள்(SDR)

எஸ்.டி.ஆர். ஏன் உருவாக்கப்பட்டது?

- ❖ உலக வைப்பு நாணயமாக செயல்படுவதற்கு
- ❖ உலக அளவிலான பண நீர்மையை உருவாக்குவதற்கு

எஸ்.டி.ஆர். எவ்வாறு மதிப்பிடப்படுகிறது?

- ❖ 1969–ஆம் ஆண்டில் உருவக்கப்பட்டது தொடக்கத்தில் எஸ்.டி.ஆரின் மதிப்பாக 0.888671 கிராம் தூய பொன் – அந்தக் காலகட்டத்தில் 1 US$ சமமானதாகும்.

8.3 மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டுக்குமான பன்னாட்டு வங்கி அல்லது உலக வங்கி

மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டுக்குமான பன்னாட்டு வங்கியானது உலக வங்கி எனவும் அழைக்கப்படுகிறது.1944ஆம் ஆண்டில் நடைபெற்ற பிரட்டன் வூட்ஸ் மாநாட்டுத் தீர்மானத்தின்படி

12-Economics-Tamil-Chapter_8.indd 185 12-01-2023 17:33:09

1945ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரினால் சீரழிந்த உலக நாடுகளின் பொருளாதார சூழ்நிலையை அமைதி காலச் சூழ்நிலையாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் உலக வங்கி தொடங்கப்பட்டது. பன்னாட்டுப் பண நிதியத்தின் சகோதர நிறுவனமாகவும் கருதப்படுகின்றது. ஒரு நாடு உலக வங்கியின் உறுப்பினராக இருக்க வேண்டும் எனில் அது நிதியத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனை. நாடுகளின் நீண்டகாலப் பொருளாதார மேம்பாட்டுக்கு நிதி உதவி செய்வதற்காகவே உலக வங்கி தொடங்கப்பட்டது.



8.3.1. உலக வங்கியின் நோக்கங்கள் (Objectives of IBRD)

உலக வங்கியின் நோக்கங்கள்

1. மறுசீரமைப்பும் மேம்பாடும்
2. மூலதன முதலீட்டிற்கு ஊக்குவிப்பு
3. பன்னாட்டு வணிகத்திற்கு ஊக்குவிப்பு
4. அமைதிகால பொருளாதாரத்தை உருவாக்கல்
5. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

பன்னாட்டு வணிக வளர்ச்சியையும் பொருளாதார வளமையையும் பன்னாட்டு வாணிகத் தடைகளை நீக்குவதன் மூலம் அடைவதே அடிப்படைக் குறிக்கோளாகும்.

1. உறுப்பு நாடுகளின் பொருளாதார மறுகட்டமைப்பிற்கும், மேம்பாட்டிற்கும் உதவுதல்

2. உறுப்பு நாடுகளின் நீண்ட கால அயல்நாட்டு செலுத்துநிலை சமமின்மையைப் போக்குவதற்கு நீண்ட கால கடன் வழங்குவதன் மூலம் அனைத்து நாடுகளுடைய பன்னாட்டு வணிகத்தையும் சமமாக மேம்பாடு அடைவதற்கு உறுதி செய்தல்.

3. உறுப்பு நாடுகளின் கட்டமைப்புக்கும் தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கான கடன்களுக்கும் ஈட்டுறுதி வழங்குதல்.

4. போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளை அமைதிக் கால சூழ்நிலைக்கு மாற்றுவதற்கு உதவுதல்.

5. வங்கியின் சொந்த நிதியிலிருந்து உற்பத்தியை அதிகரிக்கும் கடன்களை வெளிநாட்டு மூலதனத்துக்கு உறுதுணையாகச் செயல்படும் வகையில் வழங்குவது.

12-Economics-Tamil-Chapter_8.indd 186 12-01-2023 17:33:10

உலக வங்கி கடன் வழங்கும் நடைமுறை (Lending Procedure of IBRD)

உலக வங்கியானது கடன் வழங்குவதற்கு மூன்று வகையான நடைமுறைகளைக் கடைபிடிக்கிறது.

i) வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குவது

ii) கடன் நிதியிலிருந்து கடன் வழங்குவது

iii) ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்றுத் தருவது

உலக வங்கி (WB) கடன் வழங்கும் செயல்யுக்தியை மாற்றிக் கொண்டுள்ளது. உறுப்பு நாடுகளின் பெருந்திரளான ஏழைமக்களுக்கு பலனளிக்கும் கடன் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகிறது. வேளாண்மைத்துறைக்கு மற்ற துறைகளைக் காட்டிலும் கூடுதல் கடன் வழங்குகிறது. ஊரக மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் நடவடிக்கைகளுக்குக் கடன் வழங்க கவனம் செலுத்துகிறது. அவ்வாறான மூன்று நடவடிக்கைகள்.

அ) ஊரக வாழ்மக்களுக்குக் கல்வியை பரப்புதல்.

ஆ) ஊரகச் சாலைகளை மேம்படுத்துதல்

இ) கிராமங்களை மின்சாரமயமாக்கல்.

8.3.2 உலக வங்கியின் பணிகள் (Functions of World Bank)

உறுப்பு நாடுகளின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன் வழங்கும் பணியை உலக வங்கி செய்கிறது. இதற்காக நீண்ட கால கடன்களை வழங்குகிறது. உலக வங்கி ஒப்பந்தத்தின் முதல் பிரிவின் படி கீழ்க்காணும் பணிகளை வங்கி செய்கிறது:

1. உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முதலீட்டுக்கான கடன் உதவி

உற்பத்திக்குக் கடன் முதலீடு வழங்கும் திட்டத்தின் மூலம் உறுப்பு நாடுகளின் நில எல்லைக்குட்பட்ட பகுதிகளின் மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டுக்கும் உதவி செய்யும் பணியை உலக வங்கி செய்கிறது. பின் தங்கிய நாடுகளில் உற்பத்தி வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு உதவுகின்றது.

2. பன்னாட்டு வாணிகத்தின் சரிவிகித வளர்ச்சி

பன்னாட்டு கடன் மூலதனம் வழங்கி உறுப்புநாடுகள் அனைத்தும் சரிவிகித பன்னாட்டு வணிக நீண்டகால வளர்ச்சியடைய உதவும் பணியை வங்கி செய்கிறது. இதன் விளைவாக உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுச் செலுத்துநிலை சமநிலையை அடையும்.

3. கடன் மற்றும் ஈட்டுறுதி வழங்குதல்

முக்கியமான திட்டங்களுக்கு கடன் வழங்குவது, பிற வழிகளில் கடன்பெற ஈட்டுறுதி வழங்குவது ஆகிய பணிகளையும் வங்கி செய்கிறது.

4. வெளிநாட்டுத் தனியார் முதலீட்டிற்கு ஊக்கமளித்தல்

தனியார் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் உலக வங்கியின் உறுப்பு நாடுகளுக்கு கடன் வழங்க ஈட்டுறுதிகள் வழங்கும் பணியைச்செய்து வெளிநாட்டு மூலதனத்துக்கு ஊக்கமளிக்கிறது. இந்தப் பணியின் மூலம் தனியார் மூலதனத்துடன் ஒன்று சேர்ந்து சொந்த நிதியிலிருந்து மட்டும் கடன் வழங்காமல் கடன் நிதியிலிருந்தும் கடன் வழங்க முடிகிறது.

5. தொழில்நுட்பப் பணிகள்

உலக வங்கி வாஷிங்டனில் அமைந்துள்ள பணியாளர் கல்லூரி நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளையும் உறுப்பு நாடுகளுக்கு வழங்குகிறது.

8.3.3. உலக வங்கியின் சாதனைகள் (Achievements of IBRD)

உலக வங்கி அதன் முதன்மைக் குறிக்கோளான போரினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் மறுகட்டமைப்பும் மேம்பாடும் அடைந்ததில் வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இரண்டாம் உலகப் போருக்குப்பிறகு ஐரோப்பிய நாடுகள் மீண்டெழ உலக வங்கி பெரிய அளவில் பங்காற்றியுள்ளது. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் எனும் பாகுபாடில்லாமல் கடனுதவி செய்து வருகிறது.

i) உலக வங்கியின் உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்வே சாதனையின் ஆதாரம். துவங்கிய ஆண்டில் 30 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை 1960 ஆம் ஆண்டில் 68 ஆகவும், 1988இல் 151 நாடுகளாகவும் அதிகரித்தது. தற்பொழுது 189 நாடுகள் வங்கியின் உறுப்பினர்களாக உள்ளனர்.

ii) திட்டத்தின் தேவைக்கேற்ப 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பி செலுத்தத்தக்க வகையில் உறுப்பு நாடுகளுக்கு மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டுத் திட்டக் கடனும் வழங்குகிறது. கடனின் கால அளவு நிதிக்கான தொழில் அல்லது தளவாட மதிப்பின் பயன்பாட்டைப் பொருத்து அமைகிறது.

iii) துவக்க காலங்களில் உலக வங்கி ஐரோப்பிய நாடுகளின் மறுகட்டமைப்புக்கு அதிகமாக கடன் வழங்கியது. பிற்காலங்களில் ஏழைகள் பெருந்திரளாக வாழும் வளரும் நாடுகளுக்கு கடன் வழங்கும் விதமாக தனது அணுகுமுறையை மாற்றிக் கொண்டது.

iv) உற்பத்தியை அதிகரிக்க உதவும் துறைகளான வேளாண்மை, நீர்ப்பாசனம், ஆற்றல் வளம், போக்குவரத்து ஆகியவற்றிற்கு மட்டும் உலகவங்கி கடன் வழங்கியது. அடுத்தக்கட்ட மேம்பாட்டுக்கு அடித்தளமிடும் அடிப்படைக் கட்டமைப்புத் துறைகள் வலுப்பெற உலக வங்கி உதவுகின்றது.

v) உலக வங்கியின் எளிதான கடன் பெறும் பிரிவான பன்னாட்டு பொருளாதார மேம்பாட்டுக் கூட்டமைப்பு மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கு மிகக் குறைவான வட்டி விகிதத்தில் கடன் வழங்குகிறது. இருந்தபோதிலும் உறுப்பு நாடுகளுக்கிடையே பொருளாதார சமச்சீரின்மை நிலவுகின்றது. அநேக ஆப்பிரிக்க நாடுகள் இன்னும் பொருளாதாரத்தை மேம்படுத்தவில்லை.

8.3.4. இந்தியாவும் உலக வங்கியும் (India and World Bank)

இந்தியா உலகவங்கியின் அதிகாரபூர்வ பெயரான International Bank for Reconstruction and Development என்ற பெயரை வரைவு குழுவுக்கு முதலில் பரிந்துரை செய்தது. அன்றிலிருந்து இந்தியாவில் பொருளாதார கொள்கைகளை வடிவமைப்பதிலும் அவற்றை செயல்படுத்தக் கடன் வழங்குவதிலும் உலக வங்கி நெருக்கமாக உள்ளது. இந்தியாவுக்கு பல பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்தக் கடன் தந்து உதவியுள்ளது. உள்கட்டமைப்புத் திட்டங்களான மின்னாற்றல், போக்குவரத்து, தகவல் தொடர்பு, நீர்ப்பாசனம், மற்றும் இரும்பு எஃகு போன்றவற்றைக் குறிப்பாகச் சொல்லலாம்.

உலக வங்கியின் துணை நிறுவனமாக பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) கடன் வழங்க ஐந்து முன்னுரிமைப் பகுதிகளை அடையாளம் காட்டியது. அவையாவன; மூலதன அங்காடி

12-Economics-Tamil-Chapter_8.indd 188 12-01-2023 17:33:10

மேம்பாடு, வெளிநாட்டு நேரடி முதலீடு, வெளிநாட்டு அங்காடி நுழைவு, வாய்ப்புகள், புதிய நிறுவனங்கள், வேகமாக வளர்ந்து வரும் நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்குகளில் முதலீடு செய்தல் மற்றும் உள்கட்டமைப்புத் துறைப் பகுதிகளாகும்.

வறுமையைப் போக்கவும் பொருளாதார மேம்பாட்டை அடையவும் உலக வங்கி இந்தியாவுக்கு கடன் வழங்கியுள்ளது. 1980 ல் சீனா உலக வங்கியின் உறுப்பினராகும் வரை இந்தியா உலக வங்கியால் பலனடைந்த நாடுகளில் முதலிடத்திலிருந்த நாடு ஆகும் .

இந்தியாவும் IBRDவும்: நீடித்த நெடுநாள் உறவு

- ❖ உலக வங்கி குழுமத்தில் உள்ள ஐந்து அமைப்புகளில் நான்கு அமைப்புகளில் இந்தியா உறுப்பினராக உள்ளது.
- ❖ மறுகட்டமைப்புக்கும் மேம்பாட்டிற்குமான பன்னாட்டு வங்கி (IBRD, 1945)
- ❖ பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA, 1960)
- ❖ பன்னாட்டு நிதிக் கழகம் (IFC, 1956)
- ❖ பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை (MIGA, 1958)
- ❖ முதலீட்டுத் தகராறுகள் தீர்விற்கான பன்னாட்டு மையம் (ICSID, 1966) (இந்தியா இதில் உறுப்பினராக இல்லை)
- ❖ இந்தியா தொடக்க கால உறுப்பினராக IBRD, IDA, IFC ஆகியவற்றில் உள்ளது.
- ❖ இந்தியாவிற்கான உலக வங்கியின் உதவி, வேளாண் இயந்திர செயல்திட்டம் தொடங்கப்பட்ட 1948 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டது.
- ❖ IFC யின் முதல் இந்திய முதலீடாக US$ 1.5 மில்லியன் 1959 ஆம் ஆண்டு செலுத்தியது.
- ❖ ஜனவரி 1994 ஆம் ஆண்டு MIGA வில் இந்தியா உறுப்பினரானது
- ❖ இந்தியா IBRD/IFC/IDA/MIGA ஆகிய அமைப்புகளில் இயக்குநர் அவையின் செயல் இயக்குநராக இருந்து வருகிறது.

8.4 உலக வணிக அமைப்பு (World Trade Organisation)

1995ஆம் ஆண்டில் GATT ஆனது உலக வணிக அமைப்பு என உருவானது. ஒரு புதிய சர்வதேச நிரந்தர அமைப்பாக அது நிறுவப்பட்டது. பண்டங்கள், பணி சேவைகளில் வணிகம். அயல்நாட்டுமுதலீடு அறிவுசார் சொத்துரிமைகள் ஆகியவற்றில் வர்த்தகம் செய்வதற்கான கண்காணிப்பு அமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. உலக வணிக

12-Economics-Tamil-Chapter_8.indd 189 12-01-2023 17:33:10

அமைப்பின் அடித்தளமான டங்கல் வரைவு அதன் பொதுச்செயலர் ஆர்தர் டங்கல் அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

WTO இரு ஆண்டுகளுக்கொரு முறை நாடுகளின் சார்பாக வணிக அமைச்சர்கள் நிலையிலான மாநாடு அவர்களது சிக்கல்களைத் தீர்ப்பதற்காக கூட்டப்படுகிறது. WTO ன் முதல் மாநாடு சிங்கப்பூரில் 1996ல் கூட்டப்பட்டது. 2017ஆம் ஆண்டில் 11வது மாநாட்டை அர்ஜெண்டினாவில் கூட்டியது. 12 – ஆவது அமைச்சர்கள் நிலையிலான மாநாட்டை 2020 ஆம் ஆண்டில் கஜகஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வணிக மையம்

WTC என்பது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கை தலைமையகமாகக் கொண்டு அமைந்துள்ளது. இரட்டைக் கோபுரங்கள் என்று அழைக்கப்பட்ட அது ஏப்ரல் 4, 1973 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. பின்னர் செப்டம்பர், 11, 2001 அன்று விமானத் தாக்குதலால் அழிக்கப்பட்டது. உலகம் முழுவதும் பன்னாட்டு வணிகத்தில் ஈடுபடும் வணிகங்களை அது ஒன்று சேர்க்கிறது.

8.4.1 உலக வாணிக அமைப்பின் நோக்கங்கள்

பன்னாட்டு வணிகத்தை விரிவுபடுத்துவதும் வாணிக தடைகளை தாராளமயமாக்குவதன் மூலம் பொருளாதாரச் செழுமையை கொணர்வதும் அடிப்படை நோக்கமாகும்.

i) சுங்கவரியையும் பிற தடைகளையையும் குறைப்பதை உறுதிசெய்தல்

ii) வாணிகத்தில் பேதத்தை நீக்குதல்

iii) உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குதல்

iv) உலக வளங்களை உத்தம அளவில் பயன்படுத்த வசதி செய்வது

v) பன்னாட்டு **வாணிக** வளர்ச்சியில் குறைவளர்ச்சி நாடுகள் நியாயமான பங்கைப் பெறச் செய்தல்

vi) வாணிகக் கொள்கைகள், சுற்றுச்சூழல் கொள்கைகள் மற்றும் நீடித்த நெடுநாள் வளர்ச்சி ஆகியவற்றிற்கிடையே இணைப்பை உறுதி செய்தல்

உலக வாணிக அமைப்பின் ஒப்பந்தங்கள்

உலக வாணிக நிறுவன ஒப்பந்தத்தின் கூறுகள் அனைத்தும் தனி ஒப்பந்தங்களாகவே கருதப்படுகின்றன.

வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம் (Trade Related Aspects Intellectual Property Rights (TRIPS)

பதிப்புரிமை, வணிக முத்திரை, காப்புரிமை, புவிசார் குறியீடு, தொழில் ரகசியம்,

www.tntextbooks.in

உற்பத்தி வடிவமைப்பு முதலானவை அறிவுசார் சொத்துரிமைகளாகும். இந்த ஒப்பந்தத்தின்படி பண்டங்கள் மற்றும் பண்டங்களை உற்பத்தி செய்யும் முறை ஆகிய இரண்டுக்கும் காப்புரிமை வழங்கப்படும். இதற்குமுன் உற்பத்தி முறைக்கு மட்டுமே காப்புரிமை வழங்கும் நடைமுறை இருந்தது. இந்த ஒப்பந்த விதிகளின்படி வளரும் நாடுகள் விதைகள், மாத்திரை, மருந்து, உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் முதலானவற்றை வாங்குவதற்கு வளர்ந்த நாடுகளை சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. காப்புரிமைகளுக்கு 20 ஆண்டுகளும், பதிப்புரிமைகளுக்கு 50 ஆண்டுகளும், வணிக முத்திரைக்கு ஏழு ஆண்டுகளும் மற்றும் உற்பத்தி வடிவமைப்பிற்கு 10 ஆண்டுகளும் பாதுகாப்பு கால அளவாகும்.

உங்களுக்குத் தெரியுமா?

1995ஆம் ஆண்டு உலக வணிக அமைப்பு ஏற்படுத்திய வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை (TRIPS) ஒப்பந்தம் பன்னாட்டு அறிவுசார் சொத்துரிமைச் சட்டத்திலும் கொள்கை முடிவெடுப்பதிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளும் முரண்பாடுகளும் வர்த்தகத்தை பாதிப்பதோடு அதன் பயனைத் தடுப்பதாக உள்ளது என்பதை TRIPS செயல்பாட்டாளர்கள் தொடர்பான வர்த்தகத்துக்கு துணை புரிவதாக இருந்தாலும் அமைப்பு நாடுகள் வேறுபட்ட உள்நாட்டுக் கொள்கைகளைத் கடைப்பிடிக்க வழிவகைகள் உள்ளன.

வாணிகம் தொடர்புள்ள முதலீட்டு வழிமுறைகள் ஒப்பந்தம் (Agreement on Trade Related Investment Measures (TRIMs)

அது வெளிநாட்டு மூலதனம் மீதான நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்புடைய ஒப்பந்தம் ஆகும். உறுப்பினர் நாடுகளின் உள்நாட்டு வாணிகத்துக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் சமமாக வெளிநாட்டு நிறுவனங்களையும் நடத்த வேண்டும் என இந்த ஒப்பந்தம் கூறுகிறது. வளரும் நாடுகள் இந்த ஒப்பந்தத்தை பரவலாகக் கடைப்பிடிக்கின்றன. கீழ்க்காணும் விதங்களில் வெளிநாட்டு மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்க இந்த ஒப்பந்தம் கோருகிறது .

- எந்தெந்த துறைகளில் முதலீடு செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை நீக்க வேண்டும்
- உள்நாட்டு இடுபொருளைப் பயன்படுத்த நிர்பந்திக்கக் கூடாது.
- கட்டாய ஏற்றுமதி நிபந்தனையை விதிக்கக்கூடாது.
- உரிமைத் தொகை, இலாபப்பங்கு மற்றும் வட்டி ஆகியவற்றை பன்னாட்டு முதலீட்டாளர்கள் வேறுநாட்டுக்கு எடுத்து செல்வதைத் தடைசெய்யக்கூடாது.
- இறக்குமதிக்குச் சமமாக ஏற்றுமதி செய்ய வேண்டுமெனவும் நிர்பந்திக்கக் கூடாது.

பன்னாட்டுப் பணிகள் வாணிகம் தொடர்பான பொது ஒப்பந்தம் (General Agreement on Trade in Services (GATS)

வங்கி, காப்பீடு, போக்குவரத்து, தொலைத் தொடர்பு, ஆகிய பணிகளில் பன்னாட்டு வாணிகம் நடைபெறுவதற்குத் தேவையான சாதகமான விதிகளை முதன்முதலில் தொகுத்துக் கொடுத்த முதலாவது பலதரப்பு பன்னாட்டு ஒப்பந்தமாகும். காட் ஒப்பந்தத்தில்

உறுப்பினர் நாடுகள் தாங்கள் விரும்பும் நாடுகளுக்கு மிகவும் சாதகமான நாடு (Most Favoured Nation, (MFN) எனும் சலுகையை வழங்க அனுமதித்தது. பணிகள் வாணிக ஒப்பந்தத்தில் ஒரு நாட்டுக்குச் சாதகமான நாடு என சலுகை வழங்கினர். அந்தச் சலுகைகளை அனைத்து நாடுகளுக்கும் வழங்க வேண்டும் என்று ஒப்பந்த விதி திருத்தியமைக்கப்பட்டது. இந்த நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய பணிகள் தொடர்புடைய சட்டவிதிகளை உறுப்பினர் நாடுகளில் விரும்பியவர்கள் படிக்கும் வகையில் பதிப்பிட வேண்டும் என கூறுகிறது.

நார் பொருட்களுக்கான பன்முக பழைய ஒப்பந்தத்தை படிப்படியாக நீக்குதலுக்கான ஒப்பந்தம் (Phasing out of Multi Fibre Agreement (MFA)

துணி, ஆயத்த ஆடை ஒப்பந்த விதிகளின்படி பன்னாட்டு வாணிகம் 1974ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தம் வளரும் நாடுகளிலிருந்து வளர்ந்த நாடுகளுக்கு துணி, ஆடை ஆகியவற்றின் ஏற்றுமதியை பங்களவு நிர்ணயம் செய்து கட்டுப்படுத்தியது. உலக வாணிக ஒப்பந்தம் கையெழுத்தான 1995ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளில் இந்த நார்ப்பண்டங்கள் ஒப்பந்தம் படிப்படியாக நீக்கப்பட்டது. இது இந்தியாவைப் பொருத்தமட்டில் சாதகமான ஒன்றாகும்.

வேளாண்மை ஒப்பந்தம் (Agreement on Agriculture (AOA)

பணிகள் முதலானு வேளாண்மையும் உலக வாணிக நிறுவன ஒப்பந்தத்தில் முதல்முறையாகச் சேர்க்கப்பட்டது. வேளாண் விளை பொருட்களை ஏற்றுமதி இறக்குமதி தீர்வைக்கு உட்படுத்துதல், தீர்வை குறைத்தல், வேளாண் மானியத்தை குறைத்தல் ஆகியவையே வேளாண் ஒப்பந்தத்தின் பிரதான கூறுகளாகும்.

தகராறுகளைத் தீர்ப்பதற்கான அமைப்பு (Dispute Settlement Body)

செயல்முறை காலதாமதத்திற்கு தகராறுகளுக்கான தீர்வு அமைப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. எந்த ஒரு தகராறும் 18 மாதங்களுக்குள் பன்முக வணிக முறை மூலம் தீர்க்கப்படுகிறது. இந்த அமைப்பின் நிபந்தனைகளினால் இந்தியா பெருமளவு ஏற்றுமதி வாய்ப்பை இழந்தது.

8.4.2. உலக வாணிக அமைப்பின் பணிகள்

WTO – வின் முக்கிய பணிகள்

- WTO உடன்படிக்கைகளை நிருவகித்தல்
- வணிக பேச்சுவார்த்தைகளுக்கான மன்றம்
- வாணிகத் தகராறுகளை கையாளுதல்
- தேசிய வாணிக கொள்கைகளை கண்காணித்தல்
- வளர்ந்து வரும் நாடுகளுக்கான தொழில் நுட்ப உதவியும் பயிற்சியும்

WTO – **வின் பணிகள் பின்வருவனவாகும்.**

i) பன்முக வாணிக உடன்படிக்கைகள் மற்றும் உடன்படிக்கையின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் செயல்படுத்துவதற்கு உதவி செய்தல்.

ii) உடன்படிக்கைகள் தொடர்பான விஷயங்களில் உறுப்புநாடுகளின் பன்முக வணிக உறவுகள் தொடர்பான பேச்சுவார்த்தைக்கான மன்றமாகச் செயல்படுகிறது.

www.tntextbooks.in

iii) தகராறுகளைத் தீர்க்கும் விதிகளும், நடைமுறைகளும் மீதான புரிந்துணர்வை நிருவகிக்கிறது.

iv) பன்னாட்டுப் பண நிதியம், உலகவங்கி அதனுடன் இணைந்த முகமைகள் உலகளாவிய பொருளாதார கொள்கை உருவாக்கலில் கூடுதலான இணக்கத்தை அடைவதற்கு ஒத்துழைக்கிறது.

8.4.3. உலக வாணிக அமைப்பின் சாதனைகள் (Achievements of WTO)

WORLD TRADE ORGANIZATION

1. கசகிஸ்தான் – 2020
2. பியூநோஸ் ஏரிஸ் – 10 – 13 டிசம்பர் 2017
3. நைரோபி – 15 – 18 டிசம்பர் 2015
4. பாலி – 3 – 6 டிசம்பர் 2013
5. ஜெனிவா – 15 – 17 டிசம்பர் 2011
6. ஜெனிவா – 30 நவம்பர் – 2 டிசம்பர் 2009
7. ஹாங்காங் – 13 – 18 டிசம்பர் 2005
8. கான்கன் – 10 – 14 செப்டம்பர் 2003
9. டோகா – 9–13 நவம்பர் 2001
10. சீட்டில் – 30 நவம்பர் – 3 டிசம்பர் 1999
11. ஜெனிவா – 18 – 20 மே 1998
12. சிங்கப்பூர் – 9 – 13 டிசம்பர் 1996

உலக வாணிக அமைப்பின் சாதனைகளை கீழே காணலாம்.

1) அயல்நாட்டு செலுத்துச்சமநிலை சமமின்மையின் தீய விளைவுகளை நீக்குவதற்கு பன்னாட்டு வாணிகத்தடைகளைப் பயன்படுத்துவதைக் குறைத்துள்ளது.

2) பணிகள் பன்னாட்டு வாணிக பறிமாற்றத்துக்குள் கொண்டுவரப்பட்டு பணிகள் வழங்கு துறையில் வெளிநாட்டு மூலதனம் செய்வதற்கும் அனுமதி பெற்றதும் ஒரு சாதனையாகும்.

3) வாணிகக் கொள்கை மீளாய்வு நடைமுறை அக்கொள்கையில் நிகழும் மாற்றங்களை விடாமல் கண்காணிக்கும் வசதியை கட்டமைத்ததும் ஒரு சாதனையாகக் கருதலாம்.

8.4.4. இந்தியாவும் பன்னாட்டு வாணிக அமைப்பும்

பன்னாட்டு வாணிக அமைப்பு செயல்படத் தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா அதன் உறுப்பு நாடாகும். பலதரப்பு விவாதங்கள் மூலமாக தீர்வுகள் காண்பதற்கு இந்தியாவின் ஆதரவு எப்பொழுதுமே உண்டு. பன்னாட்டு வாணிக நிறுவனத்தின் உறுப்பினரானதால் இந்தியாவுக்கு கீழ்க்காணும் விதங்களில் நன்மைகளைப் பெற்றுள்ளது.

1. இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடு பண்டங்கள், உதிரி பாகங்கள், இயந்திரங்கள் ஆகியன இந்தியாவுக்குக் குறைவான விலையில் அதிகமாக கிடைத்துள்ளன.
2. நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பலநாடுகளில் இந்தியா பண்டங்களை விற்பனை செய்ய முடிகிறது.
3. குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.

12-Economics-Tamil-Chapter_8.indd 193 12-01-2023 17:33:10

4. பன்னாட்டுப் பறிமாற்றம் தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.

5. பரந்த அங்காடி தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்.

8.5 பன்னாட்டு வாணிகத் தொகுதிகள் (Trade Blocks)

75N03

சில நாடுகள் வாணிகத்தில் போட்டியைத் தவிர்க்க பிற நாட்டுப் பொருளாதாரத்துடன் தங்களுடையப் பொருளாதாரத்தை இணைத்து புதிய வாணிக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன. நாடுகளுக்கிடையே சமூக நன்மை தரும் வாணிகத் தொகுதிகள் பல விதங்களில் அமைகின்றன. சமூக நன்மைக்காக நாடுகள் அமைக்கும் வாணிகத் தொகுதிகள் பரஸ்பர நல்லிணக்கத்திற்கு உதவுகின்றன. தடையற்ற வாணிகப் பகுதி, சுங்கத்தீர்வை ஒன்றியம், பொது அங்காடி, பொருளாதார ஒன்றியம் ஆகிய வடிவங்களில் பொருளாதார ஒருங்கிணைப்பு நிகழ்கிறது.

❖ **தடையற்ற வாணிகப் பகுதி** (Free Trade Area)

ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது. உதாரணம்: SAFTA, EFTA.

❖ **சுங்கவரி ஒன்றியம்** (Customs Union)

உறுப்பினர்களுக்கிடையிலான வாணிகத்தில் வரிவிதிக்காமலும் உறுப்பினரல்லாதவர்களுடனான வாணிகத்தில் பொது வரிவிதித்தும் ஒத்துழைக்கும் அமைப்பே சுங்கவரி ஒன்றியம் எனப்படுகிறது. எ.கா: BENELUX (பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஸம்பர்க்)

❖ **பொதுஅங்காடி** (Common Market)

புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகத்துக்காகவும் உற்பத்திக் காரணிகள் இடப்பெயர்வுக்காகவும் அமைக்கும் அமைப்பே பொது அங்காடி. எ.கா: ஐரோப்பிய பொது அங்காடி (European Common Market – ECM)

❖ **பொருளாதார ஒன்றியம்** (Economic Union)

பொது அங்காடியையும் சுங்கவரி ஒன்றியத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்படும் அமைப்பே பொருளாதார ஒன்றியம். பண்டங்கள் உற்பத்தி, பணிகள் உற்பத்தி, பண்டங்கள், பணிகள், காரணிகள் இடம்பெயர்வு பொதுவான உறுப்பினரல்லாத நாடுகள் வாணிகத்தின் மீது வரி ஆகிய அனைத்தும் பொருளாதார ஒன்றியத்தில் உண்டு. எ.கா: ஐரோப்பிய பொருளாதார ஒன்றியம் (European Economic Union)

EU > CM > CU > FTA

நிறுவனம்	தலைமையகம்	தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
SAARC	காத் மண்டு	1985
ASEAN	ஜஹார்த்தா	1967
BRICS	ஷாங்காய்	2001

12-Economics-Tamil-Chapter_8.indd 194 12-01-2023 17:33:10

8.6 தெற்காசிய மண்டல ஒத்துழைப்புச்சங்கம்(SAARC)

தெற்காசிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்காகத் துவக்கப்பட்ட அமைப்பு தெற்காசிய மண்டல ஒத்துழைப்பு அமைப்பு ஆகும். இந்த நாடுகளின் பொருளாதார சமூக, பண்பாட்டு ஒத்துழைப்பு, வளர்ச்சிக்காகவும், மற்ற வளரும் நாடுகளுடன் நட்புறவுவை வளர்த்துக் கொள்ளவும் டிசம்பர் 8, 1985 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

வங்காளதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் இதன் உறுப்பு நாடுகளாகும். ஏப்ரல் 2007ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தான் எட்டாவது நாடாக இதில் இணைந்தது. ஒப்பந்தத்தில் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக் கொண்ட பிரிவுகளில் ஒத்துழைப்பு கொடுத்து ஒன்று சேர்ந்து செயல்பட்டு பொருளாதார, சமூக மேம்பாடு அடைவதே சார்க் அமைப்பின் அடிப்படைக் குறிக்கோள். நேபாள் தலைநகரம் காட்மண்டு இதன் தலைமைச் செயலகமாகக் கொண்டு ஜனவரி 16, 1987இல் செயல்படத் துவங்கியது. முதல் உச்சி மாநாடு வங்காளதேசம் தலைநகரம் தாக்காவில் 1985இல் நடைபெற்றது. இரண்டாண்டுக் கொருமுறை உச்சி மாநாடு நடைபெறுகிறது. 20ஆவது உச்சிமாநாடு இலங்கையில் 2018ஆம் ஆண்டில் நடைபெற்றது.

சார்க் நாடுகள்

இந்தியா

பூடான்

பாகிஸ்தான்

நேபாளம்

வங்காளதேசம்

மாலத்தீவுகள்

இலங்கை

ஆப்கானிஸ்தான்

ஆரம்பத்தில் வங்காளதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகள் இணைந்து ஆரம்பித்தன. ஏப்ரல் 3, 2007ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆப்கானிஸ்தான் இணைந்தது.

8.6.1. சார்க் அமைப்பின் நோக்கங்கள்

சார்க் ஒப்பந்தத்தின் முதலாவது பிரிவின்படி அதன் நோக்கங்களாவன :

i) தெற்காசிய மக்களின் பொதுநலம் காத்தல், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்

ii) தெற்காசிய மண்டலத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியை விரைவுப்படுத்துதல்

iii) தெற்காசிய நாடுகளின் கூட்டுத் தற்சார்பை உறுதிப்படுத்துதல்

12-Economics-Tamil-Chapter_8.indd 195 12-01-2023 17:33:11

iv) மண்டலத்தில் உள்ள நாடுகள் ஒருவருக்கொருவர் மீது நம்பிக்கை ஏற்பட, புரிந்து கொள்ள சிக்கல்களை உணர்ந்து கொள்ள இயன்றதை செய்தல்

v) பொருளாதார, சமூக, பண்பாடு, தொழில் நுட்பம் அறிவியல் ஆகிய துறைகளில் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுதல் மற்றும் செயல் திறனுடன் ஒத்துழைத்தல்

vi) உறுப்பினரல்லாத வளரும் நாடுகள் ஆகியவற்றுடன் ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்

vii) ஒரே நோக்கங்களுடன் செயல்படும் மண்டல நாடுகள், உலக நாடுகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்.

8.6.2. சார்க் அமைப்பின் பணிகள் (Functions of SAARC)

சார்க்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்
2. உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்கு தீர்வுகாணுதல்
3. உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்
4. வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது
5. பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது.

8.6.3. சார்க்கின் சாதனைகள் (Achievements of SAARC)

1. சார்க் முன்னுரிமைப் பன்னாட்டு வாணிக ஒப்பந்தம் (SAPTA) நிறுவப்பட்டு இறக்குமதி மீதான தடைகள் குறைக்கப்பட்டது முதல் சாதனையாகும்
2. வேளாண்மை, தொலைத்தொடர்பு, கல்வி, சுகாதாரம், ஊரக மேம்பாடு, அறிவியல் தொழில் நுட்பம், சுற்றுலா முதலான துறைகளில் உறுப்பினர் நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பைப் பெற தனிநுட்பக் குழுக்கள் அமைக்கப்பட்டன.
3. வறுமை குறைக்கும் திட்டங்கள் பற்றிய செய்திகளைச் சேகரித்து உறுப்பினர் நாடுகளிடம் பகிர்ந்து கொள்ள மூன்றடுக்குக் கட்டமைப்பு நிறுவப்பட்டது.
4. வேளாண்மை, மீன்வளம், வனவளம் முதலான முதன்மைத் துறைகளின் செய்தி அலுவலகமாக சார்க் வேளாண் செய்தி மையம் (SAIC) 1988ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது.
5. பொருளாதார மேம்பாடு, மனித வள மேம்பாடு மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க தெற்காசிய மேம்பாட்டு நிதியம் (South Asian Development Fund) என்ற அமைப்பைத் துவக்கியது ஒரு சாதனையாக கருதலாம். வாணிகத்தில் எந்த முன்னேற்றமும் இல்லை. மேலும் சார்க் உறுப்பு நாடுகளின் மொத்தப் பன்னாட்டு வாணிகத்தில் உறுப்பு நாடுகளுக்கிடையிலான வாணிகம் மூன்று விழுக்காடு மட்டுமே.

8.7 தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு

ஆசியான் ஜகார்த்தாவில் ஆகஸ்ட் 8, 1967இல் இந்தோனேஷியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய ஐந்து நாடுகளால் தொடங்கப்பட்டது. புரூனை, வியட்நாம், லாவோஸ், மியான்மார் கம்போடியா ஆகிய ஐந்து நாடுகள் பிறகு உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்டன. இவற்றுடன் சீனா, ஜப்பான், இந்தியா, தென்கொரியா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா

12-Economics-Tamil-Chapter_8.indd 196 12-01-2023 17:33:11

ஆகிய ஆறு நாடுகள் விவாதத்தில் கலந்து கொள்ளும் நாடுகளாக சேர்ந்து கொண்டன. வாணிகத் தடையற்ற பகுதி அமைந்த நாடுகளுக்குக் கிடைக்கும் நன்மைகள் அனைத்தும் ஆசியான் நாடுகளுக்கும் கிடைக்கும். ஏனென்றால் உறுப்புநாடுகள் இறக்குமதி வரி, பங்களவு ஆகிய தடைகளை ஒப்பந்தப்படி குறைக்க வேண்டும். இந்த உறுப்பு நாடுகளின் பொதுவான வரலாறும், பண்பாட்டுப் பின்புலமும், பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு கூட்டமைப்பை ஒற்றுமையுடன் நடத்துவதை உறுதி செய்கிறது. உலகமயமாக்கலையும், எச்சரிக்கையுடனான பேரினப் பொருளாதார கொள்கைகளையும் கடைபிடிக்கும் ஆசியான் நாடுகளுக்கு பன்னாட்டு வாணிகம் உயிர்மூச்சு போன்றதாகும். உறுப்பு நாட்டு அரசாங்கத்தின் தலைவர்களின் உச்சி மாநாடு ஆசியான் அமைப்பின் அதிகாரமிக்க அவையாகும். இது மூன்று ஆண்டுகளுக்கொருமுறை கூடி முடிவுகளை எடுக்கும். ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் முடிவுகளை எடுப்பதில் அடுத்தக்கட்ட அதிகாரமுள்ள துணை அமைப்பாகும்.

இந்தியா ஆசியானுடன் 1992ஆம் ஆண்டிலிருந்து கூட்டாளியாகச் செயல்பட தொடங்கியது. இந்த ஆண்டு இந்தியா துறைவாரியான விவாதங்களில் பங்கேற்கும் நாடாகச் செயல்படத் தொடங்கியது. ஆசியான் நாடுகள் இந்தியாவுக்கு அருகாமையில் அமைந்துள்ளதால் போக்குவரத்துச் செலவு குறைவாக உள்ளது. எனவே ஏற்றுமதி எளிதாக நடைபெறுகிறது.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ASEAN)
Association of South East Asian Nations

புருனை

கம்போடியா

இந்தோனேசியா

லாவோஸ்

மலேசியா

மியான்மர்

பிலிப்பைன்ஸ்

சிங்கப்பூர்

தாய்லாந்து

வியட்நாம்

8.7.1 ஆசியான் அமைப்பின் நோக்கங்கள்

ஆசியான் ஒப்பந்தக் கூட்டறிக்கையின்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவையே அதன் நோக்கங்களாகும்

(i) பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி, பண்பாட்டு மாற்றம் ஆகியவற்றை விரைவுப்படுத்துவது.

(ii) ஐநாசபையின் கொள்கைகளைக் கடைப்பிடித்து தென்கிழக்காசிய பகுதியில் அமைதியையும் உறுதியான அரசியல் சூழ்நிலையையும் மேம்படுத்துவது.

(iii) அரசுத் துறைத் தணிக்கையில் உள்ள அறிவையும் அனுபவத்தையும் பரிமாறிக்கொள்வதன் மூலம் உறுப்பினர்களை ஒன்றிணைந்து செயல்பட வைப்பது.

12-Economics-Tamil-Chapter_8.indd 197 12-01-2023 17:33:11

(iv) கல்வி, பயிற்சி , ஆராய்ச்சி ஆகியவற்றுக்குப் பொருத்தமான சூழ்நிலையையும் வசதிகளையும் உறுப்பு நாடுகளில் அமைத்துக் கொடுப்பது.

(v) செய்தி மையமாகச் செயல்படுதல் என்பதோடு மற்ற பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வசதிகளைச் செய்தல்.

8.7.2 ஆசியானின் பணிகள்

i) ஐரோப்பிய ஒன்றியம் போன்று ஒரே அங்காடியாகச் செயல்பட ஆசியான் உறுப்பினர் நாடுகளுக்கிடையில் தடையற்ற பண்டங்கள், பணிகள், மூலதன போக்குவரத்துக்கான வழிமுறைகளை உருவாக்கும் பணியை ஆசியான் அமைப்பு செய்கிறது.

ii) ஒரு உறுப்பு நாட்டு விற்பனையாளர் மற்ற எல்லா உறுப்பு நாடுகளிலும் விற்கத் தடையற்ற அனுமதி அளிக்கும் பணியையும் செய்கிறது.

iii) உறுப்பு நாடுகளின் வணிக நிறுவனங்களின் போட்டித்திறனை மேம்படுத்துவது, பொருளாதார மேம்பாட்டு இடைவெளியைக் குறைப்பது.

iv) உறுப்பு நாடுகளுக்கு அங்காடி வாய்ப்புகள், முதலீட்டு வாய்ப்புகள் ஆகியவற்றை பெற்றுத் தருவது.

v) தொழில் மற்றும் வணிகம் உள்ளிட்ட பல துறைகளில் ஒத்துழைப்பை வளர்த்தல்.

8.8 பிரிக்ஸ் நாடுகள் (BRICS)

வேகமாக வளர்ந்துவரும் நாடுகளின் முதல் எழுத்துக்களைக் கொண்டு குறிப்பிடப்படும் சுருக்கப்பெயர் பிரிக்ஸ் (BRICS) பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகியவையே அந்த ஐந்து விரைவாக வளர்ந்து வரும் நாடுகள், இது 2010 ஆம் ஆண்டு வரை தென் ஆப்பிரிக்காவை உள்ளடக்காமல் பிரிக் என அழைக்கப்பட்டது. பிரிக் என்ற சுருக்கப் பெயர் 2001ல் பயன்பாட்டுக்கு வந்தது. பிரிக்ஸ் உறுப்பினர்கள் அவை அமைந்துள்ள புவிப்பகுதிகளில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகும். இந்த நாடுகள் 2009 லிருந்து உச்சி மாநாடுகளை நடத்தி வருகின்றன. பத்தாவது உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவில் ஜீலை 2018ஆம் ஆண்டில் நடைபெற்றது. உள்ளடக்கிய வளர்ச்சி, வாணிகச் சிக்கல்கள், உலகளாவிய அரசு நிருவாகம், பகிரத்தக்க வளமை, நாடுகளின் அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவையே இந்த உச்சிமாநாட்டின் விவாதத் தலைப்புகள் ஆகும்.

பிரிக்ஸ் பற்றிய சில தகவல்கள்

- BRICS நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் 21 விழுக்காட்டை பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் உலக GDPல் தனது பங்கினை மூன்று மடங்கு அதிகரித்துள்ளன.
- உலக மக்கள் தொகையில் BRICS 43 விழுக்காட்டை இருப்பிடமாக கொண்டுள்ளது.
- BRICS நாடுகள் இணைந்து சுமார் $ 4.4. டிரில்லியன் அயல்நாட்டுச் செலாவணி இருப்பைப் பெற்றுள்ளது

சீனாவின் ஷாங்காய் நகரில் பிரிக்சின் தலைமை அலுவலகம் செயல்படுகிறது. இதன் உறுப்பினர் நாட்டு அரசாங்கங்கள் ஒன்று

12-Economics-Tamil-Chapter_8.indd 198 12-01-2023 17:33:11

சேர்ந்து பிரிக்ஸ் மேம்பாட்டு வங்கி எனும் வங்கியை தொடங்கியுள்ளார்கள். இதற்கு புதிய மேம்பாட்டு வங்கி (The New Development Bank) என்ற பெயரும் உண்டு. முதல் மாநாடு ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது. இந்தியாவில் நான்காவது மாநாடு 2012 லும் எட்டாவது மாநாடு 2016 லும் நடைபெற்றது.

8.8.1. பிரிக்ஸ் நோக்கங்கள்

1. வணிக ஒத்துழைப்பு தொகுதியை அமைத்து ஒத்துழைப்பை மேம்படுத்துதல்.
2. பன்னாட்டு பறிமாற்றகளில் அமெரிக்க நாட்டுப் பணமான டாலருக்கு பதிலாக வேறு நாட்டு பணத்தை புழக்கத்துக்குக் கொண்டுவர தேவையானவற்றை செய்தல்.
3. மண்டல ஒத்துழைப்பை மேம்படுத்துவது.
4. வளரும் நாடுகளுக்கென தனியான பன்னாட்டு வாணிக ஒத்துழைப்பு அமைப்பை உருவாக்கி அவற்றை ஒன்றிணைந்து செயல்பட வைப்பது.

8.8.2. பிரிக்சின் பணிகள் (Functions of BRICS)

1. பன்னாட்டு பறிமாற்ற நடைமுறைகளை சட்டவரம்புக்குட்படுத்துவது மற்றும் ஐநா பாதுகாப்பு சபை செயல்படுவதில் சீர்திருத்தங்களையும் கோருகிறது.
2. தெற்கு – தெற்கு (South – South) ஒத்துழைப்பை மேம்படுத்தும் கட்டமைப்பாக செயல்படுதல்
3. வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கிடையிலான இடைவெளியை குறைக்கும் பணிகளையும் செய்கிறது. உதாரணமாக உலக வர்த்தக நிறுவனத்தில் பிரிக்ஸ் வளரும் நாடுகளுக்கு சாதகமான வேளாண் கொள்கையை வடிவமைக்க வலியுறுத்துவது.
4. வளரும் நாடுகளுக்கு சாதகமாக வாணிக மற்றும் பருவநிலை மாறுதல் பேச்சுவார்த்தையில் உதவிகளை செய்தல்
5. பொருளாதார ஒத்துழைப்பு மட்டுமன்றி தகவல் பகிர்ந்து கொள்ளுதலுக்கான ஒரு தளமாகவும் பிரிக்ஸ் பணியாற்றுகிறது.
6. நடுத்தர நாடுகளின் நலன்களை பாதுகாக்கும் தூண்டுகோலாக பன்னாட்டுத் தளத்தில் பிரிக்ஸ் செயல்படுகிறது.

8.8.3 பிரிக்சின் சாதனைகள் (Achievements of BRICS)

பிரிக்சின் சாதனைகளில் சில கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- அவசரகால கையிருப்பு வசதியை உருவாக்கியதால் உறுப்பினர் நாடுகளின் பொருளாதார மற்றும் நிதித் துறைகளில் ஒன்றிணைந்து செயல்படுதலை பலப்படுத்தியது ஒரு சாதனையாகும்.
- ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் உலக வங்கி முதலானு செயல்படும் புதிய வளர்ச்சி வங்கியை சீனாவின் சாங்காயில் தலைமை அலுவலகத்துடன் செயல்படும் விதமாக பிரிக்சின் ஆறாவது மாநாட்டின் முடிவு செய்தபடி அமைத்தது ஒரு சாதனை.
- பொருளாதார பலமும் மக்கள் தொகை வளமும் பிரிக்ஸ் நாடுகள் உலக அளவில் பன்னாட்டு உறவு நிர்வாகத்தில் கூடுதல் ஆதிக்கம் பெறும் நிலைமை பெற்றுள்ளது.

உலக மக்கள் தொகையில் பிரிக்ஸ் பங்கு 43 சதவீதமாகும். ஆனால் அது உலக மொத்த உற்பத்தியில் 21 சதவீதமேயாகும்.

தொகுப்புரை

பன்னாட்டுப் பொருளாதார நிறுவனங்களான பன்னாட்டுப் பணநிதியம், உலக வங்கி, முதலில் காட் பிறகு உலக வணிக அமைப்பு ஆகியவற்றின், நோக்கங்கள், பணிகள், சாதனைகள் பற்றியது இந்த இயல் ஆகும்.

இந்தியா இந்த நிறுவனங்களால் அடைந்த நன்மைகள் ஆகியவற்றைக் கற்றுக்கொண்டோம். மேலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தங்களான TRIPS, TRIMS, GATS, AoA, MFA முதலானவற்றை புரிந்து கொண்டோம்.

இப்பகுதியின் இறுதியில் பன்னாட்டு வாணிகத் தொகுதிகளான சார்க், ஆசியான், மற்றும் பிரிக்ஸ் ஆகிய அமைப்புகளின் நோக்கங்கள், பணிகளையும், சாதனைகளையும் உள்ளடக்கியுள்ளது.

கலைச்சொற்கள்

- **பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றியமைப்புக் கடன் திட்டம்** (Structural Adjustment Facility): ஏழைநாடுகளுக்கு சலுகைகளுடன் கூடுதல் அயல்நாட்டுச் செலாவணி கடன் உதவியை பேரினப் பொருளாதார, பொருளாதார அமைப்புமுறைகளை மாற்றியமைக்கும் திட்டங்களுக்கு வழங்கும் திட்டமே பொருளாதாரக் கட்ட அமைப்புமுறை மாற்றியமைப்புக் கடன் திட்டம் ஆகும்.

- **சிறப்பு எடுப்புரிமைகள்** (Special Drawing Rights): பன்னாட்டு பண நிதியத்துடன் கையிருப்பாக உள்ள உறுப்பினர் நாடுகளின் பணமே சிறப்பு எடுப்புரிமையாகும். உறுப்பினர் நாடுகளின் மூலதனப் பங்களவுக்கும் கூடுதலாக நிதியத்தின் இருப்புக் கணக்கில் பராமரிக்கும் தொகையாகும்.

- **வாணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை** (Trade Related Intellectual Property Rights): பதிப்புரிமை, வணிக முத்திரை, காப்புரிமை, புவிசார் குறியீடு, தொழில் ரகசியம், உற்பத்தி வடிவமைப்பு ஆகியன அறிவுசார் சொத்துரிமைக்கு தனிசொத்து போல் வழங்கப்படும் விற்கும் வாங்கும் உரிமையே அறிவுசார் சொத்துரிமை

- **வாணிகம் தொடர்புடைய முதலீட்டு வழிமுறைகள்** (Trade Related Investment Measures): வெளிநாட்டு முதலீட்டாளரும் உள்நாட்டு முதலீட்டாளரும் சமமாக கருதப்படவேண்டும் என வலியுறுத்தும் ஒப்பந்தம். ஒரு நாட்டின் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளும் சலுகைகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுகிறது.

- **பலதரப்பு வாணிக ஒப்பந்தம்** (Multilateral Trade Agreement): பன்னாட்டு வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் (Trade Blocks) பன்னாட்டு வாணிகத்தில் ஒரே குழுவாக ஒன்றிணைந்து செயல்படும் நாடுகளின் கூட்டமைப்பு வழக்கமாக தடையற்ற வாணிக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு செயல்படுபவர்கள்.

- **பன்னாட்டு வாணிகத் தொகுதிகள்** (Trade Blocks): நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்தி வணிகத் தடைகளை நீக்க உருவான அமைப்பாகும்.

12-Economics-Tamil-Chapter_8.indd 200 12-01-2023 17:33:11

- **தடையற்ற வாணிகப் பகுதி** (Free Trade Area): ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகளின் மண்டலம். வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும். ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.

- **சுங்கவரி ஒன்றியம்** (Customs Union): உறுப்பினர்களுக்கிடையிலான வாணிகத்தில் வரிவிதிக்காமலும் உறுப்பினரல்லாதவர்களுடனான வாணிகத்தில் பொது சுங்கவரி விதிக்கும் அமைப்பே சுங்கவரி ஒன்றியம் எனப்படுகிறது.

- **பொதுஅங்காடி** (Common Market): புவியின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் அமைந்துள்ள நாடுகள் தடையற்ற வாணிகம், உற்பத்திக் காரணிகள் ஆகியவற்றின் இடப்பெயர்வுக்காக அமைக்கும் அமைப்பே பொது அங்காடி ஆகும்.

- **பொருளாதார ஒன்றியம்** (Economic Union): பொது அங்காடியையும் சுங்கவரி ஒன்றியத்தையும் ஒன்றிணைத்து உருவாக்கப்படும் அமைப்பே பொருளாதார ஒன்றியம். பண்டங்கள் உற்பத்தி, பணிகள் உற்பத்தி, பண்டங்கள், பணிகள், காரணிகள் இடப்பெயர்வு பொதுவான உறுப்பினரல்லாத நாடுகள் வாணிகத்தின் மீது வரி ஆகிய அனைத்தும் பொருளாதார ஒன்றியத்தில் அடங்கும்

www.tntextbooks.in

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையைத் தெரிவு செய்க:

1. பன்னாட்டுப் பண நிதியம் கீழ்க்காணும் இந்த மாநாட்டில் உருவாக்கப்பட்டது

அ) பான்டுங் மாநாடு
ஆ) சிங்கப்பூர் மாநாடு
இ) பிரட்டன் வுட்ஸ் மாநாடு
ஈ) தோஹா மாநாடு

2. பன்னாட்டுப் பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ) வாஷிடங்டன் டி.சி
ஆ) நியூ யார்க்
இ) வியன்னா
ஈ) ஜெனிவா

3. ஐபிஆர்டி இவ்வாறாகவும் அழைக்கப்படுகிறது.

அ) பன்னாட்டு பணநிதியம்
ஆ) உலக வங்கி
இ) ஆசியான்
ஈ) பன்னாட்டு நிதிக் கழகம்

4. சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர்

அ) தாள் தங்கம்
ஆ) பங்களவுகள்
இ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள்
ஈ) இவை ஏதுமில்லை

5. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்

அ) உலக வங்கி
ஆ) பன்னாட்டுப் பண நிதியம்
இ) உலக வாணிக அமைப்பு
ஈ) பிரிக்ஸ்

6. கீழ்க்காணும் நாடுகள் எது சார்க் அமைப்பின் உறுப்பினர் இல்லை?

அ) இலங்கை
ஆ) ஜப்பான்
இ) வங்காளதேசம்
ஈ)ஆப்கானிஸ்தான்

7. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்க்காணும் இதன் துணை அமைப்பாகும்

அ) பன்னாட்டுப் பண நிதியம்
ஆ) உலக வங்கி
இ) சார்க்
ஈ) ஆசியான்

8. காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக இரகசியம் முதலானவை ________ உடன் தொடர்புடையவை

அ) வணிகம் சார் சொத்துரிமை
ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ்
ஈ) NAMA

12-Economics-Tamil-Chapter_8.indd 202 12-01-2023 17:33:11

9. உலக வாணிக அமைப்பின் முதலாவது அமைச்சர்கள் அளவிலான மாநாடு நடைபெற்ற இடம்

அ) சிங்கப்பூர்
ஆ) ஜெனிவா
இ) சியாட்டில்
ஈ) டோஹா

10. ஆசியான் கூட்டங்கள்______ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.

அ) 2
ஆ) 3
இ) 4
ஈ) 5

11. கீழ்க்காண்பவற்றில் எது SAARC உறுப்பினர் நாடு அல்ல ?

அ) பாகிஸ்தான்
ஆ) ஸ்ரீலங்கா
இ) பூடான்
ஈ) சீனா

12. சார்க் உச்சி மாநாடு ________________ ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறுகிறது.

அ) 2
ஆ) 3
இ) 4
ஈ) 5

13. ஆசியான் அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்

அ) ஜகார்த்தா
ஆ) புது டெல்லி
இ) கொழும்பு
ஈ) டோக்கியோ

14. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு

அ) 2001
ஆ) 2005
இ) 2008
ஈ) 2010

15. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1965
ஆ) 1967
இ) 1972
ஈ) 1997

16. பத்தாவது பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாடு ஜுலை 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற இடம்

அ) பீஜிங்
ஆ) மாஸ்கோ
இ) ஜோகனஸ் பர்க்
ஈ) பிரசிலியா

17. புதிய மேம்பாட்டு வங்கி இந்த அமைப்புடன் தொடர்புடையது.

அ) பிரிக்ஸ்
ஆ) டபிள்யூ.டி.ஓ
இ) சார்க்
ஈ) ஆசியான்

18. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு

அ) சீனா
ஆ) ஜப்பான்
இ) இந்தியா
ஈ) வடகொரியா

12-Economics-Tamil-Chapter_8.indd 203 12-01-2023 17:33:11

19. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு

அ) 1985
ஆ) 1988
இ) 1992
ஈ) 1998

20. பெனிலக்ஸ் (BENELUX) என்பது இதன் வடிவமாகும்.

அ) தடையற்ற வாணிகப் பகுதி
ஆ) பொருளாதார ஒன்றியம்
இ) பொது அங்காடி
ஈ) சுங்கவரி ஒன்றியம்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
இ	அ	ஆ	அ	அ	ஆ	ஆ	அ	அ	ஆ
11	12	13	14	15	16	17	18	19	20
ஈ	அ	அ	அ	ஆ	இ	அ	ஈ	ஆ	ஈ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. சிறப்பு எடுப்புரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
22. ஆசியானின் இரண்டு நோக்கங்களைக் குறிப்பிடுக.
23. ஐபிஆர்டி யின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களைச் சுட்டிக்காட்டுக
24. பொது அங்காடி வரையறு.
25. தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?
26. எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
27. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு வடிவங்களைக் குறிப்பிடுக.
29. வாணிக ஒத்துழைப்புத் தொகுதிகள் என்றால் என்ன?
30. ஐஎம்எப் – ன் கடன் வழங்கும் திட்டங்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
31. பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?
32 பிரிக்ஸ் மாநாடு 2018இன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
33. சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.
34. பிரிக்ஸ் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.

12-Economics-Tamil-Chapter_8.indd 204 12-01-2023 17:33:11

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. பன்னாட்டுப் பணநிதியத்தின் நோக்கங்களை விளக்குக.
36. உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.
37. இந்திய சமூக பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ – ன் பங்கினை விவாதிக்க.
38. குறிப்பு எழுதுக அ) சார்க் ஆ) ப்ரிக்ஸ்

செய்முறை

1. நாடுகளின் அமைவிடம் அவற்றின் தலைநகரங்கள் பற்றி உலக வரைபடத்தை முழுவதுமாகக் கண்டறிய மாணவர்களுக்குக் கூற வேண்டும்.
2. பன்னாட்டுப் பொருளாதார அமைப்புகள், அவற்றின் நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு மாணவர்களை இணைய தளங்களுக்குச் செல்ல அறிவுறுத்தல்.

பார்வை நூல்கள்

1. Cherunilam, Francis (2010), "International Economics", The McGraw Hill Publications, New Delhi.
2. Jhingan, M.L., (2000), "International Economics" Vrindha Publications Private Limited, New Delhi.
3. Krugman R. Paul (2003), "International Economics: Theory and Policy", Sixth Edition, Pearson Education, New Delhi.
4. Mithani, D M (1982), "International Economics", Himalaya Publishing House, New Delhi.
5. Rao, Subba, (2012), "International Business", Third Edition, Himalaya Publishing House, New Delhi.
6. Robert C. Feensta and Alan M. Taylor, (2008), "International Economics", Worth Publishers, New York.
7. Van Meerhaeghe, M.A.G. (1998), "International Economic Institutions", 7th edition, Kluwer Academic Publishers, Dordrecht.

இணையதளங்கள்

http://www.worldbank.org

http://www.imf.org

12-Economics-Tamil-Chapter_8.indd 205 12-01-2023 17:33:11

இயல் 9

நிதிப் பொருளியல்

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை

– திருக்குறள் 478

புரிதலின் நோக்கங்கள்

1. நிதிப் பொருளியலின் பொருள், பாடக் கருத்து ஆகியவை பற்றி அறிந்து கொள்ளுதல்,
2. நேர்முக, மறைமுக வரிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்,
3. நிதிக் குழுவின் பணிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

9.1 அறிமுகம்

நிதிப் பொருளியல், என்ற பதம் புதிய ஒன்றாகும். இதன் பழைய, புகழ் பெற்ற பாடம் 'பொது நிதி' என்பதாகும். பொது நிதி என்ற பாடம் அரசு நிதி பற்றிய செயல்பாடுகளோடு தொடர்புடையது. அது, அரசு கருவூலத்தின் நிதி செயல்பாடுகள் பற்றி விவாதிக்கிறது. "ஃபிஸ்கல்" (Fiscal) எனும் சொல் கிரேக்க மொழிச் சொல்லான 'கூடை' எனப் பொருள்படும். இது "அரசின் பை" என்பதைக் குறிக்கிறது. எனவே "பொதுநிதி" – என்பதை "நிதிப் பொருளியல்" என அழைக்கப்படுகிறது.

பொதுநிதி என்பது ஓர் அரசு தனது நிதி வளங்களை உருவாக்குவதும் செலவழிப்பதும் பற்றிக் கூறுகிறது. குடிமக்களின் மொத்த விருப்பங்கள் பற்றி அரசு கருத்தில் கொள்கிறது. தற்கால அரசு நலம் பேணும் அரசாகும். தற்போது அரசின் செயல்பாடுகள் உள்ளார்ந்து பறந்து விரிந்து காணப்படுகின்றன. இச்செயல்பாடுகளைச் செய்வதற்கு அரசுக்கு நிதி தேவைப்படுகிறது. இந்தப்பாடம் பொது வருவாய். பொதுச் செலவு, பொதுக் கடன், வரவு செலவுத் திட்டம், கூட்டரசு நிதி உள்ளாட்சி நிதி ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது.

9.2 பொதுநிதி – பொருள்

பொது நிதி என்பது அரசின் நிதி சார்ந்தவை பற்றிப் படிக்கக்கூடியதாகும். இது அரசின் வருவாய் பற்றியும் செலவுகளைப் பற்றியும், அவை

12-Economics-Tamil-Chapter_9.indd 206 12-01-2023 18:38:11

ஒன்றொடொன்று எவ்வாறு சரி செய்து கொள்கின்றன என்பதைப் பற்றியும் விளக்குகின்றன.

9.3 வரைவிலக்கணங்கள்

"பொதுநிதி என்னும் பாடம் அரசியலுக்கும் பொருளியலுக்கும் இடையே எல்லைக்கோடாகத் திகழ்கிறது. இது அரசின் பொது அதிகார வெவ்வேறு அமைப்பின் வரவு செலவுகளைப் பற்றியும், அவை ஒன்றோடொன்று சரிசெய்து கொள்வதைப் பற்றியும் கருத்தில் கொள்கிறது".

–டால்டன்

"அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும், கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்".

–ஆடம் ஸ்மித்

9.4 பொது நிதியியலின் பாடப் பொருள்/ எல்லை

பொதுநிதியியின் எல்லை

1. பொது வருவாய்
2. பொதுச் செலவு
3. பொதுக் கடன்
4. நிதி நிருவாகம்
5. நிதிக் கொள்கை

தற்காலத்தில் பொது நிதியியல் ஐந்து துணைப் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அவை: பொது வருவாய், பொதுச் செலவு, பொதுக் கடன், நிதி நிருவாகம், நிதிக் கொள்கை ஆகியனவாகும்.

1. பொது வருவாய்

பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி வருவாய்கள் வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரிச் சுமை, வரியின் தாக்கம், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

2. பொதுச் செலவு

இப்பகுதி அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள், பொதுச் செலவைக் கட்டுப்படுத்துதல் ஆகியவை சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

3. பொதுக் கடன்

பொதுக்கடன் என்ற பகுதியில் உள்நாடு, வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய கடன்களுக்கான வளங்களைப் பற்றி படிக்கிறது. பொதுக்கடன் சுமை, அதன் விளைவுகள், திரும்பச் செலுத்தும் முறை ஆகியவை இத்தலைப்பின் கீழ் வருகின்றன.

4. நிதி நிருவாகம்

இப்பகுதி அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றிப் படிக்கிறது. வரவு செலவுத் திட்டம் என்பது ஓராண்டிற்கான அரசின் பேரளவு நிதித் திட்டமாகும். வரவு செலவுத் திட்டத்தின் பல்வேறு நோக்கங்கள், அதனைத் தயாரிப்பதற்கான வழிமுறைகள், நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு, தணிக்கை முதலானவை நிதி நிருவாகத்தின் கீழ் வருகின்றன.

12-Economics-Tamil-Chapter_9.indd 207 12-01-2023 18:38:11

5. நிதிக் கொள்கை:

வரிகள், மானியங்கள், பொதுக்கடன், பொதுச் செலவு ஆகியவை நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

9.5 பொதுநிதியும் தனியார் நிதியும்

பொது நிதி என்பது அரசின் வருவாய், செலவு, கடன்கள், நிதி நிருவாகம் பற்றி விளக்குகிறது.. தனியார் நிதி என்பது தனிமனிதர் அல்லது தனியார் நிறுவனங்களின் வருவாய், செலவு, கடன், அதன் நிதி நிருவாகம் ஆகியவற்றைப் பற்றிப் படிக்கிறது. பொதுநிதியும் தனியார் நிதியும் அடிப்படையில் ஒன்றுபோல் இருந்தாலும் அவற்றின் அளவு, நோக்கம் , விளைவு, தாக்கம் ஆகியவற்றில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன.

9.5.1. ஒற்றுமைகள்

1. பகுத்தறியும் தன்மை

பொதுநிதியும் தனி நிதியும் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டும் குறைந்த செலவில் அதிக நலத்தைப் பெறுவதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளன.

2. கடனுக்கான வரையறை

இரண்டுக்குமான கடன்கள் வரையறை கொண்டுள்ளது. தனது வருவாய்க்கு அப்பால் அரசும் செல்வதில்லை. அரசின் பற்றாக்குறை வரவு செலவு, திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.

3. வளங்களின் பயன்பாடு

தனியார் துறையும் மற்றும் பொது துறையும் வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளன. இவ்விரண்டும் உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகின்றன.

4. நிருவாகம்

நிருவாகத் திறனானது அரசின் செயல் திறனையும் தனியாரின் செயல்திறனைப் பொருத்து அமைகிறது. செயல்திறன் இன்மை, ஊழல் ஆகியவை நிருவாகத்தில் காணப்பட்டால் விரயங்களும் இழப்புகளும் ஏற்படும்.

9.5.2. வேற்றுமைகள்

1. வருமானத்தையும் மற்றும் செலவையும் சரிகட்டல்

அரசு செலவினை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப வருவாயை எழுப்ப முயற்சிக்கிறது. தனிமனிதர்கள் வருவாய்க்கு ஏற்ப செலவினை வைத்துக் கொள்வார்கள். எடுத்துக்காட்டாக தனியார் நிதி என்பது இருக்கக்கூடிய துணி அளவிற்கு மேலங்கி (Coat) தைப்பது போன்றும், பொதுநிதி என்பது மேலங்கியின் தேவைக்கேற்ப துணி அளவை முடிவு செய்வது போன்றதாகும்.

2. கடன்

அரசானது உள்நாட்டு, அயல்நாட்டு வழிகள் மூலம் கடன்களைப் பெறலாம். மேலும் அரசானது, பத்திரங்களை வெளியிட்டு மக்களிடம் கடனைப் பெறலாம். ஆனால் தனியார் இவ்வாறு அவர்களிடம் கடனைப் பெறமுடியாது.

3. பணம் அச்சடிக்கும் உரிமை

அரசு வேண்டுமெனில் பணத்தை அச்சடிக்கலாம். இது பணத்தை உருவாக்குதல், பகிர்வு செய்தல், நிருவகித்தல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். தனியார் பணத்தை உருவாக்க இயலாது.

4. நடப்பு முடிவுகளும் எதிர்கால முடிவுகளும்

அரசானது எதிர்காலத் திட்டங்களை கருத்தில் கொண்டு நீண்டகால முடிவினை மேற்கொள்கிறது. அரசின் முதலீடானது பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல், மருத்துவமனைகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொள்வது ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. ஆனால் தனியார் நிதியானது குறுகிய காலத் திட்டங்களுக்கான நிதியைக் கொண்டவை ஆகும்.

5. நோக்கம்

பொதுத்துறையின் முக்கியமான நோக்கம், பொருளாதாரத்தில் சமூக நன்மையை வழங்குவதாகும். தனியார் துறையின் நோக்கம் சொந்த நன்மையை உயர்த்துவது, அதாவது இலாபத்தை உச்சப்படுத்துவதாகும்.

6. கட்டாய வருவாய் பெறுவதற்கான வழிகள்

தனிமனிதரின் வருமானத்திற்கான ஆதாரங்கள் குறைவாகும். ஆனால் அரசுக்கு அதிகமாகும். அரசு தனது அதிகாரவரம்பைப் பயன்படுத்தி வருவாயைப் பெறலாம்.

7. பெரிய அளவிலான மாற்றங்களைக் கொண்டுவருவதற்கான திறன்

பொதுநிதிக்கு வருவாய் சார்ந்த பெரிய முடிவுகளை எடுப்பதற்கான திறன் உண்டு. தனது வருவாயைத் திறமையாகவும் வெளிப்படையாகவும் அரசால் சரிக்கட்ட இயலும். ஆனால் தனிமனிதர்கள் அவ்வாறான பெரிய முடிவுகளை எடுக்க இயலாது.

9.6 தற்கால அரசின் பணிகள்

தற்கால அரசானது காவல் அரசாக மட்டுமில்லாமல் நலம் பேணும் அரசாக உள்ளது. இது பொருளாதார, சமூகக் கட்டமைப்புகளை உருவாக்குவதையும், நாட்டிற்கு உள்ளேயும், வெளியிலும் நிலைத்தன்மையை உறுதி செய்தல், நீடித்த நெடுநாள் வளர்ச்சிக்கான காரணிகளை பாதுகாத்தல் ஆகியவற்றில் பெரிய அளவிலான பங்கினை ஆற்றுகிறது. அரசின் முக்கியமான பணிகள் பின்வருவனவாகும்..



12-Economics-Tamil-Chapter_9.indd 209 12-01-2023 18:38:12

(i) பாதுகாப்பு

உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும் பொதுமக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியமான பணியாகும். அரசு போதுமான அளவில் காவல் மற்றும் ராணுவ நிலைகளை பராமரித்து பாதுகாப்பு பணிகளைச் செய்கிறது.

(ii) நீதி

நீதி வழங்குதல் தகராறுகளைத் தீர்த்தல் ஆகியவை அரசின் பணியாகும். அரசானது, அனைத்து வகுப்பினரும் சமநீதி பெறும் வகையில் நீதி அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

(iii) நிறுவனங்கள்

தனி நிறுவனங்கள் மீதான ஒழுங்குமுறைகளும் கட்டுப்பாடுகளும் தற்கால அரசின் பணியின் கீழ் வருகின்றன. அரசானது சில நிறுவனங்களின் சொந்தமாகக் கொண்டு அவற்றை வெற்றிகரமாக செயல்படுத்துவதும் அரசின் பொறுப்புகளாகும்.

(iv) சமூக நலன்

நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூகப் பாதுகாப்பு, சமூகக் காப்பீடு, உடல்நலம், துப்புரவு ஆகியவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

(v) கட்டமைப்பு:

தற்கால அரசுகள் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது.

(vi) பேரினப் பொருளாதாரக் கொள்கை

பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக நிதிக் கொள்கை, பணக் கொள்கை ஆகியவற்றை அரசு மேற்கொள்கிறது.

(vii) சமூக நீதி

பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையின் போது சமூகத்தின் சில பிரிவனர் மற்றவர்களைவிட கூடுதல் நன்மை அடைகின்றனர். நிதித் தீர்வை மூலம் வருவாயை மறுபகிர்வு செய்வதற்கு அரசானது தேவைப்படுகிறது.

(viii) முற்றுரிமைக் கட்டுப்பாடு

ஒருசிலரிடம் பொருளாதார சக்தி குவிந்து காணப்படும் தீமையைக் களைவது அரசின் முக்கியமான பணியாகும். இதனைக் களைவதற்காக முற்றுரிமை, வாணிகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.

அரசு மூன்று விதமான வழிகளில் பங்காற்றுகிறது.

i) பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்பவராக
ii) பொது, சமூகப் பண்டங்களை அளிப்பவராக
iii) பொருளாதார முறையை ஒழுங்குபடுத்துபவராக.

9.7 பொதுச் செலவு

9.7.1. பொருள்

மக்களின் சமூகத் தேவையை நிறைவேற்றுவதற்காக மத்திய, மாநில, உள்ளாட்சி அமைப்புகள் மேற்காள்ளும் செலவினமே பொதுச் செலவாகும்.

12-Economics-Tamil-Chapter_9.indd 210
12-01-2023 18:38:12

9.7.2. வரைவிலக்கணம்

"பொது அமைப்புகளான மத்திய, மாநில, உள்ளாட்சி அமைப்புகள், சமூகத்தின் பொதுவான விருப்பங்களை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளக் கூடிய செலவுகள் பொதுச் செலவாகும்" – என வரையறை செய்யப்படுகிறது.

9.7.3. பொதுச் செலவின் வகைப்பாடு பின்வருவனவாகும்

1. நன்மை அடிப்படையிலான பாகுபாடு

கான், பிளின் ஆகியயோர் பொதுச் செலவை நன்மை அடிப்படையில் நான்கு வகைப்படுத்துகிறார்கள். அவை.:

அ) அனைத்து சமூகத்திற்கும் பலன் அளிக்கிற பொதுச்செலவு எடுத்துக்காட்டாக, பொது நிருவாகம், இராணுவம், கல்வி, பொதுச் சுகாதாரம், போக்குவரத்து ஆகியவற்றிற்கான செலவுகள்.

ஆ) சில மக்களுக்கான சிறப்பு நன்மை தரக்கூடிய, முழு சமுதாயத்திற்கும் பொது நன்மை தரக்கூடிய செலவுகள். (எ.கா) நீதி நிருவாகம்.

இ) ஒரு குறிப்பிட்டப் பிரிவினருக்கு நேரடியாக நன்மை தரக்கூடியதும் சமுதாயத்திற்கு மறைமுகமாக நன்மை தரக்கூடியதுமான செலவுகள். (எ.கா) சமூகப் பாதுகாப்பு, பொது நலன், ஓய்வூதியம், வேலையின்மைக்கான நிவாரணம் ஆகியவற்றிற்கான செலவுகள்.

ஈ) சில மனிதர்களுக்குச் சிறப்பு நன்மை பயக்கும் வகையிலான செலவு எடுத்துக்காட்டாக ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான மானியம் வழங்குதல்.

2. பணி அடிப்படையிலான வகைப்பாடு

ஆடம்ஸ்மித் பொதுச் செலவினை அரசின் பணிகள் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

அ) பாதுகாத்தல் பணிகள்

இது நாட்டின் குடிமக்களை அயல்நாட்டு ஆக்கிரமிப்பு, உள்நாட்டுச் சீரழிவு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான செலவை உள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக பாதுகாப்பு, காவல்துறை, நீதிமன்றங்கள் முதலானவற்றிற்கான செலவுகள்.

ஆ) வணிகப் பணிகள்

வணிகம், வளர்ச்சிக்காக மேற்கொள்ளக் கூடிய பொதுச் செலவை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக போக்குவரத்து, செய்தித் தொடர்பு மேம்படுத்துவதற்கான செலவுகள்.

இ) வளர்ச்சிப் பணிகள்

இது கட்டமைப்பு, தொழில் மேம்பாட்டிற்கான பொதுச் செலவை உள்ளடக்கியுள்ளது.

9.7.4. பொதுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள்

தற்கால அரசு என்பது நலம் பேணும் அரசாகும். இதில் அரசானது சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த பணிகளை செய்துதர வேண்டியுள்ளது. இவை பொதுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்களாக உள்ளன.

1. மக்கள் தொகை வளர்ச்சி

67 ஆண்டு கால திட்டங்களில், இந்தியாவின் மக்கள்தொகை 1951இல் 36.1 கோடியிலிருந்து 2011இல் 121 கோடியாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம்

12-Economics-Tamil-Chapter_9.indd 211 12-01-2023 18:38:12

ஒழுங்கு போன்றவற்றிற்காகப் பேரளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. இளைஞர்களுக்கான கல்விக்காகவும், பணிகளுக்காகவும், முதியோர்களுக்கான ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு, உடல் நலத்திற்கான வசதிகள் ஏற்படுத்தவும் பொதுச்செலவு அதிகமாகிறது.

2. பாதுகாப்புச் செலவு

இந்தியாவில் பாதுகாப்பிற்கான செலவு அதிகரித்தவண்ணம் உள்ளது. இராணுவ தளவாடங்களை புதுமைமயமாக்குவதால் இராணுவ செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது. 1990 – 91 ஆம் ஆண்டு ரூ. 10,874 கோடியாக இருந்த அரசின் பாதுகாப்புச் செலவு 2018–19 ஆம் ஆண்டு ரூ. 2,95,511 கோடியாக அதிகரித்துள்ளது.

3. அரசு மானியங்கள்

இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமைத் துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி, கல்வி முதலான பல இனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது. மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

1991 ஆம் ஆண்டில் மத்திய அரசின் மான்யத்திற்கான செலவு 9581 கோடியிலிருந்து ரூ. 2,29,715.67 கோடியாக 2018 – 19 ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது. மற்றொருபுறம் பெரும் நிறுவனங்களுக்கு மானியமாக (ஊக்கத் தொகை) ரூ. 5–இலட்சம் கோடிக்கு மேல் வழங்கியுள்ளது.

4. கடன் சேவைகள்

அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு, அயல்நாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளது. அதன் விளைவாக அரசு கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது..

ஒன்றிய அரசின் வட்டி செலுத்தல்களுக்கான தொகை 1990 – 91 ஆம் ஆண்டு ரூ. 21500 கோடியிலிருந்து 2018 – 19 ஆம் ஆண்டு ரூ. 5,75,794 கோடியாக அதிகரித்துள்ளது.

5. வளர்ச்சித் திட்டங்கள்

அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. அவையாவன நீர்ப்பாசனம், இரும்பு, எஃகு, கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைத் தொடர்பு முதலானவையாகும். இந்த வளர்ச்சித் திட்டங்கங்களுக்கு அதிகளவு முதலீடு தேவைப்படுகிறது.

6. நகரமயமாக்கல்

நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. 1950 – 51 ஆம் ஆண்டு மொத்த மக்கள் தொகையில் 17 விழுக்காட்டினர் நகர்ப்புறத்தில் வாழ்ந்தனர். தற்போது நகர மக்கள் தொகை 43 விழுக்காடு அளவில் அதிகரித்துள்ளது. தற்போது 54 நகரங்களில் 1 மில்லியன் மக்கள் தொகைக்கு மேல் உள்ளது. இதனால் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு, கல்வி, குடிமை ஆகிய வசதிகைளை மேற்கொள்ள அதிக அளவில் செலவுகள் ஏற்படுகின்றன.

7. தொழில் மயமாக்கல்

அடிப்படை, கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது. மேலும் இது உற்பத்திக்கு நீண்ட காலத்தையும் எடுத்துக்கொள்ளும். அரசானது இத்தகைய தொழிற்சாலைகளைத் திட்டமிட்டப் பொருளாதாரத்தில் துவங்கவேண்டியுள்ளது. மேலும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் போக்குவரத்து, செய்தித்தொடர்பு, எரிசக்தி, எரிபொருள் முதலான அடிப்படை வசதிகள் தேவைப்படுகின்றன.

12-Economics-Tamil-Chapter_9.indd 212 12-01-2023 18:38:12

8. **மாநிலங்கள், ஒன்றியகளுக்கான மானியங்கள் அதிகரிப்பு**

இயற்கைப் பேரழிவுகளை எதிர்கொள்வதற்கு மாநிலங்களுக்கும் ஒன்றியப் பகுதிகளும் வழங்கப்படும் மானியங்கள் உதவித்தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது.

9.8 பொது வருவாய்

பொது வருவாய் என்பது பொது நிதியியலில் முக்கியமான இடம் வகிக்கிறது. மக்களின் நலனுக்காக அரசு பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொதுச் செலவுகள் உயர்ந்து வருவதால் அதனை பொது வருவாயின் மூலமே சரிசெய்ய முடியும். பொது வருவாயை அதிகரிப்பது என்பது பொதுச் செலவின் அவசியம் மக்களின் செலுத்தும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும்.

9.8.1. பொருள்

பொது வருவாய் அல்லது பொது வருமானம் என்பது அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்.

டால்டன் கூற்றுப்படி "பொது வருமானம்" என்பதைக் குறுகிய பொருளிலும் பரந்த பொருளிலும் விளக்கப்படுகிறது. பரந்த பொருளில் பொதுவருவாய் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொது அதிகார அமைப்பினர் பெறும் அனைத்து வருவாய் அல்லது கடன் உட்பட உள்ள பெறுதல்களைக் குறிக்கும். குறுகிய கண்ணோட்டத்தில் பொது அதிகார அமைப்பின் வருமான வளங்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது. இதனை வருவாய் வளங்கள் எனக் கூறப்படுகிறது.

குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக, பரந்த பொருளில் பொதுப் பெறுதல்கள் எனவும், குறுகியக் கண்ணோட்டத்தில் பொது வருவாய் எனவும் அழைக்கப்படுகிறது.. குறுகிய பொருளில், பொது வருவாய் என்பது அரசின் வருவாய். இது 'வருவாய் சாதனம்' எனவும் பரந்த பொருளில் அரசு கடன் வழியாகப் பெறுவதும் ஆகும்.

9.8.2. பொது வருவாயின் வகைப்பாடு

பொது வருவாய் இருவகைப்படுத்தப்படுகிறது.



9.9 வரி வருவாய்

9.9.1. பொருள்

வரி என்பது குடிமக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாகச் செலுத்தக்கூடியதாகும். இது அரசால் சட்டப்படி வரி செலுத்துவோர் மீது விதிக்கப்படுகிறது. இதனை வரி செலுத்துபவர் மறுக்காமல் செலுத்த வேண்டியதாகும்.

9.9.2. வரைவிலக்கணம்

"ஒருவர் நபர் அல்லது ஒரு நிறுவனம் அரசிடமிருந்து

எந்தவொரு நன்மையும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயம் செலுத்தக்கூடியதாகும்"

– அனடோல் முராட்

"வரி என்பது பொது அதிகார அமைப்பினால் விதிக்கப்பட்டதைச் செலுத்த வேண்டிய ஒரு கட்டாயப் பங்களிப்பாகும். செலுத்தப்பட்டத் தொகைக்கு சமமான பலனை எதிர்பாராமல் செலுத்த வேண்டியதாகும். இது தண்டத்தொகை அல்லது சட்டபூர்வமான குற்றத்திற்காக விதிக்கப்படுவதல்ல"

– டால்டன்.

9.9.3. வரியின் சிறப்பியல்புகள்

1. வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தப்படக்கூடிய ஒன்றாகும். மக்கள் மீது சுமத்தப்படுகிற வரியைக் கட்டாயம் செலுத்த வேண்டும். வரியைச் செலுத்த மறுப்பது தண்டிக்கப்படக் கூடியக் குற்றமாகும்.

2. பொதுநிருவாகத்தினரிடம் வரி செலுத்துவோர் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் செலுத்த வேண்டியது. இதன் பொருளாவது என்னவென்றால் வரிசெலுத்துவோர், வரிசெலுத்துவதால் தனக்கு குறிப்பிட்ட நன்மை ஏதும் எதிர்பாராமல் செலுத்தக் கூடியது.

3. ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.

4. வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத்தொகை போன்று விதிக்கப்படுவதல்ல .

சில வரி வருவாய் மூலங்கள்

- வருமான வரி
- நிறுவன வரி
- விற்பனை வரி
- கூடுதல் கட்டணம்
- செஸ் (வரிக்கு வரி)/மேல்வரி

9.9.4. வரிசாரா வருவாய்

வரியல்லாத ஆதாரங்களிலிருந்து அரசினால் பெறப்படுகிற வருவாயை வரிசாரா வருவாய் என அழைக்கப்படுகிறது. வரிசாரா வருவாயின் ஆதாரங்களாவன:

1. கட்டணம்

அரசிற்கான மற்றொரு முக்கியமான வருவாய் ஆதாரம் கட்டணம் ஆகும். பொது நிருவாகத்தில் செய்யும் சேவைக்காக கட்டணம் விதிக்கப்படுகிறது.. கட்டணம் என்பது வரியைப் போல் கட்டாயம் செலுத்தக்கூடியது அல்ல. அரசானது சில பணிகளைச் செய்வதற்காகக் கட்டணங்களை வசூலிக்கிறது. எடுத்துக்காட்டாக, கட்டணம் என்பது பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமங்கள் முதலானவற்றை வழங்குவதற்காக விதிக்கக்கூடியது.

2. தண்டத்தொகை

சட்டத்தை மீறுவோர் மீது சுமத்தப்படுவது தண்டத் தொகை ஆகும். எடுத்துக்காட்டாக, சாலை விதிகளை மீறுதல், வருமான வரியை உரிய காலத்திற்குள் செலுத்தாமல் தாமதமாகச் செலுத்துவோர் மீது விதிக்கப்படுவது.

3. பொதுத் துறை நிறுவனங்களின் வருவாய்கள்

அரசானது பொதுத் துறை நிறுவன அமைப்புகளில் உள்ள உபரியை வருமானமாகப் பெறும். சில பொதுத்துறை நிறுவனங்கள் பெரிய அளவில் இலாபம் ஈட்டுகின்றன. அதன் இலாபம் மற்றும் பங்காதாயங்களைப் பொதுச் செலவிற்காக அரசு பயன்படுத்திக் கொள்கிறது.

12-Economics-Tamil-Chapter_9.indd 214 12-01-2023 18:38:12

www.tntextbooks.in

4. மேம்பாட்டுக்கான சிறப்புத் தீர்வைகள்

இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் அரசு மேற்கொண்ட பொதுத் திட்டத்திற்காக அப்பகுதியினர் மீது சிறப்புத் தீர்வைகள் விதிக்கப்படுகிறது. ஒரு பகுதியில் பொது பூங்காக்கள் அல்லது சாலை வசதி செய்வதால் அப்பகுதியில் நிலத்தின் மதிப்பு உயர்வதால் அப்பகுதியில் சிறப்புத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றன.

5. அன்பளிப்புகள், மான்யங்கள் உதவிகள்

❖ தற்காலத்தில் ஒரு அரசிடமிருந்து மற்றொரு அரசுக்கு வழங்கப்படுவது உதவித்தொகை ஆகும். ஒன்றிய அரசு மாநில அரசுக்கும், மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அவற்றின் பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் உதவியாகும்.

❖ வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய உதவி அயல்நாட்டு உதவி என அழைக்கப்படுகிறது. வளரும் நாடுகள் இராணுவ உதவி, உணவுப் பொருட்கள் உதவி, தொழில்நுட்ப உதவி முதலானவற்றை இதர நாடுகளிலிருந்து பெறுகின்றன.

6. மரணத் தீர்வை

ஒருவர் வாரிசு இல்லாமலோ அல்லது உயில் ஏற்படுத்தாமல் மரணமடைந்தால், அவர் மரணத்திற்குப் பிறகு விட்டுச் சென்ற உடைமைகளை அரசு எடுத்துக்கொள்ளும்.

9.9.5. வரி விதிப்பின் புனித விதிகள்

ஒரு நல்ல வரியில் இருக்க வேண்டிய சிறப்புக் கூறுகளையும், தன்மைகளையும் புனித விதிகள் என விவரிக்கப்படுகிறது. புனித விதிகள் என்பது அனைத்து வரிகளுக்கும் பொதுவானதாக இல்லாமல் தனிப்பட்ட வரிக்கு மட்டும் அதன் தரத்தைக் குறிக்கிறது. ஒரு நல்ல வரி அமைப்பு என்பது அனைத்து வகை வரிகளை சரியாக இணைத்து புனித விதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆடம் ஸ்மித் கருத்துப்படி நான்கு புனித விதிகள் உள்ளன அவையாவன:

வரி விதிப்பு விதிகள்

1. செலுத்தும் திறன் பற்றிய விதி
2. நிச்சயத்தன்மை விதி
3. வசதி விதி
4. சிக்கன விதி



1. செலுத்தும் திறன் பற்றிய விதி

மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசானது வரி விதிக்க வேண்டும். ஏழை அல்லது நடுத்தரப்பிரிவினரை ஒப்பிடும் போது செல்வந்தர் அதிக வரி செலுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

2. நிச்சயத்தன்மை விதி

வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும். உறுதிப்படுத்த வேண்டும். அரசு தன் போக்கிற்கு வரிகளை விதித்தால் அது மக்களின் செலுத்தும் திறன் மற்றும் வேலை செய்யும் திறனையும் பாதிக்கும்..

3. வசதி விதி

வரி வசூலிக்கும் முறையும், வரி செலுத்தும் காலமும் மக்களின் வசதிக்கேற்ப அமைய வேண்டும். வரி செலுத்துவோ ர்கள் வரியை எளிதாகச் செலுத்தும் வண்ணம் வசதியான ஏற்பாட்டை செய்ய வேண்டும்..

12-Economics-Tamil-Chapter_9.indd 215 12-01-2023 18:38:13

4. சிக்கன விதி

அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது. எடுத்துக்காட்டாக, வரிகளை வசூலிப்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. வசூலிப்பதற்கான செலவு வரிகளை விட அதிகமாக இருந்தால் அவை மோசமான வரிகளாகும். எனவே, ஆடம்ஸ்மித் கருத்துப்படி வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்க வேண்டும் என்பதாகும்..

9.9.6. நேர்முக வரியும், மறைமுக வரியும்

நேர்முக வரி

நேர்முக வரி என்பது ஒருவரின் வருமானத்தின் மீதும் செல்வத்தின் மீதும் விதிக்கப்பட்டு அரசுக்கு நேரடியாக செலுத்தக் கூடியதாகும். அவ்வரியின் சுமையைப் பிறருக்கு மாற்ற இயலாது. வரி வளர்வீதத் தன்மை கொண்டது. ஒருவரின் செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறு வரி விதிக்கப்படும். அதாவது, பணக்காரர்களிடமிருந்து அதிகமான வரியும், ஏழை மக்களிடமிருந்து குறைவான வரியும் வசூலிக்கப்படும்.

நேரடி வரி சார்ந்தத் திட்டங்கள் கொள்கைகளை இந்திய அரசு, நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய நேர்முக வரி வாரியத்தால் பரிந்துரை செய்யப்படுகிறது.



9.9.7. நேர்முக வரிகளின் நன்மைகள்

1. சமத்துவம் :

நேர்முக வரிகள் வளர்வீதம் கொண்டவை. அதாவது, வரி அடிப்படையைப் பொருத்து வரிவீதம் மாறும். எடுத்துக்காட்டாக வருமான வரி சமத்துவ விதி அடிப்படையில் அமைந்துள்ளது..

12-Economics-Tamil-Chapter_9.indd 216 12-01-2023 18:38:14

2. நிச்சயத்தன்மை:

நேர்முக வரி நிச்சயத்தன்மை விதியை உறுதி செய்கிறது. எடுத்துக்காட்டாக, வருமான வரி செலுத்துபவர் எங்கு, எப்பொழுது, எவ்வளவு வரியைச் செலுத்த வேண்டும் என அறிந்துள்ளார்.

3. நெகிழும்தன்மை:

நேர்முக வரிகள் நெகிழும்தன்மையைத் திருப்தி செய்கிறது. வருமான வரியானது வருமானத்தின் நெகிழ்ச்சியைப் பொருத்து அமையும். வருமான மட்டம் உயரும் போது, அரசிற்கான வரிவருவாயும் உயரும்.

4. சிக்கனம்:

நேர்முக வரிகளை வசூலிப்பதற்கான செலவு மற்ற வரிகளை ஒப்பிடுகையில் குறைவாகும். ஏனெனில் வரி செலுத்துபவர்கள் நேரடியாக அரசிற்கு வரி செலுத்துகின்றனர்.

9.9.8. நேர்முக வரிகளின் தீமைகள்

1. பிரபலமின்மை

நேர்முக வரி பிரபலமில்லாமல் உள்ளது. மேலும் இது வசதிக்குறைவானதாகவும், நெகிழ்ச்சி குறைவானதாகவும் உள்ளது.

2. உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகிறது

பல்வேறு பொருளாதார வல்லுநர்கள் கருத்துப்படி நேர்முக வரி உற்பத்தித்திறனை பாதிக்கிறது. குடிமக்கள் அதிக வரித் தொகையைச் செலுத்த வேண்டியதால், வருமானம் அதிகம் ஈட்ட வேண்டும் என்ற விருப்பம் இல்லாமல் உள்ளனர்.

3. வசதிக்குறைவு

கணக்குப் பராமரித்தல், வரி தாக்கல் செய்வதல், மொத்தமாக வரி செலுத்துதல் ஆகியவற்றிலும் வரி செலுத்துபவருக்கு வசதிக் குறைவாக உள்ளது.

4. வரி ஏய்த்தல்

நேர்முக வரியின் சுமை அதிகமாக இருப்பதால் வரி செலுத்துபவர்கள் வரியை ஏய்ப்பதற்கு முயல்கின்றனர். இது கறுப்புப் பணம் உருவாவதற்கு வாய்ப்பாவதால் அது பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

9.9.9. மறைமுக வரி

மறைமுக வரி எனப்படுவது பண்டங்களையோ, பணிகளையோ, வாங்குபவர் மீது விதிக்கப்படுகிற வரியாகும் மேலும் இது அரசுக்கு மறைமுகமாக செலுத்தப்படுகிறது. இவ்வரிச்சுமை எளிதாக மற்றொருவர் மீது மாற்ற முடியும். ஏழைஅல்லது பணக்காரர் என யாராக இருந்தாலும் அவர்கள் மீது சமமாக சுமத்தப்படும்.

பல்வேறு மறைமுக வரிகள் உள்ளன. அவை

உற்பத்தி வரி: உற்பத்தியாளர் வரியை செலுத்தினாலும் அச்சுமையை மொத்த அல்லது சில்லறை விற்பனையாளரிடம் மாற்றிவிடுவார்.

விற்பனை வரி: கடை உரிமையாளர் அல்லது சில்லறை விற்பனையாளர்களால் முதலில் செலுத்தப்பட்டு வரிச்சுமையைப் பண்டங்கள் பணிகளுக்கான விற்பனை வரியுடன் நுகர்வோர்களுக்கு மாற்றப்படுதல் ஆகும்

சுங்கத் தீர்வை: வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய பண்டங்களுக்கு இறக்குமதித் தீர்வை செலுத்தப்படும். ஆனால் இதனை இறுதியாக நுகர்வோர்கள் மீதும், சில்லறை வணிகர்கள் மீதும் மாற்றப்படும்.

கேளிக்கை வரி: திரையரங்கு உரிமையாளர் மீது உள்ள பொறுப்பை திரைப்படம் காண வருபவர்கள் மீதும் மாற்றுகின்ற வரியாகும்

சேவை வரி: தொலைபேசி, காப்பீட்டு, உணவு விடுதி முதலான சேவைகளுக்காகச் செலுத்தக்கூடியக் கட்டணங்களாகும்..

9.9.10. மறைமுக வரிகளின் நன்மைகள்

(1) பரந்து காணப்படுதல்

எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளைச் செலுத்த வேண்டும். இதனால்தான் நேர்முகவரிகளை விட மறைமுக வரிகள் அதிகமானவர்களை உள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 2 விழுகாட்டினார் மட்டுமே வருமான வரி செலுத்துகிற நிலையில் மறைமுக வரியை அனைவரும் செலுத்துகின்றனர்.

(2) சமத்துவம்

பணக்காரர்களால் பயன்படுத்தப்படக் கூடிய ஆடம்பரப் பண்டங்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது.

(3) சிக்கனத் தன்மை

உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாகிறது. வணிகர்கள் மதிப்புமிக்க வரி வசூலிப்பவர்களாகச் செயலாற்றுகின்றனர்.

(4) உடலுக்கு தீங்கான பண்டங்களின் நுகர்வைக் குறைக்கிறது

அரசானது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பண்டங்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது. எடுத்துக்காட்டாக புகையிலை, மது முதலான பண்டங்கள் மீதான வரி. இது பாவ வரி என அழைக்கப்படுகிறது.

(5) வசதியானது

மறைமுக வரியானது பண்டங்கள், பணிகள் மீது விதிக்கப்படுகிறது. நுகர்வோர் இதனை வாங்கும்போது விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

9.9.11. மறைமுக வரியின் தீமைகள்;

(1) வசூலிக்கும் செலவு அதிகம்

நேர்முக வரியை ஒப்பிடும்போது மறைமுக வரியை வசூலிக்க ஆகும் செலவு அதிகமாகும். அரசு பெரும் தொகையை மறைமுக வரி வசூலுக்காக செலவு செய்கிறது.

(2) நெகிழ்ச்சியற்ற தன்மை

நேர்முக வரிகளை ஒப்பிடும் போது மறைமுக வரிகள் குறைவான நெகிழ்ச்சித் தன்மை கொண்டவையாகும். மறைமுக வரிகள் எப்போதும் சமமான விகிதாச்சார வீதத்தில் அமையும்.

(3) தேய்வீதம்

மறைமுகவரிகள் சில நேரங்களில் நீதியற்ற, தேய்வீதத் தன்மை கொண்டதாகும். வருமான மட்டத்திற்கு அப்பாற்பட்டு ஏழை, பணக்காரர்கள் ஆகிய இருவரும் ஒரே மறைமுக வரித் தொகையைச் செலுத்த வேண்டும்.

(4) உறுதியின்மை

மறைமுக வரிகள் உயரும்போது விலை உயர்வதால் பண்டங்களுக்கான தேவை குறைகிறது. ஆகையால் அரசு எதிர்பார்க்கக்கூடிய வருவாய் வசூல் பற்றி உறுதியற்று காணப்படுகிறது. எனவே தான் டால்டன் 2 + 2 என்பது 4 –அல்ல, அது 3 அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் என மறைமுக வரியைக் குறிப்பிடுகிறார்.

(5) குடிமை உணர்வின்மை

விலையுடன் வரி மறைந்திருப்பதால், நுகர்வோர்கள் வரி செலுத்துவது பற்றி விழிப்புணர்வு பெற்றிருக்கவில்லை.

12-Economics-Tamil-Chapter_9.indd 218 12-01-2023 18:38:14

9.9.12. ஒப்பீட்டு வரைபடம்

ஒப்பீட்டிற்கான அடிப்படை	நேர்முகவரி	மறைமுக வரி
பொருள்	நேர்முக வரி என்பது ஒருவரின் வருமானம், செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்குச் செலுத்துவதாகும்.	மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள், பணிகள் மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்குச் செலுத்துவதாகும்
இயல்பு	வளர்வீதம்	தேய்வீதம்
சுமையும் தாக்கமும்	ஒரே ஒருவர் மீது வரி விழுகிறது	பலர் மீதும் வரிச்சுமை விழுகிறது.
வரி அடிப்படை	வரி செலுத்துபவரின் வருமானமும் செல்வமும்	பண்டங்கள் பணிகள் வாங்கும்போது / விற்கும்போது / உற்பத்தியின்போது
வரி ஏய்ப்பு	வரி ஏய்த்தலுக்கு வாய்ப்பு உள்ளது	பொருளின் விலையிலேயே வரி சேர்ந்திருப்பதால் வரி ஏய்ப்புக் கடினமாகும்.
பணவீக்கம்	நேர்முக வரி பணவீக்கத்தை குறைப்பதற்கு உதவுகிறது	மறைமுக வரி விலை உந்துப் பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது.
விதிக்கப்படுதல் வசூலித்தல்	தனியொருவர் இந்து கூட்டுக் குடும்பம், நிறுமம் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது	பண்டங்கள் பணிகளை நுகரும் நுகர்கோர் மீது விதிக்கப்பட்டு, மதிப்பீட்டாளரால் செலுத்தப்படுகிறது.
சுமை	மற்றவர் மீது மாற்றமுடியாதது	மற்றவர் மீது மாற்றிவிடக் கூடியது.

9.9.13. பண்டங்கள், பணிகள் வரி

- இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு மறைமுக வரிகளுக்கு மாற்றாகப் பண்டங்கள், பணிகள் வரி கொண்டு வரப்பட்டது.. சரக்கு பணிகள் வரிச் சட்டம் பாராளுமன்றத்தில் 2017 மாரச் 29இல் நிறைவேற்றப்பட்டு. 2017 ஜுலை 1 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் பண்டங்கள், பணிகள் வரி விரிவான, பல படிநிலைகளில் இலக்கு அடிப்படையில் ஒவ்வொரு மதிப்புக் கூட்டின் போது விதிக்கப்படுகிறது.

- சுருங்கக்கூறின் பண்டங்கள், பணிகள் வரியானது பண்டங்கள், பணிகள் அளிப்பின் மீது விதிக்கப்படும் மறைமுக வரியாகும்.

- நாடு முழுவதற்குமான ஒரே மறைமுக வரியாக GST – உள்ளது.



பல்முனை வரி ஒருமுனை வரியாக உற்பத்தியாளர் /நுகர்வோர்க்கு அளிப்போர் மீது விதிக்கப்படுவது.

- GSTயின் கீழ், இறுதி விற்பனையின் மேல் சுமத்தப்படுகிற வரியாகும். மாநிலத்திற்குப்பட்ட விற்பனையில் மத்திய பண்டங்கள், பணிகள் வரி (CGST), மாநில பண்டங்கள், பணிகள் வரி (SGST) விதிக்கப்படுகிறது. மாநிலங்களுக்கிடையேயான விற்பனையில் ஒருங்கிணைந்த GST விதிக்கப்படுகிறது.

இட அடிப்படையிலானது

சரக்குகள் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு, கர்நாடகாவில் இறுதியாக நுகர்வோருக்கு விற்கப்படுவதாகக் கொள்வோம். இந்த சூழ்நிலையில் முழு வரி வருவாயும் கர்நாடகாவிற்கே செல்லும் தமிழ்நாட்டிற்கல்ல.

GST – இன் உள்ளடக்கங்கள்

GST மூன்று வகைப்படும். அவையாவன :

CGST, SGST, IGST.

CGST: மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ஒன்றியப்பகுதி)

SGST: மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ஒன்றியப்பகுதி)

IGST: மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மராட்டிய மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பொருள் விற்பனை).

பெரும்பாலன நேரங்களில் இந்த வரி அமைப்பு கீழ் உள்ளவாறு அமைகிறது..

பேர நடவடிக்கை	புதிய ஆளுகை	பழைய ஆளுகை	
மாநிலத்திற்குள்ளேயான விற்பனை	CGST + SGST	VAT + மத்திய ஆயத்தீர்வை/ பணிகள் வரி	வருவாயை ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.
மற்ற மாநிலத்தில் விற்பனையின் போது	IGST	மத்திய விற்பனை வரி + ஆயத்தீர்வை / பணி வரி	மாநிலங்களுக்கிடையேயான விற்பனையில் ஒரே ஒரு வரி மட்டும் விதிக்கப்பட்டு, ஒன்றிய அரசு அந்த வருவாயை இட அடிப்படையில் பகிர்ந்து கொள்ளும்.

விற்பனை வரியின் இயல்பு, VAT மற்றும் GST :

1. GST வரியானது பண்டங்கள், பணிகள் விற்பனையில் உள்ள அடித்தள விளைவை நீக்கியது. இது பண்டங்களுக்கான செலவில் நேரடி விளைவை ஏற்படுத்தியது. இது வரிக்கு வரி என்பதை நீக்கியதால் பண்டங்களுக்கான செலவு குறைந்தது.

2. VAT எனப்படுவது அடித்தள விளைவில்லாத பல்முனை வரியாகும்.

3. GST என்பது அடித்தள விளைவில்லாத ஒரு முனை வரியாகும்.

GST – யின் நன்மைகள் :

1. வரி மீதான வரி இம்முறையில் நீக்கப்படுவதால் பொருட்களுக்கான செலவு குறைகிறது.. இது நேரிடையாக பண்டங்களின் செலவில் பிரதிபலிக்கிறது.

2. GST எனப்படுவது தொழில்நுட்ப ரீதியில் அமைந்ததாகும். பதிவு செய்தல், வரித் தாக்கல் செய்தல் கூடுதலாகச் செலுத்தியதை திரும்பப்பெருதல்,கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்தல் போன்றவற்றை GST இணையத்தில் செய்யப்படுகிறது. இதனால் அனைத்துச் செயல்பாடுகளும் விரைவாக நடைபெறுகின்றன.

9.10 பொதுக்கடன்

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் அரசின் செயல்பாடானது குறைவானதாகும். ஆனால் 20 ஆம் நூற்றாண்டிலிருந்து அரசிற்கான பொறுப்புகள் அதிகரித்துக்கொண்டே இருந்துள்ளது எனவே அரசானது ஏற்கனவே உள்ள பாரம்பரியமான வருவாயுடன் தனிமனிதரிடமும், உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடமும் கடன்கள் வாங்குகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகள், வளர்ச்சித் திட்டங்களுக்காக அதிகமான கடன் பெறுகின்றன. சில நாடுகள் இத்தகைய கடன்களினால் கடன் பொறியில் சிக்கியுள்ளது.

9.10.1. வரைவிலக்கணம்

"கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுக்கப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காகத் திரட்டப்படும் நிதி ஆகும்"

– பிலிப் E. டெய்லர்.

"பொதுக்கடன் என்பது நிதிக் கருவிகள் வாயிலாக அரசானது தனியார் துறையிலுள்ள தனிமனிதர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும். இதனைக் கொண்டு தனியார் துறையைத் தூண்டி அதன்

மனிதவளங்கள், பிற உண்மையான வளங்களைப் பெருக்குவதற்கும், அந்த நிதியினைக் கொண்டு வளங்களை வாங்குதல் அல்லது நலத்தை உருவாக்குதல் அல்லது மானியங்களை வழங்குதல் ஆகியவற்றை செய்தலைக் குறிப்பதாகும்"

– கார்ல் எஸ். ஷோப்

9.10.2. பொதுக்கடனின் வகைகள்

i) உள்நாட்டுப் பொதுக்கடன்

உள்நாட்டுக் கடன் என்பது, ஒரு நாட்டிற்குள் குடிமக்கள், பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அரசினால் பெறப்படும் கடனாகும். உள்ளாட்டுப் பொதுக்கடன் என்பது செல்வத்தை மாற்றிக் கொள்வது பற்றியதாகும்.

உள்நாட்டுப் பொதுக்கடனின் முக்கிய ஆதாரங்களாவன

- அரசு பத்திரங்கள், ஆவணங்களை தனிமனிதர்கள் வாங்குதல்.
- அரசிடமிருந்து பத்திரங்களை தனியார் வங்கிகளும் பொதுத்துறை வங்கிகளும் பெறுதல்.
- அரசு பத்திரங்களை நிதிசாரா நிறுவனங்களாகிய UTI, LIC, GIC ஆகியவை பெறுதல்.
- பண அளிப்பு வாயிலாக அரசிற்கு மைய வங்கி கடன் வழங்குகிறது. அரசின் செலவுகளைச் சந்திப்பதற்காக மைய வங்கி பணமாகவும் வழங்குகிறது.

ii) வெளிநாட்டுப் பொதுக்கடன்

பன்னாட்டு நிறுவனம் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடன், அயல்நாட்டுக் கடன் என அழைக்கப்படுகிறது. IMF, உலக வங்கி, IDA, ADB ஆகிய அமைப்புகளிடமும், வெளிநாட்டு அரசுகளிடம் கடன் பெறுவது அயல்நாட்டுக் கடன்களுக்கான முக்கியமான ஆதாரமாக உள்ளது.

வெளிநாட்டுக் கடன் – ஜூன் 2018 – நிலவரப்படி

தரவரிசை	நாடுகள்	வெளிநாட்டுக் கடன் (மில்லியன் டாலரில்)	தலா வீதக் கடன் அளவு (US டாலரில்)	மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கடன் விழுக்காடு (GDP)
1	அமெரிக்கா	21,171,000	58,200	98
2	இங்கிலாந்து	8,475,956	127,000	313
3	பிரான்சு	5,689,745	87,200	213
4	ஜெர்மனி	5,398,267	65,600	141
7	ஜப்பான்	3,586,817	28,200	74
13	சீனா	1,710,625,	1,200	14
21	ரஷ்யா	537,458	3,700	40
22	இந்தியா	529,000	380	20

ஆதாரம்: உலக வங்கி அறிக்கை மற்றும் இந்தியாவின் கடன் சார்ந்த அறிக்கை – மார்ச் 2018 (RBI – அறிக்கை – நாள் – 29.06.2018)

www.tntextbooks.in

9.10.3. பொதுக்கடன் அதிகரிப்பதற்கான காரணங்கள்

பின்வரும் துணைத் தலைப்புகளில் பொதுக்கடன் அதிகரிப்பதற்கான காரணங்களைக் காணலாம்.

1. போர், போர்கால ஆயத்தம்

போர் நெருக்கடி தான் அரசின் பொதுக் கடனை அதிகரிப்பதற்கான முக்கியமான காரணியாக இருக்கின்றது. இன்றைய நாளில் போருக்கு ஆயத்தம் செய்தல், அணு ஆயுததிட்டங்கள் ஆகியவற்றிற்கு அரசு பெருவாரியாக செலவு செய்கிறது. இதனால் கடன் ஏற்படுகிறது.

2. சமுதாயத் தேவைகள்

தற்கால அரசானது நல அரசாக செயல்படுவதால் சமுதாயத் தேவைகளான பொது சுகாதாரம், தூய்மை, கல்வி , காப்பீடு, போக்குவரத்து தகவல் தொடர்பு முதலானவற்றை மேற்கொள்வதற்கும், மற்ற குறைந்த அளவுத் தேவைகளை மக்களுக்குச் செய்கிறது. இதற்கான செலவினை மேற்கொள்ள பொதுக்கடனைப் பெற வேண்டியுள்ளது.

3. பொருளாதார முன்னேற்றம், நிதி பற்றாக்குறை

அரசு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொள்கிறது. இரயில்வே கட்டுமானம், மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், கனரக தொழிற்சாலைகள் அமைத்தல் முதலானவற்றிற்குத் தேவையான வளங்களை பொதுக்கடன் வாயிலாக அரசு பெறுகிறது. அதிகளவில் பொதுச் செலவின் காரணமாக அரசு எப்பொழுதும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தை எதிர்கொள்கிறது. இந்தப் பற்றாக்குறையைக் கடன்களால் மட்டுமே சரிசெய்ய முடியும்.

4.வேலைவாய்ப்பு

தற்காலத்தில் அரசு வேலையின்மைச் சிக்கலை எதிர்கொள்கிறது. பொதுச் செலவின் வாயிலாக இது போன்ற சிக்கல்களைத் தீர்ப்பது அரசின் கடமையாக உள்ளது. இதற்காக அரசு பெரிய தொகையினை செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனை பொதுக்கடன் வாயிலாகவே மேற்கொள்கிறது.

5.பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்

புழக்கத்தில் உள்ள பணத்தை அரசு திரும்பப் பெற பொதுக்கடன் வழிமுறையை கையாளுகிறது. இதனால் விலை ஏற்றத்தைத் தடுக்கிறது.

6. மந்தத்தை தடுத்தல்

மந்த காலங்களில் தனியார் முதலீடு குறைவாக இருக்கும். அதனை ஈடுகட்ட அரசானது உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களின் மூலம் கடன் பெறுவதை மேற்கொள்ளும்.

9.10.4. பொதுக்கடனைத் திரும்பச் செலுத்தும் முறைகள்

பொதுக்கடன் தீர்வு என்பது பொதுக்கடனைத் திரும்பச் செலுத்தும் வழிமுறையைக் குறிப்பதாகும். அரசு விற்பனை செய்துள்ள பத்திரங்களைப் பொதுமக்கள் அதன் முதிர்வு காலத்தில் பத்திரங்களை ஒப்படைத்து அதற்கான தொகையை வட்டியுடன் பெறுவர்.

பொதுக்கடன் பின்வரும் வழிகளில் கடன் தீர்க்கப்படுகிறது.

(1) மூழ்கும் நிதி

கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை 'மூழ்கும் நிதி' என்பர். அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை

12-Economics-Tamil-Chapter_9.indd 223 12-01-2023 18:38:15

செலுத்துகிறது. கடன் முதிர்ச்சியடையும் போது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும். இந்த முறை முதன்முதலில் இங்கிலாந்தைச் சேர்ந்த வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

(2) கடனை மாற்றுதல்

பொதுக்கடன் திரும்பச் செலுத்தப்படும் மற்றொரு முறை கடன் மாற்றுதல் ஆகும். இம்முறையில் பழையக் கடனை புதியக் கடனாக மாற்றப்படுகிறது. இம்முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.. டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

(3) வரவு செலவுத் திட்ட உபரி

உபரி வரவு செலவுத் திட்டத்தை அரசு தாக்கல் செய்யும்போது அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும். பொது வருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது. இது எப்போதாவது தான் பயன்படுத்தப்படுகிறது

(4) பகுதியாகச் செலுத்தல்

இந்த முறையின் கீழ் அரசு பொதுக்கடனை சமமான ஆண்டுத் தவணைகளாகச் செலுத்துகிறது. இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக எளிதான முறையாகும்.

(5) கடன் மறுப்பு

அது அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும். இதில் அரசானது ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும். இது கடனைத் திரும்பச் செலுத்துவதாகாது, அதனை அழிப்பதாகும். சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது ஏனெனில் அது அரசின் நாணயத்தன்மையைப் பாதித்து விடும்.

(6) வட்டி வீதத்தை குறைத்தல்

நிதிச் சிக்கல் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியைக் குறைத்துக் கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்..

(7) மூலதனத் தீர்வை

ஒரு தனிமனிதர் அல்லது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அல்லது வளர்ச்சி போக்கில் உள்ள மூலதன சொத்துகள் பெற்றிருப்பின் அதன் மீது அரசு வரி விதித்து, அதனைப் போர்க்காலக் கடனை செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகும். ஆனால் இது சர்ச்சைக்குரியக் கடன் தீர்வை முறையாகும்

9.11 வரவு செலவுத் திட்டம்

'பட்ஜெட்' என்ற பதம் "பௌஜெட்" என்ற பிரெஞ்ச்மொழிச்சொல்லிலிருந்துபெறப்பட்டதாகும். இதன் பொருளாவது 'சிறிய பை' என்பதாகும். வரவு செலவுத் திட்டம் என்பது எதிர்நோக்குகிற நிதி ஆண்டிற்குரிய அரசின் மதிப்பிடப்பட்ட வருமானம், செலவு ஆகியவற்றைக் காட்டும் ஆண்டு நிதி அறிக்கை ஆகும்.

9.11.1 வரைவிலக்கணங்கள்

"முதல் நிலையிலான ஏற்றுக் கொள்ளப்பட்டப் பொது வருவாய், செலவுத் திட்டத்தை உள்ளடக்கிய ஆவணமாகும்"

– ரேனி ஸ்டோன்

"வரவு செலவுத் திட்டமானது குறிப்பிட்ட காலத்தின் நிதி ஏற்பாடுகளை வெளிப்படுத்துகிறது. இது, வழக்கமான ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

– பாஸ்டபிள்

12-Economics-Tamil-Chapter_9.indd 224 12-01-2023 18:38:15

9.11.2. மத்திய மாநில வரவு செலவுத் திட்டம்

இந்தியா ஓர் கூட்டரசு பொருளாதாரமாக விளங்குவதால் அரசின் வரவு செலவுத் திட்டம் அரசின் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு ஆண்டு நிதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். பிரிவு 112 இன் படி ஒன்றிய அரசின் வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்திலும், பிரிவு 202இன் படி ஒவ்வொரு மாநில அரசும் சட்டமன்றத்திலும் தாக்கல் செய்ய வேண்டும்.

9.11.3. வரவு செலவுத் திட்டத்தின் வகைகள்

வருவாய் மற்றும் மூலதன வரவு செலவுத் திட்டம்.

வருவாய் கணக்கு மற்றும் பிற கணக்குகளின் மீதான செலவு அடிப்படையில் வரவு செலவு திட்டம் இரு வகைகளில் சமர்பிக்கப்படுகிறது.

i) **வருவாய் வரவு செலவுதிட்டம்:** இது வருவாய் வரவுகள் மற்றும் வருவாய் செலவினங்களைக் கொண்டது. இது வரி வருவாய் மற்றும் வரி சாரா வருவாய் என வகைபடுத்தப்படுகிறது. வருவாய் செலவினங்களைத் திட்டம் சார்ந்த செலவினம் திட்டம் சாரா செலவினங்களாக வகைப்படுத்தபடுகிறது.

ii) **மூலதன வரவு செலவு திட்டம்:** அது மூலதன வரவுகளையும், மூலதனச் செலவுகளையும் உள்ளடக்கியதாகும். மூலதன வரவின் முக்கியமான ஆதாரங்களாக கடனகள், முன்பணம் ஆகிய உள்ளன. மூலதனச் செலவினத்தைத் திட்டம் சார் செலவினம் திட்டம் சாரா மூலதனச் செலவு என வகைப்படுத்தபடுகிறது.



iii) **துணை வரவு செலவுத் திட்டம்** போர்க்காலம், சுனாமி, வெள்ளம், முதலான இயற்கை சீற்றங்களின் போது செலவுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டத் தொகை போதுமானதாக இருப்பதில்லை. இந்த எதிர்பாராதச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக அரசினால் துணை வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

iv) **நிதிக்கு வாக்கெடுப்பு** வரவு செலவுத் திட்டம்: இந்திய அரசியலமைப்புப்பிரிவு 116இன் படி, பட்ஜெட் ஆண்டு மத்தியில் ஒப்படைக்கப்படும் இதற்கு அரசியல் காரணம் இருக்கிறது. இருக்கக்கூடிய அரசானது தேர்தல் காரணமாக அந்த ஆண்டு முழுவதும் தொடர்ந்தோ தொடராமலோ இருக்கலாம். இதனால் அந்த அரசு தாக்கல் செய்யும் வரவு செலவுத் திட்டம் "நொண்டி வாத்து வரவு செலவுத் திட்டம்" என அழைக்கப்படுகிறது. இது நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.

சிறப்பு நிகழ்வாக நிதிக்கு வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டமான அவசியமான இனங்களுக்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெறும்வரை செலவு மேற்கொள்ள அனுமதி உள்ளது. வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறும் வரை தொகுப்பு நிதியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ள சட்டரீதியான அனுமதி உள்ளதை வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய அனுமதி அதிகஅளவு இரண்டு மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

v) **சுழிய வரவு செலவுத் திட்டம்** இந்திய அரசு 1987 –88 இல் சுழிய வரவு செலவுத்திட்டத்தை தாக்கல் செய்தது. இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும்.புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில் மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

vi) **செயல்திறன் வரவு செலவுத்திட்டம்** எந்த ஒரு வரவு செலவு திட்டத்தின் வெளியீட்டின் அடிப்படையில் வரவு செலவுத்திட்டம் அமைந்தால் அது செயல்திறன் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இது உலகில் முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. சர்உப்பர் தலைமையில் அமெரிக்காவில் 1949–ஆம் ஆண்டு நிருவாகச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் பரிந்துரையின்படி செயல்திறன் வரவு செலவுத் திட்டம் அமெரிக்காவில் அமைக்கப்பட்டது. மக்களின் நலனுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் "என்ன செய்தோம்". "எவ்வளவு செய்தோம்" என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் செயல்திறன் வரவு செலவுத் திட்டத்தை "சாதனைத் திட்டம்" என அழைக்கப்படுகிறது.

(vii) **சமநிலை வரவு செலவுத் திட்டமும் சமனற்ற வரவு செலவுத் திட்டமும்**

அ. சமநிலை வரவு செலவுத் திட்டம்

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இருந்தால் அது சமநிலை வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

அரசின் திட்டமிட்ட வருவாய்
=
அரசின் எதிர்நோக்கும் செலவுகள்

12-Economics-Tamil-Chapter_9.indd 226 12-01-2023 18:38:16

வரவு செலவு திட்டத்தின் வகைகள்

பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்	சமமான வரவு செலவுத்திட்டம்	உபரி வரவு செலவுத்திட்டம்
செலவு > வருவாய்	செலவு = வருவாய்	செலவு < வருவாய்

ஆ. சமனற்ற வரவு செலவுத் திட்டம்

அரசு எதிப்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இல்லாது இருந்தால் அது சமனற்ற அல்லது சமநிலையில்லா வரவு செலவுத் திட்டமாகும்.

சமனற்ற வரவு செலவுத் திட்டம் இருவகைப்படும்.

1.உபரி வரவு செலவுத் திட்டம்.

2.பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்.

1.உபரி வரவு செலவுத் திட்டம்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவைவிட அதிகமாக இருந்தால் அது உபரி வரவு செலவுத் திட்டம் எனப்படும்.

> உபரி வரவு செலவுத் திட்டம்
> =
> அரசு எதிர்பார்க்கிற வருவாய்>
> திட்டமிடப்பட்டுள்ள செலவு

2.பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவைவிடக் குறைவாக இருந்தால் அது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் எனப்படும்

> பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்
> =
> அரசு எதிர்பார்க்கிற வருவாய்<
> திட்டமிடப்பட்டுள்ள செலவு

9.11.4. வரவு செலவுத் திட்ட செயல்முறைகள்

வரவு செலவுத் திட்ட செயல்முறைகள் என்பது வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது, தாக்கல் செய்வது, செயல்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

(அ) வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்

மைய அரசு வரவு செலவுத் திட்டத்தை ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் தயாரிக்கிறது. மாநில அரசு வரவு செலவுத் திட்டத்தை மாநில நிதித்துறை தயாரிக்கிறது. வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைக் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

- பேரியல் பொருளாதார கொள்கை இலக்குகளைத் திட்ட காலத்திற்குள் அடைதல்.
- வரவு செலவுத் திட்டத்தின் யுக்திகள்.
- பல்வேறு திட்டங்களுக்கான நிதித் தேவைகள்.
- வருவாய் செலவினத்தின் மதிப்பீடு (பாதுகாப்பு செலவினம், மானியம், கடனுக்கான வட்டி செலுத்தல்கள் முதலானவை).
- மூலதனச் செலவினத்தின் மதிப்பீடு (இரயில்வே, சாலை, பாசன வளர்ச்சி முதலானவற்றிற்காக).
- வரி, வரியற்ற வருவாய் வரவுகளின் மதிப்பீடு.

- கடன்களைத் திரும்பச் செலுத்தல்கள், பொதுத்துறையின் முதலீட்டு குறைப்பு, அங்காடி பெறுதல்கள் போன்ற மூலதன வரவுகளின் மதிப்பீடு.
- வருவாய் வரவுகளுக்கும் வருவாய் செலவுகளுக்கும் இடையேயான இடைவெளியின் மதிப்பீடு.
- நிதிபற்றாக்குறை,முதன்மைபற்றாக்குறை, மற்றும் வருவாய் பற்றாக்குறையின் மதிப்பீடு.

வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் வழிமுறைகள்

நிதி அமைச்சகம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்யும்

↓

பல்வேறு துறைகள் வருமானம், செலவு பற்றிய மதிப்பீடுகளை நிதி அமைச்சகத்திற்கு அனுப்பும்

↓

வரவு செலவுத் திட்டம் தயாராகும்

↓

மந்திரி சபை ஒப்புதலுக்கு, நிதி அமைச்சர் தாக்கல் செய்வார்.

↓

பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்குத் தயார் நிலையில் இருக்கும்

(ஆ) வரவு செலவு திட்டம் தாக்கல் செய்தல்

நடுவன் அரசின் அங்கத்தினராக, நிதி அமைச்சர் மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தைப் புதிய நிதி ஆண்டு துவங்கும் முதல் நாள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வார். மாநில அரசுகளின் நிதி அமைச்சர்களும் அவ்வாறே ஆங்காங்கே செய்வார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பண சட்ட மசோதா வரைவு (Money Bill) மக்களவையில் தொடங்கப்படும். மைய அரசில், எல்லா பண சட்ட வரைவுகளும் முதலில் மக்களவையிலும், மாநிலங்களில் சட்டப்பேரவையிலும் தாக்கல் செய்யப்படும். வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு வரி சார்ந்த கருத்துருக்களும் இடம் பெற்றிருக்கும். நிதி சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பின்னர், வாக்களிப்பிற்குப்பின் சட்ட வடிவம் கொடுக்கப்படும். இதனடிப்படையில் செலவுகள் அங்கீகரிக்கப்படும். இந்த வழிமுறையில் தான் இந்தியாவில் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படுகிறது

இ) வரவு செலவுத் திட்டத்தைச் செயல்படுத்துதல்

வரவு செலவுத் திட்டத்தை அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்துகிறது. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டப் பணத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதுதான் மிக முக்கியமானதாகும்.

வரவு செலவு திட்டத்தில் பாராளுமன்றக் கட்டுப்பாடுகள்

இந்தியாவில் அரசுக் கணக்குகள் கீழ்க்காணும் மூன்று முறைகளில் பராமரிக்கப்படுகின்றன.

(i) தொகுப்பு நிதி

(ii) அவசர நிதி

(iii) பொதுக் கணக்கு

வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தும் நாடாளுமன்றக் குழுக்கள்

(i) பொதுக் கணக்குக் குழு

(ii) மதிப்பீட்டுக் குழு

இந்தக் குழுக்கள் எந்த அமைச்சகமும் அல்லது துறையும் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக செலவிடாமல் தொடர்ந்து கண்காணிக்கும்.

12-Economics-Tamil-Chapter_9.indd 228 12-01-2023 18:38:16

9.11.5. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகள்

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை என்பது வரவு செலவுத் திட்டத்தில் உள்ள வருவாய் செலவைவிடக் குறைவாக இருப்பதாகும். இந்த நிலையை அரசு பற்றாக்குறை எனவும் அழைக்கப்படும்.

இந்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் நான்கு வகையான பற்றாக்குறைகள் உள்ளன.

(அ) வருவாய் பற்றாக்குறை

(ஆ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை

(இ) நிதிப் பற்றாக்குறை

(ஈ) முதன்மைப் பற்றாக்குறை

அ. வருவாய் பற்றாக்குறை

அரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவைவிட அதிகமாக இருந்தால் அது வருவாய்ப் பற்றாக்குறை எனப்படும். இதில் மூலதன வரவு மற்றும் மூலதனச் செலவு கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. வருவாய்ப் பற்றாக்குறை என்பது அரசின் அன்றாடப் பணிகளை நடத்துவதற்குத் தேவையானதைவிட குறைவாக உள்ளதைக் காட்டுவதாகும்.

வருவாய் பற்றாக்குறை (RD) = மொத்த வருவாய் செலவினம் (RE) – மொத்த வருவாய் வரவுகள் (RR)

RE – RR > 0 ஆக இருக்கும்.

ஆ. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை

வருவாய் கணக்குகள் மற்றும் மூலதனக் கணக்கு ஆகியவற்றின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையாகும்.

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை = மொத்தச் செலவு – மொத்த வரவு

இ. நிதிப் பற்றாக்குறை

நிதிப்பற்றாக்குறை = வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புகளும்

எனவே நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவுப் பற்றாக்குறையைவிட அதிகமானதாகும்.

ஈ. முதன்மைப் பற்றாக்குறை

முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையைக் காட்டும். மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.

எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.

முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)

9.12 கூட்டமைப்பு நிதி

கூட்டாட்சி நிதி என்பதில் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே வருவாய் வளங்களை ஒதுக்கீடு செய்தல் குறித்து தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். இது ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்கென ஒதுக்கப்பட்டப் பணியினைத் திறமையாகச் செய்ய வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

- அதிகாரங்கள்பிரிவு: நமதுஅரசியலமைப்பில், அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே அதன் வரம்புகளை மீறுவதும், மற்றவர்களின் செயல்பாடுகளை ஆக்கிரமிப்பதை தவிர்த்து அவரவர் சொந்த பொறுப்புகளில் செயல்படுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் மூன்று பட்டியல்கள் உள்ளன. அவை: மத்திய அரசுப் பட்டியல், மாநிலப் பட்டியல், இணைப்புப் பட்டியல்.
- மத்திய அரசுப் பட்டியலில் பாதுகாப்பு, இரயில்வே, அஞ்சல்துறை ஆகிய முதலிய நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த 100 இனங்களைக் கொண்டுள்ளது
- மாநிலப் பட்டியலில் பொது நலன், காவல் துறை முதலான 61 இனங்களைக் கொண்டுள்ளது
- இணைப்புப் பட்டியலில் 52–இனங்கள் மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் பொதுவாக உள்ளது. இதில் மின்சாரம், தொழிற் சங்கம், பொருளாதார, சமூகத் திட்டங்கள் முதலானவை உள்ளடங்கும்.

மத்திய அரசின், மாநில அரசின் பணப்பங்களிக்கும் உறவு வருமான வழிகள்

I. மைய அரசின் வருவாய் மூலங்கள்

மைய அரசின் வரி, வரியில்லா வருமான வழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை.

1. தொழில் நிறுவனங்கள் மீதான வரி
2. பணம், நாணயங்கள் அயல்நாட்டுச் செலவாணி
3. சுங்க வரி, ஏற்றுமதி வரி உட்பட
4. புகையிலை இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஆகியவற்றுக்கான ஏனைய பொருட்களுக்கான கலால் வரி.
5. வேளாண்மை நிலங்கள் தவிர்த்த பண்ணை வரி
6. நீதிமன்றங்கள் விதிக்கும் கட்டணம் சேராத மத்திய பட்டியலில் உள்ள இதர கட்டணங்கள்.
7. அயல்நாட்டுக் கடன்கள்.
8. இந்திய அரசால் அல்லது மாநிலங்களால் அமைக்கப்பட்ட பரிசுச் சீட்டுகள்.
9. அஞ்சல் துறையின் சேமிப்பு வங்கி.
10. தொலைத்தொடர்புதுறையின் வருவாய்கள்
11. மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்துகள்
12. மத்திய அரசின் பொதுக்கடன்
13. இரயில்வே – இரும்புப்பாதைத்துறை, தொடர்வண்டித்துறை
14. மாற்றுச் சீட்டுகள், காசோலைகள் உறுதிமொழி பத்திரங்கள் ஆகியவை மீதான வில்லைக் கட்டணம்.
15. இந்திய ரிசர்வ் வங்கி
16. வருமான வரி (வேளாண் வருவாய் தவிர்த்து)
17. சொத்துகளின் மூலதன மதிப்பில் விதிக்கப்படும் வரி (தனிமனிதர்கள், நிறுவனங்களின் வேளாண் நிலம் தவிர)
18. பங்கு அங்காடி எதிர்கால அங்காடி பரிமாற்றங்களில் முத்திரை வரிகளைத் தவிர வேறு வரி.
19. செய்தித்தாள் மீதான வரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
20. இரயில், கடல் வழி, வான் வழியாகச் செல்லும் பயணிகள் மீதும் சரக்குகள் மீதுமான வரி.

II. மாநில வளங்கள்

1. தல வரி.
2. வேளாண் நிலங்கள் மீதான வரி
3. மது, போதைப் பொருட்கள் மீதான கலால் வரி
4. பண்ணை வரி (வேளாண் நிலங்கள்)
5. நீதிமன்றங்கள் விதிக்கும் கட்டணம் சேராத மாநில பட்டியலில் உள்ள இதர கட்டணங்கள்
6. நில வருவாய்
7. மத்திய அரசுப் பட்டியலில் இல்லாத ஆவணங்களுக்கான வில்லைக் கட்டணம்.
8. வேளாண் வருமான வரி
9. நிலம், கட்டடங்கள் மீதான வரி
10. கனிம வளங்கள் எடுப்பதற்கான உரிம வரி.
11. மின்சார நுகர்வு, விற்பனைக்கான வரி
12. உள்ளூர் பகுதியில் நுகர்வு, விற்பனைப் பொருட்களுக்கான நுழைவு வரி.
13. செய்தித்தாள் தவிர்த்த இதர பொருட்கள் மீதான விற்பனை வரி
14. செய்தித்தாள் தவிர்த்த இதர விளம்பரங்கள் மீதான வரி.
15. சாலை வழி நீர்வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்கள், பயணிகள் மீதான வரி
16. ஊர்தி வரி.
17. விலங்குகள் படகுகள் மீதான வரி.
18. வாணிகம், தொழிலாளர்கள் மீதான தொழில் வரி.
19. பொழுதுபோக்குகள் சூதாட்டங்கள் மீதான வரி.
20. சாலை சுங்க கட்டணம்.

III. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் (சரத்து 269 –ன் படி)

1. வேளாண் நிலம் தவிர்த்த இதர சொத்துகள் மீதான வரி
2. பண்ணை வரி (வேளாண்மை நிலம் தவிர்த்த)
3. இரயில்வே கட்டணங்கள், சரக்கு கட்டணங்கள்.
4. பங்குச் அங்காடி எதிர்கால அங்காடி பரிமாற்றங்களில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
5. செய்தித்தாள் மீதான வரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
6. இரயில், கடல் வழி, வான் வழியாகச் செல்லும் பயணிகள், சரக்குகள் மீதான வரி.
7. மாநிலங்களுக்கிடையேயான பண்டங்கள் விற்பனை, வாங்குதல் மீதான வரி (செய்தித்தாள் தவிர)

IV. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசு வசூலிப்பது, பயன்படுத்துவது (ஷரத்து 268)

வில்லைகட்டணம், சுங்கவரி மருத்தவ வரி கழிவறை மீதான வரி (மத்தியப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளது) இந்திய அரசு விதிக்கும். ஆனால்

(i) யூனியன் பிரதேசங்களில் இந்திய அரசே வசூலிக்கும்.

12-Economics-Tamil-Chapter_9.indd 231 12-01-2023 18:38:16

(ii) மற்ற வகையில், மாநிலங்களே அவற்றை விதிக்கும்.

V. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகள் (பிரிவு 270, 272 –இன் படி)**

1. வேளாண்மை வருவாய் தவிர்த்த இதர வருமான வரி வருவாய்.
2. இந்திய அரசின் மத்தியப் பட்டியலில் உள்ள மத்திய கலால் வரி (மருத்துவ, கழிவறை மீதான வரி தவிர்த்த)

வருமான வரியில் நிறுவனங்கள் மீதான வரி உள்ளடக்கப்படவில்லை.

வருமான வரி மாநகராட்சி வரியை உள்ளடக்கியது அல்ல. நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமான வரி மத்திய அரசுக்கும் மற்றும் மாநிலங்களிடையேயும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

9.12.1. கூட்டரசு நிதியின் கொள்கைகள்

கூட்டரசு நிதியில் கீழ்க்காணும் முக்கியமான கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.

1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. ஒரே மாதிரியான தன்மை
4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்
5. நிதி வசதி
6. ஒருங்கிணைத்தலும் ஒன்றுபடுதலும்
7. செயல்திறன்
8. நிருவாகச் சிக்கனம்
9. பொறுப்பேற்பு

1. சுதந்திரம்

கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசும் தன்னனுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும். அதன் பொருளாவது ஒவ்வொரு அரசும் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், பணத்தைக் கடன் வாங்குவது செலவினை சமாளிப்பது முதலானவை பற்றி தன்னாட்சி பெற்றிருக்க வேண்டும்.

2. சமத்துவம்

சமத்துவ நீதியின் அடிப்படையில், மாநிலங்கள் நியாயமான வருவாய்ப் பங்கினைப் பெறும் வண்ணம் வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

3 ஒரே மாதிரியான தன்மை

கூட்டரசு முறையில், ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்தல்களை செய்ய வேண்டும். ஆனால் வரி செலுத்தும் திறன் ஒவ்வொரு பகுதிக்கும் சமமாக இல்லாததால் இந்தக் கொள்கையைப் பின்பற்றப்பட இயலாது.

4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்

போதுமான வளங்களைப் பெற்றிருத்தல் கொள்கை என்பது மத்திய அரசு, மாநில அரசுகள், அவற்றின் பணிகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்க வேண்டும். போதுமான வளம் என்பது தற்போதைய தேவை எதிர்காலத் தேவை ஆகியவற்றைக் கொண்டு குறிக்கப்படுகிறது. இவை அதிகரித்து வரும் தேவையையும் எதிர்பாராத செலவுகளான போர், வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளை சமாளிக்க நெகிழ்ச்சியுள்ளதாக இருக்க வேண்டும்.

12-Economics-Tamil-Chapter_9.indd 232 12-01-2023 18:38:17

5. நிதி வசதி

கூட்டரசு நிதி முறையில், மத்திய மற்றும் மாநில அரசுகளும் புதிய வரி ஆதாரங்களை தங்களது நிதி தேவைக்கேற்றவாறு பெருக்கிக் கொள்ள முடியும். சுருக்கமாகக் கூறின், அரசின் பெருகிவரும் பொறுப்புகளுக்கேற்றவாறு வளங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

6. ஒருங்கிணைப்பும் ஒன்றுபடுதலும்

அனைத்து நிதிமுறைகளும் முழுவதும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நாட்டின் பல்வேறு அடுக்குகளுக்கிடையே உள்ள நிதி முறைகளில் ஒருங்கிணைப்பு அவசியமாகிறது. அப்பொழுதுதான் கூட்டரசு முறை பிழைக்கும் இவை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு உதவும்.

7. செயல்திறன்

நிதிமுறைகளை ஒன்றாக ஒருங்கிணைத்து, திறமையான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். ஏய்ப்பு, மோசடி ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது. ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவரும் வரி விதிப்பிற்குட்படுத்தக் கூடாது. இரட்டைவரி முறை கூடாது.

8. நிருவாகச் சிக்கனம்

எந்த ஒரு கூட்டரசு முறைக்கும் சிக்கனம் என்பது முக்கியமான பண்பாக உள்ளது. வசூலிக்கும் செலவு குறைவாக இருப்பதோடு அதிக வருவாய் பெற்று அரசின் பிற துறைகளுக்குச் செலவிடுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

9. பொறுப்புணர்வு

நிதிசார் முடிவுகளுக்கு ஒவ்வொரு அரசும் பொறுப்பேற்க வேண்டும். அதாவது மத்திய அரசு நாடாளுமன்றத்திற்கும், மாநில அரசு சட்டசபைக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

9.13 நிதிக்குழுவின் வரலாறு

நிதிக்குழு	ஏற்படுத்தப்பட்ட ஆண்டு	தலைவர்	செயல்படும் காலம்
முதலாவது	1951	K. C. நியோகி	1952–57
இரண்டாவது	1956	K. சந்தானம்	1957–62
மூன்றாவது	1960	A. K. சந்தா	1962–66
நான்காவது	1964	P. V. ராஜ்மன்னார்	1966–69
ஐந்தாவது	1968	மகாவீர் தியாகி	1969–74
ஆறாவது	1972	K. பிரமானந்த ரெட்டி	1974–79
ஏழாவது	1977	J. M. சாலட்	1979–84
எட்டாவது	1983	Y. B. சவான்	1984–89
ஒன்பதாவது	1987	N. K. P. சால்வே	1989–95
பத்தாவது	1992	K. C. பந்த்	1995–2000
பதினொன்று	1998	A. M. குஸ்ரோ	2000–05
பன்னிரெண்டு	2002	C. ரங்கராஜன்	2005–10
பதிமூன்று	2007	Dr.விஜய் L. கேல்கார்	2010–15
பதினான்கு	2013	Dr. Y. V ரெட்டி	2015–20
பதினைந்து	2017	N. K. சிங்	2020–25

- இந்திய அரசியலமைப்பு பிரிவு 280இன் படி நிதிக்குழு பகுதி சட்டப் படியான அமைப்பாகும். இது 1951ஆம் ஆண்டு மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே நிதி உறவை வரையறுப்பதற்கு அமைக்கப்பட்டது.
- நிதிக்குழு மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையேயான சமநிலையின்மையக் குறைப்பதற்கும் (செங்குத்து சமநிலையின்மை), மாநிலங்களுக்கிடையேயான சமமின்மையைக் குறைப்பதற்கும் (படுகிடை சமநிலையின்மை) முயல்கிறது. இது உள்ளுணர்வினை ஊக்குவிக்கிறது.
- நிதிக்குழு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அது அமைக்கப்படுகிறது. இது ஒரு தற்காலிக அமைப்பாகும்.
- 14–ஆவது நிதிக்குழு 2013 இல் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல் 1, 2015 ஆம் ஆண்டு முதல் மார்ச் 2020 ஆம் ஆண்டு வரை செல்லத்தக்கதாகும்.
- 15–ஆவது நிதிக்குழு நவம்பர் 2017 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல் 1, 2020 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்படும்.

9.13.1. இந்திய நிதிக்குழுவின் பணிகள்

பிரிவு 280(3) நிதிக்குழுவின் பணிகள் பற்றி கூறுகிறது. இப்பிரிவின்படி இக்குழு குடியரசுத் தலைவருக்கு பின்வருவனவற்றைப் பரிந்துரை செல்கிறது.

1. மத்திய மற்றும் மாநிலங்களுக்குமிடையே நிகரவரி வருவாய்களை ஒதுக்கீடு செய்து, மாநிலங்களுக்கு அவற்றிற்குரியப் பங்கைப் பகிர்ந்தளித்தல்.
2. மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கவுள்ள மானிய அளவு பற்றியும் (பிரிவு 275 (1)) அம்மானியம் பெறுவதற்கு மாநில அரசின் தகுதி குறித்தும் கொள்கைகளை உறுதி செய்தல்

வரி எவ்வாறு பிரிக்கப்படுகிறது



GST – ன் படி மாநில அரசுக்கு 50% பெறுகிறது.

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு – 280 இன் கீழ் நிதிக்குழு 5 ஆண்டுக்கு ஒருமுறை ஏற்படுத்தப்பட்டு, அது மத்திய மற்றும் மாநில அரசின் வரிப் பகிர்வை பரிந்துரை செய்யும்.
- 15 – ஆவது நிதிக்குழு மத்திய மற்றும் மாநில அரசின் நிதிப்பகிர்வு சார்ந்த பரிந்துரை 2020 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும்.

3. நல்ல திடமான நிதியை நிலைநாட்டும் வண்ணம் இந்திய குடியரசுத் தலைவரால் பார்வைக்குக் கொண்டு செல்ல வேண்டிய விவரங்கள். ஏனைய சிக்கல்ளாகிய கடன் நிவாரணம், மாநிலங்களுக்கு வழங்குகிற இயற்கைச் சீற்றத்திற்கான நிதி, துணை ஆயத்தீர்வைகள் முதலானவை.

9.14 உள்ளாட்சி நிதி

உள்ளாட்சி நிதி எனப்படுவது இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிதி பற்றியதாகும். இந்தியாவில் பல்வேறு வகையான உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன. நம் நாட்டில் தற்போது செயல்பாட்டில் இருக்கக்கூடிய முக்கியமான நான்கு உள்ளாட்சி அமைப்புகள் உள்ளன.

உள்ளாட்சி அமைப்பின் வகைகள்

1. கிராம ஊராட்சி
2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்பு
3. நகராட்சி
4. மாநகராட்சி

12-Economics-Tamil-Chapter_9.indd 234 12-01-2023 18:38:17

1. கிராம ஊராட்சி.

◆ **தோற்றம்:** ஊராட்சியின் எல்லைவரம்பு என்பது ஒரு வருவாய் கிராமமாகும். சில சமயங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சிறிய கிராமங்கள் ஒரு ஊராட்சியின் கீழ் குழுவாக செயல்படுகிறது. இந்தியாவில் உள்ள பெரும்பாலான மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் நிறுவப்பட்டுள்ளது.

◆ **பணிகள்**

அ) ஒரு. ஊராட்சியின் செயல்பாடுகள் குடிமை, பொருளாதாரம் மேலும் பலவற்றை உள்ளடக்கியிருக்கும். இதனால் சிறிய இடர்ப்பாடுகள் ஊராட்சியிலேயே அகற்றப்படும்.

ஆ) சாலைகள், தொடக்கப் பள்ளிகள், கிராம சுகாதார நிலையங்கள் ஆகியவை பஞ்சாயத்துகளால் நிருவகிக்கப்படுகிறது

இ) குடிநீருக்கும் வேளாண்மைக்கும் நீர் வழங்கல் அவற்றின் எல்லைக்குப்பட்ட பொறுப்பாகும், மேலும் பண்ணைப் பராமரிப்பு, அங்காடி, சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றையும் மேலாண்மை செய்கிறது.

கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள்

கிராம ஊராட்சிகளின் வருவாய் ஆதாரங்கள் பின்வருவனவாகும்.

i) பொது சொத்து வரி

ii) நிலம் மீதான வரி

iii) தொழில் வரி

iv) விலங்குகள், வாகனங்கள் ஆகியவை மீதான வரி

பிற வரிகளாக சேவை வரி, நுழைவு வரி, திரையரங்கு வரி, புனித இடங்கள் வரி, திருமணம் மீதான வரி, பிறப்பு, இறப்பு மீதான வரி, உழைப்பாளர் மீதான வரி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. உண்மையில், மாநில அரசின் அனுமதியுடன் மட்டுமே கிராம ஊராட்சிகளால் வரி விதிக்கப்படுகிறது. இந்த அமைப்பு வரி விதிப்பதற்கு சில வரம்புகள் உள்ளன.

2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்புகள்:



◆ தோற்றம்: அனைத்து கிராமப் பகுதிகளையும் உள்ளடக்கி மாவட்ட வாரியங்கள் மற்றும் மாவட்ட அமைப்புகள் மாவட்ட அளவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மாவட்ட வாரியத்தின் வரம்பெல்லை வருவாய் மாவட்டம் ஆகும்.

◆ பணிகள்: தமிழ்நாட்டில், மாவட்ட அமைப்பு என்பது மாவட்ட அளவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மாவட்ட வாரியத்தின் பணிகளாக கிராம ஊராட்சிகளுக்கு உதவி செய்வது, வளர்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது முதலானவையாகும்.

மாவட்ட வாரியங்களின் வருவாய் ஆதாரங்கள்

i) மாநில அரசிடமிருந்து பெறும் மானிய உதவி

ii) நிலத் தீர்வைகள்

iii) சுங்கக் கட்டணம்

iv) சொத்திலிருந்து பெறுகிற வருமானம், மாநில அரசுகளிடமிருந்து பெறக்கூடிய கடன்கள்

v) வளரச்சிப் பணிகளுக்காக மத்திய அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கான மானியங்கள்

vi) பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிற வருமானம்

vii) மாநில அரசு ஏற்றுக்கொள்கிற சொத்துவரியும் பிற வரிகளும்

3. நகராட்சி அமைப்புகள்

◆ **தோற்றமும் பணிகளும்:** நகரப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுகிற இவ்வமைப்புகள் அப்பகுதியல் உள்ள துப்புரவு, பொது சுகாதாரம், சாலைகள், விளக்குகள், குடிநீர் வழங்கல், சாலைகளைத் தூய்மைப்படுத்துதல், பூங்காக்களைப் பராமரித்தல், சுகாதார நிலையங்கள், கால்நடை மருத்துவமனைகள், பாதாள சாக்கடை வசதி, தொடக்கக் கல்வி வசதி, பொருட்காட்சி, கண்காட்சிகளை அமைத்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. ஆயினும், அனைத்துப் பணிகளும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் செயல்படுகின்றது.

நகராட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்கள்

i) சொத்து மீதான வரிகள்

ii) பொருட்கள் மீதான வரிகள், குறிப்பாக நுழைவு வரி.

iii) தனிப்பட்ட வரிகள், தொழில்வரி, வாணிகம், வேலைவாய்ப்பு ஆகியவற்றின் மீதான வரிகள்

iv) வாகனங்கள், விலங்குகள் ஆகியவை மீதான வரிகள்

v) திரையரங்கு வரி

vi) மாநில அரசிடமிருந்து பெறுகிற மானிய உதவி

4. மாநகராட்சி

◆ தோற்றமும் பணிகளும்: நகராட்சியை ஒப்பிட்டு பார்க்கும்போது, இவை பரந்த அதிகாரங்களையும், அதிக சுதந்திரத்தையும் பெற்றுள்ளன. குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, தெரு விளக்குகள், சேரிகளைப் பண்படுத்துதல், நகர் திட்டமிடல் ஆகிய பணிகளைச் செய்கிறது. நகர மக்கள் தொகை அதிகரித்து வருகிற நிலையில் மநாகராட்சியின் பணிகளும் பெருகிக் கொண்டே வருகிறது.

மாநகராட்சியின் வருவாய் ஆதாரங்கள்

1. சொத்து மீதான வரி
2. வாகனங்கள் விலங்குகள் ஆகியவை மீதான வரி
3. வாணிகம், வேலைவாய்ப்பு மீதான வரி

4. திரையரங்கு வரி, காட்சி வரி

5. நகரத்திற்குள் கொண்டு வரும் பண்டங்கள் மீதான வரிகள்

6. விளம்பரங்கள் மீதான வரிகள்

7. நுழைவு வரி, முனைம வரி

சட்டத்திற்குட்பட்டு தங்கள் விருப்பப்படி அதிகஅளவாகவோ குறைந்த அளவு விகிதமகவோ ஒரு நியாயமான அளவில் வரி விதிக்கவும் மாற்றியமைக்கவும் சுதந்திரம் உள்ளது.

9.15 நிதிக் கொள்கை

தற்கால அரசுப் பேரினப் பொருளாதாரக் கொள்கையின் முக்கியமான கருவியாக நிதிக் கொள்கை உள்ளது. கீன்சின் 'புதிய பொருளாதாரம்' மற்றும் உலக பெருமந்தம் ஆகியவற்றால் நிதிக் கொள்கை முக்கியத்துவம் பெறுகிறது.

FYVH0

9.15.1. நிதிக் கொள்கையின் பொருள்

பொதுவான கண்ணோட்டத்தில் நிதிக் கொள்கை என்பது உற்பத்தி, வேலைவாய்ப்பு, சேமிப்பு, முதலீடு ஆகிய பேரினப் பொருளாதார மாறிகளைப் பாதிக்கும் வரவு செலவு திட்ட மதிப்பாகும்.

9.15.2. வரைவிலக்கணங்கள்

"நிதிக் கொள்கை எனப்படுவது நாட்டு வருமானத்தின் மீது விரும்பத்தகுந்த விளைவை ஏற்படுத்தவும், விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்கவும் அரசின் வருவாய் செலவினங்கள் ஆகியவை பற்றிய கொள்கையாகும்." ஆர்த்தர் ஸ்மிதீஸ்.

" நிதிக் கொள்கை என்பது நாட்டின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்தப்படும் பொது நிதி அல்லது செலவு, வரி, பெறுதல்கள் மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த கொள்கையாகும்". – பியுளெர்

9.15.3. நிதிக் கருவிகள்

நிதிக் கொள்கை சில நிதிக் கருவிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அரசின் செலவுகள், வரிவிதிப்பு கடன் பெறுதல் ஆகியவை நிதிக் கருவிகள் ஆகும்.

i) **வரிவிதித்தல்:** வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரிகள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இருக்கும். வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தைக் குறைக்கிறது. எனவே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும். மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

ii) **பொதுச் செலவு:** பொதுச் செலவு பணியாளர்களின் கூலியையும் சம்பளங்களையும் அதிகரிக்கும்போது பண்டங்கள், பணிகளுக்கான மொத்தத் தேவை உயருகிறது. ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கத்தையும் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த உதவுகிறது.

iii) **பொதுக் கடன்:** அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. அது பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மக்களுக்கு மாற்றப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_9.indd 237 12-01-2023 18:38:18



9.15.4 நிதிக்கொள்கையின் நோக்கங்கள்

நிதிக்கொள்கையின் நோக்கங்கள்

1. முழு வேலைவாய்ப்பு
2. விலை நிலைத்தன்மை
3. பொருளாதார வளர்ச்சி
4. சமமானப் பகிர்வு
5. நாணய மாற்று வீத சமநிலை
6. மூலதன உருவாக்கம்
7. சமவட்டார வளர்ச்சி

நிதிக் கொள்கை பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு உதவுகின்றது.

1. முழு வேலைவாய்ப்பு

முழு வேலைவாய்ப்பு என்பது வளர்ந்த நாடுகள், வளர்ந்து வரும் நாடுகள் ஆகியவற்றின் முக்கியமான நோக்கமாகும்.சமூக மேல் முதலீட்டில் பொதுச் செலவை மேற்கொள்வதால் வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். இந்தியாவில் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்களாகிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் முதலான திட்டங்கள் வேலைவாய்ப்புப் பெருக்கத்தை உருவாக்கும் நோக்கமாக கொண்டுள்ளது,

2. விலை நிலைத்தன்மை

விலை நிலையற்றதன்மை மொத்த தேவை, அளிப்புக்கிடையே சமமின்மையை ஏற்படுத்துகிறது, பண்டங்களுக்கான தேவை அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படுகிறது. பொதுச் செலவு மூலம் உண்மை உற்பத்தி அதிகரித்து தேவையும் அளவுக்கு அதிகமாக அதிகரித்தால் பொதுச் செலவைக் குறைப்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். தேவைக்கு மேல் உள்ள தேவையை வரிவிதிப்பதன் மூலம் தனிமனிதர் செலவு செய்யவதைக் குறைக்கலாம். வரிக்குறைப்பு மற்றும்

பொதுச்செலவு மூலம் மந்தத்தை எதிர்கொள்ளலாம். மந்தகாலத்தில் அரசுச் செலவை அதிகரித்து வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளும்.

3. பொருளாதார வளர்ச்சி:

ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்க நிதிக் கொள்கை பயன்படுகிறது. வரியானது முதலீட்டை ஊக்குவிக்கும் கருவியாகப் பயன்படுகிறது. வரி விடுமுறை, வரி தள்ளுபடிகள் புதிய தொழற்சாலைகள் மூலம் முதலீட்டைத் தூண்டுகிறது. பொதுத்துறை முதலீடு அதிகரிக்கப்படும்போது தனியார் துறையினரால் நிரப்ப முடியாத இடைவெளிியை நிரப்புகிறது. வரிகள் மூலம் வளங்களைத் திரட்டுவதில் பற்றாக்குறை ஏற்பட்டால் அரசு உள்நாட்டுக் கடன் அயல்நாட்டு கடன் ஆகியவை மூலம் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி அளிக்கிறது.

4. சமமானப் பகிர்வு:

வளர்வீத வரி முறை பணக்காரர் ஏழை ஆகியோருக்கிடையே உள்ள இடைவெளியைக் குறைக்க உதவுகிறது. வளர்வீதத்தில் பொதுச்செலவு அதிகரிப்பதன் மூலம் நலத்திட்டங்களாகிய இலவச கல்வி, பள்ளி குழந்தைகளுக்கான மதிய உணவு மானியங்கள் முதலானவை மூலம் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிறது.

5. நாணய மாற்று வீத சமநிலை

நாணய மாற்றுவீதத்தின் நகர்விற்கு ஏற்ப பன்னாட்டு வாணிகத்தின் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. வரிச் சலுகைகளும், உதவித் தொகைகளும் வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்கிறது. அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு சுங்க வரி விதிப்பதன் மூலம் இறக்குமதி செலவைக் குறைக்கிறது. கச்சாப்பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்று இறக்குமதி வரியைக் குறைப்பதன் மூலம் செலவைக் குறைத்து ஏற்றுமதியில் நிறுவனங்கள் போட்டியிட உதவுகிறது.

6. மூலதன உருவாக்கம்

விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத்திரட்சி மிக முக்கியமானதாகிறது. வரிச் சுமை குறைப்பானது, செலவிடத்தக்க வருமானத்தை அதிகரிக்கிறது; சேமிப்பு மூலம் மூலதனதிரட்சியை ஏற்படுகிறது. அரசானது மின்சாரம், போக்குவரத்து ஆகிய அடிப்படைத் துறைகளில் செலவிடும்போது அது தனியார் முதலீட்டைத் தூண்டுகிறது.

7. சம வட்டார வளர்ச்சி

பின்தங்கியப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு நிதி ஊக்கம் வழங்கும் போது வட்டார வேறுபாடு குறைகிறது. பின்தங்கியப் பகுதியில் தொழிற் பேட்டைகள் துவங்க பொதுச் செலவினை மேற்கொண்டால் அப்பகுதியின் வளர்ச்சி தூண்டப்படுகிறது.

தொகுப்புரை

மத்திய, மாநில, உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் வருவாய் பற்றியும் செலவினங்களைப் பற்றியும் ஆராயும் அறிவியல் பொதுநிதியாகும். தற்காலத்தில் இந்தப் பாடமானது பொது வருவாய், பொதுச் செலவு, பொதுக் கடன், நிதி நிருவாகம், நிதிக் கொள்கை ஆகிய ஐந்து முக்கியமான பகுதிகளைக் கொண்டுள்ளது. எனவே பொதுநிதியானது வளர்ந்த, பின்தங்கிய நாடுகளில் முக்கியமான பங்காற்றுகிறது. முன்னேறிய நாடுகளில் தேவைக் குறைவினாலோ அதிக தேவையினாலோ நிலையற்ற தன்மை என்னும் சிக்கல்கள் காணப்படும். பின்தங்கிய நாடுகளில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நிதிக் கொள்கை முக்கியமான கருவியாக உள்ளது.

நிதிக் கொள்கை உலகப் பொருளாதார பெருமந்தத்திற்குப்பின் மிகவும் பிரபலமானது. மந்தத்திலிருந்து விடுபட அரசின் தலையீடு தேவையென J.M.கீன்சு வலியுறுத்தினார். அரசின் செலவிற்கும், தனியாரின் முதலீடு, வட்டி வீதம், நுகர்வு, வருமான வளர்ச்சி ஆகியவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

கலைச்சொற்கள்

- **வரி :** அரசுக்கு மக்கள் எந்த வித பிரதிபலன் எதிர்பார்ப்பும் இன்றி செலுத்த வேண்டியது
- **பிரதிபலன் :** வரி செலுத்தியமைக்காக எதிர்பார்க்கும் நன்மை
- **விகிதாச்சார வரி :** வரியின் அடிப்படையைக் கருத்தில் கொள்ளாது அனைவருக்கும் ஒரே வரி வீதம்
- **வளர்வீத வரி :** வருமானம் உயர உயர வரி வீதம் உயர்தல்
- **தேய்வீத வரி :** வருமானம் உயர உயர வரி வீதம் குறைதல்
- **உள்நாட்டுப் பொதுக்கடன் :** உள்நாட்டு மக்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும் அரசு கடன் பெறுதல்
- **வெளிநாட்டுப் பொதுக்கடன் :** வெளிநாடு பன்னாட்டு அமைப்புகளில் கடன் பெறுதல்
- **பொதுநிதிக் கொள்கை :** அரசின் வரவு செலவு ஆகியவை சார்ந்த கொள்கை
- **வரவு செலவு பற்றாக்குறை :** அரசின் எதிர்ப்பார்க்கப்பட்ட வருவாய்க்கும் திட்டமிடப்பட்ட செலவுக்கும் உள்ள வேறுபாடு
- **வரவு செலவுத் திட்டம் :** அரசின் ஓர் ஆண்டிற்கான வருவாய், செலவு ஆகியவை சார்ந்த நிதிநிலை அறிக்கை
- **கூட்டமைப்பு நிதி :** மத்திய மற்றும் மாநில அரசுகளுக்குமிடையே உள்ள நிதி ஒதுக்கீடு பற்றியது
- **உள்ளாட்சி நிதி :** இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிதி சார்ந்தது

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையைத் தெரிவு செய்க:

1. தற்கால அரசு எனப்படுவது
   அ) தலையிடா அரசு
   ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
   இ) நலம் பேணும் அரசு
   ஈ) காவல் அரசு

2. கீழ்வருவனவற்றுள் தனியார் நிதியின் பண்புகளில் இல்லாதது
   அ) வருமானம் – செலவு சமம்
   ஆ) இரகசியம்
   இ) வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமித்தல்
   ஈ) விளம்பரப்படுத்துதல்

3. வரி கீழ்க்காணும் குணங்களைக் கொண்டது
   அ) கட்டாயத் தன்மை
   ஆ) பிரதிபலன் கருதாமை
   இ) வரி மறுப்பு ஒரு குற்றம்
   ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்

4. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?
   அ) சமத்துவம் விதி
   ஆ) நிச்சயத்தன்மை விதி
   இ) வசதி விதி
   ஈ) எளிமை விதி

5. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.
   i. மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை
   ii. அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசுப் பட்டியலில் இருந்து மாநில அரசுப் பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது
   அ) i மட்டும்
   ஆ) i i மட்டும்
   இ) இரண்டும்
   ஈ) ஏதுமில்லை

6. GST இதற்கு சமம்?
   அ) விற்பனை வரி
   ஆ) தொழிற்குழும வரி
   இ)வருமான வரி
   ஈ) உள்ளாட்சி வரி

7. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை
   அ) சமத்துவம்
   ஆ) வசதி
   இ) நிச்சயத்தன்மை
   ஈ) நாட்டுப் பற்று

8. கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி?
   அ) கலால் வரி
   ஆ) வருமான வரி
   இ) சுங்க வரி
   ஈ) சேவை வரி

9. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?
   அ) தனிமனிதர் வருமான வரி
   ஆ) நிறுவன வரி
   இ) வேளாண்மை வருமான வரி
   ஈ) கலால் வரி

10. அரசின் வருவாய் வரவு (Revenue Receipts) கணக்கில் சேராதது
   அ) வட்டி
   ஆ) இலாபமும் இலாப ஈவும்
   இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்
   ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்

12-Economics-Tamil-Chapter_9.indd 241 12-01-2023 18:38:19

11. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வரவையைவிட (Revenue receipts) அதிகமாக இருந்தால், அது

அ) வருவாய்ப் பற்றாக்குறை
ஆ) நிதிப்பற்றாக்குறை
இ) வரவு செலவுப் பற்றாக்குறை
ஈ) அடிப்படைப் பற்றாக்குறை (Primary deficit)

12. மொத்தச் செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால், அது

அ) நிதிப்பற்றாக்குறை
ஆ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை
இ) முதன்மைப் பற்றாக்குறை
ஈ) வருவாய்ப் பற்றாக்குறை

13. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது

அ) பொருளாதார முன்னேற்றம்
ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம்
ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பதன் பொருளாவது

அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்
ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக்கணக்கு வருவாயை விட அதிகம்
இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம்
ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

15. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை

அ) கடனை மாற்றுதல்
ஆ) மூழ்கும் நிதி
இ) பகுதியாகச் செலுத்துதல்
ஈ) இவை அனைத்தும்

16. பொதுக்கடனை மாற்றுதல் என்பது

அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்
ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்
இ) குறுகியகாலப் பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட காலப் பத்திரங்களைத் தருதல்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

17. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் சொல்லான (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்

அ) சிறிய பை
ஆ) பெரிய பெட்டி
இ) காகிதங்கள் அடங்கிய பை
ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

18. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?

அ) வருவாய் பற்றாக்குறை
ஆ) வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை
இ) நிதிப் பற்றாக்குறை
ஈ) முதன்மைப் பற்றாக்குறை

19. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?

அ) இந்திய அரசின் நிதியினை
ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்
ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

20. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி

(i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது
(ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்

அ) I மட்டும்
ஆ) ii மட்டும்
இ) இரண்டும்
ஈ) இரண்டும் இல்லை

12-Economics-Tamil-Chapter_9.indd 242 12-01-2023 18:38:19

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
இ	ஈ	ஈ	ஈ	ஆ	அ	ஆ	ஆ	இ	ஈ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	அ	அ	இ	ஈ	ஆ	அ	இ	ஆ	இ

பகுதி – ஆ

இரண்டு மதிப்பெண் வினாக்கள்

21. "பொது நிதி " வரையறு.
22. "பொது வருவாய்" என்றால் என்ன?
23. "வரி" , "கட்டணம்" வேறுபடுத்து.
24. "சுழிய அடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக.
25. நேர்முக வரிக்கு இரு எடுத்துக்காட்டு தருக.
26. GST யின் கூறுகள் யாவை?
27. "பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது?

பகுதி – இ

மூன்று மதிப்பெண் வினாக்கள்

28. வரி விதிப்பு விதிகளை விவரிக்க.
29. தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.
30. தற்கால அரசின் பணிகள் யாவை?
31. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.
32. நேர்முக மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.
33. முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?
34. பொதுக்கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.

பகுதி – ஈ

ஐந்து மதிப்பெண் வினாக்கள்

35. பொது நிதியின் எல்லைகளை விளக்குக.
36. மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?
37. கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.
38. நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.
39. கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.
40. வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பலவகைப் பற்றாக்குறைகளை விளக்குக.
41. அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

செயல்முறை

நீங்கள் வாங்கும் பொருள்களின் மீது விதிக்கப்படுகிற GST எவ்வளவு என்பதைப் பார்வையிட்டு அதிலிருந்து பல்வேறு வகையான பண்டங்கள் மற்றும் பணிகளை பட்டியலிடுக.

பார்வை நூல்கள்

1. Public Finance – Dr.H.L.Bhatia – Vikas Publishers-2018
2. Public Finance – R.K.lekhi – Joginder Sing – Kalyani Publications-2010
3. Public Finance – AmbarGhose, Chandra Ghosh – PHI Publications -2014
4. Public FinanceTheroy and Practice – Dr. S.K.Sing – S.Chand Publication -2010

இணையதளங்கள்

https://edurev.in/courses/10460_Public-Finance-Notes--Videos.
https://eclass.uoa.gr/modules/document/file.php/ECON123/Lectures/Lecture%2001%20Introduction.pdf

12-Economics-Tamil-Chapter_9.indd 244 12-01-2023 18:38:19

இயல் 10

சுற்றுச்சூழல் பொருளியல்

"சுற்றுச்சூழல் சிக்கல் உண்மையாகவே சமுதாயச் சிக்கல்... அவைகளின் துவக்கத்திற்கு மக்களே காரணமாகவும் முடிவில் பாதிக்கப்படுவதும் மக்களே".

– **சர் எட்மண்டு ஹிலரி.**

புரிதலின் நோக்கங்கள்

1 பொருளாதாரமும் சுற்றுச்சூழலும் எவ்வாறு ஒன்றொருக்கொன்று தொடர்புள்ளவை என்பதை அறிவது,

2 பல்வகை சுற்றுச்சூழல் மாசுகளையும் அதன் விளைவுகளையும் புரிந்துகொள்வது, மற்றும்

3 நீடித்த நிலைத்த வளர்ச்சி எனும் கருத்தினை அறிந்து கொள்வது.

10.1 அறிமுகம்

சுற்றுச்சூழல் பொருளியல் என்பது மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இயற்கைச்சூழலுக்கும் இடையோன தொடர்பினைப் பற்றிப் படிக்கும் ஒரு இயல் ஆகும். இயற்கை வளங்களை உயர்திறனுடன் பங்கீடு செய்வது தொடர்பான பொருளியலின் ஒரு பகுதியே சுற்றுச்சூழல் பொருளியல். பொருளாதார நடடிக்கைகளுக்கான நேரடி மதிப்பினையும், இடுபொருட்களையும் சுற்றுச்சூழல் வழங்குவதால் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவையாகும்.

இயற்கை வள மதிப்பீடு, பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு, கழிவுகள் மேலாண்மை மறுசுழற்சி, நீடித்த வளர்ச்சி ஆகியவற்றினை உள்ளடக்கியது சுற்றுச்சூழல் பொருளியல். எந்த வகையான வளங்களாக இருந்தாலும் அவை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தினால்தான் அவற்றிலிருந்து கிடைக்கும் பயன் சிறந்ததாக இருக்கும். அவ்வகையில், இயற்கை வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி பயன்களைப் பெறுவதைப் பற்றி அறியும் ஒரு இயலாகும்.

சுற்றுச்சூழல் பொருளியலின் முக்கியமான குறிக்கோள் இயற்கை வளங்களை மிகச்சிறந்த முறையில் பங்கீடு செய்வற்கான கருவிகளையும், கொள்கைகளையும் கண்டறிந்து அவ்வளங்களை நோக்கி அங்காடியினை திரும்ப வைப்பது ஆகும்.



10.2 சுற்றுச்சூழல் என்பதன் பொருள்

சுற்றியிருப்பவைகள் என்ற பொருள்படும் "Environia" எனும் பிரஞ்ச் சொல்லிருந்து தோன்றியது சுற்றுச்சூழல். சுற்றுச்சூழல் என்பது, நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள் அல்லது உயிர் தொகுப்பு ஆகியவைகளை குறிப்பிடுவது ஆகும். மேலும் இது, இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகளை உள்ளடக்கிய உயிர்தொகுப்பு அல்லது உயிர்சூழல் சமூக அமைப்பினை தீர்மானிப்பதும், உயிர்வாழ்வதும் ஆகும்.

சுற்றுச் சூழல் பொருளாதாரம் என்பதன் பொருள்

சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மதிப்புகளின் அடிப்படையில் தேர்வு செய்வதால் இது பொருளியியலில் வேறுபட்ட பிரிவாகும். செலவுகளையும் நன்மைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு பொருளாதார நடவடிக்கைகளையும் சுற்றுச் சூழலையும் சமன்செய்வதே இதன் நோக்கமாகும்.

சுருங்கக் கூறினால் சுற்றுப்புறச் சூழலின் சிக்கல்கள், கொள்கைகளின் நிதித்தாக்கத்தைப் பற்றி ஆராயும் பொருளியலின் ஒரு பகுதியே சுற்றுச்சூழல் பொருளாதாரம் எனப்படும்.

10.3 சூழல் அமைப்பு (Ecosystem)

ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் உயிரினங்களும் உயிரற்றவைககளும் (தட்பவெப்ப நிலை, பூமி, மண், வளிமண்டலம், பருவநிலை) ஆகியவற்றிற்கிடையோன தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது. சூழல் அமைப்பு உயிர்க்கோளத்தின் அடிப்படையாகும். மேலும் அதுவே பூமியின் நலத்தைத் தீர்மானிப்பதாகும். சுருக்கமாகக் கூறின் உயிர்ச் சமூகமும், உயிரற்றவைகளும் கொண்டுள்ள தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_10.indd 246 12-01-2023 18:16:24

10.4 பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்குமான இணைப்பு

சமூக, அரசியல், அறவியல், தத்துவ, பொருளாதார அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கின்றன என்பது நம்மில் பலருக்கும் தெரிந்திருக்கும். மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால், அவனது வாழ்க்கை முறையைச் சுற்றுச்சூழலே பெருமளவுக்கு தீர்மானிக்கிறது. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ், R.V. அய்யர்ஸ்" ஆகியோர் பொருள்சார் சமநிலை அணுகுமுறை" (Material Balance Approach) வகுத்தளித்துள்ளனர்.



வரைபடம் 10.1



பொருள்சார் சமநிலை அணுகுமுறை விளக்கப்படம்

இந்த மாதிரியில் மொத்தப் பொருளியியல் செயல்பாடுகள் உள்ளிடு பொருள்கள், வெளியிடு ஆகியவற்றிற்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது என்று கருதப்பட்டுள்ளது. உள்ளிடுகளில் உள்ள திறன் சுற்றுப்புறச் சூழலிலிருந்துப் பெறப்படுகின்றது. பொருளாதாரத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் உள்ள தொடர்பு வரைபடங்கள் மூலம் விளக்கப்படுகின்றது.

சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான இணைப்பினை நாம் அறிவியல் விதிகொண்டு விளங்கிக்கொள்ளலாம். "உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும்" (What goes in must come out) என்பதனை வலியுறுத்துகிறது இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல்விதி (First law of Thermodyanmics). இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்பினை விளக்குவதுதான் மேற்சொன்ன பொருள்சார் சமநிலை அணுகுமுறையாகும். சுழல் விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல் அனைத்துவிதமான உற்பத்திக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும். இயற்கை சூழலிருந்து எடுக்கப்படும் மூலப்பண்டங்கள் உள்வருவதும், அவை உற்பத்தி செய்யப்பட்டு நுகர்ச்சித் துறைக்கு செல்வதும், உற்பத்தி நுகர்ச்சித்துறையின் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்பப்பட்டு மீளவும் பொருட்களாக்கப்படுவதும் நடக்கின்றன. நுகர்ச்சியிலிருந்தும், உற்பத்தியிலிருந்தும் வெளியேறும் இறுதிக்கழிவுகள் இயற்கை சூழலிலேயே கலக்கவிடப்டுகின்றன. ஆனால், முழுமையான மறுசுழற்சியும் முறையற்ற இறுதிக்கழிவுகள் வெளியேற்றமும் இயற்கைச் சூழலை பெரிதும் பாதிக்கும். மீண்டும் அங்கிருந்து உற்பத்திக்காக நாம் எடுக்கும் மூலப்பொருட்களின் தரம் குறையும், உற்பத்தி செலவு அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

$$M = G-(R_C + R_P) + (R^r_P + R^r_c) = R^d_p + R^d_c$$

இயற்கை உலகிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களும் சக்தியும் (M)	=	பொருளாதார நடவடிக்கைகள் உற்பத்தியில் பணிகளும் (G) – நுகர்ச்சியிலும் உற்பத்தியிலும் ஏற்படும் கழிவுகள் $(R_c + R_P)$ + மறு சுழற்சி செய்யப்பட்ட உற்பத்தியும் நுகர்ச்சிக் கழிவுகளும் $(R^r_P + R^r_c)$	=	இயற்கை உலகில் இறுதியாக விடப்படும் உற்பத்தியும் நுகர்ச்சிக் கழிவுகளும் $(R^d_p + R^d_c)$

இது சரியா? சுற்றுச் சூழல் சுழற்சி செய்யக் கூடிய, சுழற்சி செய்யமுடியாத வளங்களை வழங்கினாலும் கழிவுகளைக் கொட்டக்கூடிய இடமாகவும் உள்ளது. நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் ஒருவருக்கொருவர் தொடர்புடன் இருந்தாலும் வளங்களுக்காக இயற்கையைச் சார்ந்திருப்பதால் சுற்றுச்சூழலுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் தங்கள் கழிவுகளை இயற்கையில் கொட்டுகின்றனர். இயற்கைக்கு எல்லாக் கழிவுகளையும் செரிக்கும் தன்மை இருந்தாலும் இத்தன்மை வரையறைக்குட்பட்டது. எதற்கும் ஒரு அளவு உள்ளது. உலகத்தின் கழிவு தாங்கும் சக்தி முழுஅளவிற்கு மேல் உள்ளதால் அதனால் நிறைய வகைக் கழிவுகளைச் சுத்திகரிக்க முடியவில்லை. உலகமும் ஒருநாள் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.

12-Economics-Tamil-Chapter_10.indd 248 12-01-2023 18:16:24

www.tntextbooks.in

பொருளாதாரம் – சுற்றுச் சூழல் இணைத்தொடர்புகள்.

சுற்றுச்சூழல் R
(மூலப்பண்டங்கள்)

↓

உற்பத்தித் துறை
$R = F + W_1$

↓

நுகர்வுத் துறை
$F = W_2$

$R = W_1 + W_2$
உள்ளீடு = வெளியீடு



W1, W2 = உற்பத்தி மற்றும் நுகர்ச்சித் துறைகளின் கழிவுகள்
F = இறுதிப்பண்டங்கள்

10.5 சுற்றுச்சூழல் பண்டங்கள் (Environmental Goods)

சுற்றுச்சூழல் பண்டங்கள் என்பவை அங்காடியிடா பொருட்களான தூய்மை காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், பசுமை, வழிகள், கடற்கரை முதலானவையாகும். தனியார் சொத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவராலும் பயன்படுத்தும் இப்பொருட்களை இலாபக்குறிக்கோள்காரர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது மனித நல்வாழ்வுக்கான அடிப்படையாகும்.

10.6 சுற்றுச்சூழல் தரம் (Environmental Quality)

சுற்றுச்சூழல் தரம் என்பது சுற்றுச்சூழல் பண்புகளின் தொகுப்பாகும். இன்னும் தெளிவாகக் கூறுவதென்றால் அப்பண்புகள் ஒவ்வொன்றின் அளவும் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற தொகுப்பின் குறியீட்டெண் (Index Number) ஆகும். இத்தரம் பொதுவாகவும் நிர்ணயிக்கப்படலாம் அல்லது குறிப்பிட்ட பகுதிக்கான சூழ்நிலையின் அடிப்படையிலும்

12-Economics-Tamil-Chapter_10.indd 249 12-01-2023 18:16:25

நிர்ணயிக்கப்படலாம். மனிதன் மீதும் இதர உயிரினங்களின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துவதால் சுற்றுச்சூழல் தரம் (நிர்ணயம்) என்பது மிகக் கவனத்துடன் கையாளப்படவேண்டிய ஒன்றாகிறது.

முதலாளித்துவ செயல்முறைகளினால் சுற்றுச் சூழல் தரம் தொடர்ந்து சரிந்து கொண்டே வருகின்றது. சுற்றுச்சூழல் என்பது ஒரு பொதுப் பொருளாகும். அப்பொருளின் தன்மைகளாக நாம் பின்வருவனற்றைக் குறிப்பிடலாம்: இப்பொருள் அனைவராலும் நுகரப்படும். எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் அதைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கி வைக்க முடியாது. ஒருவர் அப்பொருளைப் பயன்படுத்துவதால், மற்றவர்களுக்குக் கிடைக்கும் அளவு குறைந்து போகாது. மேலும், அவற்றைப் பயன்படுத்துவதற்கான இறுதிநிலைச் செலவு கிட்டத்தட்ட சுழியமாகும். இத்தகைய வளங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. இயற்கை வளங்களின் குறைவும் தேசிய வருமானத்தில் இயற்கை வளங்களின் பங்களிப்பும் தற்பொழுதுள்ள தேசிய வருவாய்க் கணக்கீட்டில் அளவிடப்படுவதில்லை.

புற விளைவுகளும் (Externalities) சுற்றுச்சூழலும்

அறிமுகம்

புற விளைவு அல்லது மிகை வழிதல் விளைவு (Spill Over Effect) என்பது ஒருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தி, சம்பந்தமில்லாத மூன்றாம் தரப்பிலான மற்றொருவருவடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தியினைப் பாதகமாக பாதிப்பதாகும் பண்டங்கள், பணிகளை உற்பத்தி அல்லது நுகர்வு செய்யும் போது சரியான இழப்பீடு வழங்கப்படாத மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் பாதிப்புகளையே புற விளைவுகள் என்கிறோம்



10.6.1 புற விளைவுகளின் பொருள்

புற விளைவுகள் அங்காடிகளுக்கு வெளியே நடைபெறுகின்றது. உற்பத்தி அல்லது நுகர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்களை நேரடியாகப் பாதிப்பதில்லை. எனவே இவைகள் சிதறிய விளைவுகள் (Spill Over effects) எனப்படுகின்றது.

புற விளைவுகள் – இலக்கணம்

"தனிமனிதர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடடிவக்கைகள் காரணமாக, அந்நடவடிக்கைளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள

12-Economics-Tamil-Chapter_10.indd 250 12-01-2023 18:16:25

www.tntextbooks.in

மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்".

புறவிளைவுகள் நன்மை தருவதாகவோ பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ அமையலாம்.

நேர்கணிய நுகர்ச்சிப் புறவிளைவு (Positive Consumption Externality): ஒருவருடைய நுகர்ச்சிச் சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச் சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்துவது அகும். எ.கா: ஒரு நகரில் உள்ள சிலர் ஏற்பாடு செய்கின்ற தனியார் பாதுகாப்பு அப்பகுதியில் குடியிருக்கும் மற்றவர்களுக்கும் செலவில்லாமல் பாதுகாப்பை ஏற்படுத்துகின்றது.

எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு (Negative Consumption Externality): ஒருவருடைய நுகர்ச்சிச் சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச் சார்பில் பாதகமான விளைவினை ஏற்படுத்துவது எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு என்கிறோம். ஒருவர் தனது வீட்டில் ஒலிபெருக்கி மூலம் பாடலை அதிக சத்தத்தில் பாடவிடுகிறார். அது அவருக்குப் பயன்பாட்டினைத் தருகிறது. ஆனால், அருகிலுள்ள வீட்டில் உள்ள மற்றொருவருக்கு அந்த ஒலி மாசு தொந்திரவினை ஏற்படுத்துகிறது எனில், அது எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு எனப்படுகிறது. அதனால் இரண்டாமவருக்கு பயன்பாட்டு இழப்பு ஏற்படுகிறது.

நேர்கணிய உற்பத்தி புறவிளைவு (Positive Production Externality): ஒருவருடைய உற்பத்திச் சார்பு மற்றொருவருடைய உற்பத்தி சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அதை நேர்கணிய உற்பத்திப் புறவிளைவு என்கிறோம். எடுத்துக்காட்டாக, ஒருவர் தேனீ வளர்ப்புத் தொழிலை செய்து வருமானம் ஈட்டி வருகிறார். அருகிலுள்ள மற்றொரு உழவர் தனது பண்ணையில் பழமரங்களை வளர்த்து வருகிறார். தேனீக்களினால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையின் காரணமாக இரண்டாமவருக்கு அதிகமான பழவிளைச்சலையும், வருமானத்தையும் பெறுவது நேர்கணிய உற்பத்திப் புறவிளைவு என்கிறோம்.

எதிர்மறை உற்பத்திப் புறவிளைவு (Negative Production Externality):

எதிர்மறை உற்பத்திப் புறவிளைவிற்கான எடுத்துக்காட்டுகள்

எதிர்மறை உற்பத்திப் புறவிளைவுகள் தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்படும் மாசுகளினால் மற்றவர்களுக்கு ஏற்படும் செலவைக் குறிக்கும்.

இத்தகைய செலவுகள் குறிப்பிடத்தக்கவையா? அவற்றைத் துல்லியமாக அளவிட முடியுமா? என்பவற்றை எதிர்மறை உற்பத்திப் புறவிளைவுகளைப் பற்றி ஆராய்கின்றபோது கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

காற்றுமாசுபடுதல் தொழிற்சாலைகளிலிருந்து

உரத்தொழிற்சாலையின் மாசுகள்

ஒலிமாசுகள்

தொழிற்சாலைக்கழிவுகள்

கெட்டுப்போன மீன் கழிவுகள்

மீதேன் வாயு வெளியீடு

12-Economics-Tamil-Chapter_10.indd 251 12-01-2023 18:16:25

ஒருவருடைய உற்பத்திச் சார்பு, அடுத்தவருடைய உற்பத்திச் சார்பினில் பாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அது எதிர்மறைப் புறவிளைவு என்கிறோம். எடுத்துக்காட்டாக ஒரு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்றுமாசுபாட்டினால், அருகிலுள்ள உழவரின் நெல்விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இது எதிர்மறை உற்பத்திப் புறவிளைவு எனப்படுகிறது.

10.7 மாசுபடுதல்

தொழிற்சாலைகளின் புகை, திடக் கழிவுகள் ஆகியன காற்றையும் தண்ணீரையும் மாசுபடுத்துகின்றன. தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் தண்ணீர் மாசுபடுகின்றது. ஒன்றுமறியாத பொதுமக்கள் பாதிப்பு அடைகின்றனர். இத்தகைய பாதிப்புக்களுக்கு இழப்பீடுகளும் கிடையாது.

சுற்றுச்சூழல் மாசுபடுதல் பல விதங்களில் நடைபெறுகிறது. மாசுபடுதலின் பொருள், வகைகள் காரணங்கள் மற்றும் விளைவுகளை இங்குக் கற்போம்.

மாசுபடுதல் என்பதன் பொருள்

இயற்கைச் சூழலில் தீங்கு விளைவிக்கக்கூடிய அழுக்குகள் சேருவதையே மாசுபடுதல் என்கிறோம்.

மாசுபடுதலின் வகைகள்

மாசுபடுதலை நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன:

1. காற்றுமாசுபடுதல்
2. நீர் மாசுபடுதல்
3. ஒலி மாசுபடுதல்
4. மண் மாசுபடுதல்

காற்று மாசுபடுதல்

10.7.1 காற்று மாசுபடுதலின் வரைவிலக்கணம்

"சுற்றுச்சூழல் சொத்து, தாவரங்கள், உயிரிகள், மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறு விளைக்குமளவுக்குக் காற்றுமண்டலத்தில் திட, திரவ அல்லது காற்று வடிவப் பொருள் கலந்திருப்பதையே காற்று மாசுபடுதல்" என காற்று மாசுத் தடுப்பு, கட்டுப்படுத்தல் சட்டம் 1981 வரையறுக்கிறது.

காற்று மாசுபடுதலின் வகைகள்

உட்புறக் காற்று மாசு

மனிதர்களின் வாழிடத்திற்குள் தீங்குவிளைவிக்கக்கூடிய மாசுகள், காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம். எடுத்துக்காட்டாக திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்கின்றபோது உட்புறக் காற்று மாசு அடைகின்றது.

வெளிப்புறக் காற்று மாசு

காற்றுமண்டலத்தில் திட, திரவ, அல்லது காற்று வடிவ மாசுகள் கலந்திருப்பதே வெளிப்புற காற்றுமாசு எனப்படுகிறது. தொழிற்சாலைகளாலும் மோட்டார் ஊர்திகளாலும் வெளிப்புறக்காற்று மாசு அடைகின்றது.

12-Economics-Tamil-Chapter_10.indd 252 12-01-2023 18:16:25

காற்று மாசுபடுதலின் காரணங்கள்

1. ஊர்திகள் வெளியிடும் புகை

ஊர்திகள் கரியமில வாயு கலந்தப் புகையை வெளியிடுவதால் வளிமண்டலத்தில் ஆக்ஸிஜன் (உயிர்வளி வாயு) அளவு குறைந்து சுற்றுசூழல் மாசடைகிறது.

2. புதை படிவ எரிபொருளில் மின்சாரத்திட்டங்கள் (Fossil Fuel)

மின்சாரத் திட்டங்களில் பயன்படுத்தப்படும் பெட்ரோல், டீசல் ஆகியவை சல்பர்டை ஆக்சைடை வெளியிட்டு சுற்றுசூழல் காற்றுமண்டலத்தில் மாசடைந்த கழிவுகளைக் கலக்கிறது. இது அமில மழை ஏற்படக் காரணமாகிறது.

3. தொழிற்சாலை வெளியேற்றும் புகை

தொழிற்சாலைகள் பயன்படுத்தும் பெரிய இயந்திரங்கள் வெளியிடும் புகை காற்று மண்டலத்தை மாசாக்குகிறது.

4. கட்டடக் கட்டுமானமும் வேளாண்மை நடவடிக்கைகளும்

பழைய கட்டடங்களை இடிப்பதாலும் புதியக் கட்டுமானத்தில் சிமெண்ட் பயன்படுத்தும் பொழுதும் காற்றில் தூசுப் பொருள்கள் கலக்கின்றன. வேளாண்மையில் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தும் பொழுது காற்று மாசுபடுகிறது.

5. இயற்கைக் காரணங்கள்

பூமி தன்னைத்தானே மாசுபடுத்திக் கொள்கிறது. எரிமலை, காட்டுத்தீ, தூசுப்புயல் போன்றவையும் காற்றில் மாசு கலக்க வழி செய்கின்றன.

6. வீட்டு நடவடிக்கைகள்

சமையலுக்குப் பயன்படும் விறகு, கொசுக் கொல்லி, எலிக் கொல்லி, விளக்குகள், நறுமணப் பொருள்கள் ஆகியவையும் காற்றில் நச்சு கலக்க காரணமாகின்றன.

காற்று மாசுபடுதலின் விளைவுகள்

1. சுவாசக்கோளாறும் இதயக்கோளாறும்

சுவாசிக்கும் தரத்தில் இல்லாத காற்று மூச்சுத்திணறலையும் இதயக் கோளாறையும், புற்று நோயையும் உருவாக்குகிறது. குறிப்பாக குழந்தைகள் ஆஸ்துமா, நிமோனியா ஆகிய நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

2. புவி வெப்பமடைதல் (Global Warming)

காற்று மாசு வளிமண்டல வெப்ப அளவை உயர்த்துகிறது. இதனால் துருவப்பகுதி பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயருகிறது. இதனால் நிலப்பகுதி கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது. உயிரினங்கள் இடம்மாறவும், அழியவும் செய்கின்றன.

3. அமில மழை (Acid Rain)

சுற்றுச் சூழலில் நைட்ரஜனும் சல்பர் ஆக்சைடுகளும் கலப்பதால் அமில மழை பெய்யும் ஆபத்து உருவாகிறது. அமில மழையால், மனிதகுலம், விலங்குகள், பறவைகள், செடி கொடிப் பயிர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றன.

4. தூர்ந்துபோதல் (Eutrophication)

காற்றில் அதிக அளவில் கலந்துள்ள நைட்ரஜன் முதலான நச்சுக்காற்று தாவரங்கள், விலங்கினங்கள், மீன்கள் ஆகியவற்றைப் பெருமளவில் பாதிக்கின்றன.

5. வன விலங்குகள் எண்ணிக்கை குறைதல்

காற்றில் கலந்திருக்கும் நச்சுத்தன்மை கொண்ட வேதிப்பொருளால் வனவிலங்குகள் இடம்பெயர்கின்றன. இதனால் அவற்றின் எண்ணிக்கை குறைகின்றது.

6. ஓசோன் மண்டலம் பலவீனமடைதல்

வளிமண்டல மாசுவால் ஓசோன்படலத்தைக் குறைக்கிறது. ஓசோன்படலம் சூரியனின் புற ஊதாக்கதிர்த் தாக்கத்திலிருந்து மக்களைக் காக்கிறது. இது குறைவதால் புற ஊதாக் கதிர்கள் நம்மைத் தாக்கும் அபாயம் ஏற்படும்.

7. மனித இன சுகாதாரம்

காற்று மாசுவினால் உலகளவில் நோய்களும் இறப்புகளும் ஏற்படுகின்றன. காற்று மாசுவினால் இதய நோய்கள், வாதம், நுரையீரல் சம்மந்தப்பட்ட ஆஸ்துமா முதலான நோய்கள், புற்றுநோய், செரிமான மண்டல பாதிப்பு ஆகியவைகள் ஏற்படுகின்றன.

உலக அளவில் ஒவ்வொரு நாளும் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் 93 விழுக்காட்டினர் (1.8 பில்லியன்) மாசுபட்ட காற்றை சுவாசிப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மோசமான இடர்ப்பாடுக்கு உள்ளாகின்றனர்.

– உலக சுகாதார நிறுவனம் WHO

காற்றுமாசுபடுதலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

1. மக்கள் குடியிருக்காத இடங்களில் ஆலைகளை அமைத்தல்.
2. ஆலைகளின் புகைப்போக்கித் தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல்.
3. அதிகமான செடிகளையும், மரங்களையும் நடுதல்.
4. மரபுசாரா எரிபொருள் ஆற்றல்களைப் (Biogas, CNG, LPG) பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
5. பொதுப்போக்குவரத்து சாதனங்களைப் பயன்படுத்துதல்.

10.7.2 நீர் மாசுபடுதல்

இலக்கணம்

உயிரினங்களுக்கு ஆபத்தான, உயிரினங்களின் உடல் நலனைக் கெடுக்கிற பொருள்களையோ, சக்திகளையோ மனிதன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நீர் நிலைகளுக்குள் செலுத்துதல் நீர் மாசுபடுத்துதல் ஆகும்.

நீர் மாசுகளின் வகைகள்

i) நில மேற்பரப்பு நீர் மாசுபடுதல்

நிலத்தின் மேற்பரப்பில் இருக்கின்ற நீர் நிலைகள் ஆறுகள், குளங்கள், கடல் முதலானவை மாசுபடுவது மேல் நிலை நீர் மாசு ஆகும். ஆபத்து விளைவிக்கும் பொருட்களை நீர்நிலைகளில் கொட்டுவதால் நீர் மாசு அடைகின்றது.

ii) நிலத்தடி நீர் மாசுபடுதல்

நிலத்துக்கு அடியில் உள்ள நீர் மாசு. நிலத்தடி வாயு, எண்ணெய்ப் பொருள்கள், வேதியல் பொருள்கள் ஆகியவை நிலத்தடி

12-Economics-Tamil-Chapter_10.indd 254 12-01-2023 18:16:26

நீரைச் சென்று சேரலாம். அதுமட்டுமல்லாமல் நிலத்துக்கு மேலே கெட்டுப்போன திரவங்களும், சாக்கடைகளும் நிலத்தடி நீரின் தன்மையைக் கெடுக்கலாம்.

iii) நுண்ணுயிரியல் மாசுபடுதல்

வைரஸ், பாக்டீரியா முதலானவையும் நீரின் தன்மையைக் கெடுக்கலாம். இந்த நீரை பயன்படுத்தும் போது அது நீர்வாழ் உயிரினங்களையும், மனிதர்களையும் பாதிக்கின்றது.

iv) ஆக்ஸிஜன் குறைபாடு மாசுபடுதல்

நீரில் உள்ள ஆக்ஸிஜன் குறைவதால், அல்லது இல்லாமல் போவதால், நன்மையான நுண்ணுயிர் கிருமிகள் இறந்து ஆபத்தான நுண்ணுயிர்க்கிருமிகள் வளரலாம். இந்த ஆபத்தான நுண்ணுயிர்க் கிருமிகள் அம்மோனியா, சல்பைடு ஆகிய நச்சுப் பொருட்களை வெளியிடுவதால் மனிதகுலம், விலங்குகள், சுற்றுச் சூழல் பாதிப்படைகின்றன.

நீர் மாசுபடுதலுக்கான காரணங்கள்

1. கழிவு நீரும் தேவையற்ற நீரும் வெளியேற்றப் படுதல்

பல இடங்களில் இருந்து வருகின்ற சாக்கடைத் தண்ணீர், கழிவு நீர் குப்பைகள், வேளாண்மைக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றன. இத்தகைய கழிவுகளில் உள்ள நச்சுப்பண்டங்கள் தண்ணீரை மாசுபடுத்தி நச்சுத்தன்மை உள்ளதாக மாற்றுகின்றன

2. திடக் கழிவுகள் குவித்தல்

திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்துவிடுமாறு விட்டுவிடுதல்.

3. ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்

மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் மாசுப்பொருட்களான, ஆஸ்பெஸ்ட்டாஸ், காரீயம், பாதரசம், மசகு எண்ணெய், பெட்ரோலியக் கழிவுகள் முதலானவை ஆலைக்கழிவுகளில் அதிகம் உள்ளன.

4. எண்ணெய் சிந்துதல்

கப்பல்களின் குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களின் எண்ணெய் கடல்நீரை மாசுபடுத்துகின்றது. கடல்நீரில் எண்ணெய் கலக்காமல் படலமாகத் தண்ணீரில் படர்கின்றது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

5. அமில மழை

காற்று மாசுவால் அமில மழை ஏற்பட்டு நீர்மாசு ஏற்படுத்துகின்றது. காற்று மாசுவில் உள்ள அமிலத் துகள்கள் தண்ணீர் ஆவியுடன் கலந்து அமில மழையை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

6. புவி வெப்பமடைதல்

புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் வெப்ப நிலை அதிகரித்து நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கின்றது.

7. நீர்நிலைகளில் பிராண வாயு குறைதல் (Eutrophication)

நீர்நிலைகள் மாசுபடும் போது தண்ணீரில் அதிக அளவு நைட்ரஜனும் குறைந்த அளவு பிராணவாயுவும் இருக்கும். இதனால் நீர்நிலைகளில் பாசிபடர்ந்து காணப்படும். பிராண வாயுக் குறைபாட்டால் மீன்களும், நீர்வாழ் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.

நீர் மாசுவின் விளைவுகள்

மனித இனம், விலங்குகள், தாவரங்கள் என அனைத்தும் நீர் மாசுவால் பாதிக்கப்படுகின்றது. வேளண்மையில் நீர் மாசுவால் பயிரும் நிலத்தின் வளத்தன்மையும் பாதிக்கப்படுகின்றன. கடல் வாழ் உயிரினங்கள் கடல் நீர் மாசுவினால் பாதிக்கப்படுகின்றன. இத்தகைய பாதிப்புக்களின் விளைவுகள் எத்தைகைய வேதியியல் பண்டங்கள் கலக்கின்றன மற்றும் மாசுகளின் அடர்த்தி ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றன. நகர்ப்புறங்களில் உள்ள நீர் நிலைகள் குப்பைகள், கழிவு நீர், உற்பத்தி நிறுவனங்கள் மருத்துவ மையங்கள், அங்காடிகள் ஆகியவற்றின் கழிவுகளைக் கொட்டுவதாலும் மாசு அடைகின்றன.

i. **நீர்வாழ் உயிரினங்களின் இறப்பு:** நீர் மாசுவினால் நீர்நிலைகளில் உள்ள நுண்ணுயிரிகள் அழிக்கப்படுகின்றன இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களான மீன், நண்டு, கடல்பறவைகள், டால்பின் முதலானவை இறந்து கடற்கரைகளில் ஒதுங்குகின்றன.

ii. **இயற்கையான உணவுப் பாதை இடைநிறுத்தப்படுகின்றது.** காரீயம், காட்மியம் ஆகிய மாசுக்காரணிகள் கலந்த உணவை சிறிய பறவைகள், அவற்றை உண்ட மீன்கள், அவற்றை உண்ட மனிதர்கள் என அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

iii. **நோய்கள் பரவுதல்:** சுத்திகரிக்கப்படாத அல்லது சரியாக சுத்திகரிக்கப்படாத கழிவுகள் நீர்நிலைகளில் கலக்கும் போது வாழ்வியல் நிலைகளைப் பேரளவு பாதிக்கின்றன. திறந்த வெளியில் மலம் கழித்தல், திடக் கழிவுகளைக் கொட்டுதல், சாக்கடை நீரைக் கலத்தல் ஆகியவற்றின் மூலமாக தண்ணீர் மூலம் பரவும் நோய்களான ஹெபாடிட்டிஸ் A, டைபாய்டு, மலேரியா, வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை, டெங்கு காய்ச்சல், வைரல் காய்ச்சல் மற்றும் புழுத்தொற்றுகள் ஏற்படுகின்றன.

iv. **இயற்கை அமைப்புகளை அழித்தல்** (Destruction of eco – Systems) இயற்கை அமைப்புகள் அதிக அளவில் நீர் மாசுவினால் பாதிக்கப்படுகின்றன. இவ்வாறு இயற்கை அமைப்புகள் பாதிக்கப்படுகின்ற போது மனித இனத்திற்கு அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

நீர் மாசுவினைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்வுகள்

1. ஒருங்கிணைந்த நீர்நிருவாக நடவடிக்கையை மேற்கொள்ளல்.
2. தேங்கு நீர்க் குளங்களும் முறையான வடிகால் வசதியும் ஏற்படுத்துதல்.
3. வடிநீர்க் கால்வாய்களை பராமரித்தல்.
4. கழிவு நீரையும் சாக்கடை நீரையும் சுத்தப்படுத்தும் அமைப்புகளை நிறுவுதல்.
5. தொடர்ந்து நீர் ஆதாரங்களையும் கழிவு நீரையும் கண்காணித்தல்.
6. சட்ட விரோதமாக நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

10.7.3 ஒலி மாசு (Noise Pollution)

வரைவிலக்கணம்

"மனித உடல் நலத்திற்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் ஒவ்வாத அளவுக்கு அதிகமான ஒலியை எழுப்புவது ஒலி மாசுவாகும். இது

12-Economics-Tamil-Chapter_10.indd 256 12-01-2023 18:16:26

அதிகமாக தொழிற்சாலைகளால் உருவாக்கப்படலாம். வானூர்திகள், போக்குவரத்து ஊர்திகள், புகை வண்டிகள் மற்றும் திறந்த வெளி கட்டுமானங்கள் ஆகியவற்றிலும் காணப்படலாம்".

– ஜெரி. A. நாதர்சன், ரிச்சர்டு. E. பெர்க் (Jerry A. Nathanson and Richard E. Berg 2018)

ஒலி மாசுவின் வகைகள்

i. **வளிமண்டல ஒலி:** இடி இடித்தாலும் மின்னல் வெட்டுவதும், இதுபோன்ற மின் பாதிப்புகளால் வளிமண்டலத்தில் ஒலி மாசு ஏற்படலாம்.

ii. **தொழிற்சாலைகளில் ஒலி:** தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் இயங்கும் போது ஒலி ஏற்படுகின்றது. ஒலி அதிக அளவில் இரைச்சலாக இருக்கும் போது தேவையற்றதாகின்றது. கனரகத் தொழிற்சாலைகளான கப்பல் கட்டுதல், இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள். இரைச்சல் காரணமாக கேட்கும் திறன் இழத்தல் (Noise Induced Hearning Loss) உடன் தொடர்புடையது.

iii. **மனிதனால் தோற்றுவிக்கப்படுவது :** கப்பல் ஆகாய விமானங்கள் இயக்குதல், பூமிக்கடியில் ஆய்வு செய்தல், விசைப்படகுகள், ஆழ்துளைகள் ஏற்படுத்துதல் போன்றவைகளால் ஒலிமாசு அதிகரிக்கின்றது.

ஒலி மாசுவிற்கான காரணங்கள்

i. **மோசமான நகர்ப்புறத்திட்டமிடல்:** முறையற்ற நகர்ப்புறத்திட்டம் நகர்ப்புறப் பயணிகளுக்குத் அதிக அளவு ஒலிமாசுவை ஏற்படுத்துகின்றது.

ii. **மோட்டார் ஊர்திகளின் இரைச்சல்:** நகர்ப்புறங்களில் மோட்டார் ஊர்திகள் ஏற்படுத்தும் இரைச்சல் காரணமாக மக்கள் தற்காலிக காதுகேளா நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

iii. **வெடிகள் :** சில நிகழ்ச்சிகளில் அதிகமான அளவு பட்டாசுகள், வெடிகள் வெடிக்கப்படுகின்றன. பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் அளவிற்கு இவை ஒலியை ஏற்படுத்துகின்றன. சில சமயங்களில் சிறுவர்களுக்கும் முதியவர்களுக்கும் செவிட்டுத் தன்மையை ஏற்படுத்துகின்றன.

iv. **தொழிற்சாலை இயந்திரங்கள்:** தொடர்ந்து இயந்திரங்கள் இயக்கப்படும் போது ஏற்படுகின்ற இரைச்சல் கடின துளைக் கருவிகளை இயக்கும் போது ஏற்படுகின்ற இரைச்சல் ஆகியவை தொழிலாளர்களுக்குத் தாங்க முடியாத தொந்திரவாக அமைகின்றது.

ஒலி மாசுவின் விளைவுகள்

அ. **கேட்கும் திறன் இழப்பு:** தொடர்ந்து அதிக அளவு இரைச்சலில் இருந்தால் ஒலியின் காரணமாகக் கேட்கும் திறன் பாதிக்கப்படும். வயதானோருக்கு தொழில் ரீதியான இரைச்சலால் செவியின் கேட்கும் திறன் குறையும்.

ஆ. **உளரீதியான, மனரீதியான பாதிப்புகள்:** தேவையில்லா இரைச்சல் உள, மன நலன்களைப் பாதிக்கின்றது. இதன் காரணமாக, மிகை அழுத்தம், கோபம், மன அழுத்தம் முதலானவை ஏற்படுகின்றது.

இ. இதய பாதிப்புகள்: அதிக அளவு இரைச்சலில் இருப்பது இருதய நோய்களுக்கும் அதிக இரத்த அழுத்தத்திற்கும் வழிவகுக்கும்.

ஈ. விலங்கினங்களுக்கு தீமை ஏற்படுத்தும்: அதிக அளவு இரைச்சல் விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றிற்கு அதிக அளவு தீங்கிழைத்து மரணம் நிகழவும் காரணமாக அமைகின்றது.

உ. காட்டு உயிரினங்களுக்குத் தீமை ஏற்படுத்தும்: அதிக அளவு இரைச்சல் காட்டு உயிரனங்களுக்குச் சுரப்பிகளின் சமமின்மை, அதிக அழுத்தம், பதற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது.

ஒலி மாசுவினைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வு முறைகள்

1. ஒலித் தடைகளை ஏற்படுத்துதல்.
2. தரைப்போக்குவரத்திற்கு புதிய சாலைகள் ஏற்படுத்துதல்.
3. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு.
4. வேலை செய்யும் இடங்களில் ஒலித் தடுப்பானை நிறுவுதல்.
5. பெரிய ஊர்தி செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல்.
6. ஒலி பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்.

10.7.4 நில மாசு

"கழிவுகளைக் கொட்டுவதால் நிலம் தரக்குறைவானதாக மாறும். சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட, திரவ, வாயுப் பண்டங்கள் நிலத்தின் தன்மையைக் கெடுத்துவிடுதல் நிலமாசு ஆகும்".

– சுற்றுச்சூழல் செயல்பாடுகளின் பாதுகாப்பு விதி 1997. (Protection of the Environment Operations Act 1997)

நில மாசுவின் வகைகள்

(i) திடக்கழிவு

இது தாள்கள், நெகிழிப் பொருள்கள், கண்ணாடி பாட்டில்கள், உணவுப்பண்டங்கள், பயன் இழந்த ஊர்தி, பழுதடைந்த மின்னனுப் பொருள்கள், நகராட்சிக் கழிவுகள் மருத்துவமனைக் கழிவுகள் ஆகியவை இதில் அடங்கும்.

(ii) பூச்சிக் கொல்லி மருந்து, வேதி உரங்கள்

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கொண்டுவந்த வேதியியல் பண்டங்கள் இன்று புழுப்பூச்சிகளை மட்டுமன்றி மனிதர்களையும் கொல்லும் சக்தி வாய்ந்தவை. மேலும் அவை நிலத்தையும் மாசுபடுத்துகின்றன.

(iii) காடுகளை அழித்தல்

பல வழிகளில் மனிதன் மரங்களைப் பயன்படுத்துகிறான். மரங்கள் கரியமில வாயுவைக் உள்ளிழுத்துக்கொண்டு ஆக்ஸிஜனை (Oxygen) வெளியிடுகின்றன. மரங்கள் வெட்டப்படும் போது ஆக்ஸிஜன் (Oxygen) அளவு குறைகிறது. மரங்கள் வெட்டப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் நிலம் மாசடைகின்றது.

12-Economics-Tamil-Chapter_10.indd 258 12-01-2023 18:16:27

நில மாசுவிற்கான காரணங்கள்

1. காடுகளை அழித்தல்

காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கியமான காரணியாக விளங்குகின்றது. அவ்வாறு மாற்றப்படும் நிலங்களை எத்தகைய நடவடிக்கைகள் மூலமாகவும் செழிப்பான நிலமாக மாற்ற முடியாது.

2. வேளாண்மை நடவடிக்கைகள்

மக்கள் தொகை அதிகரிப்பாலும் கால்நடை அதிகரிப்பாலும் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்துக்கொண்டே செல்ல வேண்டியுள்ளது. அதற்காக உழவர்கள் அதிக நச்சுத் தன்மை கொண்ட உரம், பூச்சி மருந்து ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். இந்த வேதிப்பொருட்களை அளவிற்கதிகமாகப் பயன்படுத்துகின்றபோது நிலம் நச்சுத் தன்மை அடைகின்றது.

3. சுரங்கத் தொழில்கள்

கனிமங்களை வெட்டி எடுக்கும் போதும் சுரங்கங்கள் அமைக்கப்படும் போதும் பூமிக்கு அடியில் நில அமைப்புகள் தோன்றுகின்றன. இதன் மூலம் நிலம் மாசடைகின்றது.

4. மண்ணில் புதைத்தல்

மக்களின் வாழ்க்கைமுறை மாற்றத்தால் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ஆண்டிலும் டன் கணக்கில் குப்பையை உற்பத்தி செய்கின்றது. நெகிழி, காகிதம், பழைய துணிகள், மரக்கழிவுகள், ஆகியன மருத்துவமனைக் கழிவுகள் குவிக்கப்படுகின்றதன. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிலத்தில் புதைக்கப்பட்டு நிலமாசு அதிகரிக்கக் காரணமாக உள்ளது.

5. தொழில்மயமாதல்

நுகர்ச்சி அதிகரிப்பால் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. இதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. ஆராய்ச்சிகளின் விளைவாக புதிய உரங்களும் வேதிப்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்து அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. அதன் காரணமாகவும் நிலமாசு அதிகரிக்கின்றது.

6. கட்டுமானப் பணிகள்

மக்கள் தொகை வளர்ச்சி, நகர்ப்புறமாதல் ஆகியன காரணமாக கட்டடங்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. அதனால், மணல், மரம், கம்பி, சிமெண்ட், செங்கல், நெகிழிப் பண்டங்கள், ஆகியவற்றின் கழிவுகள் குப்பைகளாகப் புறநகர்ப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன. இதன் காரணமாக நிலம் மாசடைகின்றது.

7. அணுமின் கழிவுகள்

அணுமின் நிலையங்களிலுள்ள கழிவுகளான கதிர்வீச்சுப் பண்டங்கள், நச்சுத் தன்மை கொண்ட தீமை விளைவிக்கும் வேதிப்பண்டங்கள் மனித நலத்தைப் பாதிக்கின்றது. ₹இப்பாதிப்பைத் தவிர்க்க இவை பூமிக்கடியில் பாதுகாப்பறைகளில் வைக்கப்படுகின்றன. இதன் மூலமும் நிலம் மாசுபடக் கூடும்.

நில மாசுவின் விளைவுகள்

1. மண் மாசுபடுதல்

நில மாசுபாட்டில் மிகவும் மோசமானது நிலத்தின் மேல்பகுதியான மண் மாசுபடுதலாகும். வேதி உரங்கள் பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றின் பயன்பாடே இதற்கு முக்கிய காரணமாகும். மண்ணின் வளமை குறைவதுடன் வேளாண்மை நிலமும் மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலமும் பாதிக்கப்படுகிறன. பூச்சிக்

கொல்லி மருந்துகள் பூச்சிகளை மட்டுமின்றி மனித இனத்தையும் அழிக்கின்றன.

2. உடல் நலக் கேடு

இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி விளைவிக்கும் உணவுப் பொருட்களை உண்பதால் சுவாசக்கோளாறுகள், தோல் புற்றுநோய் முதலான உடல் நல பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

3. காற்று மாசுபாடு

கழிவுப் பொருட்களை நிலத்துக்குள் புதைப்பது அல்லது எரியூட்டுவது காரணமாக காற்று மாசுபட வாய்ப்பு ஏற்படுகிறது. அளவிற்கு அதிகமான நச்சுப் பண்டங்கள் வளிமண்டலத்தில் கலப்பதால் காற்று, நச்சுக்காற்றாக மாறுகின்றது. நச்சுக்காற்றை சுவாசிப்பதன் மூலம் சுவாச நோய்கள் உண்டாகின்றன.

4. விலங்குகள் மீதான பாதிப்பு

கடந்த சில பத்து ஆண்டுக் காலத்தில் விலங்கினங்கள் பெரிதளவு பாதிக்கப்பட்டுள்ளது. அவற்றின் இருப்பிடத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நிலத்தின் மீது மனிதர்களின் தொடர் நடவடிக்கைகளால் நிலம் மாசுபட்டு வனவாழ் உயிரினங்களை மிகத்தொலைவில் நகரச் செய்துள்ளது. வாழ்வதற்கு ஏற்ற நிலை இல்லாததால் பெரும்பாலான வனவாழ் உயிரினங்கள் அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டன. சில உயிரினங்கள் அழிந்து விட்டன.

நில மாசுபடுதலின் தீர்வுகள்

1. மக்களுக்கு குறைத்தல், மறுசுழற்சி, மறுபயன்படுத்துதல் பற்றி உரிய அறிவினைப் புகட்டுவது.
2. இயற்கையாகவே அழிந்து, மண்ணுக்கு சேதம் விளைவிக்காத பொருள்களைப் பயன்படுத்துவது
3. பூச்சிகொல்லி மருந்துகளைக் குறைந்த அளவில் பயன்படுத்துதல்.
4. பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு மண் வளம் காத்தல். பயிர்ச்சுழற்சி முறை மண்ணின் வளத்தைக் கூட்டும் என்கிறார்கள்.
5. தேவையில்லாத குப்பைகளை எரித்தோ புதைத்தோ அப்புறப்படுத்துதல்.
6. மிகக் குறைவான நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்துதல்.

10.8 புவி வெப்பமயமாதல்

நிலத்தின் மேற்பரப்பில் (நிலமும் நீரும்) தற்பொழுது ஏற்பட்டுள்ள தட்ப வெப்ப நிலை அதிகரிப்பு புவி வெப்பமயமதால் என்கிறோம். உலகின் சராசரி வெப்பநிலை கடந்த 100 ஆண்டுகளில் 0.75°C (1.4°F) கூடியுள்ளதாகச்

12-Economics-Tamil-Chapter_10.indd 260 12-01-2023 18:16:27

சொல்லப்படுகிறது. இதில் 3இல் 2 பங்கு 1975 ஆம் ஆண்டுக்கு பின் வந்த குறுகிய காலத்திலேயே கூடியதாகும். கரியமில வாயு, மீத்தேன், குளோரோபுளோரோ கார்பன் (Chloro fluoro Carbon) நைட்ரஸ் ஆக்ஸைடு (Nitrous Oxide) முதலான பசுமைக் குடில் வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதை பசுமைக்குடில் விளைவு என்பர். இவற்றில் கரியமில வாயு புவி வெப்பம் அதிகரிக்க 50% காரணமாக உள்ளது. உயிரிப்பண்டங்கள், விறகு ஆகியவற்றை எரிப்பதாலும் காடுகள், மரங்களை அழிப்பதாலும் கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கின்றது. கடந்த காலங்களில் புவி வெப்பமடைதல் இயற்கைக் காரணங்களால் நிகழ்ந்தது. ஆனால் தற்போது இது மனித நடவடிக்கைகளால் தோற்றுவிக்கப்படுகின்றது.

புவி வெப்பமடைதல் காரணமாக வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் சுற்றுச் சூழல் அமைப்பு ஆகியவை அதிக அளவில் பாதிக்கப்படுகின்றது. குறைந்த மழையளவு, அதிக வெப்பம் காரணமாக அதிக பூச்சி தாக்குதல், களைகள் வளர்தல் மூலம் வேளாண்மை பாதிக்கப்படுகின்றது. அதிக வெப்பம் காரணமாக நோய் பரப்பும் கொசு முதலான உயிரினங்கள் பெருகி மலேரியா, டெங்கு, என்செபாலிட்டிஸ் (Encephalitis) மஞ்சள் காய்ச்சல் முதலான நோய்களைப் பரப்புகின்றன.

புவியின் சராசரி வெப்ப நிலை அதிக அளவு அதிகரிப்பு மழை பெய்யும் போக்கையும், தட்பவெப்ப நிலைகளையும் மாற்றி சுற்றுப்புறச் சூழலில் சமநிலையற்ற தன்மையை ஏற்படுத்தும்.

10.9 காலநிலை மாற்றம்

வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே காலநிலை மாற்றம் எனப்படும். தொழிற்புரட்சியில் தொடங்கி மனித நடவடிக்கைகளால் வழி மண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவு தொழில்புரட்சிக்கு முன் 280 ppm என்ற அளவிலிருந்து 2016 ஆம் ஆண்டு 402 ppm ஆக, அதாவது 40 விழுக்காடு அளவிற்கு புவி வெப்பத்தை அதிகரித்துள்ளது.

கடற்கரை நீரின் வெப்ப அதிகரிப்பு, உயர்ந்த வெப்பநிலை, மழைபெய்யும் காலங்களில் மாற்றம், அதிக வேகத்துடன் அடிக்கடி தோன்றும் புயல் ஆகியவற்றை உலகின் பல பகுதிகளிலும் உணரத் தொடங்கியுள்ளார்கள். கடல் மட்டமும் வெப்பமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

10.10 அமில மழை (Acid Rain)



காற்று மாசுவின் விளைவே அமில மழை ஆகும். தொழிற்சாலைகள், ஊர்திகள் கொதிப்பான்கள் முதலானவை வெளியிடும்

வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ள நீர்த்துகள்களோடு இணையும் போது அமில மழை ஏற்படுகின்றது. இந்த வாயுக்கள் நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு, சல்பர் டிரை ஆக்ஸைடு, ஆகியவை தண்ணீரோடு கலக்கின்ற போது சல்பரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் ஆகியவையாக மாறுகின்றன. இந்நிகழ்வுகள் எரிமலை வெடித்துச் சிதறும் போதும் எரிகுழம்புகளைக் கக்கும்போதும் இயற்கையிலேயும் ஏற்படும். தாவரங்கள், நீர்வாழ் உயிரனங்கள், கட்டமைப்புகள் அதிக அளவில் அமில மழையால் பாதிக்கப்படுகின்றன.

10.11 E–கழிவுகள் (E – Waste)

செய்தி, தொழில்நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன. இவை குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள் (Air conditioners), கைபேசிகள், கணினிகள் முதலான பெருமளவில் வீடுகளில் பயன்படுத்தும் மின்னனுச் சாதனங்களை உள்ளடக்கியவையாகும்.

தொலைசாதனம், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கம்பியில்லா கருவிகள் முதலான வீட்டு பயன்பாட்டு பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும்போதோ E கழிவுகள் தோன்றும்.

E – கழிவுகளின் ஆதாரங்கள்

வீடு
- கணினி
- தொலைக்காட்சிப்பெட்டி
- வானொலி
- கைபேசி
- துவைக்கும் இயந்திரம்
- நுண்அலை அடுப்பு
- CD பிளேயர்
- மின் விசிறி
- எலெக்ட்ரிக் அயர்ன்

மருத்துவமனை
- கணினி
- மானிட்டர்கள்
- ECG கருவி
- நுண்ணோக்கி
- இங்குபேட்டர்கள்

அரசாங்கம்
- கணினி
- தொலை நகல் கருவி
- நகல் இயந்திரம்
- ஸ்கேனர்
- மின்விசிறி
- குழல்விளக்குகள்
- காற்றுச்சீரமைப்பிகள்

(உணவுக்கூடங்கள் தொழிற்சாலைகள், தனியார் துறை)
- கணினி
- கொதிகலன்கள்
- அரைப்பான்
- சிக்னல்
- ஜெனரேட்டர்கள்
- இங்குபேட்டர்கள்

12-Economics-Tamil-Chapter_10.indd 262 12-01-2023 18:16:27

திடக்கழிவுகள் (Solid Wastes)

மனித நடவடிக்கைகளில் பயனில்லாத தேவையற்ற பொருட்களைக் கழிப்பதே திடக் கழிவுகள் ஆகும். அவை திடப் பொருட்களாகவோ, பகுதி திடப்பொருட்களாகவோ திரவமாகவோ இருக்கும். வீட்டுக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், இறந்த விலங்கு, கட்டுமானத்துறைக் கழிவுகள், சாம்பல், வேளாண்மை கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், ஆகியன திடக் கழிவின் வகைகளாகும். இக்குப்பைகள் தெருக்களிலிருந்தும் பொது இடங்களிலிருந்தும் சரியான நேரங்களில் அப்புறப்படுத்தாமல் இருந்தால் கடுமையான உடல்நல கேடுகளை ஏற்படுத்தும்.

10.12 நீடித்த நிலையான மேம்பாடு: (Sustainable Development)

இப்போதுள்ள தலைமுறையினருக்கு மட்டுமின்றி, எதிர்காலத் தலைமுறையினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும். மேல்தட்டு மக்களின் ஆடம்பர விருப்பங்கள் மட்டுமல்லாது ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான, உணவு, துப்புரவு, உடல்நலம், கல்வி முதலானவற்றையும் அளிக்க வேண்டும். தற்பொழுதுள்ள தலைமுறை, முன்னோர் விட்டுச்சென்ற இயற்கை வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்தாமல் பின்வரும் தலைமுறையினருக்கு விட்டுச் செல்ல வேண்டும். முன் தலைமுறைக் கிடைத்த அனைத்தும் அதே செலவில், அதே சிரமத்தில் அதே அளவில் பின்தலைமுறைக்கும் கிடைத்தால் அது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம் ஆகும்.

இலக்கணங்கள்:

"இயற்கை வளத்தின் அளவு எக்காலத்திலும் குறையாமல் இருக்க வேண்டும்" பியர்ஸ், மார்கண்டேயா, பார்பியர் .1989.

"வருங்காலத் தலைமுறையினர் தங்கள் தேவைகளை நிறைவேற்ற எந்த ஒரு தடையும் இல்லாத நிலையில் தற்பொழுது உள்ள மக்களின் தேவையை நிறைவேற்றுதலே நீடித்த நிலையான மேம்பாடு".

சுற்றுப்புறச் சூழலுக்கும் மற்றும் மேம்பாட்டிற்குமான உலக அமைப்பு 1987. (World Commission on Environment and Development 1987)

10.12.1 நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals)

பொருளாதார வளர்ச்சி, சமூகச் சேர்ப்பு, சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கியமான குறிக்கோள்களையும் சேர்ந்து சாதிப்பதுதான் நீடித்த நிலையான வளர்ச்சியாகும். 2030ஆம் ஆண்டு 17 குறிக்கோள்களைச் சாதிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை (UNO) மூன்று இணைந்துபோகிற கொள்கைகளை நிறுவியிருக்கிறது. அவை உலகப்பொதுமை (Universality) ஒருங்கிணைப்பு (Integration) மாற்றம் (Transformation)

12-Economics-Tamil-Chapter_10.indd 263 12-01-2023 18:16:27

1. எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்

2. பட்டினியை முடிவுக்குக் கொண்டுவருதல்; உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்தினை உயர்த்துதல், நீடித்த நிலையான வேளாண்மைத்துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.

3. அனைத்து வயதுதினரின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்

4. எல்லாரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக்கொள்ள வசதி செய்தல்.

5. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.

6. குடிநீரும், துப்புரவும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

7. தூய்மையான, நீடித்த நிலையான, எளிதில் பெறக்கூடிய சக்தியினை (எரிபொருள்: Energy) அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

8. அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினையும் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினையும் வழங்குதல்.

9. தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

10. நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் உள்ள சமமின்மைகளை அகற்றுதல்.

11. பாதுகாப்பான, அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்.

12-Economics-Tamil-Chapter_10.indd 264 12-01-2023 18:16:27

12. நீடித்த நிலையான உற்பத்தியையும் நுகர்வினையும் உறுதிப்படுத்துதல்.

13. தட்பவெட்ப மாற்றங்களையும் அவற்றின் தாக்கங்களையும் குறைத்தல்.

14. பெருங்கடல்கள், கடல்கள், கடல் வளங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

15. காடுகளைப் பராமரித்தல், நிலம் அழிவதைத் தடுத்தல், நிலத்தின் தன்மை குறைவதைக் கட்டுப்படுத்தி உயர்த்துதல், உயிர்பன்முகத் தன்மை இழப்பை (Loss of Biodiversity) தடுத்து நிறுத்துதல்.

16. அமைதியான, சமூக நீதியுள்ள, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல்.

17. நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உறுதிப்படுத்துதல்.

10.13 பசுமை முயற்சிகள்

பசுமை முயற்சிகள்

இன்று உலகளவில் அதிக நிறுவனங்கள், வணிக அமைப்புகள் மக்கள் நீடித்த நிலையான மேம்பாட்டிற்காகவும் சூழல்நட்பு வாழ்க்கை முறைகளுக்காகவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. வாழ்க்கைக்கு ஆதாரமான நிலத்தைப் பாதுகாப்பதில் உறுதி கொண்டுள்ளனர். எனவே அரசியல் மூலமாகவும் குடிமக்கள் செயல்பாட்டாலும் நுகர்வோர் அழுத்தத்தாலும் நாம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அமைதியான முறையில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் நிலத்தைப் பாதுகாப்பதோடு பசுமையான அமைதியான எதிர்காலத்திற்கும் தீர்வு காணவேண்டும். புவி வெப்பமயமாதல் உலகளாவிய சிக்கல் என்பதால் மாசுபடுத்திய வளர்ச்சியடைந்த நாடுகள் மாசுக்கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கான செலவினை ஏற்க வேண்டும்.

10.14 இயற்கைப் பண்ணை முறை (Organic Farming)

இயற்கைப் பண்ணை முறை என்பது கால்நடை சாணம், இயற்கைக் கழிவுகள் ஆகியவற்றை உரமாகவும் பயிர்ப் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தியும் பருப்பு வகைகள் முதலானவற்றைப் பயிரிட்டு பயிர்ச் சுழற்சி முறையையும் பயன்படுத்தி செய்யப்படும் வேளாண்மையாகும். இதில் வேதி உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுவதில்லை. இயற்கை இடுபண்டங்கள் நுண்ணுயிரிகளை வளர்த்து நிலத்தின் செழிப்புத் தன்மையை அதிகப்படுத்துகின்றது. வேளாண் சூழல் அமைப்பில் உள்ள நிலத்தின் தன்மை, பயிர்கள், கால்நடைகள் ஆகியவற்றையும் மக்களையும் கருத்தில் கொண்டு உத்தம அளவு உற்பத்தி செய்யும் உள்ளடக்கிய அமைப்பு முறையே இயற்கைப் பண்ணைகளாகும். நீடித்த நிலைத்த சுற்றுச்சூழலோடு இணைந்த அமைப்புகளை உருவாக்குவதே இயற்கை உற்பத்தியின் முக்கிய குறிக்கோளாகும். இயற்கைப் பண்ணையின் பொதுவான கொள்கைகள் பின்வருமாறு.

1. சுற்றுச்சூழலை பாதுகாத்தல், மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், மண்வளக்குறைவைத் தடுத்தல், உயிரியல் உற்பத்தியை உத்தமப்படுத்துதல் மற்றும் சிறந்த உடல்நலத்தை ஊக்குவித்தல்.
2. மண்ணுக்குள் உயிரியல் நடவடிக்கைகளை மேம்படுத்தி மண்ணின் வளத்தன்மையை நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கச் செய்தல்.
3. அமைப்புக்குள் உயிரியல் மாற்றங்களை நிலைத்திருக்கச் செய்தல்.
4. நிறுவனத்தின் பொருட்களையும் வளத்தையும் அதிக அளவு மறுசுழற்சிக்கு உட்படுத்துல்.
5. கால்நடைகளை நன்கு பராமரித்து அவற்றின் நலத்தை மேம்படையச் செய்தல்.
6. எல்லா உற்பத்தி நிலைகளிலும் இயற்கை நேர்மையையும் முக்கிய பண்புகளையும் கடைப்பிடித்து கையாள்வதிலும் பதப்படுத்துதலிலும் கவனமாக இருந்து இயற்கைப் பொருட்களை தயாரிக்க வேண்டும்.
7. அப்பகுதியிலுள்ள அமைப்பு சார்ந்த விவசாய முறைகளிலுள்ள மறுசுழற்சி செய்யும் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பசுந்தாள் உரம்

மண்புழு உரம்

பயிர்ச்சுழற்சி

சாணி உரம்

இயற்கைப் பண்ணை முறை

நுண்ணுயிர் மேலாண்மை

இயற்கை உரங்கள்

கால்நடை வளர்ப்பு

உவர் நிலம் (Alkali Soil)

பாசன வசதி பெற்ற நிலங்கள் மற்றும் வறண்ட பகுதிகளில் உள்ள கிட்டத்தட்ட 50 சதவீத நிலங்களில் ஓரளவு உவர் பிரச்சனை உள்ளது. பயிரின் வேர்ப்பகுதிகளில் அதிக அளவு உப்பு/அமிலம் படிந்து நிலத்தின் உற்பத்தித் திறனை பகுதியாகவோ அல்லது முழு அளவாகவோ பாதிக்கின்றது. இத்தகைய நிலங்கள் பிரச்சனை (உவர், உப்பு, மற்றும் அமிலம்) நிலங்கள் எனப்படுகின்றது. இத்தகைய நிலங்கள் பாசனவசதி பெறாத வறண்ட நிலங்களில் காணப்படுகின்றது.

இத்தகைய உவர் நிலங்கள் பெரும்பாலும் பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கிய இந்து கங்கைச் சமவெளிகளில் காணப்படுகின்றது. சத்தீஸ்கார், ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம், குஜராத், மஹாராஷ்ட்டிரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒருசில பகுதிகளிலும் காணப்படுகின்றது.

10.15 மரம் வளர்த்தல்

மரங்கள் உயிரிக் (Oxygen) காற்றை அளித்து காற்றின் பண்பை உயர்த்துகின்றது. தண்ணீர், மண்வளம் ஆகியவற்றைப் பாதுகாத்து வனவிலங்குகளுக்கு உதவியாக உள்ளது. மரங்கள் ஒளிச் சேர்க்கையின் போது கரியமில வாயுவைக் கிரகித்து நாம் சுவாசிக்கும் உயிரிக் காற்றை வெளியிடுகின்றது. எனவே மரங்கள் பூமியின் நுரையீரல் எனப்படுகின்றது. இயற்கைக் காடுகளும் மரத்தோட்டங்களும் மழைநீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி நிலத்தடி நீர்மட்டம் உயர வழி செய்கின்றது.

விதைப்பந்துகள்

முளைக்கின்ற விதைப்பந்துகள்

10.16 விதைப் பந்து (Seed Ball)

ஒரு விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும். பிறகு உலர்த்தப்படுகிறது. பின்பு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம். இவ்வாறு செய்யும் போது, அந்த விதை முன்பே நடப்பட்டுவிட்டது என்றே பொருள். மரங்கள் நடுவதற்கு விதைப்பந்து முறை எளிதான, நீடித்து நிலைக்கும் வழியாகும். ஏனெனில் மழை விழுந்தபின் விதைகள் விதைப்பது கடினமான முறையாகும்.

தொகுப்புரை

இயற்கைக் சூழலுக்கும் மனித நடவடிக்கைகளும் இடையே உள்ள தொடர்பு இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் பொருளாதாரம் பொருளியலின் ஒரு பகுதியாக சூழல் வளங்களைச் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதை விளக்குகின்றது. ஆலன் நீஸ் (Alen Kneese) மற்றும் R.V.அய்யரஸ் (R.V. Ayres) இன் பொருள் சார் சமநிலை மாதிரி (Material balance Model) மூலமாக பொருளாதாரத்திற்கும் சுற்றுச் சூழ்நிலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை விளக்குகின்றது.

இரண்டாவது பகுதியில் காற்று, தண்ணீர், ஒலி, நிலம் போன்ற பல்வேறு வகையான காரணிகள் மாசுபடுவதற்கான காரணங்கள், விளைவுகள் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் புவி வெப்பமடைதல், தட்பவெப்பநிலை மாறுபடுதல், அமிலமழை, E – கழிவுகள் மற்றும் திடக் கழிவுகள் போன்ற சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் முக்கிய காரணிகள் விளக்கப்பட்டுள்ளது. இறுதியாக மக்கள் நடவடிக்கைகளான பசுமைத் துவக்கங்கள், இயற்கை விவசாயம் மரத்தோட்டங்கள் ஏற்படுத்துதல், விதைப்பந்து, களர் நில விவசாயம் போன்ற முறைகளால் நிலைத்த நீடித்த மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் முயற்சிகள் விளக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை மாசு, வெளியில் ஏற்படும் கழிவுகள், மண்ணரிப்பு, நிலவளக்குறைவு, காடுகளை அழித்தல் மற்றும் இயற்கை வளங்களை அழித்தல் போன்ற காரணிகளால் சுற்றுச்சூழல் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றது. சுற்றுச் சூழலைப் பாதிக்கும் காரணிகளைச் சரிசெய்ய அங்காடிகளும் நிறுவனங்களும் வளர்ச்சி பெறாததே இந்தியா போன்ற நாடுகளின் பிரச்சனையாகும். மேலும் மாசுபடுதல் எல்லை தாண்டிய பிரச்சனையாகும். எல்லா நாடுகளும் ஒருங்கிணைந்து முயற்சிகள் எடுத்தால்தான் புவி வெப்பமடைதலை கட்டுப்படுத்த முடியும். வளர்ந்த நாடுகள் புவி வெப்பமடைதலுக்கு முக்கிய காரணமாக விளங்குவதால், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்களைச் சரிசெய்ய அவர்களே முயற்சி செய்ய வேண்டும்

கலைச்சொற்கள்

- **சுற்றுச்சூழல்:** நம்மை சுற்றியுள்ள காற்று, நீர், நிலம், இயற்கை வனங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்து உயிரினங்கள் அடங்கிய தொகுப்பும், அத்தொகுப்பில் உள்ளவைகளுக்கு இடையேயான பரஸ்பர உறவும்.

- **சூழலியல்:** உயிரினங்களுக்கிடையேயான பரஸ்பர உறவும், அவைகளின் சுற்றுச்சூழலையும் பற்றி படிக்கும் இயல்.

- **சூழல் அமைப்பு அல்லது சூழல் மண்டலம்:** ஒரு பகுதியின் உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் தொகுப்பும், அவற்றிற்கிடையேயான தொடர்பும் ஆகும்.

- **புறவிளைவுகள்:** ஒரு தனிநபரோ அல்லது நிறுவனமோ நடடிவக்கைகள் மேற்கொண்டும், மூன்றாம் தரப்பினரின் நுகர்ச்சி அல்லது உற்பத்தியினால் தனக்கு நிறுவனத்திற்கு ஏற்பட்ட இழப்பினையோ (எதிர்மறை), ஆதாயத்தையோ (நேர்மறை) பெறமுடியாக நிலையே புறவிளைவுகள் ஆகும்.

- **மாசுபாடு:** நிலம், நீர், காற்று, வனங்கள் போன்ற சுற்றுச்சூழல் ஊடகங்களில் கழிவுகளை விடுவிப்பதால் அவைகளின் தன்மையில் குறிப்பிடத்தகுந்த மாற்றம் ஏற்படுதலை மாசுபாடு என்கிறோம்.

12-Economics-Tamil-Chapter_10.indd 268 12-01-2023 18:16:28

- **காற்று மாசு:** சுற்றுச்சூழல் ஊடகங்கள், தாவரங்கள், உயிரினங்கள் மற்றும் மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்குமளவுக்கு காற்றுமண்டலத்தில் திட, திரவ அல்லது வாயு வடிவிலான பண்டங்கள் கலந்திருப்பதை காற்று மாசு என்கிறோம்.
- **நீர் மாசு:** நீர்நிலைகளில் திட, திரவ, வாயு வடிவிலான பண்டங்கள் அல்லது வெப்ப சக்தி போன்றவற்றை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கலக்கும்பொழுது நீரின் தரம் குறிப்பிடத்தகுந்த அளவில் குறைந்து அவற்றினை பயன்படுத்தும் உயிரினங்கள் மற்றும் தாவரங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் நிலை நீர்மாசு எனப்படுகிறது.
- **நில மாசு:** திட, திரவ மற்றும் வாயு வடிவிலான கழிவுகளை நிலத்தில் கொட்டுவதால் அதன் தன்மை குறிப்பிடத்தகுந்தஅளவுக்குப்பாதிக்கப்பபட்டு நிலம், நிலத்தடி நீர், தாவரங்கள் மற்றும் உயிhpனங்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் நிலையை நில மாசு என்கின்றோம்.
- **உலக அல்லது புவி வெப்பமயமாதல்:** பல்வேறு மனித நடடிவக்கைகளின் காரணமாக இயல்பினைவினைவிட அதிக அளவு கரியமில வாயு, மீத்தேன், குளோரா புளோரா கார்பன், நைடரஸ் ஆக்சைடு போன்ற பசுமை இல்ல வாயுக்கள் வெளியாகி, அதன் காரணமாக உலகின் சராசரி வெப்பநிலை அதிகரித்துவருவது உலக அல்லது புவி வெப்பமயமயாதல் எனப்படுகிறது.
- **பருவநிலை மாற்றம்:** வெப்பநிலை, மழைபொழிவு, காற்று வீசுதல் ஆகியவற்றின் அளவுகளிலும், அவைகள் நிலவும் காலங்களிலும் ஏற்படும் குறிப்பிடத்தகுந்த மாற்றம் பருவநிலை மாற்றம் எனப்படுகிறது.
- **அமில மழை:** சல்பர் – டை – ஆக்சைட், நைட்ரஜன் ஆக்சைட் வளிமண்டலத்தில் நீருடன் வினை புரிந்து, பூமிக்கு மழை மற்றும் பனிப்பொழிவாக பூமிக்கு திரும்புவதை குறிப்பது அமில மழை.
- **திடக்கழிவுகள்:** திரவமற்ற கரையாத நகராட்சிக் கழிவு முதல் தொழிற்சாலைக் கழிவு வரை உள்ள கழிவுகள், சிக்கலான, தீங்கு விளைவிக்கும் பொருட்களைக் கொண்டது. கழிவுநீர் சக்தி, விவசாய மீதிக் கழிவுகள், கட்டுமானங்கள் இடிப்பதால் உள்ள கழிவுகள், சுரங்கக் கழிவுகள் போன்றவை திடக்கழிவிற்கு உதாரணங்களாகும்.
- **நீடித்த மேம்பாடு அல்லது வளம் குன்றா மேம்பாடு:** நீடித்த மேம்பாடு அல்லது வளங்குன்றா மேம்பாடு என்பது, எதிர்கால சந்ததியினர் தங்களது தேவைகளை சமரசமில்லாமல் பூர்த்தி செய்துகொள்வதற்கு வழிகோலும் வகையில், நிகழ்கால தலைமுறையினர் தங்களது உற்பத்தி மற்றும் நுகர்ச்சி அளவுகளையும், பொருளாதார மேம்பாட்டின் அளவினையும் அமைத்துக்கொள்வது ஆகும். நடப்பு மேம்பாட்டின் அளவு தலைமுறைகளுக்கு இடையிலும் தொடர வேண்டும் என்பதாகும்.
- **அங்கக வேளாண்மை (அல்லது) கரிம வேளாண்மை (அல்லது) இயற்கை வேளாண்மை:** செயற்கை இடுபொருட்களான இரசாயனம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை தவிர்த்து, இயற்கை இடுபொருட்களான(அங்ககபொருட்களான) உயிரின மற்றும் தாவர கழிவுகளைக் கொண்டும், இயற்கை பூச்சிவிரட்டிகளை கொண்டும் பயிரிடும் வேளாண்மை முறையாகும்.

www.tntextbooks.in

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. "என்வைரான்மென்ட்" (Environment) என்ற வார்த்தை ------------------ என்ற பொருள் கொள்ளும் எந்த பிரஞ்ச் வார்த்தையிலிருந்து தோன்றியது?

    அ) என்வைரான்
    ஆ) என்வைரான்ஸ்
    இ) என்வைரோனியா
    ஈ) என்வைர்

2. "உயிர்சார்" (biotic) என்ற வார்த்தையின் பொருள் என்ன?

    அ) உயிர் வாழ்வன
    ஆ) உயிரற்றவை
    இ) பருப்பொருள்
    ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

3. சூழலியல் என்பது எந்த ஒன்றின் சிறிய பகுதி?

    அ) அயனோஸ்பியர்
    ஆ) லித்தோஸ்பியர்
    இ) பையொஸ்பியர்
    ஈ) மெஸ்ஸோஸ்பியர்

4. "பொருள்சார் சமநிலை அணுகுமுறையை" நிறுவியவர் யார்?

    அ) தாமஸ் மற்றும் பிக்கார்டி
    ஆ) ஆலன் நீஸ் மற்றும் ஆர்.வி. அய்யர்ஸ்
    இ) ஜோன் ராபின்சன் மற்றும் ஜெ.எம். கீன்ஸ்
    ஈ) ஜோசப் ஸ்டிக்லிஸ் மற்றும் எட்வர்ட் சேம்பார்லின்

5. சுற்றுச்சூழல் பண்டங்கள் என்பவை ---------------------- ?

    அ) அங்காடிப் பண்டங்கள்
    ஆ) அங்காடியிடா பண்டங்கள்
    இ) இரண்டும்
    ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

6. தூய பொதுப்பொட்களில், நுகர்ச்சி என்பது ------------------ .

    அ) போட்டி உடையது
    ஆ) போட்டியற்றது
    இ) இரண்டும்
    ஈ) மேற் சொன்ன எதுவுமில்லை

7. சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், அங்காடி தோல்விக்கு காரணமானதும் -------------- ஆகும்.

    அ) நேர்மறை புற விளைவுகள்
    ஆ) எதிர்மறை புற விளைவுகள்
    இ) இரண்டும்
    ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

8. வெளிக் காற்றுமாசுவுக்கு -------------- காரணமாகும்.

    அ) சூடாக்குவதும் சமைப்பதும்
    ஆ) பாரம்பரிய அடுப்புகள்
    இ) மோட்டார் வாகனங்கள்
    ஈ) மேற்கண்ட அனைத்தும்

12-Economics-Tamil-Chapter_10.indd 270 12-01-2023 18:16:29

9. கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது

அ) மோட்டார் வாகனங்கள்
ஆ) தொழில் செயற்பாடுகள்
இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள்
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

10. பின்வரும் எது உலக வெப்பயமயமாதலுக்கு காரணம்?

அ) பூமியின் ஈர்ப்பு விசை
ஆ) ஆக்ஸிஜன்
இ) மையநோக்கு விசை
ஈ) வெப்பநிலை அதிகமாதல்

11. பின்வரும் எந்த ஒன்று புற ஊதாக் கதிர்களிலிருந்து மனிதர்களை பாதுகாக்கிறது?

அ) UV – A
ஆ) UV – C
இ) ஓசோன் படலம்
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

12. உலக வெப்பயமயமாதல் ------------ என்றும் குறிப்பிடப்படுகிறது.

அ) சூழலியல் மாறுபாடு
ஆ) பருவநிலை மாறுபாடு
இ) வளிமண்டல மாறுபாடு
ஈ) மேற்சொன்ன எதுவுமில்லை

13. பின்வரும் எந்த ஒன்று உலக வெப்பயமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?

அ) கடல் மட்டம் உயர்தல்
ஆ) மழைப் பொழிவு மாறுதல்
இ) பாலைவனம் அதிகரித்தல்
ஈ) மேற்சொன்ன அனைத்தும்

14. சத்துக்களை அதிகப்படுத்தும் செயல் எப்படி அழைக்கப்படுகிறது?

அ) யூட்ரோபிகேசன்
ஆ) சத்துக்களை கட்டுப்படுத்துதல்
இ) செறிவூட்டல்
ஈ) சிஸ்டோஸ்மியாசிஸ்

15. மண்மாசுவிற்கு முதல்நிலை காரணம் ------------.

அ) பூச்சியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்
ஆ) நில மேம்பாடு
இ) விவசாய நிலங்கள் வழியாக பாய்ந்தோடும் மழைநீர்
ஈ) இரசாயன உரங்கள்

16. வன அழிவிற்கான முதன்மை காரணம் யாது?

அ) மரம் வெட்டும் தொழில்
ஆ) இயற்கை வன அழிவு
இ) நிலத்தை சமப்படுத்துதல்
ஈ) தட்பவெட்பநிலை சமப்படுத்துதுல்

17. மின்னணு கழிவுகளுகள் ------------ என்ற பொதுவாக குறிப்பிட்படுகின்றன.

அ) திடக் கழிவுகள்
ஆ) குப்பைக் கழிவுகள்
இ) இ–கழிவுகள்
ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

18. அமிலமழைக் --------------- விளைவுகளில் ஒன்று.

அ) காற்று மாசு
ஆ) நீர் மாசு
இ) நில மாசு
ஈ) ஒலி மாசு

19. நீடித்த வளர்ச்சி (அல்லது) வளங்குன்றா வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைய விதிக்கப்பட்டிருக்கும் காலம் ---------- .

அ) 2020
ஆ) 2025
இ) 2030
ஈ) 2050

20. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?

அ) சிந்து–கங்கை
ஆ) வட இந்திய
இ) கங்கை
ஈ) மேற்கூறிய அனைத்தும்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
இ	அ	இ	ஆ	ஆ	ஆ	ஆ	இ	அ	ஈ
11	12	13	14	15	16	17	18	19	20
இ	ஆ	அ	அ	ஈ	அ	இ	அ	இ	ஈ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.
22. சூழலியல் என்றால் என்ன?
23. தலா (per capita) கரிமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?
24. சுற்றுச்சூழல் பண்டங்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு.
25. ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.
26. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
27. விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.
29. பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.
30. பல்வகையான காற்று மாசுகளை விளக்குக.
31. நீர்மாசுக்கான காரணங்கள் யாவை?
32. இ–கழிவுகள் என்பதன் பொருள் தருக.
33. நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.
34. குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.

36. புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.

37. நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

செய்முறை

நமது கிராமத்திலும், நகரத்திலும் உருவாகும் திடக்கழிவுகள் எவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டு மேலாண்மை செய்யப்படுகிறது என்பதனை நேரடியாக கண்டறியவும்.

பார்வை நூல்கள்

1. Karpagam M. (1993). Environmental Economics, Sterling Publishers, New Delhi.

2. Sankaran S. (1994). Environmental Economics, Margham, Chennai.

3. Sacratees J. and Karthigarani (2008). Environment Impact Assessment, APH Publishing Corporation, New Delhi.

4. Garge, M.R. (Ed.) (1996). Environmental Pollution and Protection, Deep and Deep Publications, New Delhi.

5. Lodha S.L (Ed.) (1991). Economics of Environment, publishers, New Delhi.

6. The Hindu Survey of Environment: Annual Reports.

இயல் 11

பொருளாதார மேம்பாடும் திட்டமிடலும்

தவறாக நடைமுறைப்படுத்துவதனால் நன்கு வடிவமைக்கப்பட்டத் திட்டம் தோல்வியடையலாம். ஆனால் சரியாக நடைமுறைப்படுத்துவதனாலேயே தவறாக வடிவமைக்கப்பட்டத் திட்டம் வெற்றியடைந்துவிடாது.

இன்றைக்கும் என்றைக்கும் உன்னுடைய வேலைகளைத் திட்டமிட்டு பிறகு நடைமுறைப்படுத்து.

– **மார்கரெட் தாட்சர்**

Learning Objectives

1 பொருளாதார முன்னேற்ற செயல்பாடுகள், சிறப்பம்சங்கள் மற்றும் நிர்ணயிக்கும் காரணிகள் பற்றி புரிந்து கொள்ளுதல்.

2 திட்டமிடலுக்கு ஆதரவான, எதிரான வாதங்கள் மற்றும் பல்வேறு திட்டமிடல் வகைகள் பற்றி ஒப்பிட்டு கற்றல்.

3 நிதி ஆயோக்கின் பணிகளை மதிப்பிடுதல்.

11.1 முன்னேற்றமும் வளர்ச்சியும் குன்றியப் பொருளாதாரம் –பொருள்

அறிமுகம்

பொருளாதார "மேம்பாடு" "முன்னேற்றம்" ஆகிய இரண்டு சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கக்கூடியவை. பொருளாதார வளர்ச்சி நாட்டு வருமானம் அதிகரித்தலைக் குறிக்கப் பயன்படும் சொல். நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை முன்னேற்றம் எனக் கருதலாம். இரண்டாம் உலகப்போர் வரையில் மூன்றாம் உலக நாடுகள் என்றழைக்கப்படும் ஏழை நாடுகளின் சிக்கல்களைப் பற்றிப் படிக்க யாரும் ஆர்வம் காட்டவில்லை. அதன் பிறகே பொருளியல் வல்லுநர்கள் நாடுகளின் சிக்கல்களை ஆய்வு செய்து புதிய முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உரிய கோட்பாடுகளையும், மாதிரிகளையும் (Models) உருவாக்க ஆரம்பித்தனர். இன்றைய வளரும் நாடுகள் அனைத்தும் இங்கிலாந்திடமும், பிற ஐரோப்பிய நாடுகளிடமும் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள் ஆகும். விடுதலைக்குப் பிறகு இந்த நாடுகள் விரைவான பொருளாதார முன்னேற்றமடைவதையே விருப்பமாகக் கொண்டிருந்தன.

12-Economics-Tamil-Chapter_11.indd 274 12-01-2023 17:09:20

www.tntextbooks.in

பொருளாதார முன்னேற்றத்தின் அணுகுமுறைகள்

பொருளாதார முன்னேற்றம் இருவகையான அணுகுமுறையைக் கொண்டு விளக்கப்படுகிறது முறையே i) பழமையான அணுகுமுறை ii) நலம் சார்ந்த புதிய அணுகுமுறை.

1. பழமையான அணுகுமுறை

இந்த அணுகுமுறை பொருளாதார அடிப்படைகளைக் கொண்டு மட்டுமே முன்னேற்றத்துக்கு விளக்கமளிக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் உற்பத்தியிலும், வேலை வாய்ப்பிலும் வேளாண்மையின் பங்கு குறைந்து தொழில்துறை பணித்துறை ஆகியவற்றின் பங்கு உயர்வடைதலையே பழைய அணுகுமுறையில் பொருளாதார முன்னேற்றம் என்கிறது. இது தொழில் துறை வளர்ச்சியை வலியுறுத்தும் அணுகுமுறையாக உள்ளது. தனிமனிதர் வருமான உயர்வு அடித்தட்டு மக்களின் வருவாயையும் அதிகப்படுத்தும் என்ற எடுகோளின் அடிப்படையில் முன்னேற்றத்துக்கு விளக்கமளிக்கிறது.

2. நலம் சார்ந்த புதிய அணுகுமுறை

பொருளாதார முன்னேற்றம் 1970 ஆம் ஆண்டுகளில் மறுவரையறை செய்யப்பட்டது. இதன்படி வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு வேலையின்மையைக் குறைத்தல், நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்ததல் ஆகியவை ஒருசேர நிகழ்வதே பொருளாதார முன்னேற்றமாகும். அந்தக் காலக்கட்டத்தில் "வளர்ச்சியுடன் கூடிய பங்கீடு" என்பதே புகழ்பெற்ற முழக்கமாயிற்று.

மைக்கேல் பி.டொடாரோவின் கருத்தின்படி, "முன்னேற்றத்தை சமூக அமைப்பு, பொது மக்களின் மனநிலை நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் ஆகியவற்றோடு விரைவான வளர்ச்சி, வருமான ஏற்றத்தாழ்வினைக் குறைத்தல், வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதார முன்னேற்றமாக கருத வேண்டும்" என்கிறார்.

பொருளாதார வளர்ச்சிகுன்றிய நாடுகளின் சிறப்பியல்புகள்

அறிமுகம்

- வளர்ச்சி குன்றிய நாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி அறியலாம்.
- உலக வங்கியின் வளர்ச்சி அறிக்கையின்படி தலாவீத மொத்த நாட்டு வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்துகிறது.



வளர்ச்சி குன்றியப் பொருளாதாரம்

வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் என்பது ஒரு நாட்டில் குறைவான தலா வருமானம், பரவலான வறுமை, வருமான செல்வப் பகிர்வில் கடுமையான ஏற்றத்தாழ்வு, அதிக மக்கள் தொகை, குறைவான மூலதன ஆக்கம், அதிக அளவு வேலையின்மை, பழமையான உற்பத்தி முறை, எதிரும் புதிருமான பண்புகள் ஒருசேர நிலவுதல் (Dualism) ஆகியவற்றை பண்புகளாகக் கொண்டதாகும்.

12-Economics-Tamil-Chapter_11.indd 275 12-01-2023 17:09:20

வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் பொருள்

வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் என்பது ஒரு நாட்டில், அதிக மக்கள் தொகையினால் உற்பத்தி குறைந்து, அவற்றின் விளைவாக குறைந்த தலா வருமானம் உடைய அதிக மக்களைக் கொண்ட பொருளாதாரமாகும்.

11.2 பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும்

1. பொருளாதார முன்னேற்றம்

பொதுவாகப் பார்த்தால், முன்னேற்றம் என்பது பின்தங்கிய நாடுகளின் சிக்கல்களையும், வளர்ச்சி என்பது முன்னேறிய நாடுகளின் சிக்கல்களையும் கொண்டதாக உள்ளது.

2. வளர்ச்சியின் இயல்பும் அளவும்

முன்னேற்றம் என்பது தொடர்ச்சியற்றதாகவும், தன்னிச்சையாகவும் நிகழக்கூடிய மாற்றம், வளர்ச்சி என்பது நீண்ட காலத்துக்கும், படிப்படியாகவும், நிதானமாகவும் நடைபெறும் மாற்றமாகும்.

3. மாற்றத்தின் நோக்கம்

வளர்ச்சி என்பது அதிகமான உற்பத்தியைக் குறிக்கிறது. ஆனால் முன்னேற்றம் என்பது உற்பத்தியில் அதன் செயல்திறனைக் குறிக்கிறது. அதாவது, உற்பத்தியில் ஒரு அலகு உள்ளிடுபொருளுக்கான உற்பத்தி அளவைக் குறிக்கும். இது உற்பத்தி, வளங்களுக்கான ஒதுக்கீடு, வறுமை, சமத்துவமின்மை, வேலையின்மை ஆகியவற்றின் கலவை மாற்றங்களைக் குறிக்கிறது.

4. மாற்றத்தின் விரிவு

பொருளாதார முன்னேற்றம் (பொருளாதார வளர்ச்சியை விட பெரிய கருத்து) என்பது வளர்ச்சியிலும் கட்டமைப்பிலும் ஏற்படும் மாறுதல்களை உள்ளடக்கியது.

பொருளாதார வளர்ச்சி Vs பொருளாதார முன்னேற்றம்

பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமிடையேயான வேற்றுமைகள்

பொருளாதார வளர்ச்சி	பொருளாதார முன்னேற்றம்
வளர்ந்த நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்களைக் கையாளுகிறது	வளரும் நாடுகளின் சிக்கல்களைக் கையாளுகிறது
மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கின்றன	தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கின்றன
அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கிறது.	உற்பத்தி அதிகரிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுகின்றன

12-Economics-Tamil-Chapter_11.indd 276 12-01-2023 17:09:21

எண்ணிக்கை அடிப்படையிலானது (அதாவது) தலா வருமான அதிகரிப்பைக் குறிக்கும்.	எண்ணிக்கை அடிப்படையிலும் தர அடிப்படையிலும் ஆனது
குறுகிய எல்லையுடையது.	விரிவான பொருள் கொண்ட சொல் முன்னேற்றம் = வளர்ச்சி + மாற்றம்

11.3 பொருளாதார முன்னேற்றத்தை அளவிடுதல்

பொருளாதார முன்னேற்றத்தை நான்கு முறைகளில் அளவிடலாம்.

நாட்டின் மொத்த உற்பத்தி (Gross National Product GNP)

ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் பணிகளின் அங்காடி மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்குமிடையிலான வேறுபாடுத்தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம். இந்த கருத்தினைக்கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார நிலையை மதிப்பிடலாம். மற்றவை மாறாதிருக்கும் போது நாட்டின் மொத்த நாட்டு உற்பத்தி அதிகமாக இருந்தால் அந்நாட்டு மக்களின் உயர்வான வாழ்க்கைத்தரத்துக்கு வழிவகுக்கும் என கருதப்படுகிறது.

தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி (GNP Per Capita)

ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பை அந்த ஆண்டின் மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவுத் தொகையே தலாவீத மொத்த நாட்டு உற்பத்தியாகும்.

இந்த அளவிடும் முறை நீண்டகாலத்தில் தலா உற்பத்தி மதிப்பு அதிகரித்தலைக் குறிப்பிடுகிறது. தலா வருமானம் அதிகரிக்கும் வேகம் மக்கள் தொகை அதிகரிக்கும் வேகத்தைவிட உயர்வாக இருக்க வேண்டும் என இந்த அளவிடும் முறை வலியுறுத்துகிறது.

நலன்:

பண்டங்கள், பணிகளை மக்கள் வாங்கிப் பயன்படுத்துவது அதிகரிப்பதையே பொருளாதார முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. மக்கள் நலன் எனும் கண்ணோட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்தை மக்களின் நலவாழ்வு, கல்வி, வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தகுந்த அளவு மேம்படுவதாகச் சார்ந்து வரையறுக்கலாம்.

சமூகக் குறியீடுகள் (Social Indicators):

மக்களின் அடிப்படை தேவைகளையும் கூட்டுத் தேவையையும் நிறைவு செய்வதை சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் நலவாழ்வு, கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

12-Economics-Tamil-Chapter_11.indd 277 12-01-2023 17:09:21

www.tntextbooks.in

11.4 பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

பல காரணிகள் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயம் செய்கின்றன. அவற்றை நான்கு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன பொருளாதாரம், சமூகம், அரசியல், மதம் சார்ந்த காரணிகள். இவற்றைப் பொருளாதாரம் சார்ந்த பொருளாதாரம் சாராத பிற காரணிகள் என எளிமையாக இரண்டே வகையாகவும் பிரித்து விடலாம்.

11.5 பொருளாதாரம் சார்ந்தக் காரணிகளும் பொருளாதாரம் சாராத காரணிககளும்

கீழ்க்காணும் வரைபடம் பொருளாதாரம் பொருளாதாரக் காரணிகளை எளிமையாகப் பட்டியலிடுகிறது.

பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

பொருளாதார காரணிகள்

1. இயற்கை வளங்கள்
2. மூலதன ஆக்கம்
3. சந்தையின் அளவு
4. கட்டமைப்பு மாற்றம்
5. நிதியியல் அமைப்பு
6. சந்தையிடத்தக்க உபரி
7. பன்னாட்டு வாணிகம்
8. பொருளாதார அமைப்பு

பொருளாதாரம் சாராத காரணிகள்

1. மனித வளம்
2. தொழில்நுட்ப அறிவு
3. அரசியல் சுதந்திரம்
4. சமூக அமைப்பு
5. ஊழலற்ற நிருவாகம்
6. முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்
7. நீதி போதனை, அறநெறியும் சமூக விழுமியங்களும்
8. சூதாட்ட முதலாளித்துவம்
9. பரம்பரைச்சொத்துரிமைமுதலாளித்துவம்

11.5.1. பொருளாதாரம் சார்ந்தக் காரணிகள்

பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் எட்டு முக்கியமான காரணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1) இயற்கை வளங்கள்

ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாகும். முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் அளவுக்கு ஒரு நாடு இயற்கை வளங்களைப் பெற்றிருக்க வேண்டும். வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடு விரைவாக முன்னேற இயலாது. ஆனால், ஜப்பான் நாட்டில் வளங்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் முன்னேறிய நாடாக உள்ளது. ஏனென்றால் தேவையான வளங்களை இறக்குமதி செய்து கொள்ளுகிறது. இந்தியா

12-Economics-Tamil-Chapter_11.indd 278 12-01-2023 17:09:21

அதிக அளவில் வளங்களைப் பெற்றிருந்தாலும் முன்னேற்றம் குறைந்த நாடாக உள்ளது.

2) மூலதன உருவாக்கம்

மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும். ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம் என்பர். இதில் கண்ணுக்குப் புலனாகக் கூடிய தொழிற்சாலைகள், இயந்திரங்களும், கண்ணுக்குப் புலனாகாத உடல்நலம், கல்வி ஆராய்ச்சி போன்ற இரண்டு இனங்களுமே இதில் உள்ளடங்கும். தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தி வருமானத்தை அதிகரிக்க மூலதன ஆக்கம் உதவுகிறது. புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் இயற்கை வளங்களை நன்முறையில் பயன்படுத்தவும், தொழில்மயமாதலுக்கும், அங்காடி விரிவாக்கத்திற்கும் உதவுகிறது. இதனால் பொருளாதாரம் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

3) சந்தையின் அளவு

சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு, தலா வருமான உயர்வு ஆகியவற்றைத் தூண்டும். இவ்வாறு வளர்ந்த நாடுகள் உலக வாணிக மையத்தின் வழியாக அங்காடி அளவை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுகிறது.

4) கட்டமைப்பு மாற்றம்

கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும். நாட்டின் பொருளாதாரத்தின் மூன்று துறைகளாக பிரிக்கப்படுகின்றன. அதில் முதன்மைத் துறையானது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடுகள் முதலானவற்றை உள்ளடக்கியும், இரண்டாம் துறையானது தொழிற்சாலை உற்பத்தி, கட்டுமானப்பணிகள் முதலானவற்றை உள்ளடக்கியும் சார்புத் துறையானது வாணிகம், வங்கி, வாணிகம் முதலானவற்றையும் உள்ளடக்கியிருக்கும். எந்த ஒரு பொருளாதாரமும் முழுக்க வேளாண்மையை மட்டும் சார்ந்து இருந்தால் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும்..

5) நிதியியல் முறை

நிதியியல் முறை என்பது ஒரு நாட்டில் திறமையான, சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறையினைக் கொண்டதாகும். ஒழுங்குற அமைக்கப்பட்ட பண அங்காடியானது தேவையான மூலதனத்தை வழங்குகிறது.

6) விற்பனைக்குரிய உபரி

வேளாண் துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத் தேவையைவிட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம். இந்தக் கூடுதல் விளைபொருட்களை உழவர்கள் அங்காடியில் விற்று வருமானம் ஈட்டலாம். இது அவர்களுடைய வாங்கும் திறனை அதிகப்படுத்தும், இதனால் நாட்டில் பொருள் உற்பத்தி அதிகரித்து வேலைவாய்ப்பும், நாட்டு வருமானமும் உயர்ந்து நாடு முன்னேற்றமடையும்.

7) பன்னாட்டு வாணிகம்

பன்னாட்டு வாணிகத்தில் சாதகமான சூழ்நிலை இருந்தால் ஒரு நாடு போதுமான

அளவு அயல்நாட்டுச் செலாவணியைக் கையிருப்பில் வைக்கமுடியும். அயல்நாட்டு செலாவணிக் கையிருப்பு போதுமானதாக இருந்தால் அந்த நாட்டின் பணமாற்று வீதம் ஏற்ற இறக்கமின்றி நிலைத்திருக்கும்.

8) பொருளாதார அமைப்புமுறை

ஒரு நாடு தடையில்லா பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தைவிட வேகமான வளர்ச்சி பெறும். இது சில நாடுகளுக்கு மட்டும் பொருந்தும்.

11.5.2. பொருளாதாரம் சாராதக் காரணிகள்

"மனித வளம் சமுதாயத்தின் மனப்பான்மை, அரசியல் சூழ்நிலைகள் வரலாற்று நிகழ்வுகள் ஆகியன பொருளாதார முன்னேற்றத்தின் மிக அதிக அளவு ஆதிக்கம் செய்கின்றன. முன்னேற்றமடைவதற்கு மூலதனம் அடிப்படையானதே ஒழிய அதுமட்டுமே போதுமானதல்ல" என ராக்னர் நர்க்ஸ் தெளிவுபடுத்துகிறார்

1. மனித வளம்

மனித வளம் மனித மூலதனம் எனக் கூறப்படுகிறது. ஏனென்றால், இது உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி நாட்டு வருமானத்தையும் உயர்த்தும் ஆற்றல் பெற்றுள்ளது. மக்களின் முன்னேற்றத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சுழற்சியான உறவு நிலவுகிறது. ஒரு நாட்டுக்கு கல்வியறிவுள்ள, உடல் நலமுள்ள, திறமையான தொழிலாளர்கள் உற்பத்தித் திறன்மிக்க சொத்தாகக் கருதப்படுகிறார்கள். மக்களின் அறிவு, திறன்கள், உற்பத்தி செய்யும் தகுதி ஆகியவற்றை அதிகரிக்கும் செயலை மனித மூலதன ஆக்கம் எனலாம். பொதுமக்கள் உடல்நலம், கல்வி, மக்களுக்கான வசதிகள் மீது செய்யப்படும் செலவுகள் மனித மூலதன ஆக்கத்தை அதிகரிக்கும். திறமைமிக்க மனிதர்கள் உற்பத்திக்குப் பங்களித்து முன்னேற்றத்தைத் தீர்மானிக்கிறார்கள். எடுத்துக்காட்டு ஜப்பான் சீனா முதலான நாடுகள்.

2. தொழில் நுட்ப அறிவு

அறிவியலும், தொழில்நுட்ப அறிவும் வளரும் பொழுது உயர்வகை உற்பத்தித் தொழில் நுட்பங்கள் பிறக்கும். புதிய தொழில் நுட்ப முறைகள் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும். இது பொருளாதார முன்னேற்றத்துக் காரணமாகிவிடும் என ஜோசப் சும்பீட்டர் கூறுகிறார்.

3. அரசியல் சுதந்திரம்

பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசியல் சுதந்திரத்திற்கும் நெருங்கிய தொடர்புடையது. இந்தியாவின் வறுமைக்கு இந்தியாவின் செல்வம் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் எடுத்துச் செல்லப்பட்டதே காரணம் என தாதாபாய் நவ்ரோஜி தனது " "வறுமையும் – இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முறையும்" (Poverty and un – British Rule in India)' எனும் நூலில் எழுதியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சி முறைதான் இந்தியாவில் வறுமை அதிகரிக்க முக்கியக் காரணமாக இருந்தது.

4. சமூக அமைப்பு

முன்னேற்றத்தின் பலன்கள் சமமாக அனைத்துத் தரப்பினருக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் எனும் நம்பிக்கை இருந்தால் தான், நாடு முன்னேற தூண்டும் செயல்களை செய்ய மக்கள் முன் வருவார்கள். பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெற மக்களின் பங்கெடுப்பது என்பது மிகவும் அவசியமானதாகும். குறைபாடுள்ள

சமூக அமைப்புமுறையில் ஒரு சில பிரிவினர் மட்டும் முன்னேற்றத்தின் பலன்களைக் கூடுதலாகப் பெறுவதை அனுமதித்தால் பெரும்பான்மையான மக்கள் பொருளாதார முன்னேற்ற செயல்பாடுகளில் கலந்து கொள்ளமாட்டார்கள். முன்னேற்றத்தின் பலன் ஒரு சிலர் கொண்டு செல்வதை முதலாளித்துவத்தின் தோழமைப் பொருளாதார அமைப்பு என்கிறார்.

5. ஊழலற்ற அரசு நிருவாகம்

பொருளாதாரம் முன்னேற்றமடைதலில் ஊழலும் பொருளாதார நேர்மையின்மையும் எதிர்மறை விளைவை உருவாக்கும் காரணிகளாகும். நாட்டு நிருவாகத்தில் ஊழலை அகற்றாவிட்டால் முதலாளிகளும், வணிகர்களும் நாட்டின் வளங்களைச் சுரண்டி விடுவார்கள். இதனால் வரி ஏய்ப்பு அதிகரித்து ஊழல் பெருகி முன்னேற்றமே தடைபடும் நிலை உருவாகிவிடும்.

6. முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம்

விருப்பமிருந்தால்தான் மக்கள் எந்த ஒரு செயலையும் செய்து முடிப்பார்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மக்களின் விருப்பம் அவசியம். விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்பதைப் பெரும்பாலான மக்கள் நம்புவதும், வறுமையைத் தலைவிதியின் விளைவு எனவும் ஏற்றுக் கொண்டுவிட்டால் அந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்புக் குறைவாக இருக்கும்.

7. நீதிபோதனை, அறநெறி, சமூக மதிப்புகள்

ஒழுக்க நெறிகளும் அறநெறிப் பற்றுதலும் சந்தையின் திறன்மிக்க செயல்பாட்டுக்கு அடிப்படைகளாகும். டக்ளஸ் சி. நார்த் "மக்கள் நேர்மையற்றவர்களாக இருந்தால் அங்காடி செயல்படாது" என்கிறார்.

8. சூதாட்ட முதலாளித்துவம்

மக்கள் தங்களின் வருமானம், நேரத்தின் பெரும்பகுதியைப் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில், மது அருந்துவதில், சூதாடுவதில் செலவழித்தால் உற்பத்தி நடவடிக்கை பாதிக்கப்பட்டுப் பொருளாதார முன்னேற்றம் தடைபடும் என தாமஸ் பிக்கெட்டி எடுத்துரைக்கிறார்.

9. பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம்

நிலம் உள்ளிட்ட சொத்து பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு பரம்பரையாக வந்து சேர்ந்தால் குழந்தைகள் கடின உழைப்பை விரும்பமாட்டார்கள். இது உற்பத்தித்திறனைக் குறைத்துவிடும் என தாமஸ் பிக்கெட்டி கூறுகிறார்.

11.6 வறுமை நச்சுச் சுழற்சி

முன்னேற்றம் குறைவாக உள்ள நாடுகளில் குறைவான முன்னேற்றமே முன்னேற்றத்தைக் குறைவான அளவிலே தொடர்ந்து நீடிக்கச் செய்யும் சுழற்சியினை உருவாக்குகிறது. நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பதாக ராக்னர் நர்க்ஸ் கூறுகிறார். எடுத்துக்காட்டாக ஒரு ஏழையிடம் உண்பதற்குப் போதுமான உணவு இல்லை – குறைவான உணவு அவருடைய உடல் நிலையைப் பலவீனப்படுத்திவிடும். பலவீனமாக இருப்பவரின் உழைக்கும் தகுதி குறைவாக இருக்கும். உழைக்கும் திறன்

HB8MF

குறைவாக இருந்தால் குறைவான வருமானம் ஈட்டுவார் வருமானம் குறைவாக இருப்பதால் அவர் ஏழை. அவர் உண்பதற்கு போதுமான உணவு இருக்காது. இந்தச் சுழல் தொடர்ந்து கொண்டே செல்லும். இந்த வகையான சூழ்நிலையை ஒருநாட்டுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் கீழ்க்காணும் கருத்துரையாக சுருக்கலாம் "ஒரு நாடு ஏழை ஏனென்றால் அது ஏழைகளின் நாடு".



வறுமையின் நச்சுச் சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதனப் பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்புப் பக்கத்தில் வறுமை நச்சுச் சுழற்சி செயல்படுகிறது.

தேவைப் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும். இது முதலீட்டைக் குறைக்கச் செய்யும், இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்..

11.6.1. வறுமையின் நச்சுச் சூழற்சியை உடைத்தல்

அளிப்புப் பக்கத்தில் வறுமையின் நச்சுச் சுழற்சி குறைவான சேமிப்பு குறைவான முதலீடு ஆகியவற்றால் இயங்கத் துவங்குகிறது. ஆகவே பின்தங்கிய நாடுகளில் முதலீட்டையும் மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும் போது நுகர்வு அளவு குறையாமல் இருக்க வேண்டும்.. இதற்கு கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.

தேவைப் பக்கத்தில் வறுமை நச்சுச் சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியைப் பரிந்துரைக்கிறார். ஒரே நேரத்தில் பலவகைத் தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில்களில் வேலை கிடைக்கும். அவர்கள் மற்றத் தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு தொழிலிலும் வேலை கிடைத்த தொழிலாளர்கள் தங்களின் வருமானத்தை வேறு தொழிலிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கும்போது சரிநிகர் சமமான முன்னேற்றம் நடைபெறும் என நர்க்ஸ் கூறுகிறார். எனவே அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின் மூலம் தேவையின் பக்கத்தில் இயங்கும் வறுமை நச்சு சுழற்சியைத் தடுக்க முடியும்.

11.7 திட்டமிடல்

திட்டமிடலின் பொருள்

மையத் திட்டமிடல் ஆணையத்தால் நன்கு வடிவமைக்கப்பட்ட, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையும், நோக்கங்களையும் அடைவதற்கான வழிமுறையே திட்டமிடல் ஆகும்.. பொருளாதாரம், அரசியல், சமூக ராணுவ நோக்கங்களைத் திட்டமிடல் மூலம் அடைவதற்கான இலக்குகளாக இருக்கலாம்.

திட்டமிடலின் இலக்கணங்கள்

பொருளாதாரத் திட்டமிடல் என்பது 'தனியார் உற்பத்தி, வழங்கல் நடவடிக்கைகளைக் கூட்டாகக் கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதைக் குறிப்பதாகும்"

– இராபின்ஸ்

"பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்".

– டால்ட்டன்

11.7.1. இந்தியாவில் திட்டமிடல்

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டிய இலக்குகளை, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார நோக்கங்களையும், வழிகாட்டுதல்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளையும் திட்டங்களையும் உள்ளடக்கிய வரைபடமே பொருளாதாரத் திட்டமிடல் ஆகும். தற்போதைய பொருளாதாரத் திட்டமிடல் சிந்தனை மிகவும் புதியது, ஆனால் மார்க்சிச சோசலிசத்தில் அடிப்படையில் ஓரளவு வேரூன்றியுள்ளது. 20 ஆம் நூற்றாண்டில், அறிஞர்கள், கோட்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் ஐரோப்பாவின் நிலையை முன்னிருத்தி, முதலாளித்துவத்தையும், சமூகத்தில் ஏற்படும்

ஏற்றத்தாழ்வினையும் நிறுத்த அரசின் தலையிடுதல் அவசியம் என்றனர்.

சோவியத் ஒன்றியம் திட்டமிடலை 1928–ஆம் ஆண்டில் செயல்படுத்தத் துவங்கியது. பொருளாதாரத் திட்டமிடலே சோவியத் நாட்டை வல்லரசு நாடாக மாற்ற உதவியது. 1930–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் அமெரிக்காவில் மக்களின் வாங்கும் திறனைக் குறைத்துச் சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியதால், பொருளாதாரத் திட்டமிடல் அவசியம் என்னும் கருத்து வலுவடைந்தது. நாட்டின் வளங்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சிறப்பாக ஒதுக்கீடு செய்ய இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட சூழல் நிர்பந்தத்தை உருவாக்கியது. போரின் விளைவுகளை சமாளிக்கத் திட்டமிடல்தான் சரியான தீர்வு என்ற சிந்தனை பரவத் தொடங்கியது.

இந்திய விடுதலைக்குப்பிறகு 1948–ஆம் ஆண்டில் தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதில் மையத் திட்டக்குழு, கலப்புப் பொருளாதார அமைப்பு முறை ஆகிய இரண்டையும் அமைக்கப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜனவரி 26, 1950 அன்று நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1950–ஆம் ஆண்டு மார்ச் 15, திட்டக் குழு அமைக்கப்பட்டது. 1951–ஆம் ஆண்டு ஏப்ரல் 1, முதல் திட்ட காலம் துவங்கியது. இதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் 1951 முதல் 1956 வரை ஆகும். இந்தியாவில் திட்டமிடுதலின் பரிணாம வளர்ச்சியை கீழ்க்காணும் நிகழ்வுகளிலிருந்து புரிந்துக் கொள்ளலாம்.

1. **சர்.எம்.விஸ்வேஸ்வரய்யா (1934)** புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும் அரசியல்வாதியுமான எம். விஸ்வேஸ்வரய்யா 1934–ஆம் ஆண்டு இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் தனது ஆலோசனையாகப் பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய "இந்திய பொருளாதாரத் திட்டமிடல்" எனும் புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

2. **ஜவகர்லால் நேரு (1938) :** "தேசியத் திட்டக் குழு" ஒன்றை அமைத்தார். அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்றுவிட்டன.

3. **பாம்பே திட்டம் (1940)** மும்பையின் முன்னணித் தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் எனும் திட்டத்தை 1938–ஆம் ஆண்டுல் முன்மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.

4. **எஸ்.என் அகர்வால் (1944)** என்பவர் "காந்தியத் திட்டம்" எனும் திட்டத்தை 1944–ஆம் ஆண்டுல் வழங்கினார். இது வேளாண்மைக் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்குமான திட்டமாகும்.

5. **எம்.என்.இராய் (1945):** மக்கள் திட்டம் என்பதை வடிவமைத்தார். இது வேளாண்மை உற்பத்தியையும், வழங்கலையும் இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களை அரசே வழங்கிட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

6. **ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1950):** "சர்வோதயத் திட்டம்" ஒன்றை முன்மொழிந்தார். இது காந்திஅடிகள் வினோபா பாவே ஆகியோரின் கருத்துகளின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்டத் திட்டமாகும். வேளாண்மை

12-Economics-Tamil-Chapter_11.indd 284 12-01-2023 17:09:21

மட்டுமல்லாமல் சிறு தொழில்களுக்கும் குடிசைத் தொழில்களுக்கும் ஊக்கமளிக்கும் கூறுகளைக் கொண்டத் திட்டமாகும்.

இந்த ஆறுத் திட்டங்களையும் கவனமாக ஆராய்ந்து திட்டக்குழுவை அமைத்து ஐந்தாண்டுத் திட்டங்களாகச் செயல்படுத்த ஜவகர்லால் நேரு முடிவெடுத்தார். அவரே இந்திய அரசின் திட்டக் குழுவின் முதல் தலைவராவார்.

11.7.2. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகள்

கீழ்க்காணும் வகைகளின் திட்டமிடல் வலியுறுத்தப்படுகிறது.

1. **நாட்டின் அங்காடிகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்:** பின்தங்கிய நாடுகளில் அங்காடி சக்திகள் சரிவர இயங்காததற்கு அறியாமையும், பிரபலமும் இல்லாததே காரணம் ஆகும். நாட்டில் பெரும்பாலான பகுதியில் பணமாற்ற பறிமாற்றம் நடைபெறுகிறது. பண்டங்கள், உற்பத்திக் காரணிகள், பணம், மூலதன அங்காடிகள் அமைப்புமுறை ஆகியவை ஒழுங்குற அமைக்கப்படவில்லை. எனவே, திட்டமிட்டப் பொருளாதாரமே அங்காடிப் பொருளாதராத்திற்கு சிறந்த மாற்றாகக் கருதப்படுகிறது.

2. **வேலையின்மையை அகற்றுதல்:** மூலதனக் குறைவும், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஏற்படுவதால் அதிகரித்துவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலை வாய்ப்பை உருவாக்குவது அரசுகளுக்கு அறை கூவலாக உள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மையையும் மறைமுக வேலையின்மையையும் அகற்றத் திட்டமிடுதல் அவசியமாகும்.

3. சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்: பொருளாதாரத்தின் பல துறை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான பெரிய நிறுவனங்கள் இல்லாத சூழ்நிலையில் திட்டக்குழுவே சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும். பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், சமூகக் கட்டமைப்பு, உள்நாட்டு வாணிகம் பன்னாட்டு வாணிகம் ஆகியத் துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெறத் தேவைப்படுகிறது.

i) **வேளாண் துறை, தொழில்துறை முன்னேற்றம்:** வேளாண்துறையும் தொழில்துறையும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதால் வேளாண் துறையும், தொழில் துறையும் சேர்ந்து முன்னேற்றமடைய வேண்டியுள்ளது. வேளாண்துறையைச் சீர்படுத்தும்போது அதில் உள்ள உபரியான தொழிலாளர்களை தொழில் துறை ஈர்த்துக் கொள்ளும். வேளாண் துறையின் வளர்ச்சியினால் தொழில் துறைக்கு தேவையான இடுபொருள் கிடைக்கும். இதனால் வேளாண்மையுடன் தொழில்துறையும் வளரும்.

ii) **கட்டமைப்பு முன்னேற்றம்:** வேளாண்துறையும் தொழில்துறையும் பொருளாதார, சமூக கட்டமைப்பு இல்லாமல் முன்னேற்றம் பெறமுடியாது. பாசனக் கால்வாய்கள், சாலைகள், தொடர்வண்டிப்பாதைகள், ஆற்றல் வளம் முதலானவற்றை ஏற்படுத்துதல் என்பது வேளாண் துறைக்கும் தொழில் துறைக்கும் மிக முக்கியமானதாகும். கட்டமைப்பு அமைக்க அதிகமான மூலதனமும் நீண்ட பலன்தரும் சில காலங்கள் எடுக்கும், மேலும் குறைவான வெளியீடுகளைத்

தரக்கூடியவை. அரசு மட்டுமே வலிமையான கட்டமைப்பைத் திட்டமிடல் மூலம் ஏற்படுத்த முடியும்.

iii) **பண அங்காடி மூலதன அங்காடி ஆகியவற்றின் முன்னேற்றம்:** உள்நாட்டு, பன்னாட்டு வாணிபங்கள் வளர்ச்சி பெற வேளாண்துறை, தொழில் துறை, சமூக, பொருளாதார கட்டமைப்புகளில் பங்களிப்பு மட்டுமல்லாது நிதி நிறுவனங்களின் பங்களிப்பும் அவசியமானதாகும். பண அங்காடியும் மூலதன அங்காடியும் பின்தங்கிய நாடுகளில் குறைவாக உள்ளன. இது தொழில் வாணிக வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. எனவே உறுதியான பணம் அங்காடியையும் மற்றும் மூலதன அங்காடியையும் உருவாக்கத் திட்டமிடல் என்பது அவசியமாகும்.

4. **திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்.** திட்டமிடல் என்பது மட்டுமே பின்தங்கிய நாடுகள், நாட்டு வருமானம், தலா வருமானத்தை அதிகரிக்கவும், வறுமையையும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் செய்கிறது. இந்த 65 ஆண்டுகளில் இவை நடந்ததா?

எனவே ஆர்தர் லூயிஸ், "பின்தங்கிய நாடுகளில் நாட்டு வருமானத்தை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மிகவும் அவசியம், இதற்குத் திட்டமிடல் என்பது வழிகளையும், வழிமுறையையும் கொண்ட ஒரு சாதனமாகத் திகழ்கிறது"

11.7.3. திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள்

அங்காடி இயங்காமல் தோல்வியடைந்ததால் அரசு திட்டமிடல் மூலம் தலையிடும் அவசியம் உருவானது. பொருளாதாரத் திட்டமிடுதலின் முக்கியமான நோக்கம் வளர்ந்த நாடுகளில் பொருளாதார நிலைத்தன்மையை அடைவது, பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சியைப் பெறுவதாகும். திட்டமிடுதல் என்பது குறைகளற்றப் பொருளாதாரக் கொள்கை எனவும் கருதிவிட முடியாது. இவை தனியார் முயற்சியைத் தடுக்கும், தேர்ந்தெடுத்தலின் உரிமையை முடக்கவும், நிருவாகச் செலவு அதிகரிக்கவும், தானாகவே விலை நிர்ணய முறையைச் சரிசெய்வதை நிறுத்தவும் செய்கிறது. திட்டமிடலுக்கு எதிரான வாதங்களையும் குறைகளையும் புரிந்து கொள்வோம்.

1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை

தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது. திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது. தலையிடாப் பொருளாதாரத்தில் நுகர்வு, பணியைத் தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன்விருப்பம் போல் முடிவெடுக்க உள்ள அனுமதி உள்ளது. ஆனால் திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது. இது நுகர்வோர், உற்பத்தியாளர், பணியாளர்களைக் கட்டுப்படுத்துகிறது. ஹேயக் எழுதிய "அடிமைத்தனத்திற்கான பாதை" என்னும் நூலில் மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் மக்களின் பொருளாதார விடுதலையைக் கட்டுப்படுத்தி நாட்டை மந்தநிலைக்கு இட்டுச்

செல்லும், எனக் கருத்துத் தெரிவிக்கிறார். அரசின் முடிவுகள் அனைத்தும் எப்பொழுதும் சரியாக இருப்பதில்லை. ஆனால் தனியார் உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கும்போது, அதனை தவறாகப் பயன்படுத்தப்பட்டு, மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு , இலாபம் ஒன்றுக்கே மிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

2. தன் முனைப்புக் குறைதல்

மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல், புதுமைகளைப் புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது. திட்டமிடுதலானது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டுபண்ணும். இது வளர்ச்சியைக் கீழ்க்காணும் வழிகளில் தடுக்கிறது.

அ. தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கைக் குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது. அபரிதமான இலாபமே புதிய வழிமுறைகளைத் தேடவும், அதனைச் செயல்படுத்தவும், அதில் வரும் இடர் தாங்கி புதுமையைப் புகுத்தி இலாபத்தைப் பெறத் தூண்டும். ஆனால் திட்டமிடுதலில் இந்தத் தூண்டுதல் இல்லை

ஆ. திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் அவர்களது முயற்சி, திறமை, உற்பத்தித் திறன் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளாமல் சமமான பலன்கள் வழங்கப்படுவதால், எவரும் இடர்பாடுகளை ஏற்று புதிய நிறுவனத்தை துவக்க முன் வர மாட்டார்கள்.

இ. உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் போக்குத் திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. சமவுடைமைப் பொருளாதார நாடுகள் திட்டமிடலில் சந்திக்கும் சிக்கல் இது. அரசுப் பணிகளைப் பயன்படுத்துவதில் கால விரயமாகிறது. இது பொருளீட்டும் நடவடிக்கையையே சீர்குலைக்கிறது.

3. அதிகமான நிருவாகச் செலவு

திட்டமிடலின் நோக்கமென்னவோ தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியன உயர்வானவை. ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கும். புள்ளிவிவரங்களைச் சேகரித்து, தொகுத்து திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தி நிருவகிப்பதில் தேவைப்படும் பணியாளர் எண்ணிக்கை மிக அதிகம். லூயிஸ் இதைப்பற்றி குறிப்பிடும்பொழுது "திட்டமிடல் சிறப்பாக அமையவேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார்". சரியான புள்ளிவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலை சரிவர செயல்படுத்தது ஆகியவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை நிலைக்குக் கொண்டு செல்லும்.

4. முன்கணிப்பதில் உள்ள இடர்கள்

அரசு தடையில்லாத நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை, அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்றையொன்று சரி செய்து கொள்கின்றன. உற்பத்தியாளர்கள் தங்களது அளிப்பையும், நுகர்வோர்கள் தங்களது தேவைகளையும் விலை மாற்றத்துக்கேற்றவாறு சரிசெய்து கொள்வார்கள். திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வும் உற்பத்தி

அளவுகளைத் துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம். உபரி அளிப்போ, உபரித் தேவையோ அங்காடிப் பொருளாதாரத்தில் ஏற்படலாம். அமெரிக்கா முதலான முதலாளித்துவ நாடுகளில் இது ஏற்பட்டுள்ளது.

திட்டமிடலின் குறைகளனைத்தும் மையப்படுத்தப்பட்டத் திட்டமிடல் முறையின் குறைகளாகும். பரவலாக்கப்பட்டத் திட்டமிடல் முறை கலப்பு பொருளாதார நாடுகளில் தனியார் மற்றும் அரசுத்துறைகளுக்குச் சமமான இடம் கொடுத்து சிறப்பாக செயல்படுகிறது. திட்டமிட்டப் பொருளாதாரம் அங்காடிப் பொருளாதாரத்தைவிட திறம்பட செயல்படுவதாகவே தோன்றுகிறது. எனவே பொருளாதார முன்னேற்றத்துக்காகத் திட்டமிடுவதா வேண்டாமா என்பதல்ல சிக்கல். அரசு தலையிடுதலையும், அங்காடி இயங்குதலையும் சரியான விகிதத்தில் கலந்து அனுமதிப்பதால் விரைவான அதேநேரத்தில் நிலையான பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக சமத்துவத்தையும் திட்டமிடுதல் மூலம் சாதிக்க முடியும் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

11.8 திட்டமிடலின் வகைகள்



பொருளாதார முன்னேற்ற இலக்குகளை ஒரு குறிப்பிட்டக்கால வரம்புக்குள் அடைய மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் குறிக்கும் செயல்பாடே பொருளாதாரத் திட்டமிடலாகும். திட்டமிடல். கோட்பாடு மற்றும் செயல்படுத்தப்படும் விதங்களின் அடிப்படையில் பலவகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. மக்களாட்சி முறைத்திட்டமிடலும் சர்வாதிகாரத் திட்டமிடலும் (Democratic vs Totalitarian Planning)

திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகியவற்றில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல். அரசு, தனியாரையும் பொது மக்களையும் உள்ளடக்கிய மிகப்பரவலான ஆலோசனைகளைப் பெற்றுத் தயாரிக்கப்பட்டு, அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல் முறையாகும். திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட திட்ட வழிமுறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை அந்நாட்டின் பாராளுமன்றம் ஏற்கவோ மறுக்கவோ, மாற்றியக்கவோ செய்யும்.

12-Economics-Tamil-Chapter_11.indd 288 12-01-2023 17:09:22

சர்வாதிகார திட்டமிடல்

மையத் திட்டக் குழு ஒரு திட்டத்தைக் கையில் வைத்துக் கொண்டு நாட்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி, விரும்பிய திசையில் நடைபெற வைப்பதே சர்வாதிகாரத் திட்டமிடல்.

சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாட்டின் படியும் வழிகாட்டுதலின் படியும் ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிமாற்றம், பகிர்வு ஆகிய அனைத்துமே அரசுக் கட்டுபாட்டிலிருக்கும். திட்டக் குழுவே அதிகாரமிக்க அங்கமாகும். இலக்குகள், செயல் முறைகள், ஒதுக்கீடுகள், செயல்படுத்துதல் ஆகியவை திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும்.

2. மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலும் பரவலாக்கப்பட்ட திட்டமிடலும் (Centralized Vs Decentralized Planning)



மையப்படுத்தப்பட்டத் திட்டமிடல்
Vs
பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்

மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும். திட்டக்குழுவே திட்டம் தீட்டுதல், நோக்கங்களை நிர்ணயித்தல், இலக்குகளைக் கண்டறிதல், தீர்மானித்தல் ஆகியவற்றை செய்கிறது. 'மேலிருந்து திட்டமிடல்' என்றும் இதைக் கூறலாம்.

பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள், உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் ஆகியவற்றைச் செய்யும். எனவே இதை 'கீழிருந்து திட்டமிடல்' எனவும் அழைக்கலாம்.

3. வழிகாட்டும் திட்டமிடலும் தூண்டும் திட்டமிடலும்

திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும். முன்பே முடிவு செய்யப்பட்ட இலக்குகள் அடிப்படையிலும் முன்னுரிமைகள் அடிப்படைலும் திட்டம் செயல்படுத்தப்படும்.

திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளைப் பல்வேறு நிதியியல் வழிமுறைகள் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதே தூண்டும் திட்டமிடல் என்கிறோம். மானியம் முதலான சலுகைகள் கொடுத்து ஒரு பொருளை உற்பத்தி செய்ய வைக்க முடியும். தூண்டும் திட்டமிடுதலில் தனிமனித விடுதலையைக் குறைக்காமல் அதே பலனைப் பெற வைக்கும் தன்மை கொண்டது.

12-Economics-Tamil-Chapter_11.indd 289 12-01-2023 17:09:22

4. சுட்டிக்காட்டும் திட்டமிடலும் கட்டாயமானத் திட்டமிடலும் (Indicative Vs Imperative Planning)

கலப்புப் பொருளாதார நாடுகளுக்கு பொருத்தமானத் திட்டமிடல் முறையாக "மோனட் திட்டம்" என்ற பெயரில் பிரான்ஸ் நாடானது 1947 ஆம் ஆண்டி லிருந்து 1950 வரை செயல்படுத்தியது. திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளைக் குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் பிற துறை நிபுணர்கள் ஆகியோரிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும். அரசு பொருளாதார நடவடிக்கைகளை செயல்படுத்த, இலக்குகளை நிர்ணயம் செய்து, அவற்றை தனியார் நிறுவனங்கள் அடைவதற்கு தேவையான வசதிகளை அமைத்துக்கொடுத்து, ஒருங்கிணைக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளும் வகையில் திட்டமிடல் அமைந்திருக்கும்.

கண்டிப்பானத் திட்டமிடல் முறையில், திட்டம் தயாரித்தலிலும் மற்றும் செயல்படுத்துதலிலும் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்விதத் தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும். இரஷ்யாவின் அப்போதைய குடியரசுத் தலைவர் ஜோசஃப் ஸ்டாலின் "நமது திட்டம் நமக்கான அறிவுரைகளாகும்" என்பதைப் பயன்படுத்தினார். அனைத்து வளங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இங்கு நுகர்வோர் இறையாண்மை இருக்காது. அரசின் கொள்கைகளும் வழிமுறைகளும் மாறாது நிலையாக இருக்கும். சீனாவும், இரஷ்யாவும் இந்தத் திட்டமுறைகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளாகும்.

5. குறுகிய கால, நடுத்தரக் கால, நீண்டகாலத் திட்டமிடல்

ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகியகாலத் திட்டங்களாகும். "கட்டுப்படுத்தும் திட்டம்", "ஆண்டுத் திட்டம்" எனவும் அறியப்படுகிறது.

மூன்றிலிருந்து ஏழு ஆண்டுக் காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும். பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன. நிதி மட்டுமல்லாமல் கட்டமைப்பு வளங்களும் இத்திட்டமிடல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல். இவை 'முன்னோக்குத் திட்டங்கள்' எனவும் அழைக்கப்படுகின்றன. பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதே நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையாகும்.

6. நிதித்திட்டமிடல், உருவப் பொருள் திட்டமிடல் (Finacial Vs physical planning)

திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்திட்டமிடலாகும். உருவப்பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம், இயந்திரங்கள் முதலான பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

7. பணிகள் திட்டமிடலும் கட்டமைப்புத் திட்டமிடலும் (Functional Vs Structural Planning)

ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார, சமூக அமைப்பு முறையை மாற்றாமல் பொருளாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கு

12-Economics-Tamil-Chapter_11.indd 290 12-01-2023 17:09:22

வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல், பணிகள் திட்டமிடலாகும்.

பொருளாதார அமைப்புமுறையில் பொருத்தமான மாற்றங்களைச் செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும். இவ்வகையான திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் இது காணப்படுகிறது.

8. விரிவானத் திட்டமிடலும் பகுதித் திட்டமிடலும்

நாட்டின் அனைத்துப் பொருளாதாரச் சிக்கல்களையும் தீர்பதற்கானத் திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும். ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடையத் தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

திட்டமிடல்



நீண்டகாலம் 10 ஆண்டுகளுக்கு மேல்	நடுத்தர காலம் 3 – 7 ஆண்டுகள்	குறுகிய காலம் 1 – ஆண்டு வரை
நீண்ட காலத் திட்டமிடல் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – வியூகத்திட்டமிடல்	நடுத்தர காலத் திட்டமிடல் 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – தந்திரமான திட்டமிடல்	குறுகிய காலத் திட்டமிடல் ஆண்டு வரை ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது – செயல்பாட்டுத் திட்டமிடல்

11.9 நிதி ஆயோக் (NITI Aayog)

P73N0

National Institution for Transforming India என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும். இதனை இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என புரிந்து கொள்ளலாம். இதனை 2014–ஆம் ஆண்டு ஆகஸ்டு 13, திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது. இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர். மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆவர். இதன் துணைத்தலைவரே நிருவாகத் தலைவராவார். அரவிந்த் பனகரியா இதன் முதலாவது துணைத்தலைவராகச் செயல்பட்டு வருகிறார்.

நிதி ஆயோக் சிறந்த நிருவாகமான 7 தூண்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

11.9.1. நிதி ஆயோக்கின் பணிகள்

நிதி ஆயோக்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சியும்

மாநிலங்கள் நாட்டின் கொள்கை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றைச் செய்வது

2. நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்

நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள், உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல்

3. பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்

திட்டமிடல் நடைமுறையைக் கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றம் கொண்டுவருதல்.

12-Economics-Tamil-Chapter_11.indd 292 12-01-2023 17:09:24

4. தொலை நோக்கும் காட்சித் திட்டமிடலும்

நாட்டின் எதிர்காலத்தைக் கவனத்தில் கொண்டு இடைக்கால, நீண்டகால, தொலை நோக்குக் கட்டமைப்பை வடிவமைத்தல்.

5. நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்

அரசின் கொள்கைகள் வடிவமைப்பதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் அரசுக்கு வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்குபெற வைத்தல்.

6. உகந்ததாக்குதல்

அரசின் பல படிநிலைகளில் பணியாற்றுபவர்களைக் குறிப்பாக பலதுறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் சிக்கல்களைக் களைய தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், கைகோத்தல் கூட்டிணைத்தல் ஆகியவை மூலம் உகந்தப் பணியை நிதி ஆயோக் செய்கிறது.

7. சச்சரவுத் தீர்த்தல்

அரசுத் திட்டங்களை வேகமாக செயல்படுத்த ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையில், மாநிலங்களுக்கிடையில், அரசுத் துறைகளுக்கிடையில், பிற துறைகளுக்கிடையில் நிலவும் சச்சரவுகளுக்குத் தீர்வுகாண ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது.

8. வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்

வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி வளங்களையும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் பெற்றுத்தரும் பொறுப்பு அலுவலகமாக நிதி ஆயோக் செயல்படும்.

9. உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்

கொள்கைகள் திட்டங்கள் ஆகியவற்றை வகுக்க மாநில ஒன்றிய அரசுக்கும் மைய அரசுகளுக்கும் ஆலோசனைகளை வழங்குகிறது.

10. திறன் உருவாக்குதல்

அரசுத் துறைகளில் திறனை வளர்க்கவும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உலக அளவில் தற்போது நடைமுறையில் உள்ள தர அளவுகோல்களைக் கொண்டும், மேலாண்மை நுட்பங்கள் வழியாகவும் திறன் உருவாக்கும் பணியையும் நிதி ஆயோக் செய்கிறது.

11. கண்காணித்தலும் மற்றும் மதிப்பிடுதலும்

அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிதி ஆயோக் கண்காணித்து அதன் விளைவுகளை மதிப்பீடும் செய்கிறது.

அடல் புத்தாக்க கொள்கை, ஆயுஸ்மான் பாரத் அணுகுமுறை ஆகியவை தண்ணீர் வளங்களைப் பாதுகாக்கும் விதமாகவும், இந்திய மருத்துவக் கழகத்திற்கு தேசிய மருத்துவ வாரியம் என பெயர் மாற்றம் செய்வதற்கும் நாடாளுமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தது நிதி ஆயோக்.

நிதி ஆயோக் பொறுப்புணர்வையும் உருவாக்குகிறது. இதன் கண்காணிப்பு, மதிப்பீட்டு அலுவலகம் அரசின் பல்வேறு துறைகளின் அலுவலகங்களில் புள்ளி விவரத்தைச் சேகரித்து அவற்றின் செயல்பாட்டைக் கண்காணிக்கிறது. மாநிலங்களையும் வரிசைப்படுத்தி போட்டியடிப்படையிலான கூட்டாட்சி உணர்வை வளர்க்கிறது. நிதி ஆயோக்கின் வெற்றியைக் குறிப்பிட்ட காலங்களுக்குப் பிறகே கணிக்க முடியும்.

தொகுப்புரை

இந்த இயலின் முதல் பகுதியில், 20–ஆம் நூற்றாண்டில் பொருளாதார வளரச்சியின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தது. பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் எனும் கருத்து ஒன்றுபோல் இருந்தாலும் சிறு வேறுபாடுகள் உள்ளன என்பதை எடுத்துரைத்தது. பொருளாதார வளர்ச்சியை நிர்ணயிக்கும் பல காரணிகள் பொருளாதாரம் சார்ந்த காரணிகள், பொருளாதாரம் சாரா காரணிகள் என வகைப்படுத்தப்பட்டன. பொருளாதார முன்னேற்றம் தடைப்படுவதற்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் வறுமை நச்சு சுழற்சி முக்கியமான காரணியாகக் காணப்படுகிறது. இந்த இயலின் இரண்டாம் பகுதி திட்டமிடுதலை எடுத்துரைக்கிறது. அங்காடி அமைப்பின் தோல்விதான் திட்டமிடுதலுக்கு வழிவகுத்தது. இவை இரஷ்யா இந்தியா முதலான கலப்புப் பொருளாதார நாடுகளுக்குப் பரவியது. பலகாரணங்களும், விவாதங்களும் திட்டமிடலுக்குச் சாதகமாகவும் சில காரணங்கள் பாதகமாகவும் செயல்படுகின்றன. திட்டமிடும் முறைகள் அரசின் கட்டுப்பாடு அடிப்படையில் பல்வேறு வகைகளாகக் காணப்படுகின்றன. இது சமவுடைமை நாடுகளில் சர்வாதிகார முறையும், பிரான்ஸ் முதலான நாடுகளில் மக்களாட்சியும் சுட்டிக்காட்டும் திட்டமிடலும் உள்ளன. இந்தியத் திட்டக்குழுவை நீக்கிவிட்டு நிதி ஆயோக் என்ற புதிய நிறுவனம் துவங்கப்பட்டதையும் இந்தப் பாடத்தில் கற்றுக் கொண்டோம்.

கலைச்சொற்கள்

- **வளர்ச்சி:** பொருளாதார வளர்ச்சி என்பது உண்மை மொத்த நாட்டு உற்பத்தி அதிகரிப்பதைக் குறிக்கும். இது உற்பத்தியின் மதிப்பின் அடிப்படையிலோ அல்லதுநாட்டின்செலவின்அடிப்படையிலோ இருக்கும்.
- **முன்னேற்றம்:** அறிவியல், தொழில் நுட்பத்தை ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை தேவையை அடைய பயன்படுத்தும் வழிமுறையைக் குறிக்கும்.
- **சமூகக் குறியீடுகள்:** பொது மக்கள் நலவாழ்வு, கல்வி, துப்புரவு, குடிநீர், உணவு, வசிப்பிடம் முதலானவை பொருளாதார முன்னேற்றத்தை அளவிடும் சமூகக் குறியீடுகள்
- **மூலதன ஆக்கம்:** நாட்டிலிருக்கும் மூலதனத்தில் புதிதாக நடப்பு ஆண்டில் சேர்ந்த மூலதனம்.
- **நிதித் திட்டமிடல்:** பண மதிப்பில் வளங்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறை
- **உருவகத் திட்டமிடல்:** பொருள், மனிதவளம் இயந்திரங்களாக வளங்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறை
- **முன்னோக்குத் திட்டமிடல்:** பதினைந்திலிருந்து முப்பதாண்டுகளுக்கு நீண்டகாலத் திட்டமிடல் முறையே முன்னோக்குத் திட்டமிடல் முறை
- **வளர்ச்சி குறைந்த பொருளாதாரம்:** குறைவான தலா வருமானம், பரவலான வறுமை, குறைவான கல்வி நிலை, குறைவான சராசரி வாழ்நாள் முதலான பண்புக் கூறுகள் குறைவான முன்னேற்றத்தைக் குறிக்கின்றன.
- **மனித மூலதனம்:** மனிதர்களை அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்களாக உருவாக்கும் கல்வியும் பயிற்சியும் மனித மூலதனமாகும்

12-Economics-Tamil-Chapter_11.indd 294 12-01-2023 17:09:25

- **வறுமை நச்சுச் சுழற்சி:** பின்தங்கிய நாடுகளில் சுழற்சி தொடர்புடையவற்றால் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கச் செய்வதைக் குறிப்பது
- **திட்டமிடல்:** குறிப்பிட்ட காலத்துக்குள் இலக்குகளை அடையும் திசையில் பொருளாதார செயல்பாடுகளைச் செய்வதையே திட்டமிடல் என்கிறோம்
- **மையப்படுத்தப்பட்ட திட்டமிடல்:** திட்டமிடல் நடவடிக்கை முழுவதும் மையத் திட்டக்குழுவின் அதிகாரத்திற்குள் இருக்கும் வகையானத் திட்டமிடல் முறை

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

AXZSP

சரியான விடையை தெரிவு செய்க:

1. "வளர்ச்சியுடன் கூடிய மறுபகிர்வு" கீழ்க்காணும் எந்த அனுகுமுறையின் புகழ்பெற்ற முழக்கம் இது.

   அ) பழமையான அணுகுமுறை
   ஆ) புதிய பொது நல அணுகுமுறை
   இ) தொழில் அணுகுமுறை
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. பின்வருவனவற்றுள் பொருளாதார வளர்ச்சியின் தன்மை இல்லாதவை எவை?

   அ) வளர்ந்த நாடுகளைப் பற்றியது
   ஆ) படிப்படியான மாற்றம்
   இ) எண்களின் அடிப்படையில் அமைந்தது
   ஈ) விரிவான கருத்து

3. கீழ்க்காண்பவற்றுள் எது பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்

   அ) வறுமை நச்சுச் சுழற்சி
   ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்
   இ) தொழில்சாலைகள் வளர்ச்சி
   ஈ) அதிக அளவில் நகர்மயமாதல்

4. கீழ்க்காண்பவற்றுள் எந்தப் பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது

   அ) இயற்கை வளங்கள்
   ஆ)மனிதவளங்கள்.
   இ) மூலதன உருவாக்கம்
   ஈ)பன்னாட்டு வாணிகம்

5. பொருளாதார வளர்ச்சி _________ ஐ அளவிடுகிறது

   அ) உற்பத்தித் திறன் வளர்ச்சி
   ஆ) பெயரளவு வருமான அதிகரிப்பு
   இ) உற்பத்தி அதிகரிப்பு
   ஈ) இவை எதுவுமில்லை

6. அளிப்பு பக்கத்திலிருந்து இயங்கும் வறுமை நச்சுச் சுழற்சியின்படி ஏழைநாடுகள் ஏழையாகவே இருக்கின்றன ஏனென்றால்

   அ) சேமிப்புக் குறைவாகவே உள்ளது
   ஆ) முதலீடு குறைவாகவே உள்ளது
   இ) திறன் மிக்க அரசு இல்லை
   ஈ) அ மற்றும் ஆ

12-Economics-Tamil-Chapter_11.indd 295 12-01-2023 17:09:25

7. கீழ்க்காணும் எந்தத் திட்டம், வேளாண்மையும் கிராமப் பொருளாதாரத்தையும் மையமாகக் கொண்டது?

அ) மக்கள் திட்டம்
ஆ) பாம்பே திட்டம்
இ) காந்தியத் திட்டம்
ஈ) விஸ்வேசுவரய்யா திட்டம்

8. கீழ்க்காணும் திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் கால வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்

i) மக்கள் திட்டம்
ii) பாம்பே திட்டம்
iii) ஜவகர்லால் நேரு திட்டம்
iv) விசுவேசுவரய்யா திட்டம்

அ)	i)	ii)	iii)	iv)
ஆ)	iv)	iii)	ii)	i)
இ)	i)	ii)	iv)	iii)
ஈ)	ii)	i)	iv)	iii)

9. எம். என். இராய் வழங்கியத் திட்டம் கீழ்க்காண்பவைகளில் எது?

அ) காங்கிரஸ் திட்டம்
ஆ) மக்கள் திட்டம்
இ) பாம்பே திட்டம்
ஈ) இவை எதுவுமில்லை

10. சுட்டிக்காட்டும் திட்டமிடலைச் செயல்படுத்திய நாடு

அ) பிரான்சு
ஆ) ஜெர்மனி
இ) இத்தாலி
ஈ) இரஷ்யா

11. குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர்

அ) கட்டுப்படுத்தும் திட்டம்
ஆ) கட்டுபாட்டை நீக்கும் திட்டம்
இ) சுழல் திட்டம்
ஈ) சுழற்சியற்ற திட்டம்

12. நீண்டகாலத் திட்டத்தின் மற்றொரு பெயர்

அ) மேம்பாட்டுத் திட்டம்
ஆ) மேம்பாடு இல்லாத திட்டம்
இ) முன்னோக்குத் திட்டம்
ஈ) முன்னோக்கமற்ற திட்டம்

13. நீண்ட காலத்திட்டமிடலின் அடிப்படைக் கருத்து நாட்டின் _______மாற்றமாகும்

அ) நிதி
ஆ) வேளாண்மை
இ) தொழில்
ஈ) கட்டமைப்பு

14. சர்வோதாயத் திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?

அ) மகத்மா காந்தி
ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
இ) எஸ்.என்.அகர்வால்
ஈ) எம்.என்.இராய்

15. இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு __________

அ) 1950
ஆ) 1951
இ) 1947
ஈ)1948

12-Economics-Tamil-Chapter_11.indd 296 12-01-2023 17:09:25

16. "அடிமைத்தனத்திற்கான பாதை" எனும் புத்தகத்தை எழுதியவர் யார்?
    அ) பிரடெரிக் ஹேயக்
    ஆ) ஜெ.ஆர் ஹிக்ஸ்
    இ) டேவிட் ரிக்கார்டோ
    ஈ) டி.ஆர். மால்தஸ்

17. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர்__________.
    அ) குறுகிய காலத் திட்டமிடல்
    ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
    இ) நீண்ட காலத் திட்டமிடல்
    ஈ) இவை எதுவுமில்லை

18. நிதி ஆயோக் கீழ்க்காணும் எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
    அ) குடியரசு தலைவரின் அவசர ஆணை
    ஆ) குடியரசு தலைவரின் சுற்றறிக்கை
    இ) அமைச்சரவைத் தீர்மானம்
    ஈ) இவை எதுவுமில்லை

19. நிதி ஆயோக்கின் (NITI Aayog) சரியான ஆங்கில விரிவாக்கம்
    அ) National Institute for Transport in India
    ஆ) National Institute for Trade in India
    இ) National Institute for Tomorrow's India
    ஈ) National Institution for Transforming India

20. சட்டப்படியாக நிதி ஆயோக்கின் தலைவராகக் கீழ்க்காணும் எந்தப் பதவியில் உள்ள ஒருவர் செயல்படுவார்?
    அ) பிரதமர்
    ஆ) குடியரசுத் தலைவர்
    இ) உதவிக் குடியரசுத் தலைவர்
    ஈ) நிதி அமைச்சர்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
ஆ	ஈ	அ	ஆ	இ	ஈ	இ	ஆ	ஆ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
அ	இ	ஈ	ஆ	அ	அ	இ	இ	ஈ	அ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. பொருளாதார முன்னேற்றம் – வரையறு
22. பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக
23. பொருளாதார வளர்ச்சியிலிருந்து முன்னேற்றத்தை வேறுபடுத்துக
24. மொத்த நாட்டு உற்பத்தி என்றால் என்ன?
25. பொருளாதாரத் திட்டமிடலின் வரைவிலக்கணம் எழுதுக
26. பொருளாதார முன்னேற்றத்தின் சமூகக் குறியீடுகளைப் பட்டியலிடுக
27. நிதி ஆயோக் பற்றிக் குறிப்பு வரைக.

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. வறுமை நச்சுச் சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுப்படுத்துக
29. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
30. வறுமை நச்சுச் சுழற்சியை எப்படித் தடுப்பது?
31. இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் படிநிலை வளர்ச்சியை மதிப்பிடுக.
32. திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துகளை விவரி
33. செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்குமிடையேயான வேறுபாடுகள எழுதுக
34. நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்
36. பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி
37. திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்

பார்வை நூல்கள்

1. Jhingan M.L. (2011). The Economics of Development and Planning, 40th Edition, Vrinda Publications (P) Ltd.
2. Todaro M.P and Smith S.C, (2011). Economic Development , Addison Wesley, New York
3. Vaidehi Shriram Daptardar (2015): India: Economic Policies and Performances – 1947–48 to 2015–16, New Century Publications, New Delhi.

இயல் 12

புள்ளியியல் முறைகளும் பொருளாதார அளவையியலும் ஓர் அறிமுகம்

"புள்ளியியல் என்பது அறிவியலின் இலக்கணம்"

– கார்ல் பியர்சன்

புரிதலின் நோக்கங்கள்

1 புள்ளியில் நுட்பங்களை அறிந்து கொண்டு பொருளாதாரச் சிக்கல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கான அறிவைப் பெறுவது

2 பொருளாதார அளவையியலின் அடிப்படைகளையும் அதன் பயன்பாட்டையும் அறிந்துகொள்வது.

12.1 புள்ளியியல் – சொல் பிறப்பியலும், புள்ளியிலின் வளர்ச்சிக் கட்டங்களும்

புள்ளியியல் (Statistics) எனும் சொல் உலகின் மேலை நாடுகளில் இருந்து பிறந்தது. இதனை 'ஸ்டேட்டஸ்' ('Status') என இலத்தீனிலும், 'ஸ்டேட்டிஸ்டிக்' ('Statistik') என ஜெர்மனிலும், 'ஸ்டேட்டிஸ்க்' ('Statisque') என பிரெஞ்சு மொழியிலும் பலவகையாக அழைக்கப்பட்டது. பல்வேறு நாடுகளின் அரசியல் அறிவியல் எனப் பொருள்படும் வகையில் 1749 ஆம் ஆண்டு காட்பிரீட் ஆக்கன்வால் என்பவர் இதனை 'ஸ்டேட்டிஸ்டிக்' ('Statistik') என அழைத்தார்.

புள்ளியியலின் முதல் புத்தகமாக "உயிர்ப் புள்ளியியலின் பங்களிப்புகள்" (Contributions to Vital Statistics) எனும் தலைப்பில் பிரான்சிஸ் ஜி.பி. நெய்சன் 1845–ஆம் ஆண்டு வெளியிட்டார். இது மக்களின் பிறப்பு இறப்பு விவரங்களைப் பற்றிய முறையான தொகுப்பாக இருந்தது.

புள்ளியியலின் தந்தை


ரொனால்டு பிஷர்

கடந்த நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டில் வாழ்ந்த தாவரவியல் அறிஞர் ரொனால்டு பிஷர் புள்ளியியலில் அடிப்படை நெறிமுறைகளை ஏற்படுத்தினார். அவருடைய புள்ளியியல் ஆய்வுகள் படிநிலை வளர்ச்சியைப் பகுப்பாய்வு செய்யவும் புதிய மரபியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாகவும் அமைந்துள்ளன.

முக்கியமான புள்ளியியல் பங்களிப்பினை ஆர்.ஏ.ஃபிஷர் (1890–1962) உடற்கூறு மரபியல், உளவியல், கல்வியியல், வேளாண்மை மற்றும் இதர துறைகளுக்கான பயன்பாட்டினை விரிவாக்கினார். இதனுடன், மதிப்பீட்டுக் கோட்பாடு, மாறுபாட்டுப் பகுப்பாய்வு, வடிவமைப்புச் சோதனைகள் முதலான புள்ளியியல் பாடங்களின் முதன்மையாளராக இருந்தார். அதனால் அவர் புள்ளியியலின் தந்தை எனப்படுகிறார்.

12.2 இந்தியாவில் புள்ளியியலின் வளர்ச்சி

பி.சி. மஹலநோபிஸ்

இந்தியாவில் சந்திரகுப்த மௌரியர் காலத்திலேயே புள்ளியியலைப் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவர் காலத்தில் பிறப்பு, இறப்பு பதிவுகளை உள்ளடக்கிய உயிர்ப் புள்ளியியல் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வந்தன. கி.மு. 300க்கு முன்பே இதைப்பற்றிய செய்திகள் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அக்பரின் ஆட்சிக் காலத்தில் நடத்தப்பட்ட புள்ளிவிவர, நிருவாகவிவர விசாரணைகள் பற்றி "அயினி அக்பரி" (Ain–e–Akbari, 1596–97) எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய புள்ளியியலின் நிறுவனர், இந்திய புள்ளியியலின் தந்தை என்றழைக்கப்படுபவர் பி.சி. மகலநோபிஸ் ஆவார். 2007 ஆம் ஆண்டு இருந்து அவரின் பிறந்த நாளான ஜுன் 29 புள்ளியியல் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

12.3 புள்ளியியல் – விளக்கம்

'புள்ளியியல்' எனும் பதம் தனிமை, பன்மை என இரண்டு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது. 'புள்ளியியல் முறை' (It Represents a Method of Study of Statistical Information) எனும் பொருளில் அறியப்படுகிறது. அதாவது, புள்ளி விவர சேகரிப்பு, விவரங்களை முறைப்படுத்தி வழங்குதல், பகுப்பாய்வு செய்தல், விவாதித்தல் என பல பகுதிகளை உள்ளடக்கிய தனிப் பாடமாக பார்க்கப்படுகிறது. இரண்டாவதாக இது பன்மையில் புள்ளிவிவரங்களைக் குறிப்பிடுகிறது (It Represents the Numerical Information).

புள்ளியியல் – இலக்கணங்கள்

"புள்ளியியல் என்பது மதிப்பீடுகளையும் நிகழ்தகவுகளையும் பற்றிய அறிவியல்"

– போடிங்டன்.

"புள்ளியியல் என்பது எண்ணிலான விவரங்களைத் திரட்டி, ஒருங்கிணைத்து வழங்கி, பகுத்தாய்ந்து, விவரிப்பது ஆகும்"

– கிராக்ஸ்டன், கௌடன் ஆகியோர்

12.4 புள்ளியிலின் பண்புகளும் பணிகளும்

i) **புள்ளியியல் என்பது விவரங்களின் தொகுப்பாகும்.** இது தனியொரு புள்ளிவிவரத்தை மட்டும் குறிக்காமல், புள்ளி விவரங்களின் தொகுப்பைக் குறிப்பதாகும்.

12-Economics-Tamil-Chapter_12.indd 300
12-01-2023 17:22:39

எடுத்துக்காட்டாக, இது ஒரு நாளின் உற்பத்தி, ஒரு நாளின் விற்பனை முதலானவற்றைக் குறிப்பதல்ல. ஒவ்வொரு நாளிலும் செய்யப்பட்ட உற்பத்தி, ஒவ்வொரு நாளிலும் செய்யப்பட்ட விற்பனைகள் முதலான புள்ளிவிவர தொடர்களின் தொகுப்பைக் குறிப்பதாகும்.

ii) **புள்ளியியல் என்பது எண்ணிக்கைகளைத் திரட்டுவது,** மதிப்பீடு செய்வதும் வெளிப்படுத்துவதும் ஆகும்.

iii) **புள்ளிவிவரத் திரட்டுதல் முறையானதாகவும் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட நோக்கத்துடனும் இருப்பது அவசியம்:** புள்ளிவிவரங்களைத் திரட்டுவதற்கான நோக்கம் முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டதாக இருந்தால்தான் அவ்விவரங்கள் துல்லியமானதாக இருக்கும்.

iv) **இது ஒப்பீடு செய்ய வசதியளிக்கும் நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாக இருக்க வேண்டும்:** இரு விவரத் தொகுப்புகள் இருக்கும்பொழுது, சராசரி, விகிதங்கள், கெழுக்கள் ஆகிய கருவிகள் அவ்வேறுபட்ட இரு விவரங்களை ஒப்பிட உதவியாக இருக்க வேண்டும்.

புள்ளியியலின் பணிகள்

- புள்ளியியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
- இது பரந்த விவரங்களைச் சுருக்கித் தருகிறது.
- இது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது.
- இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
- கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

12.5 புள்ளியியலின் இயல்புகள்

புள்ளியியலில் அறிவியல், கலையியல் ஆகிய இரண்டின் தன்மைகளும் கலந்திருக்கின்றன. முறைப்படுத்தப்பட்ட அறிவின் தொகுப்பினை அறிவியலாக காண்கின்றோம். அதே வகையில் புள்ளியியல் என்பது ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்பாகும். இது விவரங்களைப் பகுத்தாய்ந்து, அதன் அடிப்படையில் கோட்பாடுகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட கோட்பாடுகளை சோதனை செய்து துல்லியமான முடிவுகளை எடுக்கவும் உதவுகிறது. எனவே, புள்ளியியல் ஒரு அறிவியலாகப் பார்க்கப்படுகிறது. புள்ளி விவரங்களைக் கடந்து தனது பட்டறிவின் அடிப்படையிலும் எடுக்கப்பட்ட முடிவுகள் பார்க்கப்படுகின்றன. மேலும், விவரங்களைத் திரட்டுவது, அட்டவணையிடுவது, முடிவுகளை எடுப்பது, தீர்மானங்களைச் செய்வது என பல புள்ளிவிவர நடவடிக்கைகளில் கலையியலின் உட்கூறுகள் கலந்துள்ளன. இந்த அடிப்படையில் பார்த்தால் இது ஒரு கலையிலாகவும் விளங்குகிறது.

12.6 புள்ளியியலின் பரப்பு

புள்ளியியல் பரப்பு மிகவும் விரிந்ததாகும். மனிதனின் அனைத்து நடவடிக்கைகளிலும் அது பொதிந்துள்ளது. பொருளியல், தொழில், வணிகம், கல்வியியல், திட்டமிடல், மருத்துவம் ஆகிய பல துறைகளிலும் அது தேவைப்படுகிறது. பின்வரும் பகுதி புள்ளியியல் எவ்வாறு பல துறைகளில் பயன்படுத்தப்படுகிறது என்பதனை நமக்கு விளக்குகிறது.

பொருளியலில் புள்ளியியல்

பொருளியலில் பல சிக்கல்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக, உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு, பகிர்வு, நுகர்ச்சி, சேமிப்பு, செலவு, ஆகியவை தொடர்பான எண்ணற்ற ஆய்வுக்குரிய வினாக்கள் தோன்றும். வினாக்களுக்கு விடைதேடும் ஆய்வுகளுக்கு புள்ளிவிவரங்கள் இன்றியமையாதவை. எடுகோள்களை உருவாக்குவது, விவரங்களைத் திரட்டுவது, வகைப்படுத்துவது, பகுப்பாய்வு செய்வது, முடிவுகளை எடுப்பது, கொள்கைகளை வகுப்பது என புள்ளியியல் பொருளியலில் இரண்டறக் கலந்துள்ளது.

தொழிலில் புள்ளியியல்

தொழிற்சாலைகளில் புள்ளியலின் பயன்கள் குறிப்பிடத்தகுந்ததாக உள்ளன. மிக முக்கியமாக தரக்கட்டுப்பாட்டு நுட்பம் (Quality Control) இங்குப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட தரத்தில் பொருட்கள் இருக்கின்றனவா என்பதைச் சோதிக்க இந்தநுட்பம் பயன்படுகிறது.

புள்ளியிலும் வாணிகமும்

உயிர்வாழ இரத்தம் எவ்வளவு முக்கியமோ, அந்த அளவுக்கு வாணிகத்திற்கு புள்ளியியல் முக்கியமானதாகும். நடப்பு நிலைகளைப் புரிந்துகொள்ளவும், எதிர்காலப் போக்கினை உணர்ந்து கொள்ளவும் சந்தை ஆய்வுகள் மிகமுக்கியமான பங்காற்றுகின்றன. உற்பத்தியும், சந்தையிடலும் ஒருசேர நடப்பதில்லை. உற்பத்தியை முன்கூட்டியே திட்டமிட வேண்டியுள்ளது. அவ்வாறு திட்டமிடுவதற்கு புள்ளியியலின் தேவை அவசியமாகும்.

புள்ளியியலும் கல்வியியலும்

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய கல்விக்கான தேவையைக் கண்டறிவதில் புள்ளியியல் மிகப்பெரிய பங்கினை வகிக்கின்றது. அரசாலும் தனியாராலும் நடத்தப்படும் கல்வி நிலையங்களில் ஆய்வுத் துறைகளும் மேம்பாட்டுத் துறைகளும் இருக்கின்றன. இத்துறைக்குப் புள்ளிவிவரங்கள் பெரிதும் உதவுகின்றன. பழைய அறிவினைச் சோதித்துப் பார்ப்பதும், புதிய அறிவினைப் பெறுவதும் புள்ளிவிவரங்களின் மூலமே சாத்தியமாகும்.

புள்ளியியலும் திட்டமிடலும்

திட்டமிடலில் புள்ளியியல் தவிர்க்க இயலாத ஒன்றாகும். இன்றைய புதிய உலகு திட்டமிடல் உலகு எனப்படுகிறது. அனைத்து அரசுத் துறைகளும் சிறப்பாக இயங்கும் பொருட்டு திட்டமிடலின் அடிப்படையிலேயே செயல்படுகின்றன. முக்கியமான கொள்கை முடிவுகளை எடுப்பதிலும், அதை செயல்படுத்துவதிலும் புள்ளிவிவரங்கள் துணை செய்கின்றன. மேற்கூறியவற்றைச் செய்ய பல்வேறு புதிய புள்ளியியல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தியாவின் மைய, மாநில, உள்ளூர் அரசுகள் திட்டமிடலின் அடிப்படையிலேயே செயல்படுகின்றன.

புள்ளியியலும் மருத்துவமும்

மருத்துவத்தில் புள்ளியியல் பெருமளவுக்குப் பயன்படுகிறது. உடல் சோதனைகள் அனைத்தும் புள்ளிவிவரங்களாகத் தொகுக்கப்படுகின்றன. அவ்வாறு தொகுக்கப்படும் விவரங்களின் அடிப்படையிலேயே மருத்துவர் சிகிச்சை அளிக்கின்றார். தொடர் மருத்துவ கண்காணிப்பிலும், சிகிச்சைகளிலும்

புள்ளிவிவரங்களின் பங்கும் பகுப்பாய்வு முறைகளின் பங்கும் இன்றியமையாதன. மருத்துவத் துறையில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் அனைத்திலும் புள்ளியியலின் பல்வேறு பகுதிகள் பயன்படுகிறது.

புள்ளியியலும் புதிய பயன்பாடுகளும்

கனிணி தொழில்நுட்பத்திலும், செய்தி தகவலும் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களைத் தன்னகத்தே ஏற்றுக்கொண்ட புள்ளியியல், நிறுவனங்களின் முடிவெடுத்தலில் புதிய மாதிரிகளை உருவாக்கி துல்லியமான முடிவுகளை எடுக்க உதவுகிறது. இப்பணியினைச் செய்வதற்குப் பல புதிய மென்பொருட்களை உருவாக்கியுள்ளனர்.

12.7 புள்ளியியலின் குறைபாடுகள்

புள்ளியியலால் எண்ணற்ற நன்மைகள் இருந்தபோதிலும், அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **புள்ளியியல் பண்பு விவரங்களைத் திரட்டுவதற்குச் சிறந்ததல்ல:** புள்ளியியல் அடிப்படையிலேயே எண்களாலான விவரங்களைக் கையாள்கிறது, ஏனெனில் இது அளவு விவரங்களைக் கணக்கிடுகிறது. இதன் காரணமாக, ஏழ்மை, திறன், நேர்மை, தலைமைப்பண்பு, அதிகாரம், அறிவுக் கூர்மை முதலான பண்பு விவரங்களைத் துல்லியமாக அளவிட்டு புள்ளிவிவரங்களாகத் தர இயலாது. அதே போன்று, மிகப்பெரும்பாலான புள்ளியியல் பகுப்பாய்வு நுட்பங்களைப் பண்பு விவரப் பகுப்பாய்விற்கு நேரடியாகப் பயன்படுத்த இயலாது.

2. **புள்ளியியல் விதிகள் துல்லியமானவை அல்ல:** கணிதமும், இயல் அறிவியலும் துல்லியமானவை. ஆனால், புள்ளியியல் விதிகள் துல்லியமானவை அல்ல, அவை தோராயமானவையாகும். புள்ளியியல் முடிவுகள் அனைத்து முழுத்தொகுப்பிற்கும் பொருந்திப் போவதில்லை. அம்முடிவகள் சராசரியாக மட்டுமே சரியானதாக இருக்கும்.

3. **புள்ளிவிவரக் கருவிகள் தவறாக பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு:** புள்ளியியல் கருவிகளை நிபுணத்துவம் பெற்றவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். நிபுணத்துவம் பெறாதவர்கள் புள்ளியியல் கருவிகளைப் பயன்படுத்தினால் அது அபாயகரமானதாக இருக்கும். தவறான முவுகளைத் தருவதாக அமையும்.

4. **சிக்கல்களை ஆராய்வதில் புள்ளியியல் அணுகுமுறை பல முறைகளில் ஒன்று மட்டுமே:** சிக்கல்களை ஆராய்வதில் பல அணுகுமுறைகள் உள்ளன. அதில் புள்ளியியல் அணுகுமுறையும் ஒன்று. இம்முறை மட்டுமே சிக்கலின் அனைத்துப் பகுதிகளையும் ஆராய்ந்து முழுத்தீர்வினை வழங்கிவிடுவதில்லை. அதனால் முடிவுகளை எடுக்கும்பொழுது மற்றவற்றையும் கவனிக்க வேண்டியுள்ளது.

12.8 புள்ளியியலின் வகைகள்

புள்ளியியலில் இரு வகைகள் உள்ளன. அவை விவரிப்புப் புள்ளியியல் (Descriptive Statistics), உய்த்துணர்வுப் புள்ளியியல் (Inferential Statistics) ஆகும்.

விவரிப்புப் புள்ளியியல்

விவரிப்புப் புள்ளியியல் என்பது புள்ளிவிவரத் தொகுப்பையும், விவரிப்பையும் செய்யும் புள்ளியியலின் ஒரு பகுதியாகும்.

உய்த்துணர்வுப் புள்ளியியல்

ஒரு முழுத்தொகுப்பின் புள்ளி விவரங்களைப் பற்றி உய்த்துணர்வதற்கு மாதிரி ஆய்வுப்புள்ளி விவரங்களைப் பயன்படுத்துதல் உய்த்துணர்வுப் புள்ளி விவரம் எனப்படும்.



புள்ளியியலின் வகைகள்

விவரிப்புப் புள்ளியிலுக்கும், உய்த்துணர்வுப் புள்ளியியலுக்கும் உள்ள வேறுபாடுகள்

ப.எண்	விவரிப்புப் புள்ளியியல்	உய்த்துணர்வுப் புள்ளியியல்
1.	ஆய்வில் உள்ள முழுத்தொகுதியையும் விளக்குகின்றது	மாதிரி ஆய்வின் அடிப்படையில் முழுத்தொகுதி பற்றி முடிவெடுக்கப்படுகின்றது
2.	புள்ளி விவரங்களை வரைபடங்களாகவும் விளக்கப்படங்களாகவும் வழங்குகின்றது	கருதுகோள்களை சோதனை செய்து கணிக்கின்றது
3.	புள்ளிவிவரங்களின் சுருக்கங்களைத் தருகின்றது	மாதிரியைத் தாண்டி முழுத்தொகுப்பினை அறிந்து கொள்ளப் பயன்படுகின்றது

12.9 புள்ளிவிவரங்கள்

புள்ளிவிவரங்கள் என்பது உண்மைகளைப் பற்றிய விவரம் அல்லது எண்கள் ஆகும். அவை முடிவுகளை எடுப்பதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. இவைகள் அறிந்துகொள்வதற்கும், பகுப்பாய்விற்கும் அடிப்படையானவையாகும். புள்ளிவிவரங்கள் புள்ளியிலுக்கான மூலப்பொருள்களாகும்.

புள்ளிவிவரங்கள் இருவகைப்படும். அவையாவன: அளவு விவரங்கள் (Quantitative Data) பண்பு விவரங்கள் (Qualitative Data).

1. அளவு விவரங்கள் (Quantitative data)

அளவு விவரங்கள் என்பன குறிப்பிட்ட அலகில் அளவிடப்பட்டு எண்வடிவில் கூறப்படுபவை ஆகும். (எ.கா.) வயது வருமானம், நிறுவனங்களின் எண்ணிக்கை.

2. பண்பு விவரங்கள் (Qualitative data)

சிலபண்புகள் இருக்கின்றனவா அல்லது இல்லையா என்று மட்டுமே கூறமுடியும் (எ.கா. – பாலினம் (Gender), சமுதாயம் (Community) சில பண்புகளை அளவிடமுடியாது ஆனால் வரிசைப்படுத்தலாம். (எ.கா. – நேர்மை (Honesty), இத்தகைய பண்பு சார் விவரங்களே பண்பு விவரங்களாகும்.

(i) பெயரளவு விவரங்கள் (Nominal Data)

பெயரளவு விவரங்கள் குறிப்பிட்ட பண்பினை இரண்டு, மூன்றாக வகைப்படுத்துவது பெயரளவு விவரங்களாகும். அவ்வகைப்பாட்டிற்குள் வரும் உறுப்புகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவது பெயரளவு விவரங்கள் ஆகும். எடுத்துக்காட்டாக மாணவர்களை ஆண்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தினர் என வகைப்படுத்திக் எண்ணிக்கையை குறிப்பது. மேலும், கல்வியறிவின் அடிப்படையில் மக்களை முறைசார் கல்வியற்றோர், துவக்கப்பள்ளி பயின்றவர்கள், உயர்நிலைப் பள்ளி பயின்றவர்கள், மேல்நிலை வகுப்பு பயின்றவர்கள், இளநிலை பட்டப்படிப்பு பெற்றவர், முதுநிலை பட்டப்படிப்பு பயின்றவர் என வகைப்படுத்தி எண்ணிக்கையில் கூறப்படுவது.

(ii) தரவரிசை விவரங்கள் (Rank Data)

அளவிடப்பட்ட விவரங்களை எண்களில் கொடுக்கப்படாமல் தரவரிசையில் கொடுக்கப்பட்டிருந்தால் அவைகள் தரவரிசை விவரங்கள் எனப்படும். எடுத்துக்காட்டாக மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களை தரவரிசையில் 1,2,3.......n எனக் கொடுக்கப்பட்டிருந்தால் அவை தரவரிசை விவரங்கள் எனப்படும். மேலும், ஒரு ஓட்டப் பந்தயப் போட்டியில் கலந்து கொண்டவர்கள், போட்டித் தேர்வில் பெற்ற இடங்கள் ஆகியன தரவரிசை விவரங்களுக்கான மற்ற எடுத்துக்காட்டுகள் ஆகும்.



புள்ளிவிவர ஆதாரங்களின் (Source of Data) அடிப்படையில் வகைப்பாடு

விவரங்கள் எப்படி சேகரிக்கப்பட்டன என்ற அடிப்படையில் அவற்றை இரண்டாகப் பிரிக்கலாம்: அவையாவன: முதல்நிலை விவரங்கள்; இரண்டாம்நிலை விவரங்கள்.

(i) முதல்நிலை விவரங்கள் (Primary Data)

விவரங்கள் குறிப்பிட்ட நோக்கத்துடனும் முதல்முறையாகவும் விவர சேகரிப்பாளரால்

12-Economics-Tamil-Chapter_12.indd 305 12-01-2023 17:22:39

திரட்டப்பட்டிருந்தால் அவை முதல்நிலை விவரங்கள் எனப்படும். இவை கூறுகளிடமிருந்தோ, முழுத்தொகுப்பையோ விவர சேகரிப்பிற்கு பயன்படுத்திக் கொள்வதாகும். முதல்நிலை விவரங்களுக்கான எடுத்துக்காட்டு: மாணவர்களின் மதிப்பெண்ணை அவர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்வது, உழவர்களின் நில அளவுகளை அவர்களிடமிருந்து சேகரிப்பது.

(ii) **இரண்டாம் நிலை விவரங்கள்** (Secondary Data)

பொது நோக்கத்திலோ, குறிப்பிட்ட நோக்கத்திற்காகவோ மற்றொருவர் ஏற்கனவே சேகரித்து வைத்திருக்கும் விவரங்களை நாம் அவரிடம் சென்று சேகரித்தால், அவ்விவரங்களை இண்டாம்நிலை விவரங்கள் என்கிறோம். பொருளியல் ஆய்வுகளுக்காக எண்ணற்ற இரண்டாம் நிலை விவரங்கள் உள்ளன. அவற்றில் சில: மக்கள்தொகைக் கணக்கெடுப்பு பதிவேடுகள் (Census Reports), மத்திய புள்ளிவிவர அமைப்பின் வெளியீடுகள் (Publications of Central Statistical Organization, CSO), தேசிய கூறெடுப்பு விசாரணை அமைப்பின் வெளியீடுகள் (National Sample Survey Organization, NSSO), இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைகள் (Reserve Bank of India Bulletin), பொருளாதார ஆய்வறிக்கைகள் (Economic Surveys), ஒன்றிய அரசின் மாநில அரசுகளின் பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரக வெளியீடுகள் (Publications of Central and State Governments Directorate of Economics and Statistics), புத்தகங்கள், பொருளியலுக்கான பருவ இதழ்கள் (Economic Journals), அமைப்புகளினால் வெளியிடப்பட்ட விவரங்கள், வெளியிடப்படாத விவரங்கள், அரசுத்துறை வெளியீடுகள், பன்னாட்டு அமைப்புகளின் வெளியீடுகள், இணைய பக்கங்கள் உள்ளிட்ட ஏராளமானவை.

12.10 கூட்டுச் சராசரி அல்லது சராசரி ($\overline{X}$) (Arithmetic Mean or Mean or Average)

ஒரு தொகுப்பின் மைய மதிப்பே மைய நிலைப்போக்கு அளவு அல்லது சராசரி அல்லது அமைப்பு அளவு (Measure of Location) எனப்படும். ஐந்து வகை சராசரி அளவுகள் உள்ளன. அவற்றில் கூட்டுச்சராசரி, இடைநிலை, முகடு ஆகியவை சாதாரண அல்லது எளிய சராசரிகள் என்றும் பெருக்குச் சராசரி, இசைச் சராசரி சிறப்புச் சராசரிகள் ஆகும்.

சராசரி என்பதன் பொருள்

- "மையப்போக்கு அளவை என்பது எந்த எண்ணைச் சுற்றி மற்ற எண்கள் இருக்கின்றனவோ அந்த எண்ணைக் கண்டறிவது."
- "எந்த ஒரு எண்ணை மற்ற எண்கள் பிரதிபலிக்கின்றதோ அந்த எண்ணே சராசரி ஆகும்."
- "மொத்தமாக அனைத்து எண்களையும் தொகுத்துச் சொல்கிறதோ அதுதான் எண்களின் மையம் எனப்படுகிறது."

ஒரு மாறியின் சராசரி என்பது மாறியின் அனைத்து எண் மதிப்புகளின் கூட்டுத் தொகையை அவ்வெண்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைப்பது ஆகும். இப்பொழுது x என்ற மாறியின் மதிப்புகள் $x_1, x_2, x_3, x_4, ..., x_n$ என்றால் இந்த n மதிப்புகளின் கூட்டுச் சராசரி அந்த மதிப்புகளின் கூட்டுத்தொகையை n – ஆல் வகுத்தால் கிடைப்பது ஆகும்.

$$\bar{X} = \frac{X_1+X_2+X_3+X_4+\cdots+X_n}{n} = \frac{1}{n} \sum_{i}^{n}=1X_i,$$

இச் சூத்திரம் தொகுக்கப்படாத விவரங்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டு 1 : கீழ்க்காணும் விவரங்களுக்கு கூட்டுச் சராசரியினைக் கணக்கிடுக: 2, 4, 6, 8, 10.

இதில் நாம் இருமுறைகளில் கூட்டுச் சராசரியினைக் கண்டறியலாம். ஒன்று நேரடி முறை, மற்றொன்று சுருக்க முறை.

நேரடி முறை: $\bar{X} = \frac{\sum X}{n}$

இங்கு $\sum X$ = அனைத்து X மதிப்புகளின் கூடுதல்.

n = மொத்தமுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை.

தீர்வு

$$\bar{X} = \frac{2+4+6+8+10}{5} = \frac{30}{5} = 6$$

சுருக்க முறை

இம்முறையில் கூட்டுச் சராசரியினைக் கண்டறிய வாய்பாடு

$$\bar{X} = A + \frac{\sum d}{n}$$

இங்கு A = ஊகிக்கப்பட்ட கூட்டுச் சராசரி

$\sum d$ = ஊகிக்கப்பட்ட சராசரியிலிருந்து X–ன் விலகல்

n = மொத்தமுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை.

எடுத்துக்காட்டு 2: ஒரு வகுப்பில் பயிலும் 5 மாணவர்கள் ஒரு பாடத்தில் பெற்ற மதிப்பெண்கள் 75, 68, 80, 92, 56. இம்மதிப்பெண்களுக்கான கூட்டுச் சராசரியினைக் கண்டறிக.

தீர்வு:

X	d = X - A
75	7
68 → A	**0**
80	12
92	24
56	-12
மொத்தம்	**31**

$$\bar{X} = A + \frac{\sum d}{n}$$

$$= 68 + \frac{31}{5}$$

$$= 68 + 6.2$$

$$= 74.2$$

12.11 விலகல் அளவைகள் (σ)

சராசரி அல்லது மையப்போக்கு அளவைகள் ஒரு எண் பரவலின் மையத்தினை மட்டுமே காட்டுகின்றன. அப்பரவலின் மையத்திலிருந்து ஒவ்வொரு எண்ணும் எவ்வளவு தூரம் இருபக்கத்திலும் விலகி நிற்கிறது என்பதனைத் தெரிவிப்பதில்லை. இவ்விலகலைப் பற்றிய அறிவினை நமக்குத் தெரிவிப்பது விலகல் அளவு முறைகளாகும் (Measures of Disperson). அவ்விலகலை நாம் வேறுபட்ட முறைகளில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விலகல் முறைகளை நாம் இரு பிரிவுகளாகக் காணலாம்:

1. தனித்த விலகல் அளவைகள் (Absolute Measures of Dispersion)
2. ஒப்பீட்டு விலகல் அளவைகள் (Relative Measures of Dispersion)

எந்த அலகுகளில் எண்பரவல் தரப்பட்டிருக்கின்றதோ, அதே அலகுகளில் விலகல் அளவைகள் கணக்கிடப்பட்டு

தரப்பட்டால் அவை தனித்த விலகல் அளவைகள் எனப்டுகின்றன.

ஆனால் ஒப்பீட்டு விலகல்கள் அளவைகள் அலகுகளிலிருந்து விடுபட்டவை. அவை தனித்த எண்கள், எனவே ஒன்றுக்கும் மேற்பட்ட எண் பரவல்களின் விலகல் அளவைகளை (வேறுபட்ட அலகுகளில் அவை தரப்பட்டிருந்தாலும்) நாம் ஒப்பிட முடியும்.

திட்டவிலக்கம்: கார்ல் பியர்ஸன் 1893–ஆம் ஆண்டு நமக்கு அறிமுகப்படுத்தினார். திட்டவிலக்கமானது " விலகல் வர்க்கங்களின் சராசரியின் வர்க்க மூலம்" (Root Mean–square Deviation) எனவும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், தொடரிலிருக்கும் ஒவ்வொரு எண் மதிப்பும் கூட்டுச்சராசரியிலிருந்து விலகியிருக்கும் தூரத்திற்கான வர்க்கங்கங்களின் சராசரிக்கு வர்க்கமூலம் கண்டறிவது திட்டவிலக்கம் ஆகும். திட்ட விலக்கத்தின் வர்க்கம் மாறுபாடு (Variance) எனப்படுகின்றது.

திட்ட விலக்கம் – இலக்கணம்

"ஒவ்வொரு மதிப்பும் அதன் சராசரியிலிருந்து விலகியிருக்கும் அளவின் வர்க்கத்தின் கூட்டுச்சராசரியின் நேரிடை வர்க்க மூலமதிப்பாகும்". இது σ எனக் குறிப்பிடப்படுகின்றது.

திட்டவிலக்கத்தினை கணக்கிடும் முறை

தனித்த தொகுதி (தொகுக்கப்படாத விவரங்கள்) தனித்த தொகுதியில் இரு முறைகளில் திட்ட விலக்கம் கணக்கிடப்படுகின்றது.

அ) உண்மைச் சராசரியிலிருந்து விலக்க மதிப்புகள் காணல் (நேரடி முறை)

ஆ) ஊகச் சராசரியிலிருந்து விலக்க மதிப்புகள் காணல் (மறைமுக முறை)

$$\text{திட்ட விலக்கம் } (\sigma) = \sqrt{\left(\frac{\sum(x-\bar{x})^2}{n}\right)}$$

இங்கு $\bar{x}$ = கூட்டுச் சராசரி

n = தொடரிலுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை கணக்கிடுவதில் உள்ள நிலைகள்

கொடுத்துள்ள தொகுதிக்கு,

1. உண்மைச் சராசரி காணல் $(\bar{X})$
2. ஒவ்வொரு மதிப்பும் சராசரியிலிருந்து விலகி இருக்கும் அளவு காண $(x = X - \bar{X})$
3. விலக்கங்களின் மதிப்பை வர்க்கப்படுத்தி, வர்க்கப்படுத்தப்பட்டுள்ள விலக்கங்களின் கூட்டுத்தொகை காணல் $\sum x^2$
4. இந்தக் கூட்டல் மதிப்பை $\sum x^2$ தொடரிலுள்ள உறுப்புகளின் எண்ணிக்கையால் வகுத்தல் $\left(\frac{\sum x^2}{n}\right)$
5. $\left(\frac{\sum x^2}{n}\right)$ இன் வர்க்க மூல மதிப்பே திட்ட விலக்கமாகும்.

$$\sigma = \sqrt{\left(\frac{\sum x^2}{n}\right)} \text{ அல்லது } \sqrt{\left(\frac{\sum(x-\bar{x})^2}{n}\right)}$$

$$\frac{\sum x^2}{n} = \text{மாறுபாடு} = \frac{\sum(x-\bar{x})^2}{n}$$

மாதிரி அளவு 30–க்கு குறைவாக இருந்தால், மாறுபாடு = $\frac{\sum(x-\bar{x})^2}{n-1}$

எடுத்துக்காட்டு 1 : பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினை காண்க: 25, 15, 23, 42, 27, 25, 23, 25, 20.

12-Economics-Tamil-Chapter_12.indd 308 12-01-2023 17:22:40

தீர்வு உண்மையான சராசரியிலிருந்து திட்டவிலக்கத்தினைக் காணும் முறை

ப.எண்	மதிப்பு(X)	$X - \bar{X}$	$(X - \bar{X})^2$
1	25	25-25=0	0
2	15	15-25=10	100
3	23	23-25= -2	4
4	42	42-25=17	289
5	27	27-25=2	4
6	25	25-25=0	0
7	23	23-25=-2	4
8	25	25-25=0	0
9	20	20-25=-5	25
N=9	225	0	426

$$\bar{X} = \frac{225}{9} = 25$$

$$\sigma = \sqrt{\left(\frac{\sum(x-\bar{x})^2}{n}\right)} = \sqrt{\frac{426}{9}} = \sqrt{47.33} = \mathbf{6.88}$$

எடுத்துக்காட்டு 2: பின்வரும் விவரங்களுக்கு ஊகிக்கப்பட்ட சராசரியிலிருந்து திட்டவிலக்கத்தினைக் காண்க: 43, 48, 65, 57, 31, 60, 37, 48, 78, 59.

தீர்வு ஊகிக்கப்பட்ட சராசரியிலிருந்து திட்ட விலக்கம் காணும் முறை

ப. எண்	(X)	d=X-A (A=57)	d^2
1	43	-14	196
2	48	-9	81
3	65	8	64
4	57=A	0	0
5	31	-26	676
6	60	3	9
7	37	-20	400
8	48	-9	81
9	78	21	441
10	59	2	4
N=10		$\sum d = -44$	$\sum d^2 = 1952$

$$\sigma = \sqrt{\frac{\sum d^2}{n} - \left(\frac{\sum d}{n}\right)^2} = \sqrt{\frac{1952}{10} - \left(\frac{-44}{10}\right)^2}$$

$$= \sqrt{195.2 - 19.36} = \sqrt{175.84} = 13.26$$

விடை = 13.26

12.12 உடன்தொடர்புப் பகுப்பாய்வு(γ)

உடன்தொடர்புப் பகுப்பாய்வு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன என்பதைப் பற்றிக் கணக்கிடுவது ஆகும். சர் ஃபிரான்சிஸ் கால்டன் என்பவர் இப்பகுப்பாய்வினைக் கண்டறிந்தார்.

12.12.1. உடன் தொடர்பின் வகைகள்

கார்ல் பியர்சன்

உடன் தொடர்பைப் பலவாறு வகைப்படுத்தலாம். மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை, பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் எண்ணிக்கை, மாறிகளுக்கிடையேயான உறவின் தன்மை எனும் அடிப்படையில் நாம் அவற்றை வகைப்படுத்தலாம்.

I. மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில்

மாறிகள் ஒன்றுக்கொன்று நேர்கணியமாவோ, எதிர்மறையாகவோ உறவு கொண்டிருக்கும். அதன் அடிப்படையில் உடன் தொடர்பினை நேர்கணிய உடன்தொடர்பு, எதிர்மறை உடன்தொடர்பு என பாகுபடுத்தப்படுகின்றது.



நேர்கணிய உடன்தொடர்பு

இரு மாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை நேர்கணிய உடன்தொடர்பு என்கிறோம்.

எடுத்துக்காட்டு: வருமானம் அதிகரிக்கும்பொழுது செலவும் அதிகரிக்கிறது. ஆகவே வருமானம், செலவு ஆகிய மாறிகள் நேர்கணிய உடன் தொடர்பைக் கொண்டிருக்கிறது என்கிறோம். எடுத்துக்காட்டு $Y = a + bx$

எதிர்மறை உடன்தொடர்பு

இரு மாறிகளின் மதிப்புகள் எதிர் எதிர் திசையில் நகர்ந்து சென்றால் அதனை எதிர்மறை உடன்தொடர்பு என்கிறோம்.

எடுத்துக்காட்டு: விலை அதிகரிக்கும்பொழுது பண்டத்துக்கான தேவை குறைந்து செல்கிறது. எடுத்துக்காட்டு $Y= a - bx$

II. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்:

உடன்தொடர்பு பகுப்பாய்வுக்கு எவ்வளவு எண்ணிக்கையிலான மாறிகளை எடுத்துக்கொள்கிறோம், அவற்றை எவ்வாறு பகுப்பாய்வுக்கு பயன்படுத்துகிறோம் எனும் வகையில் உடன் தொடர்பினை வகைப்படுத்தலாம். அவ்வகைகள்:

அ) எளிய உடன்தொடர்பு,
ஆ) பன்முக உடன்தொடர்பு
இ) பகுதி உடன்தொடர்பு

எளிய உடன்தொடர்பு

உடன்தொடர்பு பகுப்பாய்வில் ஒரு நேரத்தில் இரு மாறிகளை மட்டும் எடுத்துக்கொண்டால் அதனை எளிய உடன்தொடர்பு என்கிறோம். எடுத்துக்காட்டு $Y= a + bx$

பன்முக உடன்தொடர்பு

உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை ஒருசேர எடுத்துக்கொண்டால் அது பன்முக உடன்தொடர்பு என்கிறோம். எடுத்துக்காட்டாக, தேவைக்கும், தேவையினைத் தீர்மானிக்கும் மாறிகளான குறிப்பிட்ட பொருளின் விலை, நுகர்வோரின் வருமானம், தொடர்புடைய

பொருளின் விலை ஆகியவற்றை எடுத்து பகுப்பாய்வு செய்தால் அது பன்முக உடன்தொடர்பு ஆகும்.

எடுத்துக்காட்டு: $Q_d = f(P, Pc, Ps, t, y)$

இதில் Q_d பொருளின் தேவை

f – சார்பு

P – பண்டத்தின் விலை

P_c – போட்டிப் பண்டத்தின் விலை

P_s – பதிலீட்டுப் பண்டத்தின் விலை

t – நுகர்வோரின் விருப்பு வெறுப்புகள்

y – வருமானம்

பகுதி உடன்தொடர்பு

உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டுக்கு மேற்பட்ட காரணிகளை எடுத்துக்கொண்டாலும், அவற்றில் இரண்டு காரணிகளை மட்டும் (மற்றவை மாறாமல் இருக்கும் என வைத்துக்கொண்டு) பகுத்தாய்ந்தால், அதனை பகுதி உடன்தொடர்பு என்கிறோம்.

III. பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் மாறும் விகித அடிப்படையில்

நாம் பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொண்ட மாறிகள் மாறும் விகிதம் ஒரே அளவில் இருக்கின்றதா, அல்லது மாறிக்கொண்டே இருக்கின்றதா என்பதன் அடிப்படையில் உடன்தொடர்பினை நேர்கோட்டு உடன்தொடர்பு, வளைகோட்டு உடன்தொடர்பு என வகைப்படுத்துகிறோம்.

நேர்கோட்டு உடன்தொடர்பு

இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இருந்தால் அதனை நேர்கோட்டு உடன்தொடர்பு என்கிறோம். வரைபடைத்தில் அம்மாறிகளின் மதிப்புகளைக் குறித்து பார்த்தோமானால் அவை ஒரு நேர்கோட்டினை தரும். எடுத்துக்காட்டாக. $Y = a + bx$

வளைகோட்டு உடன்தொடர்பு

இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இல்லாமல் குறைந்து வந்தாலோ, அல்லது அதிகரித்து வந்தாலோ அதனை வளைகோட்டு உடன்தொடர்பு என்கிறோம். மாறிகளின் மதிப்புகளை வரைபடத்தில் குறித்துப் பார்த்தால் அவைகள் ஒரு வளைகோட்டினைத் தரும். எ.கா. $Y = a + bx^2$

உடன்தொடர்பினை அளவிடும் முறைகள்

உடன்தொடர்பினை அளவிடுதற்குப் பல முறைகள் உள்ளன. அவை:

1. சிதறல் விளக்கப்படம்
2. வரைபட முறை
3. கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக் கெழு முறை
4. மீச்சிறு வர்க்க முறை.

இம்முறைகளில் முதல் இரண்டும் வரைபட முறைகளாகும். அவை உடன்தொடர்பின் அளவினைப் பற்றி நமக்கு தோரயமான மதிப்பீட்டினை வழங்கும். பின்னர் சொல்லப்பட்ட இரண்டு முறைகளும், கணக்கீட்டின் அடிப்படையில் உடன்தொடர்பின் அளவினை நமக்கு துல்லியமாக வழங்கும்.

1. சிதறல் விளக்கப்பட முறை

கொடுக்கப்பட்ட மாறிகளின் (X,Y) மதிப்புகளை வரைபடத்தில் குறித்து, அம்மதிப்புகள் எவ்வாறு சிதறியிருக்கின்றன, அவற்றின் தொடர்பின் போக்கு எவ்வாறு உள்ளது என ஆய்வதன் மூலம் நாம் உடன்தொடர்பினைக் கண்டறியலாம்.

www.tntextbooks.in

சிதறல் விளக்கப்படம்



சிதறல் விளக்கப்பட முறையின் நன்மைகள்

(1) இது மிகவும் எளிமையான, கணக்கீடுகளற்ற முறையாகும்.

(2) இது கடைநிலை மதிப்புகளினால் பாதிக்கப்படுவதில்லை

(3) மாறிகளுக்கிடையேயான உடன்தொடர்பைக் கண்டறிவதில் இது ஒரு அடிப்படை நிலை.

சிதறல் விளக்கப்பட முறையின் குறைபாடுகள்

சிதறல் விளக்கப்பட முறையினைக் கொண்டு மாறிகளுக்கிடையேயான உடன்தொடர்பினைத் (ஒருசில சூழ்நிலைகளைத் தவிர) துல்லியமாக கணக்கிட முடியாது. அவற்றுக்கிடையேயான உறவு அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்பதனை மட்டுமே நாம் கூற இயலும்.

2. வரைபட முறை

இம்முறையில் ஒரே வரைபடத்தில் நாம் உடன்தொடர்பை பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொண்ட மாறிகளின் மதிப்பினைக் குறித்து அந்தந்த மாறிகளின் மதிப்புகளை கோட்டினால் இணைக்க வேண்டும். இப்பொழுது இரு மாறிமதிப்புகளுக்கும் இரு தனித்தனியான கோடு கிடைக்கும். இப்பொழுது அக்கோடுகள் செல்லும் திசை, கோடுகளுக்கிடையேயான இணைந்த போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் நாம் உடன்தொடர்பினை தோராயமாகக் கூறலாம். கோடுகள் ஒரே திசையில் நகர்ந்தால் அவைகளுக்கு இடையே நேர்கணிய உடன்தொடர்பு எனவும், எதிர் எதிர் திசையில் இருந்தால் எதிர்மறை உடன்தொடர்பு எனவும் காணலாம். கோடுகள் கிட்டத்தட்ட இணைகோடுகளாக இருந்தால் அவற்றுக்கிடையேயான உடன்தொடர்பு அளவு அதிகம் எனலாம்.

12-Economics-Tamil-Chapter_12.indd 312 12-01-2023 17:22:40



3. கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக் கெழு முறை

கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக் கெழு 'r' என குறிப்பிடப்படுகிறது. இக்கெழு இரண்டு மாறிகளுக்கு இடையேயான உறவின் அளவினையும், உறவின் திசையையும் குறிப்பிடுகிறது. இதைக் கணக்கிடுவதற்கான வாய்பாடுகள்:

UOHYI

1) $$r = \frac{N\Sigma XY - (\Sigma X)(\Sigma Y)}{\sqrt{N\Sigma X^2 - (\Sigma X)^2}\sqrt{N\Sigma Y^2 - (\Sigma Y)^2}}$$

இம்முறையில் சராசரியிலிருந்தோ ஊக சராசரியிலிருந்தோ விலக்கங்களைக் கண்டுபிடிப்பதில்லை.

2) உண்மையான சராசரியிலிருந்து விலகல் முறை

$$r = \frac{\Sigma xy}{\sqrt{\Sigma x^2 \, \Sigma y^2}}$$ இங்கு $x = (x-\bar{x})$, $y = (y-\bar{y})$

3) ஊகிக்கப்பட்ட சராசரியிலிருந்து விலகல் முறை

$$r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

இங்கு,

$dx = (x-A)$ ஒவ்வொரு x ன் மதிப்பையும் ஊகிக்கப்பட்ட சராசரியைக் கொண்டுக் கழிப்பது.

dy $(y-B)$ ஒவ்வொரு y ன் மதிப்பையும் ஊகிக்கப்பட்ட சராசரியைக் கொண்டுக் கழிப்பது.

$\sum dxdy$ = dx, dy ஆகிய இரண்டையும் பெருக்கி வரும் கூட்டுத்தொகை.

$\sum dx^2$ = ஒவ்வொரு dx –க்கான வர்க்கத்தின் கூட்டுத்தொகை

$\sum dy^2$= ஒவ்வொரு dy –க்கான வர்க்கத்தின் கூட்டுத்தொகை

$\sum dx = (X - A)$ மதிப்பின் கூட்டுத்தொகை

$\sum dy = (Y - B)$ மதிப்பின் கூட்டுத் தொகை

சராசரியிலிருந்து விலக்க முறையில் கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக் கெழுவினைக் கண்டறியும் நிலைகள்

- படி–1 X, Y ஆகிய மாறிகளின் கூட்டுச் சராசரிகளைக் கணக்கிடவும் $(\bar{x}, \bar{y})$
- படி–2 X, Y ஆகிய மதிப்புகள் அதனதன் சராசரி மதிப்பிலிருந்து உள்ள விலக்கத்தைக் கணக்கிடவும் $(x = x - \bar{x},\ y = y - \bar{y})$
- படி–3 x விலக்கங்களின் வர்க்கத்தைக் (x^2) கணக்கிட்டுக் கூட்டவும் $(\sum x^2)$. இதுபோல் y விலக்கங்களின் வர்க்கத்தைக் (y^2) கணக்கிட்டுக் கூட்டவும் $(\sum y^2)$
- படி–4 ஒவ்வொரு x மதிப்பு விலக்கத்தையும் அதனுடைய y மதிப்பு விலக்கத்தையும் பெருக்கி (xy) அம்மதிப்புக்களைக் கூட்டவும் $\sum xy$.
- படி–5 இக்கூட்டல் மதிப்புகளை $\Upsilon = \dfrac{\sum xy}{\sqrt{\sum x^2 \sum y^2}}$ என்ற வாய்பாட்டில் பிரதியிட்டு ϒ மதிப்பு கணக்கிடவும்.

கார்ல் பியர்சன் உடன்தொடர்பு கெழு வகைப்படுத்தப்படாத புள்ளி விவரம்

நேரடி முறை	விலகல் முறை
உள்ளவாறு மாறிகளை பயன்படுத்திக் கொள்வது	1. உண்மையான சராசரி விலகல் முறை 2. இருப்பதாகக் கருதும் சராசரி விலகல் முறை

1. நேரடி முறை

1. கூட்டுச்சராசரி விலக்கமுறை

$$1.\ \ r = \frac{\sum xy}{\sqrt{\sum x^2 \sum y^2}}$$

இங்கு $x = (x - \bar{x}),\ y = (y - \bar{y})$

சுருக்குமுறை

2. உறுப்பு மதிப்புகளை நேரடியாகப் பயன்படுத்தும் போது

$$r = \frac{N\Sigma XY - (\Sigma X)(\Sigma Y)}{\sqrt{N\Sigma X^2 - (\Sigma X)^2}\sqrt{N\Sigma Y^2 - (\Sigma Y)^2}}$$

3. ஊகச் சராசரி விலக்க முறை

$$r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

$dx = (X-A),\ dy = (Y-B)$

A, B ஊகச் சராசரிகள்

ϒ ஆதிப்புள்ளி மாற்றத்தால் பாதிக்கப்படுவதில்லை

ϒ அளவிடும் அலகு மாற்றத்தால் பாதிக்கப்படுவதில்லை

$-1 \le r \le +1$

உடன் தொடர்பினைக் கணக்கிடும் முறை

நேரடி முறை

எ. கா. 1: பின்வரும் விவரங்களுக்கு ஒட்டுறவுக் கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.

விலை (X)	10	12	14	15	19
அளிப்பு (Y)	40	41	48	60	50

தீர்வு உறுப்பு மதிப்புகளை நேரிடையாகப் பயன்படுத்தும் முறை

விலை (X)	அளிப்பு (Y)	XY	X^2	Y^2
10	40	400	100	1600
12	41	492	144	1681
14	48	672	196	2304
15	60	900	225	3600
19	50	950	361	2500
$\sum x = 70$	$\sum y = 239$	$\sum xy = 3414$	$\sum x^2 = 1026$	$\sum y^2 = 11685$

$$r = \frac{N\Sigma XY - (\Sigma X)(\Sigma Y)}{\sqrt{N\Sigma X^2 - (\Sigma X)^2}\sqrt{N\Sigma Y^2 - (\Sigma Y)^2}} \qquad r = \frac{(5 \times 3414) - (70 \times 239)}{\sqrt{(5 \times 1026) - (70)^2}\sqrt{5 \times 11685 - (239)^2}}$$

$$r = \frac{17{,}070 - 16{,}730}{\sqrt{230} \times \sqrt{1304}} \qquad r = \frac{340}{547.65} = +0.621$$

மேற்கண்ட எடுத்துக்காட்டில் உடன்தொடர்புக் கெழுவின் அளவு 0.0621 என்றிருக்கிறது. ஆகவே, பொருளின் விலைக்கும், அளிப்பிற்கும் நேரடி உறவும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உறுதியான உறவும் உள்ளது.

உண்மைச் சராசரியின் அடிப்படையில் உடன்தொடர்பினைக் கண்டறிதல்

எ.கா. 1 : பின்வரும் விவரங்களுக்கு உண்மைச் சராசரியைப் பயன்படுத்தும் வாய்பாட்டைப் பயன்படுத்தி கார்ல் பியர்சனின் உடன்தொடர்பு கெழுவினைக் கண்டறிக.

காரின் வயது (ஆண்டுகளில்) (X)	3	6	8	9	10	6
பராமரிப்புச் செலவு (₹ 000 – களில்)	1	7	4	6	8	4

தீர்வு

$$r = \frac{\sum xy}{\sqrt{\sum x^2 \sum y^2}}$$ இங்கு $x = x - \bar{x}$, $y = y - \bar{y}$

ப.எண்	x	$x-\bar{x}$ (x)	$(x-\bar{x})^2 = x^2$	Y	$y-\bar{y}$ (y)	$(y-\bar{y})^2 = y^2$	xy
1	3	-4	16	1	-4	16	16
2	6	-1	1	7	2	4	-2
3	8	+1	1	4	-1	1	-1
4	9	2	4	6	1	1	2
5	10	3	9	8	3	9	9
6	6	-1	1	4	-1	1	+1
	42	0	32	30	0	32	25

$\bar{x}\ \frac{42}{6} = 7$ $\quad \bar{y}\ \frac{30}{6} = 5$ $\quad \sum x^2 = 32$ $\quad \sum y^2 = 32$ $\quad \sum xy = 25$

வாய்பாட்டில் பயன்படுத்தி $r = \frac{\sum xy}{\sqrt{\sum x^2 \sum y^2}} = \frac{25}{\sqrt{32 \times 32}} = \frac{25}{32} = 0.781$

r = 0.781, உடன் தொடர்புக் கெழு மிக அதிகமாகவும் நேரிடையாகவும் உள்ளது. ஆகவே, காரின் வயதிற்கும், பராமரிப்புச் செலவிற்கும் நேரடித் தொடர்பு, மிக அதிக அளவில் உள்ளது.

ஊக சராசரியினைப் பயன்படுத்தும் வாய்பாட்டினைக் கொண்டு உடன்தொடர்பு கணக்கிடுதல்:

எ.கா. 1; பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன்தொடர்புக் கெழுவினைக் கண்டறிக.

X:	10	12	13	16	17	20	25
Y:	19	22	26	27	29	33	37

தீர்வு

உடந்தொடர்பு கணக்கிடும் வாய்பாடு

$$r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

ப.எண்	X	Y	(X-A)=dx	(Y-A)=dy	dx2	dy2	Dxdy
1	10	19	-6	-8	36	64	48
2	12	22	-4	-5	16	25	20
3	13	26	-3	-1	9	1	3
4	16	27	0	0	0	0	0
5	17	29	1	2	1	4	2
6	20	33	4	6	16	36	24
7	25	37	9	10	81	100	90
N = 7	ΣX=113	ΣY=193	Σdx=1	Σdy=4	$\sum dx^2$=159	$\sum dy^2$=230	Σdxdy=187

$$\bar{x} = \frac{\sum X}{N} = \frac{113}{7} = 16\frac{1}{7} \qquad \bar{y} = \frac{\sum Y}{N} = \frac{193}{7} = 27\frac{4}{7}$$

$$dx = X - A \Rightarrow X - 16; \; dy = Y - A \Rightarrow Y - 27$$

$$\therefore r = \frac{N\sum dxdy - (\sum dx)(\sum dy)}{\sqrt{N\sum dx^2 - (\sum dx)^2}\sqrt{N\sum dy^2 - (\sum dy)^2}}$$

$$= \frac{7\times187 - 1\times4}{\sqrt{7\times159 - (1)^2}\sqrt{7\times230 - (4)^2}}$$

$$= \frac{1309 - 4}{\sqrt{1112}\sqrt{1610 - 16}}$$

$$= \frac{1305}{\sqrt{1112}\sqrt{1594}} = \frac{1305}{(33.34)\,(39.92)} = \frac{1305}{1330.9} = 0.9865$$

$r = 0.986$

மேற்கண்ட உடன்தொடர்பு பகுப்பாய்வில் X, Y ஆகிய காரணிகளுக்கிடையே நேரிடையான மிக அதிக உடன் தொடர்பு இருக்கின்றது.

12.13 ஒட்டுறவுப் போக்குப் பகுப்பாய்வு (Regression Analysis)


பிரான்ஸின் கால்ட்டன்

அடுத்ததாக நாம் கற்கவிருப்பது ஒட்டுறவுப் பகுப்பாய்வு ஆகும். 'ரெக்ரஷன்' (Regression) எனும் சொல்லை முதன்முதலில் (1877 ஆம் ஆண்டில்) உருவாக்கியவர் ஃபிரான்சிஸ் கால்டன் ஆவார். தனது ஆய்விற்காகத் தந்தைகளின் உயரத்திற்கும் மகன்களின் உயரத்திற்கும் உள்ள தொடர்பினை அறிய முற்படும்பொழுது குறிப்பிட்ட உயரமுடைய பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி உயரம் மொத்த தொகுதிக்குமான சராசரி மதிப்பை நோக்கிச் செல்கின்றது என்பதை உறுதிபடுத்தினார். இப்பெயர் காரணத்தைக் கொண்டு அவர் இதற்கு 'ரெக்ரஷன்' (Regression) எனப் பெயரிட்டார். இதன் பொருள் சராசரியை நோக்கித் திரும்பிச் செல்லுதல் (Act of going back) அல்லது திரும்பிப் பார்த்தல் (Act of seeing back) என்பதாகும். மேற்சொன்ன நிகழ்வினை "கால்டனின் பின்னோக்கிச் செல்லும் பொது விதி" (Galton's Law of universal Regression) 1000 குடும்பத்திலுள்ளவர்களின் உயரத்தைக் சேகரித்து உறுதிப்படுத்தினர். ஒட்டுறவு என்ற சொல்லின் விளக்கம் – சராசரியை நோக்கிப் பின் செல்லுதல் – ஆகும்.

ஒட்டுறவு என்பது இரு மாறிகளுக்கிடையே உள்ள உறவை விளக்குகின்றது. Y சார்பு மாறி எனவும் X தனித்த மாறி எனவும் எடுத்துக்கொண்டால் இரு மாறிகளுக்கு இடையே உள்ள நேர்கோட்டுத் தொடர்பு X இன் மீது Y சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு எனப்படுகின்றது. இதைப்பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட, தெரிந்த X மதிப்புக்கு y மதிப்பு என்ன என்பதைக் கணிக்கலாம். இந்தக் கோடே ஒட்டுறவு மாற்றத்தை அல்லது பின்னோக்கிச் செல்லல் என்ற கருத்தை விளக்கும் கால்டலான் ஒட்டுறவுக்கோடு என அழைக்கப்பட்டதாகும்.

உடன் தொடர்பிற்கும் ஒட்டுறவிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்

ப.எண்	உடன்தொடர்பு	ஒட்டுறவு
1	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகளின் மதிப்பு ஒரே திசையில் மாற்றமடைகின்றதா அல்லது எதிர்த்திசையில் மாற்றமடைகின்றதா என்பதை ஆராயும்	ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம் மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே ஒட்டுறவு ஆகும். இங்கு இரு மாறிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

12-Economics-Tamil-Chapter_12.indd 317 12-01-2023 17:22:41

2	X,Y என்ற இரு மாறிகளும் தனித்த மாறிகள்	ஒருமாறி தனித்த மாறியாகவும் மற்றொன்று சார்பு மாறியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது
3	இரு மாறிகளுக்கிடையே உள்ள தொடர்பை மட்டும் ஆராய்கின்றது. காரண விளைவுகளை ஆய்வு செய்வதில்லை	இருமாறிகளுக்கடையே காரண விளைவை ஆராய்ந்து அவற்றுக்கு இடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்துகின்றது
4	இரு காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பை சோதனை செய்யவும் உறுதிப்படுத்தவும் பயன்படுகின்றது.	இரு காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பை ஆய்வு செய்வதோடு மட்டுமல்லாது தனித்த மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்கு சார்பு மாறியின் மதிப்பு எவ்வளவு என்பதை ஊகம் செய்ய உதவுகின்றது
5	உடன் தொடர்புக்காரணி r சார்பு அளவையாகும். இதன் மதிப்பு – 1 முதல் +1 வரை இருக்கும்	ஒட்டுறவுக் காரணிகளும் சார்பு அளவைகளே இவற்றைப் பயன்படுத்தி தனித்தமாறி சார்பு மாறியின் மதிப்பில் ஏற்படுத்தும் மாற்றத்தின் அளவைக் காணலாம்.
6	தொடர்பில்லா இருமாறிகளுக்கு இடையில் போலி உடன்தொடர்பு ஏற்படும் (Spurious)	ஒட்டுறவு ஆய்வில் போலி ஒட்டுறவு இல்லை
7	நேர்கோட்டுத் தொடர்பை மட்டும் பயன்படுத்துவதால் இதன் பயன்பாடு வரையறை உடையது	நேர்கோடு அல்லாத தொடர்புகளையும் ஆய்வு செய்வதால் இதன் பயன்பாடு விரிவடைந்துள்ளது.
8	இது அதிகம் மேற்கணக்கீட்டிற்குப் பயன்படுவதில்லை	இது அதிகம் மேற்கணக்கீட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றது.

இரு ஒட்டுறவுக் கோடுகள்

X சார்ந்த Y => $X = a + by$

Y சார்ந்த X => $Y = a + bx$

ஒரு மாறியின் மதிப்பை மற்றொரு மாறியின் மதிப்புக்கு மதிப்பீடு செய்யும் கோடே ஒட்டுறவுக் கோடாகும். இருமாறிகளுக்கிடையே உள்ள சராசரித் தொடர்பினை இக்கோடு கணித வடிவில் தருகின்றது. மற்றொரு மாறியின் குறிப்பிட்ட மதிப்பிற்கு ஒரு மாறியின் சிறந்த கணிப்பு மதிப்பை ஒட்டுறவுக் கோடுகள் தருகின்றது.

முந்தைய பகுதிகளில் கூட்டுச் சராசரி, திட்டவிலக்கம், உடன் தொடர்பு பற்றிப் ஆகியவை படித்தோம். ஒட்டுறவுக்கோட்டுச் சமன்பாடுகள் பின்வருமாறு:

X இன் மதிப்பு Y இன் மதிப்பைச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு

$$(X-\bar{X}) = r\frac{\sigma x}{\sigma y}(Y-\bar{Y})$$

Y இன் மதிப்பு X இன் மதிப்பைச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு

$$(Y-\bar{Y}) = r\frac{\sigma y}{\sigma x}(X-\bar{X})$$

X இன் மதிப்பு Y இன் மதிப்பைச் சார்ந்த, Y இன் மதிப்பு X இன் மதிப்பைச் சார்ந்த ஒட்டுறவுக்கோடுகள் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டு மூலம் விளக்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டு 10

கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து X மதிப்பு Y ஐச் சார்ந்த, Y மதிப்பு X ஐச் சார்ந்த ஒட்டுறவுக் கோடுகளின் சமன்பாடு காண்க.

$\bar{X}=12, \bar{Y}=10, \sigma y= 0.2, \sigma x =0.1$ and $r = 0.85$

தீர்வு

X இன் மதிப்பு Y ஐச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டுச் சமன்பாடு

$$(X-\bar{X}) = r \frac{\sigma x}{\sigma y}(Y-\bar{Y})$$

கொடுக்கப்பட்ட மதிப்புகள்

$$\bar{X} = 12, \bar{Y}=10$$

$$r = 0.85, \sigma x = 0.1 \text{ மற்றும் } \sigma y = 0.2$$

இந்த மதிப்புகளை வாய்பாட்டில் பிரதியிட

$$(X-12) = 0.85\ (0.1/0.2)\ (Y-10)$$
$$(X-12) = 0.85\ (0.5)\ (Y-10)$$
$$X = 0.425\ (Y-10)+ 12$$
$$X = 0.425Y- 4.25+12$$
$$X = 0.425Y+7.75$$

விடை $X = 0.425Y + 7.75$

X இன் மதிப்பு Y ஐச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு

Y இன் மதிப்பு X ஐச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு

$$(Y-\bar{Y}) = r \frac{\sigma y}{\sigma x}(X-\bar{X})$$

கொடுக்கப்பட்ட மதிப்புகள் $\bar{X} = 12, \bar{Y}=10$

$$r = 0.85, \sigma x = 0.1 \text{ மற்றும் } \sigma y = 0.2$$

இந்த மதிப்புகளை வாய்பாட்டில் பிரதியிட

$$(Y-10) = 0.85\ (0.2/0.1)\ (X-12)$$
$$(Y-10) = 0.85\ (2)\ (X-12)$$
$$Y = 1.7 \times (X-12) + 10$$
$$Y = 1.7X-20.4+10$$
$$Y = 1.7X-10.4$$

விடை $Y = 1.7X-10.4$

Y இன் மதிப்பு X ஐச் சார்ந்த ஒட்டுறவுக் கோட்டின் சமன்பாடு

12.14 பொருளாதார அளவையியல் ஓர் அறிமுகம் (Introduction to Econometrics)

பொருளியல் அறிஞர்கள் பண்டைய காலம் முதலே தங்களது கருத்துகளை எண்விவரங்கள், காட்சிப் படங்களுடன் வெளிப்படுத்தினார் இர்விங் ஃபிஷர் முதன் முதலில் பணஅளவுக் கோட்பாட்டுச் சமன்பாட்டினை புள்ளிவிவரங்களுடன் விளக்கினார். நார்வே நாட்டுப் பொருளியல், புள்ளியியல் அறிஞர் ரேக்னர் ஃபிரிஸ்க் 1926 ஆம் ஆண்டில் கணிதம், புள்ளியியல் முறைகள், பொருளியல் ஆகிய மூன்று பாடங்களையும் இணைத்துப் பொருளாதார அளவையியல் என்ற பாடம் உருவாக்கினார்.



நோபல் நினைவு பரிசு 1969

'எகனாமெட்டிரிக்ஸ்' என்பது 'ஆக்கோவியா', 'உட்பொவ்' எனும் இரு

கிரேக்கச் சொல்லிலிருந்து உருவாகியது. இவற்றின் பொருள் முறையே 'பொருளாதாரம்', 'அளவிடுதல்' என்பதாகும். இது பின்னாளில் தனிப் பாடமாக உருவெடுத்தது.

பொருளாதார அளவையியல் என்பது பொருளியல், புள்ளியியல், கணிதம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.

மூன்று பாடங்களின் கலவையே பொருளாதார அளவையியல் என்பது வென் வரைபடம் மூலமும் படவிளக்கத்தின் மூலமும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

பொருளாதார அளவையியல் என்பது பொருளாதார அளவீட்டு முறை. பொருளாதார அளவையியல் பொருளாதாரத் தன்மைகளை அளவீடு செய்யப் பயன்படுகிறது.

பொருளியல் + கணிதம் = கணிதப் பொருளியியல்

கணிதப் பொருளியியல் + புள்ளிவிவரங்கள், புள்ளியியல் முறைகள் = பொருளாதார அளவையியல்

{பொருளாதாரம் + புள்ளியியல் + கணிதம்} + எண்வடிவப் புள்ளி விவரங்கள் = பொருளாதார அளவையியல்

இலக்கணங்கள்

ஆர்தர் எஸ். கோல்ட்பெர்க்கர் கூற்றுப்படி, "பொருளாதார அளவையியல் என்பது பொருளாதாரக் கோட்பாடு, கணிதம், புள்ளியியல் உய்த்துணர்வு ஆகிய கருவிகளைக் கொண்டு பொருளியல் நிகழ்வுகளை ஆய்வு செய்யும் ஒரு சமூக அறிவியல் ஆகும்".

ஜெர்ஹார்டு டின்பர்கன் பொருளாதார அளவையியல் என்பது "பொருளாதாரம் பற்றிய சில கண்ணோட்டங்களின் விளைவாக, பொருளியல் விவரங்களின்மீது கணிதப் புள்ளியியலைப் புகுத்தி கணிதப்பொருளியலால் உருவாக்கப்பட்டப் பொருளியல் மாதிரிக்கு உறுதித் தன்மையை தரும் விதத்தில் எண்ணியல் முவுகளைப் பெறும் ஒரு பாடம்" என்கிறார்.

தெய்ல் அவர்களின் கூற்றுப்படி, "பொருளாதார அளவையியல் என்பது பொருளாதார விதிகளுக்கு எண் விவரங்களை அளிப்பது ஆகும்".

ரேக்னர் ஃபிரிஷ்க் பொருளாதார அளவையியல் கருத்தும், புள்ளிவிவரங்கள் பார்வைகள் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று ஊடுருவலைக் கொண்டிருப்பதாகும், எனக் கூறுகிறார்.



12-Economics-Tamil-Chapter_12.indd 320 12-01-2023 17:22:42

www.tntextbooks.in

பொருளாதார அளவையியலின் நோக்கங்கள்

பொருளாதார கோட்பாடுகளுக்கு நடைமுறை விவரங்களை அளிப்பது பொதுவான நோக்கம் ஆகும். இது சில குறிப்பிட்ட குறிக்கோள்களையும் கொண்டுள்ளது. அவை.

1 பொருளாதார நடவடிக்கைகளை முன்கணித்தல் மூலமாக அறிந்து விளக்குவதற்கு உதவுகின்றது.

2. இவை மாறிகளுக்கு இடையேயுள்ள கடந்தகாலத்திலுள்ள பழைய, நிறுவப்பட்ட உறவுகளை மீண்டும் நிரூபிப்பதற்கும் உதவுகின்றது.

3. புதிய கோட்பாடுகளையும் புதிய உறவுகளையும் நிறுவுவதற்கு உதவுகின்றது.

4. எடுகோள்களை சோதனை செய்யவும், முழுத்தொகுப்பின் பண்புகளை மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.



இம்மூன்று பாடங்களும் இணைந்தது பொருளாதார அளவையியல் ஆகும்.

பொருளாதார அளவையியல் ஆய்வு முறையின் நிலைகள்

பொருளாதார அளவையியலின் தொன்மை ஆய்வு முறை கீழ்க்காணும் நிலைகளைக் கொண்டுள்ளது. அவைகள்:

1. கோட்பாடு அல்லது ஆய்வு எடுகோளை கூறுவது.
2. ஆய்வுக்கு உட்படுத்தியக் கோட்பாட்டிற்கான கணித மாதிரியை உருவாக்குதல்.
3. பொருளாதார அளவையியல் மாதிரியை உருவாக்குவது
4. புள்ளிவிவரங்களைத் திரட்டுவது.
5. பொருளாதார அளவையியல் மாதிரியின் முழுத்தொகுப்புப் பண்புகளை மதிப்பீடு செய்தல்.
6. எடுகோள் சோதனை செய்தல்
7. முன்கணித்தல் தீர்மானம் செய்தல்
8. கொள்கை முடிவெடுக்க, நெறிப்படுத்த மாதிரியை பயன்படுத்துதல்.

பொருளாதார அளவையியல் ஆய்வு முறையின் கூறுகள்

- பொருளியல் கோட்பாடு
- பொருளியல் கோட்பாட்டுக்கான கணித மாதிரி
- பொருளாதார அளவையியல் மாதிரி
- புள்ளி விவரங்கள்
- மாதிரியினை நிறுவுதல்
- எடுகோள் சோதனை
- முன்கணித்தலும் மதிப்பிடுதலும்
- மாதிரியை நெறிப்படுத்துதலுக்கு கொள்கை வகுப்பிற்கும் பயன்படுத்துதல்

பொருளாதார அளவையியல் மாதிரிக்கும், கணித மாதிரிக்கும் புள்ளியியல் மாதிரிகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகள்

1. கணித பொருளியலில் மாதிரிகள் பொருளாதார கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. ஆனால் பொருளாதார அளவையியல் மாதிரிகள் கோட்பாடுகளின் நம்பகத்தன்மையை அறிய புள்ளிவிரவங்களின் அடிப்படையில் சோதனை செய்யப்படுகிறது.

2. புள்ளியியலில் இருக்கும் ஒட்டுறவு மாதிரியில் பிழைக் கருத்து இல்லை. ஆனால் பொருளாதார அளவையியல் மாதிரியில் பிழைக் கருத்து உள்ளடக்கியிருக்கிறது.

புள்ளியியலில் ஒட்டுறவு மாதிரி:

$$Yi = \beta_0 + \beta_1 X_i$$

பொருளாதார அளவையியல் ஒட்டுறவுப் போக்கு மாதிரி

$$Yi = \beta_0 + \beta_1 X_i + U_i$$

அல்லது, இரண்டிற்கு மேற்பட்ட மாறிகளாக இருந்தால்

$$Y = \beta_0 + \beta_1 X_1 + \beta_2 X_2 + \beta_3 X_3 + U_i$$

$Y = \beta_0 + \beta_1 X + U_i$ என்பதில் $\beta_0 + \beta_1 X$ என்ற பகுதி விளக்கப்பட்ட பகுதியாகும். U_i என்பது பிழைக் கருத்து ஆகும். இது மாதிரியில் விடுபட்ட அனைத்துக் காரணிகளின் தொகுப்பாக இங்குக் குறிக்கப்படுகிறது எனவே U_i காரணியைப் புறக்கணிக்க முடியாது.

நேர்கோட்டு ஒட்டுறவு மாதிரியின் எடுகோள்கள்

1. மாதிரியில் கொடுக்கப்பட்டுள்ள சில மாறிகள் சம வாய்ப்பு மாறிகள் (Random Variables)

2. சில மாதிரிகளில் ui மற்றும் விளக்க மாறிகள் (X_1, X_2, X_3...) இடையேயுள்ள தொடர்பை விளக்கும்.

மதிப்புகளின் பரவல் பற்றிய எடுகோள் சாதாரண குறைந்த வர்க்க முறை (OLS) யில் கூறப்பட்ட சமவாய்ப்பு மாறி (Stochastic) எடுகோள்கள் ஆகும். விளக்க மாறிகளின் தொடர்பும் அவற்றிற்கு இடையிலான தொடர்பு பற்றியும் மற்ற எடுகோள்கள் குறிப்பிடுகின்றன.

எடுகோள்கள்

1. U என்பது சமவாய்ப்புள்ள உண்மையான மாறி. அதாவது U வின் மதிப்பு நேரிடையாகவோ எதிரிடையாகவோ அல்லது சுழியமாகவோ இருக்கலாம். எனவே U வின் சராசரி மதிப்பு சுழியமாகும்.

2. விலக்க அளவை (Variance) மதிப்பு U மாறிக்கு நிலையானதாக இருக்கும்.

3. U மாறி சமச்சீர் பரவலை உடையது

4. இணை விலக்க அளவை (Covariance) மதிப்பு U_i மாறிக்கும் வேறு எந்த U_j மாறிக்கும் சுழியமாகவே இருக்கும்

5. U மாறி விளக்கமாறிகளிலிருந்து தனித்து உள்ளது

6. விளக்க மாறிகளின் மதிப்புகள் பிழை இல்லாமல் அளவிடப்படுகின்றன.

7. விளக்கமாறிகள் முழுமையாக நேர்கோட்டுத் தொடர்பு உடையவை அல்ல

8. மாறிகள் அனைத்தும் சரியான முறையில் தொகுக்கப்படவேண்டும்.

9. தொடர்பு சரியாக, குறிப்பிட்டதாக இருக்க வேண்டும்.

10. தொகுதி அளவுகள் நேர்கோட்டுமுறையில் அமைக்கப்பட வேண்டும்.

12.15 அலுவலகப் புள்ளிவிவரங்கள்

அலுவலகப் புள்ளிவிவரங்கள் என்பன அரசு அலுவலகங்கள், பன்னாட்டு அமைப்புகள் உள்ளிட்ட மற்ற பொதுநிறுவனங்களினால் வெளியிடப்படுவதாகும். இவை குடிமக்களின் வாழ்க்கைத் தொடர்பான பல அளவையும் பண்பு விவரங்களையும் வெளியிடுகின்றன. அலுவலகப் புள்ளிவிவரங்கள் சமுதாய, பொருளாதார மேம்பாடுபாட்டினை வெளிப்படுத்துகின்றன. இது அரசின் கொள்கைகளை மதிப்பீடு செய்யப் பயன்படுகிறது. அரசின் பொறுப்புணர்வை அதிகரிக்கிறது.

புள்ளியியல் துறை திட்ட அமலாக்கத் துறையுடன் இணைக்கப்பட்டது முதல் புள்ளியியல், திட்ட அமலாக்க அமைச்கம் தனி அமைப்பாக 1999 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது.

இத்துறை இரு பிரிவுகளைக் கொண்டது: புள்ளியியல், திட்ட அமலாக்கம்.



இதில் புள்ளியியல் பிரிவானது தேசிய புள்ளியியல் அலுவலகம் (National Statistical Office, NSO) என அழைக்கப்படுகிறது. இதில் மேலும் சில பிரிவுகளாக மத்திய புள்ளியியல் கழகம் (Central Statistical Organization, CSO), கணிணி மையம், தேசிய மாதிரிக் கூறெடுப்பு விசாரணை அலுவலகம் (National Sample Survey Office, NSSO) உள்ளன.

நடுவண் புள்ளியியல் அலுவலகம் (Central Statistical Office, CSO)

நடுவண் புள்ளியியல் அலுவலகம் இரு பிரிவுகளைக் கொண்ட தேசிய புள்ளியியல் அமைப்பின் அங்கமாகும். இதன் முக்கியமான பணி நாடுமுழுவதிலும் நடைபெறும் புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைப்பதும் அவற்றிறைப் பரிசோதிப்பதும், தர மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதும் ஆகும். இந்த அமைப்பால் செய்யப்படும் பணிகள்: தேசியக் கணக்குகளை ஒருங்கிணைப்பது, ஆண்டு தொழில் துறை விசாரணையை நடத்துவது, பொருளாதார விசாரணைகளை நடத்துவது, தொழிற்சாலை உற்பத்தி விவரங்களைச் சேகரிப்பது, நுகர்வோர் குறியீட்டெண்ணை அமைப்பது ஆகும். மேலும், மற்ற சமுதாயப் புள்ளி விரவங்களை சேகரிப்பது. பயிற்சி, பன்னாட்டு ஒத்துழைப்பை பேணுதல், தொழில் பிரிவுகளை நிர்ணயித்தல் ஆகிய பணிகளையும் இது செய்கிறது.

இந்த அமைப்பில் ஐந்து பிரிவுகள் உள்ளன. அவை முறையே, தேசிய கணக்குப் பிரிவு, சமூகப் புள்ளியியல் பிரிவு, பொருளாதாரப் புள்ளியில் பிரிவு, பயிற்சிப் பிரிவு, ஒருங்கிணைப்பு வெளியீட்டுப் பிரிவு. இந்த அமைப்பின் அலுவலகம் புதுடெல்லியில் அமைந்திருக்கிறது. தொழிற்சாலை விவரங்களுக்கான பிரிவு கொல்கத்தாவில் இருக்கின்றது. கனிணி மையம் புதுடெல்லியில் செயல்பட்டு வருகிறது.

தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம் (National Sample Survey Office, NSSO)

தேசிய மாதிரி கூறெடுத்தல் கழகம் தற்பொழுது, தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம் என அழைக்கப்படுகிறது. இது இந்திய புள்ளியியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அமைப்பாகும். இது புள்ளியியல் பணியைப் பொருத்தவரை மிகப் பெரிய அமைப்பாகும். இது 1950 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக சமூக–பொருளாதார புள்ளிவிவர விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இதில் நான்கு பிரிவுகள் உள்ளன:

1. விசாரணை வடிவமைத்தல், ஆய்வுத் துறை.
2. களப்பணித் துறை
3. புள்ளிவிவர செயலாக்கத் துறை
4. ஒருங்கிணைப்பு வெளியீட்டுத் துறை.

திட்ட அமைலாக்கத் துறையின் கீழ் மூன்று அமைப்புகள் உள்ளன.

(i) 20 அம்ச திட்டம்
(ii) உள்கட்டமைப்புக் கண்காணிப்பும் திட்டக் கண்காணிப்பும்.
(iii) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம்.

இதைத்தவிர, இந்திய அரசின் தீர்மானத்தின்படி தேசிய புள்ளியியல் குழு உருவாக்கப்பட்டுள்ளது. பிறகு, தன்னாட்சி பெற்ற, நாடாளுமன்ற சட்டத்தால் தேசிய முக்கியத்தவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்ட இந்திய புள்ளியில் நிறுவனமும் இருக்கின்றது.

தொகுப்புரை

இப்பாடத்தில் புள்ளியியலின் முக்கியத்துவம், இயல்பு, வகைகள், புள்ளிவிவர வகைகள், புள்ளிவிவர பகுப்பாய்வுகளான மைய போக்கு அளவைகள், விலகல் அளவைகள், ஒட்டுறவு, தொடர்புப் போக்கு ஆகியவை அறிந்துகொள்ளப் பட்டன. தொடாந்து பொருளாதார அளவையியலைப் பற்றி ஓர் அறிமுகப் பாடத்தினைக் கற்றோம். இறுதியாக, இந்திய புள்ளிவிவர அமைப்புகளைப் பற்றியும் அறிந்து கொண்டோம்.

மாதிரி வினாக்கள்

பகுதி – அ

சரியான விடையை தெரிவு செய்க:

1. 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' (Statistics) எனும் சொல் ---------------- ஆகும்.
அ) ஒருமை ஆ) பன்மை
இ) ஒருமை மற்றும் பன்மை
ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல

2. புள்ளியியல் எண்விவரங்களைப் பற்றிப் படிக்கும் பயன்பாட்டுக் கணிதத்தின் ஒரு சிறப்புப் பகுதி என்று கூறியவர் யார்?
அ) ஹோராஸ் செக்ரிஸ்ட் ஆ) ஆர். ஏ. ஃபிஷர்
இ) யா–லன்–சூ ஈ) போடிங்ட்டன்

3. இரண்டாம்நிலை விவரங்களுக்கான ஆதாரம் ------------------ .
அ) வெளியிடப்பட்ட விவரங்கள்
ஆ) வெளியிடப்படாத விவரங்கள்
இ) மேற்சொன்ன இரண்டில் ஒன்று
ஈ) அ மற்றும் ஆ

4. கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது -----------.
அ) முதல்நிலை விவரம்
ஆ) இரண்டாம் நிலை விவரம்
இ) வெளியிடப்பெற்ற விவரம்
ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

12-Economics-Tamil-Chapter_12.indd 324
12-01-2023 17:22:43

5. நேர்கோட்டு உறவினைக் கொண்டிருக்கும் இரு மாறிகளின் உறவினை அளவினை அளக்கும் முறைக்கு ------------ பெயர்.
   அ) சரிவு ஆ) அச்சுவெட்டு
   இ) உடன்தொடர்புக் கெழு
   ஈ) ஒட்டுறவுச் சமன்பாடு
6. X, Y ஆகிய மாறிகள் இரண்டும் ஒரே திசையில் மாறினால், உடன்தொடர்புக் கெழு எவ்வாறு இருக்கும்?
   அ) நேர்மறையாக ஆ) எதிர்மறையாக
   இ) 0 ஈ) 1
7. ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன்தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
   அ) முழு நேர்கணியாக
   ஆ) முழு எதிர்மறையாக
   இ) எதிர்மறையாக ஈ) 0
8. உடன்தொடர்புக் கெழு γ–ன் அளவு எந்த எல்லைக்குள் இருக்கும்
   ஆ) 0 மற்றும் 1 ஆ) –1 மற்றும் 0
   இ) –1 மற்றும் 1 ஈ) – 0.5 மற்றும் 0.5
9. ஒட்டுறவு எனும் கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்
   அ) நியூட்டன் ஆ) பியர்சன்
   இ) ஸ்பியர்மேன் ஈ) கால்டன்
10. ஒட்டுறவுப் பகுப்பாய்வின் நோக்கம்?
   அ) ஒரு காரணியின் மதிப்பினைக் கொண்டு அடுத்து காரணியின் மதிப்பினைக் கண்டறிவது.
   ஆ) சிதறல் விளக்கப்படத்தில் உள்ள புள்ளிகளுக்குப் பதிலாக கோட்டினை வரைவது
   இ) இரு மாறிகளும் எந்த அளவுக்கு உறவுகொண்டுள்ளன என்பதைத் தெரிந்து கொள்வதற்கு.
   ஈ) சாரா மாறியின் எதிர்பார்க்கப்படும் மதிப்பினைத் தெரிந்துகொள்ள சார்பு மாறியின் மதிப்பினை அளித்தல்.
11. சார்பு மாறியின் மதிப்பினை மதிப்பீடு செய்வதற்காக சாரா மாறிகளை பயன்படுத்தும் செயலுக்கு --------- பெயர்
   அ)உடன் தொடர்புக் கெழு இ) சரிவு
   ஆ) ஒட்டுறவு ஈ) பிழைக் கருத்து
12. Y = 2 – 0.2X எனில், Y அச்சு வெட்டு --------------- ஆகும்.
   அ) – 2 ஆ) 2
   இ) 0.2 X ஈ) மேற்சொன்ன அனைத்தும்
13. $Y = \beta_0+\beta_1 x$, என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் Y என்பது-------------- .
   அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி
   இ) தொடர்ச்சி மாறி
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல.
14. $Y = \beta_0+\beta_1 x$ என்ற ஒட்டுறவுச் சமன்பாட்டில் x என்பது -------------- .
   அ) சாரா மாறி ஆ) சார்பு மாறி
   இ) தொடர்ச்சி மாறி
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல.
15. பொருளாதார அளவையியல் என்பது எதன் இணைப்பு?
   அ) பொருளியலும் புள்ளியியலும்
   ஆ) பொருளியலும் கணிதமும்
   இ) பொருளியல், கணிதம், புள்ளியியல் ஆகியன
   ஈ) மேற்சொன்ன எதுவுமல்ல
16. பொருளாதார அளவையியல் எனும் சொல்லை உருவாக்கியவர்?
   அ) ஃபிரான்சி கால்டன்
   ஆ) ராக்னா; ஃபிரிஸ்க்
   இ) கார்ல் பியர்சன் ஈ) ஸ்பியர்மேன்
17. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள்----------------- .
   அ) புள்ளிவிவரம் ஆ) பொருட்கள்
   இ) புள்ளியியல் ஈ) கணிதம்
18. U என்பது ------------.
   அ) விலகல் ஆ) திட்டப்பிழை
   இ) பிழைக் கருத்து
   ஈ) மேற்சொன்ன எதுவும் அல்ல
19. U என்பது எதைக் குறிக்கிறது?
   அ) விடுபட்ட காரணிகள்
   ஆ) திட்டப் பிழை இ) பிழை
   ஈ) தொடர்ச்சியற்றக் காரணி
20. பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?
   அ) 3 பாடங்கள் ஆ) நான்கு பாடங்கள்
   இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள்

விடைகள்

1	2	3	4	5	6	7	8	9	10
இ	ஈ	ஈ	அ	இ	அ	இ	இ	ஈ	அ
11	12	13	14	15	16	17	18	19	20
ஆ	ஆ	ஆ	அ	இ	ஆ	அ	இ	அ	அ

பகுதி – ஆ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்

21. புள்ளியியல் என்றால் என்ன?
22. புள்ளியியலின் வகைகள் யாவை?
23. உய்த்துணர் புள்ளியியல் என்றால் என்ன?
24. புள்ளிவிவர வகைகள் யாவை?
25. உடன் தொடர்பு என்பதனை வரையறு.
26. ஒட்டுறவு என்பதனை வரையறு.
27. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

பகுதி – இ

கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு பத்தியளவில் விடையளிக்கவும்

28. புள்ளியியலின் பணிகள் யாவை?
29. பின்வரும் விவரங்களுக்கு திட்டவிலக்கத்தினைக் காண். 14, 22, 9, 15, 20, 17, 12, 11 (விடை: σ 4.18).
30. பல்வகையான உடன் தொடர்புகளைக் கூறி விளக்குக.
31. ஒட்டுறவுப் பகுப்பாய்வின் பயன்களைக் கூறுக.
32. பொருளாதார அளவையியலின் நோக்கங்களைக் கூறுக.
33. பொருளாதார மாதிரியிலிருந்து பொருளாதார அளவையியல் மாதிரியினை வேறுபடுத்துக.
34. இந்தியாவில் புள்ளியியல் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி.

பகுதி – ஈ

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் பதில் தருக

35. புள்ளியியலின் இயல்பு, எல்லைகளை விளக்குக.
36. பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடந்தொடர்புக் கெழுவினைக் கண்டறிக

தேவை X :	23	27	28	29	30	31	33	35	36	39
விற்பனை Y:	18	22	23	24	25	26	28	29	30	32

விடை: r=0.9955)

37. பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X, X மீது Y ஆகியவற்றினைக் கண்டறிக:

Y:	45	48	50	55	65	70	75	72	80	85
X:	25	30	35	30	40	50	45	55	60	65

(விடை: $Y = 0.787X + 7.26$, $X = 0.87Y + 26.65$)

38. பொருளியலில் பொருளாதார அளவையியலின் பயன்பாடுகளை விளக்குக

பார்வை நூல்கள்

1. Agarwal.D.R (2003)"Statistics for Economists" Vrinda Publications (P) Ltd New Delhi,
2. Christopher Dougherty (2007), Introduction to Econometrics, Oxford University Press, 3rd edition, Indian Edition.
3. Greene W.H., (2003) Econometric analysis , 5ed., Prentice Hall,
4. Gujarati.N and Sangeetha (2012) Basic Econometrics, McGraw Hill, Indian Reprint
5. Gupta.S.P, Gupta.M.P (1998) "Business Statistic" Sultan Chand & Sons. 16th revised) enlarge edition.
6. Gupta.S.P(2012), "Statistical method" Sultan Chand, New Delhi.
7. Jan Kmenta (2008), Elements of Econometrics, Indian Reprint, Khosla Publishing House, 2nd edition.
8. Kapur.J.N&Saxena,H.C (2001) "Mathematical statistics" Sultan chand and Company Ltd., New Delhi.
9. Koutsoyiannis.A, Theory of Econometrics , Indian Reprint, Replika Press Pvt.LtdKundli
10. Maddala G.S. 1992 , Introduction to econometrics , 2ed., Macmillan
11. Mehta.B.C&KrantiKapoor(2005), Fundamental of Econometrics, Second Revised Edition, Himalaya Publishing House.
12. Phillips,C(2002)"Statistics – I Economics, management, Finance and the social science" Published by University of London Press, University of London.
13. Vittal P.R (1986), "Business mathematics and statistics," Marghan Publications Madras.

சொற்களஞ்சியம்

முடுக்கி	Accelerator
அயல்நாட்டு வாணிக நிலை	Balance of trade
அயல்நாட்டு செலுத்துச்சம் நிலை	Balance of payments
வரவு செலவுத் திட்டம்	Budget
நிதிநிலைப் பற்றாக்குறை	Budgetary deficit
வணிக வங்கிகள்	Commercial Banks
மைய வங்கி	Central Bank
கடன் உருவாக்கம்	Credit creation
ரொக்க இருப்பு வீதம்	Cash Reserve Ratio
முதலாளித்துவம்	Capitalism
மூலதன உருவாக்கம்	Capital formation
மூலதனம்	Capital
நுகர்வுச் சார்பு	Consumption function
ஒப்பீட்டுச் செலவு நன்மை	Comparative cost advantage
சுங்க வரி ஒன்றியம்	Customs union
பொது அங்காடி	Common market
மூலதனத் திரட்சி	Capital accumulation
சூதாட்ட முதலாளித்துவம்	Casino capitalism
சலுகைசார் முதலாளித்துவம்	Crony capitalism
கடன் கட்டுப்பாடு	Credit control
கடன் பங்கீடு	Credit Rationing
உடன் தொடர்புக் கெழு	Correlation co-efficient
மேம்பாடு	Development
செலவிடக் கூடிய வருமானம்	Disposable income
பணவாட்டம்	Deflation
மித பணவீக்கம்	Disinflation
பண மதிப்பிழப்பு	Demonetization
நாணய மதிப்புக் குறைப்பு	Devaluation
வளரும் நாடுகள்	Developing countries
வளர்ந்த நாடுகள்	Developed countries
கேட்புவைப்பு	Demand deposit
பொருளியல்	Economics
மாற்று வீதம்	Exchange rate
மாற்று வீதக் கட்டுப்பாடு	Exchange control

பொருளாதாரக் கூட்டு	Economic union
சுற்றுச் சூழல்	Eco system
பொருளாதார அளவியல்	Econometrics
முக மதிப்பு	Face value
அயல் நாடு	Foreign country
அரசின் பொது நிதிக் கொள்கை, அரசோடு தொடர்புடையது	Fiscal policy
நிதிக் குழு	Finance commission
நிதிப்பற்றாக்குறை	Fiscal deficit
தடையிலா வாணிகப் பகுதி	Free Trade Area
நிறுவனம்	Firm
வளர்ச்சி	Growth
சுங்க வரி வாணிகம் தொடர்பான பொது ஒப்பந்தம்	General agreement on tariffs and trade
சரக்கு, சேவைவரி, பண்டங்கள் பணிகள் வரி	Goods and services Tax
தொழில்	Industry
முதலீடு	Investment
அகமதிப்பு	Intrinsic value
பணவீக்கம்	Inflation
தூண்டடப்பட்ட முதலீடு	Induced investment
பன்னாட்டுப் பொருளியல்	International economics
பன்னாட்டுப் பணநிதியம்	International monetary fund
சுட்டிக்காட்டும் திட்டம்	Indicative planning
கட்டாயத் திட்டமிடல்	Imperative planning
வரி பளு அல்லது வரிச்சுமை	Incidence of Taxation
இந்திய தொழில் வளர்ச்சி வங்கி	IDBI
தலையிடாக் கொள்கையைக் கொண்டுள்ள முதலாளித்துவப் பொருளாதாரம்	Laissez – Faire capitalist economy
ரொக்கத்தன்மை அல்லது நீர்மைத்தன்மை	Liquidity
பேரினப் பொருளாதாரம்	Macro economics
கலப்புப் பொருளாதாரம்	Mixed economy
இறுதிநிலை நுகர்வு விருப்பம்	Marginal propensity to consume
இறுதிநிலை சேமிப்பு நாட்டம்	Marginal propensity to save
பெருக்கி	Multiplier
பன்முக வாணிக ஒப்பந்தம்	Multilateral Trade Agreement
பணக் கொள்கை	Monetary policy
அறிவுறுத்தல்	Moral suasion
மையபோக்கு அளவைகள்	Measure of central Tendency
பரவல் (அல்லது) சிதறல்	Measure of dispersion
நாட்டுவருமானம்	National Income

எதிர்மறைப் புறவிளைவுகள்	Negative externalities
தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி	NABARD
விடுபட்ட மாறிகள்	Omitted variable
சொந்த வருமானம்	Personal income
தலைவீத வருமானம்	Per capita income
விகிதாச்சார வரி	Proportional Tax
வளர்வீத வரி	Progressive Tax
பொதுக்கடன்	Public Debt
நேர்கணிய புறவிளைவுகள்/ உடன்பாடானப் புறவிளைவுகள்	Positive externalities
பேரிடர் முதலாளித்துவம்/ தந்தைவழி முதலாளித்துவம்	Patrimonial capitalism
திட்டக் குழு	Planning commission
முதனிலைப் புள்ளி விவரம்	Primary data
வட்டார கிராம வங்கி	RRB
உடன் தொகை கெழு	Regression Coefficients
மனஇயல் காரணிகள்	Subjective factors
தேக்க வீக்கம்	Stagflation
ஊக வாணிகம்	Speculation
சிறப்பு எடுப்பு உரிமைகள்	Special Drawing Rights
நிலைத்த முன்னேற்றம்	Sustainable development
சமூக நீதி	Social justice
சட்ட பூர்வ இருப்பு வீதம்	Statutory liquidity Ratio
புள்ளியியல்	Statistics
இரண்டாம் நிலைப் புள்ளி விவரம்	Secondary data
நிபந்தனை	Terms of Trade
வர்த்தக குழுமங்கள்	Trade Blocs
வரி ஏய்ப்பு	Tax evasion
வரி தவிர்ப்பு	Tax avoidance
கால வைப்பு	Time deposit
பின்தங்கிய நாடுகள்	Underdeveloped Countries
வளர்ச்சி குறைந்த நாடுகள்	Undeveloped Countries
வறுமையின் நச்சுச் சுழல்	Vicious circle of poverty
உலக வங்கி	World Bank
உலக வாணிக நடுவம்	World Trade Centre
உலக வாணிக அமைப்பு/நிறுவனம்	World Trade Organisation

12–ஆம் வகுப்பு பொருளியல்
நூல் ஆசிரியர்களும் மேலாய்வாளர்களும்

மேலாய்வாளர்கள்

முனைவர் .L. வெங்கடாசலம்
பேராசிரியர், சென்னை இன்ஸ்டிடியூட் ஆப்
டெவலப்மெண்டல் ஸ்டடீஸ், சென்னை

முனைவர். ஜார்ஜ். V. கல்லரக்கல்
முன்னாள் துறைத் தலைவர், பொருளியல் துறை,
CMS கல்லூரி, கோட்டயம், கேரளா

முனைவர். S. அய்யம்பிள்ளை
முன்னாள் பேராசிரியர், பொருளியல் துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி

பாடவல்லுநர் குழு

முனைவர்.R.பெர்னாட்ஷா
முன்னாள் பேராசிரியர், பொருளியல் துறை, NMSSVN
கல்லூரி, நாகமலை, மதுரை

முனைவர்.S.தீனதயாளன்
பொருளியல் துறைத் தலைவர், மதுரா கல்லூரி, மதுரை

பாட ஒருங்கிணைப்பாளர்

J.சொர்ணலதா
முதுகலை ஆசிரியை, அரசு முஸ்லீம் மேல்நிலைப் பள்ளி, சென்னை–600002

நூல் ஆசிரியர்கள்

முனைவர் J.சாக்ரடீஸ்
பொருளியல் துறைத் தலைவர்,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

முனைவர்.R.ஆல்பர்ட் கிறிஸ்டோபர் தாஸ்
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

முனைவர்.R.வஹிதா பானு
துணைப் பேராசிரியர், பொருளியல் துறை, MSS –வக்பு வாரிய கல்லூரி, மதுரை

முனைவர்.S.சாந்தி கெட்சி
பொருளியல் துறைத் தலைவர், பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

ஸ்டீபன் இளங்கோவன்
முதுகலை ஆசிரியர், TVS மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மதுரை

B.சண்முகம்
முதுகலை ஆசிரியர், நடராஜன் தமயந்தி மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம்

முனைவர்.K.சதாசிவம்
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை–21

முனைவர்.M.சித்ரா
துணைப் பேராசிரியர், பொருளியல் துறை
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை–21

முனைவர்.K.கலியமூர்த்தி
பொருளியல் துறைத் தலைவர், உருமு தனலட்சுமி கல்லூரி, திருச்சி

K.கர்ணன்
முதுகலை ஆசிரியர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, திருமங்கலம், மதுரை

K.ஆலமர்செல்வன்
முதுகலை ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புவனகிரி, கடலூர்

ICT– ஒருங்கிணைப்பாளர்

D. வாசு ராஜ்,
முதுகலை கணித ஆசிரியர் மற்றும் துறை தலைவர்,
கே. ஆர். எம் பொதுப் பள்ளி, செம்பியம், சென்னை.

மொழிபெயர்ப்பாளர்கள்

முனைவர்.R.இராஜேந்திரன்,
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை,
பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முனைவர்.A.ஹிதயத்துல்லா,
இணைப் பேராசிரியர், பொருளியல் துறை, ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.

பாட கூர்ந்தய்வாளர்கள்

முனைவர்.A.பரமசிவன்,
பேராசிரியர்(ஓய்வு), ம.தி.தா இந்து கல்லூரி, திருநெல்வேலி
பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி (தன்னாட்சி), திருச்சி.

முனைவர்.A.மாரியப்பன்,
துணைப் பேராசிரியர், பொருளியல் துறை,
இலயோலா கல்லூரி, சென்னை..

கணினி தட்டச்சர்
M.மாதவி SCERT.

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

வடிவமைப்பு

வி2 இனோவேசன்ஸ், கோபாலபுரம், சென்னை.

In-House QC
ஜெரால்டு வில்சன்
மதன்ராஜ்
பிரசாந்த்
ராஜேஷ் தங்கப்பன்

அட்டை வடிவமைப்பு
கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பாளர்
ரமேஷ் முனிசாமி

EMIS தொழில்நுட்பக் குழு

இரா.மா.சதீஸ்
மாநில ஒருங்கிணைப்பாளர் தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

இரா. அருண் மாருதி செல்வன்,
தொழில்நுட்ப திட்டபணி ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

க. ப. சத்தியநாராயணா,
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல் முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்ககம்.

இந்நூல் 80ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

12th_Economics-Tamil_Authors.indd 330 11-01-2023 18:36:10